கலைஞர்
மு.கருணாநிதி

முத்துக்குளிக்க வாரீகளா



பாகம்
II

முத்துச் சரம்

பாகம் - II

GOOGLE

முத்துக்குளியல்

பாகம் – II

கலைஞர் மு. கருணாநிதி

பூம்புகார் பதிப்பகம்
63, பிரகாசம் சாலை (பிராட்வே)
சென்னை 600 108
தொலை பேசி : 5267543

சுமை
G10245 1

ANNA CENTENARY LIBRARY
நூல் அளவை.

தலைப்பு	:	முத்துக் குளியல் பாகம் - II
ஆசிரியர்	:	கலைஞர் மு. கருணாநிதி
பொருள்	:	சொற்பொழிவுகளின் தொகுப்பு
பதிப்புரிமை	:	தமிழ்க்கனி பதிப்பகம் சென்னை - 600 004
பதிப்பு	:	முதல் பதிப்பு 2000
தாள்	:	சன்ஷைன் சூப்பர் பிரிண்டிங் 65 GSM
அளவு	:	14x 21 C.M.
படிகள்	:	2000
காலம்	:	ஜூன் 2000
விலை	:	ரூ.. 150/-
எழுத்து	:	14 புள்ளி
வெளியீட்டு எண்	:	451
பதிப்பகத்தார்	:	பூம்புகார் பதிப்பகம் சென்னை - 600 108
அச்சிட்டோர்	:	ஈகிள் பிரஸ் சென்னை -13


894.8115
KAR

முன்னுரை

பல்வேறு மேடைகளில், விழா நிகழ்ச்சிகளில் பல்வேறு தலைப்புகளில் நான் ஆற்றிய உரைகளில் தொண்ணூற்றி ஏழு தேர்ந்தெடுக்கப் பெற்று பூம்புகார் பதிப்பகத்தினரால் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. "முத்துக்குளியல்" முதல் பாகம், இரண்டாம் பாகம் எனப்பெயர் சூட்டி வழங்கப்படும் இரண்டு புத்தகங்களும், படிப்போர்க்கு ஏதோ ஒரு வகையில் பயன்படுமென்று நம்புகின்றேன். பேச்சாளர்கள் குறிப்பெடுத்துக் கொள்வதற்கும் இவை இரண்டு நூல்களும் துணை நிற்கும்.

இந்தச் சொற்பொழிவுகளையும் இவை இடம் பெற்ற நிகழ்ச்சிகளையும் காணும்போது தமிழகத்தின் ஒரு கால கட்ட வரலாறு முழுமையும் என்றில்லாவிடினும், வரலாற்றின் சில துளிகளை ரசிக்க முடியும். வெறும் துளிகள் அல்ல; தித்திக்கும் தேன் துளிகள்!

இந்த நூல்களின் உரிமை பெற்ற தமிழ்க்கனி பதிப்பகத்தாருக்கும், இப்பதிப்பினை வெளியிட்டுள்ள பூம்புகார் பதிப்பகத்துக்கும் என் இதய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.



GRADED

பதிப்புரை

தமிழகத்தின் புகழ்மிக்க வரலாற்று நாயகன் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1969 ஆம் ஆண்டு முதல் தான் கலந்து கொண்ட பல விழா மேடைகளில் தனக்கே உரிய தனி நடையில் ஆற்றிய உரைகளின் தொகுப்பே "முத்துக்குளியல்" என்ற இந்த அரிய நூலாகும். இரண்டு பாகங்களாக அமைந்துள்ள இந்த நூல்களை வெளியிடுவதில் நாங்கள் பெருமையடைகிறோம்.

முத்துக்குளித்தல் - பலரும் அறிந்திருக்கக் கூடிய ஒன்றாகும். முத்துக் குளிப்போர் அலைகடலில் நெடுந்தூரம் சென்று ஆழ்கடலுக்குள் முழ்கி முத்துச் சிப்பிகளைப் பல இடர்பாடுகளுக்கிடையே எடுத்துவந்து, முத்துக்களைப் பிரித்து எடுத்து, வகைப்படுத்தி பிறர் பயன்பெறத்தந்து தாங்கள் மகிழ்வதோடு மற்றவர்களையும் மகிழச்செய்வார்கள்.

பார்புகழும் டாக்டர் கலைஞர் அவர்களும் அதுபோன்றே தமிழ், தமிழ்நாடு, தமிழர் என்னும் தொன்மைமிகு வரலாற்றுப் பெருங்கடலில் முழ்கி முத்தெடுத்து வழங்கி தன்மானத்தை, தமிழ்உணர்வை நமக்கெல்லாம் ஊட்டியவர். அந்த அரிய முத்துக் குவியல்களின் தொகுப்பே இந்நூலாகும்.

கேட்பார் பிணிக்கும் தகையவாய், கேளாரும் வேட்ப மொழியும் சொல்வளம் மிக்க டாக்டர் கலைஞர் அவர்கள், அந்தந்த காலத்திற்குரிய நிகழ்வுகளை மட்டுமன்றி கலை, கலாச்சாரம், சமுதாய ஒற்றுமை, அரசியல், பொருளாதாரம் எனப்பலவற்றை பிறர் உணர விரித்துரைக்கும், ஈடுஇணையற்ற திறம் மிக்கவர். அவரின் நினைவாற்றலுக்கு எடுத்துக்காட்டாக அருவியென கொட்டும் உரை முழக்கங்களே இந்த 'முத்துக்குளியல்' நூலாகும்.

டாக்டர் கலைஞர் அவர்களின் வீரமிகு வரலாற்று சிறப்புமிக்க உரைகளில் காணும் கருத்துச் செறிவையும் சொல்லாட்சியையும் கேட்போர் உள்ளங்கனிந்து உவகை கொண்டு மெய் மறப்பது போல், இந்நூலை படிப்பவர்களும் உணர்ந்து மகிழ்வார்கள்.

இந்நூலை வெளியிட பதிப்புரிமை பெற்றுள்ள தமிழ்க்கனி பதிப்பகத்தார், பூம்புகார் பதிப்பகத்திற்கு முதல் பதிப்பை வெளியிடத் தந்தமைக்கு எங்களின் இதயம் கனிந்த நன்றி!

பூம்புகார் பதிப்பகம்

சென்னை -1

உள்ளடக்கம்

பக்கம்

1. தேசிய இளைஞர் கொண்டாட்டத் தொடக்கவிழா (12-01-98) . . . 11
2. முரசொலி அறக்கட்டளை விருது வழங்கு விழா (13-01-98) . . . 18
3. திருவள்ளுவர் விழா (15-01-98) . . . 33
4. இந்திய சுவிசேஷத் திருச்சபை விழா (16-01-98) . . . 49
5. சென்னை – சென்னைப் புறநகர் வணிகர்கள் சங்க மாநாடு (25-01-98) . . . 53
6. திரைப்பட விருது வழங்கும் விழா (30-01-98) . . . 62
7. புரசை கோபாலரத்தினம் இல்ல மணவிழா . . . 69
8. முத்தமிழ்ப் பேரவை விழா (03-02-98) . . . 79
9. புத்தாண்டு இசை விழா (14-04-98) . . . 88
10. மதுரை வழக்கறிஞர் சங்க 125-ஆவது ஆண்டுவிழா (18-04-98) . . . 93
11. வீரன் சுந்தரலிங்கம் நினைவு கிராமத் திறப்புவிழா (18-04-98) . . . 102
12. நாகர்கோவில் ஜீவானந்தம் மணிமண்டபத் திறப்புவிழா (19-04-98) . . . 112
13. மே தினவிழா (01-05-98) . . . 127
14. காரல் மார்க்சின் மொழிபெயர்ப்பு நூல்கள் (ஜமதக்னி) வெளியீட்டுவிழா (02-05-98) . . . 144
15. திரு.வி.க. – கல்கி நூல்களுக்குப் பரிவுத்தொகை வழங்கும் விழா (15-05-98) . . . 161
16. ஆம்பூர் சம்பங்கி இல்ல மணவிழா . . . 172
17. நெல்லிக்குப்பம் புகழேந்தி மணவிழா (06-07-98) . . . 183
18. இராஜபாளையம் குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழா (08-07-98) . . . 193
19. திருவண்ணாமலை அருணை பொறியியல் கல்லூரி பட்டமளிப்பு விழா (14-07-98) . . . 204

20. பேராயர் எஸ்ரா சற்குணம் மணிவிழா (18-07-98) . . . 215

21. கவிக்கோ அப்துல் ரகுமான் மணிவிழா (19-07-98) . . . 227

22. காஞ்சி மணிமொழியார் இல்ல மணவிழா (28-08-98) . . . 246

23. டி.என். இராஜரத்தினம் பிள்ளை நூற்றாண்டு விழா (27-08-98) . . . 255

24. மதுரை மத நல்லிணக்க மாநாடு (29-08-98) . . . 269

25. அன்னை தெரசா நூல் வெளியீட்டு விழா (05-09-98) . . . 287

26. சென்னை – ஆழ்வார்கள் ஆய்வு மைய விழா (12-09-98) . . . 294

27. சென்னை – எக்ஸ்னோரா மற்றும் ரோட்டரி நிறுவனங்களின் பாராட்டுவிழா (26-09-98) . . . 314

28. சென்னை – திரையுலகம் நடத்திய பாராட்டுவிழா (27-09-98) . . . 330

29. சென்னை – தியாகிகள் மணிமண்டபத் திறப்புவிழா (23-10-98) . . . 342

30. 'இசைத் தமிழின் உண்மை வரலாறு' நூல் வெளியீட்டுவிழா (05-10-98) . . . 350

31. சென்னை – நாத்திகம் இராமசாமி இல்ல மணவிழா (18-10-98) . . . 363

32. சென்னை – ஈரோடு தமிழன்பன் நூல்கள் வெளியீட்டுவிழா (18-10-98) . . . 371

33. சென்னை – திரிபுரா ஒருமைப்பாட்டு தினக் கூட்டம் (03-11-98) . . . 390

34. அய்யணன் அம்பலம் படத்திறப்பு விழா (15-11-98) . . . 399

35. காஞ்சிபுரம் – சி.வி.எம். அண்ணாமலை இல்ல மணவிழா (22-11-98) . . . 407

36. பிடில் கும்பகோணம் இராஜமாணிக்கம் பிள்ளை நூற்றாண்டுவிழா (26-11-98) . . . 415

1

தேசிய இளைஞர் கொண்டாட்டத் தொடக்க விழா

முதலில் இந்த விழாவை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள மத்திய அமைச்சர்கள் எஸ்.ஆர். பொம்மை, தனுஷ்கோடி ஆதித்தன் ஆகியோரை நான் பாராட்ட விரும்புகிறேன். முதலில் நான் உங்கள் அனைவருக்கும் இனிய வரவேற்பைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் இதயம் நிறைந்த வாழ்த்துக்கள். நீங்கள் அனைவரும் வாழ்வில் சிறந்து விளங்க வாழ்த்துகிறேன். புராதனமான புகழ்பெற்ற மாநிலமான தமிழ்நாட்டில் நீங்கள் கூடி இருப்பதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்த மாநிலம் சர்வதேச சகோதரத்துவம் என்ற கொள்கையை உலகுக்கு வழங்கியது. இங்குதான் கணியன் பூங்குன்றனார் என்ற தமிழ்ப்புலவர்,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

என்று உலகிற்கு அறிவித்தார்.

இங்குதான் பெரும்புலவர் திருவள்ளுவர்,

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு"

என்ற குறள் மூலம் கற்றறிவாளர்கள் ஒவ்வொரு நாட்டையும் தங்கள் சொந்த நாடாக்கிக் கொள்வர், என்று உலகிற்கு அறிவித்தார்.

வரலாற்றிலும், புராணங்களிலும் கதாநாயகர்கள் அவர்கள் இளைஞர்களாக இருந்தபோது செய்த சாதனைகளுக்காகவே நினைவு கூறப்படுகின்றனர்.

பாண்டியன் நெடுஞ்செழியன் இளைஞனாக இருந்த போதுதான் தலையானங்கானத்தில் ஒரே நேரத்தில் ஏழு அரசர்களுடன் போரிட்டு வென்று 'தலையானங் கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்' என்று பெயர் பெற்றான்.

குருஷேத்திர யுத்தத்தில் இளைஞனான அபிமன்யு அர்ஜுனனை விட மிகுந்த வீரத்தை வெளிப் படுத்தினான்.

துரோணரின் சீடராக இருந்தபோதுதான் அர்ஜுனன் புகழ்பெற்ற போர் வீரனாக உருவானான்.

இராமாயணத்தில் இளைஞனாக இருந்த இந்திரஜித் மற்ற எந்தப் பாத்திரத்தையும் விட அதிக வீரச் செயல்களைப் புரிந்தான்.

உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளுங்கள் நவீன காலத் தலைவர்களான டாக்டர் அம்பேத்கர், பண்டித நேரு, பெரியார், அண்ணா, காமராஜர் ஆகிய எல்லோரும் அவர்கள் இளைஞர்களாக இருந்தபோது தான் பொது வாழ்வில் நுழைந்தனர்.

இராமாயணத்திலிருந்து ஒரு கதையை நினைவூட்ட விரும்புகிறேன். இராமன், இலக்குமணன், பரதன், சத்ருக்கனன் ஆகிய நால்வரும் சிறுவர்களாக 'துணிப் பந்தை'ப் பயன்படுத்தி வில்லையும், அம்பையும் வைத்து

விளையாடிக் கொண்டிருந்தனர். அவ்வாறு அவர்கள் விளையாடிக் கொண்டிருந்தபோது ஒரு துணிப்பந்து கூனியின் முதுகைத் தாக்கி விட்டது. அதைப் பார்த்து சிறுவர்கள் சிரித்தனர். இந்த அவமான நிகழ்ச்சியின் காரணமாக கூனி, இராமர் மீது வெறுப்பை வளர்க்கத் தொடங்கினாள்.

கூனியின் பழிவாங்கும் உணர்வையும் அதைத் தொடர்ந்து அந்த இதிகாசத்தில் நடந்த சம்பவங்களையும் நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இந்தச் சம்பவத்தை அடிப்படையாக வைத்து ஒரு பழமொழி உருவானது. அதுதான் 'விளையாட்டு வினையானது'.

ஆனால் விளையாட்டு எப்போதும் வினையாகி விடுவதில்லை. அது ஆரோக்கியத்தையும் வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டது. அதனால்தான் கவிஞர் பாரதி,

"ஒடி விளையாடு பாப்பா – நீ
ஒய்ந்திருக்க லாகாது பாப்பா"

என்று குழந்தைகளை அழைத்தார்.

இந்தியாவின் எல்லாப் பகுதிகளையும் சேர்ந்த இளைஞர்கள் இங்கே உள்ளனர். ஐக்கிய இந்தியர் மீது நாம் கொண்டுள்ள உறுதியை மீண்டும் உறுதி செய்வதற்காக நீங்கள் வந்திருக்கிறீர்கள். சாதி, ஏற்றத் தாழ்வு, மொழி ஆகிய வேறுபாடுகளை நீங்கள் புதைத்து விட்டீர்கள், உங்களில் நான் ஒரு சிறிய அழகான இந்தியாவைக் காண்கிறேன்.

சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாளில் தேசிய இளைஞர் திருவிழா கொண்டாடப்படுவது மிகவும் பொருத்தமாகும். இந்தியாவை உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்வதில் இளைஞர்கள் மீது அவர் பெரும் நம்பிக்கை வைத்திருந்தார்.

நாகரிகம் இந்தியாவில் ஆழமாக வேரூன்றியுள்ளது. நம்முடைய தாய்நாடு மற்றவர்களுக்கு நாகரிகத்தையும் பண்பாட்டையும் கற்பித்தது. புராதன காலத்தில் தமிழகத்தைச் சேர்ந்த கடற் பயணம் செய்வோர், கிழக்கிலும் மேற்கிலும் நீண்ட தொலைவுக்குப் பயணம் செய்தனர்.

தமிழ் மொழி சிறந்த மொழிகளில் ஒன்று. அது பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. அது எங்கள் அறிவுடைமை மேம்பாட்டிற்கு ஆதாரமாகத் திகழ்கிறது.

இந்தியா விஞ்ஞானத்திலும் கலைகளிலும் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குகிறது. நாம் நம்முடைய பாரம்பரியம் பற்றிப் பெருமை கொள்ள முடியும்.

"பாரத நாடு பழம்பெரும் நாடு, நீரதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர்" இவை கவிஞரும் சுதந்திரப் போராட்ட வீரருமான பாரதியின் தங்கச் சொற்கள். இந்தச் சொற்கள் நம்முடைய கடமையை நமக்கு நினைவூட்ட வேண்டும். புகழ் பெற்றிருந்த காலநிலைக்கு இந்தியாவை மீண்டும் கொண்டு செல்வதுதான் அந்தப் பணி.

இங்கே கூடியிருக்கும் நீங்கள், நாங்கள் எல்லாம் சுதந்திரம் பெற்றதற்குப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தவர்கள். நீங்கள் சுதந்திரத்தின் பலன்களை அனுபவித்துக் கொண்டு இருக்கிறீர்கள். நாம் சுயநலமின்மையாலும் தியாகத்தினாலும் சுதந்திரத்தைப் பெற்றோம். கடுமையாகப் போராடிப் பெறப்பட்ட அந்தச் சுதந்திரத்தை நாம் காப்பாற்றுவதுடன் கடந்த காலத்தின் புகழ்பெற்ற நிலைமையை மீண்டும் உருவாக்க வேண்டும்.

அதற்கு ஓய்வில்லாத முயற்சிகள் தேவை. நாம் அமைதியாகவும் துணிவோடும் அதற்காகப் பணியாற்றுவோம். தேவையற்ற விஷயங்களில் நாம் நம்முடைய காலத்தையும் சக்தியையும் விரயமாக்காமல் இருப்போம்.

உலகின் பல்வேறு பகுதியைச் சேர்ந்த பறவைகள் தமிழ்நாட்டில் உள்ள வேடந்தாங்கலில் கூடுவதைப் போல் இந்தியா முழுவதிலும் உள்ள பிரதிநிதிகள் இந்த விழாவின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இங்கே கூடியுள்ளனர். நட்பு, சமாதானம் மற்றும் வளர்ச்சிதான் அந்த நோக்கங்கள். மனிதகுலத்தைச் சேர்ந்த அனைவரையும் சமமாக நடத்தும்போதுதான் இந்தக் கொள்கைகளை நிறைவேற்ற இயலும்.

அடிப்படை மனித மதிப்பீடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படாவிட்டாலும் நீடித்த நட்புறவைச் சாதிக்க முடியாது. இந்த வகையான ஒரு விழா, இந்தியர் களிடையே ஒன்றுபட்ட மனப்பான்மையை உருவாக்க வேண்டும்.

வளர்ச்சியின் பலன்கள் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரையும் சென்றடைய வேண்டும்.

குறிப்பாக நலிந்த பிரிவினரை அவை சென்றடைய வேண்டும். அத்தகைய நலிந்த பிரிவினருக்கு நீங்கள் அனைவரும் உதவி செய்ய வேண்டும் என்பதே என்னுடைய உண்மையான வேண்டுகோளாகும். சக்தியும் முயற்சிகளும் ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். ஏழைகளின் நலனை மேம்படுத்த அரசாங்கங்கள் மேற்கொள்ளும் முயற்சி களுக்கு ஆக்கபூர்வ நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். ஏழைகளின் நலனை மேம்படுத்த அரசாங்கங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இது துணைபுரியும்.

இளமை அற்புதமான சக்தியையும் ஆற்றலையும் பெற்றுள்ளது. நாட்டை உருவாக்குவதில் பயனளிக்கும் நடவடிக்கைகளில் நீங்கள் ஈடுபட வேண்டும். திட நம்பிக் கையுடன் கூடிய துணிவு இருக்கும்போது முன்னேற்றப் பாதையில் உள்ள இடையூறுகள் நீர்க் குமிழிகள் போல்

மறைந்துவிடும். தற்காலிகக் கவர்ச்சி உங்களுடைய முன்னேற்றத்திற்கான பயணத்திலிருந்து உங்களை திசை திருப்பி விடக் கூடாது. தற்காலிக இலாபங்கள் சமாதானத் திற்கும் வளர்ச்சிக்கும் அழைத்துச் செல்லாது.

ஆற்றல் மிக்க உயிரோட்டமுள்ள நாடாக இந்தியாவை உருவாக்கும் இலட்சியத்தை நோக்கி இளைஞர்கள் உறுதி பூண்டு உழைக்க வேண்டும் என்பது என்னுடைய பெரும் விருப்பமாகும்.

இந்தியாவில் உள்ள மொத்த இளைஞர்களில் கிராமப்புற இளைஞர்கள் 78.4 சதவிகிதம் பேர் ஆவர். அதனால்தான் எங்கள் தமிழக அரசு கிராமப்புற இளைஞர்களின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி வருகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இருபத்தையாயிரத் துக்கு மேற்பட்ட இளம் ஆசிரியர்கள் பணியமர்த்தப் பட்டுள்ளனர்.

சாலைகளைப் பராமரிப்பதற்காக 10 ஆயிரம் இளைஞர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

மக்கள் நலப் பணியாளர்களாக பதிமூன்றாயிரம் இளைஞர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

அரசு மருத்துவமனைகளில் அறுநூறு இளம் டாக்டர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் சுமார் ஆயிரம் இளைஞர்கள் தொழில்நுட்ப உதவியாளர்களாகப் பணி யமர்த்தப்பட்டுள்ளனர்.

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்களும், இளம் பெண்களும் எங்கள் மாநிலத்தில் உள்ள தமிழ்நாடு போலீஸ் படையில் சமீபத்தில் இணைந்தனர்.

மேலும் பத்தாயிரம் இளைஞர்களும், இளம் பெண்களும் எங்கள் போலீஸ் படையில் சேர்க்கப்பட உள்ளனர்.

பொறியியல், மருத்துவம், பல் மருத்துவம், விவசாயம், கால்நடை மருத்துவம், சட்டம் மற்றும் சித்த மருத்துவம் போன்ற தொழிற்கல்விப் படிப்புகளில் கிராமப்புற மாணவர்களுக்கு 15 சதவிகித இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப் போராட்ட வீரர்கள், சுதந்திர தீபத்தை இளைய தலைமுறையினரின் கரங்களில் ஒப்படைத்து உள்ளனர். இதை ஒரு மெழுகுத்திரியாகக் கருதக் கூடாது. இது கோடிக்கணக்கான மக்களுக்கு ஒளி கொடுக்கும் ஒரு தீபம். அந்தப் பணியைச் சாதிக்க சுதந்திரப் பொன் விழா கொண்டாடும் இவ்வேளையில் நாம் உறுதி ஏற்போம்.

இந்த மகிழ்ச்சியான வேளையில் எங்கள் அரசு 'தமிழ்நாடு இளைஞர் நலக் கொள்கை'யை உருவாக்கி வருகிறது என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடை கிறேன். இங்கே கூடியுள்ள அனைவரும் இந்த விழாக் காலத்தில் இங்கே மகிழ்ச்சியுடன் தங்கியிருக்க வாழ்த்து கிறேன்.

இன்று விவேகானந்தரின் பிறந்தநாள் என்பதால் அவருடைய புகழ்பெற்ற சொற்களான

"எழு, விழி, இலட்சியத்தை
எட்டும்வரை நில்லாதே"

என்ற சொற்களைக் கூறி என் உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

12-1-98 அன்று சென்னை ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கில் தேசிய இளைஞர் கொண்டாட்டத் தொடக்க விழாவில் தலைமை உரை

2

முரசொலி அறக்கட்டளை விருது வழங்கு விழா

இந்த நல்ல விழாவில் முரசொலி அறக்கட்டளை யின் சார்பில் திரைப்பட இயக்குநர் சாமி அவர்களுக்கும், பத்திரிகை ஆசிரியர் சாவி அவர்களுக்கும், கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்களுக்கும் விருது வழங்கி அவர்களைப் பாராட்டுகிற நேரத்தில் நம்முடைய கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள், ''நான் இட ஒதுக்கீடு செய்து கொள்கிறேன்; கவிஞர் என்ற முறையிலே தமிழன்பனை பற்றி மாத்திரம்தான் அதிகம் பேசுவேன். மற்ற இரண்டு இடங்களையும் தமிழ்க் குடிமகனுக்கு ஒதுக்குகிறேன்'' என்று அவர் இஷ்டத்துக்கு ஒதுக்கி விட்டுப் போக, இவர் இஷ்டத்துக்கு இவர் இரண்டு தொகுதிகளை எடுத்துக் கொண்டு – ஒரு தொகுதி அப்துல் ரகுமானுக்கு ஒதுக்கப்பட்டதாகவே ஒரு கற்பனை செய்து பேசிவிட்டுப் போயிருக்கிறார்கள்.

என் பாடு என்னவென்றால், யார் எந்தத் தொகுதி ஒதுக்கிக் கொண்டாலும், எல்லாத் தொகுதிக்கும் போக வேண்டியவன் நான் (பலத்த சிரிப்பு, கைதட்டல்) என்ற முறையில், நான் இந்தத் தொகுதிகளைப் பற்றி பேச வேண்டியவனாக இருக்கிறேன்.

இங்கே உடல் தளர்ந்த நிலையில் கண்கலங்க – ஆனால் அதே நேரத்தில் உள்ளத்தில் களிப்பு பொங்க, இந்த மேடையிலே வந்து விருதினையும், முரசொலி அறக்கட்டளை சார்பில் வழங்கப்பட்ட ஒரு லட்சம் ரூபாய் பொற்கிழியையும் பெற்றுக் கொண்ட ஏ.எஸ்.ஏ. சாமி அவர்கள் வடார்க்காடு மாவட்டம் திருப்பத்தூரிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர் இங்கே வர வேண்டுமென்று விரும்பி அவரை அழைத்து வருகின்ற முயற்சியிலே ஈடுபட்டு இந்த அறிவிப்பையும் அவருக்குச் சொல்லி, அவர் வர வேண்டும், வந்து எங்களை எல்லாம் காண வேண்டும், என்ற விழைவோடு வந்தார் என்றாலும்கூட, வந்த இடத்தில் பயணம் செய்ததன் காரணமாக நலிவுற்று, உடல் களைப்புற்று சென்னையிலே இன்று மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு, ''நீங்கள் இங்கு வரத் தேவையில்லை, ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று எவ்வளவோ சொல்லியும் கேளாமல், இந்த மேடைக்கு வந்து நம்மை எல்லாம் பார்த்து நம்முடைய முன்னிலையிலே அவருக்கு வழங்கப்பட்ட அந்த விருதினைப் பெற்றுச் சென்றிருக்கின்றார்கள்.

நம்முடைய பத்திரிகை ஆசிரியர் நீண்டகால எழுத்து வேந்தர் சாவி அவர்கள், விருதைப் பெற்றுக் கொண்டு சுருக்கமாக ஆனால் சுவையாக அவருடைய நன்றியை ஏற்புரையாக இங்கே வழங்கியிருக்கின்றார்கள்.

கோடி ரூபாய் கொடுத்தாலும் கிடைக்காத ஒரு கவிதையை இந்த இலட்ச ரூபாய்க்கே நம்முடைய ஈரோடு தமிழன்பன் (கைதட்டல்) இங்கே நமக்கெல்லாம் தனது ஏற்புரை என்ற பெயரில் வழங்கி இருக்கின்றார்.

முரசொலி அறக்கட்டளை தம்பி மாறன் குறிப்பிட்டதைப் போல, முரசொலி இதழின் பொன்விழா நேரத்தில், அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற

நிகழ்ச்சியிலே அறிவிக்கப்பட்டு, அந்த அறக்கட்டளை யின் சார்பில் – தமிழறிஞர்களை, கவிஞர்களை, தமிழ் மொழியிலே திறமை பெற்றவர்களை, விருது வழங்கிப் பாராட்டுவது என்ற ஒரு குறிக்கோளோடு ஆண்டு தோறும் இந்த நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருக் கின்றது.

'முரசொலி'க்குப் பொன்விழா 92-ஆம் ஆண்டு என்று நான் குறிப்பிட்டேன். 1942-ஆம் ஆண்டு முரசொலி திருவாரூரிலே தொடங்கப்பட்டது. தொடங்கப் பட்டபோது – இன்று பெரிய அளவில் வருகின்ற நாளிதழாகத் தொடங்கப்படவில்லை. இன்னும் சொல்ல வேண்டுமேயானால் வார இதழாகக் கூட அது தொடங்கப்படவில்லை. துண்டு அறிக்கையாக, மாதம் ஒரு முறை – தேவைப்பட்டால் மாதமிருமுறை, மேலும் தேவைப்பட்டால் மாதம் மூன்று முறை திருவாரூரில் இருந்து வெளியிடப்படுகின்ற துண்டு அறிக்கையாக முரசொலி வெளிவந்தது.

மாணவனாக இருந்த காரணத்தால், 'சேரன்' என்ற புனைபெயரோடு அந்தத் துண்டறிக்கை வெளியிடப் பட்டு ஒரு நான்காயிரம் அல்லது ஐயாயிரம் பிரதிகள் அச்சியற்றப்பட்டு, ஆங்காங்குள்ள நமது இயக்க அமைப்பு களுக்கு இலவசமாகவே அனுப்பி வைக்கப்பட்டு, கொள்கையைப் பரப்புகின்ற அந்த முயற்சியிலே நாங்கள் ஈடுபட்ட காலம் அந்தக் காலம்.

அதற்குப் பிறகு அது வார ஏடாகத் திருவாரூரிலே மலர்ந்தது. அப்படி மலர்ந்த நேரத்தில் முரசொலி அச்சியற்றப்பட்டு, அச்சகத்திலே இருந்து குறிப்பிட்ட நாளில் எடுக்க முடியாத அளவிற்குக் கடன் தொல்லை, பணமுடை இவைகள் எல்லாம் என்னை வருத்தியதுண்டு. அந்த நேரங்களில் என் வீட்டிலே சகோதரிகளின் நகைகளை அடமானம் வைத்துவிட்டு பணம் திரட்டி

அச்சியற்றப்பட்ட அந்த முரசொலி வார இதழ்களை எல்லாம் எடுத்துச் செல்ல, ஒரு வண்டி வைக்கக்கூட இயலாத நிலையில், தலையிலே சுமந்து நானும், முரசொலியின் மேலாளரும், என்னுடைய நண்பன் தென்னனும் திருவாரூரின் குறுக்கே ஓடிக் கொண்டிருக் கின்ற ஓடம் போக்கி ஆற்றில், இடையே இருந்த மூங்கில் பாலத்தில் நடந்து வந்து, தெற்கு வீதியிலே இருந்த முரசொலி அலுவலகத்திலே அவைகளை எல்லாம் முகவர்களுக்கும், அனுப்ப வேண்டியவர்களுக்கும் அனுப்புகின்ற பணியிலே ஈடுபட்டு, அப்படிப் பரவியது முரசொலி!

அந்த முரசொலிதான் பின்னர் சென்னையிலே இருந்து நாளேடாக வெளிவந்தது. நாளேடாக வெளிவந்த அந்தக் கால கட்டத்தினைத் தொடர்ந்துதான் அதனுடைய ஐம்பதாவது ஆண்டு விழாவை, பொன் விழாவை சென்னையிலே நடத்தி, அந்த விழாவிலேதான் இந்த அறக்கட்டளை அறிவிக்கப்பட்டு அந்த அறக்கட்டளை யின் சார்பாக இன்றைக்கு விருதுகள் வழங்கப்பட்டி ருக்கின்றன.

அறக்கட்டளை என்று சொன்னால் போதாது; இந்த முரசொலி அறக்கட்டளைக்கு ஒரு வரலாறு உண்டு என்பதற்காகத்தான் இந்த வரலாற்றை நான் உங்களுக்குச் சுருக்கமாகச் சொன்னேன்.

ஏதோ எடுத்த எடுப்பில், பல்லாயிரக்கணக்கான இதழ்கள் அச்சிடப்படுகின்ற வகையிலே வசதியோடு, வளத்தோடு, வாய்ப்போடு தொடங்கப்பட்டதல்ல முரசொலி ஏடு!

அந்த ஏடு இன்றைக்கு வளர்ந்திருக்கின்றது. இங்கே பேசியவர்கள் எல்லாம் முரசொலியைப் பாராட்டி னார்கள். இன்றைக்கு இலட்சக்கணக்கான பிரதிகள் மற்ற ஏடுகளைப் போல முரசொலி செல்லா விட்டாலும் கூட,

இலட்சக்கணக்கான ஏடுகள் உருவாக்குகின்ற தாக்கத்தை எதிர்கொள்ளக்கூடிய அந்த வலிமையைப் பெற்றிருக் கின்ற ஏடாக முரசொலி திகழ்கிறது என்றால், (பலத்த கைதட்டல்) அது முரசொலிக்கு மாத்திரம் உள்ள வலிமை அல்ல; ஆற்றல் அல்ல; அந்த முரசொலி நடத்தப்படுகின்ற இயக்கத்தின் பின்னால் இருக்கின்ற உங்களைப் போன்ற இலட்சோப இலட்சம் உடன்பிறப்புகளுடைய வலிமை தான் முரசொலியின் வலிமை (பலத்த கைதட்டல்). அந்த வலிமையின் காரணத்தினால்தான் இன்றைக்கு அந்த அறக்கட்டளை, வித்தகர்களுக்கு, மேதைகளுக்கு, தமிழறிஞர்களுக்கு, கவிஞர்களுக்கு இந்த விருதை வழங்குகின்ற அளவுக்கு ஒரு பெருமையைப் பெற்றிருக் கின்றது.

1942-ஆம் ஆண்டில் முரசொலியைத் துண்டறிக்கை யாக நான் வெளியிட்ட அந்தக் கால கட்டத்தில் அதனுடைய ஆண்டு விழா திருவாரூரில் நடத்தப்பட்டது. அந்த ஆண்டு விழாவிற்குப் பேராசிரியர் அவர்களும், நாவலர் அவர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். இருவரும் அந்த ஆண்டு விழாவிலே ஆற்றிய உரை இன்னமும் என்னுடைய செவிகளில் ரீங்காரம் செய்து கொண்டிருக்கின்றது.

பேராசிரியர் அவர்களையும், நாவலர் அவர்களையும் அந்த ஆண்டு விழாவிற்கு அழைத்து விட்டு, 'ராஜரத்தினம் படிப்பகம்' என்ற ஒரு படிப்பகத்தில் அவர்களைத் தங்க வைத்து மாலையிலே கூட்டம் நடத்தி, மறுபடியும் அவர்களைச் சிதம்பரத்திற்குத்தான் அனுப்ப வேண்டும் – அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அவர்கள் பயின்று கொண்டிருந்த காலகட்டம். அங்கு தான் அனுப்ப வேண்டும். அனுப்புவதற்குக் கூட போக்கு வரத்துக்கான செலவுக்குக் கொடுப்பதற்குப் பணம் இல்லாமல் திண்டாடினோம். என்னுடைய வீட்டில் இருந்த ஒரு நகையை நானே திருடி, அதை அடமானம்

வைத்து, சொற்பொழிவாளர்களை வழியனுப்பி வைத்த நிகழ்ச்சிகள் எல்லாம் பொது வாழ்க்கையிலே ஈடுபட்ட வன் சந்திக்க வேண்டிய சிரமங்கள் என்பதற்காகத்தான் அதை குறிப்பிடுகின்றேன்.

அன்று பேராசிரியரும், நாவலர் நெடுஞ்செழியனும் அந்த விழாவிலே கலந்து கொள்வதற்காக முதல் நாளே வந்து விட்டார்கள். அப்பொழுது இரயிலடியில் அவர்கள், ''எங்களை அழைத்த கருணாநிதி எங்கே?'' என்று தேடுகிறார்கள். நானும் தேடுகிறேன், ''அன்பழகன் எங்கே? நெடுஞ்செழியன் எங்கே?'' என்று. அப்படி அறிமுகம் இல்லாமலே, ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்காமலே நாங்கள் அழைக்க அவர்கள் வந்தார்கள் என்றால், எங்களை விட முந்திக் கொண்டு அறிமுக மானது; பெரியாரின் கொள்கை – அண்ணாவின் கொள்கை! அது எங்களை அறிமுகப்படுத்தி வைத்தது! (பலத்த கைதட்டல்)

இன்றைக்கு இந்தக் கால கட்டத்தில் அந்தக் கொள்கைகளுக்கு ஆபத்து வந்துவிடுமோ, என்ற அச்சத் தோடு இந்த மாமன்றத்திலே நாம் இனிய விழா நடத்திக் கொண்டிருந்தாலும், இதயம் துணுக்குறுகிற நிலையிலே நின்று கொண்டிருக்கிறோம், அமர்ந்திருக்கின்றோம் என்பதை மறந்து விடக் கூடாது.

1944-ஆம் ஆண்டு நான் குடியரசு அலுவலகத்திலே தந்தை பெரியாருடைய அரவணைப்பில் ஓராண்டு காலம் இருந்தேன். 44-45-ஆம் ஆண்டுகளில் அப்படி இருந்தபொழுது எனக்குத் துணை ஆசிரியர் பொறுப்புக்குத் தரப்பட்ட மாத ஊதியம் 40 ரூபாய். சாதாரணமாகக் கருதக்கூடாது. அந்தக் காலத்தில் 40 ரூபாய் என்றால் இந்தக் காலத்தில் உள்ள 400 ரூபாய்க்குச் சமம்.

நான் ஒப்பிட்டுச் சொல்ல வேண்டுமேயானால் அதற்கு முன்பு அந்த அலுவலகத்தில் விடுதலை அலுவல கத்திலே ஆசிரியராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு 50 ரூபாய் சம்பளம். எனக்கு 40 ரூபாய் சம்பளம். அங்கே ஓராண்டு காலம் பணியாற்றினேன். அதற்கு பின்னர்தான் ஏ.எஸ்.ஏ. சாமி அவர்களுடைய அழைப்பு எனக்கு வந்தது.

திருச்சியிலே வானொலி நிலையத்திலே பணி யாற்றிக் கொண்டிருந்த தபேலா முத்துக்கிருஷ்ணன் என்று ஒருவர் இங்கே வீற்றிருக்கிற ஆர்.எம்.வீ. அவர் களுக்கும், எஸ்.எஸ்.ஆர். அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அவர்தான் ஏ.எஸ்.ஏ. சாமி அவர்கள் அழைப்ப தாக ஈரோட்டுக்கு வந்து என்னை அழைத்தார். பெரியாரி டத்திலே அனுமதி பெற்று ஈரோடு சுப்பையனைத் துணைக்கு அழைத்துக் கொண்டு கோவைக்குச் சென்றேன். கோவையிலே ஏ.எஸ்.ஏ. சாமி அவர்களைச் சந்தித்தேன். அப்பொழுது அவர் 30 அல்லது 35 வயதுகூட நிரம்பப் பெறாத வாலிபர். நான் அவரை விட ஒரு ஒன்பது வயது இளையவன். வசனம் எழுத வேண்டும், தான் இயக்குகின்ற படங்களுக்கு என்று சொன்னார். ராஜகுமாரி படம் அப்போது இயக்குவதாக இருந்தது. அன்றைக்குத்தான் எனக்கும் என்னுடைய – அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் அந்தப் படத்திலே தான் முதல் அறிமுகமே. அந்தப் படத்திலேதான் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் கதாநாயகனாக நடித்தார். இன்னமும் உங்களில் சில பேருக்கு, பெரியவர்களுக்கு நினைவிருக்கலாம். அதிலே எம்.ஜி.ஆர். வாள் சண்டை போடுவதற்காக ஒரு மேடையில் குதித்து வரும்பொழுது, திரைப்பட அரங்கம் முழுதும் அதிரும். அந்த அளவிற்குக் கையொலி எழும். காரணம், எம்.ஜி.ஆர். அவர்கள் அப்படி அறிமுகமாகிற நேரத்தில் கறுப்பு உடை தரித்துக்

கொண்டு அறிமுகமாவார். கறுப்பு உடையை திரைப் படத்திலே காண்பதே கூட அன்றைக்கு நம்முடைய கழகத்தினருக்கு, இயக்கத்தினருக்கு அவ்வளவு மகிழ்ச் சியைத் தந்த ஒரு நிகழ்ச்சியாக அன்றைக்கு இருந்தது.

'ராஜகுமாரி' படத்திலே எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்து வெளிவந்த அந்தக் கால கட்டத்தில் ஏ.எஸ்.ஏ. சாமி அவர்கள் எனக்கு மாதந்தோறும் தந்த ஊதியம் 150 ரூபாய். ஈரோட்டிலே 40 ரூபாய். கோயம்புத்தூர் சென்ட் ரல் ஸ்டூடியோவில் 150 ரூபாய் பிரமோஷன்! அதற்குப் பிறகு மாடர்ன் தியேட்டர்ஸில் வசனம் எழுத வந்தேன். மாதம் 500 ரூபாய் சம்பளம். 40, 150, 500 என்ற அளவிலே திரைப்படத் துறையில் சம்பளம் பெற்றேன்.

சென்னைக்கு வர வேண்டும். இயக்கப் பணிகளிலே தொடர்ந்து ஈடுபட வேண்டும், இடையறாது ஈடுபட வேண்டும் என்று எண்ணி, சென்னைக்கு வந்த பொழுது கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள் என்னை ''சென்னைக்கு வந்து விடுங்கள்'' என்று அழைத்தபோது, பராசக்தி படம் எடுப்பதற்காக நேஷனல் பிக்சர்ஸ் பெருமாள் அழைத்தபோது, சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் டி.ஆர். சுந்தரம் அவர்கள், ''வேண்டாம், சென்னைக்குச் செல்ல வேண்டாம். சேலத்திலேயே இந்த ஸ்டுடியோவில் இருந்து படங்களை இயக்கும், டைரக்டராக இருங்கள். மாதம் 10,000 ரூபாய் தருகிறேன்'' என்று குறிப்பிட்டார். 10 ஆயிரம் சாதாரணமானதல்ல அன்றைக்கு.

நான் அங்கே கட்டுப்பட்டு விடுவேன், ஆட்பட்டு விடுவேன், கழகப் பணிகளில் ஈடுபட முடியாத அளவிற்குக் கட்டுண்டு விடுவேன் என்பதற்காக ''இயலாது'' என்று கூறிவிட்டு சென்னைக்கு வந்தவன் தான் நான். அதற்குப் பிறகு நடப்பதெல்லாம் உங்களுக்குத் தெரியும். நடந்ததெல்லாம் உங்களுக்குத் தெரியும்.

இந்த இடைக்காலத்தில் ஏ.எஸ்.ஏ. சாமி அவர்கள் கோவையிலே நான் இருந்தபொழுது என்னிடத்திலே காட்டிய அன்பு, என்னிடத்திலே காட்டிய பாசம், வைத்திருந்த பற்று இவைகளையெல்லாம் என்னால் மறக்க முடியாது. எனக்கும், அவருக்கும் சில கருத்து மாறுபாடுகள் எல்லாம் கூட ஏற்பட்டதுண்டு. அதைப் பெரிய அளவில் வெளியிலே இருந்தவர்கள் பூதாகரமாக எடுத்துச் சொன்னதெல்லாம் கூட உண்டு. ஆனாலும் எங்களிடையே இருந்த அன்பு என்றைக்கும் பட்டுப் போகவில்லை. அவருடைய இல்லத்திலே நான் பல நாட்கள் உணவருந்தி இருக்கின்றேன். அவர் என்னை மிகுந்த அன்போடு நடத்தி இருக்கின்றார். என்னுடைய திறமையை அவர் என்றைக்கும் குறைத்து எடை போட்டதில்லை. அப்படி இருந்த அவர் இன்றைக்கு அவருடைய வாழ்க்கையிலே அந்த அளவிற்கு ஒளி பெறாத சூழ்நிலையிலே இருந்தாலும்கூட, அவருடைய குடும்பத்தார் என்னிடத்திலே காட்டுகின்ற மரியாதை, அன்பு எந்த அளவிலும் குறைந்திடவில்லை.

எனவேதான் அவருக்கு ஆற்ற வேண்டிய நன்றிக் கடன் மாத்திரமல்ல, திரைப்படத் துறையிலே அறிஞர் அண்ணா அவர்களுடைய 'வேலைக்காரி' படத்தை அந்தப் புரட்சிகரமான சித்திரத்தை அவருடைய அருமையான இயக்கும் தன்மையினால் அந்தத் திறமையினால் நாட்டு மக்களுக்கு எடுத்துக்காட்டி, திரைப்படத் துறையிலே முதல் முதலாக ஒரு புரட்சியை ஏற்படுத்திய அந்தப் படத்தின் இயக்குநர் என்ற முறையிலே ஏ.எஸ்.ஏ. சாமி அவர்களைப் பாராட்ட வேண்டும் என்ற என்னுடைய நெடுநாளைய எண்ணம், என்னுடைய நெடுநாளைய ஆசை; அவைகளுக்கெல்லாம் மீறி, எனக்குத் திரைப்படத்துறையிலே ஆரம்பகால ஆசிரியராகவும் இருந்தார் என்ற அந்த அன்பை திரும்பக்

காட்ட வேண்டும். நன்றிக் காணிக்கை செலுத்த வேண்டும் என்ற அந்த எண்ணமும் நிறைவேற தம்பி முரசொலி மாறனும் மற்றும் முரசொலி அறக் கட்டளையிலே உள்ள நண்பர்களும் என்னுடைய எண்ணத்தை ஈடேறச் செய்கின்ற வகையிலே அவருக்கு விருதும், ஒரு லட்ச ரூபாய் பொற்கிழியும் அளித்தமைக் காக என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக் களையும் அறக்கட்டளையிலே உள்ள அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய ஆசிரியர் சாவி அவர்கள். அவருக்கும் எனக்கும் உள்ள நட்பைப் பற்றி இங்கே பாராட்டிப் பேசியவர்கள் அனைவரும் எடுத்துக் கூறி யிருக்கின்றார்கள். நகைச்சுவை எழுத்தாளர் மாத்திரமல்ல; நாட்டுப்பற்று மிகக் கொண்ட எழுத்தாளர். உத்தமர் காந்தி யடிகளோடு பழகக் கூடிய அத்தகைய வாய்ப்பையும் பெற்றவர். காந்தியடிகள் வடபுலத்திலே தியாக யாத்திரை மேற்கொண்டபோது, பத்திரிகை ஆசிரியராக அவரை பார்க்கச் சென்ற சாவி அவர்கள், காந்தியடிகளோடு நடத்திய உரையாடல்களையெல்லாம் தொகுத்து, அந்தப் பயணத்தைப் பற்றி ஒரு புத்தகமே எழுதியிருக்கிறார். படிக்க படிக்க நம்முடைய இதயத்திலே ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய நூல் அந்த நூல். அவர் எழுதிய வாஷிங்டன் திருமணத்தைப் பற்றி தகுதிச் சான்றிதழிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

அந்த நாடகம் எத்தனை தடவைகள் தமிழ்நாட்டிலே நடைபெற்றிருக்கின்றன? தமிழ்நாட்டிலே மாத்திரமல்ல; பம்பாய் போன்ற இடங்களில், வெளிமாநிலங்களிலே கூட எத்தனை நாடகங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை எண்ணிச் சொல்ல முடியாது. அந்த அளவிற்கு அந்த நாடகங்கள் நடத்தப் பெற்றிருக்கின்றன. நானே ஒரு ஐந்தாறு முறை சாவி எழுதிய வாஷிங்டன்

திருமணம் என்ற அந்த நாடகத்தைப் பார்த்து பரவசப் பட்டிருக்கின்றேன்.

'வேதவித்து' என்று ஒரு சிறிய நூல். ஒரு புதினம், ஒரு குறுநாவல். அதை ஒரு இரவிலே படித்து முடித்து மறுநாள் காலையிலே அதற்கு அணிந்துரை எழுதி அனுப்பினேன். அருமையான கதை.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே உள்ளவர்களைப் பாத்திரங்களாக அமைத்து, மேட்டுக் குடியிலே பிறந்த ஒரு கதாபாத்திரத்தையும் உருவகப் படுத்தி, அவர் அமைத்திருக்கின்ற அந்தப் பாங்கினைப் பார்த்தால் திரு. சாவி அவர்கள் எந்த அளவிற்கு முற்போக்கு எண்ணம் கொண்டவர் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். அவர் இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்காக சிறைச்சாலையில் இருந்தவர். பலமாத காலம் சிறைச்சாலையில் இருந்தவர். பலமாத காலம் சிறைச்சாலையிலே பல்வேறு தலைவர்களோடு வாடியவர். சுதந்திரம் பெற்ற பிறகும் கூட அவருக்கு ஒரு நாள் சிறைச்சாலை வரவேற் பளித்தது; கடந்த நாலைந்து ஆண்டுகளுக்கு முன்பு!

கடந்த கால ஆட்சியில் திடீரென்று ஒரு செய்தி வந்தது எங்களுக்கு. சாவி கைது செய்யப்பட்டார் என்ற செய்தி வந்தது. ஏன், என்று வினவினோம். அவருடைய பத்திரிகையிலே ஒரு அட்டைப்படம். அது ஆபாசப் படமாம். அதற்காகக் கைது என்று சொன்னார்கள். உடனடியாக அவர் எங்கே இருக்கிறார் என்று தேடி நானும், நண்பர் வீராசாமியும் மற்றவர்களும் சென்றோம். அண்ணா நகரில் காவல் நிலையத்தில் அவரை வைத்திருந்தார்கள். அங்கே சென்று பார்த்த பொழுது, அவர் அப்பொழுதும் புன்னகையோடு தான் இருந்தார். நான் கூட கேட்டேன். ''என்ன, பழைய காலத்திலே நாட்டு விடுதலைக்காகப் போராடி சிறைச்

சாலைக்குச் சென்றதைப் போல சிரித்த முகத்தோடு அமர்ந்திருக்கின்றீர்களே?'' என்று கேட்டேன். சொன்னார்: ''நீங்களெல்லாம் வந்திருக்கிறீர்களே, என்னைக் காண. அதனால், இந்தக் குறை எனக்குத் தெரியவில்லை'' என்று சொன்னார். ஆனால், அவருடைய நெஞ்சக் குமுறல் நன்றாக வெளிப்பட்டதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

அப்பொழுது சொன்னார்: ''சாவி' பத்திரிகையில் ஒரு அட்டைப்படம் போட்டதற்காக இந்த நிலை, இந்த தண்டனை எனக்கு'' என்று சொன்னார். நாங்கள் அவரை ஜாமீனில் எடுத்து வெளியே கொண்டு வந்தோம். இது அவருடைய வாழ்க்கையிலே ஏன் ஏற்பட்டதென்றால் எனக்கும், அவருக்கும் இருந்த நட்பின் காரணமாகத்தான் இது அவருக்கு ஏற்பட்டது. நட்புக்காக இந்தத் துன்ப துயரங்களையெல்லாம் கூட அவர் தாங்கிக் கொள்ளக் கூடிய இயல்பு படைத்தவராக இருந்தார். இன்றைக்கும் இருக்கின்றார்.

எத்தனையோ சுற்றுப் பயணங்களில் என்னோடு நண்பர் சாவி அவர்கள் வந்திருக்கின்றார். ஏன் வருகிறார் என்றால் சுற்றுப்பயணத்தில் மக்களுடைய எழுச்சியை, மக்களுடைய ஆர்வத்தை நேரடியாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கின்ற ஆவல். எனவே எல்லா சுற்றுப் பயணங்களிலும் அந்தக் காலத்திலே என்னோடு திரு. சாவி அவர்கள் வருவது வாடிக்கை. எங்கள் இரண்டு குடும்பத்திலே உள்ள பெண்களும் கூட – அவருடைய வீட்டாரும் என்னுடைய வீட்டிலே உள்ளவர்களும் நல்ல முறையில் நெருங்கிப் பழகக் கூடிய அளவிற்கு இரண்டு குடும்பங்களும் ஒரே குடும்பம் என்ற அளவிற்குப் பழகக் கூடிய குடும்பங்கள்.

அவர் அமெரிக்கா சென்றாலும், உலகத்திலே எந்தப் பகுதிக்குச் சென்றாலும், அங்கிருந்து என்னோடு

தொடர்பு கொள்ளத் தவற மாட்டார். இங்கேயும் சென்னையிலே இருக்கும்பொழுது நாள்தோறும் நானும், அவரும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசிக் கொண்டுதான் இருக்கின்றோம். அப்படிப்பட்ட இனிய நண்பர். எளிய நண்பர். என்றைக்கும் எந்த நிலையிலும் மாறாத நட்புணர்வு கொண்ட நண்பர், சாவி அவர் களுக்கு – நண்பர் என்ற முறையிலே அல்ல. அவர் நல்ல எழுத்தாளர். பல எழுத்தாளர்களை உருவாக்கிய, எழுத்தாளர்களெல்லாம் போற்றுவதைப் போல, 'எழுத்தாளர்களின் பிதாமகன்' என்று பாராட்டப் படுகின்ற அவருக்கு இந்த விருதை அளித்து முரசொலி அறக்கட்டளை பெருமைப்படுகிறது. அந்த விருதை வழங்கியதன் மூலம் நான் பெருமைப்படுகிறேன் என்பதை இங்கே எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக் கின்றேன்.

ஈரோடு தமிழன்பன்; அவர் இங்கே சொன்னார். ''ஈரோடு என்கின்ற அடைமொழியையே, கருணாநிதி தான் என்னோடு ஒட்ட வைத்தார்'' என்று குறிப் பிட்டார். இங்கே தமிழன்பனின் கவிதைகளையும் கேட்டீர்கள். அவர் எழுதிய கவிதைகளைப் பற்றி விமர் சனங்கள் செய்த நம்முடைய கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களுடைய பேச்சையும் கேட்டீர்கள். எப்படிப் பட்ட ஆற்றலாளர்கள் தமிழகத்திலே தமிழை வாழ வைக்க, தமிழர்களுக்குத் தொண்டாற்ற, தமிழ்ப் பணியை தொடர்ந்திட கிடைத்திருக்கிறார்கள் என்பதை எண்ணி எண்ணி நாம் பெருமையடையலாம்.

அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, ஒவ்வொரு கவியரங்கமும், பல்லாயிரக்கணக்கான மக்கள் நிரம்பி வழியக் கூடிய அளவிற்கு நடைபெற்றதென்றால், அடுத்து நடைபெறுகின்ற கவியரங்கத்திற்கும் அதே போன்று பெருந்திரளாக மக்கள் வந்தார்கள் என்றால், அதற் கெல்லாம் காரணம், தமிழன்பனைப் போல அப்துல்

ரகுமானைப் போன்றவர்கள் அந்தக் கவியரங்கத்திலே காட்டிய திறமைதான் அதற்குக் காரணம்.

நான் 1967-ஆம் ஆண்டு முதன் முதலாக திருச்சி வானொலியிலே கவியரங்கத்திற்குத் தலைமை வகித்து விடுதலை வீரர்கள் என்ற தலைப்பிலே பாடத் துவங்கிய அந்தக்காலம் தொட்டு இதுவரையிலே அப்துல் ரகுமான் அவர்களும், ஈரோடு தமிழன்பன் அவர்களும் இல்லாத கவியரங்கம் என் தலைமையிலே நடைபெற்றதே இல்லை என்று சொல்லலாம். இடையிடையே சிலர் நெருக்கடியின் காரணமாக விலகிக் கொண்டதுண்டு. ரொம்ப நெருக்கமாக இருந்தால் விலகிக் கொள்வோம் என்று விலகிக் கொள்வதைப் போல, நெருக்கடி நேரத்திலே சிலர் விலகிக் கொண்டதுண்டு. ஆனால், நெருக்கடி காலத்திலும், நெருக்கிக் கொண்டு என்னோடு இருந்தவர்கள் அப்துல் ரகுமானும், ஈரோடு தமிழன்பனும் என்று சொன்னால் அது மிகையாகாது. (பலத்த கைதட்டல்)

அப்படிப்பட்ட இருவரில் ஒருவருக்கு விருது வழங்கவும் இன்னொரு கவிஞர் ரகுமான் அவர்கள் விருது வழங்கப்பட்டவரைப் பாராட்டவுமான ஒரு சூழ்நிலை இந்த மேடையில் அமைந்ததை எண்ணி எண்ணி நான் பூரிக்கிறேன். எத்தனையோ அரசியல் வெப்பத்திற்கிடையே எவ்வளவோ அலுவல்களுக் கிடையே இன்று இந்த மாலை நேரம் இந்த இரண்டு கவிஞர்களுடைய உரையையும் கவிதையையும் கேட்டதன் காரணமாக பயனுள்ள நேரமாக அமைந்திருக்கின்றது.

நான் அடிக்கடி சொல்வதுண்டு. அரசியல் வெப்பத்தைத் தணிக்க இதுபோன்ற இலக்கிய நிகழ்ச்சிகள் தான் எனக்குப் பெரிதும் உதவுகின்றன என்று! அந்த உதவியை இன்றைக்கு அப்துல் ரகுமானும், ஈரோடு தமிழன்பனும் செய்திருக்கின்றார்கள். அந்த

வகையிலும் அவர்களுக்கு நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விருதுகள் மிகவும் பொருத்தமானவர்களுக்குப் பொருத்தமானவர்களாகிய உங்கள் முன்னிலையில் வழங்கப்பட்டிருக்கின்றன. அவர்களை வாழ்க! வாழ்க! என்று வாழ்த்துகின்றேன்.

13-1-98 அன்று முரசொலி அறக்கட்டளை விருது வழங்கும் விழாவில் ஆற்றிய உரை

3

திருவள்ளுவர் விழா

தைப்பொங்கலைத் தொடர்ந்து இந்தத் தமிழர் திருநாள் தொடரில் திருவள்ளுவர் நாளை நாம் பெருமிதத்தோடு கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இந்த நாளில் திருவள்ளுவர் விருது வழங்கியும், தமிழக வரலாற்றில் ஒரு பகுதியாக சி.இ. இராமச்சந்திரன் தலைமையிலே இயங்குகின்ற வரலாற்றுக் குழுவின் சார்பில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள 'சோழப் பெருவேந்தர் காலம்' என்ற நூல் வெளியீட்டு விழா உரை நிகழ்த்தியும் சிறந்த நூல்களுக்குப் பரிசு என்ற வகையில் அந்த நூலாசிரியர்கள் 56 பேரை – பழைய காலத்தில் 56 தேசத்து ராஜகுமாரர்களைப் பாராட்டு வதைப் போல பாராட்டி, பரிசு வழங்கியும், முதிர்ந்த வயதுடைய தமிழ் அறிஞர் பெருமக்கள் நால்வருக்குத் திங்கள்தோறும் வழங்குகின்ற நிதியினை வழங்கியும் சிறப்புப் பெற்றுள்ள இந்த அரிய நிகழ்ச்சியில் உங்கள் அனைவரோடு நானும் கலந்து கொள்கின்ற வாய்ப்புப் பெற்றமைக்காகப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

திருவள்ளுவர் விருதுபெற்ற சாரங்கபாணி அவர்களைப் பற்றி நம்முடைய பேராசிரியர் அவர்கள் குறிப்பிடும்போது அவர்கள் ''குடத்திலிட்ட விளக்காக இருக்கிறார்'' என்று குறிப்பிட்டார். அதுதான் நல்லது

என்று கூடச் சொன்னார். ஆனால் சாரங்கபாணி அவர்கள் உரை வேற்றுமை கண்டவர் என்ற காரணத் தினால் பேராசிரியருடைய உரையிலேயிருந்து நான் கொஞ்சம் விலகிச் சென்றல்ல; ஒட்டிச் சென்று அவர் குடத்திற்குள்ளே இருக்கின்ற விளக்குதான்; ஆனால் அந்தக் குடம் கண்ணாடியில் செய்யப்பட்ட குடம் (பலத்த கைதட்டல்) மண் குடமாக இருந்திருந்தால், பித்தளைக் குடமாக இருந்தால் ஒளி வெளியே தெரியாது, எனவே இன்றுமுதல் அவரை கண்ணாடிக் குடத்திற்குள்ளே நாம் வைத்திருக்கிறோம் என்று சொல்லலாமே என்று கருதிக் கொண்டேன்.

அப்படிக் கண்ணாடிக் குடத்திற்குள்ளேயிருந்து ஒளி வழங்கிக் கொண்டிருக்கின்றவராக திருக்குறளுக்கு உரை இயற்றிய நூல்கள் மாத்திரமல்ல, திருக்குறளைப் பற்றிய ஆய்வு நூல்களை மாத்திரமல்ல, சங்க இலக்கிய நூல்கள் பலவற்றை தன்னுடைய அருந்திறனால் ஆய்வு செய்து வெளியிட்டுள்ள பெருமைக்குரியவர் சாரங்கபாணி என்கிறபோது; அவர் சொன்னார்; கலைஞர் கையினால் நான் இன்று இந்த விருது பெறுகின்ற பேற்றினைப் பெற்றேன் என்று; நான் சொல்கிறேன், அவை அடக்கத் திற்காக அல்ல, உண்மையைச் சொல்கிறேன். அவரைப் போன்ற தமிழ் அறிஞர்களுக்கு விருது அளிக்கின்ற பேற்றினை நான் பெற்றேன் என்று பெருமைப் படுகிறேன். (கைதட்டல்) அப்படி ஒரு நல்ல விழா இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தமிழக அரசைப் பொறுத்தவரையில் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலே 1967-ஆம் ஆண்டு இந்த அரசு அமைந்த காலந்தொட்டு மொழி வளர்ச்சிக்கும், தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்கும் எத்த னையோ நற்செயல்களை ஆற்றியிருக்கிறது. அரும் பணி களைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று முதலமைச்சராக ஆன அந்தக் காலக்கட்டத்திலேதான் தமிழர்களுடைய நீண்டகால கனவாக இருந்த; நாம் பிறந்த மண்ணுக்கு ''சென்னை ராஜ்யம்'' என்று இருக்கின்ற பெயரை மாற்றி இந்த மண்ணுக்கு உரிய பெயரை தமிழ் நிலத்தின் பெயரை ''தமிழ்நாடு'' என்று சூட்ட வேண்டும் என்ற கோரிக்கை வெற்றி பெற்றது. அந்தக் கோரிக்கையை பேரறிஞர் அண்ணா அவர்கள் நிறைவேற்றித் தந்தார்கள்.

யார் யார் 'தமிழ்நாடு' என்ற பெயர் தேவையில்லை என்றெல்லாம் வாதிட்டார்களோ அவர்களையெல்லாம் பேரவையிலே நிறுத்தி வைத்து அண்ணா அவர்கள் எழுந்து நின்று நான் மும்முறை சொல்வேன் 'தமிழ்நாடு' என்று, நீங்களெல்லாம் வாழ்க! வாழ்க! என்று சொல்ல வேண்டும் என்று கூறி, தமிழ்நாடு என்ற பெயர் தேவையா?' என்று வாதிட்டவர்களையும் வாழ்க! வாழ்க! என்று சொல்ல வைத்த பெருமையும் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு உண்டு.

அண்ணா காலத்திலேதான் தமிழர்களுக்கு அவர்களுடைய உரிமைகள் சிதைக்கப்படாமலிருக்க – தமிழ்மொழி எதிர்காலத்திலே அறவே வீழ்ந்து விட்டது என்ற நிலை ஏற்படாமலிருக்க இனிமேல் தமிழ்நாட்டிலே இந்தி ஆதிக்கத்திற்கு இடமில்லை, தமிழ், ஆங்கிலம் என்ற இரு மொழித் திட்டந்தான் என்று அறைகூவலாக விடுத்து அறிவித்த பெருமையும் கழக அரசுக்கு அண்ணா தலைமையிலே அமைந்த அரசுக்கு உண்டு என்பதை நீங்களெல்லாம் அறிவீர்கள்.

அண்ணா அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி நாங்கள் – நானும், பேராசிரியரும் மற்றும் அமைச்சர் பெருமக்களும் ஆற்றிய தொண்டின் அடிப் படையிலே தமிழ் வளர்ச்சிக்காக, தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்காக எத்தனையோ நற்காரியங்களை ஆற்றி

வந்திருக்கின்றோம். இன்னும் ஆற்றிக் கொண்டிருக் கின்றோம்.

குறிப்பாக நான் 67-இல் இருந்து அந்த நீண்ட கால சாதனையைச் சொல்ல விரும்பவில்லை, கடந்த 96-ஆம் ஆண்டில் நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு மீண்டும் வந்து – குறிப்பாக நான் நான்காவது முறையாக முதலமைச்சர் பொறுப்பை ஏற்று இந்த இரண்டாண்டு காலத்தில் தமிழ் வளர்ச்சிக்கு இந்த அரசு என்னென்ன செய்திருக்கின்றது என்பதைக் கொஞ்சம் நீங்கள் கருதிப் பார்க்க வேண்டும்.

★ தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைக்காக ஒரு புதிய அமைச்சகமே கண்டு அதற்கென்று ஒரு அமைச்சரையே நியமித்தது இந்த அரசுதான். (கைதட் டல்) இதுவரையில் இல்லாத ஒன்று தமிழகத்தில்.

★மெட்ராஸ் ஸ்டேட் அதாவது சென்னை ராஜ்யம் என்று இருந்தது தமிழ்நாடு என்று ஆகிவிட்ட பிறகு மெட் ராசோ, மதராசோ இருக்கக் கூடாது என்பதற்காக ''சென்னை'' என்ற தமிழ்ப் பெயர் சூட்டப்பட்டதும் இந்த ஆட்சியிலேதான் (கைதட்டல்).

அன்று 76-க்கு முன்பு 'பூம்புகார்' சிலப்பதிகாரத்தி னுடைய சாயலாய், தமிழர்களுடைய வரலாற்றுப் பெட்டகமாய், கரிகால் பெருவளத்தான் ஆண்ட மூதூர் என்ற சரித்திரச் சான்றாய் விளங்கிய அந்த பூம்புகார் பட்டினத்தைப் புதுப்பித்து பழைய பூம்புகாரை நிலை நாட்ட முடியாவிட்டாலும் கூட இயன்ற வரையில் இந்தப் பூம்புகாரைக் காணீர்! என்று அதைப் புதுப்பித்து 'இந்திர விழா' ஆண்டுதோறும் எடுத்த ஆட்சி இந்த ஆட்சி என்பதை நீங்கள் அறிவீர்கள்.

★ஆனால் அந்த விழா இடையில் நின்றுபோனது. இப்பொழுது அதை மீண்டும் தொடங்க வேண்டும் என்ற ஆர்வம் இந்த அரசுக்கு இருக்கின்றது. எனவேதான் பாழ்பட்டுப்போன பூம்புகாரில் ஒரு கோடி ரூபாய்

செலவிலே அதனைப் புதுப்பிக்கின்ற பணிகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகள் முழுமையாக முடிவுற்றதும் இந்திர விழா அங்கே கோலாகலமாக நடைபெறும் என்ற நல்ல செய்தியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ இத்தகைய உணர்வுகளை ஊட்டிய அறிஞர் அண்ணா அவர்கள் கடற்கரையில் தூங்குகின்றாரே அந்தச் சதுக்கத்திற்கு ஒன்றரைக் கோடி ரூபாய் செலவில் புதுமைகள் செய்யப்படுகின்றன. அருங்காட்சியகம் அமைக்கப்படுகிறது.

★ காஞ்சியில் அறிஞர் அண்ணா அவர்களுடைய இல்லம் நான்கு லட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப் பட்டுள்ளது.

★ வள்ளுவர் கோட்டம்; அதைப்பற்றி இங்கே பேசினார்கள். விருது பெற்ற சாரங்கபாணி பேசினார் – முனைவர் தமிழ்க்குடிமகனும் அதைப் பற்றி விளக்கினார். விளக்காமலே உங்களுக்குத் தெரியக் கூடியதுதான் வள்ளுவர் கோட்டம். ஆனால் அந்த வள்ளுவர் கோட்டம் ஐந்தாண்டுக் காலத்தில் என்ன பாடுபட்டது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். நான் சொல்லவில்லை. முரசொலியிலே அல்ல. வேறு ஏடுகளிலே அல்ல, கல்கி, குமுதம், விகடன் போன்ற நடுநிலை ஏடுகளில் ஒரு கட்சியைச் சாராத நிலையிலே உள்ள ஏடுகளில் எல்லாம் வள்ளுவர் கோட்டத்தில் என்னென்ன அநியாயங்கள் நடைபெறுகின்றன என்பனவற்றைப் புகைப்படமெடுத்து வெளியிட்ட காட்சிகளை எல்லாம் நீங்கள் கண்டிருப்பீர்கள். நீங்களோ கண்டீர்கள். நானோ கண்டு கண்ணீர் விட்டேன். அந்த வள்ளுவர் கோட்டத்தை மீண்டும் புதுப்பித்து அது வள்ளுவர் கோட்டமாகவே இருக்க வேண்டும், கோட்டம், 'தோட்ட'மாகி விடக்கூடாது என்ற அந்த

உணர்வோடு 84.94 இலட்ச ரூபாய் செலவில் மேம் படுத்தப்பட்டுள்ள காட்சியை இன்றைக்கு நீங்கள் காணுகின்றீர்கள்.

★ சென்னையிலே உள்ள தென்மொழிகள் புத்தக நிறுவனத்திற்கு 80 ஆயிரம் ரூபாய் இந்த அரசு நிதியுதவி வழங்கி இருக்கிறது.

★ சென்னை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத் திற்கு 43.75 லட்ச ரூபாய் இந்த அரசு வழங்கியிருக்கிறது.

★ பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டியக் கட்ட பொம்மன் கோட்டை கலனாகிக் கிடக்கிறது. அந்தக் கலனாகிக் கிடக்கின்ற கட்டபொம்மன் கோட்டையை புதுப்பிக்கும் பணி 25 லட்ச ரூபாய் செலவில் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது.

★ கங்கை கொண்ட சோழபுரம் கோவில் கலைச் செல்வங்கள் பராமரிப்புக்காக 5 லட்ச ரூபாய் செலவிடப் பட்டுள்ளது.

★ திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் திருக் கோயிலில் அங்குள்ள ஒரு மண்டபம் இடிந்து வீழ்ந்தது. அதற்காக 50 லட்ச ரூபாய் நிதியுதவி இந்த அரசின் சார்பில் செய்யப்பட்டிருக்கிறது. எங்களுக்குப் பக்தி இருக்கிறதா என்று கேட்காதீர்கள். கலைப்பற்று இருக்கிற காரணத்தால் அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டி ருக்கிறது. (கைதட்டல்)

★ திராவிட மொழியியல் பள்ளிக்குக் கழக அரசு உயர்த்தி வழங்கிய மான்ய உதவி என்ற பெயரில் திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியல் பள்ளிக்குத் தமிழியல் தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக ஆண்டுதோறும் ஐந்து லட்ச ரூபாய் நிதி வழங்கப்பட்டு வந்தது. இந்த நிதி 96-97 ஆண்டு முதல் பத்து லட்ச ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது.

★ ஆசியவியல் ஆய்வு நிறுவனத்திற்கு தமிழ் தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளுக்காக 96-97-ஆம் ஆண்டில் 19.57 லட்ச ரூபாயும், 97-98-ஆம் ஆண்டில் இருபது லட்ச ரூபாயும் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

★ புதுடெல்லியிலுள்ள தமிழ்ச்சங்கத்திற்கு திருவள்ளுவர் கலையரங்கம் கட்டுவதற்காகப் பத்து லட்ச ரூபாய் மானியமாக வழங்கப்பட்டு அந்தக் கலை யரங்கத்தைச் சில மாதங்களுக்கு முன்பு நானே திறந்து வைத்த நிகழ்ச்சியும் நடைபெற்றது.

★ தேவநேயப்பாவாணரின் நூல்களை நாட்டு டமையாக ஆக்கி அவருடைய வாரிசுகளுக்கு இருபது லட்ச ரூபாய் பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

★இந்த ஆண்டில் மறைமலையடிகளாரின் நூல்களை நாட்டுடமையாக்கி அவருடைய வழித்தோன்றல்களுக்கு மொத்த ரூபாய் முப்பது லட்சத்து முப்பதாயிரம் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது.

★ சென்னைத் திருவல்லிக்கேணியிலே உள்ள பாரதியார் இல்லம் 8.30 லட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு அங்கு 80 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு நூலகம் இந்த அரசினால் அமைக்கப்பட்டு உள்ளது. பாரதியார் வாழ்க்கை வரலாறு பற்றிய திரைப்படம் வாரம் 3 முறை அங்கே காட்டப்படுகிறது.

★ மதுரைத் தமிழ்ச் சங்க மேம்பாட்டிற்காக, தேவர் பேரவையின் கோரிக்கைகளை ஏற்று கழக அரசு 45 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கியிருக்கின்றது.

★ ஆந்திர மாநிலத்திலுள்ள திராவிடப் பல்கலைக் கழகத்திற்கு இந்த அரசு 50 லட்ச ரூபாய் நிதியுதவி வழங்கியிருக்கிறது.

★ மறைமலை அடிகள் நூலகத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த மானிய உதவி பத்தாயிரம் ரூபாயை ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்தி இந்த அரசு வழங்கத் தொடங்கியிருக்கிறது.

★திருவான்மியூரில் உள்ள உ.வே. சாமிநாத அய்யர் நூலகத்திற்கு வழங்கப்பட்டு வந்த 60 ஆயிரம் ரூபாய் மானிய உதவியை இந்த ஆண்டு முதல் 1 லட்ச ரூபாயாக உயர்த்தி வழங்கியதும் இந்த அரசுதான்.

★ அதுமாத்திரமல்ல; நான் கட்டபொம்மன் கோட்டையைப் பற்றி சொல்கிறபோது நண்பர் பரமகுரு அவர்கள் பூலித்தேவன் என்ன ஆனான் என்று கேட்காமலே விழிகளால் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பே நம்முடைய அமைச்சர்கள் துரைமுருகன், முல்லைவேந்தன், ஆலடி அருணா இவர்கள் எல்லாம் சென்று பார்வையிட்டு அந்தப் பூலித்தேவனுடைய பழைய இடிந்துபோன மாளிகையைப் புதுப்பிக்கத் திட்டமிட்டு அதற்கான வரைபடம் என்னால் ஒப்புதல் அளிக்கப்பட்டு 53 லட்சம் ரூபாய் செலவிலே பூலித்தேவன் மாளிகை அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. (கைதட்டல்)

★ வீரன் சுந்தரலிங்கம் நினைவாக அவரது வழித் தோன்றல்கள் வாழ்ந்திட இருநூறு வீடுகள் கொண்ட 'சுந்தரலிங்கம் நகர்' அமைக்கப்பட்டுள்ளது, சுமார் அறுபது லட்ச ரூபாய் செலவில்! (கைதட்டல்)

★ அதைப்போலவே தியாகி நாடகப் புலவர் விஸ்வநாத தாஸ் ''கொக்கு பறக்குதடி பாப்பா'' என்று வெள்ளையனுக்கு எதிராக வீரக்குரல் எழுப்பிய நாடக நடிகர் – நடித்துக் கொண்டிருக்கும்போதே மேடையிலே உயிர் விட்டவர். அந்தத் தியாகி விஸ்வநாததாசுக்காக மதுரை திருமங்கலத்தில் அவர் வாழ்ந்த வீட்டை வாங்கி 50 லட்ச ரூபாய் செலவிலே விஸ்வநாத தாஸ் நினைவு மண்டபம் அமைக்கப்படுகிறது.

★நம்முடைய இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அடிக்கடி என்னைத் துளைத்தெடுத்து அந்த ''தொந்தரவுக் குள்ளே தோழி நான் சுகம் கண்டேன்'' என்பதற்கு ஒப்ப அதனை ஏற்று (கிண்டியிலே காமராஜர் நினைவிடம்,

ராஜாஜி நினைவு மண்டபம், காந்தி மண்டபம், எல்லாம் இருப்பதற்கு அருகில்) தியாகிகள் மணி மண்டபம் 30 லட்ச ரூபாய் செலவில் கட்டப்படுகிறது என்ற செய்தியையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

★ உ.வே.சா. நூலகத்தில் அவருடைய சிலை நிறுவுவதற்கு இந்த அரசு 50 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கியுள்ளது. இதை யாரும் கேட்கவில்லை. பத்திரிகைகளிலே செய்தியைப் பார்த்தேன். சிலையை வைக்க முடியாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள்; சிலை வைப்பவர்கள் என்ற செய்தி ஏடுகளிலே வந்தது. உடனடியாக அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டு 50 ஆயிரம் ரூபாய் அந்தச் சிலையை நிறுவுவதற்கு அரசு வழங்கியது.

★ ''சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந் திங்குச் சேர்ப்பீர்''

என்ற பாரதி மொழிக்கேற்ப பிற மொழிச் செல்வங்களைத் தமிழில் மொழி பெயர்த்திட வேண்டும் என்ற உணர்வோடு சிறந்த மொழி பெயர்ப்பு நூல்களைத் தமிழில் கொண்டு வருவதற்கு உதவும் வகையில் 96-97-ஆம் ஆண்டு முதல் புதிய திட்டம் ஒன்றை கழக அரசு ஏற்படுத்தி பிறமொழி நூல்களைத் தமிழிலும், தமிழிலே உள்ள சிறந்த இலக்கியங்களைப் பிற மொழிகளிலும் மொழி பெயர்த்து வெளியிடும் திட்டத்திற்கு 5 லட்ச ரூபாய் இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

★ விடுதலைப் போராட்ட தியாகிகளுக்கு மாதந் தோறும் 400 ரூபாய் வழங்கப்பட்டது. அதனை 10-9-96 முதல் 500 ரூபாய் என்று அரசு உயர்த்தியது. அதோடு முடியவில்லை. பிறகு 10-10-96 முதல் அந்தத் தொகை பல தியாகிகளுடைய வேண்டுகோளுக்கு இணங்க மாதந் தோறும் 1500 ரூபாயாக உயர்த்தப்பட்டது. அத்துடன் மருத்துவப் படியாக 15 ரூபாயும் இந்த அரசினால் சேர்த்து வழங்கப்பட்டது.

இந்திய சுதந்திரப் பொன்விழா ஆண்டையொட்டி இந்த உதவித்தொகை மேலும் உயர்த்தப்பட்டு 15-8-97 முதல் தியாகிகளுக்கு மாதந்தோறும் 3 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்து அதே தியாகிகளுக்குத் தருகிற 3 ஆயிரம் ரூபாய் மொழிக் காவலர்களுக்கும் தரப்படும் என்று சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மொழிக் காவலர்களுக்கும் திங்கள்தோறும் 3 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.

எந்த ஒரு முனையிலும் தமிழ் வளர்த்தவர்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய தொண்டு உண்டு என்பதை எடுத்துக் காட்டவும், தொடர்ந்து இந்தத் தமிழ்த் தொண்டினை ஆற்றுவோம் என்பதை உங்களுக்கு எடுத்துக் கூறவும்தான் இவற்றை நான் இங்கே குறிப்பிட் டிருக்கின்றேன்.

இங்கே நம்முடைய இனமானப் பேராசிரியர் அவர்கள் திருவள்ளுவருடைய அருமை பெருமைகளைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். இங்கே நம்முடைய பெரியவர் சாரங்கபாணி – பெரியவர் என்று சொல்லக் கூடாது, என்னை விட ஒரு வயது இளையவர்தான். தமிழில் பெரியவர் என்ற காரணத்தால் சொன்னேன் (பலத்த கைதட்டல்) அவர் உரை வேற்றுமை எழுதி யிருக்கின்றார்கள். பேராசிரியர் உரையாற்றும்போது பலரும் திருக்குறளுக்கு அவரவர்களுடைய சிந்தனைக்கு ஏற்ப அவரவர்களுடைய எண்ணத்திற்கேற்ப உரை எழுதினார்கள் என்பதெல்லாம் திருக்குறளுக்கு வலு சேர்ப்பது, திருக்குறளுக்கு வளம் சேர்ப்பது என்ற கருத்துப்பட எடுத்துச் சொன்னார்கள்.

என்னைப் பொறுத்துக்கூட இந்தத் திருக்குறளுக்கு உரை காண்பதில் – ஒரு முறை நான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனோடு பேசிக் கொண்டிருக்கும்போது சொன்னார்கள். ‘‘பழைய காலத்து உரைகள் எல்லாம்

தவறாக, ஏற்றுக் கொள்ள முடியாத அளவிற்கு எழுதப் பட்டிருக்கின்றன'' என்று குறிப்பிட்டு எடுத்துக்காட்டாக ஒன்றைச் சொன்னார்கள்.

"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.''

என்ற குறளுக்குப் பாரதிதாசன் சொன்ன விளக்கத்திற்கு முன் ஏற்கனவே அதற்காகத் தரப்பட்ட விளக்கம் என்ன என்பதை முதலில் பார்க்க வேண்டும்.

தெய்வத்தைக் கூட தொழாமல் கணவரைத் தொழுது எழுகின்ற பெண், மழை பெய்யாமல் இருக்கின்ற காலத்தில் மழையே பெய் என்று சொன்னால் மழை பொழியும். இதுதான் பழைய காலத்திலே எழுதப்பட்ட உரை.

இந்தக் காலத்திலே கூட அந்தப் பழைய எண்ணத் தோடு எழுதப்பட்ட உரை இப்படித்தான், ''தெய்வத்தைக் கூட தொழாமல் கணவனைத் தொழுது எழுகின்ற பெண் சொன்னால் மழை பொழியும்'' என்று. இதனைச் சோதித்துப் பார்க்க முடியாது. ஒரு பெண்ணை அழைத்து 'மழை பொழியச் சொல்' என்று சொல்லி அந்த அம்மையார் ஆகாயத்தைப் பார்த்து 'மழையே வா' என்று சொல்லி மழை வராவிட்டால் அந்தப் பெண் மீது நாம் வைத்திருக்கின்ற அன்பு எப்படி எல்லாம் மாறும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஐயப்பாடே ஏற்பட்டுவிடும். அதனால்தான் பாரதிதாசன் சொன்னார். அப்படி அல்ல அதற்குப் பொருள். தவறாக எழுதி விட்டார்கள். பெய்யெனப் பெய்யும் மழை என்றால், ஓர் உழவன் தன்னுடைய வயலுக்கு, குளத்திற்கு, ஏரிக்கு இவற்றுக்கெல்லாம் தண்ணீர் வேண்டும் என்று கருதுகிற நேரத்தில், மழை பெய்யாதா? என்று ஏங்குகிற நேரத்தில் அவன் பெய்ய வேண்டும் என்று எண்ணுகிற

நேரத்திலே பெய்கிற மழை எப்படிப் பட்டதோ அதைப் போன்றவள் அந்தப் பெண். தெய்வத்தைக் கூட தொழாமல் கணவனைத் தொழுகின்ற அந்தப் பெண், பெய்ய வேண்டும் என்று நினைக்கிற நேரத்திலே பெய்கின்ற மழைக்கு ஒப்பானவளே தவிர, அவள் சொன்னால் ஒன்றும் மழை பெய்துவிடாது என்று பாரதி தாசன் சொன்னார்.

அதைத்தான் – நான் குறளோவியம் தீட்டும்போது, அந்தப் பொருளைத்தான் – குறிப்பிட்டிருந்தேன். அது குறளோவியம் எழுதிய காலகட்டம்.

பிறகு திருக்குறளுக்கு உரையே எழுதினேன். புரட்சிக் கவிஞர் சொன்ன அந்த உரையைச் சற்று மாற்றத்தோடு நான் என்ன சொன்னேன் என்றால் - அப்போதெல்லாம்; ஏன்! இன்றைக்குக் கூட திருக்குறளைப் பாராட்டுகின்ற, போற்றுகின்ற பெண்கள் பலர், என்ன இருந்தாலும் பெண்களை அடிமையாக அல்லவா திருவள்ளுவர் சித்தரித்திருக்கிறார் என்று பெண்களைப் பற்றி வள்ளுவர் குறிப்பிட்டிருக்கின்ற சில குறட் பாக்களை எடுத்துக் காட்டுவார்கள். வள்ளுவரை அந்தப் பழிக்கு ஆளாக்கி விடக்கூடாது என்பது என்னுடைய எண்ணம். எனவேதான் நான் 'பெய்யெனப் பெய்யும் மழை' என்ற அந்தக் குறளுக்கு உரை கண்டபோது என்ன எழுதினேன் என்றால் தெய்வத்தைக் கூட தொழாமல் கணவனைத் தொழுது எழுகின்ற பெண் – பெய் என்று சொன்னவுடன் பெய்கின்ற மழையைப் போல அடிமையாக இருப்பவள். பெண் உரிமையோடு இருக்க வேண்டும். அடிமை நிலை இல்லாமல் இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதற்காக அப்படி ஓர் உரையை நான் எழுதினேன்.

இப்படி உரைகள் பரிமேலழகர் எழுதின காலத் திலிருந்து புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் காலம் வரை

அதற்குப் பிறகும் சில உரை ஆசிரியர்களால் மாற்றம் பெற்றிருக்கின்றன. இருந்தாலும் கூட திருவள்ளுவர் எல்லோருக்கும் பொதுவானவர். எல்லோராலும் புகழப் படுபவராக எல்லோரும் அவர் எனக்கு உரியவர், எனக்கு உரியவர் என்று சொல்லக் கூடியவராக எல்லா மதத்திலே உள்ளவர்களும், என் மதக்கருத்துகள் அங்கே இருக்கின்றன. சமண மதக் கருத்து உண்டு என்று சமணர்களும், சைவ மதக் கருத்து உண்டு என்று சைவர்களும், புத்த மதக் கருத்து அங்கே இருக்கிறதென்று புத்தர்களும்; வைணவ மதக் கருத்து அங்கே இருக்கிற தென்று வைணவர்களும் எடுத்துக் காட்டுகின்ற அளவிற்கு எல்லா மதத்தார்களாலும் போற்றப்படுகின்றவர் திருவள்ளுவர். அந்தத் திருவள்ளுவருக்குத்தான் இந்த அரசு 76-ஆம் ஆண்டுக்கு முன்பே நாங்கள் ஆலோசித்து உலகத்திலேயே உள்ள சில சிலைகளோடு ஒப்பிடத்தக்க அளவிற்கு வள்ளுவருக்குச் சிலை அமைக்க வேண்டும் என்று கருதி குமரிக் கடல் ஓரத்தில் வள்ளுவருக்குச் சிலை அமைக்கத் திட்டமிட்டு அன்றைக்கே அது அறிவிக்கப் பட்டு பணிகள் ஆரம்பமாயின. வள்ளுவர் சிலை வைப்பதற்காகக் கல்லெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு 76-இல் ஆட்சி கலைக்கப்பட்ட காரணத் தால் அப்பணி நிறைவு பெறாமல் நின்று விட்டது. பிறகு என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். பொறுப் பேற்ற பிறகு அந்தப் பணியைத் தொடர எண்ணினார் – தொடரப்பட்டது, ஆனால் தொய்வு விழுந்து விட்டது. மேலும் மேலும் தொய்வு ஏற்பட்டது.

இப்போது நாங்கள் நான்காவது முறையாக ஆட் சிக்கு வந்திருக்கின்ற காலக்கட்டத்தில் வள்ளுவருடைய சிலையின் பணி அநேகமாக பெரும் பகுதி முடிந்து விட்டது. விரைவில் அந்தச் சிலை குமரிக்கடல் ஓரத்தில் நிறுவப்படும் (கைதட்டல்). 133 அடி உயரத்திலே திருவள்ளுவருடைய சிலை அங்கே நிறுவப்படும் என்ற

இந்த மகிழ்ச்சிகரமான செய்தியை வள்ளுவர் விழாவிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றை நகைச்சுவைக்காக அல்ல; நம்முடைய தமிழ்க்குடிமகனைப் பற்றி அவர் இந்தத் துறையினுடைய அமைச்சராகப் பொறுப்பேற்ற காலந்தொட்டு தமிழ் வளர்க்க தமிழுக்குச் செல்வாக்குத் தேடித்தர அதைப் போலவே அறநிலையத் துறையிலே ஆலயங்களிலே நடைபெறுகின்ற கொள்ளைகளைத் தடுக்க, ஆலயச் சொத்துக்களை யார் யார் அபகரித்திருக்கிறார்களோ அவர்களிடமிருந்து சொத்துக்களை மீட்க அருமையாகப் பணியாற்றி வருகின்றார்.

வள்ளுவருடைய குறளிலே ஒரு குறள்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்று. அந்தக் குறள் இப்போது எனக்கு நினைவுக்கு வருகிறதென்றால் தமிழ்க்குடிமகனுடைய கட்டுரை ஒன்று ஒரு வார இதழிலே நான் படித்துப் பார்த்தேன். கோபித்துக் கொள்ள மாட்டார். அண்ணன்தானே என்று ஆத்திரப்படாமலே கவனமாகக் கேட்பார்.

ஒரு வார இதழில் படித்துப் பார்த்தேன். நான் பெற்ற இன்பம் நீங்கள் பெற வேண்டும் என்பதற்காக அந்தப் பக்கத்தை அப்படியே கிழித்துக் கொண்டு வந்திருக் கிறேன் (பலத்த சிரிப்பு) ராணி பத்திரிகை, அதிலே அவர் சொல்கிறார். அவருடைய ஏக்கத்தைப் பாருங்கள்.

ஆம்! 'பொங்கல் திருநாள்' என்பதைச் சிங்கப்பூரிலும், மலேசியாவிலும் இருக்கின்ற தமிழர்கள் 'தமிழர் திருநாள்' என்றே கொண்டாடுகின்றனர். சீனர்கள், மலாய்க்காரர்கள் எனும் பெரும்பான்மை இனத்தாரிடையே சேர்ந்து வாழவும் முன்னேறவும் வேண்டியுள்ள கட்டாயத் தேவை இருப்பதால், அங்குள்ள தமிழர்கள் 'தமிழர் திருநாள்' என்று கொண்டாடுவதில்

வியப்பில்லை. ஆம்! தமிழர்கள் தங்கள் அடையாளத்தை இழக்கக் கூடாது என்றும், அதைத் தக்க வைத்துக் கொள்வதே தகுதி என்றும் கருதுகிறார்கள். அதனால் பொங்கல் திருநாளை முழு விருப்போடு கொண்டாடு கிறார்கள்.

தமிழ்நாட்டில் இந்த எண்ணம் இருக்கிறதா? இருக்கிறது. சிற்றூர்ப்புறத்தில் மட்டும் இருக்கிறது. மார்கழி முதல் நாளிலிருந்தே சிற்றூர்ப்புறப் பெண்கள் பொங்கல் கொண்டாட அணியமாகி விடுகின்றனர்.

அணியம் என்றால் தயாராகி விடுகிறார்கள். அதாவது மார்கழி முதல்நாளே தைப் பொங்கல் கொண்டாட தயாராகி விடுகிறார்கள். இப்படிக் கட்டுரை எழுதிய நம்முடைய தமிழ்க்குடிமகன் அவர்கள் கட்டுரையை எப்படித் தொடங்குகிறார் தெரியுமா?

''புலர்காலைப்பொழுது புள்ளினங்கள் ஆர்த்தன. சோம்பல் முறித்துக் கொண்டே எழுந்தேன். வழக்கம் போல– அப்புறந்தான் நினைவு வந்தது இன்று பொங்கல் நாள் என்று. அந்த நினைவு வந்ததும் துள்ளி எழுந்தேன். 'தமிழர் திருநாள்' என்பதே இதுதான். இதைக் கொண்டாட வேண்டுமே என்று எழுந்தேன்.''

இவர் சொல்கிறார் கிராமத்துப் பெண்களுக் கெல்லாம் மார்கழி முதல்நாளே பொங்கல் வரப் போகிறது என்று தெரியுமாம் (பலத்த சிரிப்பு). இவர் மாத்திரம் பொங்கல் அன்று காலையிலே சோம்பல் முறித்துக் கொண்டே எழுந்தாராம், பிறகுதான் பொங்கல் என்பது நினைவுக்கு வந்ததாம்! (பலத்த சிரிப்பு).

நான் விடிய விடியத் தூங்கவில்லை, காலையில் பொங்கலாயிற்றே சீக்கிரம் எழுந்து புத்தாடை அணிந்து வருகின்றவர்களை எல்லாம் வரவேற்று வாழ்த்துச் சொல்ல வேண்டுமே என்று நான் விடிய விடியத்

தூங்கவில்லை. இவர் காலையில் வழக்கம்போல சோம்பல் முறித்து எழுந்தாராம்.

தமிழ் வளர்க்கின்ற தமிழ்க்குடிமகனே இப்படி இருந்தால்! (பலத்த கைதட்டல், சிரிப்பு) அப்புறம்தான் நினைவு வந்தது இன்று பொங்கல் நாள் என்று. சூரியனைப் பார்த்த பிறகுதான் அவருக்கு நினைவே வந்திருக்கின்றது. எனவே இதை ஒரு வேடிக்கைக்காகத் தான் சொன்னேன். அதை அவரிடமும் சொன்னேன். அன்றைக்கே காலையிலே பொங்கல் வாழ்த்துக்காக எனது இல்லத்துக்கு வந்தார். வந்தவுடன் நான் கேட்டேன்; ''என்ன, புலர் காலைப் பொழுதிலே சோம்பல் முறித்தபடி எழுந்தீர்களா?'' என்று கேட்டேன். அவரே சிரித்தார். ''அண்ணா ஏதோ அப்படி எழுதி விட்டேன் விட்டுவிடுங்கள்'' – என்றார். நான் விடுவதாக இல்லை. ஒரு தமிழ்க்குடிமகனைத் தனியாகத் திருத்தலாம். இவ்வளவு தமிழ்க்குடிமக்களையும் திருத்த வேண்டாமா? (பலத்த கைதட்டல்)

எனவே உங்களுக்கெல்லாம் பொங்கல் நாள் முதல் நாளே தெரிந்திட வேண்டும். முதல் நாள் தெரிந்தால்தான் வீட்டில் இருக்கின்ற அழுக்குகளையெல்லாம் தூய்மைப் படுத்த முடியும். அதுதான் 'போகி', போக்கிப் பண்டிகை! இருக்கின்ற அழுக்குகளை, குப்பைகளை, கூளங்களை யெல்லாம் அகற்ற வேண்டும். அதைப்போல தமிழர் களுடைய வீட்டில், நாட்டில் தமிழ்ச் சமுதாயத்தில் பரவி விட்ட மூடப் பழமைகளை எல்லாம் போக்க வேண்டும். அந்தப் பொங்கலை நாம் கொண்டாட வேண்டும். எனவே முன்கூட்டியே விழித்துக் கொள்ளுங்கள் என்று உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

15-1-98 அன்று திருவள்ளுவர் விழாவில்
ஆற்றிய உரை

4

இந்திய சுவிசேஷத் திருச்சபை விழா

நானும் மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களும் மற்றவர்களும் பேச வேண்டிய நேரத்தையெல்லாம் எடுத்துக் கொண்டு நம்முடைய, பேராயர் அவர்கள் இடையிடையே அரிய சொற்பொழிவுகளை நடத்தி நம்மையெல்லாம் அகமகிழ வைத்திருக்கிறார். அவருடைய சீரிய சிறந்த முயற்சியினால் எழுச்சியோடும் எழிலார்ந்த முறையிலும் இந்த ஐம்பெரும் விழா இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்த விழாவிலே கலந்து கொண்டு உரையாற்று கின்ற நேரத்தில் பேராயர் அவர்கள் அவருடைய உள்ளக் கிடக்கையை எப்படியாவது வெளிப்படுத்தியே தீர வேண்டுமென்ற உணர்வோடு இடையிடையே அதை வெளிப்படுத்தியும் காட்டினார். அதிலே எனக்கும், மூப்பனார் அவர்களுக்கும் பீட்டர் அல்போன்சுக்கும் மற்றவர்களுக்கும் ஒருவகையிலே மகிழ்ச்சிதான். என்ன இருந்தாலும் குமரி அனந்தன் – தான் இலக்கியச் செல்வர் என்பதை நிலைநாட்டுகின்ற வகையில் வார்த்தைகளைத் தேடி மக்கள் மனதிலே அதையும் புகுத்துவதில் 'கை' தேர்ந்தவர் என்பதை நிரூபிக்கும் வகையிலே உரையாற்றியதை நான் பாராட்டாமல் இருக்க முடியாது.

இதுபோன்ற வாதங்கள்தான் – விவாதங்கள்தான் நாகரீகமாக நடைபெற வேண்டிய விவாதங்கள்தான்

அரசியலுக்குத் தேவை என்பதை நான் மிக மிக விரும்புகிறவன். அந்த வகையிலே இங்கே இவ்வளவு பேர் இருந்தாலுங் கூட, நம்முடைய இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் தான் கொண்டிருக்கின்ற கொள்கை – கொள்'கை'யிலும் 'கை' இருக்கிறது. (பலத்த சிரிப்பு) அதனை நிலைநாட்ட வேண்டும் என்பதிலே உறுதியாக இருந்ததை நான் பாராட்டுகிறேன்.

கொள்கைக்காக – தான் கொண்ட கொள்கைக்காக உயிரையே தரத் துணிந்தவர் ஏசுபிரான். ஆனால் இன்றைக்கு நாட்டில் பல பேர் உயிர் வாழ்வதற்காகக் கொள்கையையே விட்டுத் தருவதற்குத் தயாராக இருக் கிறார்கள். (பலத்த சிரிப்பு) ஏசுபிரானை நினைத்து திருச்சபையின் விழாவை நாம் நடத்திக் கொண்டிருக் கிறோம். எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் எடுத்துக்காட்டியதைப் போல, இந்த நல்ல விழாவில் நல்ல மனம் படைத்த மக்கள் எந்த நல்ல காரியத்தைச் செய்ய வேண்டுமோ அந்த நல்ல காரியத்தைச் செய்வோம் என்பதற்கு அடையாளமாக ஏழை எளியோர்க்குத் தங்குகின்ற வீடுகளை வழங்குதல், அவர்களுக்குத் தேவையான சைக்கிள் வழங்குதல், இலவசமாக எளியோர்க்கு வேட்டி, சேலைகள் வழங்குதல் போன்ற அரிய நிகழ்ச்சிகளை இணைத்திருப்பதற்கு என்னுடைய இதயமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய துணைக் கண்டத்தில் கல்வி ஒரு பெரும் வளர்ச்சிக்குரியதாக இன்றைக்கு அமைந்திருக்கிற தென்றால், அந்தக் கல்வித் துறையிலே பெரும் தொண்டாற்றிய சமுதாயம் கிறித்துவ சமுதாயம் என்பதை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன்.

ஆங்கிலேயர்களுடைய ஆதிக்கத்திற்கு இடையிலே கூட – அந்த ஆதிக்கத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் –

ஆன்மீகத் துறையில், மதத்துறையில், சமய வாதங்களுக்கு அப்பாற்பட்டு, இந்திய பூபாகம் முழுதும் அறிவு வளர வேண்டும். அந்த அறிவு வளர்ச்சிக்குத் தங்களால் ஆன அரும்பணியைச் செய்ய வேண்டுமென்று கிறித்துவப் பெருமக்கள் நல்ல முறையிலே தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழ் மொழியை வளர்ப்பதற்கு கிறித்தவ பெரியவர்கள் பலர் முன் வந்தார்கள் என்பதைத் தமிழக வரலாறு கூறிக் கொண்டிருக்கிறது. அத்தகைய கிறித்தவப் பெரியவர் களுக்கு – தமிழ் வளர்த்த அந்தக் கிறித்தவ அறிஞர்களுக்கு நாம் நன்றி காட்ட வேண்டுமென்பதற்கு அடையாள மாகத்தான் தமிழ்நாட்டிலே – உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றபோது – எங்கள் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப் பேற்றிருந்த காலக் கட்டத்தில்–சென்னைக் கடற்கரையில் இன்றைய காமராஜர் சாலையில் அன்றைக்கு கால்டுவெல், ஜி.யு. போப், வீரமாமுனிவர் போன்ற கிறித்தவ மதப் பெரியவர்களை, அறிஞர்களை – சிலை வைத்துப் பாராட்டினார் என்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

கிறித்தவ மதம், இஸ்லாமிய மதம், இந்து மதம், புத்த மதம் என்றெல்லாம் மதங்கள் இருக்கின்றன. மதம் மக்களை அன்பால் இணைக்க வேண்டும். அதுதான் மதம். வம்பால் மக்களைப் பிரிக்கின்ற ஒன்று மதம் அல்ல; அது மதவெறி. அந்த மதவெறிக்கு யாருமே – இந்த மேடையில் அமர்ந்திருக்கின்ற நாங்கள், எந்த அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருந்தாலுங்கூட, அதற்கும் அப்பாற்பட்ட நிலையில் மதவெறியைத் தமிழகத்திலே, ஏன் இந்தியத் திருநாட்டிலேயே நுழைய

விடக்கூடாது; நுழைந்தால் அந்த வெறியை அகற்றியே தீர வேண்டும் என்று சங்கல்பம் செய்து கொண்டிருப்பவர்கள்தான் இந்த மேடையிலே அமர்ந்து கொண்டிருக்கிறோம்.

அந்த உறுதிமொழியை நீங்கள் எல்லாம் உங்களுடைய உள்ளத்திலே பதிய வைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் எங்களுடைய அவா.

இன்றைக்கு இந்த நல்ல திருச்சபையினுடைய இனிய விழாவில் – எழுச்சி மிகுந்த விழாவில் – பல்லாயிரக் கணக்கான மக்கள் குழுமியிருக்கின்ற இந்த விழாவில் – பல நாடுகளிலேயிருந்து கூட வருகை தந்து இந்த விழாவைச் சிறப்பிக்கின்ற இந்த வேளையில் நாம் அனைவரும் எடுத்துக் கொள்ள வேண்டிய சூளுரை மத நல்லிணக்கம் காண்போம்; மனித நேயம் காப்போம் – இதுதான் ஏசுநாதர் வழியில் – ஏசுநாதருடைய புகழ் போற்றுகின்ற அவருடைய அருள் போற்றுகின்ற, அவருடைய அன்பு போற்றுகின்ற அவருடைய நினைவு போற்றுகின்ற கிறித்தவ சமுதாயம் நடத்துகின்ற இந்தப் பெருவிழாவிலே நாம் பூண வேண்டிய உறுதிமொழி என்று கூறி இந்த அளவில் உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

16-1-98 அன்று இந்திய சுவிசேஷத் திருச்சபை விழாவில் ஆற்றிய உரை

5

சென்னை – சென்னைப் புறநகர் வணிகர்கள் சங்க மாநாடு

ஏராளமானவர்கள் இந்த மண்டபத்தில் எனக்குச் சால்வைகள் அணிவிப்பதற்காக வரிசையாக நின்று கொண்டிருக்கிறீர்கள். ஏராளமான கோரிக்கைகளையும் இங்கே வைத்திருக்கிறீர்கள். நான் சோதித்துப் பார்ப்பதற் காகத்தான், ''பேசி முடித்த பிறகு சால்வைகளை அணி விக்கலாம்'' என்று கூறியிருக்கிறேன். நான் பேசி முடித்த பிறகு சால்வை அணிவிப்பார்களா இல்லையா என்பதைச் சோதிப்பதற்காகத்தான் பிறகு அணிவியுங்கள் – என் பேச்சில் நம்பிக்கை இருந்தால், அதற்குப் பிறகு அணிவிக்கலாம் என்று கூறியிருக்கிறேன். (கைதட்டல்)

இது கோரிக்கை மாநாடு மாத்திரமல்ல; நன்றி தெரிவிக்கும் மாநாடு என்றும் தொடக்கத்திலே நவமணியும், மற்றவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள்; மாநாடு நடைபெறுவது வள்ளுவர் கோட்டத்தில்! ''நன்றி மறப்பது நன்றன்று'' என்று குறள் வாக்கியம் தீட்டிய வள்ளுவர் பெயரால் அமைந்துள்ள கோட்டத்தில் மாநாடு நடைபெறும்போது நன்றி மறந்து இந்த மாநாடு நடை பெறுமென்று யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள். அதற்கேற்ப நன்றி உணர்வோடு உங்களுடைய

வாழ்த்துரைகளையும் பாராட்டுரைகளையும் வழங்கி விட்டு சில முறையீடுகளையும் வைத்திருக்கிறீர்கள்.

பேசியவர்கள் எல்லாம் ஒன்றைச் சொன்னார்கள். குறிப்பாக மதுரை ரத்தினவேலு ''கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றுவதற்காகத்தான் முதலமைச்சர் அமைச்சரவையையே இங்கே அழைத்து வந்திருக்கிறார்'' என்றார். இதுபோன்ற கோரிக்கைகளை அமைச்சரவைக் கூட்டத்திலே விவாதித்து பெரும்பான்மை முடிவின்படி அறிவிப்பது வழக்கம். இங்கேயே அறிவிக்கலாமா என்று எண்ணிப் பார்த்தேன். 26 அமைச்சர்களில் வந்திருப் பவர்கள் ஏழெட்டு அமைச்சர்கள். எனவே முடிவெடுத்து பெரும்பான்மை பார்த்து அறிவிக்க முடியாத நிலையிலே இருக்கிறேன் என்பதை (பலத்த கைதட்டல்) ரத்தினவேலு அவர்களுக்கும் உங்களுக்கும் முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்காக உங்களுடைய கோரிக்கைகளை யெல்லாம் புறக்கணித்து விட மாட்டேன். (கைதட்டல்) இவைகளையெல்லாம் இதயத்திலே ஏந்திக் கொண்டு, உரிய நேரத்தில் அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி, பெரும்பான்மை, சிறுபான்மை என்றெல்லாம் பார்க்காமல், ஒருமித்த முடிவாக நல்ல முடிவெடுத்து உரிய நேரத்தில் உங்களுக்கு நான் அறிவிப்பேன் என்ற நல்ல செய்தியை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். (பலத்த கைதட்டல்)

இந்த மாநாட்டிலே எங்களுக்கு வழங்கப்பட்ட 'பேட்ஜ்'களில் துலாக்கோல் சின்னம் பொறிக்கப்பட்டி ருக்கின்றது. வணிக சங்கத்தின் சின்னமாகத் துலாக்கோல் உள்ளது. எங்கள் இயக்கத்தினுடைய தொடக்கமே துலாக்கோல்தான். நீதிக்கட்சிதான் இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகமாக இருக்கிறது என்பதை நீங்கள் நன்கறிவீர்கள். அந்த நீதிக் கட்சியின் கொடியின்

சின்னம் தராசுதான். சமுதாயத்திலே உள்ள பல்வேறு பிரிவு மக்களுக்கும் நீதி தேவை என்பதற்காக நம்முடைய முன்னோர்கள் இந்த இயக்கத்தைத் தொடங்கியபோது, இந்த இயக்கத்திற்காகப் பறக்க விடப்பட்ட அந்தக் கொடியிலே தராசு சின்னத்தைத்தான் அமைத்தார்கள். அந்தத் தராசு சின்னத்தின் வழி வந்தவர்கள் என்ற முறையில் நீங்களும் நாங்களும் ஒரே சாதி என்பதை இங்கே நான் சிறப்பாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

கழக ஆட்சியில் எந்த அளவிற்கு வணிகப் பெருமக்களுக்கு அவர்களுடைய் முறையீடுகளைக் கேட்டு கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்ற புள்ளி விவரங்கள் எல்லாம் எனக்கு முன்னால் பேசிய அமைச்சர்களாக உள்ள என்னுடைய தம்பிமார்களால் இங்கே எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

வணிகர் நல வாரியத்தைப் பற்றி குறிப்பிடப் பட்டது. 1975-ஆம் ஆண்டு கழக ஆட்சி நடைபெற்ற போது வணிகர் நல வாரியம் அமைக்கப்படுமென்ற அறிவிப்பை நான் செய்தேன். அதற்காக ஒரு கணிசமான தொகையும் ஒதுக்கப்படுமென்று அறிவித்தேன். ஆனால் அந்த வாரியத்தை அமைத்து முறைப்படி அது செயல்படுவதற்கு முன்பு, கழக ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள் வணிகர் நல வாரியத்தைத் தொடர்ந்து நடத்தவோ – அல்லது நடைமுறைப்படுத்தவோ முன்வரவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். பின்னர் 89-ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக நான் முதலமைச்சராகப் பொறுப் பேற்ற பிறகு தான், வணிகர் நல வாரியம் மீண்டும் தொடங்கப்பட்டு, அதற்காக ஒரு கணிசமான தொகை இரண்டு கோடி ரூபாய், வணிகர் நல வாரியத்திற்காக அரசின் சார்பில் வழங்கப்பட்டு இன்றைக்கு அது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

31-12-97 வரை இந்த வணிகர் நல வாரியத்திலே ஆயுள் உறுப்பினர்களாக சேர்ந்திருக்கின்றவர்களுடைய எண்ணிக்கை 24,595 பேர் என்பதை நான் மகிழ்ச்சி யோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த 24 ஆயிரம் என்பது விரைவிலே இரண்டு இலட்சம் பேர் என்ற அளவிற்கு உயர வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். உயருமென்று எதிர்பார்க்கிறேன்.

உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 91 முதல் 96 வரையில் ஐந்தாண்டுக் காலத்தில் வணிகர் நல வாரியத்திலே உள்ள உறுப்பினர்களால் செலுத்தப் பட்ட தொகை 35 இலட்சத்து 48 ஆயிரத்து 575 ரூபாயாகும். இப்படி உறுப்பினர்களால் தொகை செலுத்தப்பட்டால் அதற்கு ஈடாக அரசாங்கம் அதே தொகையைச் செலுத்துவது என்பதுதான் வணிகர் நல வாரியத்தின் ஒரு கோட்பாடு. இந்த ஐந்தாண்டு காலத்தில் உறுப்பினர்கள் செலுத்திய தொகைதான் வணிகர் நல வாரியத்தில் 35 இலட்சத்து 48 ஆயிரத்து 575 ரூபாய். அரசாங்கத்தின் சார்பில் அதற்கான ஈட்டுத் தொகை வழங்கப்படவே இல்லை. கழக ஆட்சி 96-ஆம் ஆண்டு பொறுப்பேற்ற பிறகுதான் அப்படி வழங்கப்படவில்லை என்ற செய்தி எங்களுக்கு அறிவிக்கப்பட்டு, அந்த கடந்த கால அரசு செலுத்தத் தவறிய அல்லது செலுத்த மறந்து விட்ட அல்லது செலுத்த விரும்பாத அந்த 35 லட்சத்து 48 ஆயிரத்து 575 ரூபாய் ஈட்டுத் தொகையை வழங்கியதும் இந்த அரசுதான் என்பதை நான் உங்களுக்கு நினை வூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வணிக வரித்துறையில் பல முக்கியமான சிறப்பான மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்று திட்டமிட்டு அந்த மாற்றங்களைச் செய்திருக்கிறோம். அவைகளை யெல்லாம் இங்கே பேசிய அமைச்சர்கள் விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மீண்டும் அவைகளை

யெல்லாம் நான் நினைவூட்ட வேண்டுமென்று விரும்ப வில்லை.

விற்பனை வரி விதிப்பு அமைப்பிலே பல சீர்திருத் தங்கள் செய்யப்பட்டன. அதற்காக வரி சீரமைப்புக் குழு என்ற குழு அமைக்கப்பட்டு, அதிலே வணிகப் பிரதிநிதிகளும், சட்டமன்றத்திலே உள்ள மற்ற கட்சி களைச் சார்ந்த உறுப்பினர்களும் ஆளுங்கட்சி உறுப்பினர்களும் அங்கம் வகித்து அவர்கள் தந்த சீர்திருத்தங்களையெல்லாம் கூடுமான வரையிலே இந்த அரசு செயல்படுத்தியிருக்கின்றது. நான் அந்த விவரங்களுக்குச் செல்ல விரும்பவில்லை. நீண்ட நேரம் பேசுகின்ற சூழ்நிலையும் இன்றைக்கில்லை. காரணம் உங்களுக்குத் தெரியும். எவ்வளவு பணிகளுக்கிடையே இந்தப் பணியை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம் என்பதை நீங்கள் எல்லாம் நன்றாக அறிவீர்கள்.

எனவேதான் உங்களுக்கு நான் கூற விரும்பு கிறேன். இந்த அரசு உங்களுடைய முறையீடு எதுவானா லும் அவைகளை நிறைவேற்ற என்றைக்கும் தவறிய தில்லை. ஒருமுனை வரிதான் எல்லா பொருட்களுக்கும் இருக்க வேண்டுமென்று நீங்கள் கேட்ட நேரத்தில், கடந்த காலத்தில் 76-ஆம் ஆண்டிற்கு முன்பே அந்தத் தொடக்கத்தைச் செய்து, பிறகு 89-ஆம் ஆண்டிலே ஏறத்தாழ அறுபது பொருட்களுக்கு பல முனை வரியை நீக்கி, ஒருமுனை வரியாக ஆக்கி, இப்போது எல்லா பொருட்களுக்குமே ஒருமுனைவரி என்ற நியதியை உருவாக்கியதும் இந்த அரசுதான் என்பதை நீங்கள் அனுபவ ரீதியாக உணர்ந்து நீங்கள் பாராட்டியிருக் கிறீர்கள். இங்கேயும் இன்றைக்கும் நன்றி அதற்காக தெரிவித்திருக்கிறீர்கள்.

மக்கள் அன்றாடம் பயன்படுத்துகின்ற உணவுப் பொருட்களான பருப்பு, மிளகாய், தனியா, மஞ்சள், புளி,

சீரகம், பெருங்காயம், வெல்லம், சீயக்காய் ஆகியவை களுக்கும், வெள்ளியினால் ஆன மெட்டி, கொலுசு, அரைஞாண், கையால் செய்யப்பட்ட தீக்குச்சிகள், நெல்லுமி, நொய்யரிசி, தேங்காய் மட்டை ஆகிய பொருள்களுக்கும் 96-97-ஆம் ஆண்டு முழுமையான வரி விலக்கினை நான் அவை முன் வைத்த நிதி நிலை அறிக்கையிலேயே – வரிச்சலுகை அளித்திருக்கிறேன்.

அதைப்போலவே 97-98-ஆம் ஆண்டில் விற்பனை வரி ரத்து செய்யப்பட்ட பொருட்கள் – மீன் உணவு, தேங்காய் ஓடுகளும் துண்டுகளும், நிலக்கடலை ஓடுகள், தயிர், பஞ்சாமிர்தம், கல்விக்கான விளக்கப் படங்கள், சுற்றுலா வழிகாட்டி மற்றும் வரைபடங்கள், பளுவான பெரிய சம்மட்டி, பழைய வெள்ளி மெட்டி, கொலுசு ஆகிய பொருள்களுக்கு நடைமுறையிலே இருந்து வந்த 11 சதவிகித வரி முழுவதுமாக ரத்து செய்யப்பட்டது. அது மட்டுமல்ல; மூங்கிலால் செய்யப்பட்ட தட்டி, முறம், கூடைகள், புற்றுநோய், தொழுநோய், காசநோய் ஆகிய நோய்களின் சிகிச்சைக்கான உயிர்காக்கும் மருந்துகள், நாட்டு மருந்துகள் ஆகியவற்றின் 39 இனங்கள்; சூரிய ஒளி மின்கலங்கள், 50 ரூபாய்க்குக் குறைவான விலையுள்ள காலணிகள் – இவைகளுக்கு வரி ரத்து முழுமையாகச் செய்யப்பட்டது.

கால்நடைத் தீவனம், தொன்னை, சாம்பிராணி, இயலாதவர்களுக்கான (ஊனமுற்றோர்களுக்கான) மிதிவண்டி, செங்கற்கள், ஓடுகள் செய்வதற்கான களிமண், சென்னா இலைகள், விதை ஓடுகள், நில வாகைச் செடியின் இலைகள், மரவள்ளிக் கிழங்கு கப்பி, திப்பி ஆகிய பொருள்களுக்கு நடைமுறையில் இருந்த 4 சதவிகித வரி முழுவதுமாக ரத்து செய்யப்பட்டது.

கனிமங்கள் – உலோகங்கள், தங்க நகை ஏற்றுமதி யாளர்களுக்கு விற்பனை செய்கின்ற தங்கத்திற்கு

விதிக்கப்பட்டு வந்த 2 சதவிகித விற்பனை வரி முழுவதுமாக இந்த அரசினால் ரத்து செய்யப்பட்டுள்ளது.

இங்கே தம்பி ஆலடி அருணா பேசும்போது குறிப்பிட்டார். 93-94-ஆம் ஆண்டில் வரிகள் மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் 3,397 கோடி ரூபாய்; 94-95-ஆம் ஆண்டில் இந்த வரிகள் மூலம் கிடைத்த வருவாய் 4,164 கோடி ரூபாய். 95-96-ஆம் ஆண்டில் வரிகள் மூலம் வருவாய் 5,023 கோடி ரூபாய். நீங்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும், 93-94-இல், 3,397 கோடி ரூபாய் என்பது ஏறத்தாழ ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்து 94-95-இல் 4,164 கோடி ரூபாய். 95-96-ஆம் ஆண்டில் மேலும் ஒரு ஆயிரம் கோடி ரூபாய் உயர்ந்து 5,023 கோடி ரூபாய். ஆனால் 96-97-இல் கழக அரசு பல்வேறு வரிச் சலுகைகளை வழங்கியதின் காரணமாக ஆயிரம் கோடி மேலும் உயரவில்லை. 5,023 கோடி ரூபாய் என்பது 5,137 கோடி ரூபாய் என்ற அளவிற்குத் தான் உயர்ந்திருக்கிறது. இதிலிருந்து என்ன புரிகிறது? அவ்வளவு வரிச் சலுகைகளை இந்த அரசு வழங்கியிருக் கிறது என்பது புரியும்.

இரத்தினவேலு அவர்கள் இங்கே சொன்னார். வரிச் சலுகை அளித்தால் வருவாய் அதிகமாகும் என்று. வரவில்லை என்பதற்கு இது எடுத்துக்காட்டு. ஆண்டு தோறும் ஆயிரம் கோடி ரூபாய் ஏறிக் கொண்டே வந்தது. ஆனால் பல வரிச் சலுகைகளை இந்த அரசு வணிகர்களுக்கு அளித்ததின் காரணமாக ஆயிரம் கோடி ரூபாய் உயருவதற்குப் பதிலாக நூறு கோடி ரூபாய்தான் உயர்ந்திருக்கிறது என்றால், அந்த அளவிற்கு வரி இழப்பை, வருவாய் இழப்பை நாங்கள் பொறுத்துக் கொண்டு வணிகப் பெருமக்களுக்குச் சலுகைகளை வழங்கியிருக்கிறோம் என்பதை நான் பெருமிதத்தோடு

சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த இழப்பு வந்தாலும் பரவாயில்லை. (பலத்த கைதட்டல்) உங்களுடைய நன்மைதான் எங்கள் நன்மை, அதுதான் நாட்டின் நன்மை என்ற அந்த அடிப்படையிலேதான் இவ்வளவு இழப்பையும் ஏற்றுக் கொண்டு இந்தச் சலுகை களை இந்த அரசு அறிவித்திருக்கிறது என்பதற்காக இதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமாத்திரமல்ல; பதிவுச் சான்றினை ஐந்தாண்டு களுக்கு ஒரு முறை புதுப்பித்துக் கொள்ளும் சலுகையை இந்த அரசுதான் அளித்தது. வாணிபம் செய்பவர்கள் தங்களுடைய வாணிபத்தை ஆண்டுதோறும் பதிவு செய்ய வேண்டிய நிலைமை இருந்தது. அதிலே உள்ள சிக்கல்கள், அதிகார மிரட்டல்கள் இவைகளை யெல்லாம் எடுத்துக் காட்டியதின் காரணமாக இந்த நடைமுறையை மாற்றி ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை தங்களுடைய பதிவுகளைப் புதுப்பித்துக் கொள்ளலாம் என்று இந்த அரசு ஆணையிட்டதையும் நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.

நீங்கள் வைத்திருக்கின்ற கோரிக்கைகளிலே மிக முக்கியமான கோரிக்கைகள்; மாநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம், கடைகளுக்குத் தண்ணீர் வரியாக ரூ.125 முதல் ரூ.345 வரை வசூலிக்கிறது. இதனைப் பரிசீலித்துக் குறைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். இதுபற்றி உள்ளாட்சித் துறை அமைச்சருடனும், அதிகாரிகளுடனும் கலந்து பேசி, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் (கைதட்டல்) என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் ஏன் வந்தது என்று பொதுமக்களும் வருத்தத்தோடு கேட்கிறார்கள். இப்போது ஒரு தேர்தல் தேவையா என்று ஆதங்கத்தோடு கேட்கிறார்கள். அதே

உணர்வு உங்களுக்கும் இருக்கிறது. நீங்கள் தேர்தல் வருவதற்கு முன்பே மாநாட்டிற்குத் தேதி குறித்து விட்டீர்கள். ஆனால் தேதி குறித்த பிறகு தேர்தல் வந்து விட்டது. உங்களுடைய ஆதங்கம் எல்லாம் ஏன் இந்தத் தேர்தல் வந்து தொலைந்தது என்பதுதான். இல்லா விட்டால் இந்நேரம் முதலமைச்சர் நம்முடைய கோரிக்கைகள் பலவற்றை ஏற்று, இந்த வள்ளுவர் கோட் டத்தில் பேசியிருப்பாரே, அவைகளை எல்லாம் ஏற்றுக் கொண்டு நமக்குப் பதில் வழங்கியிருப்பாரே என்று நீங்கள் எண்ணியிருக்கிறீர்கள்.

கோரிக்கைகளை நிறைவேற்ற தேர்தல் நேரத்தில் – வீராசாமி அவர்கள் இங்கே என்னைச் சிக்க வைக்கும் வகையில் – ஒன்றைச் சொன்னார். ''நெருக்கடி நிலையின் போது எதையெதை எப்படியெப்படி சொல்ல வேண்டும் என்பதை உணர்ந்தவர் கலைஞர். எனவே இதை எப்படிச் சொல்ல வேண்டும் என்பதை இங்கே சொல்வார்'' என்று குறிப்பிட்டார். எப்படிச் சொல்வது? மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. (கைதட்டல்) மனம் இருக்கிறது. மார்க்கம் தேர்தலுக்குப் பிறகு தென்படும் (பலத்த கைதட்டல்) என்று கூறி விடைபெறுகிறேன்.

25-1-98 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற சென்னை – சென்னை புறநகர் வணிகர்கள் சங்க மாநாட்டில் ஆற்றிய பேருரை

G012451
894.8115
KAR
ANNA CENTENARY LIBRARY
CHENNAI - 600 086.

6

திரைப்பட விருது வழங்கும் விழா

தேர்தல் வந்தால் அதற்கு முன்பு இதுபோன்ற திரைப்பட விருது வழங்குகின்ற விழா வருகிறதென்று– பஞ்சு அருணாசலம் சொன்னார். அது உண்மையல்ல. நாங்கள் விருது வழங்குகின்ற விழா வைத்தாலே தேர்தல் வந்து விடுகிறது. (பலத்த சிரிப்பு) அதுதான் உண்மை.

இந்த விருதுகள் வழங்குவதற்காக, படங்கள் கடந்த ஐந்தாறு மாத காலமாக நீதியரசர் கோகுல் அவர்கள் தலைமையிலே பார்வையிடப்பட்டு, பரிசுகள் எல்லாம் யார் யாருக்கு என்று வகுக்கப்பட்டு – அந்தப் பட்டியல் எல்லாம் தயாரிக்கப்பட்டு – வெளியிடப்படுகின்ற நேரத்திலேதான் தேர்தல் அறிவிப்பு வந்தது. இதுவும் ஒரு தேர்தல் தானே? விருதுகள் யார் யாருக்கு வழங்கப் படுவது என்று தேர்ந்தெடுப்பதும் ஒரு தேர்தல்தானே? இந்தத் தேர்தலும் அந்த தேர்தலும் ஒட்டி வந்திருக்கின்றன.

இந்தத் தேர்தலை முன்னிட்டு இந்தத் திரைப்பட விருது வழங்கும் விழா நடைபெறவில்லை. அது தேர்தலுக்குப் பயன்படக் கூடாது என்பதற்காகத்தான் தேர்தல் ஆணையத்தினுடைய விருப்பப்படி அல்லது உத்தரவுப்படி இன்றைக்கு வழங்கப்பட வேண்டிய எம்.ஜி.ஆர். விருது வழங்கப்படவில்லை. ஏனென்றால்

தேர்தலிலே வேட்பாளராக நிற்கின்ற ஓர் அரசியல் வாதிக்கு அரசு விழாவிலே விருது வழங்கக் கூடாது என்று தேர்தல் ஆணையம் விதி வகுத்திருக்கின்ற காரணத்தால் – எம்.ஜி.ஆர். விருது யாருக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதோ அவர் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெயரைச் சொல்வது கூட ஒருவேளை தேர்தல் விதிமுறைக்கு விரோதமாக இருக்குமோ என்பதால்தான் அரசியல் நாகரிகத்தோடு பெயரையும் சொல்லாமல் விடுகிறேன்.

சிறந்த படங்கள் என்ற வரிசையிலே 'இந்தியன்' படம் முதல் பரிசைப் பெற்றிருக்கிறது. நான் அந்தப் படத்தைப் பார்த்தேன். தம்பி கமல் அவர்கள் அதனைப் பார்க்குமாறு எனக்கு அன்புக் கட்டளை பிறப்பித்தார். படத்தைப் பார்த்தேன். அந்தப் படத்தோடு ஒன்றிப் போகின்ற – மெய்மறந்த நிலைக்கு ஆளானேன். அந்தப் படம் முதல் பரிசைப் பெற்றிருப்பதில் வியப்பு ஏதும் இல்லை என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

'காதல் கோட்டை' நான் பார்க்கவில்லை. வயது 74 அதனால் பார்க்கவில்லை (பலத்த கைதட்டல்) அந்தப் படம் இரண்டாவது பரிசு பெற்றிருக்கின்றது. பாராட்டு கிறேன். ''புருஷன் பொண்டாட்டி'' மூன்றாவது பரிசைப் பெற்றிருக்கின்றது.

'கருவேலம்பூக்கள்' சிறப்பு பரிசு பெற்றிருக்கின்றது.

பெண்களைப் பற்றிய சிறந்த கதை என்பதற்காக மற்றொரு சிறப்புப் பரிசை 'கோகுலத்தில் சீதை' என்ற திரைப்படம் பெற்றிருக்கின்றது.

சிறந்த நடிகர் என்பதற்கான விருது கலைஞானி கமல் அவர்களுக்குக் கிடைத்திருப்பதும் ஆச்சரியமான ஒன்றல்ல.

அதைப்போல சிறந்த நடிகருக்கான சிறப்புப் பரிசு தம்பி விஜயகாந்த்துக்குக் கிடைத்திருப்பதும் ஆச்சரிய மான ஒன்றல்ல.

திரைப்பட இயக்குநர்களில் புரட்சிகரமான படங் களை எதற்கும் துணிந்து தணிக்கைக்குப் பயப்படாமல், தணிக்கையின் காரணமாகவே தடைப்படுத்தப் பட்டாலும் பரவாயில்லை என்ற இலட்சிய நோக்கோடு படம் தயாரிக்கின்ற – இயக்குகின்ற தம்பி ஆர்.கே. செல்வமணி திரைப்பட இயக்குனர்களுக்கு வழிகாட்டியாக வாழ்ந்து மறைந்த ராஜா சாண்டோ விருதினைப் பெற்றிருக்கிறார்.

நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல – பஞ்சு அருணாசலம் கவிஞர் கண்ணதாசன் விருதினைப் பெற்றிருக்கிறார்.

அண்ணா விருது தம்பி லியாகத் அலிகானுக்குக் கிடைத்திருக்கிறது. அவர் எழுத்தாளர் என்ற முறையிலே அந்த விருதினைப் பெற்றிருக்கிறார். நானும் ஒரு எழுத்தாளன் என்ற முறையிலே அவர் இந்த விருதினைப் பெற்றதற்காகப் பெருமையடைகிறேன்.

தம்பி சார்லி நகைச்சுவை எப்படி இருக்க வேண்டும், நகைச்சுவையோடு எப்படிக் கருத்துக்களைக் குழைத்துத் தர வேண்டும் என்பதற்கான இலக்கணமாகத் திகழ்ந்த மறைந்த கலைவாணர் – யாருடைய பெயரால் இந்த அரங்கம் அமைந்திருக்கின்றதோ அந்தப் பெயருக்குச் சொந்தக்காரரான கலைவாணர் விருதினைப் பெற்றிருக்கிறார்.

தமிழகத்திலே மாத்திரமல்லாமல், இந்தியத் திரு நாட்டிலே மாத்திரமல்லாமல், அனைத்துலக நாடுகளிலும் இசை வெள்ளம் பாய்ச்சிக் கொண்டிருக்கின்ற தம்பி ஏ.ஆர். ரகுமான் அவர்களுக்குச் சிறந்த இசை அமைப்பாளர் என்கின்ற விருது கிடைத்திருப்பது பற்றி

உங்களோடு சேர்ந்து நானும் மகிழ்ச்சியடைகிறேன். என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

சிறந்த இயக்குநராக அகத்தியன் விருது பெற்றிருக்கிறார். நான் கேள்விப்பட்டேன் – அவருடைய இயற்பெயர் கருணாநிதி என்பதாக. (கைதட்டல்) அவர் ஒருவேளை இரண்டாவது கருணாநிதி வேண்டாம் என்பதற்காகப் பெயரை மாற்றிக் கொண்டாரோ என்னவோ தெரியாது. அவர் சிறந்த இயக்குநர் என்பதற்கான விருதினைப் பெற்றிருக்கிறார்.

சிறந்த உரையாடல் ஆசிரியர் விருதினை விக்ரமன் பெற்றிருக்கிறார். அவருடைய உரையாடல்கள் பலவற்றை நான் சுவைத்து மகிழ்ந்தவன் என்ற முறையில் அவருக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறந்த நடிகையாக செல்வி சுருதி தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றார். அவருக்கு என்னுடைய வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறந்த நடிகை என்பதற்கான சிறப்புப் பரிசை செல்வி தேவயானி பெற்றிருக்கின்றார். அவருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறந்த கதாசிரியர் என்பதற்கான விருதை களஞ்சியம் பெற்றிருக்கிறார். அவருக்கு என் வாழ்த்தும் பாராட்டும் உரியதாகுக.

திரைப்படங்களிலே நல்ல பாடல்கள் எழுதியவர் என்பதற்காக தம்பி பிறைசூடன் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார். என்னுடை வாழ்த்துக்கள்.

சிறந்த வில்லன் நடிகர் பிரகாஷ்ராஜ் – அவர் இங்கே விருது வாங்கும்போது இந்த அரங்கத்திலே ஒரு ஆனந்தம் – ஒரு மகிழ்ச்சி – ஒரு குதூகலம். காரணம் எனக்குத் தெரியும். எங்கள் இருவருக்கும் தெரியும். ஆம், 'இருவரு'க்குத் தெரியும். (பலத்த கைதட்டல்)

சிறந்த நகைச்சுவை நடிகராக வடிவேலு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். வடிவேலு நகைச்சுவை யாக நடிக்கத் தேவையில்லை. வந்து நின்றாலே போதும் – நகைச்சுவை தானாகவே கிடைக்கும். ஒவ்வொரு அசைவிலும் நகைச்சுவையை வெளிப்படுத்தக் கூடிய நல்ல நடிகர். அவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரைப்பட உலகத்தில் வெற்றி என்பது அதிலே பங்கு பெறுகிற ஒருவரால் மாத்திரம் கிடைத்து விடுவதல்ல. ஒரு இயக்குநராலோ அல்லது ஒரு நடிகராலோ, ஒரு நடிகையாலோ, அல்லது ஒரு வசனகர்த்தாவாலோ அல்லது ஒரு இசை அமைப்பாள ராலோ அல்லது ஒரு பின்னணிப் பாடகராலோ யாராலும் தனிப்பட்ட ஒருவரால் ஒரு வெற்றியைப் பெற்றுவிட முடியாது.

உதாரணமாக ஒரு சிலையை ஒரு சிற்பி வடிப்பதற்கு ஒருவரே போதும். அந்தச் சிற்பிக்கு ஓர் உளி; ஒரு கல் இருந்தால் போதும் – ஒரு சிலையை அந்தச் சிற்பி வடிவமைத்துக் கொடுக்க முடியும். அதுபோல ஓர் ஓவியன் கொஞ்சம் சாந்து, வண்ணம், தூரிகை மாத்திரம் இருந்தால் போதும் – ஓர் ஓவியத்தைத் தீட்டித் தர முடியும். ஆனால், திரைப்படம் என்பது பலருடைய முயற்சி யினால், பலருடைய உழைப்பினால் வெளிவர வேண்டியது; வெற்றியினை வழங்க வேண்டியது. அப்படிப்பட்ட அந்தப் பெரும் முயற்சியிலே எல்லோரும் கூடி ஒன்றாக இணைந்து ஒத்துழைப்புத் தந்தால்தான் ஒப்பற்ற வெற்றியைப் பெற முடியும் என்பதை அனுப வரீதியாக நாம் பெற்று வருகிறோம்.

அந்த வகையிலே திரைப்படத் துறையிலே இருக்கின்ற உங்களையெல்லாம் இந்த மண்டபத்திலே காணுகின்ற நேரத்தில் எனக்கு ஏற்படுகின்ற மகிழ்ச்சி,

தம்பி கமல் குறிப்பிட்டதைப் போல – நான் இருந்த வீடு என்று கமல் சொன்னார் – நான் இருக்கின்ற வீடுந்தான் – ஏனென்றால் அதற்குள் எனக்குக் கலையுலகத்திலிருந்து ஓய்வு கொடுத்து விடக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். (கைதட்டல்) ஏனென்றால் நாள்தோறும் எழுதிக் கொண்டிருப்பவன் நான். நான் எழுதாத நாளே இல்லை. நான் எழுதுவதே எனக்கு ஏற்படுகின்ற களைப்பைப் போக்கிக் கொள்ளத்தான். அரசியல் துறையிலே எனக்கு ஏற்படுகின்ற கஷ்டங்கள், துன்ப துயரங்கள், களைப்பு, சோர்வு இவற்றையெல்லாம் போக்கிக் கொள்ள காலையிலே உலாவி முடித்த பிறகு நான் கைக்கொள்கிற முதல் முயற்சி எழுதுவதுதான். ஒவ்வொரு நாளும் எழுதிக் கொண்டுதான் இருக்கிறேன். எனவே இருந்த வீடு என்று சொல்லாதீர்கள் – இருக்கின்ற வீடு – இதுவும் ஒன்றுதான் என்பதை நீங்கள் தயவு செய்து மறந்துவிடாதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் துறையிலே இருக்கின்ற பிரச்சினைகளைப் பற்றி என்னிடம் தனியாகவும் கூறியிருக்கிறார்கள். தனியாகச் சொன்னால் ஊருக்குத் தெரியாமல் போய்விடும் என்பதற்காக உங்களையெல்லாம் கூட்டி வைத்தும் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திரையுலகப் பிரச்சினையை இங்கே பக்கத்திலே அமர்ந்திருப்பவர்களே ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டு தீர்த்து விடலாம் (கைதட்டல்) தம்பி கலைஞானி கமலும், நம்முடைய புரட்சிக் கலைஞர் தம்பி விஜயகாந்தும் இங்கே நான் பேசிக் கொண்டிருக்கின்ற இதே நேரத்திலேயே இருவரும் – ஒருவர் காதிலே ஒருவர் பேசி – இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கண்டிட முடியும். (கைதட்டல்) இருந்தாலும் அவர்கள் கருணாநிதி தீர்த்து வைத்தார் என்ற பெருமை தங்களுடைய அண்ணனுக்குக் கிடைக்க வேண்டுமே என்பதற்காக இதைத் தூக்கி என் தலையிலே போட்டிருக்கிறார்களே அல்லாமல் வேறல்ல.

இருந்தாலும் கூட நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். இங்கே பஞ்சு அருணாசலம் குறிப்பிட்டார். இந்தத் தேர்தல் முடிந்தபிறகு இந்தப் பணியை நான் கவனிக்க வேண்டுமென்று சுட்டிக்காட்டினார். நிச்சயமாக தேர்தல் முடிந்த பிறகு பிப்ரவரி மாத இறுதிக் கட்டத்தில் இந்தப் பிரச்சினைக்கு ஓர் இறுதித் தீர்ப்பை – நல்ல தீர்ப்பை நாம் காண்போம் என்ற நம்பிக்கையை இந்த விழாவிலே நான் தெரிவித்து – தொடர்ந்து வழக்கம் போல் கலையுலகத்திற்கு இந்த அரசு பாடுபடும் – சாதனைகளை நிகழ்த்தும் – ஏனென்றால் கலையுலகம் வேறு, அரசு வேறு என்றில்லாமல் நடைபெறுகின்ற அரசு இது. கலையுலகத்திலிருந்து வருகின்ற வருமானம் – அரசின் சார்பில் நிறைவேற்றப்படுகின்ற பல திட்டங் களுக்கு இன்று பயன்படுகின்றது. கலையுலகத்தின் மூலமாக கோடிக்கணக்கான ரூபாய் அரசுக்கு வருவாயாக வருகிறது என்பதை நான் மறந்துவிட வில்லை.

எனவே அந்த நன்றி உணர்வோடு நானும் அங்கும் இருப்பவன், இங்கும் இருப்பவன், என்ற முறையிலே நிச்சயமாக உங்களோடு ஒத்துழைப்பேன், உங்களுடைய பிரச்சினைகளுக்கு நல்ல பரிகாரம் காண்பேன் என்ற உறுதிமொழியை இங்கே தெரிவித்து இங்கே வழங்கப் பட்ட விருதுகளை விட பரிசுகளை விட, இந்த உறுதிமொழி சிறந்தது என்று நீங்கள் கருதுவீர்கள் என்ற நம்பிக்கையோடு விடைபெறுகிறேன்.

30-1-98 அன்று திரைப்பட விருது வழங்கும் விழாவில் ஆற்றிய உரை

7

புரசை கோபாலரத்தினம் இல்ல மணவிழா

பரசுராமன் அவர்களுடைய சகோதரர் கோபால ரத்தினத்தின் செல்வி மலர்விழி என்ற செந்தமிழ்ச் செல்விக்கும், சேலம் மாவட்டம் – மேட்டூர் வட்டம் எல்லைக்குட்டையூர் சுப்பிரமணியம் அவர்களுடைய செல்வன் முரளிதரனுக்கும் நம் அனைவருடைய இனிய நல்வாழ்த்துக்களோடு மணவிழா நிகழ்ச்சி இங்கே நிறைவேறியிருக்கிறது.

இந்த நிகழ்ச்சி யாருடைய குடும்ப நிகழ்ச்சி என்பதை எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

நம்முடைய பரசுராமன் அவர்கள் எப்பொழுதுமே வஞ்சம் இல்லாத நெஞ்சம் படைத்தவர். கள்ளங்கபட மற்றவர். கிராமத்துக்காரர்கள் அநேகமாக அப்படித்தான் இருப்பார்கள். அதனால் அவர், விளிக்கும்போது, ''கலைஞர் அவர்களே'' என்று சொல்லிவிட்டு, பேராசிரியர் இங்கு வந்திருக்கிறாரா இல்லையா என்பதைப் பற்றிக் கூட தெரிந்து கொள்ளாமல், ''பேராசிரியர் அவர்களே'' என்று சொன்னதை நீங்க ளெல்லாம் கேட்டு மேடையை உற்று உற்றுப் பார்த்தீர்கள்; ஒருவேளை நமக்குத் தெரியாமல் பேராசிரியர் வந்து

எங்காவது உட்கார்ந்திருக்கிறாரோ என்று! அப்படிக் கள்ளங்கபடமற்றவர் பரசுராமன். அவருடைய இல்லத்தில் நடைபெறுகின்ற இந்த மணவிழா நிகழ்ச்சியிலே நான் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துவது மாத்திரமல்ல; இப்படிப்பட்ட வெள்ளை உள்ளம் படைத்தவர்களை எல்லாம், கள்ளமில்லாத உள்ளம் படைத்தவர்களை எல்லாம் நீங்கள் நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்ற கடமையை உணர்த்துவதற்காகவும் உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன்.

இந்தத் தொகுதியைப் பொறுத்தவரையில் மத்திய சென்னையில் கழக வேட்பாளராக தம்பி முரசொலி மாறன் நிறுத்தப்பட்டிருக்கின்றார். இங்கே உங்களை யெல்லாம் பார்த்து, ''மத்திய சென்னைத் தொகுதிக்கு மாத்திரம் வாக்களியுங்கள்!'' என்று நான் கேட்க முடியாது. நீங்கள் சேலம் மாவட்டத்திலிருந்து வந்திருக் கின்றீர்கள். செங்கற்பட்டிலிருந்து வந்திருக்கின்றீர்கள். சென்னை, வடசென்னை பகுதியிலிருந்து வந்திருக் கின்றீர்கள். குறிப்பாக வந்திருக்கின்றவர்களில் பெரும் பாலோர் யார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். இட ஒதுக்கீட்டில் தி.மு.க. ஆட்சியில் 20 சதவிகித இட ஒதுக்கீடு பெற்றவர்கள்தாம் பெரும்பாலும் இங்கே இருக்கின் றீர்கள் என்பதையும் நான் நன்றாக அறிவேன். (பலத்த கைதட்டல்)

போராடிப் போராடிப் பார்த்து பல பேரை, துப்பாக்கி ரவைகளுக்கெல்லாம் பலி கொடுத்தும் கூட கிடைக்காத அந்த இட ஒதுக்கீட்டை, 89-ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், யாரை அழைத்துப் பேச வேண்டுமோ அவர்களையெல்லாம் அழைத்துப் பேசி – ''மிகவும் பின்தங்கிய மக்களுக்கு 20 சதவிகிதம் இனி வழங்கப்படும்'' என்ற ஆணையைப்

பிறப்பித்தவன்தான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன் என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனுக்காக 1916-ஆம் ஆண்டுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டதுதான் திராவிட இயக்கமாகும்.

அந்தத் திராவிட இயக்கத்தின் வழித்தோன்றலாக அரசியல் பரிணாம வளர்ச்சி பெற்று, இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகமாகும்.

1967-ஆம் ஆண்டு அண்ணா அவர்களுடைய தலைமையிலே தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது என்றாலும் கூட, அதற்கு முன்பு ஒருமுறை – 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சிக்கு முன்பு, தமிழ்நாட்டை ஏன் கேரளத்திலே சில பகுதிகளையும் ஆந்திரத்திலே சில பகுதிகளையும், கர்நாடகத்திலே சில பகுதிகளையும் உள்ளடக்கிய சென்னை மாகாணத்தை, சென்னை ராஜ்யத்தை ஆளுகின்ற பொறுப்பை ஏற்றிருந்தது நீதிக்கட்சி என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த நீதிக்கட்சியின் பாரம்பரியம்தான், அதனுடைய அரசியல் வாரிசுதான் தி.மு. கழகமாகும்.

நீதிக் கட்சியின் கொள்கை என்ன? சமத்துவம், சமதர்மம் – அதனால்தான் நீதிக்கட்சி தன்னுடைய கொடியிலே அன்றைக்குத் தராசு சின்னத்தை பொறித்திருந்தது. எல்லோருக்கும் சமத்துவம் வேண்டும், சமதர்மம் வழங்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் அந்தக் கொடியைப் பொறித்து, நீதிக்கட்சி, ஆங்கிலத்திலே 'Justice Party' (ஜஸ்டிஸ் பார்ட்டி) என்று அழைக்கப்பட்ட அந்த இயக்கம் இன்றைக்கு அதனுடைய அரசியல் வாரிசான தி.மு. கழகமாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உங்களுக்கு நான் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கின்றேன்.

தந்தை பெரியார் அவர்கள் இந்த இயக்கத்திற்குத் தலைமையேற்று, அதன் பின்னர் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த இயக்கத்தை ஆட்சிப் பொறுப்பிலும் அமர்த்த வேண்டும். அதற்கும் மக்களுடைய ஆதரவைப் பெற வேண்டும் – பெரியார் சொல்லுகின்ற சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களை எல்லாம் சட்டமாக ஆக்க வேண்டுமேயானால், நாம் ஆட்சிப் பொறுப்புக்குச் சென்றாக வேண்டும். ஏனென்றால், காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே பெரியாருடைய சமுதாய சீர்திருத்தக் கொள்கைகளை, பெரியாருடைய கோரிக்கைகளை, திராவிடர் கழகத்தின் எண்ணங்களை, கருத்துக்களை; பெரியாரின் ஆதரவைப் பெற்று வெற்றி பெற்றிருந் தாலும்கூட, காங்கிரஸ் அமைச்சரவையில் அதை எல்லாம் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

பெரியார் போராடிப் பார்த்தார். பெரியாருக்காக நாங்கள் சட்டமன்றத்திலே வாதாடிப் பார்த்தோம். சுயமரியாதைத் திருமணம் சட்டப்படி செல்லுபடியாக வேண்டும் என்று தனிநபர் தீர்மானம் எல்லாம் கொடுத்தோம். அதை எல்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறன் குறிப்பிட்டதைப் போல, அண்ணா முதலமைச் சராக வந்த பிறகுதான், ''சுயமரியாதை திருமணம் சட்டப்படி செல்லுபடியாக ஆகும்'' என்ற தீர்மானமே கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இந்த மண்ணுக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்க வேண்டும் என்பதற்காக, சங்கரலிங்க நாடார் போன்ற தியாகிகள் எல்லாம் தங்களுடைய உயிரையே விட் டார்கள்; உண்ணா நோன்பிருந்து! அப்பொழுதும் இந்த மண்ணுக்கு அந்தப் பெயர் வைக்கப்படவில்லை. அறிஞர் அண்ணா முதல்வராகப் பொறுப்பேற்று, தி.மு.கழக ஆட்சியிலேதான் 'தமிழ்நாடு' என்ற பெயரை இந்த மண் பெற்றது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அதைப் போலவே இந்தியின் ஆதிக்கத்தை எதிர்த்து, 1937-38-ஆம் ஆண்டுகளில் இருந்து போராடி பல உயிர்களை அதற்குப் பலியாகக் கொடுத்து, கிடைக்காத அந்த வெற்றி – அண்ணா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்று தி.மு.கழக ஆட்சி வந்த பிறகுதான், ''இனிமேல் தமிழ் நாட்டில் இந்தி ஆதிக்கத்திற்கு இடமில்லை'' என்ற ஒரு நிலையான ஆணை பிறப்பிக்கப் பட்டு ''தமிழ்நாட்டுப் பள்ளிக் கூடங்களில் இனிமேல் தமிழ், ஆங்கிலம் இரண்டும்தான் – இந்திக்கு இடமில்லை'' என்று இந்தியாவிலே அறிவித்த ஒரே ஒரு மாநிலம் தமிழ்நாடுதான், அதற்குக் காரணம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான்; அறிஞர் அண்ணா அவர்கள்தான் என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள்.

எனவே சமுதாய சீர்திருத்த இயக்கமாக இருந்த திராவிட இயக்கம், அரசியல் ரீதியாகவும் பங்கு பெற்று சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்கள் பலவற்றைச் சட்ட மாக்குகின்ற அந்தப் பெரும் பணியிலே வெற்றி கண்டிருக்கின்றது.

உங்களுக்குத் தெரியும்; 89-ஆம் ஆண்டு நான் மூன்றாவது முறையாக முதலமைச்சராக இருந்தபோது தான், சொத்துரிமையிலே பெண்களுக்கும் சமஉரிமை உண்டு, ஆண்களைப் போல பெற்றோருடைய சொத்தில் பெண்களுக்கும் சரிபாதி உண்டு என்ற சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினேன். அப்பொழுது சொன்னேன்; ''1929-ஆம் ஆண்டு செங்கற்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் தந்தை பெரியார் அவர்கள் கொண்டு வந்த தீர்மானம் இது. பெண்களுக்கும் சொத்தில் சமஉரிமை வேண்டும் என்ற தீர்மானம். அதை அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு, இன்றைக்குப் பெரியாருடைய அந்த எண்ணத்தைச் சட்டமாக நான் நிறைவேற்றி இருக்கின்றேன்'' என்று சட்டமன்றத்திலே 89-ஆம் ஆண்டு சொன்னேன்.

பெண்களுக்குச் சொத்திலே சமஉரிமை மாத்திரம் அல்ல; இன்றைக்குக் கடந்த ஆறு அல்லது ஏழு மாதங்களுக்கு முன்பு நடந்து முடிந்த, இந்த அரசு நடத்திய உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் – மாநகராட்சி மன்றம், நகராட்சி மன்றம், ஒன்றியங்கள், வேறு பல ஊராட்சி மன்றங்கள் இங்கெல்லாம் நடைபெற்ற தேர்தலில் பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு செய்த ஒரே ஆட்சி தி.மு.கழக ஆட்சிதான் என்பதை உங்களுக்கு நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திருச்சியிலே ஒரு பெண் மேயர் (இங்கே சென்னையிலே ஒரு ஆண் மேயர் இருப்பதைப் போல) திருநெல்வேலியிலே ஒரு பெண் மேயர். அந்த அளவிற்குப் பெண்களுக்கு உரிமை வழங்கப்பட்டது. அதுமாத்திரமல்ல; கழக ஆட்சியிலேதான் 89-ஆம் ஆண்டு, திருமணமாகாத பெண்கள் 8-ஆவது வரையிலே படித்திருந்தால் போதும் – படித்து அதிலே பாஸ் பண்ணியிருக்க வேண்டும் என்று கூட அல்ல – படித்திருந்தாலே போதும். அந்த ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு 5000 ரூபாய் நிதி உதவி என்று அறிவித்து, இப்பொழுது நான்காவது முறையாக நான் ஆட்சிக்கு வந்த பிறகு அந்த 5000 ரூபாய் போதாது என்பதற்காக 10,000 ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்து இந்த ஒன்றரை ஆண்டுக் காலத்திலே மாத்திரம், 46,000 தம்பதிகளுக்கு 46 கோடி ரூபாய் செலவிலே திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இது இந்த ஆட்சி.

இதற்கு முன்பிருந்த ஆட்சி எப்படிப்பட்ட ஆட்சி என்பதை நீங்கள் அறிவீர்கள். அதை இங்கே நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் தம்பி பரிதி. இளம்வழுதி விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார். வளர்ப்பு மகன் கல்யாணத்திற்கு நூறு கோடி ரூபாய் செலவழித்தார் என்று சொன்னார்கள். நாம்கூட சொல்ல

வில்லை. அவர்களே, அவர்களுடைய சொந்த டி.வி.யிலே ''வரலாறு காணாத திருமணம்'' என்று வருணித்தார்கள். ''உலகத்திலே இதுவரை இப்படி ஒரு திருமணம் நடக்கவுமில்லை. இனிமேல் நடக்கப் போவதுமில்லை'' என்று அவர்களுடைய டி.வி.யிலேயே ஒளிபரப்பினார்கள். இது ஊரறிந்த உண்மை.

ஆனால் என்ன ஆனது? அடுத்த வருடம் அந்த அம்மையார் சொல்லிவிட்டார்? ''அவர் என்னுடைய வளர்ப்பு மகனே அல்ல'' என்று! வளர்ப்பு மகன் சுதாகரனுக்குத் திருமணம் என்று பத்திரிகை அடித்து, இங்கே இருக்கின்ற பாமர மக்களுக்கு மாத்திரமல்ல; பாரதப் பிரதமருக்கு, ஜனாதிபதிக்கு எல்லாம் கொடுத்து விட்டு இங்கே அமர்க்களமாகத் திருமணத்தை நடத்தி முடித்துவிட்டு, ஓராண்டு கழித்துச் சொல்கிறார்கள், ''அவன் வளர்ப்பு மகனே அல்ல'' என்று. ஓராண்டுக்கு முன்பு சொன்னதை, அடுத்த ஆண்டு மாற்றிக் கொள்ளக் கூடிய அவ்வளவு சாமர்த்தியசாலி உலகத்திலேயே ஜெயலலிதாவைத் தவிர வேறு யாருமே இருக்க முடியாது. ஒரு நாளைக்கு உயிர்த்தோழி என்பார்கள். அடுத்த நாள், ''தோழி அல்ல, உடன்பிறவாச் சகோதரி'' என்பார்கள். ''அவரை விட்டு என்னால் பிரிந்திருக்க முடியாது'' என்பார்கள். சில மாஜி மந்திரிகள் எல்லாம் போய் கேட்டார்கள்; ''அம்மா அவர்களால்தானே உங்களுக்குக் கெட்ட பெயர். கொஞ்சம் அவர்களை விட்டுப் பிரிந்து இருங்களேன்'' என்று கேட்டார்கள். அந்த அம்மா திருப்பிக் கேட்டார்கள்; ''நீ உன் மனைவியை விட்டுப் பிரிந்திருப்பாயா?'' என்று! தடாலடிக் கேள்வி, அதிரடிக் கேள்வி! அசந்து போய் விட்டார்கள் எல்லா அமைச்சர்களும்! ''உன்னால் எப்படி உனது மனைவியை விட்டுப் பிரிந்திருக்க முடியாதோ அதைப்போல நான் சசிகலாவை விட்டுப் பிரிந்திருக்க முடியாது'' என்று ஒரே

வார்த்தையிலே பதிலளித்து – அவர்களை எல்லாம் விரட்டிய பெருமாட்டிதான் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா.

அவருடைய ஆட்சியிலே நடைபெற்ற ஊழல்களை எல்லாம் நீங்கள் அறிவீர்கள். ஒவ்வொன்றாகச் சொல்ல நான் விரும்பவில்லை. உதாரணத்திற்கு ஒன்றை மாத்திரம் சொல்கிறேன், நீங்கள் புரிந்து கொள்ளுங்கள்.

என் மீதும், சிதம்பரத்தின் மீதும் அந்த அம்மாவுக்கு ரொம்ப கோபம். மறுபடியும் அந்த அம்மா ஆட்சிக்கு வருவார்களாம். என்னையும், சிதம்பரத்தையும், மூப்பனாரையும் கூண்டில் நிறுத்துவார்களாம். விசாரணை செய்வார்களாம். தண்டிப்பார்களாம். என்னவோ, இவர்களே நீதிபதிகள் மாதிரி, எல்லாம் இப்பொழுதே சொல்லி விட்டார்கள்.

சிதம்பரத்தின் மீது என்ன கோபம் தெரியுமா? இந்த அம்மாவிற்கு மூன்று லட்சம் அமெரிக்க டாலர் வெளி நாட்டிலிருந்து வந்தது. மூன்று லட்சம் டாலர் என்றால், நம்முடைய இந்தியப் பணத்திற்கு 1 கோடி ரூபாய். இதைக் கண்டுபிடித்து விட்டார் சிதம்பரம். அதிகாரிகளை விசாரிக்கச் சொன்னார்; ''பணம் எங்கே என்று கேளுங்கள்'' என்று! அதிகாரிகள் வந்து கேட்டார்கள். ''மூன்று லட்சம் டாலர் வந்ததா?'' என்று. ''ஆமாம் வந்தது'' என்றார். ''இல்லை'' என்று சொல்ல முடியாது – ஏன் என்றால், தனது பெயரிலேயே இந்த அம்மா வங்கியில் போட்டிருக்கிறார். அதனால், 'இல்லை' என்று சொல்ல முடியவில்லை. ''வந்தது'' என்றார். ''யார் அனுப்பியது?'' என்று கேட்டார்கள். ''தெரியாது'' என்றார்.

தெரியாத ஒருவர் அமெரிக்காவில் இருந்து அம்மையார் ஜெயலலிதாவிற்கு ஒரு கோடி ரூபாய்

அனுப்புகிறார். தெரியாதவர். அட்ரஸ் தெரியாதவன் அனுப்புகிறான். தெருவில் போகிறவன் அனுப்புகிறான், ஒரு கோடி ரூபாயை!

''என்ன செய்தீர்கள்?'' என்றால், ''வங்கியில் போட்டேன்'' என்றார். ''ஏன் போட்டீர்கள்? தெரியாத ஒருவர் அனுப்பும்போது, அதை நீங்கள் அவருக்கே திருப்பி அனுப்ப வேண்டியதுதானே?'' என்று கேட்டார்கள். ''அனுப்பியவர் முகவரி தெரியவில்லை. ஆகவே உடனே ஆடிட்டரைக் கூப்பிட்டுக் கேட்டேன். 'என்ன செய்யலாம்?' என்று. ஆடிட்டரிடம், ''இப்படி ஒரு கோடி ரூபாய் வந்திருக்கிறது. யார் அனுப்பியது என்று தெரியவில்லை, என்ன செய்வது தெரியவில்லை'' என்று கேட்டேன். ஆடிட்டர் சொன்னார்; உங்கள் பெயரிலேயே பாங்கில் போட்டுக் கொள்ளுங்கள், என்று சொன்னார்'' என்கிறார் ஜெயலலிதா. ஆடிட்டரை கூப்பிட்டு கேட்டுத் தெரிந்து கொண்டு வங்கியிலேயே போட்டுக் கொண்டார்களாம். கிராமத்திலே சொல்வார்கள்; ''ஒண்ணும் தெரியாத பாப்பா, போட்டுக் கிட்டாளாம் தாழ்ப்பாள்'' என்று அந்த மாதிரி, இந்த அம்மா தன் பெயரிலேயே போட்டுக் கொண்டாராம்.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். இது கல்யாணம். இங்கே அ.தி.மு.க.வினரும் வந்திருப்பார்கள். பரசுராமன், அவர்களைக் கூட அழைத்திருக்கக் கூடும். தேர்தல் நேரத்தில் எல்லோரையும் அழைத்திருப்பார். அவர்கள் கூட வந்திருக்கலாம்.

அ.தி.மு.க.வைச் சேர்ந்த தம்பிகள் யோசித்துப் பார்க்க வேண்டும். சரி, ஒரு கோடி ரூபாய் வந்தது. என்ன செய்வது என்று தெரியாமல் ஆடிட்டரைக் கூப்பிட்டுக் கேட்டார். அதற்குப் பதிலாக அந்த ஒரு கோடி ரூபாயை கட்சி நிதியிலேயே ஏன் போட்டிருக்கக் கூடாது? யோசித்துப் பார்த்தீர்களா? அந்த அம்மையார் முதல்வராக

இருந்தபோதுதானே இந்தப் பணம் வந்தது? முதலமைச்சர் நிவாரண நிதியிலே ஏன் அந்தப் பணத்தைப் போட்டிருக்கக் கூடாது. கட்சி நிதி ஞாபகத்திற்கு வரவில்லை. முதலமைச்சர் நிவாரண நிதி மூளையில் படவில்லை. சொந்தத்தில், பாங்கில் தனது பெயரிலேயே அந்தப் பணத்தைப் போட்டுக் கொண்டிருக்கிறார்.

இப்படிப்பட்ட ஊழல்கள் ஒன்றல்ல, இரண்டல்ல; பலகோடி ரூபாய்க்கு ஐந்தாண்டு கால ஆட்சியில் நடைபெற்றிருக்கின்றது. அவைகளை எல்லாம் களைந்து விட்டுத்தான், 96-ஆம் ஆண்டு தேர்தலில் தி.மு.கழகத்திற்கும், த.மா.க.விற்கும் மற்ற தோழமைக் கட்சிகளுக்கும் உங்களுடைய ஆதரவைத் தந்து வெற்றி பெற வைத்தீர்கள். உங்களுடைய கட்டளைப்படிதான் நாங்கள், அந்த அமைச்சரையும் மற்ற அமைச்சாகளையும் நீதிமன்றத்திலே நிறுத்தி விசாரித்துக் கொண்டிருக்கிறோம். அந்த விசாரணை தொடர வேண்டும் என்பதற்காகவும், மத்தியிலே ஒரு நல்ல ஆட்சி இருந்தது – ஒன்றரை ஆண்டுக் காலத்திலே அந்த ஆட்சி கவிழ்க்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. அந்த நல்லாட்சி மீண்டும் அங்கே மலரவும், உங்களுடைய மேலான வாழ்த்துக்களை மணமக்களுக்கு அளியுங்கள். வாக்குகளை மாறனுக்கு வழங்குங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

புரசை கோபாலரத்தினம் இல்ல
மணவிழாவில் ஆற்றிய உரை

8

முத்தமிழ்ப் பேரவை விழா

இன்று 23-ஆவது ஆண்டு விழா நிகழ்ச்சியை இந்த முத்தமிழ்ப் பேரவை நடத்திக் கொண்டிருக்கின்றது. 23 ஆண்டுகளாக நானும் பேரவையின் தொடக்க நிகழ்ச்சி களில் கலந்து கொண்டு, தொடங்கி வைக்கின்ற வாய்ப்பினைப் பெற்று வருகிறேன். ஆனால் இந்த 23 ஆண்டுக் காலத்தில் எத்தனை மேதைகளை, இந்த மன்றத்திலே நான் கண்டேன் என்பதும், அவர்கள் எல்லாம் முன் வரிசையிலே அமர்ந்திருந்த காட்சி இன்னும் என் மனக்கண் முன்னால் நிழலாடிக் கொண்டி ருக்கின்றது என்பதும் மறக்க முடியாதவை. இங்கே சொல்லாமல் மறைக்க முடியாதவை.

முன் வரிசையிலே இந்த முத்தமிழ் பேரவையை ஊக்குவிப்பதற்காக அமர்ந்திருந்த பெரியவர்களில் ஒருவர் வழுவூர் ராமையா பிள்ளை அவர்கள். இந்த 23 ஆண்டுக் காலத்தில் நாம் இழந்த செல்வங்களிலே ஒரு செல்வம் வழுவூர் ராமையா பிள்ளை ஆவார்கள். இந்தப் பேரவை தொடங்குவதற்கு முனைப்பான முயற்சிகளை மேற்கொண்ட என்னுடைய அன்பிற்குரியவர் குளிக்கரை பிச்சையப்பா பிள்ளை அவர்கள். இந்த மன்ற விழாக்களில் தொடர்ந்து இருந்து விழா நடைபெற முயற்சிகளைச் செய்தவர் சிதம்பரம் சி.எஸ். ஜெயராமன் அவர்கள், திருவீழிமழலையார் அவர்கள்.

இவர்கள் எல்லாம் இந்த முன் வரிசையில் அமர்ந்திருந்த காட்சியை நான் கண்டிருக்கிறேன். மதுரை சோமு அவர்கள், சீர்காழி அவர்கள். இவர்கள் எல்லாம் இருந்த அந்த முன்வரிசை இன்றைக்கு அவர்கள் இல்லாமல் காணப்பட்டாலுங்கூட, அவர்களின் வாரிசுகளும், அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட மேதைகளும் இசைவாணர்களும் அவர்கள் விட்ட இடத்திலிருந்து இந்தக் கலைப் பணியைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள், என்ற அந்தப் பெருமையைக் கண்டு நான் சோகத்திலும் ஒரு பூரிப்புக் கொள்கிறேன்.

இந்த 23 ஆண்டுக் காலத்திலே இந்த ரசிக ரஞ்சனி சபாவில் இந்தப் பேரவை சார்பாக நடைபெற்றுள்ள இசை நிகழ்ச்சிகள், நாட்டிய நிகழ்ச்சிகள், வேறு பல கலை நிகழ்ச்சிகள் – இவைகள் எல்லாம் இசைத்துறைக்கு குறிப்பாக தமிழிசைத்துறைக்கு – ஒரு புதிய ஊக்கத்தை உற்சாகத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

அப்படிப்பட்ட இந்தப் பேரவையில் இன்றைக்கு நம்முடைய அன்பிற்கினிய மூப்பனார் அவர்கள் தலைமையில் நடைபெறுகின்ற இந்த விழாவில் பந்தநல்லூர் பி. மகாலிங்கம் பிள்ளை இராஜரத்னா விருதையும், சாலமன் பாப்பையா அவர்கள் இயற்செல்வம் விருதையும், சாருமதி ராமச்சந்திரன் அவர்கள் இசைச் செல்வம் விருதையும், எம்.எஸ். இராமசாமி அவர்கள் நாட்டியச் செல்வம் விருதையும், திருப்பனந்தாள் எஸ். பாலசுப்பிரமணியம் அவர்கள் நாதஸ்வர செல்வம் விருதையும், கே.பி. சிங்காரம் பிள்ளை அவர்கள் மிருதங்கச் செல்வம் விருதையும் பெற்றிருக்கிறார்கள்.

இவர்கள் ஒவ்வொருவரும் இந்த விருதுகளைப் பெறுவதற்கு எவ்வளவு தகுதி வாய்ந்தவர்கள் என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். மகாலிங்கம் பிள்ளை அவர்கள் நாதஸ்வர மேதை, காலஞ்சென்ற டி.என். இராஜரெத்தினம் பிள்ளை அவர்களை நினைவு கூறும் வகையில் வழங்கப்பட்டு வருகின்ற விருதைப் பெறுவதற்கு மிகவும் பொருத்தமானவர். அவர்கள் பந்தநல்லூர் பரத நாட்டிய ஆசிரியர் மாமேதை மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் வாய்ப்பாட்டு பயிற்சி பெற்றவர். இந்தக் கலையில் தனக்கென ஒரு பாணியை அமைத்துக் கொண்டு பல்வேறு இசை மன்றங்களிலே நாதஸ்வர விருந்து அளித்து வருகிறார். அவருடைய புகழுக்கு மேலும் ஒரு மகுடம் வைப்பதைப் போல ராஜரத்னா விருது இன்று வழங்கப்பட்டுள்ளது.

இப்படியொரு விருது வழங்கப்பட வேண்டுமென்ற கருத்தை இந்த முத்தமிழ்ப் பேரவையில் நான் சொல்வதற்கு முன்பு – இராஜரெத்னம் பிள்ளை அவர்கள் மறைந்த ஆண்டு – சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையிலே இதே மன்றத்தில் இராஜரெத்தினம் பிள்ளை அவர்களின் படத்திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது சி. சுப்பிரமணியம் அவர்கள் தமிழ்நாட்டு அமைச்சர்களில் ஒருவர். அந்த நிகழ்ச்சியிலே நானும் கலந்து கொண்டு உரையாற்றினேன், மறைந்த இராஜரெத்தினம் அவர்களின் புகழைப் போற்றி! அப்போது சி.எஸ். அவர்களிடம் இந்த வேண்டுகோளை வைத்தேன். இப்படி ஒரு பட்டம், நல்ல நாதஸ்வர வித்வான்களுக்கு இராஜரெத்னா விருது வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். ஆனால் என்ன காரணத்தாலோ அது நிறைவேற்றப்படவில்லை. நானே வந்து அறிவித்து அது வழங்கப்பட வேண்டு

மென்று இருந்திருக்கிறது போலும் (கைதட்டல்). எனவே நானே முதலமைச்சராகப் பொறுப் பேற்ற பிறகு, முத்தமிழ்ப் பேரவை விழாவில் இராஜரத்னா விருதை அறிவித்து, பல ஆண்டு காலமாக அந்த விருது பல வித்வான்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்று மகாலிங்கம் பிள்ளை அவர்கள் அந்த விருதைப் பெற்றிருக்கிறார். அவரை வாழ்த்துகிறேன்; பாராட்டுகிறேன்.

இயற்செல்வம் விருதைப் பெற்றிருப்பவர் சாலமன் பாப்பையா, இந்த விருது இதற்கு முன்பே கூட இவருக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும். தாமதமாக வழங்கப் படுவதற்காக நான் இந்த பேரவை சார்பாக அவரிடம் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் சாலமன் பாப்பையாவை அறியாதவர்கள் யாருமே தமிழ்நாட்டில் இருக்க முடியாது.

ஒன்றை உங்களுக்குக் கூற விரும்புகிறேன். காலையில் 5-30 மணிக்கு நான் எழுந்து – 6-30 மணிக்கெல்லாம் என்னுடைய காலை உலா (வாக்கிங் என்பார்களே) இதனை முடித்து விட்டு வீடு திரும்பி, முரசொலி இதழுக்கு உடன்பிறப்பு கடிதம் எழுதுவதற்கு உட்காருவேன். அப்போது ''சன் டி.வி.''யில் திருக்குறள் ஒலிக்கும். எழுதுகிற நேரத்தில் பக்கத்திலே எந்த ஒலியும் கேட்கக் கூடாது என்பார்கள். சில எழுத்தாளர்கள் கூறுவார்களே – அப்படியல்ல நான். எந்த ஒலி கேட்டுக் கொண்டிருந்தாலும், எழுதத் தொடங்கி விட்டால் அந்த ஒலியைப் பற்றிக் கவலைப்படாமல் எழுதிக் கொண்டி ருப்பவன். ஆனால் சில ஒலிகள் என்னுடைய எழுத்திற்கு ஊக்கம் தருகின்ற ஒலிகளாக அமையும். அதுபோல ஒவ்வொரு நாளும் சாலமன் பாப்பையா அவர்களின் திருக்குறள் ஒலி – நான் எழுதுகிற நேரத்தில் எழுதுவதற்கு ஊக்கமாக அமைந்திருக்கின்றது. (கைதட்டல்) நான் ஏதோ இந்த அவையிலே அவரைச் சிறப்பிக்க வேண்டுமென்ப

தற்காகக் கூறவில்லை. என்னுடைய துணைவியாரும், வீட்டாரும் வந்திருக்கிறார்கள். அவர்களைக் கேட்டு, சாலமன் பாப்பையா நான் உண்மையிலேயே இதைச் சொன்னேனா, உபச்சாரத்திற்காகச் சொன்னேனா என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

அந்த அளவிற்கு ஒவ்வொரு நாளும் திருக்குறள். திருக்குறளுக்கு பலரும் உரையெழுதியிருக்கிறார்கள். நானும் கூட 1330 திருக்குறள் பாக்களுக்கும் உரையெழுதியிருக்கிறேன். குறளோவியம் தீட்டியிருக்கிறேன். 200, 300 குறள்பாக்களுக்கு சிறு சிறு கதைகளாக வடித்து, குறளை எளிதில் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகக் குறளோவியம் எழுதியிருக்கிறேன். ஆனால் எல்லாவற்றையும் விட – மனதில் பதியத்தக்க வகையில் சிறு குழந்தைகளும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் திருக்குறளை ஒவ்வொரு நாளும் – அவர் சொல்கின்ற பதவுரையில் எனக்கும் அவருக்கும் கூட கருத்து வேறுபாடு இருக்கலாம். வேறுபாடே தவிர முரண்பாடு அல்ல. வேறுபாடு என்பது வேறு; முரண்பாடு என்பது வேறு. முரண்பாடு என்பது எண்ணெயும் தண்ணீரும் போன்றது. வேறுபாடு என்பது பாலும் தண்ணீரும் போன்றது. பாலும் தண்ணீரும் வேறு வேறாக இருந்தாலும், ஊற்றி விட்டால் இரண்டும் ஒன்றாகக் கலந்து விடும். நான் 'சென்னை' பாலைச் சொல்ல மாட்டேன். (பலத்த சிரிப்பு) அதைப் போல முரண்பாடு என்பது – எண்ணெயையும், தண்ணீரையும் வைத்து எவ்வளவுதான் நீங்கள் சேர்க்க நினைத்தாலும் அது தனித்தனியாகத்தான் நிற்கும். அப்படி முரண்பாடு இல்லாமல் சற்று வேறுபாடு இருந்தாலும் கூட – கேட்பதற்கு இனிமையாக – எவ்வளவு இனிமையாக குறளைச் சொல்கிறார். அதற்கான உரையைத் தருகிறார் என்பதை நான் எண்ணியெண்ணி வியந்தபடியே எழுதிக்

கொண்டிருப்பேன். அப்படிப்பட்ட ஓர் உற்சாகத்தை அவர் எனக்குத் தந்து கொண்டிருக்கிறார். அவர் திருக்குறள் 1330 பாக்களையும் முடித்த பிறகும், மீண்டும் ஒரு முறை வரிசையாகத் தொடர வேண்டும் – நான் எழுதுவதற்காகவாவது அவர் தொடர வேண்டும் (கைதட்டல்) என்று கேட்டுக் கொள்கிறேன்.

இசைச் செல்வம் விருதினை திருமதி சாருமதி ராமச்சந்திரன் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் காலஞ்சென்ற இசை மேதை எம்.எல். வசந்தகுமாரி யினுடைய சிறந்த மாணவர்களிலே ஒருவர். நாதஸ்வர செல்வம் விருது பெறும் திருப்பனந்தாள் பாலசுப்பிர மணியன் அவர்கள் திருப்பனந்தாள் காசி மடத்தின் ஆஸ்தான கலைஞராகத் திகழ்ந்த தவில் வித்வான் சீனிவாசன் அவர்களுடைய மகனாவார். சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் இசை நிகழ்ச்சிகளை நடத்தியவர். மயிலை கபாலீஸ்வரர் கோவில் ஆஸ்தான வித்வானாக இப்போது திகழ்கிறார். அவர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

நாட்டியச் செல்வம் விருது பெறும் எம்.எஸ். இராமசாமிப் பிள்ளை வழுவூர் ராமையா பிள்ளையிடம் குருகுலவாசம் செய்து, பரத நாட்டியக் கலையில் சிறந்த கலைஞராகப் புகழ்பெற்றவர். திருமதி ஈ.வி. சரோஜா, பத்மா சுப்பிரமணியம், ஹேமமாலினி முதலியோர் இவருடைய நட்டுவாங்கத்துக்கு நடனமாடியவர்கள். மதுரை வீரன், பாக்கியவதி, கொஞ்சும்சலங்கை, மனம் ஒரு குரங்கு, துளி விஷம் ஆகிய படங்களுக்குப் பரத நாட்டிய ஆசிரியராக இவர் பணியாற்றியிருக்கிறார். அவரையும் நான் பாராட்டுகிறேன்.

மிருதங்கச் செல்வம் விருது பெறும் கும்பகோணம் சிங்காரம் பிள்ளை அவர்கள் மிருதங்க மேதை குடந்தை

அழகநம்பியா பிள்ளையிடம் குருகுலவாசம் செய்து மிருதங்கப் பயிற்சியைப் பெற்றவர். திருவாவடுதுறை ராஜரெத்தினம் பிள்ளைக்கும், திருவெண்காடு டி.பி. சுப்பிரமணிய பிள்ளைக்கும் தம்புரா சுருதியுடன் மிருதங்கம் வாசித்துப் புகழ் பெற்றவர் இவர். விருது பெற்ற அத்தனை பேரும் இந்த விருதுக்கு உரியவர்கள் என்ற முறையில் அவர்களை நான் வாழ்த்தவும் பாராட்டவும் மீண்டும் மீண்டும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே இந்த நிகழ்ச்சியில் நம்முடைய நண்பர் டெக்கான் மூர்த்தி அவர்கள் ஒரு இலட்சம் ரூபாயை இங்கே கட்டிட நிதிக்காக வழங்கியிருக்கிறார்கள். இது ஒரு பணக்காரப் பேரவை அல்ல. சாதாரணமான, சாமான்யமான ஒரு பேரவைதான். 23 ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் நான் வருகிற நேரத்தில் எல்லாம் ஒரு கட்டிடம் தேவை என்று சொல்லி வருகிறார்கள். நானும் பார்க்கலாம், பார்க்கலாம் என்று சொல்கிறேன். நீங்கள் முயற்சி மேற்கொள்ளுங்கள். என்னால் முடிந்ததைச் செய்கிறேன் – துணை நிற்கிறேன் என்று நானும் சொல்லி வருகிறேன். 23 ஆண்டு காலமாக அவர்கள் எந்த முயற்சியிலும் ஈடுபடவில்லை. ஏதோ இந்த ஆண்டு முயற்சியில் ஈடுபட்டு, அரசு இந்தப் பேரவைக்காக ஓர் இடத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு ஆவன செய்யப்படும் என்று நான் உறுதியளித்திருக்கிறேன். (கைதட்டல்)

அந்த இடம் விரைவில் ஒதுக்கப்படும் (பலத்த கைதட்டல்). அதிலே கட்டிடம் எழும்புவதற்கான அந்தப் பணியை நிறைவேற்ற நம்முடைய டெக்கான் அவர்கள் இங்கே ஒரு இலட்சம் ரூபாயை நிதியாக வழங்கி யிருக்கிறார். நான் கூட எண்ணினேன் – அடுத்துப் பேசுகின்ற நம்முடைய மூப்பனார் அவர்கள் – அவருக்கு போட்டியாக (பலத்த சிரிப்பு) (மூப்பனார் அவர்கள் எது

வேண்டுமென்றாலும் எனக்காக அறிவியுங்கள் என்று கூறுகிறார்) எவ்வளவு வேண்டுமென்றாலும் அறிவிக்கும் படி மூப்பனார் கூறுகிறார். தேர்தல் நேரம். அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. (பலத்த கைதட்டல்) அவரும் ஒரு இலட்ச ரூபாய் வழங்குகிறார் (பலத்த கைதட்டல்) என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவிக்கிறேன்.

அவர்கள் இருவரும் வழங்குகின்ற காரணத்தால் முதலமைச்சர் நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று நான் இங்கே (பலத்த கைதட்டல்) கூறிக் கொள்கிறேன்.

மூப்பனார் அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். இராஜரெத்தினம் அவர்களுடைய நூற்றாண்டு விழா இந்த ஆண்டு என்று குறிப்பிட்டு, அதனைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று சொன்னார்கள். அந்த விழாவைக் கொண்டாடுகின்ற குழுவிற்குத் தலைவராக இருக்கக் கூடிய எல்லாவிதமான பொருத்தமும் உடையவர் மூப்பனார் அவர்கள்தான் (கைதட்டல்) எனவே இராஜரெத்தினம் அவர்களுடைய நூற்றாண்டு விழா குழுத் தலைவராக மூப்பனார் அவர்கள் இருந்து இனிதாக எழுச்சியோடு ஏற்றத்தோடு இசை உலகிற்கு ஒரு புதிய தெம்பு உருவாகின்ற வகையிலே அவர்கள் அந்தக் குழுவின் தலைமையை ஏற்றுக் கொண்டு பணியாற்ற வேண்டுமென்று உங்கள் அனைவரின் சார்பாகவும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

குன்றக்குடி அடிகளாருக்குப் பிறகு அவர் பேசிய இனிய தமிழ் என்னவாகுமோ என்று ஏங்கியிருந்த நமக்கெல்லாம் ஓர் ஆறுதலாக குன்றக்குடி ஆதீனத்தி லிருந்து இங்கே வந்து உரையாற்றிய இளைய குன்றக்குடி அடிகளார் அவர்கள் – குன்றக்குடியின் தமிழ் குன்றி விடாது என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகையிலே ஒரு

அருமையான சொற்பொழிவை இங்கே நிகழ்த்தியிருக் கிறார்கள். எனவே ஒரு இசை நிகழ்ச்சியே இங்கே தேவையில்லை என்கின்ற அளவிற்கு அவருடைய தமிழ் இங்கே கொஞ்சி விளையாடியது. (கைதட்டல்) அவருக்கு நான் என்னுடைய பாராட்டுதல்களையும், வாழ்த்துக் களையும் தெரிவித்து, முத்தமிழ்ப் பேரவை இன்னும் தன்னுடைய தொண்டில் சிறந்து விளங்க வேண்டு மென்ற என்னுடைய விழைவையும் எடுத்துக்காட்டி இந்த அளவில் அமைகிறேன்.

3-2-98 அன்று முத்தமிழ்ப் பேரவை விழாவில் ஆற்றிய உரை

9

புத்தாண்டு இசைவிழா

இந்த விழாவிலே எஸ்.பி. பாலசுப்ரமணியம் கவிஞர் வைரமுத்துவின் வரிகளான "இனிய மாலைப் பொழுது" என்று பாடினாரே – அந்த இனிய மாலைப் பொழுதின் இன்பத்தை நாமெல்லாம் இந்த மன்றத்திலே அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். செஞ்சுரி புரொடக் ஷன்ஸ் நிறுவனத்தின் மூலம் இசை மேதைகளை – மூத்த கலையுலகப் பெருமக்களை கௌரவிக்கின்ற வகையிலே இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு – இதிலே கலந்து கொள்கின்ற வாய்ப்பை எனக்கு வழங்கியுள்ளவர்களுக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் புத்தாண்டு வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

புத்தாண்டு வாழ்த்துக்கள் அவர்களுக்கு மாத்திர மல்ல – தமிழ்நாட்டு மக்களுக்கு – குறிப்பாக இந்த அரங்கில் நிரம்பி வழிந்து அமர்ந்திருக்கின்ற உங்கள் அனைவருக்கும் என் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு பெரிய வியப்புக்குரிய செய்தி, நிகழ்ச்சியாக இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பலருக்கு ஒன்றுபட்ட கருத்துக்கள் இருப்பதென்பது இயலாத ஒன்று என்பது இயற்கை. இரண்டு டாக்டர்கள் ஒரே கருத்தைக் கொண்டிருக்கமாட்டார்கள். இரண்டு புலவர்கள் ஒரே கருத்தைக் கொண்டிருக்க மாட்டார்கள்.

இதற்கெல்லாம் மேலாக இரண்டு சங்கீத வித்வான்கள் ஒரே கருத்தைக் கொண்டிருந்தால் அது உலக மகா ஆச்சரியம். ஆனால் இந்த மேடையில் பல இசைவாணர்கள், இசை மேதைகள் ஒன்றாக அமர்ந்து வழக்கத்திலே இருந்த அந்த நிலைமைக்கு இந்த விழா மூலமாக விடை கொடுத்து அனுப்பியிருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது நான் பெருமகிழ்ச்சி யடைகிறேன்.

மெல்லிசை மன்னர்களிலே ஒருவரான தம்பி விஸ்வநாதன், இசைஞானி இளையராஜா, மெல்லிசை மன்னர்களிலே மற்றொருவரான ராமமூர்த்தி மற்றும் இசை அமைப்பாளர்கள், இசை அமைப்பாளர்களிலேயே ஒரு காலத்தில் புகழ்பெற்று விளங்கியவர்கள் – இன்றைக்கு அவர்கள் முதுமை நிலையிலே இருந்தாலும், அவர்கள் இசையமைத்த பாடல்கள் இளமையோடு தமிழ்நாட்டிலே உலவிக் கொண்டிருக்கின்ற அந்தக் காட் சியைக் கண்டும், கேட்டும் இன்புற்றிருக்கக் கூடியவர்கள் எல்லாம் இங்கே அமர்ந்திருக்கின்றார்கள்.

தம்பி விஸ்வநாதன் ஒரு நிகழ்ச்சியில் குறிப்பிட்டார். ஒரு கட்டுரையிலும் மறவாமல் குறிப்பிட்டிருக்கின்றார்.

அறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு நான் 75-க்கு முன்பு முதலமைச்சராகப் பொறுப் பேற்றிருந்த நேரத்தில் நம்முடைய அரசு விழாக்களிலே பாடுவதற்குத் தமிழ்த்தாய் வாழ்த்து ஒன்று தேவை என்று தேடிப்பிடித்து மனோன்மணியம் சுந்தரனார் எழுதிய "நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும் – சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டமதில்" என்கின்ற அந்தப் பாட்டைத் தேடித் தந்து, விஸ்வநாதன் அவர்களி டத்திலே கொடுத்து இதற்கு மெட்டமைத்துத் தர வேண்டு மென்று நான் கேட்டபோது; 26 விதமான பண்களை

அதாவது மெட்டுக்களை அவர்கள் அமைத்துக் கொடுத்தார்கள். அதிலே இறுதியாக இந்தப் பண்தான் நன்றாக இருக்கிறது என்று தேர்ந்தெடுத்து அதைப் பாடியவர்கள் – இங்கே வீற்றிருக்கின்ற மறைந்த தியாகராஜ பாகவதரை என்றென்றும் நமக்கு நினை வூட்டிக் கொண்டிருக்கின்ற டி.எம். சௌந்தரராஜன் அவர்களும், சுசீலா அவர்களும் ஆவார்கள்.

அவர்களுடைய காலத்திற்குப் பிறகும், மெட்ட மைத்துக் கொடுத்த விஸ்வநாதன் ராமமூர்த்தி அவர்களின் காலத்திற்குப் பிறகும், அந்தப் பாட்டு தமிழ்த்தாய் வாழ்த்தாக அமைய வேண்டுமென்று விரும்பிய என்னுடைய காலத்திற்குப் பிறகும் – எக்காலத்திலும் அந்தப் பாடல் முழங்கும் போதெல்லாம் நாங்கள் சாகாவரம் பெற்றவர்களாக அந்தப் பாட்டின் மூலம் தமிழ்நாட்டு மக்களுடைய உள்ளத்திலே ஒலித்துக் கொண்டிருப்போம். அத்தகைய அற்புதமான பண்ணை அமைத்துத் தந்த விசுவநாதன் ராமமூர்த்தி ஆகியோர் இந்த விழாவிலே முக்கியமான பொறுப்பேற்று பல கலைஞர்களை கௌரவிக்கின்ற இனிய நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

அதிலும் குறிப்பாக நவ்ஷத் அவர்கள் இங்கே அழைக்கப்பட்டிருப்பது மிகச் சிறப்புடைய ஒன்றாகும். நவ்ஷத் கலந்து கொள்கின்ற நிகழ்ச்சியிலே நான் கலந்து கொள்கிறேன்.

இங்கே நம்முடைய ஜேசுதாஸ் அவர்கள் ஓர் இந்திப் பாடலை பாடச் செல்லும்போது தேவையில்லாமல் என்னிடத்திலே முன்கூட்டியே ஒரு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள், நம்முடைய இசைவாணர்கள். அந்த மன்னிப்புத் தேவை இல்லை. நான் இந்தித் திணிப்புக்குத் தான் எதிரியே தவிர (பலத்த கைதட்டல்) இந்தி இசைக்கு அல்ல.

நவ்ஷத் அவர்கள் இந்தி இசையின் மூலம் தமிழ் நாட்டு மக்களை நிரம்பக் கவர்ந்தவர். அந்த இசைப் பாடல்கள் மூலமாகத் தமிழகம் அவரை என்றென்றும் மறவாமல் மனதிலே வைத்திருக்கின்ற அப்படிப்பட்ட பெரியவர் இந்த விழாவிலே கலந்து கொண்டிருக் கின்றார்.

ஒரு மலர் இங்கே வெளியிடப்பட்டது. அந்த மலரை நான் நவ்ஷத் அவர்களுக்கும் தம்பி இளையராஜா அவர்களுக்கும் உங்கள் முன்னிலையிலே வழங்கி யிருக்கிறேன். அந்த மலரை முதலிலேயே என்னிடம் கொடுத்தார்கள். அதிலே ஒரிரு பக்கங்களைப் புரட்டிப் பார்த்தேன். தம்பி விசுவநாதனுடைய வாழ்க்கைச் சரித்திரத்தின் பல பக்கங்கள் அந்த மலரிலே இடம் பெற்றிருக்கின்றது. எவ்வளவு கெட்டிக்காரத் தம்பி விசுவநாதன் என்பதை ஒரு பக்கத்தைப் படித்துப் பார்த்து உணர்ந்து கொண்டேன்.

விசுவநாதனுடைய வயது அப்போது மூன்று. அந்த வயதிலே அவருடைய தந்தை இறந்து விடுகிறார். தந்தை இறந்த சோகத்தில் அவருடைய தாயார், மகன் விசுவநாதனையும் தூக்கிக் கொண்டு, புதுக்கோட்டை யிலே ஒரு குளத்திலே விழுந்து இருவரும் சாகலாம், தற்கொலை செய்து கொள்ளலாம் என்று தாயார் முடிவெடுத்து – விசுவநாதனைத் தூக்கிக் கொண்டு வந்து தூக்கியெறிய முற்பட்டபோது – விசுவநாதன் முடியாது என்று மறுத்து விட்டு – தாயாரைப் பார்த்து – ''என்னைத் தூக்கிப் போட்டு விட்டு நீ போய் விடுவாய். ஆகவே நீ முதலில் விழு, பிறகு நான் விழுகிறேன்'' – என்று சொன்னதாக அவர் எழுதியிருக்கிறார். அவருடைய வரலாற்றில் இருக்கிறது. நான் கூறவில்லை.

நல்லவேளை, தாயார் அந்தப் பேச்சைக் கேட்காமல், அன்றைக்கு விசுவநாதனைத் தூக்கி குளத்திலே போட் டிருந்தால், இன்றைக்கு நமக்கு ஒரு மெல்லிசை மன்னர்

கிடைத்திருக்க மாட்டார். (கைதட்டல்) நமக்கெல்லாம் இசைத் தொண்டாற்றுவதற்காகவே அன்றைக்குத் தம்பி விசுவநாதன் தன்னுடைய தாயாரைப் பார்த்து நான் குளத்திலே விழ மாட்டேன் என்று மறுத்திருக்கிறார் என்பதை எண்ணும்போது நான் இரட்டிப்பு மகிழ்ச்சி கொள்கிறேன். அவரும் அவரைச்சார்ந்த இசை வாணர்கள் பலரும் இந்த மேடையிலே ஒருங்கிணைந்து ஒரு நல்ல மாலை நேரத்தில் நமக்கு ஓர் அருமையான இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக் கின்றார்கள்.

இந்த இசை நிகழ்ச்சியில் நானும் கலந்து கொண்டு அவர்கள் யார் யாரையெல்லாம் மறக்காமல் அவர்களுக் கெல்லாம் தங்களுடைய பாராட்டுக்களையும், தங்களு டைய அன்பையும் செலுத்தியிருக்கிறார்களோ, அவர் களுக்கெல்லாம் அன்பும் மரியாதையும் செலுத்தக் கூடிய இடத்திலே இருப்பவன்தான் நான் என்பதையும் இங்கே உணர்த்தி – பொதுவாக உலகத்தில் முன்னோர்களை, நமக்கு முன்பிருந்த நம்முடைய கலையை வளர்த்தவர் களை, நம்மையெல்லாம் ஆளாக்கியவர்களை மறந்து விடுகின்ற காலம் இந்தக் காலம். இந்தக் காலத்தில் அதுவும் கலையுலகத்தில் அவர்களையெல்லாம் நினைத்துக் கொண்டு அவர்களுக்குச் சிறப்பு செய்கின்ற மனப் பான்மை விசுவிற்கும் அவரோடிருக்கின்ற இசைக் கலைஞர்களுக்கும் ஏற்பட்டதற்காக என்னுடைய பாராட்டுதலை, வாழ்த்துக்களை அவர்களுக்கெல்லாம் தெரிவித்து இந்த இனிய நேரத்தில் உங்களையெல்லாம் சந்திக்கும் வாய்ப்பு பெற்றமைக்காக மகிழ்ச்சியையும் தெரிவித்து இந்த அளவில் உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

14-4-98 அன்று

புத்தாண்டு இசைவிழாவில் ஆற்றிய உரை

10

மதுரை வழக்கறிஞர் சங்க 125-ஆவது ஆண்டுவிழா

என்னை உரையாற்ற அழைக்கும்போது, "அரங்கத்திற்கு உள்ளேயும் எதிர்பார்ப்பு – வெளியிலேயும் எதிர்பார்ப்பு" என்று சுட்டிக்காட்டி அழைத்திருக்கின்றார்கள்.

"எதிர் பார்ப்பு" என்ற சொல்லில் இடையில் சில எழுத்துக்களை எடுத்து விட்டால், 'எதிர்ப்பு' என்று வரும். (கைதட்டல்)

அரங்கத்திற்கு உள்ளேயும் எதிர்ப்பு, வெளியிலேயும் எதிர்ப்பு (கை தட்டல்). நான் முதலமைச்சராக இருக்கிற காரணத்தால் சட்டசபையிலும் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியவன். வெளியிலேயும் ஆங்காங்கு தோன்றுகின்ற எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியவன். இந்த இரண்டு எதிர்ப்புகளையும் சமாளிக்கக் கூடிய ஆற்றலை நீங்கள் எல்லாம் வழங்கியிருக்கிறீர்கள் என்ற அந்தத் தெம்போடு உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

மதுரை பார் அசோசியேஷன் – வழக்கறிஞர் சங்கம் 1915-ஆம் ஆண்டு – வரவேற்புரையிலே எடுத்துக் காட்டியதைப்போல பதிவு செய்யப்பட்டது. அப்போது நூறு வழக்கறிஞர்கள்தான் இந்த சங்கத்திலே இடம் பெற்றிருந்திருக்கிறார்கள். ஆனால் இந்த சங்கம் 1872-ஆம் ஆண்டிலே நான்கு பாரிஸ்டர்களையும், ஏறத்தாழ

50 வழக்கறிஞர்களையும் கொண்டு தொடங்கப்பட்டது என்றாலும், தற்போது இந்தச் சங்கத்தில் நாமெல்லாம் மகிழத்தக்க வகையில் – 2500 வழக்கறிஞர்கள் பதிவு செய்திருக்கிறார்கள் என்பதை எண்ணும்பொழுது, நான் பெருமை அடைகிறேன்.

இந்த அளவுக்கு இந்தச் சங்கம் வளர்ச்சி பெற்றி ருக்கிற காரணத்தால்தான் சில முக்கியமான கோரிக்கை களை எல்லாம் நீங்கள் இங்கே வைத்திருக்கிறீர்கள் என்பதையும் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.

அமைச்சர்கள் செல்கிற விழாக்களில் கோரிக்கை இல்லாவிட்டால், அந்த விழா சுவைக்காது என்பதை நீங்களும் அறிவீர்கள். விழாக்களில் கலந்து கொள்கிற நானும் மிக நன்றாக அறிவேன்.

வழக்கறிஞர்களுக்குள்ள பொறுப்பை, நீதிமன்றங் களுக்கு உள்ள பொறுப்பை – விழாத் தலைமை ஏற்றிருக் கின்ற சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அவர்களும், நீதிபதி ராஜா அவர்களும் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

சட்டத்துறை அமைச்சர் ஆலடி அருணா அவர்கள், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு – பக்கத்திலே நடைபெறுகின்ற வழக்கறிஞர்கள் கிளர்ச்சிகளை எல்லாம் சுட்டிக்காட்டாமல் சுட்டிக்காட்டி அவர்கள் எல்லாம் போராட்டத்தைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். அவர் முன் மொழிந்ததை நான் வழி மொழிகிறேன். (கை தட்டல்)

"அது எப்படி? அவர் அமைச்சர்களில் ஒருவர். அவர் முன் மொழிந்ததை முதலமைச்சர் எப்படி வழி மொழியலாம்?" என்று கேட்கலாம். நான்தான் முன் மொழியச் சொல்லி, அதை நான் வழிமொழிகிறேன் என்பதை உங்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன். (கை தட்டல்)

எந்த ஒரு பிரச்சினை ஆனாலும், வழக்கறிஞர் களைப் பொறுத்த வரையில் அவர்கள் போராட்டத் திறமையை நீதிமன்றங்களிலே வாதத்திலே காட்டினால் அதை நான் வரவேற்கக் கூடியவன். எந்தப் பகுதியில் இருந்து, எந்தத் தரப்பில் இருந்து வாதிட்டாலும் – அது அநியாயத்திற்காக வாதிட்டாலும், ஒருவேளை தொழிலின் காரணமாக, தொழிலின் அடிப்படையிலே நியாயமற்ற ஒன்றுக்காக வாதிட்டாலும் அந்த வாதத் திறமையை நான் வெகுவாகப் பாராட்டக் கூடியவன். எனவே அந்தப் போராட்டம் வாதத் திறமையிலே இருக்க வேண்டுமே அல்லாமல், சட்டத்தை வழக்கறிஞர்களே கையில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதை மிகுந்த பணிவன்போடு இந்த விழாவில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதற்காக, ''எங்களுடைய குரலை எப்படித்தான் எதிரொலிப்பது? எங்களுடைய எண்ணங்களை எப்படித்தான் வெளிப்படுத்துவது? அரசாங்கத்தின் கவனத்தை எப்படித்தான் திருப்புவது?'' என்று நீங்கள் கேட்கக் கூடும்.

கவனத்தைத் திருப்ப நடந்து சென்று கொண்டிருக்கும் போது சற்று தொலைவில் இருந்து கைகளைத் தட்டினாலே திரும்பிப் பார்ப்பேன். என் கவனத்தை நீங்கள் ஈர்க்கலாம். அதற்காக என் முதுகிலே தட்டித்தான் கூப்பிட வேண்டும் என்கின்ற அவசியம் இல்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்தப் பிரச்சினை குறித்த உங்களுடைய எண்ணம் ஆனாலும் அதற்காகக் கிளர்ச்சிகள் தேவையில்லை; போராட்டங்கள் தேவையில்லை; ஒரு டெலிபோன் போதும். இன்னும் சொல்லப்போனால் இந்தியாவி லேயே டெலிபோன் மணி அடித்ததும், அதை உதவியாளர்கள் எடுத்துக் கொடுக்காமல் தானே

நேரடியாக எடுத்துக் கொள்ளக் கூடிய ஒரே ஒரு முதல்வர் நான்தான். ஆகவே எந்தப் பிரச்சினையானாலும் என்னிடத்திலே நீங்கள் தொடர்பு கொண்டு பேசலாம்.

எந்த ஊருக்கு நீதிமன்றம் வேண்டும். எந்த ஊரில் நீதிமன்றத்தை எடுக்கக் கூடாது. எந்த ஊரில் நீதிமன்றம் புதிதாகக் கட்ட வேண்டும். இவைகளுக்கெல்லாம் போராடத் தேவையில்லை. பேசுங்கள்; பேச்சுவார்த்தை நடத்துங்கள். இருசாராரையும் அழைத்துப் பேச வேண்டிய நிலைமை எனக்கு ஏற்படலாம். எதிலுமே உங்கள் பக்கம் நியாயம் கிடைக்காவிட்டால் அந்தப் போராட்டத்திற்குத் தலைமை வகிக்க என்னையே அழையுங்கள். நான் வரத் தயாராக இருக்கிறேன் (பலத்த கைதட்டல்) என்பதை உங்களுக்குத் தெரிவிக்க வேண்டியவனாக உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

சட்டத்தை, சட்டத்தின் பயனை வழக்கறிஞர்கள் மூலமாகத்தான் நாம் பெற வேண்டியிருக்கிறது. அதனால் தான் பேரறிஞர் அண்ணா அவர்கள்; ''சட்டம் ஒரு இருட்டறை; அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு. அந்தப் பிரகாசமான விளக்கை சாமான்ய மக்கள் பெற முடிவதில்லை'' என்று குறிப்பிட்டார். அந்தப் பிரகாசமான விளக்கை சாமான்ய மக்களும் பெறக் கூடிய அளவுக்கு தங்களைப் பக்குவப்படுத்திக் கொண்ட வழக்கறிஞர்கள் இன்றைக்குத் தமிழகத்திலே ஏராளம் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட வழக்கறிஞர்களில் பெரும்பாலோர் இந்தச் சங்கத்திலே இடம்பெற்று – இந்தச் சங்கம் 125 ஆண்டு காலமாக வளம் பெற்று, புகழ் பெற்று, புகழ் பெற்ற மனிதர்களையெல்லாம் தமிழகத்திற்கு, இந்தியாவிற்கு அறிமுகப்படுத்தியிருக்கிறது என்பதை எண்ணி நான் பேருவகை கொள்கிறேன்.

பெரிய நிபுணர்களெல்லாம் இந்தச் சங்கத்திலே இருந்து வெளியே வந்தார்கள் என்று இங்கே குறிப்பிட் டார்கள். இன்னும் இங்கே சில மூத்த வழக்கறிஞர்களை யெல்லாம் அழைத்து நானும் நம்முடைய நீதியரசர் லிபரான் அவர்களும், ராஜு அவர்களும் மரியாதை செய்த காட்சிகளை எல்லாம் நீங்கள் கண்டு மகிழ்ச்சி அடைந்தீர்கள். வாழ்த்தினீர்கள். அத்தகைய வழக்கறிஞர் பெருமக்கள் மாத்திரமல்ல; சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்களையும் இங்கே அழைத்து மரியாதை செய்யப்பட்டது. அதையும் நீங்கள் கண்டீர்கள். நானும் பார்த்து மகிழ்ந்தேன்.

அதுமட்டுமல்ல; இந்த வழக்கறிஞர்கள் சங்கத்திலே இடம்பெற்றிருந்த பண்பாளர் தமிழவேள் பி.டி. ராஜன் அவர்கள், சென்னை மாகாணமாக தமிழ் நிலம் விளங்கியபோது நீதிக்கட்சி அரசில் அமைச்சராகத் திகழ்ந்தார். இப்படிப் பல அமைச்சர்களைத் தந்த பெருமைக்குரிய சங்கம் மதுரை வழக்கறிஞர்கள் சங்கம் என்பதை நான் மிகுந்த பூரிப்போடு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

பி.டி. ராஜன் அவர்களுடைய மைந்தர் பி.டி.ஆர். பழனிவேல் ராசன் அவர்களும் இந்தச் சங்கத்திலே இடம் பெற்றவர். அவர் இன்று தமிழக சட்டப்பேரவையின் தலைவராக அமர்ந்திருக்கிறார் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

நண்பர் மாதவன் இங்கே வழக்கறிஞர் சங்கத்திலே இருந்தவர் – தமிழக சட்ட அமைச்சராகக் கழக அரசிலே விளங்கினார்.

ஓ.பி. ராமன் – இங்கே வழக்கறிஞராக இடம் பெற்றிருந்தவர். கழக அரசில் மின்துறை அமைச்சராக இடம் பெற்றிருந்தவர். தம்பி பொன் முத்துராமலிங்கம் இந்த வழக்கறிஞர் சங்கத்திலே இடம்பெற்றிருந்தவர் – கழக அரசில் உணவு அமைச்சராக, செய்தித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தவர்.

அவ்வாறு அ.தி.மு.க. அரசில் சத்தியமூர்த்தி அமைச்சராகப் பணியாற்றி உள்ளார். அவரும் இந்த வழக்கறிஞர் சங்கத்திலே இருந்தவர். சந்தோஷம் தமிழக சட்டப்பேரவை மேலவை உறுப்பினராக மிகுந்த பொறுப்போடு பணியாற்றியவர். அதைப் போல பல வழக்கறிஞர்கள், பல அறிஞர் பெருமக்கள், பல தியாகிகள் தமிழர்களுக்குக் கிடைத்திருக்கிறார்கள்.

இங்கே நம்முடைய நண்பர், மூத்த வழக்கறிஞர் வை. சங்கரன் அவர்கள் மரியாதைக்குரியவராக இங்கே அழைக்கப்பட்டு அவருக்கு விருது வழங்கப்பட்டது. அவர் மதுரை வைத்தியநாத ஐயருடைய மகன் என்பதும், மதுரை வைத்தியநாதன் அவர்கள் எந்த அளவுக்கு தியாகச் செம்மல் என்பதும், விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்டவர் என்பதும், மதுரை ஆலயத்திலே தாழ்த்தப்பட்ட மக்களை தான் தலைமையேற்று ஆலயப் பிரவேசம் செய்த அற்புதத்தை அந்தக் காலத்திலேயே நிகழ்த்திக் காட்டியவர் என்பதையும் நீங்களெல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். அப்படிப்பட்ட பெருமக்களைக் கொண்டதுதான் இந்த வழக்கறிஞர் பேரவை. அதனுடைய 125-ஆவது ஆண்டு விழாவை சீரோடும் சிறப்போடும் நாம் இங்கே கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

நீதிமன்றத்தைப் பற்றி இங்கே உருவாக வேண்டிய, உயர்நீதிமன்றத்தின் கிளையைப் பற்றி யெல்லாம், நீங்கள் விரிவாக எடுத்துரைக்கிறீர்கள். இப்பொழுது மாத்திரமல்ல; நான் மதுரைக்கு வரும்போதெல்லாம் வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பாகக் கேட்டிருக்கிறீர்கள். நிருபர்கள் மூலமாகக் கேட்டு அறிந்திருக்கிறீர்கள். சென்னைக்கே வந்து கேட்டிருக்கிறீர்கள். நாங்களும் ஆலடி அருணா குறிப்பிட்டதைப் போல அந்த முயற்சியிலே நீண்ட காலமாக ஈடுபட்டு வருகிறோம்.

மதுரையைப் பொறுத்தவரையில் நீதிமன்றங்கள் தொடங்கி இருநூறு ஆண்டுகளுக்கு மேலாகிறது. 1803-ஆம் ஆண்டிலேயே மதுரையில் தமிழில் தீர்ப்புக்கள் வழங்கியன என்ற பெருமையையும் உடையவைகளாக ஒரு காலத்திலே திகழ்ந்திருக்கின்றன. தொடக்கத்திலே இங்கே பெரிய நீதிமன்றங்களே கூட சிறிய கட்டிடங் களிலேதான் இயங்கி இருக்கின்றன. அதற்குப் பின்னர் மதுரை நாயக்கர்களுக்கு அரண்மனையாகத் திகழ்ந்த திருமலை நாயக்கர் மகாலுக்கு அந்த நீதிமன்றங்க ளெல்லாம் மாற்றப்பட்டு, திருமலை நாயக்கர் மகாலிலே அந்த நீதிமன்றங்களெல்லாம் நடைபெற்றன.

1970-ஆம் ஆண்டு வரை மதுரை மாநகரத்தின் மத்தியிலே போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதியில் அமைந்துள்ள திருமலை நாயக்கர் மகாலில் நீதிமன்றங்கள் செயல்படுவது பிரச்சினைக்குரியதாக இருக்கிறது. சிக்கலுக்குரியதாக இருக்கிறது. எனவே தனித்தனியாக இவை இயங்க திருமலை நாயக்கர் மகாலிலுள்ள நீதி மன்றங்கள் வேறு இடத்திற்கு மாற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தபோதுதான் இவைகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து சிறந்த முறையிலே செயல்படுத்துவதற்காக முதன்முறையாக கழக அரசு, அறிஞர் அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு, நான் பொறுப்பேற்ற கால கட்டத்தில், அண்ணா அவர்கள் காலத்திலே தொடங்கிய அந்த முயற்சியை மேலும், மேலும் பெரிதாக்கி, விரைவுபடுத்தி 1970-ஆம் ஆண்டு, ஜூன் திங்கள் 16-ஆம் நாள் மதுரை நீதிமன்றங்களுக்குக் கட்டிடங்கள் கட்டப்பட்டு முடித்து அந்த நீதிமன்ற வளாகத்தை நான்தான் திறந்து வைத்தேன் (கைதட்டல்) என்பதை வரவேற்புரையில் கூட நம்முடைய நண்பர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்.

"நீதிமன்றத்தையே திறந்து வைத்தவன். அதனுடைய கிளையைத் திறந்து வைக்க வேண்டாமா?" என்று கேட் டார். நீங்கள் கையொலி எழுப்பி, "ஆமாம்" என்று

சொன்னீர்கள். திறந்து வைத்தேன். தொடர்ந்து இருந்தாலும், வந்து திறந்து வைப்பேன். (கைதட்டல்) தொடர்ந்து இல்லாவிட்டாலும் மீண்டும் வந்து திறந்து வைப்பேன் (பலத்த கைதட்டல்) என்ற உறுதியை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே சென்னை உயர்நீதிமன்றத்தின் கிளை ஒன்றை, அதாவது ஆயம் ஒன்றை நிறுவிட வேண்டும் என்று, ஜஸ்டிஸ் ஜஸ்வந்த் சிங் கமிஷன் பரிந்துரை செய்திருக்கிறது உங்களுக்கெல்லாம் தெரியும். 1972-ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக இருந்த அந்தக் காலகட்டத்தில் மதுரையில், அந்தப் பரிந்துரையை ஏற்று கிளை ஒன்றை நிறுவிட வேண்டும் என்று மத்திய அரசோடு வாதாடி, போராடி பல ஆண்டுகளுக்குப் பிறகு அதற்குரிய அனுமதியை நாங்கள் பெற்றிருக்கிறோம். அதையும் நீங்கள் அறிவீர்கள்.

தற்போது அந்த உயர்நீதிமன்றக் கிளை அமைக்கப் படுவதற்கு மதுரை மாவட்டத்தில் உலகனேரி கிராமத்தில் ஓர் இடம் தேர்வு செய்யப்பட்டு, அதற்குரிய நில எடுப்புப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. நில எடுப்பு சட்டப்பிரிவு 6-ன் கீழ் 6 அறிவிக்கைகள் 11-3-98 அன்று தமிழ்நாடு கெசட்டில், அரசு இதழில் வெளியிடப் பட்டுள்ளது. மே மாத இறுதிக்குள் அந்தப் பணி களெல்லாம் முடியும் என்ற நம்பிக்கையை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நில எடுப்புச் செலவுக்காக 16-4-98 அன்று இரண்டு கோடியே 52 லட்சம் ரூபாய் அரசு அனுமதித் திருக்கிறது; ஆணையிட்டிருக்கின்றது (பலத்த கைதட்டல்) என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிலம் கையகப்படுத்தப்பட்ட பிறகு, இங்கே கிளை அமைக்கப்படும் என்று நானாகச் சொல்ல முடியாது. இப்போது யார் யாரோ சொல்ல வேண்டியதை, யார் யாரையோ சொல்கின்ற காலகட்டத்தில் (பலத்த

கைதட்டல்) இருக்கிறோம். ஏனென்றால் தலைமை நீதியரசர் லிபரான் அவர்கள் நிர்ணயித்து முடிவெடுத்து, அறிவிக்க வேண்டிய ஒன்று இது. அதை நானாகச் சொல்லிவிட முடியாது. அவர்தான் அதை அறிவிக்க வேண்டும்.

இப்போது இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று, அவசரமாக, விரைவாக அந்தக் கிளை இங்கே உருவாக வேண்டுமென்றால், ஏற்கனவே இருக்கின்ற பழைய கட்டிடத்தில் தற்காலிகமாக அந்தக் கிளையை உருவாக்கி அது நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே புதிய கட்டிடத்தை, புதிதாக வாங்கப்பட்டுள்ள இடத்தில் அமைத்து அங்கே உயர்நீதிமன்றக் கிளையை அமைத்திட முடியும். இந்த இரண்டு வழிகளில் ஒன்றை தேர்ந்தெடுத்தாக வேண்டும். அந்தப் பொறுப்பை நாம் எல்லோரும் சேர்ந்து சென்னை உயர்நீதிமன்றத்திலே வழங்குகிறோம். அவர்கள் அந்தப் பொறுப்பை உணர்ந்து உடனடியாக அதை செய்து தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

எனவே இந்தக் கோரிக்கையைப் பொறுத்த வரையில் இது என் கையில் இல்லை; ஆனால் நம் கையில் இருக்கிறது. அந்த 'நம்' என்பதில் நம்முடைய உயர்நீதிமன்றத்தின் நீதியரசர் லிபரான் அவர்கள் இருக்கிறார்கள். எனவே நம் கையில் இருக்கின்ற இந்தப் பிரச்சினையை விரைவிலே முடிப்பதற்கு நம்மால் ஆன முயற்சிகளையெல்லாம் மேற்கொள்வோம் என்று இந்த இனிய விழாவிலே உறுதி தெரிவித்து உங்களுக் கெல்லாம் நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

18-4-98 அன்று மதுரையில்
வழக்கறிஞர் சங்க 125-ஆவது
ஆண்டு விழாவில் ஆற்றிய உரை

11

வீரன் சுந்தரலிங்கம் நினைவு கிராமத் திறப்புவிழா

இதயத்திற்கு இதம் தருகின்ற விழா ஒன்று மிகுந்த சீரும் சிறப்போடும் எழுச்சியோடும் எழிலோடும் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த வட்டாரத்தில் 1972-க்குப் பிறகு மணலி கந்தசாமி அவர்களோடும், சுப்பு அவர்களோடும் வந்து வீரபாண்டிய கட்டபொம்மன் விழாவை நடத்தி, அன்று வைக்கப்பட்ட கோரிக்கை களை ஏற்று வீரபாண்டிய கட்டபொம்மனுடைய இடிந்து அழிந்து மண்மூடிப் போன பாஞ்சாலங்குறிச்சி கோட் டையைப் புதுப்பிப்பேன் என்று உறுதி அளித்து அந்த உறுதியை நிறைவேற்றுகின்ற வகையிலே கோட்டை கொத்தளத்தை அமைத்து வீரபாண்டிய கட்ட பொம்மனுக்கு அன்றைக்குத் தோளோடு தோள் நின்று துணை புரிந்து விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்ட தளபதிகளுக்கெல்லாம் நினைவுச் சின்னங்கள் அமைத்து அப்படி அமைக்கப்பட்ட நினைவுச் சின்னங்களிலே ஒன்றாக வீரன் சுந்தரலிங்கத்தின் தோரணவாயிலை அப்பொழுதே அமைத்தவன் நான் என்கின்ற முறையில் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கே நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர் முன்னிலை ஏற்றுள்ள டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சுந்தரலிங்கத்தை நான் எப்பொழுதெல்லாம் நினைவு

படுத்தியிருக்கிறேன் என்பதை எடுத்துச் சொன்னார். நான் எழுதிய நூலிலிருந்து அவர் எதை எடுத்து குறித்துக் கொண்டு வந்திருக்கிறாரோ அதையேதான் நானும் குறித்துக் கொண்டு வந்திருக்கிறேன். இதிலிருந்தே எங்களுக்குள்ள ஒற்றுமையை நீங்கள் புரிந்து கொள்ளலாம். ஏனென்றால் 14 ஆண்டுகளுக்கு முன்பு கிருஷ்ணசாமி அவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பொள்ளாச்சியில் நின்றவர் என்பதை ஞாபகப்படுத் தினால் இந்தக் கருத்து ஒற்றுமை எப்படி வந்தது என்பதை நீங்கள் எல்லாம் புரிந்து கொள்ளலாம்.

ஒரு 15 ஆண்டுக்கு முன்பு நான் 'குங்குமம்' இதழில் 'பாயும்புலி பண்டாரக வன்னியன்' என்ற ஒரு தொடர் ஓவியத்தைத் தீட்டினேன். அந்த தொடர் ஓவியத்தி னுடைய முதல் அத்தியாயமே வீரன் சுந்தரலிங்கத்தை அறிமுகப்படுத்துகின்ற அத்தியாயமாகத்தான் அமைந்தி ருக்கிறது. உங்களில் பலபேர் அதைப் படித்திருக்க முடியாது. ஆனால் 15 ஆண்டுகளுக்கு முன்பே நினை வூட்டியவன் நான் என்ற முறையில் இதை இப்பொழுது உங்களுக்கு நினைவுபடுத்துகின்றேன். அதைத்தான் இங்கே கிருஷ்ணசாமியும் உங்களுக்கு நினைவுபடுத்தி னார். அதிலே குறிப்பிட்டிருக்கின்றேன். அதை கிருஷ்ணசாமி படிக்கும்போது நீங்கள் சற்று அமைதி யில்லாமல் ஆனந்த பரவசத்தில் உங்களையும் மறந்து உணர்ச்சி வசப்பட்டு முழக்கம் செய்து கொண்டிருந்த காரணத்தினால் நான் என்ன எழுதினேன், அவர் என்ன படித்தார் என்பதை உங்களில் பல பேர் காது கொடுத்து கேட்கவில்லை. எனவே நானே அதைப் படிக்கிறேன்:

"வீரபாண்டிய கட்டபொம்மனின் அன்புக்குரிய தளபதி வெள்ளையத் தேவனுக்கு உற்ற நண்பனும் அவனையொத்த வீரனுமான சுந்தரலிங்கம் பாஞ்சாலங்

குறிச்சி படைமுகத்துச் சிங்கங்களிலே ஒருவன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்து இந்தத் தமிழ் மண்ணை அந்நியர் ஆக்கிரமிக்கக் கூடாது என்பதற்காக தடந்தோள் தட்டிய பெருவீரன் சுந்தரலிங்கம்.''

இது பாயும்புலி பண்டாரக வன்னியன் புத்தகத்தில் 13-ஆவது பக்கத்திலே இடம் பெற்றிருக்கிறது.

மேலும் சொல்லுகின்றேன், ''தேவர் குலத்தில் உதித்த வெள்ளையத்தேவனும், தேவேந்திர குலத்தில் உதித்த இந்தச் சுந்தரலிங்க குடும்பனும் கூடப் பிறக்காத குறையொன்றே தவிர இருவரும் இணைபிரியாத சகோதரர்கள்.''

இதையும் 36-ஆவது பக்கத்திலே பாயும்புலி பண்டாரக வன்னியன் புத்தகத்திலே குறிப்பிட்டிருக்கின்றேன்.

மேலும் ''பாண்டிய மண்ணின் உரிமைக்காக வீரப் போரிட்ட வெட்டும் பெருமாளின் பரம்பரையில் வந்தவர் இந்தச் சுந்தரலிங்கக் குடும்பன்'' என்பதையும் அந்த நூலின் 17-ஆவது பக்கத்திலே நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

200 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தில் வெள்ளையனை எதிர்த்த விடுதலைப் போராட்டத்தில் தளநாயகனாக, முன்னோடியாக விளங்கிய வீரன் சுந்தரலிங்கம். அவருடைய சொந்த ஊரை ''தென்னகத்தினுடைய ஜிப்ரால்டர்'' என்று வெள்ளையர்கள் வர்ணித்தார்கள். அத்தகைய பெருமைக் குரியவர்களில் ஒருவர் சுந்தரலிங்கம். பாஞ்சாலங்குறிச்சி மன்னன் வீரபாண்டிய கட்டபொம்மனின் ஒற்றர் படைத் தளபதியாக அவர் பணியாற்றினார் என்று வரலாற்றுக் குறிப்புகள் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

அந்தக் காலத்தில் அரசு கெஜட்டில் இந்த ஊரின் பெயர் 'கெவுணகிரி' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எப்படி கெவுணகிரியாக மாறிற்று? என்பதை நான்

ஆச்சரியத்தோடு பார்க்கவில்லை. இப்படி பல பெயர்கள் மொழி மாற்றம் – பெயர் மாற்றம் பெற்றிருக்கின்றன. வெள்ளைக்கார கவர்னர் வந்து அடிக்கடி தங்குகிற காரணத்தால் இது போகப் போக சில ஆண்டுகளுக்குப் பிறகு கவர்னகிரி என்று ஆகி பிறகு பேச்சு வழக்கில் கெவுணகிரி என்று ஆயிற்று. வேறொரு உதாரணம் கூறுகிறேன். சென்னை மாநகரத்தில் ஒரு வெள்ளைக் காரருடைய பெயரால் மைலாப்பூர் பகுதியில் ஒரு பாலம்; அந்தப் பாலத்திற்கு வெள்ளைக்காரர்கள் ஆண்ட காலத்தில் ஹேமில்டன் பிரிட்ஜ் என்று பெயர் இருந்தது. அந்த பிரிட்ஜின் பெயர் கொஞ்சம் கொஞ்சமாக தேய்ந்து தேய்ந்து கடைசியாக ''அம்பட்டன்'' பிரிட்ஜ் – (மன்னிக்க வேண்டும் அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்) என்றாகி விட்டது. அந்த மாற்றம் எப்படி ஏற்பட்டது என்ற கொடுமையைச் சொல்வதற்காக சொல்கின்றேன். அம்பட்டன் பிரிட்ஜ் என்றாகி அதற்கு சரியான மொழிபெயர்ப்பாக அதை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்து பார்பர் பிரிட்ஜ் என்றே ஆக்கி விட்டார்கள்.

ஹேமில்ட்டன் என்ற வெள்ளைக்காரத் துரையின் பெயர் கடைசியாக பார்பர் பிரிட்ஜ் என்கின்ற அளவுக்கு மாறிற்று. அதேபோல்தான் கவர்னர் அடிக்கடி தங்கிய காரணத்தினால் இது கவர்னகிரியாக இருந்து காலப் போக்கில் கெவுணகிரியாக ஆயிற்று. இந்த கவர்ன கிரியை சார்ந்த கட்டகருப்பன் – முத்து தம்பதியரின் மகன்தான் சுந்தரலிங்கம். இளம் வயதிலேயே வீரத்தின் விளைநிலமாய் எடுத்த காரியத்தை முடிக்கின்ற ஆற்றல் வாய்ந்தவனாய் விளங்கிய காரணத்தினால் கட்ட பொம்மன் சுந்தரலிங்கத்தை தன்னுடைய ஒற்றர்படைத் தளபதியாகவே நியமித்துக் கொண்டார் என்று வரலாறு கூறுகிறது.

வெள்ளையருடைய ஆதிக்கம் மெல்ல மெல்ல பரவி கட்டபொம்மனுடைய வீரர்களையும் அவருடைய கோட்டையையும் அவர் குறிப்பிட்டதைப் போல இந்தப் பகுதி மக்களையும் சுற்றி வளைத்துக் கொண்டு அந்தக் கோட்டையையே கைப்பற்றுவது என்கின்ற முடிவெடுத்து அதற்கான ஆயத்தங்களை வெள்ளைக்கார துரைமார்கள் செய்து கொண்டிருந்த நேரத்தில் கட்டபொம்மனிடத்திலே இல்லாத ஆயுதங்கள் போர்க்கருவிகள், பீரங்கிகள் இவைகளையெல்லாம் பெற்றிருந்த வெள்ளைக்காரர்கள் கட்டபொம்மனுடைய கோட்டையைச் சுற்றிவளைத்து அதைப் பிடிப்பது என்ற இறுதியான முடிவுக்கு வந்த காலக்கட்டத்தில் அன்றைக்கு வெள்ளையத் தேவன் ஒரு திருமணத்திற்காக வெளியூர் சென்றிருக்க இப்படி வெள்ளைக்காரர்கள் கோட்டையை முற்றுகையிட்டு அதைத் தூள்தூளாகப் பிளக்கப் போகிறார்கள் என்ற செய்தி சுந்தரலிங்கத்தின் காதில் விழுகிறது.

சுந்தரலிங்கத்திற்கு ஒரு முறைப்பெண்; வடிவு என்று அந்தப் பெண்ணுக்கு பெயர். இருவரும் எப்படி வெள்ளைக்காரர்களுடைய சூழ்ச்சியை முறியடிப்பது என்று திட்டமிட்டார்கள். இரண்டு பேருமே ஆடு மேய்ப்பவர்களைப் போல வேடம் போட்டுக் கொண்டு வெள்ளைக்காரர்கள் பதுக்கி வைத்திருந்த வெடிமருந்து களைக் கொண்டுதான் கட்டபொம்மன் கோட்டையை தகர்ப்பது என்று அன்றைக்கு அவர்கள் திட்டமிட்டி ருந்தார்கள், அந்த வெடிமருந்துகளையே பயனற்றதாக செய்து விட்டால் கோட்டை தப்பும் அல்லவா என்று எண்ணிய சுந்தரலிங்கத்தினுடைய முறைப்பெண் வடிவும் சுந்தரலிங்கமும் திட்டமிட்டு இருவரும் அந்த வெடி மருந்துச் சாலைக்குள்ளேயே தீப்பந்தத்தை கட்டிக் கொண்டு உள்ளே சென்று அங்கிருந்த வெடிமருந்துகளை எல்லாம் வெடிக்கச் செய்து அழித்து முடித்து தாங்களும்

அந்த வெடிமருந்துக்குள்ளே வெடிமருந்தாக மாறி மறைந்தார்கள். தியாகப் பிழம்புகளாக ஆனார்கள் சுந்தர லிங்கமும் வடிவு என்கின்ற அந்த முறைப்பெண்ணும். இப்படித் தங்களையே, வெடிமருந்துத் தீக்கு இரையாக்கிக் கொண்டு அன்றைக்கே – இன்றைக்குச் சொல்வார்கள் தற்கொலைப்படை தற்கொலைப்படை என்று – அன்றைக்கே வெள்ளையர்களை எதிர்த்து வீரபாண்டிய கட்டபொம்மன் தலைமையில் தற்கொலைப் படையின் தளநாயகனாக விளங்கியவன் சுந்தரலிங்கம் என்பதை எண்ணுகிற நேரத்தில் நாம் பெருமை அடைகிறோம்.

ஆனால் இந்தத் தற்கொலைப் படை எல்லாம்; இந்த வீரதீரச் செயல்கள் எல்லாம் அன்றைக்குத் தேவைப் பட்டது. வெள்ளைக்காரர் பீரங்கியோடு வந்த நேரத்திலே, அவன் படை எடுத்து வந்த நேரத்தில் எதிர்க்க இவைகள் எல்லாம் தேவைப்பட்டன. ஆனால் கால மாற்றத்தால் வெள்ளைக்காரனை எதிர்க்க உத்தமர் காந்தியடிகள் அகிம்சையையே தன் ஆயுதமாகக் கொண்டார். அகிம்சையையே தன் ஆயுதமாகக் கொண்டு குமரி முதல் இமயக் கோட்டம் வரையுள்ள இந்திய நாட்டின் மக்களையும் திரட்டி அவருடைய தலைமையிலே நடைபெற்ற அந்தச் சுதந்திரப் போராட் டத்தின் காரணமாகத் தான் வெள்ளையர்கள் வெளியேறினார்கள்.

வெள்ளையர்கள் வெளியேறினாலும் கூட நாடு சுதந்திரம் பெற்றாலும் கூட மண்ணுக்குதான் சுதந்திரம் கிடைத்ததே தவிர மக்களுக்கு முழுமையான சுதந்திரம் கிடைக்கவில்லை. அதை இன்றைக்கும் நாம் காண்கிறோம். அந்தச் சுதந்திரத்தை பெறத்தான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, அண்ணல் அம்பேத்கர் போன்ற தலைவர்கள் எல்லாம் பாடுபட்டார்கள். இன்றைக்கும் அவர்கள் வழிநின்று நாம் பாடுபட்டுக் கொண்டு இருக்கிறோம்.

அப்படிப் பாடுபடுகின்ற நேரத்தில் இங்கே இன்றைக்குக் கட்டப்பட்டு இருக்கின்ற 200 வீடுகளை யாரும் பெரிதாக எண்ணிக்கொள்ள வேண்டிய அவசிய மில்லை. ஆனால் இன்றைக்குத் தமிழகத்திலே இதே போன்ற வீடுகள் எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும், எந்தத் தொகுதிக்குச் சென்றாலும் 200, 300 வீடுகள் இருக்கின்றதென்றால் அதற்குக் காரணம் நான் பெருமிதத்தோடு சொல்லவில்லை – பெருமையோடு சொல்லவில்லை. இங்கே அமைச்சர் கோ.சி. மணி அவர்கள் குறிப்பிட்டது போல ஆதிதிராவிட பெருங்குடி மக்களுக்கு இலவசமாக காங்கிரீட் வீடுகளைக் கட்டித் தர வேண்டும் என்ற திட்டத்தை முதன் முதலாக உருவாக்கியது – இந்தியாவிலேயே முதன் முதலாக நிறை வேற்றிக் காட்டியது உங்கள் முன்னால் நின்று கொண்டு இருக்கிற கருணாநிதிதான் என்பதை ஞாபகப் படுத்துகின்றேன்.

ஒருமுறை இப்படிப்பட்ட வீடுகள் திறப்பு விழாவில் அம்மையார் சத்தியவாணிமுத்து அவர்கள் அரிசனத் துறை அமைச்சராக அன்று இருந்தார்கள். அப்போது எல்லாம் அந்தத் துறைக்கு அரிசன நலத்துறை என்று பெயர் – அந்தத் துறைக்கு அமைச்சராக இருந்தார்கள். இதுபோன்ற 100 வீடுகளை ஓர் இடத்திலேயே கட்டி முடித்து அதைத் திறந்துவைக்கும்பொழுது அவர் குறிப்பிட்டார். அவர்களும் ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான். இருந்தாலும் ஆதங்கத்தோடு சொன்னார் கள்; "நீங்கள் இந்த வீடுகளை எல்லாம் கட்டினீர்கள். எங்களுடைய மக்கள் நன்றியோடு இருப்பார்களா?" என்று கேட்டார்.

அப்பொழுது நான் பேசும்பொழுது சொன்னேன்: "அம்மா, நான் பெரியாருடைய தொண்டன்; பெரியாரு டைய பொன்மொழி என்ன தெரியுமா? நன்றியை எதிர்

பார்த்துக் கடமையைச் செய்யாதே. நன்றி வருகிறதோ இல்லையோ – நன்றி காட்டுகிறார்களோ இல்லையோ உன்னுடைய கடமையைச் செய்து கொண்டு இரு. இதுதான் பெரியாருடைய பொன்மொழி. எனவே எனது கடமையைச் செய்கிறேன். நீங்கள் சொல்வார்களா என்று கேட்டீர்கள். அதைப்பற்றி நான் கவலைப்பட வில்லை. சில இடங்களில் நான் கட்டித் தந்த வீடுகளில் 'கருணாநிதி வாழ்க' என்று எழுதுகிறார்கள். சில வீடுகளின் சுவர்களில் 'கருணாநிதி ஒழிக' என்றும் எழுதுகிறார்கள் என்று சொன்னீர்கள். பரவாயில்லை, ஒழிக என்று எழுதினாலும், வாழ்க என்று எழுதினாலும், என்னுடைய பெயரை மறக்காமல் கருணாநிதி என்று எழுதுகிறார்களே அதுபோதும் எனக்கு'' என்று நான் சொன்னேன்.

எனவே, பிற்படுத்தப்பட்ட மக்களானாலும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களானாலும், தாழ்த்தப்பட்ட மக்களானாலும் இன்றைக்கு அடித்தளத்தில் இருக்கின்ற மக்களானாலும் அவர்கள் இன்றும் பல செய்திகளைப் புரிந்து கொள்ள முடியாத சூழ்நிலையில் இருளில் தள்ளப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் ஒளி ஏற்ற வேண்டும். அவர்களுடைய உள்ளத்திற்கு எல்லாம் வெளிச்சம் தர வேண்டும். நாம் யார் என்ற எண்ணத்தை உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்கும்பொழுது எல்லாம் ஒரே குலம்; எல்லோரும் ஓரின மக்கள் என்ற உணர்வை நாம் ஏற்படுத்தி ஆக வேண்டும். அவர்கள் ஆதிக்க சமுதாயம் என்று நம்மால் அடையாளம் காட்டப்பட்டாலும் அல்லது அடித்தளத்து மக்கள் என்று நம்மால் அடையாளம் காட்டப்பட்டாலும் இருசாராரும், இரு பிரிவினரும் ஒருங்கிணைந்து ஒன்றாக தோள் மீது தோள் கைபோட்டுக் கொண்டு தோழர்களாக, சகோதரர் களாக வாழ வேண்டும்.

இந்தச் சரித்திரம் என்ன சொல்கிறது. சுந்தரலிங்கத் தினுடைய வரலாறு என்ன சொல்கிறது. வெள்ளையத் தேவனும் சுந்தரலிங்கமும் ஒரே படையில் கைகுலுக்கி கொண்டு ஒருவர் தோளில் ஒருவர் கைபோட்டுக் கொண்டு படை நடத்திய பெரும் வீரர்கள். ஏன் இன்றைக்கு அந்த நிலை மாறி இருக்கிறது? மாறிய நிலையை வரலாற்றுச் சான்றுகளோடு எடுத்துச் செல்லி மீண்டும் அந்தப் பழைய நிலையைக் கொண்டு வர வேண்டும் என்பதுதான் நோக்கமே தவிர வேறல்ல.

குறிப்பாக, பழைய வீரர்களை, பழைய கால தியாகிகளை நினைவுபடுத்துவது நம்முடைய மிகப்பெரும் பொறுப்பாகும். இங்கு கிருஷ்ணசாமி பேசும்பொழுது சொன்னார்: ''சுதந்திரம் பெற்ற 50 ஆண்டு காலத்தில் இவர்களையெல்லாம் யாராவது நினைத்தார்களா?'' என்றார். நினைத்தார்களா என்று கேட்டவர், ''இவர் ஒருவர்தான் நினைத்து இருக்கிறார்'' என்று என்னைச் சுட்டிக்காட்டுவார் என்று எண்ணினேன். சொல்லாமலே நீங்கள் தெரிந்து கொள்வீர்கள் என்பதற்காக சுட்டிக் காட்டாமல் விட்டு விட்டார் என்று நான் புரிந்து கொள்கின்றேன்.

ஏனென்றால் நான் ஒரு காலத்திலே அவருக்குத் தலைவராக இருந்தவன்தான். அவரைப் பல முறை தம்பி என்று அழைத்திருக்கின்றேன். இன்றைக்கும் அழைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். தலைவராக இருந்தபொழுது தான் அவர் பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதியிலே தி.மு.க. வேட்பாளராக நின்றார். அவருக்காகப் பல கூட் டங்களில் பேசி வாக்கு சேகரித்த அந்த வாய்ப்பையும் பெற்றவன் நான். எனவே இங்கே சீற்றத்தோடு பேசினார் என்றால், ஒரு புயல் போல உறுமினார் என்றால், ஒரு சிங்கம் போல் கர்ஜித்தார் என்றால், நான்

எண்ணிக் கொள்கிறேன். இதற்கு எல்லாம் காரணம், அடித்தளம், தி.மு. கழகத்திலே அவர் இருந்ததினால் அல்லவா என்று எண்ணி நான் பெருமை அடை கின்றேன். மகன் போர்க்களத்திலே புகழ் பெறுகிற நேரத்தில்தான் தாய் தன்னுடைய வயிற்றைத் தடவிப் பார்த்துக் கொள்வதைப் போல நான் தடவிப் பார்த்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட ஒரு மகனைப் பெற்றோமே என்கிற அளவிலே மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மகிழ்ச்சியிலே உங்களோடு நானும் பங்கு கொள்கிறேன்.

18-4-98 அன்று வீரன் சுந்தரலிங்கம் நினைவு கிராமத்தைத் திறந்து வைத்து ஆற்றிய உரை

12

நாகர்கோவில் ஜீவானந்தம் மணிமண்டபத் திறப்புவிழா

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த நிகழ்ச்சி நீண்ட நேரம் நடைபெற்று நான் உங்களிட மிருந்து விடைபெற்றுக் கொண்டு நெல்லை வழியாக வாகைக்குளம் சென்று 4-30 மணிக்குள் சென்றால்தான் வாகைக்குளத்திலிருந்து சென்னைக்குப் புறப்படுகின்ற தனி விமானத்தில் புறப்பட இயலும், அதற்குப் பிறகு புறப்பட இயலாது என்ற சூழ்நிலையில் உங்கள் முன்னால் விரைவில் விடைபெற்றுக் கொள்ளும் நோக்கத்தோடு நின்று கொண்டிருக்கின்றேன்.

இன்றைக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ள அண்ணன் ஜீவானந்தம் அவர்கள் பெயரால் அமைந்துள்ள மணி மண்டபம் இது எப்படியும் அமைந்திட வேண்டுமென்ற கோரிக்கையைப் பலமுறை சட்டமன்றத்திலும், என்னிடத் திலே தனிப்பட்ட முறையிலும் வலியுறுத்தியவர் இந்த மாவட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ள மணி ஆவார். அவருடைய பெரும் முயற்சியின் காரணமாகவும் அண்ணன் ஜீவானந்தம் மீது எனக்குள்ள அன்பின் காரணமாகவும் அவருடைய

வாழ்க்கை இன்றைய இளைஞர்களுக்கும், எதிர்கால இளைஞர்களுக்கும் ஒரு பாடமாக அமைவதற்கு இது ஒரு நல்ல சின்னமாக அமைந்திடும் என்ற எண்ணத்தின் காரணமாகவும் அமைக்கப்பட்டு இன்றைக்குத் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த நினைவு மண்டபத்திற்குப் பதினைந்து லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவு ஆகியிருக்கின்றது. அதே நேரத்தில் இந்த மாவட்டத்தில் ஏறத்தாழ 38 லட்சம் ரூபாய் செலவில் கண் மருத்துவமனை கட்டிடம் ஒன்றும் இன்றைக்குத் திறக்கப்படுகிறது. 10 லட்சம் ரூபாய் செலவில் நகராட்சிப் படிப்பகம் திறந்து வைக்கப் படுகிறது. நாகர்கோவில் நகரில் குடிநீர் வினியோகத் திற்காக 49 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டுள்ள ஏழு ஊர்திகள் இயக்கி வைக்கப்படுகின்றன. ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டம் 91 லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்படுகிறது. எனவே இந்த வகையில் ஏறத்தாழ 2 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுத் தொடங்கி வைக்கப் படுகின்றன.

அஃதன்னியில் தொடங்கப்பட வேண்டிய திட்டங் களுக்காக அடிக்கல் நாட்டுகின்ற நிகழ்ச்சியில் மாவட்ட நெஞ்சக நோய் கட்டிடம் 30 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டுவிழா இன்றைக்கு நடைபெற்றிருக்கிறது. 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட வேண்டிய மாவட்ட சித்த மருத்துவப் பிரிவு கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கீழமணக்குடி, மேல மணக்குடி இணைப்புப் பாலத்திற்கு அடிக்கல் நாட்டப் பட்டுள்ளது. 43 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட வுள்ள பிற்படுத்தப்பட்ட கல்லூரி மாணவர் நல விடுதி கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. ஏறத்தாழ

5 கோடி ரூபாய் மதிப்பில் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்திற்கு 360 பெண்களுக்கு 36 லட்ச ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது. இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் 300 பயனாளிகளுக்கும் 40 லட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படுகிறது. ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 37 பயனாளி களுக்குச் சற்றொப்ப 4 லட்ச ரூபாய் கடன் வழங்கப் படுகிறது. இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 25 பயனாளிகளுக்கு ஆறே முக்கால் லட்ச ரூபாய் மதிப்பீட் டில் 25 தொகுப்பு வீடுகள் இன்று வழங்கப்படுகின்றன.

சிங்காரவேலர் நினைவு வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 77 லட்சம் ரூபாய் செலவில் 240 வீடுகள் மீனவர்களுக்கு இன்று இலவசமாக வழங்கப்படுகின்றது. அதிக விளைச்சல் காட்டிய இரண்டு விவசாயிகளுக்கு ஊக்கப் பரிசுத் தொகையாக முதல் பரிசு எட்டாயிரம் ரூபாய், இரண்டாம் பரிசு நான்காயிரம் ரூபாய் மொத்தம் பனிரெண்டாயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் மூன்று சக்கர வண்டிகள் ஐந்து பயனாளிகளுக்குப் பதினைந் தாயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.

இப்படிப் பல்வேறு நலத்திட்டங்கள் இன்றைக்கு ஏறத்தாழ ஒன்பது கோடி ரூபாய் மதிப்பில் இந்த மாவட்ட மக்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் வழங்கப்படுகின்றன. இவ்வளவு திட்டங்கள் இன்றைக்கு அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டாலும் கூட இங்கே பேசிய பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் தங்கள் நாடாளுமன்ற மக்களவை அல்லது மாநிலங்களவையின் பிரதிநிதிகளாக இருந்தாலும் அல்லது சட்டப்

பேரவையின் பிரதிநிதிகளாக இருந்தாலும் அல்லது உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளாக இருந்தாலும் பல கோரிக்கைகளை இங்கே முன்வைத்திருக்கிறார்கள்.

சட்டமன்றம் நடைபெறும் பொழுது எந்தவொரு அறிவிப்பையும் வெளியில் செய்யக் கூடாது என்பது மரபு. இந்த மரபு தெரியாதவர்களா நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர்கள் என்று கேட்டால் அவர்களுக்குத் தெரியும், இருந்தாலும்கூட உங்களுக்கு நேராக சில கோரிக்கைகளை வைத்து, பார்த்தீர்களா நான் சட்ட மன்றத்திலே வாதாடவில்லை என்று சொன்னீர்களே நான் வாதாடி அது பத்திரிகைகளில் வராமல் இருந்திருக் கலாம், வாதாடுவேன் என்பதை நிரூபிப்பதற்காகத்தான் இங்கு ஒருமுறை உங்கள் முன்னால் இந்தக் கோரிக்கை களை வைக்கிறேன் என்ற வகையிலே பல கருத்துக்களை, பல கோரிக்கைகளை இங்கே எடுத்து வைத்திருக்கின்றார்கள்.

நான் அந்தக் கோரிக்கைகளை நிராகரிப்பவன் அல்ல. அவைகள் நிறைவேற்றப்படும் என்று மாத்திரம் தான் சொல்ல முடியுமே தவிர, என்றைக்கு நிறைவேற்றப் படும் என்றெல்லாம் அறிவித்தால் இவர்களே நாளைக்கு யாரையாவது சட்டமன்றத்தில் தூண்டிவிட்டு ''சட்டசபை நடைபெறும்போது முதலமைச்சர் எப்படி வெளியே இவைகளை எல்லாம் அறிவித்தார்?'' என்று கேளுங்கள் என்று கேட்கச் செய்தாலும் செய்வார்கள். அந்தப் பயத்திலேதான் அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேறுமா நிறைவேறாதா என்று திட்டவட்டமாக நான் இங்கே அறிவிக்கவில்லை. அறிவிக்கவில்லை என்றாலும்கூட, அவைகள் எல்லாம் நிச்சயமாக விரைவில், அதே நேரம் உரிய காலத்தில் நிறைவேற்றப் படும் என்பதைக் கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக் கிறேன்.

மருத்துவக் கல்லூரியைப் பற்றி அனைவருமே பேசியிருக்கின்றார்கள். ''இந்த ஆண்டே அறிவித்து விடுங்கள்'' என்று வேலாயுதம் அவசரப்படுவதிலே அர்த்தம் இருக்கிறது. ஏனென்றால் அடுத்த ஆண்டு இவர் ஆட்சியிலே இருப்பாரோ, இல்லையோ என அதைக் கணிக்கக் கூடிய கட்சியிலே இருப்பவர் அவர். எனவே அவர், ''இந்த ஆண்டே அறிவித்து விடுங்கள் அடுத்த ஆண்டு அறிவிக்க இயலாது'' என்று சொல்வாரேயானால், ஒருவேளை அப்படி ஏதாவது ஏற்பட்டால் அடுத்த ஆண்டு வந்து நான்தான் அறிவிப்பேன் என்பதை (பலத்த கைதட்டல்) இங்கே நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மருத்துவக் கல்லூரிகள் இந்த ஆண்டு தூத்துக்குடி, வேலூர் ஆகிய இரண்டு இடங்களுக்கு அறிவிக்கப் பட்டபோதே சட்டமன்றத்தில் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி ''மேலும் இரண்டு கல்லூரிகள்'' என்று சொன்னதில் நாகர்கோவிலையும் இணைத்துத்தான் சொல்லியிருக்கிறார்.

நாகர்கோவில் என்று சொல்லும் பொழுது ''அது இந்த ஆண்டு வசதி இல்லாத காரணத்தால் அடுத்த ஆண்டு அறிவிக்கப்படும்'' என்று குறிப்பிட்டிருக் கின்றார். அதற்குள் ஒருவேளை வசதி வருமேயானால், இந்த ஆண்டிலே கூட, அதை அறிவிக்காமலே கூட தொடங்க முடியும் என்ற அந்த வாய்ப்பு இருப்பதை நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று ஒரு பொதுவான பிரச்சினை மற்றும் பல பிரச்சினைகள். தண்ணீர்ப் பிரச்சினை. அணைக்கட்டு பிரச்சினை, இந்தப் பிரச்சினைகளை எல்லாம் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநிலங்களவை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். நம்முடைய நண்பர் குமாரதாசும், நாடாளுமன்ற

உறுப்பினர் டென்னிசும், மோசசும் மற்றும் உரை யாற்றிய நமது நண்பர்கள் அனைவருமே பெருந்தலைவர் காமராஜருடைய நினைவு மண்டபம் அவருடைய அஸ்தி கரைக்கப்பட்ட இடத்தில் கன்னியாகுமரியில் கடற்கரைப் பகுதியிலே அமைவதுதான் சிறப்பு என்று எடுத்துரைத் திருக்கின்றார்கள்.

கடற்கரைப் பகுதியிலே அமைய வேண்டும் என்பதிலே எனக்கு இருவிதமான கருத்து இல்லை. ஒரு முறை அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் என்னிடத்திலும் சொன்னார். பொதுவாகவும் அறிவித்தார். ''கடற்கரை ஓரத்தில் கடற்கரையை ஒட்டி னாற்போல் அதிகமான கட்டிடங்கள் இருத்தலாகாது'' என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பிற்குப் பிறகு உச்சநீதிமன்றத்திலே கூட, ஒரு கருத்து வெளிப்படுத்தப் பட்டு, ''கடற்கரை ஓரத்திலே கட்டிடங்கள் இருத்தலாகாது'' என்பது ஒரு நியதியாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இருந்தாலும் பெருந்தலைவர் காமராஜரிடத்திலே பல்வேறு கொள்கை வேறுபாடுகளுக்கிடையே நாம் வைத்துள்ள மரியாதை, பற்று இவைகளை எல்லாம் நீங்கள் அறியாதவர்கள் அல்ல.

உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்பு கின்றேன். மறைந்தவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் களாக இருந்தாலும், அவர்கள் நாட்டுக்காக, மொழிக்காக, இனத்துக்காக, சமுதாயத்துக்காகப் பாடுபட்டவர்கள் என்றால், பொதுநலவாதிகள் என்றால் அவர்களை நான் சார்ந்திருக்கின்ற கட்சி ஆனாலும் அல்லது என்னுடைய ஆட்சி ஆனாலும் என்றைக்கும் மறந்ததே கிடையாது.

1969-ஆம் ஆண்டு நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது முதல் தடவையாக தில்லையாடி வள்ளியம்மாளுக்கு – தென்னாப்பிரிக்காவிலே மகாத்மா காந்தியோடு சேர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட

தில்லையாடி வள்ளியம்மாளுக்கு தஞ்சை மாவட்டம் – தில்லையாடியில், ''தில்லையாடி வள்ளியம்மாள் நகர்'' என்ற ஒரு நகரத்தை நிர்மாணித்தவனே நான்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அங்கே நாகப்பன், நாராயணசாமி என்ற இரண்டு ஆதி திராவிட இளைஞர்களுடைய பெயரால் வீடுகளைக் கட்டித் தந்தவனும் நான்தான் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நீங்கள் அறிவீர்கள், சிதம்பரனார் இந்த நாட்டினுடைய விடுதலைக்காகச் செக்கு இழுத்தார், சிறைப்பட்டார், சித்ரவதைகளை ஏற்றுக் கொண்டார் என்பதை எல்லாம் நீங்கள் படித்திருக்கிறீர்கள். அறிவீர்கள். ஆனால் நான் கேட்கிறேன். நண்பர் குமாரசாமி உள்பட எல்லா தேசியவாதிகளையும் கேட்கிறேன். அவர் இழுத்த செக்கு எங்கே இருக்கிறது என்றாவது இருபது ஆண்டுகால காங்கிரஸ் ஆட்சியிலே தேடிப் பார்த்தீர்களா? இல்லை. இருபது ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் வெள்ளைக்காரர்கள் காலத்தில் சிதம்பரனார் இழுத்த செக்கு எங்கே இருக்கிறது என்று யாரும் தேடிப் பார்க்கவில்லை. அதைத் தேடிப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது இந்தக் கருணாநிதிக்குத்தான் என்பதை யாரும் மறந்து விடக் கூடாது.

நான்தான் அதைத் தேடி அலைந்து கோவை சிறைச் சாலையிலே அந்தச் செக்கு இருக்கிறது என்பதை அறிந்து உடனடியாக அதைக் கொண்டுவரச் சொல்லி, ராஜாஜி மண்டபத்திற்குப் பக்கத்திலே தனியாக அதற்கு ஒரு மண்டபம் எளிமையான முறையிலே கட்டச் செய்து அங்கே அந்தச் செக்கினை வைத்து – ''சிதம்பரனார் இழுத்த செக்கு'' என்று எழுதி அதை ஒரு கண்காட்சியாக ஆக்கிய அந்தச் செயல் தி.மு.கழக ஆட்சியிலே என்னால் தான் நிறைவேற்றப்பட்டது.

பெருந்தலைவர் காமராஜருடைய நினைவு மண்டபம் சென்னையிலே – கிண்டியிலே இருக்கிறது ராஜ்பவனுக்குப் பக்கத்திலே. ஏன் அங்கே வைக்கப் பட்டது என்றால், அங்கேதான் அவருடைய உடல் எரியூட்டப்பட்டது. அந்த இடத்திலே ஏன் எரியூட்டப் பட்டது என்றால், கிண்டியிலே அந்த ராஜ்பவனுக்குப் பக்கத்திலே தான் காந்தி மண்டபம் இருக்கிறது. காந்தி மண்டபத்திற்குப் பக்கத்திலே காமராஜர் மண்டபம் இருப்பதுதான் சிறப்பு என்பதற்காக காமராஜருடைய உடலை அங்கே தகனம் செய்து அந்த மண்டபத்தை அங்கே கட்டினோம். அந்த மண்டபத்தைக் கட்டி முடிக்கும்போது, மண்டப முகப்பிலே என்ன சின்னம் வைக்கலாம் என்ற பிரச்சினை எழுந்தபோது, ''கைராட் டைச் சின்னம் வைக்க வேண்டும்'' என்ற அந்தக் கருத்தை வழங்கியவனும் நான்தான். கைராட்டைச் சின்னத்தை வைத்துவிட்டு இரவு 12 மணிக்கு வீட்டுக்குத் திரும்பியவனும் நான்தான். மறுநாள் ஆட்சி கலைக்கப் பட்டது. அந்தச் செய்தியை அறிந்தவனும் நான்தான்.

அந்தக் கைராட்டைச் சின்னத்தை என்னுடைய ஆட்சி கலைக்கப்பட்ட மறுநாளே எடுத்து விட்டார்கள். ஏன் எடுத்துவிட்டார்கள் என்றால், அது காமராஜ் காங்கிரஸ் கட்சியினுடைய தேர்தல் சின்னமாக இருந்த காரணத்தால் கைராட்டைச் சின்னம் கூடாது என்று எடுத்து விட்டார்கள். பிறகு ஜனதா ஆட்சி வந்தபிறகு அதற்காகக் குரல் கொடுத்து மீண்டும் அந்தக் கைராட்டைச் சின்னம் அங்கே வைக்கப்பட்டது.

காமராஜருக்கும் எங்களுக்கும் எத்தனையோ கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் நாங்கள் ஏற்றுக் கொண்ட தியாகச் சுடர், தியாகச் செம்மல் பெருந் தலைவர் காமராஜர், அவரை நாங்கள் பெருமைப் படுத்தினோம். அவரைப் பெருமைப்படுத்துவது, நாம்

நம்மைப் பெருமைப்படுத்திக் கொள்வது போலாகுமே என்ற காரணத்திற்காக.

அதைப்போலவே மூதறிஞர் ராஜாஜி மறைந்த போது, அவருக்காக ஒரு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும் என்ற கோரிக்கை வந்தது. சில பேர் சொன்னார்கள்; ''ஏற்கனவே ராஜாஜி மண்டபம் பெரிய அளவில் இருக்கிறது'' என்று. இருந்தாலும் அவருடைய மறைவுக்குப் பின்னர் ஒரு நினைவுச் சின்னம் வேண்டும் என்று அதையும் கிண்டியிலே காந்தி மண்டபத்திற்கு இன்னொரு பக்கத்திலே – ஒரு பக்கத்திலே காமராஜர் மண்டபம் – இன்னொரு பக்கத்திலே ராஜாஜி மண்டபத்தை எழுப்பியவனும் நான்தான். ''அதற்கு என்ன சின்னம் வைக்கலாம்'' என்று கேட்டபோது நான் சொன்னேன்: ''எனக்கும் இராமாயணத்துக்கும் எவ்வளவு தூரம் என்று உங்களுக்குத் தெரியும். இருந்தாலும் கூட, 'ராஜாஜி இராமாயணத்திலே மிகுந்த பற்றுடையவர். ''சக்கரவர்த்தி திருமகன்'' என்ற ஒரு தொடரோவியமே எழுதியவர். எனவே அந்த மண்டபத்தினுடைய முகப்பு ராமருடைய கிரீடம் போல் இருக்க வேண்டும்'' என்று அதற்கு வரைபடம் வரைந்து கொடுத்தவனே நான்தான் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்படி தேசத்தியாகிகள் யாராக இருந்தாலும் அண்மையிலே கூட பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கு நினைவு மண்டபத்தை எழுப்பி திறந்து வைத்தேன். இன்றைக்கு எப்படி ஜீவா அவர்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டிருக்கிறார்களோ, அதைப் போல பக்தவத்சலம் அவர்களுடைய குடும்பத்தாரும் அந்த விழாவிலே கலந்து கொண்டு நன்றிப் பெருக்குடன் நினைவு கூர்ந்தார்கள். உரையாற்றினார்கள்.

பக்தவத்சலம் அவர்களுக்கும் எனக்கும் எந்த அளவிற்கு உறவு என்பது உங்களுக்குத் தெரியும்.

ஆனால் அவர் ஆற்றிய தொண்டு, அவர் செய்த தியாகம், அவர் நாட்டு விடுதலைக்காகச் சிறைப்பட்ட அந்த நாட்கள் இவைகள் எல்லாம் மதிக்கத் தகுந்தவை, மரியாதைக்கு உகந்தவை என்பதால்தான் பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கு நினைவு மண்டபம் எழுப்பப்பட்டிருக்கின்றது.

அண்ணன் ஜீவானந்தம் அவர்களை நான் இளமைக்காலம் தொட்டு அறிவேன். அவர்கள் தந்தை பெரியார் அவர்களுடைய வழியில் சுயமரியாதைக் காரராக விளங்கியவர். அவர் அரசியலிலே காங்கிரஸ் இயக்கத்திலே இருந்து, பின்னர் பொதுவுடமை இயக்கத்திலே இருந்து பணியாற்றினார் என்றாலும் கூட, இறுதிக் காலம் வரையிலே சுயமரியாதைக்காரராக வாழ்ந்தவர்தான் அண்ணன் ப. ஜீவானந்தம் அவர்கள். அவரோடு நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பை நான் பெற்றவன். அறிஞர் அண்ணா அவர்கள் ஜீவானந்தம் அவர்களிடத்திலே பெரு மதிப்புக் கொண்டவர்கள். இன்னும் சொல்ல வேண்டுமேயானால், அவருடைய எளிமையான வாழ்க்கை பொதுவாழ்வில் ஈடுபட்டிருக் கின்ற அரசியல்வாதிகள் அத்தனை பேருக்கும் ஒரு பாடமாக அமைய வேண்டும்.

அவர் இறுதியாக மறைந்தபோது மருத்துவ மனையில் பக்கத்திலே கூட யாரும் இல்லாத சூழ்நிலையில் இரவு அவர் மறைந்து விட்டார். விடியற் காலையில் எனக்குச் செய்தி வந்தது. ''ஜீவா மறைந்து விட்டார். சென்னை மருத்துவமனையில் அவருடைய உடல் இருக்கிறது'' என்ற செய்தி வந்தது. உடனே நான் அண்ணாவினுடைய வீட்டிற்குக் காரிலே சென்று, அண்ணாவை அழைத்துக் கொண்டு நானும் அண்ணாவும், என்.வி. நடராசனும் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று மருத்துவமனையிலே அந்த

எளிய மனிதர், அந்த இரும்பு மனிதர், எழுச்சி யுகம் காண்பதற்கு புரட்சிக் கீதங்களைப் பாடிய அந்தப் பெருமகன் ஜீவானந்தம் அவர்களுடைய உடல் மார்ச்சுவரியிலே (பிணக்கிடங்கு) வைக்கப்பட்டிருந்தது. மார்ச்சுவரியிலே வைக்கப்பட்டிருந்த உடலை வெளியே கொண்டு வந்ததைப் பார்த்து மாலை அணிவித்து விட்டு அவருடைய உடலை அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளை எல்லாம் கவனித்துவிட்டு, கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர்களுக்கெல்லாம் எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தை அன்றைக்குத் தெரிவித்துக் கொண்டோம் என்றால், எந்த அளவிற்கு பல்வேறு கருத்து வேறுபாடுகளுக்கிடையிலும் அண்ணன் ஜீவானந்தம் அவர்களிடம் மதிப்புக் கொண்டிருந்தோம், அன்பு வைத்திருந்தோம் என்பதற்கு இது எடுத்துக் காட்டு.

காங்கிரஸ்காரர்களாக இருந்தாலும், கம்யூனிஸ்ட் டாக இருந்தாலும், வேறு எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களை மதிக்கக் கூடிய அந்த மாண்பினை, பண்பினைப் பெற்றுள்ளது இந்த இயக்கம். அறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப் பட்ட இந்த இயக்கம். இன்னும் சொல்ல வேண்டு மானால், பச்சையாகச் சொல்ல வேண்டுமானால் மற்றவர்களை மதிக்கக் கூடிய இயக்கம். ஆனால் பொதுவாக நமது சமுதாயத்தில் இந்தப் பண்பாடு ஒருவழிப் பாதையாக இருக்கக் கூடாது. இதை நான் எல்லாக் கட்சியிலேயும் உள்ள தலைவர்களுக்கும், நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கும் காமராஜருடைய பிறந்தநாளில், நினைவு நாளில் நாங்கள் சென்று மலர்வளையம் வைக்கின்றோம். மாலை அணிவிக்கின்றோம். இன்றைக்கும் மூதறிஞர் ராஜாஜியினுடைய நினைவு

நாளில் நாங்கள் சென்று மலர் வளையம் வைக்கின் றோம். அவருடைய சிலைக்கு மாலை அணிவிக் கின்றோம். அம்பேத்கருக்கு அனைவரும் சென்று மாலை அணிவிக்கின்றோம். ஆனால் சில கட்சிக்காரர்கள் பெரியார் பிறந்தநாளில், பெரியார் மறைந்த நாளில் அவருடைய நினைவிடத்திற்குச் சென்று அல்லது அவருடைய சிலைக்கு மாலை அணிவிக்கின்ற அந்த மன இயல்பைப் பெற்றிருக்கின்றார்களா என்றால் இல்லை. அதைப் போல அண்ணா பிறந்தநாளில், அண்ணா மறைந்த நாளில் அவரை நினைவு கூர்கின்ற, அல்லது அவருக்கு அஞ்சலி செலுத்துகின்ற, அல்லது அவருடைய சிலைக்கு மலர் மாலை அணிவிக்கின்ற அந்த ஒரு வழிமுறையைப் பின்பற்றுகிறார்களா என்றால் இல்லை.

எனவேதான் சொல்லுகின்றேன். சமுதாயத்திலே ஒருவர் மறைந்து விடுவாரேயானால் கட்சிகளை மறந்து விட்டு அவர் எல்லோருடைய மனதிலும் நிறைந்தவர் என்கின்ற உள்ளத்தோடு நம்முடைய பண்பாட்டைக் காப்பாற்ற வேண்டும். அது ஒருவழிப் பாதையாக இருந்து விடக் கூடாது என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜீவானந்தம் அவர்களுடைய மணி மண்டபத்தைத் திறந்து வைக்கின்ற இந்த நேரத்தில் அவருடைய வாழ்க்கை இளைஞர்களுக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ள வாழ்க்கை. இளம் பிராயத்தில் அவர் பூதப் பாண்டியிலே உள்ள கிராமத்திலே சிறுவனாக, மாணவனாக இருந்தபோது, அந்தப் பூதப்பாண்டி கோயிலிலே சுண்டல் வழங்குவது வாடிக்கையாம். அப்படி வழங்குகின்ற சுண்டலைக் கூட அவர் தான் ஒருவரே தின்று மகிழாமல் பலரையும் அழைத்து வந்து பல மாணவர்களையும், சிறுவர்களையும், ஏழைச்

சிறுமிகளையும் அழைத்து வந்து அந்தச் சுண்டலை அவர்களுக்கெல்லாம் பகிர்ந்து கொடுத்துத்தான் தின்பார் என்பது அவருடைய இளம்பிராய வாழ்க்கையிலேயே கோடிட்டுக் காட்டப்படுகின்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகும்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

என்றார் வள்ளுவர். அந்த வள்ளுவருக்குத்தான் குமரி முனையிலே சிலை எடுத்துக் கொண்டிருக்கின்றோம். அந்த வள்ளுவரின் வழிநின்று தனக்குக் கிடைத்ததைப் பகிர்ந்து உண்ணுகின்ற அந்தப் பழக்கத்தை இளம் பிராயத்திலேயே அண்ணன் ஜீவா அவர்கள் பெற்ற காரணத்தால்தான் எல்லோருக்கும் சமத்துவம், சமதர்மம் வேண்டும் என்ற கொள்கை உடைய பொதுவுடமை இயக்கத்தில் அவர் தன்னை இணைத்துக் கொள்ள முடிந்தது!

தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் என்று இளம் பிராயத்திலேயே அவர் கொண்ட கொள்கையின் காரணமாகத்தான் வைக்கத்தில் தந்தை பெரியார் அவர்கள் தீண்டாமையை ஒழிப்பதற்காக நடத்திய போராட்டத்தில் அண்ணன் ஜீவானந்தமும் அன்றைக்கே கலந்து கொள்ள வேண்டிய நிலைமை இருந்தது.

இவைகள் எல்லாம் நம்முடைய சமுதாயத்திலே எதிர்கால மன்னர்களாக விளங்க வேண்டிய இளைஞர் கள் படித்துப் பின்பற்ற வேண்டிய கொள்கைகளாகும். இந்தக் கொள்கைகளை எல்லாம் இந்த மாவட்டத்திலே உள்ள மக்களுக்குப் புதிதாக நான் சொல்ல வேண்டிய தில்லை. ஏனென்றால் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் ஒரு சில

மாவட்டங்களைப் போல அறிவில் சிறந்த மாவட்டம். எதையும் தெளிந்து தீர்க்கமாக முடிவெடுக்கக் கூடிய மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம். அதனால்தான் இந்தத் தேர்தலிலே கூட ஒரு தீர்க்கமான ஒரு முடிவை கன்னியாகுமரி மாவட்டம் எடுத்தது என்பதை (கைதட்டல்) எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் எல்லாம் எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். ''அப்படிப்பட்ட மாவட்டத்திற்கு ஏதாவது செய், ஏதாவது செய்'' என்று என்னை அடிக்கடி கேட்கிறீர்களே! நான் கேட்கிறேன்; காமராஜர் மண்டபம் கட்டச் சொல்லிக் கேட்கிறீர்கள். உங்கள் விருப்பப்படியே அவருடைய அஸ்தி கரைக்கப்பட்ட இடத்தில் கடற்கரையில் அந்த மண்டபம் கட்டப்படும் என்ற உறுதியை (பலத்த கைதட்டல்) இங்கே அளிக்கின்றேன்.

''இது சட்டசபையிலே அறிவிக்க வேண்டிய உறுதி அல்லவா?'' என்று கேட்கத் தேவையில்லை. சட்டசபை நிகழ்ச்சிக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. எனவே அந்த உறுதியை அளிக்கின்றேன்.

திருவள்ளுவர் சிலை அங்கே அமைகிறது. 1975-ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக அன்றைக்கு இருந்தபோது அமைச்சரவைக் கூட்டத்திலே எடுத்த முடிவுதான் இங்கே திருவள்ளுவர் சிலை அமைக்க வேண்டும் என்பதாகும். அதற்குப் பிறகு அதன் பணி தொடங்குகின்ற விழா, நான் 1989-ஆம் ஆண்டு முதலமைச்சராக வந்த பிறகு, கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரை ஓரத்தில் நடைபெற்றது. ஏறத்தாழ 20 அல்லது 25 ஆண்டு காலப்பணி அது. அதனால்தான் ஒரு கோடி ரூபாய், இரண்டு கோடி ரூபாய் செலவிலே முடிவடையக் கூடிய அந்தச் சிலை இன்றைக்கு 8 கோடியைத் தாண்டி செலவாகும் போல் தெரிகிறது. 8 கோடி ஆனாலும் எத்தனை கோடி ஆனாலும் அங்கே அமைக்கப்படுகின்ற

சிலை, உலகத்து மக்களெல்லாம், சுற்றுலாப் பயணிகள் எல்லாம் வந்து காண்கின்ற ஓர் அற்புதமான சிலையாக அங்கே அமையும் என்ற அந்த மகிழ்ச்சி எனக்கு இருக்கின்றது. அந்தச் சிலையினுடைய திறப்பு விழாவும் இந்த ஆண்டு இறுதியிலே அல்லது அடுத்து ஆண்டுத் தொடக்கத்திலே நிச்சயமாக நடைபெறும் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எடுத்து வைத்துள்ள இந்த மாவட்டத்தைச் சார்ந்த பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான பரிசீலனையில் இந்த அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, கோரிக்கைகள் வைத்த நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

19-4-98 அன்று நாகர்கோவிலில்
ஜீவானந்தம் மணிமண்டபத் திறப்பு
விழாவில் ஆற்றிய உரை

13

மே தின விழா

பாட்டாளிப் பெருமக்கள் அனைவருக்கும் மே தின வாழ்த்துக்களை, இதயமார்ந்த நல்வாழ்த்துக்களை வழங்குகின்ற வாய்ப்பினைப் பெற்று உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கின்றேன்.

இங்கே உரையாற்றிய நம்முடைய கழகத்தின் காவலர்கள், மற்றும் அமைச்சர் பெருமக்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் மே தின விழாவின் சிறப்புகளையெல்லாம் எடுத்துக்கூறி, தி.மு.கழக தொடர் புடைய தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை இந்த விழாவை நடத்துவதற்கு எந்த அளவுக்குக் கடமையும், உரிமையும் பெற்றது என்பதை எடுத்து விளக்கியிருக் கின்றார்கள்.

இந்த மே முதல் நாளை தொழிலாளர் வர்க்கத்தினுடைய நாளாக மாத்திரமல்லாமல் ஒரு காலத்தில் ஐரோப்பாவினுடைய வட பாகத்திலே உள்ள பல நாடுகள் – பழைய காலத்தில் பண்டிகை நாளாகக் கொண்டாடப்பட்டதும் உண்டு. ரோமாபுரியில் மே முதல் நாளில் தொழிலாளர்களுக்கான நாள் இது என்று சுட்டிக்காட்டப்படாத அந்தக் காலக் கட்டத்தில், பூக்களின் தேவதையாக வணங்குவதற்காக மே முதல் நாளைக் கொண்டாடி இருக்கின்றார்கள்.

இங்கிலாந்தில் மே முதல் நாளில் சிறுவர்களும், சிறுமியரும் அதிகாலை நேரத்தில் பூக்களைக் கையிலே ஏந்திக்கொண்டு ஓரிடத்தில் கூடி, ஒரு கம்பம் நட்டு அதற்கு (May Pole) "மே கம்பம்" என்று பெயரிட்டு மலர்க் கொத்துக்களை வண்ண வண்ண ரிப்பன்களை அந்தக் கம்பத்திலே கட்டி, அந்தக் கம்பத்தைச் சுற்றி சுற்றி நடனமாடுவார்கள்.

அமெரிக்காவில் அந்தக்காலத்தில் இந்த நாளில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில், சிறு காகிதக் கூடைகளைச் செய்து அதிலே மலர்களை நிரப்பி, நண்பர்களுடைய வீட்டுக் கதவுகளிலே தொங்கவிட்டு மகிழ்ச்சி அடைந்தார்கள். இன்றைக்கும்கூட அந்த மகிழ்ச்சியிலே ஈடுபடுகின்றார்கள்.

எனவே, இந்த நாள் பல்வேறு நாடுகளில் உற்சாகத் திருவிழாவாக ஒரு பண்டிகை போல கொண்டாடப்பட்ட காலமெல்லாம் உண்டு. ஆனால், அந்தக் காலம் மாறி, இது பாட்டாளி வர்க்கத்தின் பெருநாளாகக் கொண்டாடு கின்ற ஒரு நாள் தோன்றியது. அந்த நாள்தான் எனக்கு முன்னால் பேசிய நண்பர்களெல்லாம் எடுத்துக்காட் டியதைப் போல் 1881–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7–ஆம் நாள் அமெரிக்காவிலே உள்ள – ரஷ்யாவிலே அல்ல, சைனாவிலே அல்ல – அமெரிக்காவிலே உள்ள தொழிற் சங்கங்களுடைய கூட்டமைப்பு நடைபெற்றது. "1886 மே முதல் நாள் முதல் ஒரு நாளைக்கு எட்டு மணி நேர வேலை சட்டப்பூர்வமாக ஆக்கப்படவேண்டும்" என்ற கோரிக்கையை முன்வைத்து போராட்டம் தொடங்குவது என்று முடிவு செய்தது.

முடிவு செய்தது 1884–ஆம் ஆண்டு. போராட்டம் தொடங்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்ட ஆண்டு

1886. அதற்குப் பிறகு உலகமெங்கும் இந்தப் போராட்டத்தினுடைய சாயல் விழத் தலைப்பட்டு – குறிப்பாகவும், சிறப்பாகவும் சிகாகோ நகரத்தில் தொழிலாளத் தோழர்கள் இந்தப் போராட்டத்திலே தீவிரமாக ஈடுபட்டதன் காரணமாக அடக்குமுறைகளுக்கு ஆளாகி தூக்குக் கயிறுகளை முத்தமிடக்கூடிய துன்பத் துயரங்களை யெல்லாம் ஏற்றுக்கொண்டு, 1889–ஆம் ஆண்டு முதல் அந்த நினைவைப் போற்றுகின்ற வகையிலும், நினைவைப் போற்றுகின்ற நேரத்தில் தொழிலாளர் வர்க்கத்தினுடைய நெஞ்சில் நெருப்பை மூட்டுகின்ற வகையிலும், அந்த நெருப்பை மூட்டுகின்ற காரணத்தால் ஒரு புரட்சியை உருவாக்குகின்ற வகையிலும், அந்தப் புரட்சி தொழிலாளர்களுடைய வெற்றிப் புரட்சியாக மாற வேண்டும் என்பதற்கு அடையாளமாகவும், 1889–ஆம் ஆண்டு மே முதல் நாள் உலகமெங்கும் இந்த நாளைக் கொண்டாட வேண்டும் என்று குறிப்பிட்டு – அதுவும் அமெரிக்கத் தொழிலாளர் களுடைய கூட்டமைப்பு இதனை அறிவித்து அந்த ஆண்டு முதல் உலக மெங்கும் இந்த நாள் கொண்டாடத் தொடங்கப்பட்டது.

இங்கே பேசியவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல், இந்தியாவிலேயே முதன்முதலாக இந்த மே தினவிழா நம்முடைய தமிழகத்திலேதான் கொண்டாடப் பட்டது. தம்பி இரகுமான்கான் இங்கே குறிப்பிட்டதைப் போல் 1923–ஆம் ஆண்டு மே முதல் நாள் சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற மே தின விழா பகுத்தறிவுப் பகலவனாக, சிந்தனைச் சிற்பியாக நடமாடிக் கொண்டிருந்த மா. சிங்காரவேலர் அவர்களுடைய தலைமையிலேதான் அந்த விழா அன்றைக்கு நடைபெற்றது.

அந்தக் கூட்டத்திலேதான் சிங்காரவேலர் அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். ‘‘மே தினத்தன்று ஊதியத்தோடு கூடிய விடுமுறை தொழிலாளர்களுக்கு வழங்கப்பட

வேண்டும்'' என்ற கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கை 47 ஆண்டுகளுக்குப் பிறகு அடியேன் முதலமைச்சராக பொறுப்பேற்றிருந்த காலத்தில் நிறைவேறியது. திராவிட இயக்கத்திற்கும், மே தினத்திற்கும் மே தினம் என்று அடையாளத்திற்காகச் சொல்கிறேன், தொழிலாளர் வர்க்கத்திற்கும் எவ்வளவு தொடர்பு உண்டு என்பதை எனக்கு முன்னால் உரை யாற்றியவர்கள் சுட்டிக் காட்டியிருக்கின்றார்கள். அதிலும் குறிப்பாக இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழகத் திலேதான் மே தின விழா கொண்டாடப்பட்டது என்பது மாத்திரமல்ல. இந்தியாவிலே தொழிற்சங்கம் கூட தமிழகத்திலேதான் அதுவும் சென்னை மாநகரத்திலே தான் முதன் முதலாகத் தொடங்கப்பட்டது.

பொதுவுடைமைப் பூங்காவாக திகழ்ந்த ரஷ்ய பூமிக்கு நம்முடைய மாபெரும் தலைவர் தந்தை பெரியார் தான் இந்தியாவிலேயே முதன்முதலாகச் சென்று சுற்றுப்பயணம் செய்து அந்தக் கொள்கைகளால் ஈர்க்கப் பட்டு அவைகளைத் தமிழகத்திலே கொண்டு வந்து பறைசாற்றிய அந்தப் பெருமையும் இந்த இயக்கத்திற்கு உண்டு, தமிழகத்திற்கு உண்டு என்பதை நீங்கள் அறிவீர்கள்.

1929–ஆம் ஆண்டு செங்கற்பட்டிலே ஒரு சுயமரியாதை மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் பல முற்போக்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. உங்களுக்கு நினைவிருக்கும் – நான் ஏற்கனவே சட்டப் பேரவையில் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். ஆண்களைப் போல பெண்களுக்கும் சொத்தில் சமஉரிமை வேண்டும் என்ற தீர்மானம் 1929–ஆம் ஆண்டு செங்கற்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில்தான் நிறைவேற்றப் பட்டது. அந்தத் தீர்மானத்தையும்கூட 60 ஆண்டுகளுக்குப் பிறகு 89–ஆம் ஆண்டு சட்டமாக்கிய அந்த வாய்ப்பு

எனக்குத்தான் கிடைத்தது – இந்த ஆட்சிக்குத்தான் கிடைத்தது என்பதை அறிவீர்கள். (கைதட்டல்)

அதே செங்கற்பட்டு மாநாட்டில், தொழிலாளர் களுக்காக ஒரு புரட்சிகரமான தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. ''தொழிலாளர்கள் அவர்கள் ஆற்றுகின்ற பணிக்கு ஏற்பவும் அவர்களுடைய தேவைக்கு ஏற்பவும், ஊதியம் பெற்றாக வேண்டும். அந்த ஊதியத்தை அவர்களுக்கு வழங்கியாக வேண்டும்'' என்ற தீர்மானம் மாத்திரமல்ல, அப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருந்த தென்னிந்திய ரெயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் அன்றைய சுயமரியாதை இயக்க மாநாட்டில் அந்த வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவாக ஒரு தீர்மானம் நிறைவேற்றி அந்த வேலை நிறுத்தத்தை அடக்குவதற்காக நடைபெற்ற, அடக்கு முறைகளை யெல்லாம் கண்டித்தும், 1929–ஆம் ஆண்டில் நடைபெற்ற செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதற்கு முன்பு 1921–ஆம் ஆண்டு ஒரு நிகழ்ச்சி. இங்கே பேசப்பட்டது. பக்கிங்ஹாம் ஆலை. அந்த ஆலை ஏறத்தாழ 13 ஆயிரம் தொழிலாளர்களைக் கொண்ட ஆலை. அந்தத் தொழிற்சங்கத்தின் தலைவர் தமிழ்த் தென்றல் திரு.வி.க. – தமிழுக்குத் தென்றல் அவர். தொழிலாளர்களுக்காகப் புயலாக மாறக்கூடியவர். அந்தத் தமிழ்த்தென்றல் திரு.வி.க.வினுடைய தலைமையில் 13 ஆயிரம் பாட்டாளி மக்களும் 6 மாத காலம் போராட்டம் நடத்தினார்கள். அந்த ஆலை நிர்வாகத்தை எதிர்த்து போராட்டம் நடத்தினார்கள்.

வெலிங்டன் பிரபு அன்றைக்கு கவர்னர். ஆங்கில ஏகாதிபத்தியத்தின் காவலனாக லார்ட் வெலிங்டன் வீற்றிருந்த காலம். அவர் அந்தப் போராட்டத்தை எதிர்த்து ஒரு வழக்குப் போட்டது மாத்திரமல்ல, அந்த

அடிப்படையிலே அந்தப் போராட்டத்தின் தளநாயகன் திரு.வி.க. அவர்களை நாடுகடத்துகின்ற ஆணையைப் பிறப்பித்தார். அப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருந்த ஆட்சி நீதிக்கட்சியினுடைய ஆட்சி. சொல்லப் போனால் திராவிட இயக்கத்தினுடைய ஆட்சி. பனகல் அரசர் அன்றைய முதலமைச்சர். அப்பொழுதெல்லாம் பிரிமியர் – பிரதமர் என்று பெயர்.

இங்கே கட்டப்பட்டிருக்கிறதே பெரிய கட்டிடம் "பனகல் மாளிகை" இந்த சைதைத் தொகுதியினுடைய முகப்பில் – அந்தப் பனகல் மாளிகை என்ற பெயருக்குச் சொந்தக்காரர். அந்தப் பனகல் அரசர் அன்றைக்கு ஆட்சியின் தலைவராக இருக்கிறார்.

திரு.வி.க. நாடு கடத்தப்பட வேண்டுமென்று வெலிங்டன் பிரபு உத்தரவிடுகிறார். திராவிட இயக்கத் தின் தலைவர்கள் – வழித்தோன்றல்கள், முன்னோடிகள் நடேசனார், தியாகராயர் இவர்கள் இருவரும் ஆட்சியின் தலைவர் பனகல் அரசரைச் சந்தித்து "உடனடியாக நீங்கள் சென்று வெலிங்டன் பிரபு இடத்திலே கண்டிப் பாகச் சொல்லிவிடுங்கள். தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களை நாடு கடத்தினால் அமைச்சரவை பதவி விலகும் என்று சொல்லுங்கள்" என்று குறிப்பிட்டு அவர்களை வெலிங்டனுடைய மாளிகைக்கு அனுப்பி வைக்கிறார்கள்.

அவ்வாறு பனகல் அரசர் – நீதிக் கட்சியினுடைய தலைவர் – நீதிக் கட்சியினுடைய முதல்வர், தியாகராயருடைய வேண்டுகோளை, டாக்டர் நடேசனாருடைய வேண்டுகோளை ஏற்று வெலிங்டன் பிரபுவைச் சந்திக்கிறார். "தொழிலாளர் போராட்டத்திற் காக, அதற்குத் தலைமை ஏற்றதாக திரு.வி.க.வை நாடு கடத்தக்கூடாது" என்று சொல்கிறார். அதை வெலிங்டன் மறுக்கிறார் "நீங்கள் மறுத்தால் நாங்கள் பதவியிலிருந்து விலகுவோம்." என்று பனகல் அரசர் சொல்கிறார்.

உடனடியாக அந்த உத்தரவை வாபஸ் பெற்று "நீங்கள் பதவியில் இருங்கள். நான் தமிழ்த் தென்றல் திரு.வி.க.வை நாடு கடத்த மாட்டேன்" என்று அன்றைக்கு ஆங்கில ஏகாதிபத்தியம் வளைந்து கொடுத்தது என்றால் அதற்குக் காரணம் அன்றைய நீதிக்கட்சியினுடைய ஆட்சி. அந்த ஆட்சியை முன்னின்று நடத்திக் கொண்டிருந்த தலைவர்கள் தியாகராயர், நடேசனார் போன்றவர்கள். அந்த வழிவந்த இயக்கம்தான் திராவிட இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம்.

தி.மு.கழகம் ஆட்சிபொறுப்புக்கு வந்த பிறகு தொழிலாளர்கள் நலனில் எவ்வளவு அக்கறையோடு எத்தகைய திட்டங்களை எல்லாம் நிறைவேற்றியது என்பதை இங்கே வரிசைப்படுத்திக் காட்டியிருக்கின் றார்கள். அவைகளை நான் ஒவ்வொன்றாகச் சுருக்கமாக எடுத்து வைக்க விரும்புகின்றேன்.

1968–ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சியிலேதான் தோட்ட நிறுவன சட்டத்தின்கீழ், மலைத் தோட்டங்களில் மருத்துவத் திட்டங்களைச் செயல்படுத்தினோம்.

69–ஆம் ஆண்டு தொழிலாளர் நலத்துறைக்கு முதன் முதலாக ஓர் அமைச்சரை நியமித்ததும் தி.மு.கழக அரசுதான்.

நண்பர்கள் எல்லாம் எடுத்துக்காட்டியதைப் போல் இதே நாளுக்கு ஊதியத்தோடு கூடிய விடுமுறை வழங்கியதும் தி.மு.கழக அரசுதான். (கைதட்டல்)

மாநில அளவிலே மாத்திரம் அது இல்லாமல் இந்திய பூபாகம் முழுவதும் இந்த விடுமுறை தேவை என்பதை வலியுறுத்தி வி.பி.சிங் பிரதமராக இருந்த காலத்தில், அவருக்கு வேண்டுகோள் விடுத்து, அதை அவர் உடனடியாக ஏற்றுக்கொண்டு "இந்தியா முழுமைக்கும் 'மே' நாள் விடுமுறை நாள்" என்று வி.பி.சிங் அவர்கள் அறிவித்ததும் நாம் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாகத்தான்.

தொழிலாளர்கள் நலன் கருதி, தொழிலாளர் நலநிதி உருவாக்கப்பட்டு அதனை நிர்வகிக்கத் தொழிலாளர் நலவாரியம் ஒன்றை 1971–ஆம் ஆண்டில் தோற்றுவித்தது கழக ஆட்சிதான்.

தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கு இலவச மருத்துவ சிகிச்சை அளிக்க சட்டத்தில் வழி வகை செய்தது தி.மு.கழக ஆட்சிதான்.

தொழிலாளர்கள் நலன் கருதி, 72–லிருந்து தொழிலாளர்கள் ஓய்வு பெறும் போது அரசு ஊழியர் களுக்கு உள்ளது போல் பணிக் கொடை வழங்கும் திட்டம் கண்டது தி.மு.கழக ஆட்சிதான்.

விபத்தால் பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கும் லாரி, ஆட்டோ, தனியார் கார், டாக்சி, பேருந்து ஆகியவற்றின் ஓட்டுநர்களுக்கும், கட்டிட கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், தகுந்த நிவாரணங்கள் வழங்கப்படுவதன் மூலம் அவர்களின் குடும்பத்தாருடைய துயரங்களைத் துடைக்கும் வகையில் தொழில்–விபத்து நிவாரண நிதி ஒன்றை 1972–ஆம் ஆண்டிலேயே உருவாக்கியது தி.மு.கழக ஆட்சிதான்.

பெண் தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் துணைவியர்க்குத் தையல் பயிற்சி வகுப்புகளையும் அவர்தம் குழந்தைகளுக்காக கிண்டர் கார்டன் வகுப்புகளைக் கொண்ட நல மையங்களையும், 72–ஆம் ஆண்டிலேயே சென்னை, மதுரை, கோவை ஆகிய மாநகரங்களில் தொடங்கியது கழக ஆட்சிதான்.

நல்ல சங்கத் தலைவர்களை உருவாக்குதல், தொழிலாளர்கள் மற்றும் தனி அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தல், தொழிலாளர் துறை அலுவலர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி அளித்தல், ஆகியவற்றின் பொருட்டு 73–ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் கண்டது கழக ஆட்சிதான்.

ஒப்பந்த தொழிலாளர்களின் நலன் கருதி 71–இல் தனியே சட்டம் கண்டது கழக அரசுதான். அச்சட்டத்தில் 75–ஆம் ஆண்டில் மேலும் சில விதிகளை உருவாக்கி ஒப்பந்தத் தொழிலாளர்களின் நலன் காத்தது கழக ஆட்சிதான்.

சட்டப் பேரவையில் மார்க்சிஸ்ட் கட்சியினுடைய தோழர் வரதராஜன் அவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று உடனடியாக ஒரே வாரத்தில் மே தினப் பூங்காவை உருவாக்கி அங்கே மே தின நினைவுச் சின்னத்தை அமைத்ததும் தி.மு.கழக ஆட்சிதான்.

இவைகளுக்கெல்லாம் மேலாக இங்கே நம்முடைய தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலாளர் நல அமைச்சர் என அனைவரும் எடுத்துக்காட்டியதைப் போல் அமைப்பு ரீதியிலே இல்லாத தொழிலாளர்களுக்குப் பல்வேறு தொழிலாளர்களின் நலத் திட்டங்கள் சென்றடைவதில்லை. இப்பயன்கள் அவர்களைச் சென்றடையும் பொருட்டு 97-98-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் இந்தத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராயக் குழுக்கள் அமைக்கப் பட்டன.

இக்குழுக்கள் பரிந்துரைத்தவாறு அமைப்பு ரீதியிலே இல்லாத தொழிலாளர் நல வாரியம் ஒன்றை இந்த ஆண்டிலே அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இந்த வாரியத்தின் மூலமாகப் பயன் பெற இருக்கிற தொழிலாளர்கள் யார்? யார்? சுமை தூக்கும் தொழிலாளர், தீப்பெட்டித் தொழிலாளர், சங்கங்கள் இல்லாத கைத்தறித் தொழிலாளர்கள், விசைத்தறித் தொழிலாளர்கள், செங்கல் தயாரிப்புத் தொழிலாளர், சாயம் ஏற்றும் பணியிலே ஈடுபடும் தொழிலாளர், முந்திரி உடைக்கும் தொழிலாளர், கயிறு தயாரிக்கும் தொழிலாளர், பந்தல் கட்டும் தொழிலாளர், அப்பளம் தயாரிக்கும் தொழிலாளர்,

செயற்கை வைரம் தீட்டும் தொழிலாளர், பொற்கொல்லர், முடி திருத்துவோர், சலவைத் தொழிலாளர், மண் பாண்டம் தயாரிப்போர், அச்சுத் தொழிலாளர், சமையல் மற்றும் போட்டோ தொழிலாளர், தனியார் கடைகளில் பணிபுரிவோர், தையல் தொழிலாளர், சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர், ஆட்டோ ரிக்ஷா ஓட்டுபவர், வாடகைக் கார் ஓட்டுபவர், உப்பளத் தொழிலாளர் போன்ற 43 வகை அமைப்பு ரீதியிலே இல்லாத தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் ஏறத்தாழ 25 லட்சம் பேர் பயன் பெறக்கூடிய வாரியத்தை அமைத்து அறிவித்து அதை நடைமுறைப்படுத்த இருப்பதும் தி.மு.கழக ஆட்சிதான் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவற்றையெல்லாம் நான் எடுத்துக்காட்டியதன் மூலம் தமிழகத்திலே ஆட்சி வாயிலாக மாத்திரமல்ல, கட்சி வாயிலாக மாத்திரமல்ல. நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட 69-70-ஆம் ஆண்டு காலக் கட்டத்தில் தி.மு.கழகத்தின் சார்புடைய ஒரு தொழிற்சங்கப் பேரவை அமைய வேண்டும் என்று திருச்சியில் நடைபெற்ற தி.மு.கழகப் பொதுக்குழுவிலே தீர்மானம் நிறைவேற்றப் பட்டு அந்த அடிப்படையிலே நம்முடைய கழகக் காவலர்கள் தமிழகம் எங்கும் சுற்றிச் சுழன்று தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையை அன்றைக்கு அமைத்து இது வாழுமா? இது முன்னேறுமா? இதற்கு எதிர்காலம் உண்டா? என்றெல்லாம் ஆரூடங்கள் கணிக்கப்பட்டதையெல்லாம் துச்சமாக கருதி, துளிர் விட்டு வளர்ந்து இன்றைக்கு விழுது விட்டுள்ள நிலையிலே, ஒரு ஆலமரமாக தமிழகத்திலே காட்சி தருகின்ற இயக்கம்தான் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை என்னும் இந்த இயக்கம். (பலத்த கைதட்டல்)

இந்த முக்கியமான நாளில் இந்த இயக்கத்தின் சார்பாக நான் தி.மு.கழகத்தினுடைய தலைவனாக

இருந்தாலும்கூட, சார்புடைய ஒரு துணை அமைப்பு – தொ.மு.ச. அமைப்பு என்கின்ற முறையில் இங்கே உங்கள் முன்னிலையில் ஒரு தீர்மானம் அல்ல, ஒரு கருத்தை மொழிகின்றேன். இதை இந்த மே தின விழா பொதுக் கூட்டத்தினுடைய தீர்மானமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்திய நாட்டில் ஒரு கட்சி ஆட்சி என்பது இனி இல்லை.

தி.மு.கழகம் போன்ற மாநில கட்சிகள் இணைந்துதான் இனி மத்திய அரசு அமைய முடியும் என்ற நிலை உறுதியாகி விட்டது.

இந்த நிலையில் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மத்திய தொழிற்சங்க அமைப்பு உருவாக்கி தொ.மு.ச. பேரவை போல செயல்பட்டு வருகின்றன.

ஒரு கட்சி ஆட்சி இருந்தபோது மத்தியில் INTUC, AITUC, CITU போன்ற அமைப்புகள் மத்திய அரசின் அங்கீகாரம் பெற்றவையாக உள்ளன.

பெரும்பகுதி தொழிலாளர்களைக் கொண்ட மாநில அளவிலான தொ.மு.ச. பேரவை போன்ற அமைப்புகள் அங்கம் பெறாமல் எடுக்கப்படுகின்ற முடிவுகள், செயல்படுத்தப்பட வேண்டுமென்ற நிலை வரும்போது அந்தந்த மாநிலத்தில் உள்ள தொழிலாளர்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதாக இருக்கமுடியாது.

எனவே வாக்கெடுப்பு மூலம் அந்தந்த மாநிலத்தில் பெரும்பான்மை தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அமைப்பை மத்திய அரசு அங்கீகரிக்க வேண்டும் என்ற அந்தத் தீர்மானத்தை (பலத்த கைதட்டல்) அனைவரும் கையொலி செய்வது மாத்திர மல்ல. கை உயர்த்தி வழி மொழிந்திட வேண்டும் என்று உங்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்கிறேன்.

(கூட்டத்தில் அனைவரும் கையை உயர்த்தி கையொலி எழுப்பி வழிமொழிந்தனர்.)

இந்த அருமையான மே தின விழா நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்த தம்பி கிட்டுவுக்கும், பகுதிச் செயலாளர் ஸ்ரீதருக்கும் என்னுடைய பாராட்டுக்களை, வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இனி மே தினத்தையொட்டி சில அரசியல் கருத்துக்களை எதிர்பார்த்து வந்திருப்பீர்கள். நீங்கள் மாத்திரமல்ல, பத்திரிகையாளர்களும் வந்திருக்கிறார்கள். எனவே சில அரசியல் கருத்துக்கள்.

மே தினத்தைக் கொண்டாடுகிற இந்த நேரத்தில் வேறு சில கட்சிகளும், எப்பொழுதுமே உரிமை படைத்த கட்சிகள் அது, சி.பி.ஐ. கட்சியானாலும், சி.பி.எம். கட்சி யானாலும் மற்றும் கம்யூனிஸ்ட் பேரியக்கங்கள் இதற்கு உரிமை கொண்டாட நியாயபூர்வமான நிலை படைத்தவைகள்.

இங்கே பேசப்பட்டதே, தம்பி துரைமுருகன் சொன்னாரே, எஸ்.என்.பி. போராட்டம், நங்கவரம் போராட்டம், பேட்டைவாய்த்தலை போராட்டம் என்றெல்லாம் சொன்னாரே இவைகளெல்லாம் கருப்பா? சிவப்பா? என்றுகூட தெரியாத சில பிறவிகள் இன்றைக்கு மே தினம் கொண்டாடுகிறார்கள். கொண்டாடட்டும் வேண்டாம் என்று சொல்லவில்லை.

ஆனால், அப்படிக் கொண்டாடுகிற நேரத்திலே வேண்டுமென்றே தி.மு.கழகத்தின் மீதும் தி.மு.கழக ஆட்சியின் மீதும் புழுதி வாரித் தூற்றுகிற காரியத்திலே ஈடுபட்டிருக்கிறார்களே; அதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

ஜெயலலிதா அம்மையார் மே தினத்தையொட்டி இன்றைக்கு நடைபெற்ற ஒரு திருமணவிழாவிலே

பேசும்போது, கருணாநிதி ஏழைகளைக் கவனிப்பதே இல்லை. ஏழைகள் கருணாநிதியை மதிக்கவே மாட்டார்கள். ஏழைகள் ''கருணாநிதியை நம்பத் தயாராக இல்லை'' என்று இந்த ஏழைப்பங்காளர் – ஏழைப்பங்காளரோ அல்லது ஏழு பங்களாக்காரரோ (கைதட்டல்) அவர் சொல்கிறார். ''கருணாநிதியை ஏழைகள் நம்பத் தயாராக இல்லை'' நான்தான் ஏழைகளின் காவலன் என்று ஜெயலலிதா பேசியதைப் பத்திரிகைகளிலே கொட்டை எழுத்திலே போட்டிருக் கிறார்கள். படித்துப் பார்த்தேன்.

இந்த ஏழைப் பங்காளரைப் பற்றி எங்களுக்குத் தெரியாதா?

ஏழைப் பங்காளர் அ.தி.மு.க. ஆட்சி, அ.தி.மு.க. கட்சி இவைகளெல்லாம் ஆட்சியிலே இருந்தபோதும், கட்சி செல்வாக்கோடு இருந்த காலத்திலும் அந்தக் கட்சிக்கு அவைத்தலைவராக இருந்த ஈ.வி.ஏ. வள்ளிமுத்து கோவில்பட்டியைச் சேர்ந்தவர். அருமை நண்பர், எம்.ஜி.ஆர். காலத்திலேயே அ.தி.மு.க. கட்சியினுடைய அவைத் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தவர். அவர் திடீரென்று காலமாகிவிடுகிறார். நீண்ட காலம் வாழ்ந்தவர். திராவிட இயக்கத்தினுடைய ஆரம்ப காலத்திலே இருந்து, தந்தை பெரியார் காலத்திலே, அண்ணா காலத்திலே எங்களோடு எல்லாம் உறவாடி இந்த இயக்கத்தை வளர்த்தவர். அவர் எம்.ஜி.ஆர். அவர்களால் அ.தி.மு.க.வின் அவைத்தலைவராகப் பொறுப்பேற்றிருந்தார். ஜெயலலிதா காலத்தில் அ.தி.மு.க. வின் அவைத்தலைவராக இருந்த அவர் கோவில் பட்டியிலே மரணமடைந்தார். ஏழைகளுக்காகப் பாடுபடக் கூடிய இந்த அம்மையார் சென்றாரா? அந்தக் கட்சியினுடைய சாதாரண நிலையிலே இருந்தவரா அவர். கட்சியின் அவைத் தலைவர். அவருடைய மறைவுக்கே செல்லவில்லை.

அதற்கு மாறாக சில வாரங்களுக்குப் பிறகு இங்கே ஆந்திரத்தில் சுப்புராம் ரெட்டி என்ற ஒரு கோடீஸ்வரர் மறைந்துவிடுகிறார். அவர் மறைந்த செய்தி கேள்விப்பட்டதும் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா சிறப்பு விமானத்தில் – அரசாங்கத்திற்காக வாங்கி வைத்திருக்கிறாரே; 20 கோடி ரூபாயில் அந்தத் தனி விமானத்திலே ஏறிக் கொண்டு, அவரும் அவருடைய உடன் பிறவா...? இருவருமாக நெல்லூரோ அல்லது ஆந்திரத்திலே உள்ள வேறு ஓர் ஊருக்கோ சென்று சுப்புராம் ரெட்டிக்கு அஞ்சலி செலுத்திவிட்டு அந்த விமானத்திலே திரும்புகிறார்கள்.

சுப்புராம ரெட்டி ஏழை பாவம். கோடீஸ்வர ஏழை. எனவே, அங்கே விமானத்திலே செல்ல முடிகிறது. ஆனால், கட்சியினுடைய அவைத் தலைவராக இருந்த வள்ளிமுத்து கோவில்பட்டியிலே மரணமடைகிறார். அங்கே செல்ல மனம் வரவில்லை.

அவ்வளவு ஏன்? பக்கத்திலே ஆலந்தூரிலே மோகனரங்கம் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். காலத்திலே ராஜ்ய சபாவிலே உள்ள அ.தி.மு.க. உறுப்பினர்களுக்குத் தலைவராக இருந்தவர். அப்பொழுது ஜெயலலிதாவும் அங்கே ஓர் உறுப்பினர். அவர் மாரடைப்பால் மரணமடைகிறார். எல்லோரும் செல்லுகிறார்கள். பக்கத்திலே ஆலந்தூருக்குத்தான். அந்த மோகனரங்கம் பெயரால் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு கட்டிடத்திற்கே கூட பெயர் வைத்தார். அந்த அளவுக்கு அவரிடத்திலே எம்.ஜி.ஆருக்குப் பிரியம் உண்டு. எம்.ஜி.ஆர். இல்லாத காலத்தில் – அவர் மறைந்தபிறகு மோகனரங்கம் மாரடைப்பால் காலமாகிறார்.

ஆலந்தூர் என்ன அமெரிக்காவிலா இருக்கிறது? ஆனால் ஆந்திராவுக்குச் சென்று அந்த கோடீஸ்வர பிரபுவினுடைய உடலிலே மலர்மாலை வைக்கின்ற

ஏழைப்பங்காளிக்கு ஆலந்தூர் சென்று மோகனரங்கத் திற்கு அஞ்சலி செலுத்த இயலவில்லை. அவ்வளவு ஏன்? அண்ணா சமாதிக்கு இந்த ஆண்டு செல்லவில்லையே? அதற்கே பினாமி நெடுஞ்செழியனைத் தானே அனுப்பி வைத்தார். நாவலர் நெடுஞ்செழியன் அதற்கும் பினாமியாகத்தானே பயன்படுத்தப்பட்டார்.

அந்த நாவலர் நெடுஞ்செழியன் என்ன பேச்சு பேசுகிறார். அந்த அம்மையாரிடத்திலே அருமையான பட்டங்களையெல்லாம் பெற்றவர்! அம்மையார் ஜெயலலிதாவினுடைய திருவாய் மலர்ந்தருளி அவர் உதிர்த்த அருஞ்சொற்களுக்கெல்லாம் இலக்கணமாக நிற்பவர். ''உதிர்ந்த. . .'' மீதியை நீங்கள் பூர்த்தி செய்து கொள்ளுங்கள். (கைதட்டல்) தெரு. . . பாக்கியை நீங்கள் பூர்த்தி செய்து கொள்ளுங்கள். இப்படியெல்லாம் பட்டங்களைப் பெற்ற நாவலர் நெடுஞ்செழியன் சாபம் கொடுக்கிறார். ''என்மீது கேஸ் போடுகிறாயா? உருப்படுவாயா?'' என்று கேட்கிறார். வழக்கு இருக்கிறது நாவலர் நெடுஞ்செழியன்மீது, ஆனால் அவர் கைது செய்யப்படவில்லை. நீதிமன்றத்திற்குச் சென்று அவர் தன்னைக் குற்றமற்றவர் என்று நிரூபித்துக்கொள்வாரேயானால் எங்களுக்கு மகிழ்ச்சிதான்.

என்ன வழக்கு? மற்றவர்கள் மீதாவது டி.வி. வழக்கு டான்சி வழக்கு, நிலக்கரி வழக்கு, பங்களா வழக்கு, சொத்துச் சேர்த்த வழக்கு, இவர் வழக்கு செருப்பு வழக்கு, (பலத்த சிரிப்பு) கௌரவமாகச் சொல்கிறேன். காலணி வழக்கு. அதுவும் குழந்தைகளுக்குக் காலணிகள் அரசின் சார்பில் வாங்கிய வகையில் வழக்கு. அது ஓர் ஊழல். அந்த ஊழல் செய்த இந்திரகுமாரி 4 லட்சம் செருப்பு வாங்கவேண்டுமென்று சொன்னால், அதிலே அதிக ஊழல் செய்ய முடியாது என்பதற்காக 9 லட்சமாக வாங்கு என்று நிதியமைச்சர் கையெழுத்திட்ட வழக்கு.

இவர் ''என் மீது வழக்கா? நீ உருப்படுவியா?'' என்று கேட்கிறார். நான் சின்ன வயதில் கையிலே தமிழ்க்கொடி ஏந்திக் கொண்டு ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்; நீ தேடி வந்த கோழையுள்ள நாடு ஈதல்லவே என்று திருவாரூர் வீதியிலே கொடி பிடித்துச் சென்ற போது, என்னுடைய உற்றார் உறவினர்கள் எல்லாம் ''இவன் உருப்படமாட்டான்'' என்று சொன்னார்கள். நான் உருப்பட்டேனா இல்லையா என்று உங்களுக்குத் தெரியும். (கைதட்டல்)

இப்போது நாவலர் நெடுஞ்செழியன் சொல்கிறார். இவன் உருப்படவே மாட்டான். இவன் கட்சி உருப்படுமா? என்று. நான் என்ன கல்லால் கட்டி வைக்கப்பட்டவன் என்றா சொல்லிக்கொண்டிருக்கிறேன். யாரும் ஒரு காலத்திலே போகத்தான் போகிறார்கள். அப்போப்பட்ட அய்யாவே போய்விட்டார். அப்போப்பட்ட அண்ணாவே இல்லை. அப்போப்பட்ட புரட்சிக் கவிஞர் பாரதிதாசனே இல்லை. அப்போப்பட்ட காந்தியடிகளே இல்லை. அப்போப்பட்ட நேருவே இல்லை. நீங்களும் நானும் இன்னும் எவ்வளவு காலத்திற்கு இருக்கப் போகிறோம். நாவலர் நெடுஞ்செழியனைக் கேட்கிறேன். சாபமிடுவதுதான் இன்றைக்கு அரசியலா? ஆரூடம் கணியுங்கள் அது உங்கள் இஷ்டம். நான்கு தடவை ஆட்சிப் பொறுப்பில் இருந்துவிட்டோம். ஆட்சியைக் கலைப்போம் என்று சொல்கிறார்கள். ஏன் என்று கேட்டால், எல்லாம் கெட்டுப் போய்விட்டதாம்.

அண்ணாதான் அடிக்கடி ஒரு கதை சொல்வார். ஒரு வேடிக்கைக் கதை. ஆற்றிலே வெள்ளம், நரி ஒன்றை அடித்துக் கொண்டு போனதாம். அந்த நரி ''உலகம் போச்சு, உலகம் போச்சு'' என்று சத்தம் போட்டுக் கொண்டு போனதாம். கரையிலே இருந்தவர்கள் எல்லாம் திரும்பிப் பார்த்துவிட்டு உடனே ஓடிப்போய் அந்த

நரியை கரை ஏற்றி "உலகம் போச்சு, உலகம் போச்சு என்றாயே. எங்கே போச்சு?" என்று கேட்டார்களாம். அதற்கு அந்த நரி "என்னை நீங்கள் காப்பாற்றாமல் இருந்திருப்பீர்களேயானால் இந்நேரம் உலகம் போயிருக்கும் – என்னைப் பொறுத்தவரையிலும் போயிருக்கும்" என்றதாம்.

அதைப் போல ஜெயலலிதா உலகம் போச்சு, உலகம் போச்சு என்று சொன்ன நரியைப் போல சட்டம் போச்சு சட்டம் போச்சு என்று சொல்லுகிறார். சட்டம் ஒன்றும் போய்விடாது. சட்டம் இருக்கும். நிரந்தரமாக இருக்கும். நீங்கள் சந்து பொந்துகளில் கொஞ்சநாள் நுழைந்து விளையாடிப் பார்க்கலாம். அதற்குச் சில வழக்கறிஞர்களுடைய வாதங்கள் பயன்படலாம். ஆனால், நீதி சாயாது. சாய்ந்தாலும் மதுரையிலே எப்படி நிமிர்ந்ததோ, அதைப் போல நீதி சாய்ந்தாலும் மதுரையிலே நிமிர்த்தி வைக்கப்பட்டதைப் போல நீதி நிமிர்த்தி வைக்கப்படும் என்பதைப் புரட்சி கரமான மே தின விழாவிலே ஜெயலலிதாவுக்கு எச்சரிக்கையாக அறிவிக்கின்றேன்.

1-5-98 அன்று மே தின விழாவில்
ஆற்றிய உரை

14

காரல் மார்க்சின் மொழிபெயர்ப்பு நூல்கள் (ஜமதக்னி) வெளியீட்டு விழா

சற்றொப்ப இரண்டரை மணி நேரம் கலைவாணர் அரங்கத்தில் நாமெல்லாம் பல்வேறு செய்திகளைப் பரிமாறிக் கொள்கின்ற வாய்ப்பினைப் பெற்று விரைவில் உங்களுக்கெல்லாம் இந்த மண்டபத்திலிருந்து விடுதலை அளிப்பேன் என்ற உறுதியையும் வழங்கி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

"காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் – அவன் காணத் தகுந்தது வறுமையா? பூணத் தகுந்தது பொறுமையா?" என்ற கேள்வியைப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுப்பினார். இந்தக் கேள்விக்கு விடை காணும் அந்த வழியைத்தான் நூற்றாண்டுக் காலமாக உலகத்திலே உள்ள பல சிந்தனையாளர்கள் தேடித் தேடி அதிலே மாபெரும் சிந்தனையாளனாகக் கார்ல் மார்க்ஸ் தோன்றி இந்த மூலதனத்தை இந்தியாவிலேயே முதன்முதலாக நம்முடைய இந்திய மொழியில் – அதுவும் நம்முடைய தமிழ் மொழியிலேயே முழுவதும் மொழியாக்கம் செய்து தந்த பெருமை – அந்தப் பெருமையை நாமெல்லாம் பெற்று மகிழ்கின்ற இந்த நல்ல வாய்ப்பான நேரத்தில் இல்லை என்றாலும் கூட அந்தப் பெரும் மொழிப்புலவர் ஜமதக்னி அவர்களுக்குத்

தமிழ்ச் சமுதாயம், இலட்சிய வெறி கொண்ட இளைஞர் சமுதாயம், தொழிலாளர் வர்க்கம் என்றென்றும் தன்னுடைய பாராட்டுக்களையும், நன்றியையும் காணிக்கையாக்கத் தயாராக இருக்கின்றது.

இந்த நூலை வெளியிடுவதற்காக நம்முடைய நாகநாதன் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பற்றி இங்கே பேசிய முனைவர் பேராசிரியர் ஜெகதீசன் குறிப்பிட்டார் என்று கருதுகிறேன்.

திருவள்ளுவர் இன்றைக்கு இருந்தால்,
மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல் எனுஞ் சொல்

என்ற குறளை மாற்றி "மருமகன் மாமனாருக்கு ஆற்று'ம் உதவி என்று பாடியிருப்பார்" என்று குறிப்பிட்டார். திருவள்ளுவர் இருந்தால் அப்படி வெண்பா பிழையாக நிச்சயமாகப் பாடமாட்டார் (கைதட்டல்) என்பதை நான் ஜெகதீசனுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

வள்ளுவரே சரியாகத்தான் பாடியிருக்கிறார்,
மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல் எனுஞ் சொல்

எனும்பொழுது, குறளிலே மகன் என்று வருகின்ற இடமெல்லாம் அது மகனை மாத்திரம் குறிப்பதல்ல, மகளையும் குறிப்பதுதான். இதை குறளுக்கு உரை கண்ட பல புலவர்கள் நமக்கு உணர்த்தியிருக்கின்றார்கள்.

எனவே, "மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனுஞ் சொல்" என்ற இடத்தில் மகன் என்று மாத்திரம் எடுத்துக்கொள்ளாமல், "மகள் தந்தைக்கு ஆற்றும் உதவி இவள் தந்தை என்னோற்றான் கொல் எனுஞ்சொல்" என்று எடுத்துக்கொண்டால், "அது எப்படி நாகநாதன் அல்லவா

இதைப் பதிப்பித்தார். எப்படி மகளுக்கு இந்தப் பெருமை சேரும்?'' என்று முனைவர் ஜெகதீசன் கேட்பாரேயானால், இங்கே ஓர் உண்மை விளக்கப்பட்டது.

75–ஆம் ஆண்டு இங்கே நடைபெற்ற திருமணம் காதல் திருமணம் என்ற உண்மை விளக்கப்பட்டது. இந்த மகளுக்கு இந்த மணமகனைத் தேடித் தராமல் இருந்திருந்தால், இந்த நூல் இன்றைக்கு வெளிவந்திருக்காது. எனவே மகள் அந்த மகனை ஊக்கப்படுத்தி, அந்த மாப்பிள்ளையை ஊக்கப்படுத்தி அதன் விளைவாக இன்றைக்கு நம்முடைய கரங்களில் ஒளிவிட்டுக் கொண்டிருப்பதுதான் இந்த ''மூலதனம்'' என்ற நூலாகும். எனவே, வள்ளுவர் பாடியது மகளுக்கும் பொருந்தும் என்பதால், இது சாந்திக்கும் பொருந்தும் என்று நான் சாந்தியையும் வாழ்த்துகின்றேன். சாந்தியை வாழ்த்துவதால் நாகநாதன் வருத்தப்பட மாட்டார். ஏனென்றால் நாகநாதனுடைய இயல்பு எனக்கு நன்றாகத் தெரியும்.

நான் என்றோ ஒருநாள் அவரோடு பழகுகிறவன் அல்ல. ஒவ்வொரு நாளும் காலையில் அண்ணா அறிவாலயத்தில் வாக்கிங் செல்லுகிற நேரமெல்லாம் எனக்குத் துணையாக வருகின்றவர் நாகநாதன். யார் வந்தாலும் வராவிட்டாலும் நாகநாதன் வரத் தவறுவதில்லை. அப்படி நடந்த நேரத்திலேதான் நாகநாதன் என்னிடத்தில் இந்த நூலைப் பற்றி பல நேரங்களிலே விளக்கியிருக்கிறார். அது அச்சியற்றப்பட முடியாமல், அச்சியற்றப்பட்டாலும் வெளிவர முடியாமல் ஒரு தயக்கம், ஓர் இடர்பாடு ஏற்பட்டிருப்பதை என்னிடத்தில் எடுத்துக்கூறியிருக்கின்றார். அதற்கு ஏற்ப, அவர் விடுத்த விண்ணப்பம்; நம்முடைய தமிழ்க்குடிமகன் அவர்களுடைய துறையிலே தேங்கிக் கிடக்கிறது என்ற செய்தி என்னிடத்தில் சொல்லப்பட்டது. தேங்கிக் கிடப்பதை அறிந்து, தமிழ்க்குடிமகனிடத்திலே நானே

கேட்டு, தேக்கத்தைப் போக்கி, எல்லோருடைய ஏக்கத்தையும் போக்குகின்ற அளவிற்கு இன்றைக்கு இந்த 'மூலதனம்' வெளியிடப்பட்டிருக்கின்றது.

''ஆஹா! என்னுடைய இலாகாவிலே தேங்கிக் கிடந்தது என்ற உண்மையை அண்ணன் சொல்லிவிட் டாரே'' என்று தமிழ்க்குடிமகன் வருத்தப்படக் கூடாது. எந்த அமைச்சருடைய இலாக்காவிலும், எதுவும் தேங்கிக்கிடக்க கூடாது என்பதற்காகத்தான் தமிழ்க்குடிமகனை வைத்து, இங்கே இதைச் சொல்கின்றேன். நல்லவைகள் உடனுக்குடன் நடைபெற வேண்டும். அல்லவைகள் வேண்டுமானால் தேங்கிக் கிடக்கலாம்.

தமிழ்க்குடிமகன் அவர்கள் நான் சொன்னவுடன் உடனடியாக இடையிலே தேக்கம் இருந்தாலுங்கூட உடனடியாகச் செயல்பட்டு இந்த பரிந்துரையைச் செய்து நிதிநிலை அறிக்கையிலே நாகநாதனுடைய முயற்சிக்காக ஒரு ஐந்து லட்ச ரூபாயை அரசின் சார்பாக வழங்குகின்ற அந்த நிலையை ஏற்படுத்தியிருக்கின்றார்.

எல்லோரும், இந்த நிதி உதவி செய்த என்னையே இந்த விழாவில் பாராட்டிப் பாராட்டிப் பேசினார்கள். ஒருவேளை என்னைப் பாராட்டவேண்டும் என்ற கடமையின் காரணமாகப் பாராட்டினார்களோ, என்னவோ தெரியாது. அது தேவையற்ற பாராட்டு என்று நான் கருதுகின்றேன். ''ஐந்து லட்சம் கொடுத்தார், ஐந்து லட்சம் கொடுத்தார்'' என்று பாராட்டிப் பாராட்டி மகிழ்ந்தார்கள், வாழ்த்தினார்கள்.

மருத்துவம் பார்த்தவன்தான் நான். பத்துமாதம் சுமந்து இந்த அருமையான பிள்ளையை வெளியே கொண்டு வந்தவர்கள் இந்த பதிப்பகத்தார். எனவே, பாராட்டப்பட வேண்டியவர்கள் அவர்கள்தான். குழந்தை பெற்ற தாயைப் பாராட்டாமல், மருத்துவம் பார்த்த மருத்துவச்சியைப் பாராட்டுவதைப் போல, என்னை நீங்கள் பாராட்டியதாகக் கருதுகிறேன்.

நான் தமிழுக்கு, தமிழ் இலக்கியத்திற்குத் தமிழகத்திலே நடமாடவேண்டிய இதுபோன்ற புதிய கருத்துக்களுக்கு ஆக்கம் தரவேண்டும் என்கின்ற அந்தக் கடமை உணர்வைத்தான் இந்த நிதி அளித்ததன் மூலமாக வெளிப்படுத்தியிருக்கிறேனே அல்லாமல், வேறல்ல.

'மூலதனம்' என்கின்ற இந்த நூலுக்கு, முகவுரை அந்தக் காலத்திலே எழுதியவர், 1886–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் ஐந்தாம் நாள் 'மூலதனம்' முகவுரை எழுதியவர், ஆங்கிலப் பதிப்புக்கு முகவுரை எழுதியவர் பிரடரிக் ஏங்கல்ஸ் அவர்கள் ஆவார்கள்.

அவர் குறிப்பிடுகிறார்;

"மூலதனம் (Das Capital) ஐரோப்பா, கண்டத்தில் பாட்டாளி வகுப்பினரின் விவிலியம் (கிறித்துவ மறை நூல்) என அழைக்கப்படுகிறது. ஜெர்மனியிலும், சுவிட் சர்லாந்திலும் மட்டுமின்றி; பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம் மற்றும் அமெரிக்கா – மேலும் இத்தாலியிலும், ஸ்பெயினிலும் கூட இந்த நூலில் மேற்கொள்ளப் பட்டுள்ள முடிவுகள் பாட்டாளி வகுப்பினர் இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளாக மலர்ந்து வருகின்றன." என்று ஏங்கல்ஸ் 1886–ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்புக்கு எழுதிய முகவுரையிலே குறிப்பிடுகின்றார்.

மேலும் 'மூலதனம்' என்ற அந்த நூலைப் பற்றி ஏங்கல்ஸ் குறிப்பிடும்பொழுது;

"மார்க்சியக் கண்ணோட்டத்தில் மூலதனம் என்றால் என்ன என்பது பற்றிக் குறிப்பிட வேண்டி யுள்ளது. பொதுவான கருத்தில் ஏதாவது ஒருவகையான உடைமை உள்ளவர்கள் எல்லாம் முதலாளிகள் அல்லது மூலதனக்காரர்கள் என்று கருதப்படுகிறார்கள்.

இதன் அடிப்படையில் சுயமாக உழைக்கும் சிறு வர்த்தகர்கள் – கடைக்காரர்கள், சிறு பட்டறை உரிமை யாளர்கள் எல்லாம் முதலாளிகள் என்று அழைக்கப் படுகின்றனர்.

இவர்களிடத்தில் சிறிதளவு உடைமை உள்ளது என்பது உண்மைதான்.

ஆனால், அவர்களும் உழைப்பில் ஈடுபடுகின்றனர். இவர்களின் உடைமை பிரதானமாகப் பிறரைச் சுரண்டுவதன் மூலம் பெருகும் மூலதனமாகச் செயல்படவில்லை.

அதேபோல பெட்டியிலே பூட்டி வைக்கப்படும் வட்டி வியாபாரமும் மூலதனமாகாது.

சாதாரண வட்டிக்கடன் பிரதானமாக அவ்வப்போது ஏற்படும் செலவுக்காக வாங்கப்படுவதுதான். இவைகள் எல்லாம் உழைப்பைச் சுரண்டும் மூலதனமாகாது. வங்கிகள், இன்சூரன்ஸ் நிறுவனங்கள் மூலம் முதலாளிகள் மூலதனத்தின் ஒரு பகுதியைப் பெறுகின்றார்கள். சுருக்கமாகச் சொன்னால் மூலதனம் என்பது மனித உழைப்பைச் சுரண்டுவதில் ஈடுபடுத்தப்படும் பணத்தைத்தான் குறிக்கிறது.''

மனித உழைப்பைச் சுரண்டுவதில் ஈடுபடுத்தப்படும் பணத்தைத்தான் 'மூலதனம்' என்பது குறிப்பிடுகிறது என்ற சீரிய, செழுமிய கருத்தை 'மூலதனம்' என்கின்ற மொத்த நூலுக்கும் ஒரே ஒரு வரியில் ஏங்கல்ஸ் அவர்கள் பொருள் விளக்கம் தந்து, நம்மையெல்லாம் சிந்தனையில் ஆழ்த்துகின்றார்.

இத்தகைய அருமையான ஒரு தத்துவ நூலை அரும்பாடுபட்டு தந்த காரல்மார்க்ஸ் அவர்கள் எங்கே பிறந்தார்கள். பொதுவுடைமைப் பூங்கா என்று வர்ணிக்கப்படுகின்ற ரஷ்யாவிலா? அல்லது சென்சீனத்திலா? அல்ல. ஜெர்மனியிலே 'ட்ரியர்' என்ற ஊரில் பிறந்தார். அந்த ஊர் புரோகிதர்களின் அடைக்கல ஸ்தானமாகவும், வைதீகத்தின் மூலஸ்தானமாகவும் இருந்த ஊர்.

காரல் மார்க்ஸ் பிறந்த ஊரிலிருந்த, கிறிஸ்தவ தேவாலயங்கள், மடங்கள், மத நிறுவனங்கள், பாதிரிமார்களின் உறைவிடங்கள் முதலியவற்றைப் பார்த்து ''கெதே'' என்ற ஜெர்மானியக் கவிஞன் பிரமித்துப் போனதாகக் கூறுகிறான்.

அவ்வளவு மத குருமார்கள் நிரம்பிய ஊரில் காரல் மார்க்ஸ் பிறந்தார். இப்படி மத ஆதிக்கம் நிறைந்து விளங்கிய 'ட்ரியர்' என்னும் ஊர் கார்ல் மார்க்ஸ் அவர்களுடைய மூதாதையர்கள் யூதர்கள் என்பதையும் உலகத்திற்குச் சொல்கிறது. அவர்களுடைய பரம்பரைத் தொழில் – காரல் மார்க்சின் மூதாதையர்களின் பரம்பரைத் தொழில், இங்கே நம்முடைய ஆனைமுத்து அவர்கள் குறிப்பிட்டார்களே. அந்தப் பெயரையே மாற்றிவிட்டார்கள். காரல் மார்க்சின் பரம்பரைத் தொழில் புரோகிதம்.

ஆனால், காரல் மார்க்சின் தந்தை ஹிர்ஷெல் மார்க்ஸ் வழக்கறிஞர் தொழில் செய்தார். அப்படி அவர் வழக்கறிஞர் தொழில் செய்வதை யூதர்களே தடுத்தார்கள். யூதர் என்பதால் கார்ல் மார்க்ஸின் தந்தைக்கு வழக்கறிஞர் தொழிலில் போதிய வருவாயும் கிடைக்கவில்லை. அதன் காரணமாக 1821–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 24–ஆம் தேதி ஹிர்ஷெல் மார்க்ஸ் யூதனாக இருந்து வழக்கறிஞர் தொழில் நடத்த தடை இருக்கின்ற காரணத்தால், வருமானம் இல்லாத காரணத்தால், யூதனாக இருப்பதனால் தான் வழக்கறிஞர் தொழிலுக்குத் தடை என்ற கேள்வியை எழுப்பி, கிறிஸ்தவ மதத்திற்கு மாறினார்.

அவர் அப்படி மாறிய பிறகு, ஓராண்டுக் காலம் கடந்த பிறகு, அவருடைய மனைவியும் கிறித்துவ மதத்திற்கு மாறினார். இப்படி மத உணர்வு பெருகியிருந்த ஊரிலும், மதம் மாறிய பெற்றோர்கள் இடையிலும் பிறந்து வளர்ந்த காரல் மார்க்ஸ்தான் பின்னாளில், ''மதம்

மக்களுக்கு அபினி'' என்று குறிப்பிட்டார் என்று வரலாற்று ஆசிரியர்கள் புகழ்ந்து கூறுகின்றார்கள்.

இவர் ஆரம்பத்திலே பத்திரிகைத் தொழிலில்தான் ஈடுபட்டார். இவர் பிறந்த அந்தப் பிரதேசத்திற்குப் பெயர் ரைன்லாந்து. ரைன்லாந்து என்கின்ற அந்தப் பிரதேசத்தின் பெயரை வைத்து ''ரைன்லாந்து கெஜட்'' என்கின்ற ஒரு பத்திரிகையில் அவரும், அவருடைய நண்பர்களும் அந்தத் தொழிலில் ஈடுபட்டு அதைத் தொடங்கினார்கள். அந்தப் பத்திரிகை 1812–ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாள் தொடங்கப்பட்டது.

படிப்பை முடித்துவிட்டு, வேலையில்லாமல் இருந்த காலத்தில் இந்தப் பத்திரிகையில் அவர் எழுதிய கட்டுரைகளின் காரணமாக, அந்தப் பத்திரிகையும் காரல் மார்க்சினுடைய பெயரும் மிக பெரும் புகழுக்கு உள்ளாயின.

ஆனால், அந்தப் பத்திரிகையினுடைய மதிப்பு உயர்ந்த பிறகு, ஜெர்மானிய அரசு அவர்மீது ஒரு கண் வைக்கத் தொடங்கியது. காரணம், அரசைக் கண்டித்து, அரசினுடைய கொள்கைகளைக் கண்டித்து, அதனுடைய திட்டங்களைக் கண்டித்து, அவர் எழுத அவர்மீது ஜெர்மானிய அரசினுடைய கண் பட்டது. எனவே, பல அடக்குமுறைகளுக்கு அவர் ஆளாகவேண்டியிருந்தது.

அந்தப் பத்திரிகையிலே அவர் எடுத்துவைத்த எண்ணம் நம்முடைய சிந்தனையில் எல்லாம் என்றென்றும் பதிய வேண்டிய ஒரு எண்ணமாகும்.

''அரசாங்கத்திற்காக மக்கள் இருக்கிறார்கள் என்ற எண்ணம் கூடாது. மக்களுக்காகத்தான் அரசாங்கம் இருக்கிறது என்ற எண்ணம்தான் தேவை'' என்று அவர் குறிப்பிடுகிறார்.

இதற்குப் பிறகு ரைன்லாந்து பத்திரிகையை அவர் நிறுத்திவிட்டு, வேறு இடம் செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அரசின் கெடுபிடிகளால், பத்திரிகையின்

கொள்கைகளைப் பற்றி இன்னொரு கருத்தையும் மார்க்ஸ் வெகு அழகாக சொல்கிறார்.

''சந்தாதாரர்கள் பத்திரிகையின் கொள்கையை நிர்ணயிக்கக் கூடாது. பத்திரிகைதான் சந்தாதாரர்களின் கொள்கைளை நிர்ணயிக்க வேண்டும்.''

சந்தாதாராகள என்றால வாசகாகள. தநதை பெரியார் அவர்கள் 'குடியரசு' இதழ் தொடங்கி நடத்திக் கொண்டிருந்தபொழுது, இது விற்குமா? இதை மக்கள் ஏற்பார்களா? இந்தக் கருத்தை மக்கள் ஜீரணம் செய்ய முடியுமா? என்றெல்லாம் கேட்ட நேரத்தில் பெரியார் சொன்னாராம்:

''விற்கிறதோ இல்லையோ, நான் குடியரசு பத்திரிகையை அச்சடிப்பேன். எவனும் வாங்குகிறானோ இல்லையோ, அதைப்பற்றி கவலையில்லை. ஒரே ஒரு பத்திரிகையாவது அச்சடித்து அந்த ஒரு பத்திரிகையை நான் ஒருவனே திண்ணையிலே உட்கார்ந்து நானே படித்துப் பார்ப்பேன்'' (கைதட்டல்) என்று தந்தை பெரியார் சொன்னார்.

இதே கருத்தைத்தான் காரல் மார்க்ஸ் சொல்கிறார். வாசகர்கள் பத்திரிகையின் கொள்கையை நிர்ணயிக்கக் கூடாது. பத்திரிகைதான் வாசகர்களின் கொள்கையை நிர்ணயிக்க வேண்டும் என்று மார்க்ஸ் சொன்னதாக சாமிநாத சர்மா அவர்களின் புத்தகத்திலே வெகு அழகாக அவர் மார்க்சின் இந்த சிந்தனா விலாசத்தைச் சுட்டிக் காட்டுகின்றார்.

காரல்மார்க்சைப் பற்றி நம்முடைய பேராசிரியர்கள் இங்கே பேசும்பொழுது, திராவிட இயக்கத்திற்கும், காரல் மார்க்சினுடைய கொள்கைகளுக்கும் உள்ள உடன்பாடு ஏன்? கம்யூனிச இயக்கத்திற்கும், திராவிட இயக்கத்திற்கும் உள்ள உடன்பாடு – அதைப்பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் பல நேரங்களிலே ஆற்றிய உரைகள், எழுதிய

எழுத்துக்கள் இவைகளையெல்லாம் சான்றுகளாக ஆக்கிக் காட்டினார்கள்.

அண்ணா அவர்கள் காரல் மார்க்ஸைப் பற்றி குறிப்பிடும்போது சொல்கிறார்;

"வளமையினருகே வறுமை; பலத்தினருகே பயம்; இவை ஏன்? இந்தக் கேள்வி சாதாரண மக்களையல்ல; கருத்துலகின் காவலர்களாக விளங்கியவர்கள் அனைவரையும் கதிகலங்க அடித்தது. கி.மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த பிளேட்டோ என்னும் கிரேக்கத் தத்துவ ஞானியின் காலத்திலிருந்து, கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த காரல் மார்க்ஸ் காலத்திற்கு முன்பு வரை மக்களின் நல்வாழ்வுக்கான ஆராய்ச்சிகள் அனைத்தும் அறிவுக்குப் பொருத்தமான முடிவை அளிக்கவில்லை.

ஆண்டை – அடிமை

உயர்ந்தவன் – தாழ்ந்தவன்

மதகுரு – பக்தன்

மிராசு – உழவன்

பிரபு – பணியாள்

முதலாளி – தொழிலாளி

இவர்களிடையே ஏற்பட்ட போராட்டங்களின் வரலாற்றை நன்றாக அலசிப் பார்த்தவர் காரல் மார்க்ஸ்.

பிரபுக்கள் – முதலாளிகளின் கொடுங்கோன்மை வெகுநாளைக்கு நிலைக்காதென்பதையும், உழைப்பாளி களின் முயற்சியால்தான், உழைப்பாளர் உலகு மலரும் என்பதையும் அவர் எடுத்துக்காட்டினார்.

அவருடைய தெளிந்த முடிவு ஒடுக்கப்பட்ட உழைப்பாளர்களை ஒன்று சேர்த்தது; நலிவுற்ற ஒடுக்கப்பட்ட உழைப்பாளர்களை ஒற்றுமைப்படுத்தியது"

என்று அறிஞர் அண்ணா அவர்கள் காரல் மார்க்ஸைப் பற்றி குறிப்பிடுகின்றார்.

இத்தகைய பெருமை வாய்ந்த காரல் மார்க்ஸ் அவர்களுடைய வாழ்க்கை எப்படி இருந்தது என்பதை சாமிநாத சர்மா தன்னுடைய நூலில் கவிதை வரிகளில் வந்ததைச் சுட்டிக் காட்டுகிறார்.

அவன் மேகங்களுக்கு மத்தியில் தன் இலட்சியத்தைப் பொருத்தி வைத்துக் கொண்டான்.

ஆனால், புழுதி மண்ணிலேதான் அவன் வாழ்க்கையை நடத்த வேண்டியிருந்தது. அன்றாடம் என்ன தேவையோ அதுதான் அவனுக்குக் கிடைத்துக் கொண்டிருந்தது.

''நாலா பக்கங்களிலும் நெருக்கப்பட்டான். அவனை வறுமை வாட்டியது. தேவை தினறச் செய்தது. அவன் பொதுவாக வாழ்க்கையிலே புடமிடப்பட்டான். புடம் போடப்பட்டான்.''

இது சாமிநாத சர்மா எழுதிய நூலில் காணப்படும் கவிதை வரிகள்.

உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். என்னையும் அந்த உணர்வுகளில் இணைத்துக் கொள்ள விரும்புகிறேன்.

திராவிட இயக்கத்துக்கும், கம்யூனிஸக் கொள்கைகளுக்கும் உள்ள உடன்பாடு இன்று நேற்றல்ல. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட உறவாகும். 'திராவிடர்' என்றாலே உழைப்பாளிகள்தாம், பாட்டாளிகள்தான் என்ற சித்தாந்தத்தை உண்மைத் தத்துவத்தை தந்தை பெரியார் அவர்கள் எடுத்துரைத்திருக் கிறார்கள். மே தினங்கள் கொண்டாடப்படுகின்ற நேரத்தில் எல்லாம் உரையாற்றிய அறிஞர் அண்ணா அவர்கள் திராவிடர் என்றாலே உழைப்பாளிகள்தாம் என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

இங்கே பேசிய நம்முடைய அன்பிற்குரிய நல்லக்கண்ணு அவர்கள், தமிழகத்திலே இன்றைக்கு உருவாயிருக்கின்ற சில மாயைகளை விலக்க, அகற்ற, நம்மால் முடியும். ஆனால், அது ஆழமாக இன்றைக்கு வேரூன்றி விட்டது என்று குறிப்பிட்டார்கள்.

ஆனால், உரையாற்றிச் சென்ற நண்பர் சங்கரய்யா அவர்கள், ''அது தற்காலிகமானதுதான்'' என்று குறிப்பிட்டுச் சென்றிருக்கிறார்கள். தற்காலிகமோ, நிரந்தரமோ எதுவாயினும் அத்தகைய மாயைகள் தமிழர்களுடைய மனதை மயக்குவதற்கு இடம் தராமல், தமிழர்களை, உழைப்பாளிகளை, பாட்டாளி மக்களை, இந்தச் சமுதாயத்தைப் பாதுகாக்கவேண்டிய பெரும் கடமை நமக்கெல்லாம் இருக்கின்றது.

அவர் ''நாங்கள் இருவரும் ஒன்று சேர்ந்து விட்டோம்'' என்று குறிப்பிட்டார். நாங்கள் இந்த மேடையிலே இருப்பதையே மறந்துவிட்டு, நாங்கள் இருவரும் (சி.பி.ஐ., சி.பி.எம்.) ஒன்று சேர்ந்துவிட்டோம் என்று அவர் குறிப்பிட்டார். பிறகு, அவருக்கே நினைவுக்கு வந்து நீங்களும் வரவேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கிறார். ஒன்றாகத்தானே இருக்கிறோம். பிறகு, எப்படி நீங்கள் ஒன்று சேர்ந்து விடுவீர்கள். எங்களை அழைப்பீர்கள் என்று தெரிய வில்லை. எல்லோரும் ஒன்றாக இணைந்து இந்தச் சமுதாயத்தினுடைய எதிர்கால ஏற்றத்திற்கு ஏற்பட்டுவிட்ட மாயையை வீழ்த்துவதற்குப் பாடுபட்டாக வேண்டும்.

இந்த உணர்வு எனக்கு இன்று நேற்றல்ல, ஏதோ, இன்றைக்கு 'மூலதனம்' நூலினை வெளியிட்டுப் பேசுகிற இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, நான் யார் என்பதை உங்களுக்குத் தெரிவிக்க நான் முன்வரவில்லை.

மே தின வாழ்த்து என்னிடம் 30 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிக் கேட்டபொழுதே நான் எழுதிய வாழ்த்து,

"அயர்வை அச்சத்தால் போக்கி
இரத்தத்தை வியர்வைக் குளமாக்கி
வாடுகின்ற பாட்டாளியும்,
ஆடுகின்றான் திருநாளென்று"

என்று மே தினத்திற்கு வாழ்த்து எழுதியவன் உங்கள் முன்னால் நின்றுகொண்டிருக்கிறவன் என்பதை மறந்து விடக்கூடாது.

"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கிய நல் வாய்க்காலும் வகைப்படுத்தி,
நெற்சேர உழுதுழுது பயன்விளைக்கும்
நிறை உழைப்புத் தோள்களெல்லாம்
எவரின் தோள்கள்"

என்று கேட்ட புரட்சிக்கவிஞர் பாரதிதாசனுடைய அன்பையும், ஆதரவையும் பெற்றவன்தான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

இந்த இயக்கத்தில் சிறுபிராயம் முதல் நான் ஈடுபட்ட நேரத்தில் – நேற்றைக்குக்கூட ஒரு விழாவிலே தம்பி துரைமுருகன் பேசும்போது குறிப்பிட்டார். "பெரியாரும், அண்ணாவும், மாத்திரம் இல்லாமல் இருந்திருந்தால், கலைஞர் தமிழ்நாட்டில் ஒரு கம்யூனிஸ்ட் தலைவராகவே ஆகியிருப்பார்" என்று அவர் குறிப்பிட்டார்.

காரணம் பெரியாருடைய திராவிட இயக்கக் கொள்கைகளும், சமுதாயக் கொள்கைகளும், சுயமரியாதைக் கொள்கைகளும், அண்ணா அவர்களுடைய தமிழ் உணர்வு நிலையும் என்னை ஈர்த்து விட்ட காரணத்தால், முழுக்க முழுக்க கம்யூனிஸ்ட்டாக நான் ஆகிவிடவில்லை என்பதை அவர் குறிப்பிட்டார். கம்யூனிஸ்ட் என்ற பெயரில் நான் இல்லாவிட்டாலும் கூட நான் ஒரு பொதுவுடைமைக்காரன்தான். நான் ஒரு

கம்யூனிஸ்ட் தான். அதனால்தான் நான் 1983–ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்கு முன்பு நான் எழுதிய குறளோவியத்தில் காரல் மார்க்சினுடைய வாழ்க்கையை எழுதவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது?

83–ஆம் ஆண்டு எழுதி வெளியிடப்பட்டது குறளோவியம். அந்தக் குறளோவியத்தில் காரல் மார்க்ஸைப் பற்றி எழுதியுள்ள வரிகளை மாத்திரம் படித்துக் காட்டுகிறேன்.

165 ஆண்டுகளுக்கு முன்பு – இது 15 ஆண்டு களுக்கு முன்பு எழுதியதால் 165 என்று குறிப்பிடு கின்றேன். ஆனால் உள்ளபடியே 180 ஆண்டுகளுக்கு முன்பு – இன்றைய நிலையிலே நூறு ஆண்டுகளுக்கு முன்பு வானளாவிய சிந்தனையை நிறுத்திக் கொண்டு பூமிக்குள் கல்லறையாகி விட்ட சமதர்மச் சிற்பி காரல் மார்க்சின் சித்தாந்தங்களைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறோம். அவனது பொது உடைமைச் சிந்தனைகளைச் செயலாக்கும் குறிக்கோள் என்றைக்கு வெற்றிபெறும் என்ற ஆர்வத்தோடு உழைக்கும் கூட்டம் இன்னமும் இந்த உலகின் பல நாடுகளில் போர்க்கொடி உயர்த்திக் கொண்டு இருக்கின்றது.

அந்த மாமனிதன் – சாதாரண குடும்பத்தில் பிறந்து மிகச் சாமானிய வாழ்வு வாழ்ந்து வறுமையின் கோரப்பிடியில் அடிக்கடி சிக்கி அறுபத்தி ஐந்தாவது வயதில் கண் மூடும் வரையில் தனது கடமையை ஒய்வின்றி ஆற்றியதற்கு ஏங்கல்ஸ் போன்ற உற்ற நண்பர் ஒரிருவர் இருந்த போதிலும் அருகிலேயே இருந்து இறுதிவரையில் இல்லறம் நடத்திய மாதரசு ஜென்னி என்னும் குடும்ப விளக்கின் பெருமையைப் பலர் அறியமாட்டார்கள்.

செல்வக் குடும்பத்தில் உதித்தவள், அழகில் மிகச் சிறந்தவள். அவளை மணக்கப் பலர் தவித்தனர். ஆனால் அவளோ, வளமற்ற குடும்பத்தில் பிறந்த – தனது

அழகிற்குப் பொருத்தமற்ற – தன்னைவிட நான்கு வயது குறைவான காரல் மார்க்சையே மணப்பேன் என்று ஏழு ஆண்டுகள் காத்திருந்தாள். அவ்வாறே மணந்து கொண்டாள். கணவன் நாடு கடத்தப்பட்ட போதெல்லாம் அவளும் அவனுடன் சென்றாள். அவன் கைது செய்யப்பட்டபோது அவளும் கைது செய்யப்பட்டாள்.

அந்தப் பெண்மணி ஜென்னி தங்களின் குடும்ப நண்பருக்கு எழுதிய மடல் ஒன்றில் பின்வருமாறு குறிப்பிடுகிறாள்:

‘‘எனக்குத் தாங்க இயலாத மார்பு வலி – முதுகு வலி – குழந்தைக்குப் பால் கொடுக்க ஒருத்தியை ஏற்பாடு செய்யக்கூட கையில் போதுமான பணமில்லை. என் மார்பு வலியைப் பொறுத்துக் கொண்டு நானே குழந்தைக்குப் பால் கொடுத்தேன். குழந்தைக்கு வலிப்பு நோய் ஏற்பட்டு அதனால் என் மார்பு கடியுண்டு ரணமாகி குருதி வடியத் தொடங்கியது. அதனால் பாலும் குருதியும் கலந்து அது குடிக்க வேண்டியிருந்தது. அந்த நிலையில் கடன்காரர்கள் வீட்டுக்குள் நுழைந்து எங்கள் துணிமணிகள், குழந்தைகளின் தொட்டில் விளையாட்டுப் பொம்மைகள் அனைத்தையும் ஏலம் போடுவதற்கு எடுத்துக் கொண்டார்கள். மூன்று நாள் சாவுடன் போராடிய குழந்தை இறந்து விட்டது. அதன் உடலைப் பின்புறத்து அறையில் மூடிவைத்துவிட்டு, நாங்களும் மற்ற குழந்தைகளும் முன்புறத்து அறையில் இரவு முழுவதும் தரையில் படுத்துக்கிடந்தோம். விடிந்தால் அந்தக் குழந்தைக்கு ஒரு சவப்பெட்டி தயார் செய்யக்கூட எங்களால் முடியவில்லை.

நான் மட்டும் தனிமையில் இந்தத் துன்பங்களை அனுபவிக்கவில்லை. ஒருவகையில் நான் கொடுத்து வைத்தவள். என் கணவர்தான் எனக்கு எல்லாம் – அவர் என் பக்கத்திலேயே இருக்கிறார் என்பதே எனக்கு ஆறுதல். நான் அவருடன் அவருக்குத் துணையாக

இருப்பதே என் துன்பங்களுக்கெல்லாம் பரிகாரமாகக் கருதுகிறேன். ஆனால், என்னுடையவரிடம் பல வகையிலும் ஆதாயம் பெற்றவர்களில் ஒரிருவரே உதவிக்கு வருகின்றனர். அதை நினைக்கும்போது என் நெஞ்சம் நெருப்பாகிறது. உதவியற்ற நிலையிலும் கடமையாற்றிடும் அவருடன் துணையாக இணைந்து நிற்பதே எனக்கு இன்பமல்லவா?''

இன்று உலகத்தின் கண்கள் எல்லாம் எந்தக் கருத்துக்களைப் படித்திடத் துடிக்கின்றனவோ அந்தக் கருத்துப் புதையலுக்குச் சொந்தக்காரனான காரல் மார்க்சின் இல்வாழ்க்கையில் விளைந்த துன்ப துயரங்கள் ஒன்று இரண்டல்ல' ஓராயிரம் – அத்தனையும் தாங்கிக் கொண்டு அவனையும் தாங்கி நின்ற அந்தத் தாய்க் குலத்துத் திருச்சுடர் ஜென்னியை ''வாழ்க்கைத் துணைநலம்'' என்று வாயார மனமார வாழ்த்த வேண்டாமோ?

இதோ வாழ்க்கைத் துணைநலத்தின் இலக்கணத்தைக் குறள் கூறுகிறது:

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

இல்லறத்திற்கேற்ற நற்பண்பு கொண்டவளாகி தன் கணவனுடைய பொருள் வளத்திற்குத் தகுந்த வாழ்க்கையை மனக்குறையேதுமின்றி நடத்துகிறவளே வாழ்க்கைத் துணையாவாள் என்ற குறளுக்கு நான் குறளோவியம் தீட்டியபொழுது காரல் மார்க்ஸ்தான் என் நினைவிற்கு வந்தாரென்றால் நான் கம்யூனிஸ்டா அல்லவா என்பதை நல்லக்கண்ணு அவர்களின் நல்ல தீர்ப்புக்கே விட்டுவிடுகிறேன்.

ஆனால் கம்யூனிஸம் – கம்யூனிஸம் என்கின்ற பேரிலே தமிழகத்திலே மேலும் பரவாததற்குச் சில காரணங்கள் உண்டு. கம்யூனிஸம் அண்ணாவின்

கொள்கைப்படி, பெரியாரின் கொள்கைப்படி, நான் கருதுவதின்படி, இந்த மண்ணுக்கு ஏற்றவாறு கம்யூனிஸம் வளர்க்கப்படவேண்டும் என்பதை நான் உணர்ந்து சிந்தித்து அந்த வகையிலே நம்முடைய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு, இனம் – என்றெல்லாம் இந்தியாவில் பல தேசிய இனங்கள் இருக்கின்றன. அந்த பல தேசிய இனங்களுக்கு, பல கலாச்சாரங்கள் இருக்கின்றன. பல மொழிகள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்து இந்த மண்ணுக்கு ஏற்ற வகையில் கம்யூனிஸத்தை நாம் முயன்றால் இங்கே பரப்ப முடியும் என்பதையும் இங்கே எடுத்துக்காட்டி அருமையான புதையல் போன்ற ஒரு கருவூலம் போன்ற நூலினை நமக்கெல்லாம் தந்துள்ள தம்பி நாகநாதனை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இந்த நூலை தமிழாக்கித் தந்துள்ள ஜமதக்கினி அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். சிறை வாசத்திலே பல ஆண்டுகாலம் இருந்தவர். தியாக சீலர். தான் மாத்திரமல்லாமல் தன்னுடைய குடும்பத்தையே இந்திய நாட்டு விடுதலைக்காக அர்ப்பணித்தவர். அவருடைய அருமைச் செல்வி சாந்தி அவர்களும், சாந்தியினுடைய அருமைக் கணவர் நாகநாதனும் அந்த தியாகசீலருடைய புகழைப் பரப்புகின்ற வகையில் அவர் பெரும்பாடுபட்டு நாலைந்து ஆண்டுகள் தொடர்ந்து எழுதிக் குவித்த தொழிலாளர்களுடைய இலக்கியத்தை இன்றைக்கு வெளியிட முன்வந்தமைக்காக என் சார்பிலும், உங்கள் அத்தனை பேருடைய சார்பிலும் நன்றியையும், பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் அவர்களுக்குத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

2-5-98 அன்று ஜமதக்னி மொழி பெயர்த்த
காரல் மார்க்சின் நூல்கள்
வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை

15

திரு.வி.க. – கல்கி நூல்களுக்குப் பரிவுத்தொகை வழங்கும் விழா

நம்முடைய அன்பிற்குரிய சாவி அவர்கள் இங்கே உரையாற்றியபோது இங்கு இந்த நிகழ்ச்சிக்கான சிறப்புரையாற்றுகிறாரா? அல்லது ஒரு பட்டிமன்றத்திலே உரையாற்றுகிறாரா? என்ற ஐயப்பாடு எழுகின்ற அளவிற்கு – மாவட்டங்களில் சிறந்தது எது? தஞ்சாவூரா? வட ஆர்க்காடா? செங்கல்பட்டா? என்ற வாதத்தை இங்கே எடுத்து வைத்தார்.

கடைசியாக வட ஆர்க்காட்டையும் தஞ்சாவூரையும் மோதவிட்டு – தஞ்சாவூரில் என்ன இருக்கிறது? காவிரி இருப்பதாக சொல்கிறீர்கள். ஆனால் அந்தக் காவிரிக்குத் தண்ணீர் வருவது நிச்சயமில்லை என்று குறிப்பிட்டார். காவிரிக்காகவாவது தண்ணீர் வருவது நிச்சயமில்லை என்றாலும் – போராடி வழக்குத் தொடர்ந்து அதைப் பெறுகின்ற முயற்சிகளில் நாங்கள் ஈடுபட்டு இருக்கிறோம். ஆனால் உங்கள் மாவட்டத்தினுடைய பாலாறு (கைதட்டல்) என்னவாயிற்று என்பதை, சாவி அவர்கள் மறந்துவிடக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்..

கலைவாணர் தஞ்சாவூரிலா பிறந்தார்? கன்னியாகுமரியிலே அல்லவா பிறந்தார்! என்று சாவி குறிப்பிட்டார். கன்னியாகுமரியில் பிறந்திருந்தாலும்

அந்தக் கலைவாணருக்கு அவர் பெயரால் 'கலைவாணர் அரங்கம்' அமைத்தது தஞ்சாவூர்க்காரன்தான் என்பதை சாவி அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறார் என்று நான் திடமாக நம்புகின்றேன்.

மாவட்டங்களுக்கிடையே இத்தகைய போட்டிகள் தேவையானதுதான். அந்தப் போட்டி தமிழை எப்படி வளர்ப்பது, தமிழுக்காக எப்படிப் பணியாற்றுவது, தொண்டு புரிவது என்ற வகையிலே அமைகின்ற போட்டியாக இருக்குமேயானால் நான் அதை வரவேற் கின்றேன். அந்த வகையான போட்டியைத்தான் சாவி அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறார் என்று நான் திடமாக நம்புகின்றேன்.

இன்று இரண்டு பெரியவர்களுடைய நினைவைப் போற்றி அவர்களுக்கு நாம் செலுத்தவேண்டிய காணிக்கையைச் செலுத்திக்கொண்டிருக்கிறோம். அவர்கள் நாட்டிற்குச் சமுதாயத்திற்கு – மொழிக்கு ஆற்றி உள்ள அரும்பணிக்கு நாம் இங்கே நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கிறோம். நாம் மாத்திரமல்ல; நம்முடைய வருங்கால சமுதாயம் அவர்களை நினைவுகூர்ந்து அவர்கள் வழிநின்று, நாட்டிற்கு மொழிக்கு உழைத்திட வேண்டும் என்ற அந்த நோக்கத்தோடு இந்த விழாவை இங்கே நடத்திக்கொண்டிருக்கிறோம்.

இந்த நூல்களை அரசுடைமை ஆக்கியதன் வாயிலாக இந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட பரிவுத் தொகை ரூ.20 இலட்சம் என்பதை மிகுந்த வியப்போடு நம்முடைய சாவி அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நான் 20 இலட்ச ரூபாயை அவர்களுடைய குடும்பத்திற்கு வழங்குவதைப் பெரிதாக கருதவில்லை.. ஏனென்றால், அவர்கள் வழங்கி இருக்கின்ற சாதனைகளுக்கு, அவர்கள் புரிந்திருக்கின்ற தொண்டுக்கு, அவர்கள் ஆற்றியிருக் கின்ற தமிழ்ப் பணிக்கு இந்த 20 இலட்சம் மிக மிகச்

சாதாரணமான தொகை என்றுதான் நான் கருதுகின்றேன்.

எனவேதான் இதைப் பரிவுத்தொகை என்று குறிப்பிட்டு வழங்கியிருக்கின்றோம். ஒரு பரிவோடு – அவர்களுக்கு இது போதுமானது என்ற எண்ணத்தோடு அல்ல. கல்கி ராஜேந்திரன் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல, அங்கீகாரம் வழங்குவது போலக்கூட அல்ல; அரசின் சார்பிலே வழங்கப்படுகிற காரணத்தால், இராஜேந்திரன் இங்கே குறிப்பிட்ட 'அங்கீகாரம்' என்ற அந்த சொல் ஒருவேளை பொருத்தமாக இருக்கலாம். ஆனால், அவர்களே இங்கே படித்துக் காட்டினார்கள். மனோகரா படத்திற்கு நான் எழுதிய வசனம் குறித்து கல்கி அவர்கள் எழுதிய விமர்சனத்தை இங்கே படித்துக் காட்டினார்கள்.

எனவே நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே கல்கி எனக்கு அங்கீகாரம் அளித்திருக்கின்றார் (கைதட்டல்) என்பது தான் அதிலே உண்மை. அந்த அங்கீகாரத்தை நண்பர் இராஜேந்திரன் அவர்கள் இங்கே நினைவூட்டி இருக்கின்றார். நான் அந்த அங்கீகாரத்தை எண்ணி எண்ணி பூரிப்புக் கொள்கின்றேன். அந்த விமர்சனத்தை அந்தக் காலத்திலே நானும் படித்திருக்கிறேன். மனோகரா படத்திற்கு உரையாடல் தீட்டி அந்தப் படம் வெற்றிகரமாக நடைபெற்றபோது இந்த விமர்சனம் கல்கி அவர்களால் தீட்டப்பட்டு வெளிவந்த நேரத்தில் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இருக்க முடியாது.

மனோகராவுக்கு மாத்திரமல்ல; திராவிட இயக்கத்தின் எழுத்தாளர்கள் – அதிலும் குறிப்பாக எங்களையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய 'வேலைக்காரி' படத்திற்கும் கல்கி அவர்கள் விமர்சனம் எழுதி பெரிதும் பாராட்டி

இருக்கிறார். இன்னும் உங்களுக்கு நினைவூட்ட வேண்டுமேயானால்; தஞ்சையில் நடைபெற்ற அண்ணா அவர்கள் எழுதிய 'ஓர் இரவு' நாடகத்திற்கு கல்கி அவர்கள் தலைமைதாங்கி, அங்கே அவர் ஆற்றிய அந்த உரையிலேதான் அறிஞர் அண்ணா அவர்களை ''தென் னாட்டுப் பெர்னாட்ஷா'' என்று பேராசிரியர் கல்கி அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அத்தகைய பேராசிரியர் கல்கி அவர்கள் பெருமனதோடு மாத்திரமல்ல; பெருந்தன்மையோடும், யார் நல்ல ஆற்றல்மிக்க எழுத்தாளரோ, பேச்சாளரோ, தமிழ் அறிஞரோ, அவர்கள் எங்கே இருந்தாலும், எந்த இயக்கத்தில் இருந்தாலும் அவர்களைப் பாராட்டத் தவறாதவர்; மறவாதவர். அதனால்தான் அவர்கள் மறைந்தபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் 12-12-1954 தேதியிட்ட 'திராவிட நாடு' வார இதழில் இவ்வாறு குறிப்பிட்டார்கள்.

''அமரதாரா போயிற்று'' என்பது அதன் தலைப்பு.

தமிழ் நடையில் ஒரு நகைச்சுவையையும், சரித்திர நிகழ்ச்சிகளின் மீது சமையல் கட்டுக்குக் கூட ஒரு ஆவலையும், தூண்டிவிட்ட எழுத்தாளர் அவர். அவரது எழுத்து, செயல் பற்றி, கருத்து வேறுபாடுகள் நிறைய உண்டு. ஆனால், அவரது திறமை, செயல்வன்மை நிச்சயம் பாராட்டுக்குரியதாகும்.

தேசீயக் கூடாரம் முழுவதும் எரிச்சல் கணைகளைப் பூட்டினாலும், சில சமயங்களில் நமது சேவைகளை அவர் புகழ்ந்ததும் உண்டு. எழுத்துத் துறையில் நமது இயக்கம் உண்டாக்கியிருக்கும் மறுமலர்ச்சி, பல தேசீய எழுத்தாளருக்கு எரிச்சலையும் கோபத்தையும் உருவாக்கியிருக்கிறது. ஆனால், கல்கி வரவேற்றார், மகிழ்ந்தார். அதே போல, மாற்றாரிடம்

இருக்கும் சில நற்பண்புகளை அவர் பாராட்டத் தயங்கியதில்லை! வாழ்த்தப் பயந்ததில்லை! இதனால்தான் அவருடைய மறைவு இன்று பலருக்கும் வருத்தத்தைக் கொடுக்கிறது. அதிலும் நமக்கு, அவரது மறைவு உண்மையில் வேதனையைத் தருகிறது!'' என்று பேரறிஞர் அண்ணா, பேராசிரியர் கல்கி மறைந்த நேரத்திலே திராவிட நாடு இதழிலே எழுதினார். கல்கி அவர்கள் பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம் போன்ற வரலாற்றுப் புதினங்களை மாத்திரமல்ல; வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கக் கூடிய புதினங்களை உருவாக்கித் தந்தவர். அவருக்குத் தமிழ் மொழியின்மீது மாத்திரமல்ல; தமிழர்கள் மீதும், தமிழ் இனத்தின் மீதும் அளவற்ற பற்று உண்டு. அதிலும் குறிப்பாக சோழர் சாம்ராஜ்யத்திலே பிறந்தவர் என்ற காரணத்தால் சோழ மன்னர்கள் மீது எந்த அளவிற்கு அவருக்கு அன்பு உண்டு என்பதற்கு அடையாளமாகத் தான் தன்னுடைய மகனுக்கு இராஜேந்திரன் என்ற பெயரையே சூட்டியிருக்கிறார் என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.

பாரதியாருக்கு எட்டையபுரத்தில் மணி மண்டபம் கண்டவர் பேராசிரியர் கல்கி அவர்கள். அவருடைய சிறப்புகளைப் பற்றி இங்கே நம்முடைய தமிழ்க்குடிமகன் அவர்கள் சுட்டிக்காட்டியபோது சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டவர் என்பதையும் பலமுறை சிறைச் சாலைக்குச் சென்றவர் என்பதையும் இங்கே எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள்.

சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்களை இந்த அரசு என்றைக்கும் பாராட்டத் தவறியதில்லை. அந்தச் சுதந்தரப் போராட்ட வீரர்களிலே ஒரு பெருமைக்குரிய வீரராகத் திகழ்ந்தவர்தான் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள். தமிழ்த் தென்றல் திரு.வி.க.வைப் பற்றி இங்கே நம்முடைய

விழாத் தலைவர் தமிழ்க்குடிமகன் உரையாற்றும் போது அவர் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு ஆதரவாகச் சொன்ன கருத்துக்களை இங்கே குறிப்பிட்டார். ஆனால் அது உண்மை என்றாலும்கூட, வகுப்புவாரிக் கொள்கையை எதிர்த்தவரும் திரு.வி.க.தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அது சரித்திரம்.

தந்தை பெரியார் அவர்கள் காங்கிரசிலே இருந்து வெளியேறினார். 1925-ஆம் ஆண்டு காஞ்சிபுரத்திலே நடைபெற்ற மாநாட்டிலேயிருந்துதான் தந்தை பெரியார் அவர்கள் காங்கிரசில் இருந்து வெளியேறினார். அந்த மாநாடு தமிழ்த்தென்றல் திரு.வி.க. தலைமையில் நடைபெற்ற மாநாடு. அந்த மாநாட்டிலே பெரியார் கொண்டுவந்த தீர்மானம்தான் வகுப்புவாரி உரிமையை வலியுறுத்துகின்ற தீர்மானம். அதை அந்த மாநாடு ஏற்றுக் கொள்ளவில்லை. மாநாட்டுத் தலைவர் திரு.வி.க. அவர்களும் ஏற்றுக் கொள்ள தயங்கிய காரணத்தால் அப்போதுதான் தந்தை பெரியார் அவர்கள் காஞ்சிபுரம் மாநாட்டிலிருந்து வெளியேறினார். காங்கிரசில் இருந்து வெளியேறினார். அது ஒரு காலம்.

ஆனால், திராவிட இயக்கத்தினுடைய வெற்றிக்குச் சான்று வேண்டுமானால் அந்த மாநாட்டிற்கு தலைமையேற்று பெரியாருடைய வகுப்புவாரிக் உரிமையை ஏற்றுக் கொள்ளாத அதே தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் பெரியாருடைய வகுப்புவாரி கொள்கையை ஏற்று அது தேசீயப் பாட்டோடு சேர்க்கப்பட வேண்டிய ஒன்று என்ற அளவிற்கு வந்தார் என்றால் அதுதான் பெரியாரின் வெற்றி. (கைதட்டல்) திராவிட இயக்கத்தினுடைய வெற்றி என்பதை நான் எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமாத்திரமல்ல; இராஜாஜி, திரு.வி.க. இவர்கள் எல்லாம் அந்தக் காலத்தில் பெரியாரும், அறிஞர்

அண்ணாவும் எடுத்துச் சொன்ன 'திராவிட நாடு' என்ற சொற்றொடரையே ஏற்றுக் கொள்ளாதவர்கள்.

இராஜேந்திரன் அவர்களுக்கு நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். அதே ராஜாஜிதான் கல்கியிலே எழுதினார். 'திராவிடநாடு' கிடைத்தால்கூட நான் அதற்காக சந்தோஷப்படுவேன். திராவிட நாட்டிற்காக நான் சண்டைபோடுவேன் என்று எழுதுகிற நிலை மூதறிஞர் ராஜாஜிக்கு ஏற்பட்டது. திராவிட நாடு என்ற சொற்றொடரை ஏற்றுக் கொள்ளாத திரு.வி.க. அவர்கள் கடலூரில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில் திராவிட நாடு படத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய போது ஒலித்த முழக்கம் இன்னமும் என்னுடைய காதுகளிலே ஒலித்துக் கொண்டிருக்கின்றது. திராவிடநாடு, திராவிட நாடு, திராவிட நாடு என்று மூன்று முறை சொன்னார். எதையும் திரு.வி.க. அவர்கள் சொற்பொழிவில் மூன்று முறை சொல்வார். அப்படியே அன்றைக்கும் சொல்லி அதைப் பெற்றே தீருவோம் என்று சொன்னார்.

திரு.வி.க. இன்றைக்கு நம்மிடத்திலே இல்லை; திராவிட நாடு கொள்கையும் இன்றைக்கு நம்மிடத்திலே இல்லை. அதை நாட்டின் நலன்கருதி இந்தியாவின் பாதுகாப்புக் கருதி, இறையாண்மை கருதி, இந்தியாவின் ஒருமைப்பாடு கருதி பேரறிஞர் அண்ணா அவர்கள் கழகத்தின் பொதுக் குழுவைக்கூட்டி தீர்மானமே நிறைவேற்றி அதைக் கைவிட்டுவிட்ட நிகழ்ச்சி எல்லாம் உங்களுக்குத் தெரியும்.

ஆனாலும்கூட ஒரு காலத்திலே திராவிட இயக்கத்தின் சார்பாக சொல்லப்பட்ட கொள்கைகளுக்கு மாறான கருத்துக்களைத் தெரிவித்தவர்கள்கூட பிறகு அவற்றை ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவிற்கு நாட்டின் நிலை உருவானது. அதற்காகத்தான் அதை நான் இங்கே குறிப்பிட விரும்பினேன்.

திரு.வி.க. அவர்கள் தமிழ்த் தென்றல் என்று போற்றப்படுகிறார். இங்கே உரையாற்றியவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல அவர் புயலாகவும் விளங்கினார். தொழிலாளர்களுடைய தலைவராக விளங்கினார். பக்கிங்ஹாம் கர்நாட்டிக் மில்லிலே பணி யாற்றிக் கொண்டிருந்த பதிமூன்றாயிரம் தொழிலாளர் களுடைய யூனியன் திரு.வி.க. தலைமையிலேதான் அன்றைக்கு இயங்கியது. இந்தியாவிலேயே முதன் முதலாகத் தொழிற்சங்கம் உருவானது சென்னையிலே தான். அதற்கு தலைமை ஏற்றிருந்தவர் திரு.வி. கலியாண சுந்தரனார். அவர் தலைமை ஏற்று அந்தத் தொழிற் சங்கத்தை நடத்தியபோது அன்றைக்குச் சென்னை மாகாணத்தினுடைய கவர்னராக இருந்தவர் வெலிங்டன் பிரபு, அப்போது பக்கிங்ஹாம் கர்நாட்டிக் மில்லில் பெரும் போராட்டம் நடைபெற்றது. தொழிலாளர்கள் போராட்டம், அந்தப் போராட்டத்தை அடக்குவதற்காக பல்வேறு அடக்குமுறைகளை அன்றைக்கு இருந்த வெலிங்டன் ஏவி விட்டார். அதற்கெல்லாம் தலை தாழாமல் தோள் உயர்த்தி நின்று தொகை தொகையாகத் தொழிலாளர்களை அணி வகுக்கச் செய்து போர்க் களத்திலே நின்றார் திரு.வி. கலியாணசுந்தரனார்.

அடங்காத ஆத்திரம் கொண்ட அன்றைய ஆங்கிலேய பிரபு வெலிங்டன் திரு.வி.க.வை நாடு கடத்த ஆணை பிறப்பித்தார். அப்பொழுது நீதிக் கட்சி யினுடைய ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருந்தது. பனகல் அரசர் அன்றைய சென்னை மாகாணத்தினுடைய முதலமைச்சர். அதாவது அப்போது பிரிமியர் – பிரதமர் என்று பெயர். திரு.வி.க. நாடு கடத்தப்பட உத்தரவிடப் பட்டது என்ற செய்தி கேள்விப்பட்டவுடன், திராவிட இயக்கத்தினுடைய முன்னோடியான தியாகராயர், நடேசனார், இவர்கள் எல்லாம் சேர்ந்து பனகல் அரசரை

சந்தித்து நீங்கள் உடனடியாக கவர்னரை போய் பார்த்து திரு.வி.க.வை நாடு கடத்துவதைத் திரும்பப் பெறச் செய்யுங்கள். அதற்கு வெலிங்டன் பிரபு செவிசாய்க்க மறுத்தால் அமைச்சரவையிலிருந்து அனைவரும் வெளியே வந்துவிடுங்கள். ஆட்சிப் பொறுப்பு நமக்கு வேண்டாம் என்று தியாகராயர் சொல்லி அனுப்ப அதனைக் கேட்டு அன்றையதினம் உடனடியாக பனகல் அரசரும் அவருடைய அமைச்சரவையில் இருந்த அமைச்சர் பெருமக்களும் வெலிங்டனைச் சந்தித்து திரு.வி.க.வை நாடுகடத்தக் கூடாது என்று கண்டிப்பாக சொல்ல, திரு.வி.க நாடு கடத்தப்படக் கூடாது என்று சொல்ல நீங்கள் யார்? நாடு கடத்தியே தீருவேன் என்று வெலிங்டன் வேகமாகப் பேச – அப்படியானால் இதோ எங்களுடைய பதவியின் இராஜினாமா கடிதங்கள் என்று இராஜினாமா கடிதங்களைத் தூக்கி எறிந்த காரணத்தால் வெலிங்டன் அதற்கு அடிபணிந்து வேறு வழியில்லாமல் அன்றைக்கு நாடுகடத்தப்பட இருந்த அந்த உத்தரவைத் திரும்பப்பெற்றார் என்பது தமிழ்நாட்டினுடைய சரித்திரம். (கைதட்டல்)

நீதிக்கட்சி என்றால், ஏதோ வெள்ளைக்காரனுக்கு வால்பிடித்த கட்சி என்றெல்லாம் சொல்லப்படுகின்ற அந்த விமர்சனத்தை அன்றைக்கே இந்த நிகழ்ச்சியின் மூலமாக முறியடித்துக் காட்டிய கட்சிதான் நீதிக்கட்சி. அந்தக் கட்சியினுடைய பேரு தான் திராவிட இயக்கம். அந்தத் திராவிட இயக்கம் இன்றைக்குத் தேசிய தலைவர்களை, சுதந்திர வீரர்களை மறக்கத் தவறியதே இல்லை என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகளை நான் கூற முடியும்.

இப்பொழுது நடைபெறுவது இந்தியாவினுடைய சுதந்திரப் பொன்விழா. சுதந்திரப் பொன்விழா ஆண்டில் நாம் இருக்கின்றோம்.

சுதந்திரப் பொன்விழா ஆண்டில்தான் உலகமே இன்றைக்கு விமர்சிக்கின்ற அளவிற்கு அணுகுண்டுச் சோதனை இந்தியாவிலே நடத்தப்பட்டிருக்கின்றது.

நான் அதைப்பற்றிய ஆராய்ச்சிக்கு செல்ல விரும்பவில்லை. அணுகுண்டு இன்றைக்கு வெடித்திருக்கிற தென்றால்; அதைத் தயாரித்த இந்திய நாட்டு விஞ்ஞானிகள், அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்த இரண்டு விஞ்ஞானிகள் அதிலே இடம் பெற்றிருக்கிறார்கள் என்கிற போது (பலத்த கைதட்டல்) நாமெல்லாம் மகிழ்ச்சி அடைகிறோம்.

இதனுடைய எதிர் விளைவுகள் எப்படி இருக்கும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் நாலாபுறமிருந்தும் எதிர்ப்புக்கணைகள் பல்வேறு நாடுகளிலே இருந்து இன்றைக்கு வந்து கொண்டிருக்கின்றன. பாய்ந்து கொண்டிருக்கின்றன.

இறுதிக் கட்டத்திலே அவைகளை எல்லாம் தாங்கித் தான் தீர வேண்டுமென்றால் அப்போது அணுகுண்டு சோதனை செய்தது சரியா? இல்லையா? என்ற விமர்சனம் நமக்குத் தேவை இருக்காது.

அப்போது இந்தியாவா? மற்ற வெளி நாடுகளா? என்ற அந்தக் கேள்விதான் நமது மனதிலே நிற்கும்.

செய்தது சரியா? அல்லவா? என்பது இப்போது பேசக்கூடியதாக இருக்கலாம். நாளைக்கு இந்தியாவிற்கு மற்ற நாடுகளால் ஓர் ஆபத்து வந்தால் – இந்தியா எல்லா அரசியல் மாச்சர்யங்களையும் மறந்து ஒன்றாக நிற்கும், நிற்போம் என்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகின்றேன். (பலத்த கைதட்டல்)

ஏனென்றால், இந்த விழா திரு.வி.க. பேராசிரியர் கல்கி ஆகிய இந்த நாட்டின் பற்றாளர்கள் – தேச

பக்தர்கள் – தமிழ் பக்தர்கள், இன்றைய சமுதாயத்திற் காகப் பணியாற்றியவர்கள். உலக ஒற்றுமைக்காக பாடு பட்டவர்கள், அதற்காக எழுதியவர்கள், பேசியவர்கள் தொண்டாற்றியவர்கள் அவர்களுடைய விழா நிகழ்ச்சி என்கின்ற காரணத்தால் – இதை நான் இந்த நேரத்திலே சொல்வது சாலப் பொருத்தமானது என்றே கருதுகிறேன்.

திரு.வி.க.வினுடைய பேரும் புகழும் – பேராசிரியர் கல்கி அவர்களுடைய பேரும் புகழும் இன்றைக்கு நாம் நடத்துகின்ற இந்த நிகழ்ச்சியின் மூலமாக மாத்திரம் நிலைபெறக் கூடியதல்ல. இவைகளையெல்லாம் கடந்து நிற்கின்ற பெயர்கள், அந்தப் பெயர்கள் – நம்மை யெல்லாம் இன்றைக்கு ஆளாக்குகின்ற அளவிற்கு உயர்ந்து நிற்கின்ற பெயர்கள் அந்த பெயர்கள். அந்தப் பெயர்களுக்குரிய பெருமக்கள் இருவரையும் மீண்டும் மீண்டும் வாழ்த்துவோம்! வணங்குவோம்!! அவர்கள் வழி நடப்போம் என்று உறுதி எடுத்துக்கொள்வோம்.

15-5-98 அன்று திரு.வி.க. – கல்கி நூல்களுக்குப் பரிவுத் தொகை வழங்கும் விழாவில் ஆற்றிய உரை

16

ஆம்பூர் சம்பங்கி இல்ல மணவிழா உரை

என்னுடைய ஆருயிர் நண்பர் ஆம்பூர் சம்பங்கி இல்லத்தில் நடைபெறுகின்ற இந்த மணவிழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதிலும், சம்பங்கியின் பேத்தியும் தம்பி மனோகரனின் செல்வியுமான சங்கீதாவுக்கும் இராதாகிருஷ்ணனுடைய செல்வன் பாலாஜிக்கும் நடைபெறுகின்ற இந்த வாழ்க்கை ஒப்பந்த விழாவில் அவர்கள் இருவரும் பல்லாண்டு காலம் வாழ்ந்து நாட்டுப் பணி பல புரிந்து இந்தக் குடும்பத்தின் சிறப்பினை எடுத்துக்காட்டுகின்ற வகையில் விளங்கிட வேண்டுமென்று என் இதயமார்ந்த வாழ்த்துக்களை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் குடும்பத்தில் நடைபெறுகின்ற மணவிழா நிகழ்ச்சிகளிலெல்லாம் நான் கலந்து கொள்வதை நம்முடைய கழகத்தின் பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி இங்கே சுட்டிக்காட்டினார். மனோகரனின் திருமணத்திற்கும் நான்தான் தலைமையேற்று மணவிழா நிகழ்ச்சியை அன்றைக்கு நடத்தி வைத்தேன். இன்றைக்கு மனோகரனுடைய மகள் திருமணத்தையும் நானேதான் தலைமையேற்று மணவிழா நிகழ்ச்சியை நடத்தி வைத்துக் கொண்டிருக்கின்றேன். இப்படியே போனால்

மனோகரனுடைய பேரன், பேத்தியின் திருமண விழா விலும் கலந்து கொள்கின்ற அளவுக்கு இந்தக் குடும்பத்திலே எனக்குப் பற்றும் பாசமும் உண்டென் பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மனோகரனுடைய தங்கையும் ஆனந்தனின் தங்கையுமான செல்வியின் திருமண விழாவிலேயும் நான் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தியிருக் கின்றேன். சம்பங்கியின் மற்றொரு மகன் தம்பி ராஜுவினுடைய திருமணத்திலும் கலந்துகொண்டு மணமக்களை நான் வாழ்த்தியிருக்கின்றேன். எனவே இந்தக் குடும்பத்தில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொள்வது என்பது இயற்கையான ஒன்று என்பதற்கு இவைகளெல்லாம் சான்றுகளாகும்.

ஆம்பூர் என்றால் சம்பங்கியையும், இராமுவையும் என்னால் மறக்க முடியாது. 1950-ஆம் ஆண்டு வாக்கில் ஏறத்தாழ 48 ஆண்டுகளுக்கு முன்பு அவர்களை நான் சென்னையில் சந்தித்தேன். அதற்கு முன்பு இவர்தான் சம்பங்கி என்றோ, இவர்தான் ராமு என்றோ இவர்களை எனக்குத் தெரியாது. அப்போது நான் 'மணமகள்' படத்திற்கும் 'பராசக்தி' படத்திற்கும் திரைக்கதை வசனம் எழுதிக் கொண்டிருந்தேன்.

கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள் நீங்கள் வீட்டிலிருந்து வசனம் எழுதினால் உங்களுக்குத் தொந்தரவு இருக்கும் என்று கூறி அவருடைய செயலாளர் செல்லமுத்து என்பவரை என்னோடு அனுப்பி சென்னை மாநகரத்தில் வடசென்னை பகுதியில் செலக்ட் ஹோட் டல் என்ற ஒரு ஹோட்டலில் அறை எடுத்துக் கொடுத்து அங்கே அமர்ந்து நீங்கள் தனிமையாக வசனம் எழுதிக் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டார். அதைப்போல இதே வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த பூட்டுத் தாக்கிலே பிறந்த பெருமாள் அவர்கள் எடுத்த 'பராசக்தி'

படத்திற்கு அங்கேதான் சில காட்சிகளுக்கான வசனத்தை நான் எழுதிக் கொண்டிருந்தேன். அப்பொழுது என் அறைக்கு எதிர் அறையிலே இரண்டு இளைஞர்கள் அங்கிருந்தவாறு என்னைச் சந்திப்பதற்கு அந்த ஹோட்டலில் பணியாற்றுகின்ற பையன் மூலமாக, சொல்லி அனுப்பினார்கள். அந்தப் பையன் என்னிடம் வந்து 'ஏதோ வடஆர்க்காட்டிலிருந்து இரண்டு பேர் வந்து இங்கே தங்கியிருக்கிறார்கள். உங்களைச் சந்திக்க வேண்டுமாம்' என்று அந்தப் பையன் என்னிடத்தில் சொன்னான். 'வரச் சொல்' என்றேன்.

பிறகு இருவரும் வந்தார்கள். வந்து தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். அதாவது நான் சம்பங்கி, இவர் இராமு என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். திராவிட இயக்கத்திலே அவர்களுக்குள்ள பற்றை என்னிடம் விளக்கினார்கள். அன்றைக்கு செலக்ட் ஹோட்டலில் ஏற்பட்ட அந்தச் சந்திப்பு சம்பங்கியும், இராமுவும் மறைகிற வரையில் எந்த அளவுக்கு நீடித்தது என்பதையும் அவர்களுக்குப் பிறகும் கூட எப்படி நீடித்துக் கொண்டிருக்கிறதென்பதையும் நீங்களெல்லாம் நேரடியாக உணர்கிறீர்கள்.

இங்கே நண்பர் முல்லை வடிவேலு எடுத்துக்காட்டியதைப் போலவும் தம்பி துரைமுருகனும் மற்றவர் களும் இங்கே குறிப்பிட்டுக் காட்டியதைப் போலவும் இந்த வட்டாரத்திலே திராவிட இயக்கத்தை, தி.மு.கழகம் எனும் இந்த அரசியல் இயக்கத்தை வளர்ப்பதற்கும், வலிமைப் படுத்துவதற்கும் சம்பங்கியும், ராமுவும் எவ்வளவு பணியாற்றினார்கள் என்பதை நான் மிக மிக நன்றாக உணர்வேன். அதனால்தான் சம்பங்கியோ, ராமுவோ ஆம்பூர் தொடர்பாக எந்த நிகழ்ச்சிக்கு எப்போது அழைத்தாலும் நான் வரத் தயங்கியதே இல்லை. அவர் இங்கே கட்டிய ஹோட்டல் திறப்பு விழாவுக்குக்கூட

நான் வந்தேன் என்பது உங்களுக் கெல்லாம் தெரியும். நான் இல்லாமல் இந்த இல்லத்தில் எந்த நிகழ்ச்சியும் நடைபெறக்கூடாதென்பது அவருடைய பிடிவாதமான கொள்கை; எண்ணம். அந்த எண்ணத்தை நிறை வேற்றுவது என்னுடைய கடமை என்ற அளவிலேதான் அன்றும் சரி இன்றும் சரி இந்த இல்ல நிகழ்ச்சிகளுக்கு வந்து கொண்டிருக்கின்றேன்.

தம்பி ஆனந்தன் கழகத்திலே மிகுந்த பற்றோடு நகரச் செயலாளர் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு பணியாற்றி வருகின்றார். வட ஆர்க்காடு மாவட்டத்தில் எனக்கு நிறைய நண்பர்கள் உண்டு என்று பல மாவட்டங்களையெல்லாம் ஒப்பிட்டுக் காட்டி பல மாவட்டங்களோடு எனக்குள்ள கட்சித் தொடர்பை யெல்லாம் எடுத்துச் சொல்லி அவைகளையெல்லாம் மீறுகிற வகையிலே இங்கே நான் அதிக நண்பர்களைப் பெற்றிருக்கிறேன் என்று துரைமுருகன் இங்கே குறிப்பிட்டார்.

அதிக நண்பர்களைப் பெற்றதும் இந்த மாவட்டத்திலேதான்; அதிலே சில நண்பர்களை இடையிலே இழந்து மீண்டும் திரும்பப் பெற்றதும் இதே மாவட்டத்திலேதான் என்பதை அவர்களுடைய பெயர்களை நான் சொல்லாமலே நீங்களெல்லாம் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன். அது எதைக் காட்டுகிறதென்றால் ‘‘நீரடித்து நீர் விலகாது’’ என்ற அந்தப் பழமொழியைத்தான் அது சுட்டிக் காட்டு கின்றது. அப்படிப்பட்ட இந்த உணர்வுப்பூர்வமான, உறவு பூர்வமான நட்பின் அடிப்படையில் அமைந்த இந்தத் தொடர்புடைய மாவட்டத்தில் உங்களையெல்லாம் காணும்பொழுது நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைவேன், பெருமிதம் கொள்வேன். அந்தப் பெருமிதத்தை இன்றைக்கும் நான் காணுகின்றேன்.

இங்கே மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி சகி பேசும்பொழுதும், கழகத்தின் பொருளாளர் பேசும் பொழுதும் இது ஒரு மணவிழாவாக அல்ல ஒரு மாவட்ட மாநாடு போல இங்கே பெருந்திரளாக நீங்கள் குழுமியிருக்கின்றீர்கள் என்று குறிப்பிட்டார்கள். சிலபேர் நடத்துகின்ற மாநாடுகள் இந்த மணவிழா அளவுக்கு இருக்கின்ற காரணத்தால் மணவிழாவே இன்றைக்கு மாநாடுகளாக நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். தி.மு.கழகம் வென்றாலும் அல்லது வெற்றி வாய்ப்பை இழந்தாலும் அதை யாராலும் வீழ்த்த முடியாத ஒரு சக்தி என்பதற்கு இங்கே நீங்கள் குழுமியிருக்கின்ற ஒன்றே போதுமான ஆதாரமாகும்.

இந்த மாவட்டத்திலும், இந்தத் தொகுதியிலும் கழக அரசு ஆற்றியுள்ள சாதனைகளை எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக நண்பர் அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே நான் சட்டமன்றத்தில் அறிவித்த திட்டங்களையெல்லாம் எடுத்துச் சொல்லி எங்கே ஒருவேளை மறந்துவிடுவேனோ என்பதற்காகவோ அல்லது சட்டமன்றத்தில் சொன்னதை நிறைவேற்றாமல் போய்விடுவேனோ என்பதற்காகவோ உங்களையெல்லாம் சாட்சியாக வைத்துக் கொண்டு மீண்டும் அவைகளை நினைவுபடுத்தியிருக்கின்றார். நினைவுபடுத்தத் தேவை யில்லை. துரைமுருகன் அந்தத் துறையின் அமைச்சர் என்கின்ற பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தால் அவைகளையெல்லாம் நிச்சயம் தம்பி துரைமுருகன் நிறைவேற்றிக் கொடுப்பார் என்று அப்துல் லத்தீப் அவர்களுக்கும் உங்களுக்கும் நான் இங்கே மீண்டும் ஒருமுறை உறுதி கூறுகின்றேன். நிறைவேற்றாவிட்டால் அப்துல் லத்தீப் பாடு துரைமுருகன் பாடு என்று விட்டு விட மாட்டேன். அதில் நானும் பொறுப்பேற்றுக் கொள்வேன் என்பதை நான் அவருக்கு உறுதிபட தெரிவித்துக் கொள்கின்றேன்.

தி.மு.கழகம் என்கின்ற இந்த இயக்கம் ஓர் அரசியல் இயக்கமாக முதலில் தொடங்கப்படவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். தந்தை பெரியார் அவர்களோடு இணைந்த திராவிடர் கழகம் என்ற அந்தப் பாசறையிலே பயின்றவர்கள் நாங்களெல்லாம். அவருடைய வாழ்த்துக்களோடு – அவருடைய அறிவுரைகளோடு – அவருடைய கண்டிப்புக்களை ஏற்றுக் கொண்டு கடமை யாற்றியவர்கள் திராவிடர் கழகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களும் நானும் கழகத்தின் பொதுச் செயலாளர் பேராசிரியரும் இங்கே வீற்றிருக்கின்ற கழகத்தின் தளகர்த்தர்கள் பலரும் அத்தனை பேரும் தந்தை பெரியாருடைய இயக்கத்திலே தங்களை ஒப்படைத்துக் கொண்டு சமுதாயப் பணி ஆற்றிக் கொண்டிருந்தவர்கள்.

தமிழகத்தில் மத ஒற்றுமை வேண்டும் – ஜாதி வேற்றுமை கூடாதென்ற நிலை – சமுதாயத்தில் நல்லிணக்கம் இவைகளெல்லாம் வேண்டுமென்பதற் காகப் பாடுபட ஒரு பேரியக்கத்தில் எங்களை இளமைக் காலத்திலே ஒப்படைத்துக் கொண்டவர்கள். அந்த இயக்கம் செய்து வந்த பிரச்சாரம், எடுத்துரைத்த கொள்கைகள் – மக்கள் மன்றத்தில் எடுத்து வைத்த லட்சியங்கள் இவைகளெல்லாம் நிறைவேற்றப்பட வேண்டுமேயானால் சமுதாய இயக்கமாக இருந்தால் மாத்திரம் போதாது என்கின்ற அந்த எண்ணத்தோடு தான் தி.மு.கழகம் அரசியல் ரீதியாக விளங்க வேண்டுமென்கிற ஒரு கருத்தை திருச்சியில் 1956–இல் நடைபெற்ற தி.மு.கழக மாநில மாநாட்டில் கூடியிருந்த கழகத் தோழர்களும் பொது மக்களும் அறிஞர் அண்ணா அவர்களுக்கு வலியுறுத்துகின்ற வகையிலே வாக்களித்து, தேர்தலில் நீங்கள் ஈடுபட வேண்டுமென்று அன்றைக்கு மக்கள் மன்றம் ஆணையிட்டது; தி.மு.கழகம் என்கின்ற ஜனநாயக பேரியக்கத்தின் தொண்டர்கள் ஆணை யிட்டார்கள்.

அந்த ஆணையை ஏற்றுக் கொண்டு 57-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் தி.மு.கழகம் தேர்தல் களத்திலே இறங்கியது. அப்பொழுது அண்ணா தலைமையில் பதினைந்து பேர் சட்ட மன்றத்தில் இடம் பெற்றோம். அதற்குப் பிறகு நடைபெற்ற தேர்தலில் ஐம்பது பேர். அதற்குப் பிறகு 67–இல் நடைபெற்ற தேர்தலில் அண்ணா தலைமையில் ஆட்சியே அமைந்தது. அண்ணா அவர்கள் – நாம் செய்த துர்ப்பாக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும். அதன் காரணமாக – இரண்டாண்டு காலத்தில் நம்மைவிட்டுப் பிரிந்திடவும் அதற்குப் பிறகு அவர் விட்டுச் சென்ற பொறுப்புக்களை நாம் ஏற்று நடத்திடவும் ஆட்சிப் பொறுப்பிலே சில காலம் இருந்தோம்.

ஆட்சிப் பொறுப்பிலே மூன்று முறை இருந்து நான்காவது முறையாக இன்றைக்கு தி.மு.கழகம் இடம் பெற்றிருக்கிறதென்றால் தமிழ்நாட்டு மக்கள் என்னதான் கழகத்திற்குச் சோதனை வந்தாலும் அந்தச் சோதனைகள், அடக்குமுறை வடிவத்திலே வந்தாலும் மிசா வடிவத்திலே வந்தாலும் எந்த வடிவத்திலே வந்தாலும் அவைகளையும் தாங்கிக் கொண்டு அது தேர்தல் தோல்வி என்ற வடிவத் திலே வந்தாலும் கூட அதையும் பொருட்படுத்தாமல் இந்தக் கழகத்தின் கொடியைத் தூக்கிப் பிடிக்கின்ற இலட்சோப லட்சம் உடன்பிறப்புக்கள் இன்றைக்கும் இருக்கின்றார்கள். (பலத்த கைதட்டல்) என்றைக்கும் இருப்பார்கள். அதற்குக் காரணம் சம்பங்கி போன்றவர்கள், இராமு போன்றவர்கள், வடஆர்க்காடு மாவட்டத்திலே உள்ள கழக மாவீரர்கள், தமிழகம் முழுவதும் உள்ள தளகர்த்தர்கள் அவ்வளவு பேரும் உழைத்த உழைப்பு – அவர்களால் உருவாக்கப்பட்டு ஆங்காங்கு இன்றைக்கும் இருக்கின்ற தி.மு.கழகத்தின் உடன் பிறப்புக்கள், அவர்கள் ஆற்றி வருகின்ற பணிதான் இதற்கெல்லாம் காரணமாகும்.

என்னென்ன சாதனைகளை இந்த அரசு செய்து வருகிறதென்பதைப் பட்டியலிட்டுக் காட்டத் தேவை யில்லை. நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். விளம்பரங்கள் மூலமாக இவைகளைச் சொல்வதெல்லாம் உங்களுக்காக அல்ல. பொதுமக்களுக்காக அல்ல. சிலபேர் இன்றைக்கும் தி.மு.கழக ஆட்சியை வீழ்த்த வேண்டும், வீட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று கூத்தாடிக் கொண்டிருக் கிறார்களே துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கிறார்களே, அதற்கான சதி வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்களே, அவர்களுக்கு அவைகளை அடையாளம் காட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் தி.மு.கழக அரசின் சாதனையும் இந்த ஆட்சி மக்களோடு எந்த அளவுக்குத் தொடர்பு கொண்டுள்ளது என்பதையும் நாம் எடுத்துக் காட்டுகின்றோம்.

இன்றைக்கு இந்த மணவிழாவிற்கு நாங்கள் வந்திருக்கிறோம் என்றால் தம்பி துரைமுருகன் என்னோடு சென்னையிலிருந்து வந்ததாகக் கருதிக் கொண்டிருப்பீர்கள். சென்னையிலிருந்து ரயிலில் வந்த காரணத்தால்! ஆனால் துரைமுருகன் கடந்த மூன்று நாட் களாக இருந்த இடம் தஞ்சை மாவட்டம், எதற்காக என்றால் துரைமுருகனும், உள்ளாட்சித்துறை அமைச்சர் தம்பி கோ.சி.மணி இருவரும் தஞ்சை மாவட்டத்தில் நடைபெறுகின்ற பணியினைப் பார்த்திட ஊக்கப் படுத்திட அங்கே சென்று திரும்பியிருக்கின்றார்கள். அங்கே அந்தப் பணி நடைபெறுகிறதென்றால் தஞ்சை மாவட்டத்திற்காக மாத்திரம் நடைபெறுகின்ற பணி அல்ல. அது மொத்த தமிழகத்திற்காக நடைபெறுகிற பணி. கடந்த ஆண்டு பன்னிரெண்டு கோடி ரூபாய் செலவில் நடைபெற்ற பணி. அதைத் தொடர்ந்து அதை மேலும் விரிவாக்குகின்ற பணியாக இருபது கோடி ரூபாய் செலவில் இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்று வருகின்ற பணி அந்தப் பணி.

இந்தப் பகுதியில் வெளிவந்த 'இந்து' 'எக்ஸ்பிரஸ்' போன்ற பத்திரிகைகளில் கூட அந்தப் பணியைப் பற்றி எழுதியுள்ளதை நீங்கள் படித்திருக்கக்கூடும். அந்தப்பணி சோழ மன்னர் காலத்தில் கூட நடைபெறாத பணி என்று அவைகள் வர்ணித்திருக்கின்றன. வரலாற்றில் இதுவரையிலே சொல்லப்படாத பணி என்று வர்ணித் திருக்கின்றன.

காவேரி தோன்றி காவேரி ஆறு கர்நாடகத் திலிருந்து தமிழகத்திற்கு வந்து சேலம், மேட்டூர், திருச்சி, தஞ்சை இந்தப் பகுதியெல்லாம் காவேரி தீரம் என்று சொல்லப்படுகின்ற அளவுக்குப் பரவி தஞ்சை, திருச்சி, தென்னார்க்காடு மாவட்டத்தின் ஒரு பகுதி விவசாயி களை அது வாழ வைத்துக் கொண்டிருக்கிற தென்றாலும் கூட அதனுடைய கிளை ஆறுகள் அதனுடைய வாய்க்கால்கள் இவைகளெல்லாம் சீர்படுத்தப்படாமல் பல்லாண்டுக் காலமாக இருந்த காரணத்தால் வருகின்ற தண்ணீர் முழுமையாக வயல்களுக்குப் போய்ச் சேர முடியாத பல்வேறு தடுப்புக்கள் ஆங்காங்கு இருந்ததை யெல்லாம் எண்ணிப் பார்த்து கடந்த ஆண்டு அந்த வாய்க்கால்களை யெல்லாம் சிறிய நதிகளையெல்லாம் ஆழப்படுத்த வேண்டுமென்று முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. அதன் காரணமாக கடந்த ஆண்டு வயல்கள் பயன்பெற்றது மாத்திரமல்ல. வந்த வெள்ளத் தண்ணீர் போவதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்த காரணத்தால் தஞ்சை மாவட்டமே தப்பித்தது என்பதை யாரும் மறந்திருக்க முடியாது.

அந்தப் பணியை மேலும் தொடர்ந்துதான் இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் பல கிலோமீட்டர் தூரம் அந்த வாய்க்கால்களையெல்லாம் வகைப்படுத்த இருபது கோடி ரூபாய் செலவிலே பணிகள் வெகுவேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவைகளைப்

பத்திரிகைகள் பாராட்டியிருக்கின்றன. அந்தப் பணி முடிவுற்றால் வருகின்ற தண்ணீர் வீணாகாமல் வயல் களுக்குச் சென்று மேலும் அதிக விளைச்சலை தஞ்சை மாவட்ட விவசாயிகள் பெறுகின்ற காரணத்தால் தமிழகத்தினுடைய உணவு தேவை நிறைவு செய்யப்பட்டு அது வட ஆர்க்காடானாலும், சேலம் ஆனாலும், கோவை ஆனாலும், வேறு எந்த மாவட்டமானாலும், எல்லா மாவட்ட மக்களுக்கெல்லாம் பயன் பெறுகின்ற வகையில் தஞ்சை மாவட்டம் செழிப்பாக ஆவதற்காக இந்தக் காரியம் இன்றைக்குச் செய்யப்படுகிறது.

எனவே மக்களுக்கு அன்றாடம் ஆற்ற வேண்டிய பணி என்ன என்பதைச் சிந்தித்து செயல்படுகின்ற ஒரு ஆட்சி இன்றைக்கு இங்கே நடைபெற்றுக் கொண்டிருக் கின்றது. சிலபேருக்கு அவசரம்; சிலபேருக்குத் துடிப்பு; சிலபேருக்கு பாரதக் கதையில் வருகின்ற காந்தாரியின் நினைப்பு. அதன் காரணமாக இந்த ஆட்சியை அகற்ற வேண்டுமென்றெல்லாம் இன்றைக்குச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள்.

என்னை பத்திரிகையாளர்கள் சந்திக்கும்பொழு தெல்லாம் கேட்கிறார்கள். எங்கே சந்தித்தாலும் ஒரு விழாவிற்குச் சென்றால் அந்த விழா மேடையில் ஏறும்போதும் சரி, அல்லது நான் பயணம் செய்கின்ற விமானத்திலிருந்து இறங்கும் போதும் சரி, ரயிலில் ஏறும் போதும் சரி, காரிலே ஏறும் போதும் சரி, காரை விட்டு இறங்கும் போதும் சரி என்னை பத்திரிகைகாரர்கள் சூழ்ந்து கொண்டு "என்ன சார் ஆட்சியைக் கலைப்பதாகச் சொல்கிறார்களே, என்ன சொல்கிறீர்கள்" என்று கேட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். கலைக்கக்கூடாதென் பதற்கான காரணங்களையெல்லாம் இப்போது நான் சொல்லிக் கொண்டிருப்பதில்லை. அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை என்றுதான் நான் சொல்கின்றேன்.

ஆட்சி என்பது வரும் போகும். அண்ணா சொன்னதைப் போல பதவி என்பது மேலே போட்டிருக்கின்ற துண்டை போன்றது. அது கீழே விழுந்தாலும் மனிதன் நடமாடலாம். ஆனால் கொள்கை என்பது கட்டியிருக் கின்ற வேட்டியைப் போன்றது. அதை இழந்துவிட்டு மனிதன் நடமாட முடியாது.

எனவே கொள்கைக்காக வாழ்கின்ற நாங்கள், கொள்கைக்காக இருக்கின்ற இயக்கம். இந்த இயக்கம் இருந்தால் போதும் என்பதுதான் எங்களுடைய எண்ணம். எங்களுடைய லட்சியம். அந்த இலட்சியத் திலிருந்து தி.மு.கழகத்திலிருந்து யாரும் தங்களை என்றைக்கும் விடுவித்துக் கொள்ள மாட்டார்கள். அப்படிப்பட்ட உறுதி வாய்ந்த இந்த இயக்கத்தினுடைய ஒரு பெரும் தூணாக இந்தப் பகுதியிலே விளங்கியவர் என்னுடைய ஆருயிர் நண்பர் சம்பங்கி ஆவார். அந்த சம்பங்கியின் இல்லத்தில் இன்றைக்கு ஏற்றி வைக்கப் பட்டுள்ள இந்த குலவிளக்குகள் கொழுந்து விட்டு எரிந்து இந்தக் குடும்பத்தினுடைய பெருமையை மேலும் மேலும் பரப்பிட நல்ல முறையிலே பயன்படும் என்ற நம்பிக்கை யோடு மணமக்களை வாழ்த்துகிறேன்.

ஆம்பூர் சம்பங்கி இல்ல மணவிழாவில்
ஆற்றிய உரை

17

நெல்லிக்குப்பம் புகழேந்தி மணவிழா உரை

இந்த மணவிழாவில் உளமார்ந்த பெரு மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்ற நேரத்தில் இந்த இனிய விழாவிற்கு முன்னிலை ஏற்றுள்ள கழகப் பொருளாளர் அருமை நண்பர் ஆர்க்காடு வீராசாமி அவர்களும் அமைச்சர் பெருமக்களும் வரவேற்புரையாற்றிய மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி பன்னீர்செல்வம் அவர்களும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னோடிகளில் ஒருவரும் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினருமான அருமைத் தோழர் கோவிந்தராசன் அவர்களும் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்களும், இந்த வட்டாரத்தைச் சேர்ந்தவர்களும் தங்களுடைய அன்பான இதயங்கனிந்த வாழ்த்துக்களை மணமக்களுக்குத் தெரிவித்து, மணமகனுடைய பெயரில் எப்படிப் புகழேந்தி என்கின்ற எழுத்து இருக்கிறதோ அதைப்போல அவர் புகழ் பெற்று வாழ்கிறார். அவர் மேலும் புகழ் பெற வேண்டுமென்ற ஆர்வம் கலந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்கள்.

இந்த வாழ்த்துக்களை – ஆவலைத் தெரிவித்த எனக்கு முன்னால் பேசிய அமைச்சர் பெருமக்கள், நண்பர்கள் யாருக்கும் நான் குறைந்தவன் அல்ல புகழேந்தியை வாழ்த்துவதில் – போற்றுவதில் –

புகழ்வதில்! புகழேந்தி தி.மு.கழகத்தின் தலைசிறந்த பேச்சாளர்களில் ஒருவர். பல சிறந்த பேச்சாளர்கள் நூற்றுக்கணக்கிலே தி.மு.கழகத்திலே இருக்கிறார்கள் என்று சொல்ல மாட்டேன். அதற்காக மிகக் குறைவான எண்ணிக்கைதான் இந்தக் கழகத்தின் பேச்சாளர்களின் எண்ணிக்கை என்றும் கூற மாட்டேன். ஓர் அளவோடு கழகத்தின் சொற்பொழிவாளர்கள் அதுவும் தலைமைக் கழகத்தின் சொற்பொழிவாளர்கள் என்ற முத்திரையோடு இருக்கின்ற அந்தப் பட்டியலில் ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற ஒரு பெயர் தம்பி புகழேந்தியின் பெயர் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இளைஞர் சமுதாயம் எதிர்காலத்தை நிர்ணயிக்கக் கூடியது. எதிர்காலத்தை வென்றெடுக்கக் கூடியது. அந்தச் சமுதாயத்தின் உயர்விலேதான் தமிழர் நலன் – தமிழ் இன உணர்வு – ஏன் நாட்டின் நலன் அத்தனையும் அடங்கியிருக்கின்றது. தி.மு.கழகத்தைப் பொறுத்த வரையில் பேரறிஞர் அண்ணாவின் அரும் முயற்சி யினாலும் அவர் இளைஞர்களிடத்தில் கொண்டிருந்த பேரன்பின் காரணமாகவும் தந்தை பெரியாரின் கொள்கைகளை அண்ணா வழியில் ஏற்றுக் கொள்வதற்காக ஏராளமானவர்கள் இந்த இயக்கத்திலே தங்களை ஒப்படைத்துக் கொண்டார்கள்.

அண்ணா அவர்கள் தந்தை பெரியாரின் கொள்கைகளை பொதுமக்கள் கூடுகின்ற இடங்களில் மாத்திரமல்லாமல்; மாணவர் அரங்கங்களிலும் குறிப்பாக பல்கலைக்கழகங்களில், கல்லூரிகளிலெல்லாம் எடுத்துரைக்கின்ற வாய்ப்பைப் பெற்றார்கள். அப்படி அவர் வாய்ப்பைப் பெற்று வருகின்ற நேரத்தில் தமிழ்நாடு முழுவதும் ஆவலோடு எதிர்பார்த்த ஒரு நிகழ்ச்சி அன்றைக்கு – அன்றைக்கு என்பதில்

எத்தனையோ பொருள் இருக்கிறது. அப்படிப்பட்ட காலகட்டத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அண்ணா அவர்கள் உரையாற்றுகிறார். அப்படி உரையாற்றும்போது மேடையில்தான் அண்ணா அவர்களுக்கு தலைப்பு தரப்பட்டது. 'ஆற்றோரம்' என்ற தலைப்பில் பேசுங்கள் என்ற தலைப்பு தரப்பட்டது. தலைப்பு தந்தவர்களும் சரி, மண்டபத்தில் குழுமியிருந்தவர்களும் சரி ஆற்றோரம் என்ற தலைப்பிலே என்ன பேசப்போகிறார் என்றுதான் எதிர்பார்த்தார்கள்.

ஆனால் அண்ணா அவர்கள் ஏறத்தாழ ஒருமணி நேரம் ஆற்றோரம் என்ற தலைப்பில் உரையாற்றும் போது, கங்கை ஆற்றோரத்தின் கலாச்சாரம், காவிரி ஆற்றோரத்தின் கலாச்சாரம் இந்த இரண்டிற்குமுள்ள வேறுபாடுகள், முரண்பாடுகள் இவைகளைப் பற்றியெல்லாம் எடுத்துரைத்து அந்த ஆற்றோரம் என்ற தலைப்பு தமிழகம் முழுவதும் பரவுகின்ற வழிவகையை அன்றைக்குச் செய்தார்.

அப்படித்தான் அதே பல்கலைக்கழகத்தில் 'ஏ தாழ்ந்த தமிழகமே' என்ற தலைப்பில் அண்ணா பேசிய பேச்சுத்தான் தாழ்ந்த தமிழகத்தைத் தலைநிமிர வைத்தது. இப்படி இளைஞர்கள் ஈட்டி முனைகளாக இந்த இயக்கத்திலே வந்து சேருவதற்கு அண்ணா அவர்களின் ஆற்றல் மிகு சொற்பொழிவுகள் – கருத்துக்கள் – சிந்தனைகள் – அந்தச் சிந்தனைகளால் பெற்ற செயல் வடிவங்கள் இவைகள்தாம் காரணங்களாகும். அதைப் பின்பற்றித்தான் இன்றைக்கு தி.மு.கழகம் மேலும் மேலும் இளைஞர்களை இந்த இயக்கத்திலே இணைப்பதற்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. அப்படி இளைஞர் களும் இணைந்து பணியாற்றி வருகிறார்கள்.

ஆனால் ஒரு வருத்தத்தை என்னால் தெரிவிக்காமல் இருக்க முடியாது. பொதுவாகவே இளைஞர் சமுதாயம்

இன்றைக்குச் சமுதாய உணர்வை – மொழி உணர்வை – இன உணர்வை – நாட்டு உணர்வைப் பெரிதும் மதித்து கொள்கை அடிப்படையிலே தங்களை ஓர் இயக்கத்திலே ஒப்படைத்துக்கொண்டு பணியாற்ற வேண்டுமென்று எண்ணுகின்ற காலம் ஒன்று இருந்தது. அது இன்றைக்குத் தலைகீழாக மாறிவிட்டது என்று சொல்ல மாட்டேன். ஓரளவு பின்தங்கிவிட்டது என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

அப்பொழுதெல்லாம் இளமைப்பருவத்தில் எங்களைப் போன்றவர்கள் எவ்வளவு ஈடுபாட்டோடு கொள்கை ரீதியிலே எங்களை இந்த இயக்கத்திலே இணைத்துக் கொண்டோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இணைத்துக் கொண்ட நாங்கள் அதே உறுதியோடு இன்றளவும் இந்த இயக்கத்திலே இருப்பதை யும் நீங்கள் அறிவீர்கள். ஒருசிலர் மாறியிருக்கலாம். அது அவர்களுடைய இயல்பாக இருக்கலாம். அல்லது சந்தர்ப்பவாதத்தால் ஏற்பட்ட கோளாறாக இருக்கலாம். ஆனால் அண்ணா அவர்களின் தலைமையில் அன்றைக்கு இளைஞர் பட்டாளம் முகிழ்த்தெழுந்தபோது அவர்களுடைய கரம் பிடித்து வளர்ந்த நான், நம்முடைய கழகத்தின் பொதுச் செயலாளர், இனமானப் பேராசிரியர் போன்றவர்கள் இன்னமும் அதே உறுதியோடு பெரியாரின் கொள்கை அடிப்படையில் பேரறிஞர் அண்ணாவின் இலட்சிய வழியில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு இளைஞர்களின் சிந்தனை பொதுவாக எப்படி இருக்கிறதென்றால், படித்து முடித்து விட்டு மாணவப்பருவம் முடிந்தவுடன் சிந்திக்கத் தொடங்கு கிறான். தங்களுடைய வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்வது என்பதற்காகப் பலர், என்ன படிக்கலாம் என்று திட்டமிட்டு, படித்து முடித்து விட்டு என்ன தொழில் கல்வி பெறலாமென்று சிந்தித்து அதிலே

தேர்ச்சி பெற்று பல அலுவல்களில் பல்வேறு துறைகளில் விற்பன்னர்களாக ஆகிற அந்த முயற்சியிலே ஈடுபடுகிறார்கள்.

வேறு சில இளைஞர்கள் சமுதாயத்துறையில் ஈடுபடலாமா, அரசியல் துறையில் ஈடுபடலாமா என்று எண்ணுகிற நேரத்தில் ஓர் இளைஞன் இப்போது எப்படிச் சிந்திக்கிறான் என்றால்; அந்தக் காலத்தி லெல்லாம் அந்தக் கட்சியின் கொள்கை என்ன, இந்த இயக்கத்தின் கொள்கை என்ன, இது யாருக்காகப் பாடுபடுகிறது, எந்த இலட்சியத்தின் அடிப்படையில் செயல்படுகிறது என்றெல்லாம் சிந்தித்து அப்படிப்பட்ட ஓர் இயக்கத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டவனாகத்தான் அந்தக் காலத்து இளைஞன் இருந்தான்.

ஆனால் இந்தக்காலத்து இளைஞர்களில் பலர் – எல்லோரையும் சொல்லவில்லை. பலர் எந்தக் கட்சிக்குப் போனால் உடனடியாகப் பதவி கிடைக்கும்; எந்தக் கட் சிக்குப் போனால் உடனடியாகப் பணம் சேர்க்கலாம், எந்தக் கட்சிக்குப் போனால் உடனடியாகச் செல்வாக்குப் பெறலாம் என்று இப்படிக் கணக்குப் போடுகிறான். அப்படிக் கணக்குப் போடும்பொழுது தி.மு.கழகத்தைப் பற்றி என்ன எண்ணுகிறான் என்றால் 'ஏ அப்பா! ரொம்ப காலமாக இருக்கிற இளைஞர்களெல்லாம் இன்றைக்கு அங்கே பெரியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இடம் விட்டால்தானே நாம் அங்கே போனால் நமக்கு இடம் கிடைக்கும். ஆகவே, அந்த இடம் வேண்டாம். காலியாக உள்ள இடம் எது என்று பார்த்து அந்த இடத்திற்குச் செல்கிறார்களே தவிர ஒரு சிந்தனையோ, பகுத்தறிவோ அல்லது கொள்கைப்பிடிப்போ, இலட்சிய உணர்வோ எதுவும் இல்லாமல் இளைஞர்கள் இன்றைக்குத் தங்களுடைய வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கிறார்கள்.

காரணம் அவர்கள் தங்களைப்பற்றி சிந்திக்கின்ற காரணத்தால் வருவது இது. மக்களைப் பற்றி – நாட்டைப் பற்றி – சமுதாயத்தைப் பற்றி – மொழியைப் பற்றி – இனத்தைப் பற்றி – இன உணர்வைப் பற்றியெல்லாம் சிந்திக்கத் தொடங்கினால் நான் சொன்ன இந்த விவரங்களெல்லாம் இளைஞர்களின் வாழ்க்கையில் நிச்சயமாக வந்து குறுக்கிடாமலே விலகிவிடும்.

அப்படிச் சிந்திக்காமல் கொள்கை ரீதியாக சிந்தித்து இந்த இயக்கத்திலே தன்னை ஒப்படைத்துக்கொண்ட தம்பி புகழேந்திக்கு இப்படிச் சிந்தனை ஏற்பட இன்னொரு காரணம் அவருடைய தந்தையார். அவருடைய தந்தை இந்த இயக்கத்திலே தன்னை ஈடுபடுத்திக்கொண்டு எவ்வளவு ஆழமான இலட்சிய உணர்வோடு பாடுபட்டார் என்பதை இங்கே எனக்கு முன்னால் பேசியவர்களெல்லாம் எடுத்துரைத்தார்கள். அப்படிப்பட்ட குடும்பத்திலே பிறந்த தம்பி புகழேந்தி இந்த இயக்கத்திலே இன்றைக்குத் தலைசிறந்த பேச்சாளராக விளங்குகிறார் என்று அவரை அழைத்து வந்து என்னிடத்திலே முதன்முதலாக அறிமுகப்படுத்திய தம்பி துரைமுருகன் மெத்தவும் பெருமைப்பட்டுக்கொண்டார்.

இன்றைய பேச்சாளர்களுக்கு நிறைய கூட்டங்கள் அழைப்புக்கள் வருகின்றன. துரைமுருகன் ஒன்றைச் சொல்ல எண்ணி அதை விட்டு விட்டார் என்று கருதுகின்றேன். அவர் செல்கின்ற இடங்களிலெல்லாம் புகழேந்தி அங்குள்ள கழக நண்பர்களிடத்திலே எளிமையாகப் பழகுகிறார், மீண்டும் அவரைக் கூட்டத்திற்கு அவர்கள் அழைக்கக் கூடிய அளவுக்கு அவருடைய நட்புணர்வு, பழக்கவழக்கங்கள் இருக்கின்றன என்று எடுத்துச் சொன்னார். ஒரு குறை புகழேந்தியிடத்தில் இல்லை; வேறு சில பேச்சாளர்களிடத்தில் உண்டு. சில நேரங்களில் முரசொலியைப் பார்த்ததும் எனக்கே அதிர்ச்சி ஏற்படும். ஒரு பேச்சாளர் 5–ஆம் தேதி மாலை

நெல்லிக்குப்பத்திலும் பேசுவார். அதே 5–ஆம் தேதி மாலை நெல்லை மாவட்டத்திலே உள்ள பாளையங்கோட்டையிலும் பேசுவார் என்று செய்தி இருக்கும். நான் கூட முரசொலிக்குத் தொலைபேசியில் தொடர்புகொண்டு தெரிந்து கொள்வேன். எப்படி இரண்டு ஊர்களிலும் ஒரே தேதியில் பேசுகிறார் என்று செய்தி போட்டீர்கள் என்று கேட்பேன். இரண்டு ஊர்களில் இருந்தும் செய்தி வந்திருக்கிறது. எனவே போட்டுவிட்டோம் என்பார்கள். அது கூடாது. புகழேந்தியைப் பொறுத்தவரையில் அந்த முறை கடைப்பிடிக்கப்படுவதில்லை என்பது பாராட்டப் படவேண்டிய ஒன்றாகும்.

சில பேச்சாளர்களுக்கு முகதாட்சண்யம் என்பார்களே அதைப்போல யார் தேதி கேட்டாலும் கொடுத்துவிடுவது, எந்தத் தேதியிலே எந்த ஊருக்குச் செல்ல வசதி இருக்கிறதோ அந்த ஊருக்கு மாத்திரம் செல்வது என்ற நிலையை, அவர்கள் எண்ணிப்பார்ப்பது இல்லை. அதனால் கூட்டம் நடத்துபவர்கள் எந்த அளவுக்குக் கவலைப்படுவார்கள் என்பதை யாரும் எண்ணிப் பார்ப்பதில்லை. கூட்டம் நடத்துகின்றவர் களாகப் பேச்சாளர்கள் இருந்திருப்பார்களேயானால் அந்த நிலையைப் பற்றி எண்ணத் தோன்றும். என்னைப் பொறுத்த வரையில் எடுத்த எடுப்பில் மேடை ஏறி பேசியவன் அல்ல நான். பலபேருக்கு மேடை போட்டுக் கொடுத்தவன். பெரியாருக்கும் பேரறிஞர் அண்ணாவுக்கும் மாத்திரமல்ல, நாவலர் நெடுஞ்செழியனுக்கு, பேராசிரியர் அன்பழகனார் அவர்களுக்கு தளபதி அழகிரிசாமிக்கு திருவாரூரில் மாணவப் பருவத்தில் மேடை போட்டுக் கொடுத்தவன்.

எனவே ஒரு கூட்டத்திற்கு அழைக்கப்பட்ட தலைவர் வரவில்லை என்றால் எவ்வளவு சங்கடம் இருக்கும் என்பதை அனுபவ ரீதியாக உணரக் கூடியவன். 1942 – ஆம் ஆண்டில் திருவாரூரில் ‘தமிழ்நாடு தமிழ் மாணவர்

மன்ற'த்தின் மாநாட்டை நடத்தினேன். அந்த மாநாட்டிற்கு சேலம் இராமசாமி கவுண்டர் அவர்களைத் தலைமை வகிக்கக் கேட்டிருந்தேன். அவரும் ஒத்துக்கொண்டிருந்தார். அப்பொழுது கலையுலகத்திலே – இந்த இயக்கத்திலே பிரசித்தி பெற்ற நடிகராக விளங்கிய நடிகவேள் எம்.ஆர். இராதா அவர்களின் நாடகம் நாகப்பட்டினத்திலே நடை பெற்றுக் கொண்டிருந்தது. எனவே, அவர் திருவாரூருக்கு வருவது சுலபம் என்று அவரையும் கேட்டிருந்தேன். அவருடைய பெயரையும் போட்டிருந்தேன். இன்னும் சில ஆன்றோர்கள், சான்றோர்களையும் அழைத்திருந்தேன்.

இவர்களெல்லாரும் வருவார்கள் என்று அன்று காலையில் இரயிலடியில் போய் நின்று கொண்டி ருந்தேன். யாரும் வரவில்லை. அவர்களுக்குப் பதிலாக தந்திகள்தாம் வந்தன. இராமசாமி கவுண்டரின் துணைவியாருக்கு உடல்நலம் சரியில்லை. ஆகவே நான் வரவில்லை என்று அவர் தந்தி கொடுத்துவிட்டார். நடிகவேள் இராதா அவர்கள் நாகப்பட்டினத்திலிருந்து வர முடியவில்லை. காரணம் அங்கு ஏற்பட்ட ஒரு விபத்தில் இராதா அவர்களுக்கு பெரும் பிரச்சினை ஏற்பட்டு அங்கிருந்து நகர முடியாத ஒரு சூழ்நிலை. எனவே அவரும் வர முடியவில்லை.

எனவே இப்படி யாரும் வரமுடியவில்லை என்றவுடனே இரயிலடிக்குச் சென்றிருந்த எனக்கு மயக்கமே வந்துவிட்டது. பக்கத்தில் இருப்பவரைப் பிடித்துக் கொள்கிற அளவுக்கு மயக்கம் வந்துவிட்டது. காலை 10.30 மணிக்கு நிகழ்ச்சி. எல்லோரும் வருவார் களே, எவ்வளவு அவமானமாக இருக்கும்; எத்தனை பேருக்கு ஏமாற்றம் ஏற்படும் என்று எண்ணியவாறு உடனடியாக – குடந்தையில் அன்றைக்கு நடைபெற்ற ஒரு நிகழ்ச்சிக்கு நம்முடைய பேராசிரியர் அவர்களும், மறைந்த நண்பர் மதியழகனும் வந்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு உடனடியாக இரண்டு பேரிடம் கடிதம்

கொடுத்து பேருந்தில் அனுப்பி 'இருவரும் திருவாரூருக்கு வாருங்கள், வருவதாக ஒத்துக்கொண்டவர்கள் வர இயலவில்லை' என்று கடிதம் கொடுத்து அனுப்பினேன். அவர்களும் வந்தார்கள். வந்து கலந்து கொண்டார்கள். பிறகுதான் எனக்கு நிம்மதி ஏற்பட்டது.

எனவே கூட்டம் நடத்துபவர்களுக்குத்தான் தெரியும் கூட்டத்திற்கு ஒருவர் ஒத்துக்கொண்டு வராவிட்டால் ஏற்படுகின்ற அந்த வேதனை. எனவேதான் பேச்சாளராக மாத்திரம் நம்முடைய தோழர்கள் இல்லாமல் செயலாளர்களாகவும் விளங்க வேண்டும். அதற்காக புகழேந்தி நாளைக்கே நெல்லிக்குப்பத்திலே நகரச் செயலாளர் பதவிக்குப் போட்டியிடுகிறேன் என்று வந்து விட வேண்டுமென்று நான் அவருக்கு அழைப்பு விடுக்கவில்லை.

செயலாளர் என்றால் செயல்புரிகின்றவர்களாக இருக்க வேண்டும். வெறும் கச்சேரிக்கு மாத்திரம்தான் போவேன் என்று கச்சேரி நடத்துபவர்களாக மாத்திரம் நம்முடைய பேச்சாளர்கள் இருக்கக்கூடாது. செயல் புரிபவர்களாகவும் இருக்க வேண்டும். ஆங்காங்கு சென்று நம்முடைய கிளைக் கழகங்கள், ஒன்றியக் கழகங்கள், மாவட்டக் கழகங்கள், வட்டக்கழகங்கள், நகரக் கழகங்கள் இங்கெல்லாம் கூட்டம் முடிந்தபிறகு அமர்ந்து பேசி, எப்படி எப்படி இங்கே பணிகள் நடைபெறு கின்றன என்பதையெல்லாம் கேட்டு உறுப்பினர்கள் சேர்த்து விட்டீர்களா? தலைவரும், பொதுச்செயலாளரும் அடிக்கடி அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்களே? உறுப்பினர் படிவம் வாங்கி வந்தீர்களா? எத்தனை படிவங்கள் வாங்கி வந்தீர்கள், எவ்வளவு உறுப்பினர் சேர்த்திருக்கின்றீர்கள்? எப்போது தலைமைக் கழகத்திற்கு அனுப்பப் போகிறீர்கள்? – என்றெல்லாம் அத்தகைய செயல்பாடுகளிலும் ஈடுபட வேண்டும்.

எனவே பேச்சாளராக இருந்தால் மாத்திரம் வளர்ந்து விட முடியாது. அந்தப் பேச்சாளர் செயலாளராக – செயல்புரிபவராக இருக்க வேண்டும். இன்றைக்கு நான் உங்கள் முன்னால் தி.மு.கழகத் தலைவனாக இருக்கிறேன் என்றால் நான் பேச்சாளராக மாத்திரம் வளர்ந்திருந்தால் இந்த நிலை எனக்கு ஏற்பட்டிருக்க முடியாது. தி.மு.கழக தலைமைத் தொண்டனாக நான் இன்றைக்கு இருப்பதற்குக் காரணம் அன்றைக்கு என்னுடைய வாழ்க்கை, தொண்டனாக ஆரம்பிக்கப்பட்ட காரணத்தால்தான் இன்றைக்கு இந்தக் கழகத்தின் தலைமைத் தொண்டனாக நான் இருக்கிறேன். இதைத் தம்பி நெல்லிக்குப்பம் புகழேந்தி மூலமாக கழகத்திலுள்ள எல்லாப் பேச்சாளர்களுக்கும் எடுத்துச் சொல்லி எப்படி பேசினேன் தெரியுமா' என்று பேச்சைப் பற்றி மற்றவர்களிடத்தில் கேட்பதை விட நம்முடைய செயல் பாடுகளைப் பாராட்டுகின்ற அளவுக்கு நம்முடைய கழகக் கண்மணிகள் நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இதையே இந்தத் திருமண விழாவிலே தம்பி புகழேந்தி – டெல்சி வாழ்க்கை ஒப்பந்த விழாவிலே கழகத்திலே உள்ள இளைஞர்களுக்கெல்லாம் விடுக்கின்ற ஒரு செய்தியாக விடுத்து மணமக்கள் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

6-7-98 அன்று நெல்லிக்குப்பம் புகழேந்தி மணவிழாவை நடத்தி வைத்து ஆற்றிய உரை

18

இராஜபாளையத்தில் குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழா

மறைந்தும் மறையாமல் நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற பெரியவர், தேசத்தியாகி, தமிழகத் தினுடைய மக்களின் உள்ளங்களை பெருமளவுக்கு ஈர்த்துக் கொண்டிருக்கின்ற நல்லவர், வல்லவர் பி.எஸ்.குமாரசாமிராஜா அவர்களுடைய நூற்றாண்டு விழா நடைபெறுகின்ற நேரத்தில் அதில் பங்கு கொள்கின்ற வாய்ப்பை இன்றைய தமிழக அரசு பெற்றமைக்கும், அந்த வாய்ப்பைப் பெற்ற தமிழக அரசின் தலைமை அமைச்சனாக நான் இருப்பதற்கும் மிகுந்த பெருமை அடைகிறேன்.

இராஜபாளையம் நகரம் இன்றைக்கு விழாக்கோலம் பூண்டிருக்கிறது. இராஜபாளையத்திற்கு வருகின்ற சாலைகளெல்லாம் ஆர்த்தெழுந்து அலங்காரம் பூண்டு நிற்கின்றன. எல்லோருடைய இதழ்களிலும் குமாரசாமி ராஜா அவர்களின் பெயர் இன்றைக்கு உச்சரிக்கப்பட்ட வண்ணம் இருக்கின்றது. மூப்பனார் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, அவர்களின் நினைவைப் போற்றுகின்ற வகையிலே இங்கே இந்த விழா நிகழ்ச்சி மாத்திரமல்ல; என்றென்றும் நிலையாக இருக்கக் கூடிய அளவிற்கு, மக்களுக்குப் பயன்படக் கூடிய அளவிற்கு,

திருமண மண்டபம், 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறந்த நூல்கள் நிறைந்துள்ள ஒரு நூலகம், மற்றும் சில மண்டபங்கள் – இப்படி பலப்பல பயனுள்ள காரியங்கள் நூற்றாண்டு விழாவையொட்டி இன்றைக்கு நடைபெற்றி ருக்கின்றன.

இந்த விழாவை இராஜபாளையத்தில் நடத்த வேண்டுமென்று என்னுடைய அருமை நண்பரும், சட்டப்பேரவை உறுப்பினருமான அழகர்ராஜா அவர்கள், சட்டப்பேரவையிலே கேட்டபோது, "நடத்தப்படும்" என்று நான் சொன்னேன். "அரசே முன்னின்று நடத்தும்" என்றும் நான் கூறினேன். அழகர்ராஜா அவர்களுக்குக்கூட சந்தேகம் வந்திருக்கலாம். அன்றைக்குச் சொன்னாரே, இன்றைக்கு அரசே நடத்த முடியுமா? என்ற சந்தேகம் இருந்திருக்கலாம். காரணம், அதுவரை அரசு இருக்குமா? என்ற சந்தேகம். (கைதட்டல்) ஆனால், அரசும் இருக்கிறது. அரசேதான் இந்த விழாவை நடத்துகிறது.

இந்த விழா நடத்துவதற்கு ஒத்துழைக்கின்ற வகையில், விழாக்குழுவினர் அதிலும் குறிப்பாக, நமது அன்பிற்குரிய இராமசுப்பிரமணிய ராஜா அவர்களும், அவரோடு இணைந்து செயலாற்றுகின்ற பிற உறுப்பினர்களும், சிறந்த முறையிலே தங்களுடைய பங்கை ஏற்று, இந்த விழா எல்லா வகையிலும் சிறப்படையக்கூடிய ஒரு நிலையை இன்றைக்கு உருவாக்கியிருக்கின்றார்கள். அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியை, பாராட்டுக்களை, வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் பேசும்போது, "தேசத் தலைவர்களை, தேசத் தியாகிகளை மதிக்கின்ற இயல்பு படைத்தவர் முதலமைச்சர் கலைஞர்" என்று குறிப்பிட்டார்.

இன்று நேற்றல்ல, என்றைக்குமே எத்தனை ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும்கூட, நாட்டிற்காக, மொழிக்காக, இனத்திற்காக தங்களை ஒப்படைத்துக் கொண்டு பாடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைப் போற்றுவதிலும், புகழ்வதிலும், அவர்களுடைய நினைவு என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் என்று எண்ணி காரியமாற்றுவதிலும், நான் என்றைக்கும் யாருக்கும் பின்வாங்கியவன் அல்ல என்பதை நீங்களெல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

அந்த வகையிலே எத்தனை நினைவுச் சின்னங்கள் தமிழகத்திலே தி.மு.கழக ஆட்சியில் ஏற்படுத்தப் பட்டுள்ளன என்பதையெல்லாம் இங்கே பட்டியலிட்டுக் காட்டி இருக்கின்றார்கள். அதிலும், இலக்கியச் செல்வர் அவர்களும், அவரே வேண்டுகோள் என்ற பெயரால் விடுத்து, எப்போதுமே இத்தகைய வேண்டுகோள்களை ஆணைகளாக ஏற்றுக்கொள்கிற நான், அந்த ஆணையை நிறைவேற்றுகின்ற வகையிலே, விஸ்வநாததாஸ் அவர்களுக்கான நினைவு மண்டபம் பெரிய அளவிலே மதுரை திருமங்கலத்திலே இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கின்றது.

அதைப்போலவே சென்னையில் அவர் ஒரு விழாவிலே எடுத்துச்சொன்னதை ஏற்றுக் கொண்டு கிண்டி பகுதியில் தியாகிகளுக்கு மணி மண்டபம் அமைக்கப்பட்டு வருகிறது. நான் நேற்றைக்குக்கூட அவர் ஒரு தொலைக் காட்சியிலே சொன்னதைப் பார்த்தேன். அந்த மணிமண்டபத்திலே வைப்பதற்கான தியாகிகளின் படங்களெல்லாம் தயாராகிக் கொண்டிருக்கின்றன என்று சில படங்களைக் கூட தொலைக்காட்சியிலே காட்டியபொழுது, எனக்குப் பெருமிதமாக இருந்தது. மகிழ்ச்சியாக இருந்தது. விரைவிலேயே தியாகிகளுடைய மணிமண்டபம் தயாராகும்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். "குமாரசாமி ராஜா அவர்களுடைய பெயரை இந்த மாவட்டத்தின் ஆட்சியர் அலுவலகத்திற்குச் சூட்ட வேண்டும் என்று இராமசுப்பிரமணியராஜா குறிப் பிட்டு, அந்த வேண்டுகோளை நான் 89-90-இல் ஏற்றுக் கொண்டதை நன்றிப் பெருக்கோடு வரவேற்புரையில் இங்கே குறிப்பிட்டார்.

மாவட்ட ஆட்சித்தலைவரின் அலுவலக வளாகத்திற்கு 89–ஆம் ஆண்டிலேயே குமாரசாமி ராஜா அவர்களுடைய பெயர் சூட்டப்பட்டிருக்கின்றது. இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். குமாரசாமி ராஜாவைப் போல, இன்னொரு பெயர் சொன்னால், நீங்களெல்லாம் நினைவில் கொள்ளக்கூடிய பெயர்தான். தமிழகத்திலே, அதிககாலம் ஆட்சி நடத்தாவிட் டாலும்கூட, அதிக காலம் மக்களுடைய உள்ளத்திலே இடம் பிடிக்கின்ற அளவிற்கு, அந்தக் குறைந்த காலத்தில் ஆட்சி நடத்திய, திராவிட இயக்கத் தலைவர்களால், தாடி இல்லாத பெரியார் என்று அழைக்கப்பட்டவர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார். அந்த இராமசாமி ரெட்டி யாருடைய நூற்றாண்டு விழா 1995–ஆம் ஆண்டு வந்தது. நான் ஆட்சியில் இல்லாத காலம் அது. 95–ஆம் ஆண்டு அவர்களுடைய நூற்றாண்டு விழா வந்தது. அந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்காக அப்போது இருந்த அரசு ஏதாவது முயற்சியில் ஈடு பட்டதா என்று நான் பழைய கோப்புகளையெல்லாம் புரட்டிப் பார்த்தேன். முயற்சியிலே ஈடுபட்டு, அதற்காக மூன்றரை இலட்ச ரூபாய் செலவு செய்வது என்று கோப்பிலே குறிப்பிட்டு, ஆனால், நிகழ்ச்சி நடத்தப் படவில்லை. ஒதுக்கப்பட்ட மூன்று லட்ச ரூபாய் செலவு செய்யப்படவில்லை. நான் சில பேர் செய்த நல்லவை களைத் தொடர்ந்து செய்யக்கூடியவன். எப்படியாவது

செய்துகாட்டக் கூடியவன். அது என்னுடைய பெருமையைக் காட்டுவதற்காக அல்ல. பெரியவர்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமையைச் செய்வதற்காக. அந்த வகையில் ஆகஸ்டு மாதம் 25–ஆம் தேதி மறைந்த ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களுடைய பிறந்த நாள் வருகிறது. அந்த நாளில் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களின் நூற்றாண்டு விழா 95–இல் நடத்துவதாக இருந்து நடத்தாமல் விடப்பட்ட அந்த விழா 98–ஆம் ஆண்டு ஆகஸ்டு 25–ஆம் தேதி சென்னை மாநகரில் மிகச்சிறப்பாக நடைபெறும்.

அதிலும் நம்முடைய மூப்பனார் அவர்களும், மற்ற கட்சித்தலைவர்களும் கலந்துகொள்வார்கள் என்று இப்போதே நான் அறிவிக்கிறேன். ஏனென்றால், குமாரசாமி ராஜா அவர்கள் எந்த அளவிற்குச் சாதாரண சாமான்ய மக்களிடத்தில் பரிவு கொண்டு ஆட்சி நடத்தினாரோ, பொது வாழ்க்கையில் ஈடுபட்டாரோ; அதைப்போல ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களும், எளிமையாக எல்லோரிடத்திலும் பழகுவதில் இனிமையாக வாழ்ந்தவர். அதே நேரத்தில், தான் கொண்ட கொள்கைக்காக பதவி போனாலும் பரவாயில்லை என்று இங்கே உள்ள தலைவர்களிடத்தில் அல்ல, ஆசியாவின் ஜோதி பண்டித ஜவகர்லால் நேரு அவர்களிடத்திலேயே எடுத்துச் சொல்லி, தான் கொண்ட கொள்கையை நிறைவேற்றிக் காட்டியவர். அப்படிப்பட்ட ஓமந்தூராருக்கு ஆகஸ்ட் மாதத்திலே நூற்றாண்டு விழா – விடுபட்டுப் போன நூற்றாண்டு விழா, இரண்டு மூன்றாண்டு காலம் தாமதித்தாலும் நிச்சயமாக நடைபெறும் அது என்பதை இந்த விழாவிலே தெரிவிப்பது பொருத்தம் என்று கருதுகிறேன்.

ஏனென்றால், ஒரு முன்னாள் முதலமைச்சருக்கு நடைபெறுகின்ற நூற்றாண்டு விழாவில், இன்னொரு

முன்னாள் முதலமைச்சருடைய நூற்றாண்டு விழா நடைபெறும் என்று இந்நாள் முதலமைச்சராகிய நான் அறிவிப்பது மிகமிகப் பொருத்தம் என்பதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன். குமாரசாமி ராஜா அவர்களுடைய வாழ்க்கையைப் பார்த்தால், அதை ஒரு வரி விடாமல் படித்துப் பார்த்தால், இங்கே நம்முடைய முல்லைவேந்தன் பேசும்போது குறிப்பிட்டார்.

'குமாரசாமி ராஜாவும் சில கொள்கைகளுக்காகத் தன்னுடைய பதவியை இழக்க நேரிட்டது. கலைஞரும் அவ்வாறே இழக்க நேரிட்டது' என்று குறிப்பிட்டார். இந்த ஒரு சம்பவம் மாத்திரமல்ல. இளமைக்காலத்திலேயே பல சம்பவங்கள் எனக்கும் அவருக்கும் பொருத்தமாக இருக்கின்ற சம்பவங்களை நான் காண்கின்றேன். குமாரசாமிராஜா உயர்நிலைப் பள்ளியில் படித்தபோது, இராஜபாளையத்திலிருந்து, திருவில்லிப்புத்தூருக்கு ஏழு மைல் தூரம் நடந்தே வந்துதான் படித்தார் என்று அவரே தன்னுடைய வாழ்க்கைக் குறிப்பில் எழுதி இருக்கிறார். மூப்பனார் அவர்களுக்குத் தெரியும். நான் பிறந்த திருக்குவளைக்கும் திருவாரூருக்கும் 15 கல் தொலைவு. அங்கே உள்ள திருநெல்லிக்காவல் என்ற ஊருக்குச் சென்று, இரயிலேற ஏழு மைல் தூரம் நான் நடந்தே செல்லவேண்டும். நானும் ஏழு மைல்தூரம் நடந்துசென்றுதான் இரயிலேறி திருவாரூர் சென்று படித்தேன்.

எனவே, இந்த ஏழு மைல் எனக்கும் குமாரசாமி ராஜாவுக்கும் மிகவும் பொருத்தமாக அமைந்திருக்கிறது. அந்த ஒரு பொருத்தம் கூட நான் இந்த விழாவிலே கலந்து கொள்ள காரணமாக இருக்குமோ என்று கூட, நான் கருதுகிறேன். இன்னொன்று, அவரும் எஸ்.எஸ்.எல்.சி.யிலே

பெயிலானவர். நானும் அவ்வண்ணமே. (கைதட்டல்) அவரும் எஸ்.எஸ்.எல்.சி.யில் பெயிலானவுடன் நண்பர் கள் வருத்தப்பட்டார்களாம். அப்போது குமாரசாமி ராஜா ''ஏன் வருத்தப்படுகிறீர்கள்? இதற்கெல்லாம் வருத்தப் படலாமா?'' என்று சொன்னாராம். அதே மாதிரிதான் நானும் பெயிலானவுடன் சொன்னேன். நான் வருத்தப் படாதது மாத்திரமல்ல. பெரியாரோடு சேர்ந்து சுற்றுப் பயணம் போய்விட்டேன். பெரியாரோடு சுற்றுப் பயணம் போனதினால் தான் அப்போது பெயிலே கூட ஆனேன்.

அதேபோல, பொது வாழ்க்கையில் ஈடுபட்டதன் காரணமாக குமாரசாமி ராஜா அவர்களும் எஸ்.எஸ்.எல்.சி.யிலே பெயிலானவர். அதற்கு யாரும் வருத்தப்படக்கூடாது. நானும் வருத்தப்படமாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்.

இன்னொன்று அவருக்கு விளையாட்டுக்களிலே கால்பந்து விளையாட்டிலேதான் அதிகப் பிரியம் என்றும் அந்த விளையாட்டிலே கீழே விழுந்து ஒரு பாதிப் பல்லை உடைத்துக்கொண்டேன் என்றும் குறிப்பிட்டிருக்கிறார், அவருடைய இளமைக்கால வாழ்க்கை வரலாற்றில்.

எனக்கும் கால்பந்து விளையாட்டில் மிகுந்த ஈடுபாடு உண்டு. திருவாரூரில் படித்த காலத்தில் கால்பந்து பந்தயங்கள் பலவற்றில் கலந்து கொண்டிருக்கின்றேன். பல்லை உடைத்துக் கொள்ளவில்லை. ஆனால், நெற்றியில் ஒரு காயம். இன்றைக்கும் இருக்கிறது. கால்பந்து விளையாட்டின்போது விழுந்ததால் ஏற்பட்ட தழும்பு அது.

இப்படி பலவகையிலும் இளமைக்காலத்திலே குமாரசாமி ராஜா அவர்களின் வாழ்க்கையும் என்னுடைய

வாழ்க்கையும் பொருந்தி இருக்கின்ற காரணத்தால், இரண்டு பேருடைய வாழ்க்கை வரலாற்றையும் சேர்த்துப் படித்த இராமசுப்பிரமணிய ராஜா, நான் இந்த விழாவிற்கு வரவேண்டுமென்று என்னை வலியுறுத்தி இருப்பாரோ என்று நான் கருதுகின்றேன்.

இந்த மாவட்டத்தை எண்ணிப் பார்க்கிறேன். சுற்று வட்டாரத்தை எண்ணிப் பார்க்கிறேன். குமாரசாமி ராஜா அவர்களுடைய வாழ்க்கையில் அவரே குறிப்பிட் டிருக்கின்ற இன்னொரு சம்பவம் என்னவென்றால், அவருக்கு ஓர் அய்யங்கார் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர் நண்பராக இருந்திருக்கிறார். இருவரும் ஒருநாள் கடைவீதிக்குப் போகும் போது, ஓர் அய்யர் கடையில், அந்தக் கடையில் அந்த அய்யங்கார் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர் சென்று ஒரு வடையை வாங்கிச் சாப்பிட்டு விட்டாராம். அய்யர் கடை வடையை வாங்கிச் சாப்பிட்டு விட்டாராம். அய்யர் கடை வடையை வாங்கிச் சாப்பிட்டவர் அய்யங்கார். குமாரசாமி ராஜாவின் நண்பர். அந்த அய்யங்கார் பிள்ளை வடை வாங்கிச் சாப்பிட்டது அவரது தந்தைக்குத் தெரிந்தது. அடாத காரியம் செய்துவிட்டாய். அய்யர் கடை வடையைச் சாப்பிடலாமா என்று அந்த அய்யங்கார் பையனை அடித்து உதைத்தார். அடித்து உதைத்தது மாத்திரமல்ல; தோஷம் கழிப்பதற்காக பால், தண்ணீர் இவைகளையெல்லாம் கலந்து அதிலே சாணத்தையும் கலந்து அதிலே கோமியத்தையும் கலந்து ''இதைக் குடி. அப்போதுதான் தோஷம் கழியும்'' என்று சொல்லிக் குடிக்க வைத்திருக்கிறார் – அப்போதே அய்யருக்கும் அய்யங்காருக்குமே ஜாதி துவேஷம் இருந்திருக்கிறது – அதனுடைய சாயல் இன்றைக்கும் இருக்கிறது.

இந்த மாவட்டத்திலும் மற்ற மாவட்டங்களிலும் நூறாண்டு காலத்திற்கு முன்பே அய்யரும், அய்யங்காரும் ஜாதித் துவேஷத்திலே இருந்தார்கள் என்பதை குமாரசாமி

ராஜா சொல்லித்தான் நமக்குத் தெரிகிறது. இப்படிப்பட்ட ஜாதி வேறுபாடுகள், மத வேறுபாடுகள், மத மோதல்கள், சாதி மோதல்கள், இவைகளெல்லாம் நூற்றாண்டு காலமாக தமிழகத்திலே இருக்கின்றன. அதற்காக மனம் வெதும்பியவர்கள்; அது தீரவேண்டும், அது அகற்றப் படவேண்டும் என்று கருதியவர்கள் பலர் இருந்தார்கள். அப்படிப்பட்டவர்களிலே குமாரசாமி ராஜா போன்றவர்கள் இடம் பெற்றிருந்தார்கள் என்று எண்ணுகின்ற நேரத்திலே நமக்குள்ள பணி எவ்வளவு பெரிது என்பதை நாம் எண்ணிப் பார்க்க முடிகிறது.

இளமைப் பருவத்திலே அவர் நினைத்திருந்தால் – பெரிய இராஜ குடும்பத்திலே பிறந்தவர். செல்வந்தர், செல்வம் செழிக்கின்ற அளவிற்கு நிலபுலன்களும், தோட்டம் துரவுகளும் கொண்டவர். அந்த இனிய வாழ்வை, சுக வாழ்வை விரும்பாமல் ஒரு முறை ஓராண்டுக் காலமும் இன்னொருமுறை ஒன்பது மாத காலமும் சிறையிலே அடைக்கப்பட்டு நாட்டிற்காக, மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார் என்கிறபோது இளமைக் காலத்திலே இந்தத் துடிப்பு அவருக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த இளமைக் கால நினைவுகளைப் படித்தால் தமிழகத்திலே இன்றைக்கு உள்ள இளைஞர்கள் திருந்துவார்களா? குமாரசாமி ராஜாவைப் போன்று நாங்களும் ஆக வேண்டும் என்று எண்ணுவார்களா என்ற ஆதங்கம் கூட எனக்கு ஏற்படுகிறது. ஏனென்றால் நான் மிகுந்த வருத்தத்திற்கும் கவலைக்கும் ஆளான வனாக இருக்கிறேன்.

இன்றைக்கு உள்ள இளைஞர்கள் எதிர்காலத்தில் இந்த நாட்டையும், சமுதாயத்தையும், மொழியையும், இனத்தையும் காப்பாற்றுவதற்கு எந்த வகையிலே பயன்படப் போகிறார்கள் என்பதுதான் அந்தக் கவலை. ஒரு 50 ஆண்டு காலத்திற்கு முன்பு இளைஞர்கள்

மாணவப் பருவத்தில் அவர்கள் எந்த இயக்கத்திலே தங்களை ஒப்படைத்துக் கொண்டவர்களாக இருந்தாலும், அது காங்கிரஸ் இயக்கமானாலும், திராவிட இயக்கமானாலும், கம்யூனிஸ்ட் இயக்கமானாலும் அந்த இயக்கத்திலே தங்களை ஒப்படைத்துக் கொண்டவர்கள் கல்லூரிகளில், பள்ளிகளில் இலக்கியச் சொற்பொழிவுகளில் காவியங்களைக் கற்றல், சரித்திரங்களைப் படித்தல், சரித்திர நாயகர்களைப்பற்றி விமர்சித்தல், அவர்கள் வழி நடக்க வேண்டும் என்பதைப் பற்றி ஒருவருக்கொருவர் அளவளாவுதல், உரையாடுதல், விவாதித்தல், இவைகளெல்லாம் பழைய கால இளைஞர்களுடைய பழக்க வழக்கங்களாக இருந்தன. ஆனால் இன்றைய இளைஞர்கள்; நான் எல்லோரையும் சொல்லவில்லை. சிலர் இன்றைக்கும் அந்த முனைப்போடு இருக்கிறார்கள்.

இந்தச் சமுதாயத்தைக் காக்கும் ஈட்டி முனைகளாக, இந்தச் சமுதாயத்திற்குப் பாடுபட வேண்டும் என்ற தொண்டு உள்ளம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இளைஞர்கள் பலர் இன்றைக்குக் கேளிக்கைகள், கூத்துகள், சினிமாக்கள், ஆடம்பரங்கள், இதில் தங்கள் நேரத்தைச் செலவழித்தால் போதும் என்று உல்லாசபுரியே தங்களது வாழ்க்கையின் குறிக்கோள் என்று எண்ணுகின்ற காலத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது மாற வேண்டும். இது மாறுவதற்குக் குமாரசாமி ராஜா போன்றவர்களுடைய இளமைக்கால வாழ்க்கை பாடமாக அமையும் என்று நான் நம்புகிறேன்.

அத்தகைய ஒரு பாடத்தை நமக்கு வழங்கியவர் முன்னாள் முதலமைச்சரும், ஒரிசா மாநில முன்னாள் ஆளுநருமான பி.எஸ். குமாரசாமி ராஜா அவர்கள். இந்த ''பி.எஸ்.'' என்கின்ற அவருக்கு முன்னால் இருக்கின்ற அந்த இனிசியல் இரண்டு ஆங்கில எழுத்துக்கள், அது அவருடைய குடும்ப – தகப்பனாருடைய பாட்டனாருடைய

பெயர்களாக நான் எண்ணவில்லை. பி.எஸ். என்பது பப்ளிக் சர்வன்ட் என்ற முறையிலே அவர் பப்ளிக் சர்வன்ட்டாகவே வாழ்ந்து காட்டினார். அவர் வெற்றி தோல்விகளைப் பற்றி கவலைப்படாதவர். பரிட்சையிலே மாத்திரமல்ல; படிப்பிலே மாத்திரமல்ல; அவர் ஈடுபட்ட அரசியலிலே கூட வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்த நேரத்தில் இரண்டையும் ஒன்றுபோல் கருதி நாடு முக்கியம், சமுதாயம் முக்கியம் என்ற அளவிலே பாடுபட்டவர். அப்படிப்பட்ட அந்தப் பெரியவருடைய புகழை இன்றைக்கு நாம் நினைத்து மகிழ்ந்தால் மட்டும் போதாது. எதிர்கால இளைஞர்களுக்கு நல்ல பாடமாக அமையவேண்டும் என்று வேண்டி இந்த விழாவை நடத்திக்கொண்டிருக்கிறோம்.

இங்கே சில கோரிக்கைகளை நம்முடைய இராமசுப்பிரமணிய ராஜா அவர்கள் வைத்திருக்கிறார்கள். இரண்டு, மூன்று கோரிக்கைகள் இருக்கின்றன. அதற்கெல்லாம் உடனடியாக நான் இங்கு பதில் அளிக்க முடியாவிட்டாலும் முக்கியமான ஒரு கோரிக்கை சென்னையிலே அமைச்சர்கள் வாழ்கின்ற இடம் கிரீன்வேஸ் சாலை. அந்தச் சாலையின் பெயரை மாற்றி குமாரசாமி ராஜா சாலை என்று பெயர் வைக்க வேண்டும் என்று நம்முடைய வரவேற்புக் குழுத்தலைவர் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு விரைவில் இன்னும் இரண்டொரு நாளில் அந்தப் பெயர் மாற்றப்படுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும். (பலத்த கைதட்டல்) இதற்குச் சென்னை மாநகராட்சி மன்றமும் ஒத்துழைக்கும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து வாழ்க குமாரசாமி ராஜாவின் புகழ் என்று உரைத்து விடைபெறுகிறேன்.

8-7-98 அன்று இராஜபாளையத்தில்
குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழாவில்
ஆற்றிய உரை

19

திருவண்ணாமலை அருணை பொறியியல் கல்லூரி பட்டமளிப்பு விழா

அருணை பொறியியல் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவிலும் இங்கே இன்று அண்ணா கணிப்பொறி ஆராய்ச்சி மையக் கட்டிடத் திறப்பு விழா நிகழ்ச்சியிலும் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதிலும் உங்களில் 130க்கும் மேற்பட்டவர்கள் இன்று பட்டம் பெறுகிறார்கள் என்றாலும் அவர்களில் அடையாள மாகச் சிலருக்குப் பட்டங்களை வழங்கியதிலும் நான் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன்.

நான் நீண்ட நேரம் இங்கே உரையாற்றுகின்ற அளவிற்குச் சூழ்நிலை இல்லை. காரணம் இன்னொரு நிகழ்ச்சி எனக்கு இருப்பது உங்களுக்குத் தெரியும். அந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருப்பவர் கு.பிச்சாண்டி என்பதும் உங்களுக்குத் தெரியும். அதனால்தான் மற்றவர்கள் எல்லாம் பத்து நிமிடம் பேசியபோது, அவர் மாத்திரம் விரைவில் நிகழ்ச்சியை முடித்துவிட்டு, தலைவர் வரவேண்டும் என்பதற்காக ஒரிரு நிமிடங்களில் தன்னுடைய உரையை இங்கே நிறைவு செய்தார்.

இங்கே அமர்ந்திருக்கின்ற உங்களையெல்லாம் காணும் போது எதிர்காலத் தமிழகத்தை, சமுதாயத்தைப் பற்றிய என்னுடைய நம்பிக்கை வலுவாகிறது. அந்த மன

ஆறுதலோடு உங்களையெல்லாம் பாராட்டவும், வாழ்த்தவும், நான் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தில் பொறியியல் கல்லூரிகளுடைய தேவை அதிகமாகிக் கொண்டிருக்கிற கால கட்டத்தில் என்னுடைய அருமைத் தம்பி வேலு அவர்கள் இந்தப் பொறியியல் கல்லூரியைத் தொடங்கி, தொடங்கியதோடு மாத்திர மல்லாமல்; ஆறேழு ஆண்டுக்காலத்தில் அற்புதமான வளர்ச்சிகளைக் காட்டி புகழ்பெற்ற கல்லூரிகளில் ஒன்றாக இதனை இன்று சிறந்தோங்கச் செய்திருக்கிறார் என்பதை எண்ணி எண்ணி அவரைத் தம்பியாகப் பெற்றிருப்பதில் நான் மிகுந்த பெருமையடைகிறேன், மகிழ்ச்சியடைகிறேன்.

இன்றைய நிகழ்ச்சிக்கு நான் வரவேண்டும் என்று அவர் கட்டாயப்படுத்தினார். முதலில் தவிர்க்க எண்ணினேன். வந்து உங்களையெல்லாம் பார்த்த பிறகுதான், இந்த விழாக் கோலம் கண்டபிறகுதான் ஒளி பொருந்திய உங்களுடைய முகங்களையெல்லாம் கண்ட பிறகுதான், முதலில் தவிர்க்க நினைத்தது தவறு என்பதை இன்றைக்கு உணர்கிறேன். அந்த அளவிற்கு நான் பூரிப்பும், புளகாங்கிதமும் கொள்கின்ற நிலையில் மிக அற்புதமான விழாவை இங்கே நடத்தியிருப்பது மாத்திரமல்ல; இந்தக் கல்லூரி எல்லா வகையிலும் இன்றைக்கு வளர்ந்து வருகிற பல்வேறு கல்லூரிகளோடு போட்டி போட்டு வெற்றிக்கொள்ளத்தக்க அளவிற்கு வளர்ந்திருக்கிறது என்பதை எண்ணி எண்ணி நான் மனநிறைவு கொண்டு, அந்த நிறைவோடு இந்தக் கல்லூரியை இந்த ஏழாண்டுக் காலமாக நடத்திக் கொண்டிருக்கின்ற தம்பி வேலுவையும் அவருக்குத் துணையாக இருந்து இங்கே பணியாற்றுகின்ற ஆசிரியப் பெருமக்கள், மாணவச் செல்வங்களாகிய உங்கள் அனைவரையும் நான் பாராட்டுகிறேன்.

கல்லூரிகளிலே மாணவர்கள் அமைதியாக இருந்து கட்டுப்பாட்டோடு இருந்து, தங்களது குறிக்கோளை வெற்றிகரமாக எய்துவது என்பது மிக மிக பொறுப்பான காரியமாகும். அந்தப் பொறுப்பான காரியத்தை இந்தப் பொறியியல் கல்லூரியில் உள்ள நீங்கள் எல்லாம் ஆற்றி வருகிறீர்கள் என்பது எனக்கு மெத்த மகிழ்ச்சியைத் தருகின்ற ஒரு செய்தியாகும்.

91-ஆம் ஆண்டிற்கு முன்பு தமிழகத்தில் இருந்த பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 38. அவற்றில் அரசுக் கல்லூரிகள் 5. அரசு உதவிபெறும் தனியார் பொறியியல் கல்லூரிகள் 3. சுயநிதிக் கல்லூரிகள் 30 என்று இருந்தது. கடந்த ஐந்தாண்டுக்கால ஆட்சியில் அனுமதிக்கப்பட்ட பொறியியல் கல்லூரிகள் 33. ஐந்தாண்டுக் காலத்தில் 33 கல்லூரிகள் அனுமதிக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் இந்த 27 மாத காலங்களில் இந்த அரசு அனுமதித்து வழங்கியுள்ள சுயநிதி பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 87 என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுயநிதிக் கல்லூரிகள் இன்றைக்கு விரிவாகவும் அதிகமாகவும் எண்ணற்ற அளவிலும் தமிழகத்தில் அனுமதிப்பதற்குக் காரணம், நாங்கள் இந்தக் கல்லூரிகளையெல்லாம் 'சும்மாதான்' கொடுக்கிறோம். சும்மா என்பதற்குப் பொருள் என்ன என்பது வேலுவுக்குத் தெரியும். (பலத்த கைதட்டல்)

பல சுயநிதிக்கல்லூரிகளுக்கும் தெரியும். ஆனால் நாங்கள் தந்த 87 சுயநிதிக் கல்லூரிகளும் சும்மா கொடுத்தவைதாம். இப்படி சும்மா கொடுத்ததற்குக் காரணம், சுயநிதிக் கல்லூரிகளிலே மாணவர்களிடத்திலே அதிகமாக பணம் கேட்கிறார்கள். ஆனால் அதிகமான கல்லூரிகள் வந்து விட்டால், கிராக்கி குறையும். எந்த அளவிற்குச் சுயநிதிக் கல்லூரிகள் மலிவாக–ஏராளமாக

தமிழகத்தில் மலிந்து தோன்றுகிறதோ அதன் காரணமாக ஏழை–எளிய மாணவர்கள் கூட அந்தத் தொழில் கல்வியை எளிதாகப் பெற முடியும் என்பதற்காகத்தான், 87 பொறியியல் கல்லூரிகளுக்கு இந்த 27 மாதங்களில் நாங்கள் இந்த ஆட்சியில் அனுமதி வழங்கியிருக்கிறோம். அதைப்போலவே பாலி டெக்னிக்கை எடுத்துக் கொண்டாலும்கூட தமிழகத்திலே 91க்கு முன்பு இயங்கி வந்த பாலிடெக்னிக்குகளின் எண்ணிக்கை 128. அந்த 128-இல் அரசு பாலிடெக்னிக்குகள் 21. அரசு உதவிப்பெற்ற பாலிடெக்னிக்குகள் 35. சுயநிதி பாலிடெக்னிக்குகள் 72.

முந்தைய ஐந்தாண்டுக்கால ஆட்சியில் சுயநிதி பாலிடெக்னிக்குகளுக்கு அனுமதி கொடுத்தது பதினான்கு. 96-இல் நாங்கள் ஆட்சிக்கு வந்த காலத்தில் இந்த 27 மாதத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள பாலிடெக்னிக்குகளின் எண்ணிக்கை 97 என்பதையும், நான் மகிழ்வோடு உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். சுயநிதி அடிப்படையில் கலை அறிவியல் கல்லூரிகள் அதிக அளவில் தொடங்க அனுமதிகள் வழங்கி சாதனைகள் படைத்துள்ளதும் இந்த அரசுதான்.

1991 முதல் 95 முடிய ஐந்தாண்டுக் காலத்தில் அனுமதிக்கப்பட்ட கலை, அறிவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 67. ஆனால் இந்த 27 மாதங்களில் மாத்திரம் அந்த எண்ணிக்கை 74.

உயர் கல்விக்குத் தனி முக்கியத்துவம் தர வேண்டுமென்பதற்காகவே ஏற்கனவே தலைமைச் செயலகத்தில் இருந்த கல்வித்துறையை பள்ளிக் கல்வித்துறை, உயர் கல்வித்துறை என இரண்டாகப் பிரித்து உயர் கல்விக்கு ஒரு புதிய துறையை 1997-98-ஆம் ஆண்டு இந்த அரசு உருவாக்கியது. 1996 முதல் இதுவரை 87 பொறியியல் கல்லூரிகளை அனுமதித்ததாக நான் குறிப்பிட்டேன்.

இந்தக் கல்லூரிகளில் கடந்த ஆண்டு மாத்திரம் இடம் கேட்டு விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கை 17 ஆயிரம் பேர். இந்த 17 ஆயிரம் பேர்களுக்கு அவர்கள் விரும்பிய பாடங்களை விரும்பிய கல்லூரிகளில் வழங்கி சாதனை படைத்திருக்கிறது இந்த அரசு என்பதை நான் உங்களுக்கு அறிவிப்பதில் மிகுந்த பெருமைப் படுகின்றேன்.

பொறியியல் கல்லூரி மாணவர்கள் சேர்க்கையில் அனைத்திந்தியாவிற்கும் வழிகாட்டும் வகையில் ஒரே விண்ணப்பத்தைப் பயன்படுத்தி, மாணவ, மாணவிகள் தாம் விரும்பும் பாடப் பிரிவில் தமிழகத்தில் உள்ள எந்தக் கல்லூரியிலும் சேர வழி வகுக்கும் வகையில் அண்ணா பல்கலைக்கழகத்தில் 25 லட்சம் ரூபாய் செலவில் கணினி இயந்திரத் தகவல் பலகை ஒன்றை அமைத்து அதன்மூலம் ஒற்றைச் சாளர முறைத் திட்டத்தை 97-98-ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தி இந்தியாவிற்கே வழிகாட்டி யாக உள்ளது இந்த அரசு. அதுமாத்திரமல்ல; பட்டதாரி இல்லாத குடும்ப மாணவர்களுக்கு இந்த அரசு எவ்வளவு பரிவு காட்டுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

மருத்துவக் கல்வி – பல் மருத்துவக் கல்வி – பொறியியல் கல்வி – கால்நடை மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி – வேளாண்மை பொறியியல் கல்வி, ஆகியவற்றில் ஒவ்வொரு வகை தொழில் கல்விக்கும் தேர்வு செய்யப்படும் மாணவ – மாணவிகள் பட்டியலில், பட்டதாரிகள் யாருமே இல்லாத குடும்பங்களைச் சேர்ந்த பத்து முதல் நிலை மாணவ – மாணவிகளுக்கு உயர் கல்விக்குரிய செலவை 96-ஆம் ஆண்டு முதல் இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது என்பதையும் இந்தியாவிலேயே எங்குமில்லாத ஒரு புதுமையாக நீங்கள் காணமுடிகிறது.

இங்கே பேசிய நண்பர்கள் குறிப்பிட்டதைப் போல பொறியியல் கல்லூரிகளில் 97-98-ஆம் ஆண்டு முதல் கிராமப்புற மாணவ மாணவிகளுக்கு 15 சதவிகித இடங்களை ஒதுக்கீடு செய்து கிராமப்புறங்களிலும் தொழிற் கல்வி வாய்ப்பினைப் பெற்று முன்னேற்றம் காணத்தக்க வகையிலே ஓர் அமைதிப் புரட்சியை உருவாக்கியிருப்பதும் இந்த அரசுதான் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராணுவ சேவையில் ஈடுபட்டு இன்னுயிர் நீத்த வீரர்களை மதிக்கும் வகையில் அவர்களுடைய குழந்தைகளுக்கு ஆதரவுக் கரம் நீட்டி அவர்களுக்குப் பொறியியல் கல்லூரியில் இதுவரை ஒதுக்கப்பட்டு வந்த மூன்று இடங்களை இப்போது பத்து இடங்களாக உயர்த்தி இருப்பதும் இந்த அரசுதான் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விபரங்களை எல்லாம் சொல்வதற்குக் காரணம் பொறியியல் துறையிலே – வேறு பல தொழில் கல்வியினைப் பெறுகின்ற துறைகளிலே இந்த அரசு எந்த அளவிற்குச் சாதாரண சாமான்ய ஏழை – எளிய கிராமப்புற மாணவர்களும் பயன்பெறக் கூடிய வகையிலே பல புதுமைகளைச் செய்திருக்கிறது, திட்டங்களைத் தீட்டியிருக்கின்றது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

அந்த வகையிலே பொறியியல் கல்லூரியிலே பயின்று இன்று பட்டம் பெற்றுச் செல்கின்றவர்கள்– தம்பி துரைமுருகன் இங்கே குறிப்பிட்டதைப்போல தங்களுடைய வழித்தோன்றல்களையும் பயிற்சி பெறுவதற்கு இதே கல்லூரிக்கு அனுப்பவும் கூடும். அல்லது வேறு பல கல்லூரிகளுக்கு அனுப்பவும் கூடும். யாராக இருந்தாலும் இந்தப் பட்டங்களைப் பெறுகின்ற பொறியாளர்களாக இருந்தாலும் அடுத்துத் தொடர்ந்து

பெறவிருக்கின்ற பொறியாளர்களாக இருந்தாலும் அவர்களை எல்லாம் நான் கேட்டுக்கொள்வது, இந்த அருமையான, திறமையை–நீங்கள் பெற்றுள்ள ஆற்றலை உங்களுடைய நல்வாழ்வுக்காக–இல்வாழ்வுக்காக பயன் படுத்துவது என்பது தவிர்க்க முடியாதது என்றாலும்கூட சமுதாய வாழ்வுக்காக, சமுதாய ஏற்றத்துக்காக, சமுதாய முன்னேற்றத்துக்காக, நீங்கள் பயன்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பொறியியல் துறை இந்த அளவிற்கு இன்றைக்கு உயர்ந்திருக்கிறது. கணினி என்கின்ற அளவிற்கு சாப்ட் வேர் மென்பொருள் என்கின்ற அளவிற்கெல்லாம் இந்தத் துறை இன்றைக்கு உயர்ந்திருக்கிறது. இது வளராத கால கட்டத்தில் கல்லணை கரிகால் சோழனால் எழுந்தது. தஞ்சையில் பிரகதீசுவரர் ஆலயம் இராஜராஜசோழனால் தோன்றியது. அப்போதெல்லாம் இந்த விஞ்ஞானப் புதுமை இல்லை. இத்தகைய வாய்ப்பு வசதிகள் இல்லை. இவைகள் இல்லாத காலத்திலேயே அவைகளை எல்லாம் திறம்பட கட்டி ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இவைகள் எல்லாம் அழுத்தம் திருத்தமாக இன்றைக்கும் நின்று உலகத்திலுள்ள மக்களுக்கெல்லாம் சுற்றுலா இடங்களாகப் பயன்படுகின்றன. அதிசயிக்கத்தக்க வகையிலே அவைகள் இன்றைக்கு ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறதென்றால் அந்தக் காலத்திலேயே பொறியியல் துறை எந்த அளவிற்கு வளர்ச்சி பெற்றி ருந்தது என்பதை நாம் காண முடியும்.

பொறியியல் துறையிலே உள்ளவர்களை நான் ஒன்று கேட்டுக்கொள்வேன். நீங்கள் தவறாகக் கருதக் கூடாது. எந்த ஒரு கட்டிடமானாலும், அணையானாலும் அல்லது ஓர் ஆற்றுப்படுகையானாலும், ஆற்றங்கரையை உயர்த்துவதானாலும் ஒரு கண்மாயை ஆழப்படுத்துதல், அகலப்படுத்துதல் ஆனாலும் ஒரு கல்லூரியைக் கட்டு வதானாலும், ஏன் ஒரு கோபுரத்தை அமைப்பதானாலும்

எல்லாவற்றிலும் நாம் நம்முடைய திறமையைக் காட்டு வது மாத்திரமல்ல; வாய்மையையும் காட்ட வேண்டும்.

என்னதான் திறமை இருந்தாலும்கூட வாய்மை இல்லாவிட்டால் பொறியியல் துறையில் கற்ற பாடத்தை நாம் மறந்தவர்கள் ஆவோம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், ஒரு மருத்துவர் பொய் சொன்னால், தவறு இழைத்தால் ஒன்றிரண்டு உயிர்கள்தாம் போகும். ஒரு பொறியாளர் தவறிழைத்தால், பொய் சொன்னால் நூற்றுக்கணக்கான உயிர்கள் போகும்.

உதாரணம் சொல்ல வேண்டுமேயானால் மருத்துவர் இரண்டு மூன்று பேருக்கு நோய்க்கான சிகிச்சை செய்துஅதிலே தவறிழைத்தால் – அதிலே இறுதியாக முடிவுறுகிறவர்களின் எண்ணிக்கை ஒன்றாக இரண்டாக அல்லது ஐந்து ஆறாக இருக்கும். ஆனால் ஒரு பெரிய மண்டபத்தைக் கட்டி தாம் அதைக் கெட் டியாகக் கட்டியிருக்கிறோம் என்று கூறி ஒப்பந்தக் காரரோடு ஒருவர் ஒப்பந்தம் செய்துகொண்டு கலக்க வேண்டிய மண்ணையும், சிமெண்டையும் கலக்காமல், அளவுக்கு மீறி மண்ணையும் குறைவாக சிமெண்ட் டையும் கலந்து கட்டினால் அந்த மண்டபம் இடிந்து விழுகிற நேரத்தில் நூற்றுக்கணக்கான உயிர்களுக்கு அந்தப் பொறியாளர் பொறுப்பாக வேண்டியிருக்கும். எனவேதான் இந்தத் துறையிலே மிக முக்கியமாக நான் சொல்ல வேண்டியது நன்றாகக் கட்டியிருக்கிறோம் என்று பொய் சொல்லக் கூடாது.

பொய் சொல்லக்கூடாது என்பதற்கு எத்தனையோ கதைகள் உண்டு. அரிச்சந்திர புராணமே இருக்கிறது. அவ்வளவு ஏன்; திருவண்ணாமலை புராணமே இருக்கிறது. திருவண்ணாமலையில் ஒருநாள் பிரம்ம தேவனுக்கும் விஷ்ணு பெருமாளுக்கும் சண்டை வந்தது, யார் பெரியவர் என்று. விஷ்ணு சொன்னார், ‘‘நான்தான் பெரியவர்’’ என்று. பிரம்மா சொன்னார், ‘‘நான்தான்

பெரியவர்'' என்று. இவர்கள் சண்டை போடுவதைப் பார்த்த பரமசிவன் அவர்களிடத்தில் வந்து, ''என்ன சண்டை போடுகிறீர்கள்?'' என்று கேட்டார். ''யார் பெரியவர் என்பதிலே சண்டை'' என்றார்கள். ''இதற்கு ஏன் சண்டை போடுகிறீர்கள். நான் உபாயம் சொல் கிறேன் அதை நீங்கள் செய்வீர்களா?'' என்று கேட்டார். அதற்கு இவர்கள் ''என்ன?'' என்று கேட்டார்கள். ''என்னுடைய தலை முடியையும் காலடியையும் யார் முதலில் பார்த்துவிட்டு வந்து முதலிலே என்னிடத்திலே சொல்கிறார்களோ அவர்கள்தான் பெரியவர், உயர்ந்தவர்'' என்று பரமசிவன் சொன்னார். உடனடியாக மகாவிஷ்ணு பன்றி அவதாரம் எடுத்து சிவனுடைய காலடியை பார்ப்பதற்காகப் பூமியைக் குடைந்து கொண்டு சென்றார். காரணம் பரமசிவன் வானத்திற்கும் பூமிக்குமாக விஸ்வரூபம் எடுத்து நின்றார்.

பிரம்மதேவன் சிவனுடைய தலைமுடியைப் பார்ப்பதற்காக அன்னபட்சி உருவமெடுத்து மேலே பறந்தார். ஒருவர் மேலே பறக்கிறார், தலையைக் காண. இன்னொருவர் கீழே குடைகிறார் பன்றி உருவத்தில் காலடியைக் காண.

இப்படி இருவரும் முயற்சித்துக் கொண்டிருக்கிற நேரத்தில் பரமசிவன் தலையில் இருந்து ஒரு தாழம்பூ மேலே இருந்து கீழே விழுகிறது. அதை அன்னபட்சி உருவத்தில் இருந்த பிரம்மா பார்த்துவிட்டு, ''எங்கிருந்து வருகிறாய்?''என்று கேட்டார். அதற்கு ''பரமசிவன் தலையிலிருந்து வருகிறேன்'' என்று சொன்னது தாழம்பூ. இதுதான் சரி என்று அந்தத் தாழம்பூவை அன்னபட்சி வடிவத்தில் உள்ள பிரம்ம தேவன், ''நீ தலையிலேதானே இருந்தாய்?'' என்று கேட்க; அதற்கு ''ஆமாம்'' என்று தாழம்பூ சொன்னது. ''அப்படியானால் சிவனிடத்திலே ஒரு பொய் சொல்லிவிடு. நான் உன்னை தலையிலே பார்த்ததாகச் சொல்லிவிடு'' என்று பிரம்மா சொன்னார்.

''சரி'' என்று சொல்லிவிட்டு தாழம்பூ சிவனிடத்திலே வந்து ''நான்தான் தங்கள் தலையில் இருந்தேன் பிரபு. அப்போது பிரம்மா வந்தார். என்னைப் பார்த்தார்'' என்று தாழம்பூ சாட்சியம் சொன்னது.

ஆனால் சிவன் அந்த உண்மையைக் கண்டுபிடித்து விட்டார். உண்மையைக் கண்டுபிடித்து விட்ட காரணத்தால் பொய் சொன்ன பிரம்மாவுக்கு பரமசிவன் விட்ட சாபத்தால் இன்னும் அவருக்கு எங்கும் கோயிலே கிடையாது. இப்போது கூட பாருங்கள், எல்லா சாமிக்கும் கோயில் இருக்கும். பிரம்மாவுக்குக் கோயில் இருக்காது.

அதைப்போல தாழம்பூவுக்கு ஒரு பூஜைக்கு உரிய பூவாக இனிமேல் இருக்கக்கூடாது என்று சாபம் விட்டார். எல்லாப் பூவும் பூஜைக்கு உரிய பூவாக இருந்தாலும் தாழம்பூவுக்கு அவ்வளவு மணம் இருந்தாலும் கூட அது பூஜைக்கு உரிய பூவாக இல்லை. பொய் சொன்ன காரணத்தினால் பிரம்மாவுக்கும் இப்படிப்பட்ட சாபம் அன்றைக்கே கிடைத்தது. இப்படியொரு கதை!

எனவே பொய் சொன்னால் என்ன தண்டனை என்பதை உணர்த்துகின்ற இந்தப் பூமி திருவண்ணாமலை பூமி. அந்தப் பூமியிலிருந்து பொறியாளர்களாகச் செல்கின்ற நீங்கள் பொய் என்பதை கணமும் நினைக்காமல், சிந்திக்காமல் பொய்யின் காரணமாக என்னென்ன ஆபத்துக்கள் நிகழும் என்பதை எல்லாம் எண்ணிப் பார்த்து உங்கள் கடமையை ஆற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால் பொறுப்பான ஒரு பணி உங்களிடத்திலே இன்றைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. நான் வழங்கியது பட்டம் மாத்திரமல்ல; பரிசு மாத்திரமல்ல; நான் வழங்கியது இந்த நாட்டு மக்களின்

தலை எழுத்தை உங்களின் கைகளிலே ஒப்படைத் திருக்கிறேன் என்ற அளவிலேதான் இது வழங்கப்பட்டி ருக்கிறது என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்த்து அந்த வகையில் செயலாற்ற வேண்டும்.

அப்படிச் செயலாற்றுகின்ற காரணத்தால் அருணை பொறியியல் கல்லூரிக்கு மேலும் மேலும் பெருமை சேர்க்க வேண்டும். ''எந்தக் கல்லூரியில் படித்தாய்?'' என்றால் தம்பி வேலு உருவாக்கி நடத்து கின்ற அருணை பொறியியல் கல்லூரியிலே படித்தேன் என்று சொல்வீர்களேயானால் அது உங்களுக்கும் புகழ், வேலுவுக்கும் புகழ். அதன் காரணமாக எனக்கும் புகழ் என்று கூறி உங்களையெல்லாம் வாழ்த்துகிறேன்.

14-7-98 அன்று திருவண்ணாமலை அருணை பொறியியல் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய உரை

20

பேராயர் எஸ்றா சற்குணம் மணிவிழா உரை

இந்த மேடையில் எஸ்றா சற்குணம் அவர்களையும், திருமதி சற்குணம் அம்மையார் அவர்களையும் காணுகின்ற நேரத்தில் இது எஸ்றா சற்குணத்தின் மணி விழாவா? மணவிழாவா? என்று ஐயுறும் அளவிற்கு நாமெல்லாம் அகமகிழ்ந்து அவர்களை இனிய உள்ளத்தோடு இதயம் திறந்து புகழ்ந்து பாராட்டி வாழ்த்திக் கொண்டிருக்கின்றோம்.

இங்கே மிகப் புதுமையாக இதுவரையில் இல்லாத வித்தியாசமான முறையில் எங்களுக்கெல்லாம் வரவேற்பு வழங்கப்பட்டது. இசை வாயிலாகவும், நடனம் வாயிலாகவும் நாங்கள் இங்கே வரவேற்கப்பட்டோம். மாணவிகள் எல்லாம் வித விதமான வண்ண ஆடைகளைப் புனைந்து மலர் மாலைகளை மேடைக்கு எடுத்து வந்து நடனமாடிக் கொண்டே, அவைகளை எங்களுக்கெல்லாம் அணிவித்த அந்தக் காட்சியைப் பார்த்து நாங்கள் மகிழாத அளவுக்கு அதிகமாக ஆற்காடு இளவரசர் அவர்கள் மகிழ்ந்து அதை இங்கே பாராட்டினார்கள். ஆற்காடு நவாப் அல்லவா! (சிரிப்பு) அந்தப் பழைய காலத்து தர்பார் காட்சி – கொலு மண்டபத்திலே நடனமாடும் நிகழ்ச்சிகளையெல்லாம் நினைவிற் கொண்டு திரைப்படத்துறையிலே ''பிளாஷ்பேக்'' என்பார்களே அந்த நினைவோடு அதைப் பாராட்டி மகிழ்ந்திருக்கிறார்.

இதுபோன்ற புதுமைகளையெல்லாம் செய்யக்கூடிய அந்தத் திறமையும், அந்த நினைப்பும் பேராயர் சற்குணம் அவர்களுக்குத் தான் வரும். அதைத்தான் நாம் இங்கே கண்டோம்.

அவரை எஸ்றா சற்குணம் என்று அழைக்கும் போது பல பேருக்கு அவரைத் தெரியும் – அவருடைய தொண்டு தெரியும் – அவருடைய உழைப்பு தெரியும் – பேராயருடைய பேருள்ளம் புரியும். ஆனால் ''எஸ்றா சற்குணம்'' என்று ஏன் அழைக்கிறோம்? ''எஸ்றா'' என்றால் என்ன? என்பதையே பல பேர் அறியாமல் இருக்கக்கூடும். எபிரேய மொழியில் எஸ்றா என்றால் உதவி செய்பவர் என்று பொருள். அதைக்கூட இப்போது நான் மேடையில் அவரைக் கேட்டுத்தான் தெரிந்து கொண்டேன். ஆனால் ஒரு அசைச் சொல்லாக – அடைமொழியாக – ஏதோ இடுகுறிப் பெயராக அதை கருதிக் கொண்டு, எஸ்றா, எஸ்றா என்று நாம் அவரை அழைத்து வந்தாலும் அதில் பொதிந்து கிடக்கும் பொருள் – அவருடைய வாழ்க்கையை அவருடைய உள்ளத்தைப் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கிறது.

உதவி செய்பவர் என்று தமிழ்ச் சொல்லில் நீளமாகச் சொல்வதற்குப் பதிலாக எபிரேய மொழியில் எஸ்றா என்று அவர் அழைக்கப்படுகிறார். தமிழிலே அதற்குச் சரியாக ஒரு சொல்லை சொல்ல வேண்டுமேயானால், ''தொண்டர்'' என்று கூற வேண்டும். அவர் வள்ளல் தன்மை வாய்ந்த தொண்டராக இருக்கின்ற காரணத்தால் வள்ளல் என்று சொன்னாலும் பொருந்தும்.

அப்படிப்பட்ட நல்ல உள்ளம் படைத்த – ஈகை குணம் படைத்த – ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று பேரறிஞர் அண்ணா சொன்னார்களே, அந்த உண்மையான தத்துவத்தை இதயத்திலே பதிய வைத்துக் கொண்டிருக்கின்ற பெருமைக்குரியவர்தான் நம்முடைய பேராயர் எஸ்றா சற்குணம் அவர்கள்.

முன்னால் பேசியவர்கள் எல்லாம் இங்கே எடுத்துக் காட்டியதைப்போல – தமிழ்நாட்டிற்குக் கிறித்தவ சமுதாயப் பெரியவர்களோடு மிகுந்த தொடர்பு உண்டு. நம்முடைய அடிகளார் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டினார், ஆற்காடு இளவரசரும் சுட்டிக் காட்டினார். எத்தனை கிறித்தவ அறிஞர்கள் தமிழுக்காகப் பாடுபட்டார்கள்? தமிழை வளர்த்தார்கள்; தமிழை உலகத்திலே அறிமுகப்படுத்துகின்ற அளவிற்குப் பணியாற்றினார்கள் என்பதையெல்லாம் எடுத்துக்காட்டினார்கள் அல்லவா? இந்தியாவிலே கிறித்தவ மதம் பரவத் தொடங்கினாலுங் கூட மொழியைக் காப்பதற்காகப் பாடுபட்ட நிலை தமிழகத்திலேதான் உண்டு என்று சொன்னால் அதை யாரும் மறுக்க முடியாது.

அச்சு எழுத்துக்களைக் கூட கிறித்தவ சமுதாயத்தைச் சேர்ந்த பெரியவர்கள் கண்டுபிடித்தார்கள் என்றும், அவர்கள் தரங்கம்பாடியில் ஒரு காலத்திலே வாழ்ந்தார்கள் என்பதும் வரலாறு. இந்த அருமையான நிகழ்ச்சிகளையெல்லாம் கிறித்தவப் பெரியார்கள், பாதிரியார்கள் எப்படித் தமிழுக்குத் தொண்டாற்றினார்கள் என்பதையெல்லாம் எங்கள் கழகப் பொதுச் செயலாளரும், பேராசிரியருமான அன்பழகனார் அவர்கள் ஒரு பெரிய புத்தகத்தின் வாயிலாக எழுதிக் காட்டியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு ஒரு பெரும் புத்தகம் வெளியிடக் கூடிய அளவிற்குக் கிறித்தவ சமுதாயத்தைச் சேர்ந்த அறிஞர்கள் – பெரியவர்கள் – அந்தச் சமுதாயத்தின் பேராயர்கள் தமிழோடு தங்களுடைய தொடர்பை வளர்த்துக் கொண்டு – தாங்களும் வளர்ந்து தமிழையும் வளர்த்திருக்கிறார்கள்.

அவர்களுக்கு நன்றிக்கடன்பட்டது இந்த நாடு என்பதற்கு அடையாளமாகத்தான் உலகத் தமிழ் மாநாடு

நடைபெற்றபோது சென்னைக் கடற்கரையில் ஜி.யு.போப் அவர்களுடைய சிலையையும், கால்டுவெல் அவர்களுடைய சிலையையும், வீரமாமுனிவருடைய சிலையையும் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலே நாம் திறந்து வைத்தோம். அந்த அளவிற்கு தமிழகத்திலே உலகத் தமிழ் மாநாட்டிலே பலருக்குச் சிலை வைப்பதென்றால், அதிலே கிறித்தவப் பெரியவர்களை விட்டு விட்டு சிலைகளை அமைத்தால், அது நிறைவாக இருக்காது என்ற எண்ணத்தோடுதான் அந்த மூன்று பேருடைய சிலைகள் சென்னைக் கடற்கரையிலே வைக்கப்பட்டன.

அதைப்போல தமிழுக்காக – தமிழ்தான் இந்தியாவினுடைய பொதுமொழியாக இருக்க வேண்டும் என்று சொன்ன கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களுக்கும் நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டு மென்று எண்ணி – அவர்களுடைய மார்க்கம், அவர்கள் மதக் கொள்கைப்படி – அவருக்குச் சிலை வைக்க இயலாத காரணத்தால்தான், காயிதேமில்லத் பெயரால் பல கல்லூரிகள், பல பள்ளிகள் அவருடைய நினைவாக தமிழகத்திலே எழுப்பப்பட்டது. இதைச் சொல்வதற்குக் காரணம் தமிழ்நாட்டிலே தமிழை வளர்ப்பதற்கு சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மெத்தவும் பணியாற்றியிருக்கிறார்கள், பாடுபட்டிருக்கிறார்கள் – அவர்களைத் தமிழ்ச் சமுதாயம் மறந்ததில்லை. அவர்களைப் பெருமைப்படுத்தியிருக்கிறது என்பதை வரலாற்றுப் பூர்வமாக நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் குறிப்பிடு கிறேன்.

இந்த நல்ல நிகழ்ச்சியில் எஸ்றா அவர்களுடைய ஒரு அருமையான நினைவில் தோன்றிய காரியம் ஒன்று

இங்கே செயல்வடிவம் பெற்றிருக்கின்றது. அதுதான் இந்திய சமூக நீதி இயக்கத்தை இன்றைக்கு இங்கே நாம் தொடங்கி வைத்திருக்கிறோம். அந்தப் பலகையை நான் திறந்து வைத்தேன் என்பது சம்பிரதாயம்தான். இங்கே வீற்றிருக்கின்ற நம்முடைய மக்கள் தலைவர் மூப்பனார் உட்பட எல்லாத் தலைவர்களுக்கும் உடன்பாடான – எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் உடன்பாடான ஒன்றுதான் இங்கே இந்த நிகழ்ச்சியோடு இணைக்கப்பட்டிருக்கின்றது. இந்திய சமூக நீதி இயக்கம் என்கின்ற அந்தத் தலைப்போடு பேசிவிட்டுச் சென்ற தம்பி பாலசுந்தரம் சொன்னார், கலைஞர் அவர்களே, உங்கள் காலத்தில் முழுமையான சமூகநீதி – ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் தமிழகத்திலே உருவாகாவிட்டால், பிறகு எந்தக் காலத்திலும் அது நடக்காது என்று சொன்னார். அவர் அப்படிச் சொன்னதற்குக் காரணம், என்னால் தான் செய்ய முடியுமென்பதல்ல. என் காலத்திற்குள்ளாக வாவது செய்து முடிக்க வேண்டும் என்கின்ற ஆர்வத்தால் அதைச் சொல்லியிருக்கிறார். ஆனால் நான் குறிப்பிட விரும்புகிறேன். இது ஏதோ குறிப்பிட்ட ஓராண்டு காலம் இரண்டாண்டு காலத்திற்குள் செய்து முடித்துவிடுகின்ற ஒரு காரியம் அல்ல. ஏனென்றால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இந்தச் சமுதாயத்தைத் தாக்கியக் கொடுமைகளை – இந்தச் சமுதாயத்தையே அன்றைக்கு அழுத்துகின்ற அளவிற்கு – அடித்தளத்திலே தள்ளுகின்ற அளவிற்குக் கலந்துவிட்ட குப்பைகளையெல்லாம் அகற்றுவதென்றால் அது ஓரிரண்டு ஆண்டுக் காலத்தில் முடியக்கூடியதல்ல. ஐந்தாண்டுக்கால குப்பைகளையே இரண்டாண்டு காலத்திலே முழுமையாக அகற்ற முடியவில்லையென்றால் (பலத்த கைதட்டல்) ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழகத்தை அழித்து, கெடுத்து விட்ட சாதி, மத பேத குப்பைகளை, சம்பிரதாயங்களை,

சாத்திரங்களை, சாத்திரக் கொடுமைகளை, சமூக அநீதிகளை ஒரே ஆண்டில் அல்லது இரண்டே ஆண்டில் தொலைத்துவிட முடியும் என்பது முடியாத காரியம்.

இந்தியா முழுமையும் அத்தகைய காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதற்காகக் கௌதம புத்தர் பாடுபட்டார்; மகாவீரர் பாடுபட்டார்; எத்தனையோ சமணத் துறவிகள் பாடுபட்டார்கள். சைவப் பெரியவர்கள் பாடுபட்டார்கள்; ஆழ்வார்கள் பாடுபட்டார்கள்; புரட்சிக்காரர்களாகத் தோன்றிய பெரும் தலைவர்கள் எல்லாம் பாடுபட்டார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர் போன்றவர்கள் எல்லாம் பாடுபட்டார்கள். பாடுபட்டும்கூட முடியாத ஒரு காரியத்தை நான் ஓரிரண்டு ஆண்டுகாலத்தில் செய்து முடித்துவிட முடியுமென்று எண்ணுவது சரியல்ல! ஆனால், எப்படி முடியுமென்று, கை பிசைந்து – கைகட்டி நாம் சும்மாயிருந்து விடக்கூடாது. நாம் தொடர்ந்து நம்முடைய பணியை ஆற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்று சூளுரைத்து சமூக நீதியை நிலைநாட்ட நாமெல்லாம் புறப்பட்டாக வேண்டும்.

சமூக நீதியை எத்தனையோ வழிகளில் நாம் இன்றைக்கு நிலைநாட்ட முடியும். மண்டல் கமிஷன் அறிக்கையின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு பல ஆண்டுகாலம் நாம் காத்திருக்க வேண்டியிருந்தது. அதை அறிவித்த வி.பி.சிங் அவர்களின் ஆட்சியே கவிழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதற்குப் பிறகு வி.பி.சிங் அன்றைக்கு விதைத்த விதை பிறகு காங்கிரஸ் ஆட்சியிலே, பிரதமர் நரசிம்மராவ் அவர்களால் ஓரளவு பின்பற்றப்பட்டு–இன்றைக்கு மண்டல் கமிஷன் பயனை இந்தியா முழுமையும் உள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்

பட்ட மக்கள் பெறுகின்ற அளவிற்கு இருக்கிறது. ஆனால் முழுமையாக இல்லை. முழுமையாக ஆக வேண்டும் என்பதற்காகத்தான் நம்முடைய தீரன் சொன்னதைப்போல, நாம் பணியாற்றிக் கொண்டிருக் கின்றோம்.

எனவே, சமூக நீதியைப் பெறுவதற்கு பல ஆண்டு காலம் போராட வேண்டிய காலக் கட்டத்தில் நம்மால் முடிந்ததைச் செய்து கொண்டிருக்கின்றோம். அதற்கு எத்தனையோ இடையூறுகள். நாம் பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், சிறுபான்மைச் சமுதாயத்து மக்கள் என்று இவர்களுக்காகப் பாடுபடுகிறோம் என்றால் – அவர்களுக்காக சமூக நீதி கோருகிறோம் என்றால், ஏற்கனவே முன்னேறிய சமுதாய மக்களுக்குச் சமூக அநீதி வேண்டுமென்று நாம் கருதவில்லை. அப்படி யாரும் பொருள் கொள்ளக் கூடாது.

ஏற்கனவே முன்னேறியவர்களைக் காலைப் பிடித்து இழுத்து கீழே தள்ளாமல் – முன்னேறியவர்களோடு போட்டி போடுகின்ற அளவிற்குப் பின் தங்கியிருக்கின்ற மக்களை வலுப்படுத்த வேண்டும் என்பதுதான் சமூக நீதிக் கொள்கையின் தாத்பரியம். அதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அப்படி இல்லாமல், ஏதோ பிற்படுத்தப்பட்டவர்களும், மிகவும் பிற்படுத்தப்பட் டவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும், சிறுபான்மை சமுதாயத்தினரும் முன்னேறி ஏற்கனவே முன்னேறிய மக்களையெல்லாம் அழித்து விட வேண்டும், அந்தச் சமுதாயத்தையே வீழ்த்திவிட வேண்டும் என்ற எண்ணத்தோடு சமூக நீதியைப் பற்றி நான் பேசவில்லை. வளர்ந்தவர்கள் மேலும் வளருவதற்கு நாம் தடையாக இல்லை. அதே

நேரத்திலே அவர்களைப் போல மற்றவர்களும் வளர வேண்டும் என்று கூறுவது யாருக்கும் விரோதமாக – யாருக்கும் பகையாகக் கூறுகின்ற கருத்து அல்ல. யாருக்கும் முரண்பாடான கருத்தும் அல்ல.

அந்த எண்ணத்தோடுதான் நான் ஒன்றை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். 1989–ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது பொருளாதாரத் துறையிலும் சட்டப் படிப்புக்குச் செல்ல முடியாமல், தொழிற்கல்விக்குச் செல்ல முடியாமல், மருத்துவக் கல்விக்குச் செல்ல முடியாமல் இருந்த கிராமப் புறத்து மக்கள் – ஒரு பட்டதாரி கூட தங்கள் குடும்பத்திலே இல்லை என்ற நிலையிலே உள்ள மக்களின் நிலையை உணர்ந்து – ஒரு பட்டதாரி கூட இதுவரை இல்லை என்ற நிலையிலே உள்ள குடும்பத்தை சேர்ந்த ஒரு மாணவர் மருத்துவக் கல்லூரியிலோ, பொறியியல் கல்லூரியிலோ சேர வேண்டுமென்றால் – உங்களுடைய சமூக நீதி இடைஞ்சலாக இருக்கிறதே என்று முன்னேறிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் முணுமுணுத்த போதுதான் ஒரு திட்டத்தை அறிவித்து அதனை நடைமுறைப் படுத்தினேன். அது ஓராண்டுக் காலம் நடைமுறையிலே கூட இருந்தது.

அது என்ன திட்டம் என்றால் – ஒரு குடும்பத்திலே அவர்கள் எந்தச் சாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்களாக இருந்தாலும், தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தாலும், மிகவும் பிற்படுத்தப் பட்டவர்களாக இருந்தாலும் – முன்னேறிய சாதியைச் சேர்ந்தவராக இருந்தாலும் – அய்யராக இருந்தாலும், அய்யங்காராக இருந்தாலும், செட்டியாராக இருந்தாலும், முதலியாராக இருந்தாலும், வன்னியராக இருந்தாலும்,

முக்குலத்தோராக இருந்தாலும், யாதவராக இருந்தாலும், யாராக இருந்தாலும் – ஒரு குடும்பத்திலே பட்டதாரிகள் அல்லது பட்டயதாரிகள் இல்லாமல் இருந்து முதல் பட்ட தாரியாக ஒருவன் வருகிறான் என்றால், அவன் மருத்துவக் கல்லூரியிலோ, பொறியியல் கல்லூரியிலோ சேருவதற்கு ஐந்து மதிப்பெண்கள் குறைவாகப் பெற்றிருந்தாலும் அவனைச் சேர்க்க வேண்டும் (கை தட்டல்) அவன் தேர்வு செய்யப்பட வேண்டுமென்று ஒரு திட்டத்தை அறிவித்து, அது செயல்முறைக்கு வந்து அதன் காரணமாக அந்த ஆண்டு ஏறத்தாழ 300 முதல் 400 பேர் வரை அதிலே இடம் பெற்றார்கள். அப்படி இடம் பெற்றவர்களில் பிற்படுத்தப்பட்டோரும் உண்டு; தாழ்த்தப்பட்டோரும் உண்டு; மிகவும் பிற்படுத்தப்பட் டோரும் உண்டு; நான் சொன்ன முன்னேறிய வகுப்பைச் சேர்ந்தவர்களும் உண்டு. அப்படி இடம் பெற்றவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். நன்றி தெரிவித்தார்கள். ஆனால் சிலபேர் அதை எதிர்த்து நீதிமன்றம் சென்றார்கள். அந்த வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது 1991–ஆம் ஆண்டு ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. நடைபெற்ற வழக்கு நீதிமன்றத்திலே அரசாங்கத்தின் அந்தத் திட்டத்திற்கு எதிராக தீர்ப்பு கூறப்பட்டு அது கைவிடப்பட்டது. பிறகு ஐந்தாண்டு காலம் யாரும் அதைப் பற்றி எண்ணிப் பார்க்கவில்லை.

அதற்குப் பிறகு இங்கே தீரன் குறிப்பிட்டதைப் போல கிராமப்புறத்திலே உள்ள மாணவர்கள் தொழிற் கல்வி மருத்துவமானாலும், பொறியியல் ஆனாலும், வேளாண்மைக் கல்வியானாலும் – அதிலே சேருவதற்குக் கிராமப்புறத்திலே உள்ள மாணவர்களுக்குப் பதினைந்து

சதவிகிதம் இடம் ஒதுக்கப்பட்டு – சென்ற ஆண்டு பொறியியல் கல்லூரியிலும், இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரியிலும், அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கும் ஒரு ஆபத்து வந்தது. நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். வழக்காடினார்கள். என்ன தீர்ப்பு வருமோ என்று அஞ்சிக் கொண்டிருந்தோம். நல்ல வேளையாக உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட தீர்ப்பு – கிராமப் புறத்திலே உள்ள மாணவர்களுக்கு 15 சதவிகிதம் என்று அரசு ஒதுக்கீடு செய்திருப்பது செல்லும் (பலத்த கைதட்டல்) என்று கூறப்பட்டுள்ளது.

எனவே சமூக நீதிக்குத் தடையாக நீதிமன்றத்திற்கே சிலபேர் சென்றிருக்கிறார்கள் என்றால் இந்த சமூக நீதியை நாம் எளிதாகப் பெற்று விட முடியுமா? என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்னொன்று: நான் சொன்னது கல்வித் துறை; பொருளாதாரத் துறை. இதைத் தவிர சமுதாயத் துறையிலே இன்றைக்குச் சாதி வேறுபாடுகள், மத வேறுபாடுகள், மதக் கலவரங்கள், சாதிக் கலவரங்கள் – இவைகள் எல்லாம் ஒய வேண்டுமேயானால், சமூக நீதி முகிழ்த்திட வேண்டும். சமூக நீதி பரவிட வேண்டும். இல்லையேல் யார் தேர் இழுப்பது என்பதிலேயிருந்து போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கும். அவைகளை அடக்குவதற்கு அரசு சட்டத்தைப் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை வந்துதான் தீரும். இவைகளையெல்லாம் சட்டத்தால் மாத்திரம் அடக்கி விட முடியாது. மனம் பக்குவப்படுத்தப்பட வேண்டும். சாதிச் சண்டை, மதச் சண்டை, இவைகள் எல்லாம் ஒய வேண்டுமேயானால், மனம் பக்குவப்பட வேண்டும்.

மனத்தளவிலேதான் இவைகளிலே தூய்மையான வெற்றியை நாம் காண முடியும். அதற்காகத்தான் இந்த அரசு சமத்துவபுரங்களை மாவட்டந்தோறும் இன்றைக்கு உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

சமத்துவபுரத்திலே நூறு வீடுகள் கட்டப்படுகின்றன என்றால் அவைகளில் பெரும்பாலான வீடுகள் தாழ்த்தப் பட்டோருக்கும், விகிதாசார முறையிலே மற்ற எல்லா மக்களுக்கும் – முன்னேறிய சாதியைச் சேர்ந்தவர்கள் உட்பட – அதிலே இடம் உண்டு. சமத்துவபுரத்திற்காக வீடுகள் கட்டத் தொடங்கிய போது ஒரு சந்தேகம். யாரும் அங்கே குடியேற வருவார்களா? என்ற சந்தேகம் எங்களுக்கு ஏற்பட்டது. ஆனால் இன்றைக்கு போட்டி போட்டுக் கொண்டு வருகிறார்கள். வேலூரில் பொய்கை என்ற கிராமத்தில் சமத்துவபுரத்தில் அடிக்கல் நாட்டு விழாவிற்கு சென்றிருந்தேன். இன்னும் ஒரு மாதத்தில் அதன் திறப்புவிழா நடைபெறவிருக்கிறது. அப்போதே அந்த வீடுகளிலே குடியேற பலபேர் விண்ணப்பித்துப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் யார் யார் என்றால், அவர்களிலே தாழ்த்தப் பட்ட மக்கள் இருக்கிறார்கள்; பிற்படுத்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள்; அதிசயமாக நான் சொல்கிறேன்; முன்னேறிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் – குறிப்பாக பிராமண சமுதாயத்தைச் சேர்ந்த சில குடும்பங்களும் அவர்களோடு சேர்ந்து சமத்துவபுரத்திலே வாழ சம்மதித்து வந்திருக்கிறார்கள் என்றால், இன்றைக்குப் படிப்படியாக நம்முடைய எண்ணங்கள் வெற்றி பெற்று வருகின்றன. ஆனால் முழுமையாக அல்ல. அது முழுமையாக வெற்றி பெற முடியாமல் சில விஷமிகள் சில சமூக விரோதிகள் ஏதாவது தகராறு வந்தால் தான் தாங்கள் வாழ முடியும் – தாங்கள் அதற்குத் தலைமையேற்று நடத்த முடியும் என்று எண்ணுகின்ற சில நச்சு எண்ணம்

படைத்தவர்கள் அதற்கு இடம் தர முன்வருவதில்லை. அவைகளையெல்லாம் வேரறுத்து சமூக நல்லிணக்கம், மத நல்லிணக்கம் காண்பதற்குப் பாடுபடுவதற்காக உள்ள பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்த நாமனைவரும் இந்த ஒரு பிரச்சினையிலே ஒரே இயக்கமாகத் தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

அதனால்தான் நம்முடைய ஆர்.எம்.வீ. அவர்கள் மனம் திறந்து சொன்னதைப் போல, இன்றைக்கு நம்முடைய பேராயர் அவர்கள் இந்திய சமூக நீதி இயக்கத்தை நம்மனைவருடைய ஒத்துழைப்போடு அனைவருடைய உடன்பாட்டுணர்வோடு இங்கே தொடங்கி வைத்திருக்கிறார்கள். இந்தச் சமூக நீதி வெற்றி பெற வேண்டுமேயானால், இன்னும் பல பேராயர்கள் நமக்குத் தேவை. பேராயர் என்றால் அந்த மதத்திலிருந்து தான் தேவை என்று சொல்ல மாட்டேன். பேராயர் போன்ற பெரும் குணம் படைத்தவர்கள் சமுதாயத்திலே இன்னும் பல்லாயிரம் பேர் தேவை, தேவை என்று கூறி அந்தத் தேவையை நிறைவு செய்யக் கூடிய வகையிலே ஆரம்பக் கட்டமாக, ஆரம்பக் கர்த்தாவாக நம் முன்னால் –நம்முடைய இனிய வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டிருக்கின்ற பேராயர் எஸ்றா சற்குணம் அவர்களுக்கும், அவருடைய துணைவியாருக்கும் உங்கள் அனைவரின் சார்பாக தமிழகத்தின் சார்பாக இனிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

18-7-98 அன்று பேராயர் எஸ்றா சற்குணம் மணிவிழாவில் ஆற்றிய உரை

21

கவிக்கோ அப்துல் ரகுமான் மணிவிழா உரை

இன்று காலை முதல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த இனிய மணிவிழா நிகழ்ச்சியில் நானும் கலந்து கொண்டு கவிஞர் அப்துல் ரகுமானை வாழ்த்துவதிலும், பாராட்டுவதிலும் மிகுந்த பெருமையும் பேருவகையும் கொள்கிறேன். மூன்று நூல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. கவிஞரைப் பற்றிய சிறப்பு மலர் ஒன்றும் மணி விழாவையொட்டி வெளியிடப்பட்டிருக்கின்றது. கவிஞர் பெயரால் ஒரு அறக்கட்டளையும் தொடங்கப்பட்டிருக்கிறது.

இன்று தமிழ் நிலத்தில் தமிழை மேலும் வளர்ப்பதற்காக இன்றுள்ள அரசின் சார்பாக – கடந்த காலங்களில் இருந்த அரசுகள் தொடங்கி, இடையிலே வந்த ஆட்சிகளால் தொடராமல் விட்டுப் போன அந்தப் பணியினை இந்த அரசு விரிவாகவும், வேகமாகவும் ஆர்வத்தோடும், அக்கறையோடும், நடத்திக் கொண்டிருக்கின்றது என்பதை எண்ணிப் பார்க்கின்ற இந்தக் காலக் கட்டத்தில் கவிஞர் அப்துல் ரகுமானுடைய மணிவிழா நடைபெறுகிறது. இந்த விழா நிகழ்ச்சிக்குத் தருகின்ற உற்சாகமும், ஊக்கமும், தமிழை மேலும் வளர்ப்பதற்கு – தமிழுக்கு உரிய இடம் தருவதற்குப் பணியாற்றி வருகின்ற இந்த அரசுக்கு நிச்சயமாகக்

கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இந்த விழாவில் நான் கலந்துகொண்டிருக்கின்றேன்.

தமிழ் வளர்ச்சியில் – நமக்குள்ள இந்த நிலத்தைப் பொறுத்தவரையில் உள்ள ஆதங்கம் எல்லாம் நம்முடைய தமிழ்ப் பெருமக்கள் விளம்பரப் பலகைகளில் கூட தமிழில் எழுதத் தயங்குகிறார்களே என்பதுதான். இவ்வளவு பெரிய விழாவில் இது சாதாரண செய்தியாக இருக்கலாம். ஆனால் இதுதான் பெரிய செய்தி. தமிழன் தன்னுடைய வணிக நிலையத்தின் பெயரைக் கூட தமிழில் எழுதத் தயங்குகிறான் என்பதுதான் முக்கியமான செய்தி. சிலருக்குச் சந்தேகம். ஒரு வணிக நிலையத்தின் பெயரை திடீரென்று மாற்றினால், ஏற்கனவே அது பெற்றுள்ள விளம்பரங்கள் எல்லாம் குறைந்துவிடாதா? அதற்கு முன்பு அந்த நிலையத்துடன் தொடர்பு கொண்டிருந்தவர்கள், பெயர் மாறிய காரணத்தால் தொடர்பு கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடாதா என்று சிலருக்குச் சந்தேகம்.

உதாரணமாக வடமொழியிலேயுள்ள ஒரு பெயரின் பெயரால் ஒரு வாணிப நிலையம் இருந்து – அந்த வடமொழிப் பெயரை மாற்றிவிட்டு, வாணிப நிலையத்தைத் தமிழாக ஆக்கினால் எப்படி மற்றவர்கள் தொடர்பு கொள்ள முடியும்? எப்படி அந்த நிலையத்தை நினைவிலே வைத்துக் கொள்ள முடியும் என்ற இயல்பான சந்தேகம் எழுவது இயற்கைதான். அதற்குத்தான் நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். ''ஜெயலட்சுமி சில்க் ஹவுஸ்'' என்று ஒரு வாணிப நிலையத்தின் பெயர் இருந்தால், அதில் ஜெயலட்சுமி என்கின்ற பெயரை மாற்றத் தேவையில்லை. ஜெயலட்சுமி துணிக்கடை என்றோ, ஜெயலட்சுமி பட்டுமாளிகை என்றோ மாற்றி – அந்தப் பெயர் வைக்கப்படலாம் என்று நான் கூறியிருக்கிறேன்.

நாம் இங்கே கூடியிருக்கின்ற இடம் இராஜாஜி மண்டபம். ஆனால் விழாக் குழுவிலே தமிழாய்ந்த தமிழ்

மக்கள் எல்லாம் இருந்தபோதிலும், இராஜாஜி மண்டபத்திலே இந்த விழா நடைபெறுவதாக அழைப்பிதழிலே அச்சடிக்கலாம், இராஜாஜி ஹாலில் இந்த விழா நடைபெறும் என்று அச்சடித்திருக்கிறார்கள். குற்றம் சொல்வதற்காக இதை நான் கூறவில்லை. அடுத்து, மற்றவர்கள் திருத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். இராஜாஜி மண்டபம் என்று சொன்னாலே எல்லோருக்கும் புரியும். அப்படித்தான் பல ஆண்டு காலமாக நாம் நடத்துகின்ற விழாக்களிலே அந்தப் பெயரைப் பொறித்து வருகிறோம். இராஜாஜி பெயர் மாற வேண்டாம். 'ஹால்' மண்டபமாக ஆனால் போதும் என்பதுதான் இன்றைக்குத் தமிழ் வளர்ச்சியின் அடிப்படை நோக்கமாக இருந்து வருகின்றது.

ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி சொல்ல விரும்புகிறேன். முரசொலி பத்திரிகையில் இராஜாஜி அவர்கள் உயிரோடு இருந்த காலத்தில் – அவருடைய பெயரைப் போடும்போது ''ராசாசி'' என்று போடுவார்கள். ஒருநாள் இராஜாஜி அவர்கள் அவருடைய கைப்பட எனக்கு எழுதிய கடிதத்தில் – ''அன்புள்ள கருணாநிதி அவர்களுக்கு, உங்களுடைய முரசொலி பத்திரிகையில் என்னுடைய பெயரை ராசாசி என்று போடுகிறீர்கள். ஆனால் எம்.ஜி.ஆர். என்றும் இராஜேந்திரன் என்றும் போடும்போது வடமொழி ''ஜி'' இருக்கின்றது; நான் மாத்திரம் செய்த பாவம் என்ன?'' என்று தெரிவித்திருந்தார்கள். நான் உடனடியாக முரசொலிக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இனிமேல் இராஜாஜி என்றே பத்திரிகையில் போடுங்கள் என்று ஆணையிட்டு, இராஜாஜி அவர்களுக்கும் இனிமேல் முரசொலியில் இராஜாஜி என்றே வெளியிடப்படும் என்று குறிப்பிட்டுப் பதில் எழுதியிருந்தேன். அதற்கு நன்றி தெரிவித்து எழுதியிருந்தார்கள்.

இதை நான் சொல்வதற்குக் காரணம் – வடமொழியில் ஒருவருடைய பெயர் இருக்குமேயானால், அதை அடியோடு மாற்ற வேண்டுமென்பதல்ல. ஆனால் மாற்றக்கூடிய அளவிற்குள்ள ''ஹால்'' என்பதை ''ஹவுஸ்'' என்பதை ''கம்பெனி'' என்பதைத் தமிழிலே மாற்ற முடியுமானால் அதை மாற்ற வேண்டுமென்பதற்காகத் தான் இதைச் சொல்லுகிறேன். ஏனென்றால் அந்த உணர்வு கொண்ட ஒரு கவிஞர் – அந்த உணர்வைத் தமிழ் மக்களிடம் ஊட்டி வருகின்ற ஒப்பற்ற பணியைச் செய்து வருகின்ற நல்ல தமிழர்களுடைய வரிசையிலே – ஆர்வமுள்ள தமிழர்களுடைய வரிசையிலே இருக்கின்ற கவிஞர் என்னுடைய அருமை நண்பர் அப்துல் ரகுமான் என்ற காரணத்தால், இந்த விழாவில் இதைச் சொல்வது மிகவும் பொருத்தமென்று கருதுகிறேன்.

இங்கே மூன்று நூல்கள் வெளியிடப்பட்டன. என்னை மிகவும் கவர்ந்த ''விதை போல் விழுந்தவன்'' என்ற சொற்றொடரை வைத்து ரகுமான் அவர்கள் பல நேரங்களில் எழுதிய கவிதைகளைத் தொகுத்து ஒரு நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. நான் அந்த நூலுக்குத் தந்த முன்னுரையிலே கூட குறிப்பிட்டிருக்கிறேன். அறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவைப் பற்றி கவிஞர் ரகுமான் அவர்கள் சுட்டிக் காட்டும்போது என் நெஞ்சு விம்முகிறது. அந்த நிலையிலேகூட, அவர் விதை போல விழுந்தார் என்று அவர் குறிப்பிட்டிருக்கின்ற அந்தச் சொற்றொடரைப் பார்த்தபோது, அந்தக் கவலையைக் கூட ஒருக்கணம் மறந்து இந்த அற்புதமான உவமையை, சொல்லாடலை, நான் நினைத்து நினைத்து பெருமூச்சு விட்டேன் என்று அதில் குறிப்பிட்டிருக்கிறேன்.

அப்படிப்பட்ட ஒரு அரிய நூலை வெளியிட்டு அதற்கான மதிப்புரையை முனைவர் நன்னன் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவர் பேசும்போது

– ஒரு பேச்சாளி பேசும்போது எதிரே உள்ளவர்களை யெல்லாம் முட்டாளாக நினைத்துக் கொண்டு பேச வேண்டும் என்று சொன்னார். அப்போது நானும், பேராசிரியரும், ரகுமானும் பேசிக் கொண்டோம்; நல்லவேளை, நாம் பின்னால் உட்கார்ந்திருக்கிறோம் (பலத்த சிரிப்பு, கைதட்டல்) என்று ஆறுதல் அடைந்தோம். அப்படி நன்னன் சொன்னதற்கு என்ன அர்த்தம் என்றால், பேசுகிறவர்களே கூட முட்டாள்களாக இருக்கலாம்; ஆனால் பேசும்போது எதிரே அமர்ந்திருப்பவர்களை நம்மை விட ஆற்றல் குறைந்த வர்கள் என்று நினைத்துக் கொண்டால்தான் பேசும் போது அச்சமில்லாமல் பேச முடியும் என்பதற்காகச் சொல்லப்பட்ட கருத்து அது. அந்தக் கருத்தைத்தான் நன்னன் அவர்கள் இங்கே எடுத்து வைத்து, அவருக்கு உடன்பாடான கருத்துக்களை யெல்லாம் எடுத்துரைத்து கவிஞரை மிகவும் புகழ்ந்து, ஒன்றிரண்டு கருத்துக்களை மிகுந்த நயத்தோடு எடுத்துக்கூறி அவருடைய உரையை நிறைவு செய்திருக்கிறார்.

''பித்தன்'' என்ற தலைப்பிலே வெளியிடப்பட்ட நூலைப் பற்றி மதிப்புரை வழங்கியவர் முனைவர் கா. செல்லப்பன் அவர்கள். செல்லப்பன் அவர்களை நான் நீண்ட நாட்களாக அறிவேன். நல்ல ஆங்கிலப் புலமை வாய்ந்தவர். நான் எழுதிய ''குறளோவியம்'' நூலை ஆங்கிலத்திலே அவர்கள் மொழி பெயர்த்து, கடந்த ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு அது வெளியிடப்பட்ட நிகழ்ச்சி பலருக்கும் நினைவிருக்கும். அத்தகைய ஆங்கிலப் புலமை வாய்ந்த முனைவர் செல்லப்பன் அவர்கள் ''பித்தன்'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள நூலுக்கான மதிப்புரையை வழங்கியிருக்கிறார்.

தம்பி வைரமுத்து – கவியரசு வைரமுத்து – அதில் கவியரசு என்பதை அவர் துறந்து விட்ட காரணத்தினால் – நான் சொல்லும்போது கவியரசு என்று சொல்வதை விட, ''என் தம்பி'' என்று அழைப்பதிலே அதிக இனிமை இருக்கின்ற காரணத்தினால், என் தம்பி வைரமுத்து ''முத்தமிழின் முகவரி'' என்ற தலைப்பில் நண்பர் ரகுமான் எழுதிய கவிதை நூல் பற்றி மதிப்புரை வழங்கியிருக்கிறார். முத்தமிழின் முகவரி என்று என்னைக் குறிப்பதாகச் சொல்கிறார்கள். இப்பொழுது முகவரி சரியாக இருந்தால் கூட, அஞ்சல் ஊழியர்களுடைய வேலைநிறுத்தம் காரணமாக அது ஒழுங்காகக் கிடைப்பதில்லை. (சிரிப்பு) அப்படிப்பட்ட காலக்கட்டத்தில் முகவரி இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? என்னைப் பல நேரங்களில் பல கவியரங்குகளில் பாராட்டி, அவர் எழுதிய கவிதைகள் தொகுப்பாக வெளியிடப்பட்டிருக்கின்றன. அது குறித்து தம்பி வைரமுத்து அவர்கள் தன்னுடைய உணர்ச்சி பூர்வமான உரையை இங்கே நிகழ்த்தியிருக்கின்றார்.

நம்முடைய இனமானப் பேராசிரியர் அவர்கள் அப்துல் ரகுமான் அவர்களுக்கும் இந்த இயக்கத்திற்கும் தமிழ்ச் சமுதாயத்திற்கும் உள்ள தொடர்புகளையெல்லாம் இங்கே எடுத்துக்காட்டி அவருடைய இனிய பண்புகளை அவருடைய எளிய தமிழைப் போற்றி புகழ்ந்துரைத்திருக்கிறார்கள்.

இந்தக் கவிதை நூல்களை நான் ஆழ்ந்து படித்தேன். எப்பொழுதுமே பாராட்டு விழாக்களுக்கு வருகின்ற சில பேர் அந்தப் புத்தகங்களின் அட்டையை மாத்திரம் தருபவர்கள் உண்டு. என்னைப் பொறுத்தவரையில் ஒரு

நாள் அல்லது இரண்டு நாள் உட்கார்ந்து ஆற அமர அந்த நூல்களைப் படித்து விட்டுத்தான் வருவேன். நன்னன் சொன்னதைப் போல நானும் சில வரிகளைக் கோடிட்டுக் கொண்டுதான் வந்திருக்கிறேன். ஆனால், நீண்ட நேரம் பேசுகின்ற நிலையில் நான் இல்லை. அது அப்துல் ரகுமானுக்குத் தெரியும். காலையிலிருந்து உடல்நிலை சரியில்லாத காரணத்தால், எப்படியும் இந்த விழாவிலே கலந்துகொள்ள வேண்டும் என்ற ஒரு வைராக்கியத்தோடு இந்த விழாவிலே நான் கலந்து கொண்டிருக்கிறேன்.

ரகுமான் அவர்கள் எழுதிய ''பித்தன்'' என்ற நூலிலே சில கவிதை வரிகளை உங்களிடத்தில் எடுத்துக் காட்டுவதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

பித்தன் ஆடையைக் கிழித்துக் கொண்டிருக்கிறான். அவனுடைய செயலைப் பார்த்து ரகுமான் கேட்டிருக்கிறார்.

''சட்டையை ஏன்
கிழிக்கிறாய்?'' என்றேன்.
அதற்குப் பித்தன் சொல்கிறான் –
''கடிதத்தைப்
படிக்கவேண்டும் என்றால்
உறையைக்
கிழிக்கத் தானே வேண்டும்''
என்றான். (கைதட்டல்)

எவ்வளவு அருமையான தத்துவம் இதிலே அடங்கியிருக்கிறது என்பதை நான் சொல்லாமலேயே நீங்கள் தெரிந்து கொள்ளலாம். மேலும் பித்தன் தொடருகிறான்.

"பூக்களும் பறவைகளும்
ஆடை அணிவதில்லையே?
நீங்கள்
ஆபாசமானீர்கள்,
அதனால் உங்களை
ஆடையால் மறைத்தீர்கள்."

மனிதர்கள் ஆபாசமானவர்களாம் – பூக்களும் பறவைகளும் ஆபாசமற்றவைகளாம். அதனால் அவைகள் ஆடை அணிவதில்லையாம் – இவ்வாறு சொல்லிவிட்டு மேலும் சொல்கிறான்.

"தேங்கிய நீர்தான்
பாசியை
உடுத்திக் கொள்கிறது."

தேங்கிய நீரிலே பாசி படிகிறதே; அதைத்தான் கவிஞர் பித்தன் வாயிலாக ஆடை என்று சொல்கிறார்.

"அணைந்த நெருப்புத் தான்
சாம்பலை
அணிந்து கொள்கிறது.
தோலும் ஆடைதான் என்பதை
பாம்பு அறிந்திருக்கிறது
நீங்கள் அறியவில்லை." (கைதட்டல்)

தோல் கூட ஆடைதான் என்பதை பாம்பு அறிந்திருக்கிறதாம். இந்த ஆடை என்பது – நான் முதலிலே குறிப்பிட்டேனே – தேங்கிய நீர்தான் பாசியை உடுத்திக் கொள்கிறது என்று, அதைப் போல பாலைக் கூட சூடாகக் காய்ச்சி ஆற வைத்தால், மேலே 'ஆடை' உருவாகிறது. அதை ஆடை என்கிறோம். அந்த ஆடையைக் கொண்டு வந்து தேங்கிய நீரில் திணிக்கிறார் கவிஞர் அப்துல் ரகுமான் அவர்கள். அது கூட பாசியை உடுத்திக் கொள்கிறது.

இந்தப் பித்தன் என்ற கவிதைத் தொகுப்பு முழுவதையும் படித்துப் பார்த்தால் – எனக்குத் தோன்றுகின்ற எண்ணம், அவரே முன்னுரையிலே குறிப்பிட்டதைப் போல எதிர்மறையாக எல்லாவற்றையும் சொல்வது என்கின்ற ஒரு முடிவோடு சொல்லப்பட்ட விஷயங்கள். எதிர்மறை உடன்பாடு என்பதில் எதிர்மறையாகச் சொல்லப்பட்டவை. ''பாசிட்டிவ்'', ''நெகட்டிவ்'' என்று ஆங்கிலத்தில் சொல்கிறோமே, அது தனித்தனியாக இல்லாமல் ஒன்றாகச் சேர்ந்தால்தான் ஒளியே கிடைக்கும் (கைதட்டல்). முதலில் நெகட்டிவ் தயாராகிறது. புகைப்படத்திலே கூட முதலில் தயாராவது நெகட்டிவ்; பிறகு அது பாசிட்டிவ்வாக படமாக உருப் பெறுகிறது. (கைதட்டல்) அதை மனதிலே வைத்துக் கொண்டு படித்தால் எல்லாம் பாசிட்டிவ்லேயே – அந்த அணுகுமுறையிலேயே பித்தனுடைய கவிதைகள் வெளியாகியிருக்கின்றன.

''அநாதை'' என்ற தலைப்பில் –

''யார் அந்த
அநாதை?''
என்று கேட்டேன்.

கவிஞர் கேட்கிறார். அதற்குப் பித்தன் சொல்கிறான்.

''உண்மை'' என்றவன்,

(அந்த அநாதையின் பேர் உண்மையாம்)

''கடைத்தெருவில்
அது அநாதையாக
அழுது கொண்டிருந்தது.
அதை யாருமே
அடையாளம் கண்டுகொள்ளவில்லை''
என்று கூறினான்.

(உண்மை கடைத்தெருவிலே அநாதையாக அழுது கொண்டிருந்ததாம். அதை யாருமே அடையாளம் கண்டு கொள்ளவில்லையாம்.)

"ஏன்?" என்றேன்

"நெற்றியில்
திருநீறோ, நாமமோ
இல்லை,
மார்பில்
சிலுவை இல்லை,
தலையில்
தொப்பியில்லை,
அதனால் அதை
யாருமே
அடையாளம் கண்டுகொள்ளவில்லை"

என்றான். (கைதட்டல்)

அடையாளம் கண்டு கொண்டிருந்தால் அயோத்தி பிரச்சினை அல்லவா வரும்? (கைதட்டல்) எனவே இது நெகட்டிவ் அப்ரோச் – எதிர்மறை அணுகுமுறையைக் கொண்டு ஒரு பாசிட்டிவ் அப்ரோச்சுக்கு கவிஞர் அப்துல் ரகுமான் அவர்கள் – இவைகள் எல்லாம் இருந்தால்கூட எல்லோரும் ஒன்றுதான் என்பதை நிலை நாட்டுவதற்காக அதைச் சொல்கிறார்.

இப்போதுகூட பாருங்கள். இந்த ஒரு வாரக் காலத்தில் நான் கலந்துகொண்ட விழாக்களில் முதலில் கலந்து கொண்டது திருநாவுக்கரசு அவர்களின் பொன் விழா; நேற்று கலந்துகொண்டது, நம்முடைய கிறித்தவ பேராயர் எஸ்றா சற்குணம் அவர்களின் மணிவிழா; இன்று நான் கலந்துகொள்கிற விழா, கவிஞர் அப்துல் ரகுமான் அவர்களின் மணிவிழா.(கைதட்டல்) இந்து,

கிறித்தவர், முஸ்லீம் என்ற இந்த மூன்று விழாக்களிலே கலந்து கொள்கிறேனே (கைதட்டல்) இது அடையாளம் தெரிந்தாலுங்கூட எல்லாவற்றிலும் நானே கலந்து கொள்வதிலிருந்து எல்லாமே ஒன்றுதான். இந்துவாக இருந்தாலும், முஸ்லீமாக இருந்தாலும், கிறித்தவராக இருந்தாலும், இந்து முஸ்லீம் சீக்கி சாயி, ஆபஸ் பே ஹை பாயி, பாயி என்பார்களே (சிரிப்பு) அந்தப் பாடலை உள்ளடக்கிய அந்த உணர்வை எடுத்துக் காட்டத்தான் நெகட்டிவ் அணுகுமுறையிலே கவிஞர் அப்துல் ரகுமான் அவர்கள் ஒரு பாசிட்டிவ் செய்தியை நமக்குச் சொல்கிறார்.

இன்னொன்று ''பக்கவாதம்'' என்று ஒரு தலைப்பு. அதிலே, ஒரு அருமையான தத்துவம்.

''ஒன்றை
நல்லது என்கிறீர்கள்
ஒன்றைக் கெட்டது என்கிறீர்கள்
இது குருட்டுத் தீர்ப்பல்லவா?''

என்று பித்தன் கேட்கிறான். ஒன்று நல்லது என்கிறீர்கள். இன்னொன்று கெட்டது என்கிறீர்கள், இது குருட்டுத் தீர்ப்பல்லவா? என்று கேட்கிறான்.

''உங்கள் தீர்ப்பு
உண்மையில்
தீர்ப்பல்ல
ஒரு பக்க வாதம்

(ஒன் சைடு ஆர்கியூமென்டாம். தமிழிலே ஒரு பக்க வாதம் நிறுத்திச் சொன்னால் ஒரு பக்கவாதம்)

போர்வையைக்
குளிர்காலத்தில்
நல்லது என்கிறீர்கள்
கோடைக்காலத்தில்

கெட்டது என்கிறீர்கள்
போர்வையில் இல்லை
நல்லதும் கெட்டதும்.
விசிறியைக்
கோடைக்காலத்தில்
விரும்புகிறீர்கள்,
குளிர்காலத்தில்
வெறுக்கிறீர்கள்
விசிறியிடம் இல்லை
விருப்பும் வெறுப்பும்.

மழை பெய்தால்
குடியானவன் போற்றுகிறான்
குயவன் தூற்றுகிறான்
மழையிடம் இல்லை
பாரபட்சம்.
இது நல்லது
இது கெட்டது
என்று பிரிப்பதற்கு
நீங்கள் கீறும் கோடு
ஓடும் நீரில்
கிழிக்கும் கோடல்லவா?''

எவ்வளவு அருமையான உவமை பாருங்கள்! நல்லது கெட்டது என்ற இரண்டு சொல்லுக்கு இடையில் – இந்த இரண்டு தன்மைக்கு இடையிலே இருப்பது பெரிய இடைவெளி அல்ல. மிகச் சிறிய இடைவெளிதான். ஒரு இழை போன்ற இடைவெளிதான் என்று சொல்ல வந்த கவிஞர் இந்த இடைவெளி பெரிய அகழி என்று சொல்லவில்லை; சிறிய வாய்க்கால் என்று சொல்லவில்லை; ஆடு தாண்டும் காவேரி என்றும் சொல்லவில்லை. பிறகு என்ன சொல்கிறார்? நல்லது

கெட்டது என்று பிரிப்பதற்கு நீங்கள் கீறும் கோடு ஓடும் நீரில் கிழிக்கும் கோடல்லவா? ஓடுகின்ற நீரில் கோடு கிழித்தால் எவ்வளவு நேரம் தாங்கும் அது? கிழிக்கும் போதே இரண்டும் ஒன்றாகிவிடும். அந்த அளவிற்கு மெல்லிய இடைவெளிதான். நல்லது கெட்டது என்ற இந்த இரண்டு தன்மைகளுக்கும் இடையே இருக்கிறது என்கிறார்.

மற்றொன்று, எதையெதை நாம் ரசிக்க மாட்டோமோ, அதையெல்லாம் பித்தன் ரசிக்கிறான். பித்தனா ரசிக்கிறான். பித்தன் என்ற பெயரில் அப்துல் ரகுமான் ரசிக்கிறார். ''காயங்களை'' ரசிக்கிறார்.

''காயங்களை
ரசித்துக்கொண்டிருக்கிறேன்
இருட்டின் உடலில்
இந்த
நட்சத்திரக் காயங்கள்
எவ்வளவு அழகாக
இருக்கின்றன'' என்றான்

(பித்தன் என்ற மனசாட்சி ரகுமானிடம் இவ்வாறு கூறுகிறது)

மற்றொரு அழகான அருமையான சிந்திக்கத் தக்க நினைத்து நினைத்துப் பாராட்டத்தக்க ஒன்று.

''காயம்படும் ஓலைதான்
சுவடியாகிறது (கைதட்டல்)
எழுத்தாணியால் சுவடியாகிறது.
காயம்படும் கல் தான்
சிலையாகிறது
உளியினால்
காயம்படும் மூங்கில் தான்
கானம் பாடுகிறது'' (கைதட்டல்)

காயத்திற்கு இப்படி வக்காலத்து வாங்குகிறார்.

அடுத்து, ''பாரம்''. பாரம் என்றால் எல்லோரும் வெறுப்பார்கள். இந்தப் பாரத்தைத் தூக்கிக்கொண்டு போ என்று சொன்னால் ஒரு சலிப்பு வரும். ஆனால் பித்தன் சொல்கிறான்.

''பாரத்தை
இறக்கி வைப்பது
மகிழ்ச்சியானது
என்கிறீர்கள்
ஆனால்
மரணத்தில்
அழுகிறீர்களே, ஏன்?'' (கைதட்டல்)

உயிர் ஒரு பாரம் என்கிறோம்; உடம்பு சுமை என்கிறோம்; சரி, இதை பெரிய பாரம் என்று சொல்கின்ற நீ மரணம் என்றவுடன் ஏன் அழுகிறாய்? அது தான் சுமை இறங்கி விடுகிறதே?

இப்படி இந்தப் பித்தனுடைய உவமைகளை–கவிதைகளை, தத்துவங்களையெல்லாம் படித்துப் படித்து கவிஞர் அவர்களே, நானே அப்துல் ரகுமானின் பித்தனாகவே ஆகிவிட்டேன்(பலத்த கைதட்டல்) என்பதை ராஜாஜி மண்டபத்தில் நான் அறிவிக்கின்றேன்.

அண்ணா அவர்களைப் பற்றி ''விதை போல் விழுந்தவன்'' என்ற தலைப்பில் வந்துள்ள புத்தகத்தில் ''கண்ணில்லாதவனின் கண்ணீர்'' என்ற தலைப்பில் உள்ள கவிதையில்,

''இங்கே புதைக்கப்பட்டது
வெறும் மனித உடலல்ல,
எங்கள்
வரலாற்றுப் பேழை.
குருடர்கள் நாம்,
எங்களுக்குக் கிடைத்த

புதையலை
மறுபடியும் புதைத்துவிட்டோம்
குருடர்கள் நாம்''
(ஏனென்றால், எங்களுக்குக் கிடைத்த
புதையலை
மறுபடியும் புதைத்துவிட்டோம்:)

அடுத்து, ''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்'' என்பதை நன்னன் தொட்டுவிட்டு, விட்டு விட்டார். ஆனால் அவர் என்ன எழுதியிருக்கிறார் என்றால்,

''அண்ணா நீ
ஏழையின் சிரிப்பில்
இறைவனைக் காண்போம்
என்று சொன்னதன் பொருள்
இப்போது எனக்குப்
புரிந்துவிட்டது.
இறைவனை யாரும்
காண முடியாது
என்பதைத் தானே
அப்படிச் சொன்னாய். (கைதட்டல்)
நாம்
இறைவனைக் காண
முடியாமல் போனாலும்
போகட்டும்.
ஏழைகள் இல்லாததோர்
உலகத்தைப் படைப்போம்.''

என்று கொள்கையை, இலட்சியத்தை, குறிக்கோளை சுட்டிக் காட்டுகிறார்.

''அண்ணா சாலை'' என்ற தலைப்பில் அண்ணாவைப் பற்றி அவர் பாடும் போது,

"சாலையிலே நாம்
நடந்தபோது
கால்களைக் கடித்த
செருப்புகளை நாம்
கழற்றி எறிந்தோம்."

(எவ்வளவு ஆழமான பொருள் என்று அரசியல் ரீதியாக எண்ணிப் பாருங்கள். அண்ணா சாலையில் நான் நடந்த போது கால்களைக் கடித்த செருப்புகளை நாம் கழற்றி எறிந்தோமாம்)

"வார் அறுந்து போன
செருப்புகள் சிலவோ
தாமே கழன்று
வழியில் விழுந்தன
விளம்பர மதிப்புக்காக
சில வியாபார வீதிகளும்
சில வியாபாரத் தெருக்களும்
அண்ணாவின் பெயரைச்
சூட்டிக் கொண்டன.
அண்ணா சாலையில்
நடப்பவன் எல்லாம்
அண்ணா வழியில்
நடப்பவனா? (கைதட்டல்)
அண்ணா,
நீ
மாற்றான் தோட்டத்து

மல்லிகைக்கும்
மணமுண்டு என்றாய்.
இப்போதோ சிலர்
மாற்றான் தோட்டத்து
மல்லிகைக்குத் தான்
மணமுண்டு என்கிறார்கள்.''

(அண்ணா சொன்னது – மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்றார். ஆனால் இப்போதோ சிலர், மாற்றான் தோட்டத்து மல்லிகைக்குத் தான் மணம் உண்டு என்கிறார்கள்)

''நம் தோட்டத்து மல்லிகைக்கு
மணம் இல்லை என்கிறார்கள்
இன்னும் சிலர்
மாற்றானின்
காகிதப் பூவுக்கும்
மணமுண்டு என்கிறார்கள்
உன்னால் வளர்ந்த சிலர்
உன்னைவிட வளர்ந்து விட்டார்.
அவர்களோ
மாற்றான் வீட்டுச்
சாக்கடையும்
மணக்கிறது என்கிறார்.
அதில் போய்க்
குளிக்கவும்
தொடங்கி விட்டார்.
இன்னும் சிலர்

மாற்றான் தோட்டத்து
மல்லிகையில் மயங்கி
அங்கேயே போய்க்
குடியேறி விட்டார்கள்.” (கைதட்டல்)

இந்த ஆதங்கம் எல்லாம் அண்ணாவைப் புகழ்ந்துரைக்கின்ற – அண்ணாவிற்கு இரங்கல் தெரிவிக்கின்ற இதயத்தைத் தொடுகின்ற இந்தக் கவிதை வரிகளில் அப்துல் ரகுமான் அவர்களால் சுட்டிக் காட்டப் பட்டிருக்கின்றது.

இந்த இனிய விழாவில் நூல்களையெல்லாம் ஏற்கனவே எனக்கு அனுப்பி வைத்து விட்ட விழாக் குழுவினர் இன்று பிற்பகல் அட்டை வேயப்பட்ட நூல்களையும், மலரையும் அத்துடன் இன்று காலை தினமணியிலே வெளிவந்த ஒரு கட்டுரையையும் எனக்கு அனுப்பிவைத்தார்கள். நண்பர் கவிஞர் மீரா அவர்கள் எழுதிய கட்டுரை அது. அதிலே ஒரு வேண்டுகோள் விடப்பட்டிருக்கின்றது.

பாரதியார் ஒரு காலத்திலே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதிய கவிதையை சுதேசமித்திரன் பத்திரிகையாலயத்திற்கு அனுப்பி வைத்து ஸ்ரீமான் சுப்ரமணிய பாரதி கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனகசுப்புரத்தினம் என்ற பாரதிதாசன் எழுதிய கவிதை இது, இதை வெளியிடுங்கள் என்று சொன்னாரென்றும், அது அந்தப் பத்திரிகையிலே வெளியிடப்பட்டது என்றும் சுட்டிக்காட்டி – அந்தக் கவிதா மண்டலம் என்று பாரதியாரால் சுட்டிக் காட்டப்பட்ட கவிதா மண்டலம் இன்றில்லை, அப்துல் ரகுமான் அவர்களுடைய மணிவிழாவை யொட்டி அந்தக் கவிதா மண்டலத்தை தமிழக அரசு உருவாக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்.

அதிலும் ஒரு பிழை நான் கண்டேன். எங்கே அதை உருவாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறாரென்றால் மகாபலிபுரம் சாலையிலே, உருவாக்க வேண்டுமென்று எழுதியிருக்கிறார். அது மகாபலிபுரம் சாலையல்ல. மாமல்லபுரம் சாலை (கைதட்டல்) என்று நான் தம்பி மீராவிற்குத் தெரிவித்துக் கொண்டு – பிழை இருந்தாலுங்கூட கருத்து நல்ல கருத்து என்ற காரணத்தால் – கவிதா மண்டலம் உருவாக தமிழக அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதை (பலத்த கைதட்டல்) என்னுடைய அருமை நண்பர் அப்துல் ரகுமான் அவர்களின் மணிவிழாவிலே நான் பிரகடனப்படுத்தி – இந்த விழாவிலே கலந்து கொண்டு உரையாற்றிய அனைவரையும் மீண்டும் மீண்டும் பாராட்டி – அவர்களுக்கெல்லாம் நன்றி கூறிக்கொள்கிறேன்.

19-7-98 அன்று கவிக்கோ அப்துல் ரகுமான் மணிவிழாவில் ஆற்றிய உரை

22

காஞ்சி மணிமொழியார் இல்ல மணவிழா

நம்முடைய உள்ளங்களில் எல்லாம் வாழ்ந்து கொண்டு இருக்கின்ற காஞ்சி மணிமொழியார் அவர்களுடைய பேரனும், நம்முடைய பேராசிரியர் இளஞ்செழியன் அவர்களுடைய இளவல் நடராஜன் அவர்களுடைய அருமைச் செல்வனுமான, இளவரசுக்கும் பொறியாளர் அன்பிற்குரிய நண்பர் திருநாவுக்கரசு அவர்களின் செல்வி கலையரசிக்கும் நம்மனைவருடைய நல்வாழ்த்துக்களோடு மணவிழா நிகழ்ச்சி இங்கே நிறைவேறியிருக்கின்றது. இந்த மணவிழாவிலே இந்த மண்டபம் குழுமியிருக்கின்ற அளவிற்கு உங்களை யெல்லாம் காணும்போது மணிமொழியார் அவர்கள் பால் நீங்கள் எல்லாம் எந்த அளவிற்கு அன்பு கொண் டிருக்கின்றீர்கள், பற்று வைத்திருக்கிறீர்கள் என்பது விளங்குகின்றது.

மணிமொழியார் அவர்கள் சென்னை மாவட் டத்திலே கழகத்தை வளர்த்தார் என்று தம்பி முரசொலி மாறன் இங்கே குறிப்பிட்டார். மாவட்ட அளவிலே மாத்திரமல்லாமல் மாநில அளவிலும் தி.மு.கழகம்

வளருவதற்கு, வலிமை பெறுவதற்கு விரிவாக எல்லா இடங்களிலும் பரவுவதற்கு பேரறிஞர் அண்ணா அவர்களுக்குத் துணையாக நின்றவர்களில் ஒருவர் பெரியவர் காஞ்சி மணிமொழியார்.

தம்பி மாறன் பேசும்போது ''வழங்கிய பதவியைக் கூட வேண்டாமென்று மறுத்தவர் பேராசிரியர் இளஞ்செழியன்'' என்று குறிப்பிட்டார். அதைப் போலவே அவருடைய தந்தை மணிமொழியார் அவர்களும் பதவிக்காக இந்த இயக்கம் அல்ல, தான் பணிபுரிந்து இந்த இயக்கத்தை மேலும் வளர்ப்பேன் என்று ஊக்கத்தோடு, உணர்வோடு அரும்பணி யாற்றியவர்.

1967-ஆம் ஆண்டு தேர்தலில் யார் யார் எங்கெங்கே வேட்பாளர்கள் என்று அறிவிக்கப்படுவதற்கு முன்பு சைதாப்பேட்டை தொகுதியில் காஞ்சி மணிமொழியார் அவர்கள் சட்டப்பேரவை வேட்பாளராக நிற்க வேண்டுமென்று அந்தப் பகுதியிலே உள்ள செயல்வீரர்கள் எல்லாம் அறிஞர் அண்ணா அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னார்கள். அண்ணா அவர்கள் எனக்குத் தெரியாமல் காஞ்சி மணிமொழியாரை அழைத்து ''இந்த முறை நான் சைதாப்பேட்டை தொகுதியில் கருணாநிதியை நிற்க வைக்கலாம் என்று கருதியிருக்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டவுடன், மணிமொழியார் அவர்கள் தான் வேட்பு மனு செய்வதில்லை என்று அண்ணா அவர்களிடம் கூறிவிட்டு – கூறியது மாத்திரமல்ல, என்னுடைய பெயர் அறிவிக்கப்பட்ட பிறகு – நான்கூட சைதாப்பேட்டை தொகுதியிலே அத்தனை முறை மக்களைச் சந்தித்திருக்க மாட்டேன், என்னைவிட அதிகமாக வாக்காளப் பெருமக்களைச் சந்தித்து

அன்றைக்கு என் வெற்றிக்காக அரும்பாடுபட்டு அந்த வெற்றிக் கனியைப் பறித்துத் தந்தவர் காஞ்சி மணிமொழியார் என்பதை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன்.

ஒவ்வொரு நாளும் நான் காலையிலே வாக்காளர்களைச் சந்திக்க அவரையும் அழைத்துக் கொண்டு செல்வதற்காக அவர் இல்லத்திற்கு வரும்போது எங்களுக்கெல்லாம் முன்னவராக அவர் தன்னைத் தயார் செய்துகொண்டு, புறப்படத் தயாராக இருப்பார். காலையிலிருந்து மாலை வரை பல பகுதிகளுக்கும் வீடு வீடாகச் சென்று வாக்குகளைக் கேட்போம். எனக்கு கால்வலி எடுத்து விடும்.

மாலை 6 மணிக்கு அவரைப் பார்த்து ''மணி மொழியார் அவர்களே, இன்றைக்கு இதோடு போதும். மீதமுள்ள இடங்களை நாளைக்குப் பார்க்கலாம்'' என்று கூறுவேன். அதற்கு அவர், ''இல்லையில்லை. என்ன, என்னைவிட வயதிலே இளையவர் நீங்கள். இப்படிக் களைத்துப் போகிறீர்கள்? இன்னும் இரண்டு தெருக்களில் வாக்கு கேட்டு விடலாம், வாருங்கள்'' என்று வலுக்கட்டாயமாக என்னை அழைத்துச் சென்று அத்தனை வீடுகளிலும் வாக்கு கேட்டு முடித்தால்தான் அவருக்கு நிம்மதியாக இருக்கும்.

அதுமாத்திரமல்ல; மறுநாள் எந்தெந்த இடங்களுக்கு வாக்கு கேட்கச் செல்ல வேண்டும், எந்தெந்தப் பகுதியிலே இருக்கின்ற பெரியவர்களைச் சந்திக்க வேண்டும், யார் யாரை அணுகி அவர்களுடைய ஆதரவைப் பெற வேண்டும் என்கின்ற இந்தக் கணக்குகளையெல்லாம் மிகத் துல்லியமாகக் குறித்து வைத்துக்கொண்டு அதற்கேற்ப என்னை அந்தத் தேர்தலில் வழி நடத்தியிருக்கிறார்.

அண்ணா அவர்கள் தென் சென்னையிலே நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றி பெறுவதற்கும் அதைப்போல நான் சைதாப்பேட்டை தொகுதியிலே சட்டப் பேரவை உறுப்பினராக வெற்றி பெறுவதற்கும் கழகத்தின் செயல்வீரர்கள் பலரும் காரணமாக இருந்தாலும் கூட, அதற்கு வழிகாட்டிய பெருமை; தனக்குப் பதவி வேண்டாம், உங்களை அரியாசனத்தில் அமர்த்துகிறேன் – என்று உறுதி எடுத்துக் கொண்டு உழைத்த பெருமை காஞ்சி மணிமொழியாரையே சேரும்.

எனவே அந்த வகையில் காஞ்சி மணி மொழியாருடைய அந்தத் தியாக உள்ளத்தை திராவிட முன்னேற்றக் கழகத்திலே உள்ள எல்லா நண்பர்களும் – எல்லா அமைப்புகளிலும் உள்ளவர்களும் பின்பற்ற வேண்டுமென்பதுதான் இந்தத் திருமண விழாவிலே நான் விடுக்கும் செய்தியாகும்.

அவர் பதவியே வேண்டாமென்று வெறுத்த வரல்ல. அதைத் துறந்து விட்டவரல்ல. அதிலே சன்னியாசியாக இருக்க வேண்டுமென்று கூறியவருமல்ல. ஆனால் வேண்டாம், சற்று ஒதுங்கி இன்னாருக்கு வழி விடுங்கள் என்று தலைமை சொன்ன போதெல்லாம் அவ்வாறு வழிவிட்டு மற்றவர்களுக்கு வழிகாட்டியாக அவர்கள் விளங்கியவர்கள் என்பதற்காகத்தான் இன்னமும், அவர் மறைந்து பல ஆண்டுகளானாலும் கூட அந்தப் பெருமையைச் சொல்லிக் கொண்டிருக் கின்றோமென்றால் அதுதான் காஞ்சி மணிமொழியார் என்று சொன்னால் அது மிகையாகாது.

அவருடைய அருமை மகன் நம்முடைய இளஞ்செழியன் நடத்திய 'போர்வாள்' ஏடு உள்ளபடியே தமிழகத்திலே உள்ள தன்மான வீரர்களுக்கு, திராவிட

இயக்க வீரர்களுக்கு, குறிப்பாக தி.மு.கழகத் தோழர்களுக் கெல்லாம் போர்வாளாகவே அவர்களுடைய கரங்களிலே மின்னிக் கொண்டிருந்ததை நாமெல்லாம் மிக நன்றாக அறிவோம். இளஞ்செழியன் எழுதிய 'தமிழன் தொடுத்த போர்' என்கின்ற அந்த நூலும் இன்னமும் தமிழகத்திலே இந்தி ஆதிக்க எதிர்ப்புக்கு நமக்கெல்லாம் பக்க பலமாக இருக்கக்கூடிய ஒரு பெட் டகமாகும். அப்படிப்பட்ட தமிழ்க்குடும்பம், தமிழுக்காக வாழ்ந்த குடும்பம், வாழ்ந்து கொண்டிருக்கிற குடும்பம், எதிர்காலத்திலும் வாழப் போகின்ற குடும்பம். அந்தக் குடும்பத்து நிகழ்ச்சி ஒன்றில் மணவிழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வது எங்களுக்கெல்லாம் பெருமை சேர்க்கக் கூடிய ஒன்றாகும்.

இதை சீர்திருத்தத் திருமணம் என்று நண்பர் சுத்தானந்தம் குறிப்பிட்டு ஆனாலும் முருகனை வேண்டிக் கொள்கிறேன். இந்த மணமக்கள் வாழ வேண்டுமென்று அவர்கள் வாழ்த்தினார்கள். சீர்திருத்தத் திருமணம் தி.மு.கழகத்தினரால் நடத்தப்பட்டால் கூட அங்கே ஆஸ்திகர்களுக்கு இடம் இல்லை என்று நாங்கள் சொல்ல மாட்டோம்.

நாங்கள் விரும்புகின்ற சீர்திருத்தத் திருமணம் எங்கள் மொழிக்கு அங்கே மரியாதை செலுத்தப்பட வேண்டும். அங்கே அறிவுக்கு மரியாதைத் தரப்பட வேண்டும். அதே நேரத்தில் எங்கள் கருத்துக்களுக்கு மாறுபட்டவர்கள் அல்லது வேறு கருத்துடையவர்களுக்கு இங்கே இடமில்லை என்று நாங்கள் சொல்ல மாட்டோம்.

நம்முடைய இல்லத் திருமணங்கள் சீர்திருத்த திருமணங்களானாலும், சுயமரியாதைத் திருமணங்களானாலும், தமிழ் முறையிலே நடத்தப்படுகின்ற திருமணங்கள் ஆனாலும் எல்லாத் திருமணங்களிலும் நாம் நம்முடைய

தன்மான உணர்வு பட்டுப்போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதைத்தான் விரும்புகிறோமேயல்லாமல் வேறல்ல.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி சுருக்கமாக வாழ்த்திய போது குழந்தைகளை அளவோடு பெற வேண்டுமென்று வழக்கம்போல் – எல்லா திருமணங்களிலும் வாழ்த்துவதைப்போல – அவருக்குரிய மக்கள் நல்வாழ்வுத் துறைக்கேற்ற வாழ்த்துரையை வழங்கினார். அதுமாத்திரமல்ல, இது இரண்டாவது தலைமுறைத் திருமணம் என்று மாறன் குறிப்பிட்டார்.

முதல் தலைமுறை திருமணம் சுயமரியாதை திருமணமாக நடைபெற்றாலுங்கூட, கலப்புத் திருமணமாக நடைபெறவில்லை. சாதிக்குள் சாதி திருமணமாகத்தான் நடைபெற்றது. இப்போது இரண்டாம் தலைமுறையும் அப்படித்தான் நடைபெறு கின்றது. எனவே நம்முடைய இளவரசு, கலையரசி பெறுகின்ற குழந்தைச் செல்வங்கள் மூன்றாம் தலைமுறையிலாவது கலப்புத் திருமணத்தைத் தங்கள் இல்லங்களிலே அறிமுகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (கைதட்டல்)

சுயமரியாதைக்காரன், பகுத்தறிவுக்காரன், பெரியாருடைய அடிச்சுவட்டிலே வளர்ந்தவன், பேரறிஞர் அண்ணாவுடைய நிழலிலே வளர்ந்தவன் சுயமரியாதைத் திருமணத்தை மாத்திரம் நடத்தினால் போதாது, இதனுடைய தாத்பரியங்களையும் உணர்ந்து சாதி பேதம் அகல, மத பேதம் அகல கலப்புத் திருமணங் களையும் ஊக்கப்படுத்த வேண்டும். ஒரு வீட்டில் ஒரு கலப்புத் திருமணம் நடைபெற்றால் சாதி அகன்று விடுமா என்று கேட்பவர்களும் இருக்கிறார்கள். அதற்காக இந்த முயற்சியைச் செய்யாமல் இருக்க முடியாது.

என்னுடைய இல்லத்திலே இதுவரை நடைபெற்ற திருமணங்களில் பல திருமணங்கள் காதல் திருமணங்கள், கலப்புத் திருமணங்கள். இனியும் அப்படிப்பட்ட திருமணங்கள்தாம் என் இல்லத்திலே நடக்கக்கூடும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. ஆனால் ஐந்தாறு பேருடைய இல்லங்களிலே கலப்புத் திருமணம் நடைபெற்றால் தமிழ் நாட்டிலே சாதி அகன்று விடுமா என்று கேட்பவர்கள் உண்டு.

இன்றுகூட ஒரு வாரப் பத்திரிகையிலே பார்த்தேன். மதுரையிலோ, திருச்சியிலோ ஒரு நூறு வீடுகளை சமத்துவபுரம் என்று கட்டி விட்டால் தமிழ்நாடு முழுக்க சமத்துவபுரம் வந்து விடுமா? என்று 'துக்ளக்' வார இதழில் ஒரு கேள்வி கேட்டு கட்டுரை எழுதியிருந்தார்கள்.

நான் திருப்பிக் கேட்க முடியும். ராஜாஜி அவர்கள் நூறு ஆதி திராவிடர்களை அழைத்துக்கொண்டு ஆலயப் பிரவேசம் செய்த காரணத்தால் சாதி ஒழிந்து விட்டதா? இல்லை, அதற்காக ஆலயப்பிரவேசம் செய்தது தவறு என்று கூற முடியுமா? முடியாது.

மதுரை வைத்தியநாதய்யர், மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் நூறு ஆதி திராவிடர்களை அழைத்துக் கொண்டு ஆலயப் பிரவேசம் செய்ததால், சாதி அகன்று விட்டதா என்றால் அகலவில்லை. அதற்காக அந்த முயற்சியை, அந்தச் செயலைக் குறை கூற முடியுமா?

அவ்வளவு ஏன்? சுப்ரமணிய பாரதியார் புதுவையில் கனகலிங்கம் என்கின்ற ஒரு அரிஜனப் பையனை அழைத்து வந்து – ஐயர்களையெல்லாம் சுற்றி நிற்க வைத்து, அந்த ஆதிதிராவிடப் பையனுக்குப் பூணூல் கல்யாணம் செய்து வைத்தார். அந்த ஆதி திராவிடப் பையனை அய்யராக ஆக்குகிறேன் பார், பூணூல் போட்டால் அய்யராகி விடுவான் அல்லவா? – என்று பூணூல்

திருமணம் செய்து வைத்தார். கனகலிங்கத்தை அய்யராக ஆக்கினால் நாடு பூராவும் இருக்கின்ற கனகலிங்கங்கள் எல்லாம் அய்யராக ஆகி விடுவார்களா? – என்று யாரும் கேட்கவில்லை.

ஆனால் நான் செய்தால் மாத்திரம் கேட்கிறார்கள். பாரதி செய்தால் அதை ஒத்துக் கொள்கிறார்கள். பாரதி வழி நின்று நான் செய்தால் அதை ஒத்துக்கொள்ள மறுக்கிறார்கள். இராஜாஜி செய்தால் அதை ஏற்றிப் போற்றுகின்றார்கள். மதுரை வைத்தியநாத அய்யர் செய்தால் பாராட்டுகிறார்கள், புகழ்கிறார்கள். ஆனால் நாம் செய்தால் அதை ஏற்க மறுக்கிறார்கள். மறுப்பவர்கள் சிலர்தான், எதிர்காலத்தில் ஏற்றுக்கொள்ள இருப்பவர்கள் பலர் என்ற நம்பிக்கையோடு தான் இந்த இயக்கம் இன்றைக்கு நடைபோட்டுக் கொண்டிருக்கின்றது.

தந்தை பெரியார் சொன்னார் – ‘‘குடியரசு பத்திரிகை நடத்துகிறேன். இதை வாங்கி யார் படித்தாலும் படிக்காவிட்டாலும் எனக்குக் கவலையில்லை. இது ஆயிரம் பிரதி போகிறதா, பத்தாயிரம் பிரதி போகிறதா என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. யாரும் படிக்காவிட்டாலுங்கூட, நானே எழுதி, நானே அச்சடித்து, நானே அந்தப் பத்திரிகையை குடியரசு அலுவலகத் திண்ணையிலே உட்கார்ந்து நான் ஒருவனே படிப்பேன், அது போதும் எனக்கு. அந்தத் திருப்தி போதும் எனக்கு’’ என்று பெரியார் சொன்னார். அப்படிச் சொல்லித் தொடங்கப்பட்ட இயக்கம்தான் இன்றைக்குத் தமிழகம் முழுதும் பரவியிருக்கின்றது. இந்தக் கொள்கை இன்றைக்கு ஆல் போல் பரந்து விரிந்து நிழல் தந்து கொண்டிருக்கின்றது.

அப்படிப்பட்ட கொள்கைக்குரிய குடும்பம் – உறுதி படைத்த குடும்பம் – குன்று போல நிமிர்ந்து நிற்கின்ற குடும்பம் காஞ்சி மணிமொழியாருடைய குடும்பம். அந்தக் குடும்பத்துச் செல்வங்களிலே ஒருவராகத் திகழ்கின்ற இளஞ்செழியன் அவர்களின் இளவல் நடராஜன் அவர்கள் இல்லத்தில் அவருடைய மகன் இளவரசும் திருநாவுக்கரசின் மகள் கலையரசியும் இன்று பெறுகிற இதே இன்பத்தை என்றென்றும் பெற்று வாழ்வில் எல்லா வகையான வளங்களையும் பெற்று வீட்டிற்கு விளக்குகளாய் நாட்டிற்குத் தொண்டர்களாகத் திகழ வாழ்த்துகின்றேன்.

28-8-98 அன்று காஞ்சி மணிமொழியார் இல்ல மணவிழாவில் ஆற்றிய உரை

23

டி.என். இராஜரத்தினம் பிள்ளை நூற்றாண்டு விழா

நம்முடைய சங்கீத கலாநிதி செம்மங்குடி அவர்கள் உரையாற்றி விட்டு தன்னுடைய உரையின் இறுதிப் பகுதியில் முத்தையா பாகவதர், சங்கர நாராயணா இருவரையும் ஒப்பிட்டு ஒரு சிறுகதையை, நிகழ்ச்சியை சொன்னார்கள். பேச்சுக்கலையிலே வேண்டுமானால் அவர்கள் சங்கரநாராயணனாக இருக்கலாம். ஆனால் இசைக் கலையில் அவர் முத்தையா பாகவதர், நான் சங்கர நாராயணர் என்பதை அவருக்கு, நான் நினைவூட்ட கடமைப் பட்டிருக்கிறேன். (கைதட்டல்)

1898–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 27–ஆம் நாள் நூறு ஆண்டுகளுக்கு முன்பு இவ்வுலகில் உதித்த இசை மேதை நாதஸ்வரச் சக்கரவர்த்தி, டி.என். இராஜரத்தினம் அவர்கள் தம்முடைய 58–வது வயதிலே நம்மை விட்டுப் பிரிந்திருக்கின்றார்கள். 1956–ஆம் ஆண்டு அவர்கள் இயற்கை எய்தினார்கள். நூறாண்டுகளுக்கு முன்பு பிறந்த அவருடைய நூற்றாண்டு விழாவை அதே குறிப்பிட்ட தேதியில் நடத்தியாக வேண்டும் என்று நம்முடைய ''ஹம்ஸத்வனி'' செயலாளர் இராமச்சந்திரன் அவர்கள் முனைந்து முயற்சி எடுத்து அவர்

என்னிடத்திலே தேதி கேட்க வந்தபோது, இதையே குறிப்பாகச் சொல்லி, இதே நாளில் இந்த விழாவை நடத்த வேண்டும் என்று எடுத்துக்காட்டி அவருடைய அந்த ஆசையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பது மாத்திரம் அல்ல; எனக்கும் அந்த ஆசை இருந்த காரணத்தினால் இந்த நிகழ்ச்சியை இதே நாளில் ஒத்துக் கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பை நான் பெற்றிருக்கின்றேன்.

இப்பொழுது கூட வள்ளுவர் கோட்டத்தில் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களுடைய நூற்றாண்டு விழா நடைபெற்றது. ஆனால் 95-ஆம் ஆண்டு நடைபெற்றிருக்க வேண்டிய நூற்றாண்டு விழா 98-இல், மூன்று ஆண்டுகாலம் கழித்துத்தான் நடைபெற்றது. இப்படி ஆண்டுக் கணக்கிலேயே காலங்கடந்து விழாக்கள் நடைபெறும்போது, நாள் கணக்கிலேகூட காலம் கடக்கக் கூடாது, அதே நாளில் இந்த விழா நடைபெற வேண்டுமென்று அவருடைய குடும்பத்தார் கூட எண்ணியிருக்கமாட்டார்கள். அந்த இசைக் குடும்பத்தைச் சேர்ந்த நம்முடைய செயலாளர் இராமச்சந்திரன் அவர்கள் செய்திருப்பது பாராட்டுக் குரியது.

டி.என். இராஜரத்தினம் அவர்களை எல்லோரும் அறிந்ததைப்போல அல்ல, மிகவும் நெருங்கி அறிந்தவர் களிலே நான் ஒருவன். நம்முடைய செம்மங்குடி அவர்கள் இசைத்துறையிலே டி.என்.ஆர். அவர்களோடு கொண்டிருந்த நட்பு, உறவு, தொடர்பு இவைகளைப் பற்றியெல்லாம் இங்கே மிக விரிவாக எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அவர் நிகழ்ச்சிகளுக்கு வந்து சேருகிற வரையில் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருப்பவர் களுக்குச் சந்தேகம்தான் என்று குறிப்பிட்டார்கள்.

அரசியலிலே கூட எங்கள் தலைவர் அண்ணா அவர்கள் அப்படித்தான் நிகழ்ச்சிகளை ஏற்பாடு

செய்தவர்களைக் காக்க வைத்துவிடுவார். வருவாரா? வரமாட்டாரா? என்று நாங்கள் எல்லாம் எண்ணித் தவித்துக் கொண்டிருக்கும் போது, காலம் தாழ்ந்து வந்து சேருவார். சில நேரங்களில் வராமலே கூட இருந்து விடுவார். எப்படி அரசியலிலே அண்ணா அவர்கள் ஆரம்பக் காலத்தில் இருந்தார்களோ அதைப் போல இசைத் துறையிலே இராஜரத்தினம் அவர்களும் இருந்தார்கள் என்பதை நான் எண்ணி எண்ணிப் பார்த்து நண்பர்களிடத்திலே பேசியதுண்டு.

ஆனால் செம்மங்குடி அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல எத்தனைப் பேர் காத்திருந்து ஏமாந்திருந்தாலும் கூட அடுத்து வரும் நிகழ்ச்சியிலே வந்து ஒரு ஐந்து நிமிட நேரம் தன்னுடைய இசைத் திறமையைக் காட்டினால் அனைத்தையும் மறந்து விடுவதைப்போலத்தான் அண்ணா அவர்கள் ஒரு நிகழ்ச்சிக்கு வராமல் இருந்து அடுத்தொரு நிகழ்ச்சிக்கு வந்து ஒரு ஐந்து நிமிடம் பேசினால், அவர் வராமல் அவர் மீது ஏற்பட்டிருந்தக் கோபத்தை எல்லாம் அவருடைய தம்பிமார்கள் மறந்து விடுவார்கள்.

அந்த அண்ணா அவர்கள், டி.என். இராஜரத்தினம் அவர்களைப் பற்றி பாராட்டியதை நாங்கள் எல்லாம் செவி குளிரக் கேட்டு சிந்தை மகிழ்ந்திருக்கின்றோம். சென்னை மாநகரத்தில் எஸ்.எஸ்.பி. லிங்கம் என்கின்ற அண்ணா அவர்களுக்கு மிக நெருங்கிய நண்பர், எங்கள் இயக்கத்திலே பற்றுக் கொண்டவர். அவர் இல்லத்திலே நடைபெற்ற ஒரு காதணி விழா. அந்த விழாவில் இராஜரத்தினம் அவர்கள் நாயனம் வாசித்தார்கள். ஒருமணி நேரம்தான் வாசிக்கப் போகிறேன் என்று சொன்னார்கள், மூன்று மணி நேரத்திற்கு மேலாக

நிகழ்ச்சி நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியிலே அண்ணா அவர்கள் அந்தக் குழந்தைகளை வாழ்த்தி விட்டு டி.என்.ஆர். அவர்களுடைய நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிடும்போது சொன்னார்கள் –

> ‘‘மேல் நாட்டுக்காரர்கள் ஆர்க்கெஸ்ட்ரா ஒவ்வொரு வாத்தியங்களில் வாசிக்கும் பொழுது கேட்கின்ற அந்த இசை இன்பம் வேறு; அவை அனைத்தையும் ஒன்றாக சேர்த்து வாசிக்கும் பொழுது கேட்கின்ற இசை இன்பம் வேறு; அதைப்போல தொலைவிலே இருந்து கேட்டால் இராஜரத்தினம் வாசிப்பது சில நேரங்களில் குழலோசை போல இருக்கும். சில நேரங்களில் நாயனமாகத் தெரியும். சில நேரங்களில் ஆர்க்கெஸ்ட்ரா குழுவினுடைய இசையாகத் தெரியும். இந்தத் திறமை உலகத்திலே வேறு எந்த சங்கீத மேதைக்கும் கிடையாது, இராஜரத்தினம் ஒருவருக்குத்தான் உண்டு’’

என்று அண்ணா அவர்கள் அன்றைக்கு நிகழ்ச்சியிலே குறிப்பிட்டார்கள்.

அப்படி எல்லா வாத்திய ஒலிகளையும் ஒழுங்காக இணைத்து, மகிழத்தக்க அளவிற்கு, இரசிக்கத்தக்க அளவிற்கு வழங்கிய பெருமை இராஜரத்தினம் அவர்களுக்கு உண்டு. அவர்கள் ஒரு நடுத்தர சாதாரண குடும்பத்திலே பிறந்தார்கள். இசைக் குடும்பம் என்பது அந்தக் காலத்திலே சாதாரண எளிய குடும்பங்கள்தாம். பெரும் பணக்காரக் குடும்பங்கள் அல்ல. அது மாத்திரம் அல்ல. அந்தச் சமுதாயத்திற்குப் பெரிய மதிப்பு மரியாதை இவைகள் எல்லாம் கூட இல்லாத காலகட்டம்; மற்றவர்கள் பேசினால் தவறாகப்படும், நானே பேசுவதால் அது தவறாக இருக்காது என்பதால் நானே பேசுகின்றேன்.

எவ்வளவு பெரிய வித்வானாக இருந்தாலும் கூட சட்டை அணிந்து அவர்கள் நிகழ்ச்சியிலே கலந்து கொள்ள முடியாது. இன்னும் சொல்லப்போனால் மேல் துண்டு கூட அணிந்து நிகழ்ச்சிகளிலே கலந்து கொள்ள இயலாது. பெரிய நாயன வித்வான்களாக இருந்தாலும், தவில் வித்வான்களாக இருந்தாலும், யாராக இருந்தாலும் அவர்களெல்லாம் அந்தக் காலத்து வழக்கப்படி குடுமி வைத்துக் கொண்டுதான் இருக்க வேண்டும்.

இவைகள் அத்தனையையும் மாற்றி 'குடுமி வைத்துக் கொண்டால்தான் நாயனம் வாசிக்க முடியுமா? கிராப்பு வைத்துக் கொண்டு வாசிக்கிறேன் பார்' என்று கிராப்பு வைத்துக் கொண்டு நாயனம் வாசித்தார். சட்டை போட்டுக் கொண்டு நாயனம் வாசித்தால் ஏன் அந்த நாதம் நாயனத்தில் வராதா, ஆலாபனம் செய்ய முடியாதா? ஆடைகளில் தானா இருக்கிறது ஆலாபனம் என்று கேட்டு சட்டை போட்டுக் கொண்டு நாயனம் வாசித்தார். காலணிகூட அணிந்து கொள்ளக் கூடாது என்று இருந்த அந்தக் கால கட்டத்தில் அவர் கால்களில் பூட்ஸ்களே போட்டுக் கொண்டு நாயனம் வாசித்தார். அது மாத்திரம் அல்ல; மகாராஜாக்கள் தர்பாரிலே அவர் நாயனம் வாசிக்கிற போது மகாராஜாவைப் போலவே உடை அணிந்து அவர்களைப் போலவே தலைப்பாகை அணிந்து, அவர்களைப் போலவே ஷேர்வானி அணிந்து, உயர்ந்த அலங்கார ஆடைகளை அணிந்து அவர்களுக்கு நிகராக மேடையிலே அமர்ந்து வாசித்த பெருமை டி.என். இராஜரத்தினம் அவர்களுக்கே உண்டு என்பதை நான் மிகுந்த பெருமையோடும், பெருமிதத் தோடும் இங்கே கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக் கின்றேன்.

இந்த ஏற்றத் தாழ்வு எனக்கு எப்படித் தெரியும் என்றால், நானே ஒருமுறை மியூசிக் அகடாமியில் பேசும் போது குறிப்பிட்டிருக்கின்றேன். நம்முடைய பெரியவர் செம்மங்குடி அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல இளம் வயதில் நான்கூட பாடல் கற்றுக் கொண்டு அதைத் தொடர்ந்து நாயன வித்வானாக ஆக வேண்டுமென்று என்னுடைய தந்தையாரால் என்னுடைய உறவினர் வீட்டிலே ஒப்படைக்கப்பட்டேன்.

ஆனால் நான் அந்தப் பயிற்சியை ஒரு மூன்று மாத காலத்திற்குப் பின்பு தொடரவில்லை. திரும்பி வீட்டிற்கு வந்து இனி நான் இந்தப் பயிற்சி பெற முடியாது என்று சொன்னேன், திருக்குவளை கிராமத்தில். என் தந்தை ஆத்திரத்தோடு ஏன் என்று கேட்டார்? நான் சொன்னேன் ''எனக்குப் பயிற்சி கொடுக்கின்ற வித்வான் இந்த ஊரில் உங்களைப் போல இன்னொரு பெரிய வித்வான், அவர் இந்த ஊரிலே மடாலயத்திலே கார்வார் வேலை பார்க்கின்ற ஒருவர் தெருவிலே வந்தால் தன்னுடைய தோளிலே போட்டிருக்கின்ற துண்டை எடுத்து இடுப்பிலே கட்டிக் கொள்கின்றார். காலில் மாட்டி இருக்கின்ற செருப்பைக் கழற்றி வைத்துவிட்டு நின்று வணங்குகிறார். நானும் பெரிய வித்வானாக வந்தால் இதைத்தானே செய்ய வேண்டியிருக்கும், எனவே என்னால் இந்தப் பயிற்சியைத் தொடர முடியாது'' என்று கூறினேன். அதற்குப் பிறகுதான் என்னைத் திருவாரூருக்குப் படிப்பதற்கு அனுப்பி வைத்தார்கள்.

இல்லாவிட்டால் நானும் இன்றைக்கு நம்முடைய செம்மங்குடி அவர்களால் நல்ல சிறந்த நாயன வித்வான் என்கின்ற அந்தப் பாராட்டுரையைப் பெற்றிருக்க முடியுமோ என்னவோ எனக்குத் தெரியாது. இதை ஏன் சொல்கிறேன் என்றால் அப்படிப்பட்ட சுயமரியாதை

உணர்வு எனக்கு ஏற்பட்டது இளமைக் காலத்திலே. அந்த உணர்வுக்கு பட்டை தீட்டி அதைச் செயல்படுத்தி நடத்திக் காட்டி தன் வழியிலே மற்ற வித்வான்கள் இருக்க வேண்டும் என்று எல்லோரையும் அப்படி இருக்குமாறு செய்த அந்தப் பெருமை திருவாவடுதுறை டி.என். இராஜரத்தினம் அவர்களுக்கு உண்டு என்பதற்காகத் தான் இதைச் சொல்கிறேனேயல்லாமல் வேறல்ல.

அவர்கள் மகா வித்வானாக தமிழகத்திலே உலவிய அந்தக் காலகட்டத்திலேதான் இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார், பேராசிரியர் கல்கி, மூதறிஞர் இராஜாஜி, தந்தை பெரியார், திரு.வி.கல்யாண சுந்தரனார், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் எல்லாம் தமிழ் இசைக்குத் தமிழகத்திலே மதிப்புத் தர வேண்டும், தமிழ் இசையைப் பரப்ப வேண்டும் என்கின்ற ஒரு முடிவை எடுத்து அதற்கான பிரச்சாரத்திலே ஈடுபட்டார்கள்.

அந்தக் காலத்திலே அதற்கு மிக உதவியாக இருந்து உறுதுணையாக இருந்தவர்களில் மறைந்த எம்.கே. தியாகராஜ பாகவதர், தண்டபாணி தேசிகர், டி.என். இராஜரத்தினம் பிள்ளை இவர்களெல்லாம் தலை சிறந்தவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

டி.என்.ஆர். அவர்கள் பலமுறை சொல்லியிருக் கின்றார்கள். ‘‘ஒரு கச்சேரியில் ஒரு இசை நிகழ்ச்சியில் தமிழ்ப் பாட்டுப் பாடு என்று சொல்வதை விட்டுவிட்டு ‘ஒரு உருப்படி பாடு, ஒரு சில்லறை பாடு’ என்று சொல்கின்ற அளவிற்கு தமிழ்ப் பாட்டுக்களுடைய தமிழ்ச் சாகித்தியங்களுடைய தரம் தாழ்ந்து விடலாமா’’ என்று வேதனையோடு கேட்டவர் டி.என். இராஜரத்தினம் அவர்கள் ஆவார்கள்.

நாம் பல ஆண்டுகளுக்கு முன்பு பார்த்திருக்கிறோம், ஒரு கச்சேரியைக் கேட்டுவிட்டு வந்து மறுநாள் இந்த

கச்சேரியைப் பற்றி பேசுகின்ற பொழுது, நல்லா பாடுனாரு, கடைசில இரண்டு மூன்று உருப்படி பாடுனாரு, அதுவும் நல்லா இருந்தது என்பார்கள். 'உருப்படி' என்றால் என்ன? சலவைத் தொழிலாளிகள் இடத்திலே எண்ணிப் போடுகிறோமே அப்படி எண்ணிப் போடுகின்ற பொழுது அவர்களுக்கு எத்தனை உருப்படி போட்டோம் என்று பத்து உருப்படி போட்டேன். பத்து உருப்படி ஒழுங்காகக் கொண்டு வந்து கொடு என்று சலவைத் தொழிலாளியிடத்தில் சொல்கிறோமே அதுமாதிரி உருப்படி என்கின்ற பெயர்தான் தமிழ்ப்பாட்டிற்கு இருந்தது.

ஒருவேளை இதுதான் உருப்படியானது என்பதற்காகத்தான் தமிழ்ப் பாட்டிற்கு அந்தப் பெயர் அமைந்ததோ என்னவோ எனக்குத் தெரியாது. அன்றைக்கு அதைச் சீற்றத்தோடு எதிர்த்தவர் அதை திருத்தியே தீரவேண்டும் என்று கருதிச் செயல்பட்டவர் – அதை நடைமுறைப்படுத்தியவர் மறைந்த திருவாவடுதுறையார் என்பதை நான் எண்ணிப் பார்த்து பெருமை அடைகிறேன்.

ஒருமுறை அவரோடு சிதம்பரத்திலே இருந்து காஞ்சிபுரம் வரையிலே பயணம் செய்கின்ற பேறு எனக்குக் கிடைத்தது. சிதம்பரம் ஜெயராமன் அவர்கள் இசைச்சித்தர், என்னுடைய மைத்துனர் என்பதை நீங்கள் அறிவீர்கள். 1944–ஆம் ஆண்டு அவருடைய தங்கை பத்மாவதியை நான் மணந்தவன். 45–ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் அறிஞர் அண்ணா அவர்களும், பொன்னப்பா என்ற நண்பரும் சேர்ந்து இசை விழா நடத்தினார்கள். திராவிட இசை விழா என்று அந்த

நிகழ்ச்சிக்குப் பெயர். ஒரு பத்து நாள் அந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்ள டி.என்.ஆரும் அழைக்கப்பட்டிருந்தார். சி.எஸ்.ஜெயராமன் அவர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். நானும் அந்த நிகழ்ச்சிக்கு அவரோடு செல்ல நேரிட்டது. வழியெல்லாம் அவர்கள் இருவரும் பேசிய இசை பற்றிய அந்த விவாதங்களில் முழுமையாக என்னால் கலந்து கொள்ளக்கூடிய ஆற்றல் எனக்கு இல்லா விட்டாலும் கூட அதைக் கேட்டுக் கேட்டு நான் இன்புற்றேன்.

அந்த ஒரு நாள் பயணத்தில் காஞ்சிபுரம் வரையில் டி.என்.ஆர். அவர்களோடு செல்கின்ற அந்த வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அவர் சென்னைக்குக் குடி வந்தார்கள். சென்னையிலே அடையாறு பகுதியிலே குடியிருந்தபொழுது அடிக்கடி சந்திக்கின்ற வாய்ப்பு ஏற்பட்டது. இங்கே நம்முடைய பெரியவர்கள் எல்லாம் எடுத்துக் காட்டியதைப் போல சுதந்திர தின விழா அவர்களுடைய மங்கல இசையோடுதான் தொடங்கியது என்பதையும் அதைப் போலவே திருச்சியிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முதல் மாநில மாநாடு அவருடைய நாயன இசையுடன்தான் தொடங்கியது என்பதையும் எண்ணிப் பார்க்கின்றபோது நம்முடைய நல்லி குப்புசாமி எடுத்துக் காட்டியதைப் போல இந்த ஐம்பது ஆண்டுக்கால சுதந்திர நாட்டில் இரண்டு பெரிய நிகழ்ச்சிகளிலே டி.என்.ஆர். அவர்களுடைய நாயன இசை, தொடக்கத்திற்கு பயன் பட்டிருக்கின்றது என்பதை நம்மால் அறிய முடிகின்றது.

அவர்களுடைய பெயரால் 'இராஜரத்தினா' என்கின்ற விருது இன்றைக்கு முத்தமிழ் பேரவையிலே

ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றது. அவர்கள் மறைந்த ஆண்டில் நம்முடைய அன்பிற்குரிய சி. சுப்பிரமணியம் அவர்களுடைய தலைமையில் அவருடைய படத்திறப்பு விழா ஆர்.ஆர்.சபாவில் நடைபெற்றது. நான் அன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்றவன். அமைச்சராக இருந்தவர் சி. சுப்பிரமணியம் அவர்கள். அந்த விழாவிலே நான் அவரைக் கேட்டுக் கொண்டேன். விழா நடத்தியவர் களையும் கேட்டுக் கொண்டேன். பாரத ரத்னா விருது மேதைகளுக்கு வழங்கப்படுவதைப் போல, இசை மேதைகளுக்கு 'இராஜரத்தினா' விருது வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

ஆனால் என்னுடைய கோரிக்கை அப்பொழுது புறக்கணிக்கப்படவில்லை, ஆனால் செயல்படுத்தப்பட வில்லை. நானே முதலமைச்சராக வந்த பொழுதுதான் முத்தமிழ்ப்பேரவை சார்பாக இராஜரத்னா விருது சிறந்த இசை வேந்தர்களுக்கு வழங்குவது என்று முடிவெடுத்து அது வழங்கப்பட்டு வருகின்றது என்பதை நீங்களெல் லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

இப்பொழுதும் கூட முத்தமிழ்ப் பேரவைக்கான கட் டிடம் ஒன்று சென்னையிலே அமைய இருக்கின்றது. அந்தக் கட்டிடத்திற்கு ''இராஜரத்தினம் நினைவு மாளிகை'' என்று பெயர் சூட்டப்படும் என்று முத்தமிழ்ப் பேரவை விழா நிகழ்ச்சியிலே நான் குறிப்பிட்டு இருக்கின்றேன். அது நிறைவேற்றப்படும் என்பதையும் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன (பலத்த கைதட்டல்) என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய 'ஹம்ஸத்வனி'' செயலாளர் இராமச் சந்திரன் அவர்கள் ஒரு கோரிக்கை வைத்தார். தன்னுடைய வரவேற்பு முடிவுரையில் தரமணியிலே ஒரு 40 மனை அவர்களுக்குத் தரப்பட வேண்டும் என்று கேட்டார்கள். ஒரு வேளை அதற்குப் பெயரே தர மணி என்று இருப்பதால் தருவார்கள் என்று எண்ணிக் கொண்டு கேட்டார்களோ என்னவோ எனக்குத் தெரியாது.

தரமணி பகுதியிலே ஒதுக்கப்பட்டுள்ள நிலமெல்லாம் அரசின் சார்பிலோ கூட்டு முயற்சியிலோ நடத்தப்பட இருக்கின்ற பல தொழிற்சாலைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதைப்பற்றி நான் பரிசீலிக்கின்றேன். தொழிற்துறை செயலாளரிடத்திலும் மற்றும் தலைமைச் செயலாளரிடத்திலும் அதைப் பற்றி பரிசீலிக்கின்றேன். மேடையிலே உறுதி அளிக்க வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார். மேடையிலே அளிக்கக்கூடிய உறுதி நிச்சயமாகப் பரிசீலிப்பேன் என்கின்ற அந்த உறுதியைத்தான் அளிக்க முடியும். ஏனென்றால் என்னவென்று தெரியாமலே உறுதி அளித்து விட்டு பிறகு உறுதியை நிறைவேற்றாவிட்டால் சிலரது தேர்தல் நேரத்து வாக்குறுதியாக ஆகிவிடும் என்பதால் நான் அந்த உறுதியை அளிக்க இப்பொழுது துணியவில்லை.

நம்முடைய நண்பர் நல்லி குப்புசாமிச் செட்டியார் அவர்கள் ''இசைக்காக ஒரு பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார். இசைக்கென்று தனி பல்கலைக் கழகம் தேவையா? என்பது கேள்விக்குரியது. ஏனென்றால், இப்பொழுதே சில பல்கலைக்கழகங்களில் இசைக்காக தனித் துறைகள் இருக்கின்றன.

குறிப்பாக நம்முடைய எம்.ஏ.எம். அவர்கள் பொறுப்பேற்று நடத்துகின்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அங்கே இசைத்துறை ஒன்று இருக்கின்றது. அதிலே நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

அந்த இசைத்துறையில் ஏற்கனவே தண்டபாணி தேசிகர் அதற்குத் தலைவராக இருந்திருக்கிறார். சித்தூர் சுப்பிரமணியம் பிள்ளை தலைவராக இருந்திருக்கிறார். எம்.எல். வசந்தகுமாரி அவர்கள் அதற்குத் தலைவியாக இருந்திருக்கின்றார். சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் தலைவராக இருந்திருக்கின்றார். எனவே தொடர்ந்து அது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

ஒரு பல்கலைக் கழகம் அதற்குத் தனியாக இப்பொழுது தேவையா என்பதும் – அந்தப் பல்கலைக் கழகத்தை உருவாக்குகின்ற வசதி வாய்ப்புகள் ஒரு வேளை வழங்கப்பட்டாலும் கூட, அது எப்படி செயல் படும் என்பதெல்லாம் ஆராயத்தக்க ஒன்றாகும். இல்லை அமைத்துத்தான் தீரவேண்டும் என்றால் கொடை வள்ளல் நல்லி செட்டியார் அவர்கள் அவரே ஒரு பல்கலைக் கழகத்தை அமைத்தால் (கைதட்டல் – சிரிப்பு) அதனுடைய அடிக்கல் நாட்டுவிழாவிற்கும், தொடக்க விழாவிற்கும் நான் வரத் தயாராக இருக்கின்றேன் என்பதை இங்கே குறிப்பிட்டு, டி.என்.ஆர். அவர்களுடைய அருமை, பெருமைகளையும், அவருடைய நற்பண்புகளையும், அதே நேரத்தில் அவருடைய வாழ்க்கையின் இரு பக்கங்களையும் நம்முடைய செம்மங்குடி அவர்கள் இங்கே எடுத்துக்காட்டினார்கள்.

தமிழ்க்குடிமகன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். செம்மங்குடி அவர்களுக்கு 90 வயது. அவர்கள் ஒரு தந்தை நிலையில், பாட்டனார் நிலையில்

இருந்து இவைகளையெல்லாம் இங்கே எடுத்துக் கூற முடியும். எனக்கும் 75 வயது. இருந்தாலும்கூட என்னை விட இளையவர்களுக்கு எடுத்துக் கூறிக்கொண்டு தான் இருக்கின்றேன். இதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

டி.என்.ஆர். அவர்கள் இன்னும் பல ஆண்டுக் காலம் வாழ்ந்து மறைந்து இருக்க வேண்டியவர். 58-ஆம் வயதில் ஒரு மணி விழா கூட நடத்தாமல் அவர் மறைந்து போய் இருக்கின்றார் என்றால் என்ன காரணம்? அதேபோன்று கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள் எப்பொழுது மறைந்தார் என்று கருதுகின்றீர்கள்? – பொன்விழா கூட நடைபெறாமல் 49-ஆவது வயதிலேயே கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள் மறைந்தார்கள்.

இதற்கெல்லாம் என்ன காரணம்? என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நாம் இசையை வளர்க்கிறோம், மேதைகளாக இருக்கின்றோம், எல்லோரையும் மகிழ்விக்கின்றோம். ஆனால் அதற்கான வலிவை நம்முடைய உடலிலே தேடிக் கொள்ள வேண்டும். நம்மை நாமே அழித்துக் கொள்ளக் கூடாது. நம்மை நாமே அழித்துக் கொள்வது என்பது கலையை அழிப்பது, சமுதாயத்தை அழிப்பது, இந்த சமுதாயத்துக்குச் செய்ய வேண்டிய சேவையை நாமே குறைத்துக் கொள்கிறோம் என்பதை உணர்ந்தால் நம்மை நாமே அழித்துக் கொள்கின்ற காரியத்திலே யாரும் ஈடுபட மாட்டார்கள்.

அதுவும் குறிப்பாக இசை உலகத்தில் – அதிலும் குறிப்பாக நாயனக் கலைஞர்கள் அதிகம் சிரமப்பட்டு அந்த இசைப் பயிற்சியைப் பெற வேண்டி இருக்கின்றது. அதிகச் சிரமப்பட்டு அந்த இசை நிகழ்ச்சியிலே கலந்து கொள்ளவேண்டி இருக்கின்றது.

எனவே அவர்களுக்கு அந்த களைப்பு ஆற வேறு ஏதோ தேவைப்படுகின்றது. அதை டாக்டர்கள் சொல்படி ஒரு மருந்தாகப் பயன்படுத்த வேண்டுமே தவிர, அதை விருந்தாக பயன்படுத்தினால் (கைதட்டல்)இதே போன்ற முடிவுகளைத்தான் நாம் காணநேரிடும்.

நான் சொல்ல எண்ணிக் கொண்டிருந்தேன். சொல்லலாமா என்று யோசித்து உட்கார்ந்து இருந்தேன். ஆனால் எனக்குத் தைரியம் ஊட்டுகின்ற வகையில் நம்முடைய பெரியவர் செம்மங்குடி அவர்கள் அந்த அறிவுரையை இசை மேதைகளுக்கெல்லாம் வழங்கி இருக்கின்றார். இதை, வளர்ந்துகொண்டு இருக்கின்ற இசைவாணர்களும் இசைக் கலைஞர்களும், வளர்ந்து விட்ட இசைக் கலைஞர்களும் தங்களுக்காக அல்ல சமுதாயத்திற்காக, நாட்டிற்காகப் பின்பற்ற வேண்டும். இந்த வகையில் டி.என்.ஆர். அவர்களின் படம் நமக்கெல்லாம் ஒரு பாடமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாழ்க டி.என். இராஜரத்தினம் அவர்களின் புகழ் என்று கூறி விடைபெறுகிறேன்.

27-8-98 அன்று டி.என். இராஜரத்தினம் பிள்ளை நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை

24

மதுரை மத நல்லிணக்க மாநாடு

மத நல்லிணக்கம் காணவும், மாநில உரிமைகளை நியாயமாகப் பெறவும், தீண்டாமை என்னும் தீயை அணைக்கவும் ஐந்து கட்சிகளைக் கொண்ட செயல் வீரர்கள் ஓடி ஆடி உழைத்து, மிகச்சிறப்புற, ஏற்றமுற, எழுச்சியுற நடத்திக்கொண்டிருக்கின்ற இந்த மாநாட்டில் பல்லாயிரக் கணக்கில் குழுமியிருக்கின்ற உங்களை யெல்லாம் காணுகிற நல்ல வாய்ப்பு பெற்றமைக்காக மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். பெருமையடைகிறேன். ஐந்து கட்சிகள் இன்றைக்கு ஒரே மேடையில். ஐந்து கட்சிகள்தாமா? போதுமா? என்று யாராவது கேட்டால், அவர்களுக்கு நான் சொல்கிற பதில் கையிலிருப்பது ஐந்து விரல்கள்தாம்.(கைதட்டல்)

அந்த ஐந்து விரல்களையும் மடக்கினால் முஷ்டியாகும். முஷ்டி தீண்டாமையை, மதவெறியை, மாநில உரிமைகளைத் தடுக்கின்ற சக்திகளைக் குத்துகின்ற முஷ்டி. குத்தி வெற்றி பெறுகிற முஷ்டி. ஐந்து விரல்களும் மடங்கினால் முஷ்டியாகும். அடுத்தடுத்து கட்சிகள் வந்தால் பத்தானால் என்ன செய்வது? பத்து விரல்கள் இரண்டு குத்து. இந்த விபரீதங்களை

வீழ்த்துவதற்கு, தீண்டாமையை வீழ்த்துவதற்கு, மதவெறியை வீழ்த்துவதற்கு, மாநில உரிமைகளைப் பெறுவதற்கு அதற்கான தொடக்கமாக மதுரை மாநகரில் இந்த ஐந்து கட்சிகளுடைய மாநாடு இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

மத நல்லிணக்கத்தைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய அனைவரும் வெகு விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். மத ஒற்றுமையை வளர்க்கின்ற வகையில் Phool Walon Ki Sair என்று அழைக்கப்படுகின்ற பூக்காரர்களுடைய பேரணி ஒன்று ஆண்டுதோறும், புதுடெல்லியில் நடத்தப்பட்டு வருகின்றது. அந்தப் பேரணிக்குப் பெயர் அந்த மொழியில் சொல்ல வேண்டுமானால் பூல் வாலோன்கி சாயர். பூக்காரர் பேரணி ஒவ்வொரு ஆண்டும் புதுடெல்லியில் இப்போது நடத்தப்படுகின்றது. இந்த விழா மொகலாயர் காலத்திலிருந்து நடத்தப்பட்டு வருகின்ற விழாவாகும். டெல்லிக்கு அருகிலுள்ள மெஹருலி என்ற கிராமத்தில் நடத்தப்படும் சரித்திரப் பிரசித்திப் பெற்ற இந்த விழா இந்து முஸ்லிம் ஒற்றுமையைக் கருதியும், தேசிய ஒருமைப்பாடு மற்றும் மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையிலும், பேரரசர் அக்பர் அவர்களால் (கி.பி. 1556–1605) துவக்கி வைக்கப்பட்டது.

இந்த விழாவில் முஸ்லிம்களும், இந்துக்களும் சகோதர உணர்வுடன் தங்களுக்கிடையில் எந்தவித வேறுபாடுகளும் இல்லாமல், மத ஒற்றுமையுடனும் பெருமளவில் கலந்து கொள்வார்கள். இவ்வாறு மிக ஒற்றுமையோடு இந்துக்களும், முஸ்லிம்களும் கலந்து கொண்டு விழா எடுப்பதைக் குலைத்திடும் வகையில், வஞ்சக எண்ணத்தோடு 1942 –ஆம் ஆண்டு பிரித்தாளும்

சூழ்ச்சி கொண்ட ஆங்கிலேய அரசு அந்த விழாவையே தடை செய்தது. இந்துக்களும், முஸ்லிம்களும் ஒருசேர எடுத்த விழாவை 42–ஆம் ஆண்டு வெள்ளைக்கார சர்க்கார் தடை செய்தது.

அதற்குப் பிறகு சுதந்திரம் பெற்றதும் 1961–ஆம் ஆண்டு பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்து முஸ்லிம் ஒற்றமையினை மென்மேலும் வளர்க்கக் கருதி தடைசெய்யப்பட்ட அந்தப் பூக்காரர் பேரணிக்குப் புத்துயிர் ஊட்டினார்.

இந்துக்களும், முஸ்லிம்களும் அவரவர்களது மத உணர்வைப் பேணி, அவரவர் மத உணர்வுகளுடனேயே ஒற்றுமையாக இணைந்து கொண்டாடும் ஒரே விழா இந்த மலர்ப் பேரணி விழாவாகும்.

பழம் பெருமை மாறாமல், அதன் மரபுகள், முறைகள் அப்படியே இன்றைக்கும் அந்த விழாவிலே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

விழா நாளன்று இந்துக்களும், முஸ்லிம்களும் – முஸ்லிம்கள் தர்க்காவிலிருந்தும்; இந்துக்கள் காளி கோவிலில் இருந்தும் அணி வகுத்து ஒன்றாகச் சென்று இறைவனைப் பிரார்த்தித்து நலம் வேண்டுவார்கள்.

இந்து முஸ்லிம் இணைந்து செல்லும் இந்தப் பேரணியின் முன்னால் வனப்பு மிக்க வெல்வெட்டால் அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த வண்ணப் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட பெரிய விசிறிகள் (பங்கா) எழிலோடு எடுத்துச் செல்லப்படும்.

இதைத் தொடர்ந்து கலைக்குழுவினரின் கலை நிகழ்ச்சிகள் நடத்தியபடியே செல்வார்கள்.

இந்த மலர் விசிறிகள் புதுடெல்லி மெஹ்ரூலியில் உள்ள அக்பர் காலத்திய முகலாயக் கோட்டைக்கு எடுத்து வரப்படுகின்றன.

ஆண்டுதோறும் நடைபெறும் இந்த விழாவிற்கு இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் தங்கள் பங்காக்களையும், அதற்குரிய விசிறிகளையும் கலைக் குழுக்களையும் அனுப்பி பங்கேற்கச் செய்கின்றார்கள். ஒரு வார காலம் நடைபெறும் இந்த விழாவில் இறுதி நாளன்று கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

1961–ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு பங்காக்கள் மற்றும் கலைக்குழுக்களை அனுப்பி, இந்த விழாவிலே பங்கேற்கச் செய்கின்றது. சிறப்பாக வடிவமைக்கப்பட்ட பங்காவுக்கும் கலை நிகழ்ச்சிக்கு மென பெரும்பாலான ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்குப் பரிசுகள் கிடைத்திருக்கின்றன.

கடந்த ஆண்டுகூட இந்தப் பூக்காரர் பேரணியில், இரண்டு பங்காக்கள் எடுத்துச் செல்லப்பட்டு – அதிலும் குறிப்பாக மதுரையைச் சேர்ந்த டாக்டர் சோமசுந்தரம் குழுவினரின் கலை நிகழ்ச்சியும் நிகழ்த்தப்பட்டது.

இந்தக் கலை நிகழ்ச்சிக்கு மதுரை சோமசுந்தரத்திற்கு முதல் பரிசும், அந்தக் கலைக்குழுவை அனுப்பியதற்காக முதலமைச்சர் என்ற முறையிலே எனக்கு டெல்லி மாநில ஆளுநர் மற்றும் முதலமைச்சர் பாராட்டுக் கடிதமும் கிடைத்தது.

இந்த ஆண்டும் அக்டோபர் 11–ஆம் நாள் பூக்காரர் பேரணி புதுடெல்லியில் நடைபெற உள்ளது. இந்த விழாவிலே கலந்து கொள்ள இந்த ஆண்டும் கலைக்குழுவை அனுப்ப கோரிக்கை அனுப்பி நமக்கு அங்கிருந்து செய்தி வந்துள்ளது. அந்தக் கோரிக்கையை ஏற்று அந்தக் கலைக்குழுவை அங்கே அனுப்பவும் இந்துக்களும், முஸ்லிம்களும் ஒன்றாகச் சேர்ந்து அந்தப் பூக்காரர் பேரணியை நடத்தவும், அதற்கென்று தமிழக அரசின் சார்பாக 55 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு இருக்கிறது என்பதையும் நான் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதை இங்கே தெரிவிப்பதன் காரணம் அக்பர் காலத்திலேயே இந்துக்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையாக இருந்திட வேண்டும் என்கின்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு, அதற்காக இந்தப் பூக்கார விழா ஏற்பாடு செய்யப்பட்டு, அது இடைக்காலத்தில் வெள்ளைக்கார சர்க்காரால் தடை செய்யப்பட்டு, நேரு பெருமான் இந்தியாவின் பிரதமர் பொறுப்பை ஏற்றிருந்த காலத்தில், 61–ஆம் ஆண்டு முதல் மேலும் தொடர்ந்து நடத்தப்பெற்று, இப்பொழுதும் நடைபெற்று வருகின்ற விழாவாகும்.

ஆனால், டெல்லியில் மாத்திரம் இந்த விழா நடத்தப் படுகின்றது. இந்தப் பூக்காரர் விழாவை ஒவ்வொரு மாநிலத்தின் தலைநகரத்திலும் நடத்தவேண்டும். தமிழ்நாட்டில் சென்னைத் தலைநகரத்திலே மாத்திரமல்ல, மதுரை நகரத்திலும், திருச்சியிலும் நடத்தவேண்டும். இப்படி இந்துக்களும், முஸ்லிம்களும் மதவேற்றுமை இல்லாமல் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தவர்கள் என்றாலும், மன ஒற்றுமையுடன் பழகுகிற அந்த உணர்வு வளர்ந்திட வேண்டும்.

இன்றைக்குக் கூட பத்திரிகைகளில் செய்தி பார்த்தேன். நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் நல்லக்கண்ணு குறிப்பிட்டதைப் போல, விநாயகர் சதுர்த்தி விக்னேஸ்வரர் ஊர்வலம் பல இடங்களில் நடைபெற்ற நேரத்தில் நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள். காயல்பட்டினம் –அது முஸ்லிம்கள் மாத்திரமே வாழ்கின்ற நகரம். நான் பலமுறை அந்த ஊருக்குச் சென்றிருக்கிறேன். பல்லாயிரக்கணக்கான முஸ்லிம் பெருமக்கள் அங்கு வாழ்கின்றார்கள். அந்தப் பகுதியில் இன்றைக்கு விநாயகர் ஊர்வலம் சென்றபோது, முஸ்லிம் பெருமக்களும், தாய்மார்களும், பெரியோர்களும் அந்த ஊர்வலத்தை வரவேற்று மாலை மரியாதை செய்து தங்களது ஆதரவை, வரவேற்பை வெளிப்படுத்தி யிருக்கிறார்கள்.

காயல்பட்டினத்தில் மாத்திரம்ல்ல. பழனியிலே அந்த விநாயகர் ஊர்வலத்தில் முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்திருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், கோவையை அடுத்துள்ள பல்லடத்தில் இந்த விநாயகர் ஊர்வலம் வந்தபோது, அந்தப்பகுதியில் உள்ள கிறிஸ்துவப் பெருமக்கள், இஸ்லாமியப் பெருமக்கள், பெரியவர்கள், இளைஞர்கள் இவர்கள் எல்லாம் கூடி நின்று அந்த ஊர்வலத்தை வரவேற்று, வந்தவர்களோடு நல்ல முறையிலே பழகி, பாராட்டி மகிழ்ந்து களித்திருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது.

இது சிலருக்கு கடவுளை வணங்கினார்களா? அந்த மதத்தின் கடவுளை வணங்கினார்களா? என்ற கேள்வி எல்லாம் எழுப்பக்கூடும். இரு மதத்தாரும் ஒரு கடவுளை வணங்கினார்கள் என்று அதை கருணாநிதி வரவேற்றுப் பேசலாமா என்று கேட்கக்கூடும்.

நான் நாத்திகன், ஆத்திகன் என்பதை இரண்டாவதாக வைத்து – நாத்திகரோ, ஆத்திகரோ அவர்கள் இருவரும் ஒன்றாக இருக்கிறார்களே என்பதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். விநாயகர் சதுர்த்தியை இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் வரவேற்று மகிழ்வதும், அதைப்போலவே அடுத்து ஒருநாள் இஸ்லாமியப் பண்டிகையில் இந்துக்கள் கலந்துகொள்கிற நிலைமை ஏற்படுவதும், முன்னுக்குப் பின் முரண் என்று யாராலும் கூற முடியாது.

நாம் இங்கு பேசிக்கொண்டிருக்கிறோமே மத நல்லிணக்கம். அந்த நல்லிணக்கத்திற்கு ஏற்ற ஒரு வழி அது என்பதை இங்கே எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மத நல்லிணக்கம் இன்று நேற்றல்ல, எத்தனையோ வேறுபாடுகளுக்கிடையே எப்படியெல்லாம் வளர்ந்து வலுப்பெற்றது என்பதை திரு.வி.க. அவர்கள்

இளைஞர்களுக்கு... என்று எழுதிய ஒரு கட்டுரையிலே குறிப்பிடுகிறார்.

அவர் சொல்கிறார்: ''தமிழன் யார்? தொன்று தொட்டுத் தமிழைத் தாய்மொழியாக் கொண்டவரும், தமிழ்நாட்டில் குடியேறி நிலைத்து வாழ்வு பெற்றவரும் தமிழராவர் என்று கூறலாம். இவருள் சைவரிருக்கலாம்; வைணவரிருக்கலாம்; அருகரிருக்கலாம்; (அருகர் என்றால் சமணர்), புத்தரிருக்கலாம்; ஆத்திகரிருக்கலாம்; நாத்திகரிருக்கலாம். இவரனைவரும் தமிழர் என்பதை மட்டும் மறத்தலாகாது. ஈண்டுச் சங்கத்தார் காலநிலை நினைவிற்கு வருகிறது. அவர் அனைவரும் ஒரு கொள்கையுடையவரல்லர். அதாவது சங்கத் தமிழ்க்காலம், அந்த சங்ககாலம் நினைவுக்கு வருகிறது. சங்க காலத்திலே உள்ள அனைவரும் ஒரே கொள்கை உடையவர் அல்லர். அவருள் சைவர், வைணவர், அருகர், புத்தர், முதலியோர் இருந்தனர். அவரனைவரும் சகோதர நேயத்துடன் வாழ்ந்து போயினர். காரணமென்ன? அவர்தம் கருத்து, சமய வேற்றுமை மீதும், பிற வேற்றுமை மீதும், சென்றதில்லை. அவர் தம்மைத் தமிழர் – சகோதரர் – என்று எண்ணி, ஒருமையுள்ளங் கொண்டு, தமிழ்த் தாய்க்குச் சேவை செய்தனர். சேரன் செங்குட்டுவன், இளங்கோ அடிகள், சீத்தலைச் சாத்தனார் இவர் மூவரும் ஒரு சமயக் கொள்கையுடையவரா? இல்லை. ஒருவர் சைவர்;மற்றவர் அருகர்; இன்னொருவர் புத்தர்; இவர்களுக்குள் எத்தகைய ஆன்மநேய ஒருமைப்பாடு நிலைத்திருந்தது!

தமிழ் மாணாக்கர்களே! சிந்தியுங்கள். சேரன் செங்குட்டுவனும், இளங்கோவடிகளும், ஒரே தாயின் வயிற்றில் பிறந்த சேய்கள். ஆனால் அவர்கள் வெவ் வேறு சமய கொள்கையுடையவர்களாக வாழ்ந்தனர். அவரிடையே வெறி, பகை, பூசல் இருந்தனவா?

ஆன்ம நேயமன்றோ ஊடுருவியிருந்தது? உண்மைத் தமிழன்புக்கு முன், சிறு சிறு வேற்றுமைகளெல்லாம் ஞாயிறு முற்பட்ட பனிப்படலம் போலாகும். அவரைப் போல ஏன் இக்காலத் தமிழர் வாழ்தலாகாது?'' என்று இன்று இக்காலத் தமிழர்களைப் பார்த்துக் கேட்கின்றார். சங்க காலத்தில் இருந்து எவ்வளவோ வேற்றுமைகளுக் கிடையே இருந்து ஒற்றுமையோடு தமிழர்கள் வாழ்ந்தார்களே! அந்த வாழ்க்கையை இன்று எப்படி வாழ மறந்தார்கள்? என்று தமிழ்த் தென்றல் திரு.வி.க. கேட்கிறார்.

அவர் கேட்டு பல ஆண்டு காலமாகி விட்டது. ஆனால் இன்னமும் நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த மேடையிலே நானும் மற்றும் நான்கு இயக்கங்களுடைய தலைவர்களும் இதைத்தான் இன்றைக்குக் கேட்கிறோம். இன்னமும் கிராமப்புறங்களில் தீண்டாமை தலைவிரித்தாடுகிறதே! இது நியாயம்தானா? என்று கேட் கிறோம். நாகரிகத்தின் வளர்ச்சிப் பகுதிகள் என்று குறிப்பிடுகிற நகர்ப்புறங்களில்கூட தீண்டாமை இன்னும் தீர்ந்தபாடில்லையே என்ன காரணம்? என்று காரணத்தை அறிய விரும்புகிறோம். அதை வீழ்த்து வதற்கு நாம் எடுக்கின்ற முயற்சிதான் இந்த மாநாடு. மதுரையில் ஒரு மாநாடு நடத்தி விட்டால் மத நல்லிணக்கம் வந்து விடுமா? தீண்டாமை ஒழிந்துவிடுமா? மாநில அதிகாரங்கள் குவிந்துவிடுமா? என்று யாராவது கேட்பார்களானால் அதற்காகத் தொடங்காமலே இருந்துவிடலாமா என்ற கேள்வியைத்தான் நாம் கேட்க வேண்டும் . நாம் தொடங்குவோம் தொய்வு ஏற்படாமல் தொடங்குவோம் அதைத்தான் என்னுடைய அருமை நண்பர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் சங்கரய்யா இங்கே பேசும்போது குறிப்பிட்டார்.

''நான் கருணாநிதியைச் சந்தித்துப் பேசினேன், திரு. மூப்பனாரைச் சந்தித்துப் பேசினேன். அவர்கள்

எல்லாம் இணக்கமாக இருக்கிறார்கள்'' என்று சங்கரய்யா குறிப்பிட்டார். ''எல்லோரும் சேர்ந்து இந்த பிரச்சினையில் வெற்றி காண உங்கள் கொள்கையிலே வெற்றிகாண, பயணம் போவோம்'' என்று குறிப்பிட் டார்கள். அந்தப் பயணத்திற்கு தி.மு.கழகமும் தயாராக இருக்கிறது என்பதை நான் இங்கே உறுதிபட எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

அவரே இங்கே எடுத்துச் சொன்னதைப் போல தி.மு.கழகம் என்கின்ற இந்த இயக்கம் திராவிட இயக்கத்தினுடைய ஒரு கூறு. தந்தை பெரியார் அவர்கள் சாதியை வீழ்த்த, மதவெறியை மாய்க்க போர்க்கோலம் பூண்டவர். அணுகுமுறையில் மாத்திரம் சிறு மாற்றங் களைச் செய்து கொண்டு எங்கள் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் எங்களை வழி நடத்தியவர். எனவே எங்களைப் பற்றி இந்தப் பிரச்சினையிலே உள்ள கொள்கை உறுதியைப் பற்றி சங்கரய்யா அவர்களா னாலும், நம்முடைய நல்லக்கண்ணு அவர்களானாலும், நம்முடைய வடிவேலு அவர்களானாலும், திரு. மூப்பனார் அவர்களானாலும் மிக நன்றாக அறிவார்கள். எனவே உறுதியோடு நடைபோட உங்களோடு வரத் தயாராக இருக்கிறோம்.

மத நல்லிணக்க மாநாட்டோடு இணைக்கப் பட்டுள்ள மாநிலங்களுக்கு உரிமைகளைப் பற்றியும் மிகக் கடுமையாக வீராவேசமாக நம்முடைய தோழர் சங்கரய்யா அவர்கள் இங்கே முரசு கொட்டியிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி கலைக்கப்பட்டு விடும் என்றெல்லாம் பயமுறுத்தப் படுகின்ற நேரத்திலே எழும்புகின்ற கோஷமல்ல – மாநில சுயாட்சிக் கோஷம்.

நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் மறைந்து, 1969–ஆம்

ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில் சில வாரங்களுக்கெல்லாம் டெல்லிக்குச் சென்றேன். டெல்லியில் 69 மார்ச் திங்கள் 17–ஆம் தேதி – ஐம்பதுக்கு மேற்பட்ட இந்திய மாநிலங்களிலே உள்ள பல்வேறு பத்திரிகை செய்தியாளர்கள் – என்னைச் சந்தித்து உங்களுடைய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடிச் சொல்வார்களே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் – அதைப்பற்றி என்ன செய்யவிருக்கிறீர்கள் என்று கேட்டபோது – நான் அவர்களுக்கு அளித்த பதில்தான் – ''மைய – மாநில உறவுகள் குறித்து ஆராய்ந்து மைய அரசிலிருந்து மாநிலங்களுக்கு மாற்றப்படக் கூடிய அதிகாரங்களைப் பரிந்துரைப்பதற் காக நிபுணர் குழு ஒன்றினை அமைப்பது பற்றி நான் ஆலோசித்து வருகிறேன்'' என்று குறிப்பிட்டேன்.

குறிப்பிட்டது மாத்திரமல்ல; டெல்லியிலிருந்து திரும்பியவுடன் 1969 ஆகஸ்ட் 19–ஆம் நாள் டாக்டர் பி.வி.ராஜமன்னார் அவர்களைத் தலைவராகவும், டாக்டர் லெட்சுமணசாமி முதலியார் அவர்களையும், சந்திரா ரெட்டி அவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட மூவர் குழு ஒன்றை அரசின் சார்பில் அமைத்தேன்.

அந்தக் குழுதான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும், என்னென்ன வகையிலே அளிக்கப்பட வேண்டும் என்பதை ஆராய்ந்து ஒரு நீண்ட அறிக்கையைத் தந்தது. அந்த அறிக்கையை முரசொலிமாறன், இரா. செழியன் இருவர் தலைமையிலே இயங்கிய குழு ஆராய்ந்து அதை அமைச்சரவையிலே வைத்து விவாதித்து 1974–ஆம் ஆண்டு தமிழகச் சட்டப் பேரவையிலே மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும், மாநில சுயாட்சி வேண்டும், 356–வது பிரிவு,

அறவே அகற்றப்பட வேண்டும் அரசியல் சட்டத் திலிருந்து; என்ற இந்தத் தீர்மானத்தை முன் மொழிந்த போது அதை ஆதரித்த கட்சி அன்றைக்கு சட்டப் பேரவையிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்வேன்.

இதிலே ஒரு வரலாற்று உண்மையை யாரும் மறந்துவிடக் கூடாது. இந்திய சுதந்திரத்திற்கு முன்பே தோழர் ரணதிவே தலைமையிலே நடைபெற்ற – அன்றைக்கு கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றாக இருந்த அந்தக் காலக் கட்டத்திலே – இந்திய கம்யூனிஸ்ட் கட்சி – மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும். மாநில சுயாட்சி வேண்டும் என்பதை வலியுறுத்தி தீர்மானத்தை நிறைவேற்றிய கட்சிதான்.

அது மாத்திரமல்ல; இந்திய சுதந்திரத்திற்கு முன்பு அகில இந்திய காங்கிரஸ் கட்சி கூட – நேரு பெருமான் தலைமையிலே இருந்த காங்கிரஸ் கட்சி மாநில சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென்ற கொள்கையை ஒத்துக் கொண்ட கட்சிதான்.

அதற்குப் பிறகு சில மாற்றங்கள் காங்கிரஸ் கட்சி யில் ஏற்பட்டு விட்டன. எனவே மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தருகின்ற அந்தக் கொள்கையிலே தளர்ச்சி ஏற்பட்டது. ஆனால் அன்று முதல் இன்று வரை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் திராவிட முன்னேற்றக் கழகமும் இன்றைக்குத் தமிழகத்திலே உருவாகி வளர்ந்து வருகிற – வளர்ந்து வந்திருக்கின்ற நம்முடைய மூப்பனார் தலைமையிலே உள்ள தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், ஜனதா தளமும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற இயக்கங்களாகும்.

74-ஆம் ஆண்டு தமிழகச் சட்டப் பேரவையிலே இராஜமன்னார் குழு தந்த அறிக்கையின் அடிப்படையில் ஒரு தீர்மானத்தை நான் முன்மொழிந்து சட்டப் பேரவையிலே அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானம் இதுதான்:–

''மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் பற்றியும் தமிழ்நாடு அரசின் கருத்துரைகளையும், இராஜமன்னார் குழுவின் அறிக்கையையும் இப்பேரவை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு, பல்வேறு மொழி, நாகரீகம், பண்பாடு ஆகியவைகளைக் கொண்ட இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிக்காக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட மாநில ஆட்சிகள் தடையின்றிச் செயல்படவும், மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துக்களை மத்திய அரசு ஏற்று – மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும் என்று இப்பேரவை முடிவு செய்கிறது'' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன் என்று 16.4.74 அன்று சட்டப் பேரவையிலே என்னால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அன்றைய இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

அதற்கு முன்பே இராஜமன்னார் குழுவின் அறிக்கையை பிரதமர் இந்திரா காந்திக்கு 71–ஆம் ஆண்டு நான் அனுப்பி வைத்தபோது, அதைப் பெற்றுக்

கொண்ட பிரதமர் இந்திரா காந்தி 1971–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 22–ந் தேதி எனக்கு எழுதிய கடிதத்தில் –

Dear Thiru Karunanidhi,

I have received your letter of the 15th June with which you have sent me a copy of the report of the Centre-State Relations Inquiry Committee. Your Government will probably examine the recommendations of this report. As you know the Administrative Reforms Commission also went into the questions and has already submitted a report which is under our consideration. If the views of your Government on this matter are made available to us, they will also be taken into account. These are important issue and we intend to consult all the Chief Ministers.

With regards,

Yours Sincerely,

(Sd.) INDIRA GANDHI.

அன்புள்ள திரு. கருணாநிதி,

நீங்கள் சூன் 15–ந்தேதி அனுப்பிய கடிதம் கிடைத்தது. மத்திய மாநில உறவுகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை யின் நகல் ஒன்றைக் கடிதத்துடன் அனுப்பியுள்ளீர்கள். அறிக்கையின் பரிந்துரைகளை உங்களது அரசாங்கம் ஆய்வு செய்யுமென்று எண்ணுகிறேன். நிர்வாக சீரமைப்புக் குழுவும் இப்பிரச்சினை பற்றி ஆய்ந்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். அக்குழு அளித்துள்ள அறிக்கை எங்களது ஆய்வில் உள்ளது. இது குறித்து உங்கள் அரசின் கருத்துக்களையும் அனுப்பி வைத்தால் அவற்றையும் சேர்த்து ஆய்வுக்கு எடுத்துக் கொள்வோம். இவை முக்கியமான பிரச்சினைகள் என்பதால் எல்லா

முதலமைச்சர்களுடன் இதுகுறித்து கலந்து ஆய்வு செய்ய எண்ணியுள்ளோம்.

தங்கள் அன்புள்ள,

(ஒம்) இந்திரா காந்தி.

என்று 71–ஆம் ஆண்டு எனக்கு பதில் அனுப்பினார்கள்.

ஆனால் அதற்குப் பிறகு சர்காரியா கமிஷன் குழு என்று மத்திய மாநில உறவுகளைப் பற்றி ஆராய்ந்திட ஒரு குழுதான் போடப்பட்டதே தவிர, அரசியல் சட்டத்திலே ஒரு புதிய மாற்றத்தைக் கொண்டு வந்து மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை அளிக்க வேண்டுமென்ற அந்தக் கொள்கையை நிறைவேற்ற இன்னமும் இடையிலே வந்த மத்திய அரசுகளும் சரி, இன்றைக்கு இருக்கின்ற மத்திய அரசும் சரி முன்வர வில்லை என்பதுதான் நம்முடைய ஆதங்கம்.

அந்தக் காரணத்தினால்தான் இங்கே மத நல்லிணக்கம், தீண்டாமை ஒழிப்பு என்ற தீர்மானங்களோடு மிக முக்கியமான மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற கருத்தமைந்த – மாநில சுயாட்சி என்கின்ற பெயரில் இல்லாவிட்டாலும் அந்தக் கருத்து அமைந்த தீர்மானத்தை இங்கே நிறைவேற்றி இருக்கிறோம்.

மாநிலங்கள் இன்றைக்கு எப்படி இருக்கின்றன என்பதைப் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

> ‘‘நமக்கிருக்கிற கவலை எல்லாம் தூக்கமுடியாத பாரத்தை மத்திய ஆட்சியினர் விரும்புகிறார்களே என்பதுதான்.

மத்திய அரசின் வலிவு என்பது மாநிலங்கள் ஒவ்வொன்றின் தனித்தனி வலிவையும் கூட்டியதால் ஏற்பட்ட மொத்த வலிவுதான் என்றால் வாதத்திற்கு ஏற்றது, அரசியலுக்கு நல்லது, காரியத்திற்கும் உகந்தது.

ஆனால் மத்திய அரசுதான் எல்லா உரிமைகளையும், பலத்தையும் வைத்திருக்கும், மாநிலங்கள் தத்தி தத்தி நடக்கும் அதிகாரம்தான் வைத்திருக்கும் என்றால் அது எதற்கும் பொருத்தமுடையதல்ல.

மாநில அதிகாரங்களை எல்லாம் எடுத்து மத்திய அரசு குவித்து வைத்துக் கொள்வதால் மாநிலங்கள் பலகீனமடையும் என்பது மட்டுமல்ல, மத்திய அரசுக்கென்று புதிய வலிவு ஏதும் ஏற்பட்டு விடாது.

நாட்டுப் பாதுகாப்பு தவிர மற்ற அதிகாரங்கள் அனைத்தையும் பற்றிச் சிந்திப்போம். மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்களை மாநிலங்கள் எடுத்துக் கொள்ளட்டும்.

பின்னர் மாநிலங்கள் விரும்பித் தருகின்ற மீதியுள்ள அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொள்ளட்டும்.

மக்களின் சுகதுக்கத்தோடு பின்னிப் பிணைந்திருப்பது மாநில அரசுதானே தவிர மத்திய அரசு அல்ல. ஆகவே வலிவான மத்திய அரசுதான் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும் என்பது தவறு. மாநில சுயாட்சி தரத் தயக்கம் காட்டுவார்களேயானால் அளவுக்கு மீறிய அதிகாரங்களைத் தாங்கித் தாங்கிப் பாதுகாப்புப் போன்ற பெரிய விஷயங்களில் சோடை போய் விடுவார்களோ என்பதுதான் எங்கள் சந்தேகம்.

மேல் அதிகாரம் அனைத்தும் டில்லியில் இருப்பதை மாற்றிடத்தான் மாநில சுயாட்சித் தத்துவம் பிறந்துள்ளது.''

என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அந்த அடிப்படையிலேதான் திராவிட முன்னேற்றக் கழகம் நடைபோடுகின்றது. அதற்கேற்ற வகையில்தான் இங்கே இந்த மாநாட்டில் ஒரு அருமையான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

அதிலே ஆட்சிகளை நினைத்த போதெல்லாம் கலைக்கலாம் என்று மத்திய அரசு கொடுவாளைத் தூக்கிக் கொண்டிருப்பதை இனியும் அனுமதிக்க முடியாது. இந்த ஆட்சிக் கலைப்புக்கு இருமுறை பலியானவர்கள் நாம். இந்த ஆட்சிக் கலைப்புக்கு முதன் முதலில் பலியானது கம்யூனிஸ்ட் கட்சி, கேரளாவில். இதுவரையில் 90க்கு மேற்பட்ட தடவை இந்த 356–வது அரசியல் சட்டப் பிரிவை வைத்து மாநில அரசுகள் கலைக்கப்பட்டிருக்கின்றன. எப்படியாவது சதம் அடித்து விடவேண்டுமென்று பார்க்கிறார்கள். அதற்கு இனி இடம் தரமாட்டோம் என்ற உறுதியை நாம் எடுத்துக் கொண்டாக வேண்டும்.

அதைப் போல 355–வது பிரிவை இஷ்டத்திற்கு பயன்படுத்த எண்ணுகிறார்கள். திடீர் திடீரென்று மாநிலங்கள் சரியாக இருக்கிறதா, சட்டம் ஒழுங்கு செம்மையாக இருக்கிறதா, என்று அறிய வேண்டுமென்று கூறி அதற்காக ஒரு குழுவை அனுப்புகிறார்கள். சரி, மாநிலங்களில் சட்டம் ஒழுங்கு சரியாக இருக்கிறதா என்பதைப் பார்க்க மத்திய அரசு குழுவை அனுப்புகிறது. மத்தியில் சட்டம் – ஒழுங்கு சரியாக இருக்கிறதா என்று பார்க்க ஒரு குழுவை யார் அனுப்புவது? இந்தக் கேள்விக்குப் பதிலளிக்க வேண்டாமா?

எனவே மாநிலத்தில் சரியாக ஆட்சி நடை பெறுகிறதா என்று பார்த்துக்கொள்கிற பொறுப்பும் மாற்றுகிற பொறுப்பும் மக்கள் மன்றத்திற்கு உண்டே தவிர மத்தியிலே உள்ள ஆட்சிக்குக் கிடையாது என்பதை திட்டவட்டமாகத் தெரிவிக்கின்ற மாநாடு தான் இந்த மாநாடு.

மாநிலங்களில் உள்ளவர்கள்தான் குற்றம் செய்பவர்களாக இருப்பார்கள், மத்தியிலே இருப்பவர்கள் எல்லாம் சுத்த சுயம்பிரகாசங்கள் என்று எண்ணுகின்ற நிலைமையிலிருந்து ஒரு மாற்றம் ஏற்பட்டாக வேண்டும். அதை இந்தத் தீர்மானம் இங்கே வலியுறுத்திச் சொல்கிறது.

கண்டவர்கள் எல்லாம் சொல்வார்கள் அதற்காக மாநில அரசைக் கலைக்கிறேன், கலைக்கிறேன் என்று அவர்களுக்கு ஆறுதல், எங்களுக்கு மிரட்டல் என்றால் இதை நாங்கள் தாங்கிக் கொண்டிருக்க முடியாது. ஆட்சிக்கு வந்தவுடன் நிலையான ஆட்சி என்று அறிவித்து மத்தியிலே இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்தவுடன் நடைபெறுகின்ற ஆட்சி நிலையான ஆட்சியா? ஒவ்வொரு நாளும் நிலை தடுமாறுகின்ற ஆட்சி. இந்த ஆட்சி நிலையான ஆட்சி என்ற பெயரோடு வந்தது. இன்றைக்கு இந்த ஆட்சிக்கு கிடைத்திருக்கின்ற பெயர் நிர்ப்பந்தங்களுக்குப் பணிகின்ற ஆட்சி என்பதுதான் இன்றைக்கு இருக்கின்ற மத்திய ஆட்சிக்கு கிடைத்துள்ள பெயர்.

எலியும் தவளையும் காலைக் கட்டிக் கொண்டு உறவாடிய கதையைப் படித்திருப்பீர்கள். அந்தக் கதை இன்றைக்கு மத்தியிலே கூட்டணிக் கட்சி ஆட்சியிலே

நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நாம் ஜாக்கிரதையாக – எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மத வெறிக்கு மக்கள் பலியாகாமல் காப்பாற்றவும், மாநில உரிமைகளை அழிப்பதற்கு மத்திய அரசு கொடுவாளைத் தூக்காமல் தடுக்கவும், தீண்டாமை வீழவும் சூளுரை மேற்கொள்வோம்.

29-8-98 அன்று மதுரையில்
மத நல்லிணக்க மாநாட்டில் ஆற்றிய உரை

25

அன்னை தெரசா நூல் வெளியீட்டு விழா

நேற்று வரையில் ஒரு மணி என்பது அறுபது நிமிடங்களைக் கொண்டது. இன்று முதல் ஒரு மணி என்பது பத்து நிமிடங்களைக் கொண்டது. ஏனென்று கேட்டால் அதற்கு உண்மையான பொருள் தம்பி வலம்புரி ஜானுக்கும், வின்சென்ட் சின்னதுரைக்கும்தான் தெரியும். என்னை அவர்கள் இந்த நிகழ்ச்சிக்கு அழைத்த போது பத்தே நிமிடங்கள் நீங்கள் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு புத்தகத்தை வெளியிட்டுவிட்டு சென்று விடலாமென்றார்கள். சரியாக பத்து மணிக்கு வந்தேன். அறுபது நிமிடங்கள் ஓடிவிட்டன. எனவே இன்று முதல் காலக் கணக்கு மாறுகின்றது (சிரிப்பு) இனிமேல் ஒரு மணி என்றால் அறுபது நிமிடங்கள் அல்ல. வலம்புரி ஜான், வின்சென்ட் ஆகியோரின் கணக்குப்படி பத்து நிமிடங்கள் என்று (பலத்த சிரிப்பு) எழுதி வைத்துக் கொள்ள வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நூலுக்கு 'பூமியின் தேவதை' என்று வின்சென்ட் சின்னதுரை அவர்கள் பெயரிட்டிருப்பது பொருத்தமானதல்ல. வியப்பாக இருக்கும் உங்களுக்கு! அன்னை தெரசா; பூமிக்கு மாத்திரம் தேவதையல்ல. அடுத்து மனிதன் இன்னும் ஒரு நூற்றாண்டுக்

காலத்திற்குள் சென்று வாழவிருக்கின்ற சந்திர மண்டலத்திற்கும் செவ்வாய் மண்டலத்திற்கும் கூட அன்னை தெரசா தேவதைதான். (கைதட்டல்) ஏனென்றால் சந்திர மண்டலத்திலே மலைகளைக் காணலாம். மணலைக் காணலாம், நீரூற்றுக்களைக் காணலாம், பனிக்கட்டிகளைக் காண முடியாது. அந்த அன்பை அங்கெல்லாம் பொழியக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர் அன்னை தெரசா என்பதால் அவர் பூமிக்கு மாத்திரம் தேவதையல்ல. புதிது புதிதாக மனிதன் கண்டுபிடித்து வாழக்கூடிய இடங்கள் எங்கெங்கு உண்டோ அந்த அண்டபகிரண்டத்திற்கும் அன்புத் தேவதையாக இருக்கக்கூடியவர்தான் அன்னை தெரசா அவர்கள்.

அவர்களைப் பற்றி இங்கே உரையாற்றியவர்கள் எல்லாம் விளக்கியிருக்கிறார்கள். யாரும் எடுத்துச் சொல்லாமலே அன்னை தெரசா அவர்களைப் பற்றி அனைவரும் அறிந்திருக்கிறீர்கள். திரும்பத் திரும்ப அதைச் சொல்லும்போது எப்படி தேன் தெவிட்டு வதில்லையோ அதுபோல அன்னை தெரசா அவர்களைப் பற்றிய புகழுரைகள் யாருக்கும் தெவிட்டு வதில்லை.

அன்னை தெரசா ஒரு சாதாரணக் குடும்பத்திலே பிறந்தார்கள். இந்த நூலிலே குறிப்பிட்டவாறு அழகான கவிதை வரிகளில் வின்சென்ட் அவர்கள் சிறப்பித் திருக்கின்ற அந்த பாங்கிற்கேற்ப,

> **“அன்னை திரானாவின் அடிவயிற்றுச் சீதனமாக சிலையெடுக்கப்பட்ட மூன்றாவது குழந்தைதான் ஆக்னஸ் கொன்சகா பொஜாக்ஸியு – இதுதான் அன்னை தெரேசாவின் இயற்பெயர்.”**

அடுத்துச் சொல்கிறார்,

"முல்லை அவிழ்ப்பாக – பிள்ளைச் சிரிப்பாய்
கொள்ளை வனப்போடு இருந்தாள்.
"கொன்சகா" என்கிற அல்பேனியச் சொல்லை
அருந்தமிழில் பெயர்த்துப் பார்த்தால்,
"அரும்பு" என்றே அர்த்தப்படும்.
அதுதான் வீட்டில் அவளை அழைத்த
செல்லப் பெயர்."

என்று குறிப்பிடுகிறார். அரும்பு என்பதுதான் கொன்சகா என்கிற அல்பேனியச் சொல்லால் அமைந்த அந்தப் பெயருக்கு சரியான, பொருத்தமான தமிழ் என்று இந்த நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

அவர்கள் அரும்பாகவே இருந்து மறைந்தார். ஆனால் ஏழையெளிய மக்களுக்கெல்லாம் அவர் கரும்பாகவே விளங்கினார். அவர் மறைந்தார் என்று சொல்வது தவறு. ஏழை – எளிய பாமர மக்கள் அத்தனை பேருடைய நெஞ்சங்களிலும் நிறைந்தார் என்று சொல்வதுதான் சரியான சொற்றொடராகும்.

அன்னை தெரசாவைப் பற்றி மேற்கு வங்க முதலமைச்சராக இருந்தவரும், இந்தியத் திருநாட்டின் பெருந்தலைவர்களில் ஒருவராக விளங்கியவருமான பி.சி. ராய் அவர்கள், அவருடைய எண்பதாவது பிறந்த நாளில் சொன்ன வாசகத்தை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

"80ஆவது பிறந்த நாள் கொண்டாடுகின்ற நீங்கள் மேற்கு வங்க முதல்வர் பதவியிலே இருக்கிறீர்கள். இப்போது நீங்கள் எதை நினைத்து இன்புறுகிறீர்கள்?" என்று கேட்டபோது, பி.சி. ராய் சொன்னாராம். "உலக உத்தமர் காந்தியடிகள், அவரை நான் வணங்கி வழிபட்டவன். இன்றைக்கும் அவரைப் போற்றிக்

கொண்டிருப்பவன். ஆனால் அவரோ அல்லது நான் நெருங்கிப் பழகிய பண்டித நேருவோ இந்த எண்பதாவது பிறந்த நாளில் உடனடியாக என் நினைவிற்கு வரவில்லை. என் நெஞ்சிலே நிழலாடிக் கொண்டிருப்பதெல்லாம் அன்னை தெரசாவின் பெயர் தான்.'' என்று பி.சி. ராய் குறிப்பிட்டதாக ஒரு வரலாற்றுக் குறிப்பு இருக்கின்றது.

பி.சி. ராய் எப்படிப்பட்டவர், எத்தகைய இரும்பு நெஞ்சம் கொண்டவர் என்பதெல்லாம் இந்திய வரலாறு உணர்ந்தவர்களுக்குப் புரியும். பண்டித நேருவையே பெயர் சொல்லி அழைக்கக்கூடிய அளவிற்குச் செல்வாக்கு மிக்கவர். அவருக்கு எண்பது வயது. அப்போது அன்னை தெரசா அவர்களுக்கு 50 வயது. அந்த ஐம்பது வயது பெருமாட்டிதான் தன் நெஞ்சத்திலே நினைவலைகளாக இருக்கிறார் என்று சொல்லக்கூடிய அளவிற்கு அன்றைக்கே புகழீட்டியவர் அன்னை தெரசா அவர்கள்.

தம்பி வலம்புரி ஜான் இங்கே குறிப்பிட்டார். எத்தனை முறை அவர் தமிழகத்திற்கு வந்திருக்கிறார். எத்தனை முறை உரையாற்றியிருக்கிறார். எத்தனை ஏழை எளியோருடைய பகுதிகளுக்கெல்லாம் சென்று தன்னுடைய பங்குப் பணியினை ஆற்றியிருக்கிறார் என்றெல்லாம் குறிப்பிட்டார். கழக அரசு குடிசை மாற்று வாரியம் என்ற புதிய திட்டத்தை ஏழை எளிய மக்களுக் காக உருவாக்கியபோது 70 அல்லது 71-ஆம் ஆண்டு களில் அன்னை தெரசா அவர்கள் அந்தக் குடிசை மாற்று வாரிய வீடுகளைக் காண வேண்டுமென்று விரும்பியதும், அப்போது குடிசை மாற்று வாரியத் தலைவராக இருந்த என்னுடைய அருமைச் சகோதரர் அரங்கண்ணல் அவர்களைச் சந்தித்து அவர்கள் உரையாடியதும் ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகும்.

இன்றைக்கும் சகோதரர் அரங்கண்ணல் வீட்டில் அன்னை தெரசா அவர்கள் குடிசை மாற்று வாரியம் பற்றிப்பேசிய அந்தப் பேச்சு நடைபெற்ற போது எடுத்த புகைப்படம் இருப்பதை நான் சில நாட்களுக்கு முன்பு கூடப் பார்த்தேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் சாதாரண விஷயங்களாக இருந்தால்கூட அது சாமான்ய மக்களுக்குப் பயன்படுகிற ஒன்றாக இருந்தால் அதில் எல்லாம் தன் கவனத்தைச் செலுத்தக் கூடியவராக விளங்கியவர் அன்னை தெரசா அவர்கள்.

அவருடைய புகழைப் போற்றுகின்ற இந்த நாளில் அவரது புகழை மேலும் பரப்புகின்ற அளவிலே நம்முடைய அன்பிற்குரிய அருள் தந்தை வின்சென்ட் சின்னதுரை அவர்கள் இந்த அழகான, அருமையான, அர்த்தம் பொதிந்த, சொல்லுக்குச் சொல் சுவையேற்றி யாத்துத் தந்துள்ள இந்த கவிதை மலரை 'பூமியின் தேவதை' என்ற பெயருடைய இந்த நூலை வெளியிடு வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

வரவேற்புரையாற்றிய அருட்தந்தை ஜோ அந்தோணி அவர்கள் இங்கே ஒரு கேள்விக்குறியை எழுப்பிவிட்டுப் போய் இருக்கிறார். அதற்கு நான் முற்றுப்புள்ளி வைக்கா விட்டால் நிலைமை வேறு விதமாக ஆகிவிடும். எனவே அந்தக் கேள்விக்குறிக்குப் பதில் அளித்து நான் முற்றுப்புள்ளி வைக்க விரும்புகிறேன்.

மத்தியிலே ஒரு அரசு, மாநிலத்திலே ஒரு அரசு இருக்கும் போது மத்தியிலே உள்ள அரசை மாநிலத்திலே உள்ள அரசு நிர்வாக ரீதியிலே அனுசரித்துப் போவதும், மாநிலத் தேவைகளுக்காக மத்திய அரசோடு வாதிடுவதும். மத்திய அரசோடு உறவு கொள்வதும், நான் சார்ந்துள்ள இயக்கம், இன்று நேற்றல்ல. ஆரம்பக் காலத்திலிருந்து ஏற்றுக் கொண்ட அணுகுமுறையாகும்.

அதனால்தான் இந்திராகாந்தி அவர்கள் இராஜாஜி மண்டபத்தின் முகப்பில் நடந்த விழாவில் அறிஞர் அண்ணா அவர்களின் படத்தைத் திறந்து வைக்க வந்தபோது அவர்கள் முன்னிலையிலே நான் சொன்னேன் – '' அம்மையார் அவர்களே, உங்களோடு நாங்கள் உறவுக்குக் கை கொடுப்போம். அதே நேரத்தில் உரிமைக்குக் குரல் கொடுப்போம்'' என்று கூறினேன். அந்தச் சொல் தேயவில்லை. ஊனமடைய வில்லை, சிதையவில்லை, சேதாரமடையவில்லை. அதைத் தான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன்.

மத்தியிலே உள்ள ஆட்சியை ஆதரிப்பது என்பது வேறு. அந்த ஆட்சியை நடத்துகின்ற கட்சியை ஆதரிப்பது என்பது வேறு. எனவே என்னுடைய அருமை பெருமக்களே, ஆட்சிக்கும் கட்சிக்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளக் கூடிய வல்லமை, வலிமை, திறமை, ஆற்றல் அனைத்தும் உங்களுக்கு உண்டு என்று நான் கருதுகிறேன், நம்புகிறேன்.

இந்த இயக்கம் – இங்கே தமிழகத்தில் இப்போது ஆட்சி நடத்துகின்ற இயக்கம் – இன்று நேற்றல்ல. அந்தக் காலத்தில் அதாவது நாங்கள் ஒரு ஆட்சிக்கு வருவோமென்று கருதாத அந்தக் காலத்திலிருந்தே பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப் பட்ட சமுதாயத்து மக்களுக்கும், குறிப்பாக சிறுபான்மைச் சமுதாயத்து மக்களுக்கும் பாதுகாப்பு அரணாகத் திகழக் கூடிய இயக்கமாகும்.

எனவே ஆட்சிக்கு வந்துவிட்ட காரணத்தால் அந்தப் பாதுகாப்புப் பணியிலேயிருந்து நாங்கள் ஒதுங்கி விட மாட்டோம். என்றைக்கும் உங்களோடு இருப்பவன் தான் நான். உங்களுக்கு வருகின்ற எந்தத் துன்ப துயரங்களையும் களைவதில் எனக்குப் பங்கு உண்டு.

(பலத்த கைதட்டல்) எனவே இந்தச் சமுதாயத்தை, இந்தச் சிறுபான்மைச் சமுதாயத்தைக் காப்பாற்றுவதில் முதல் ஆளாக நான் இருப்பேன். முதல் இயக்கமாக எங்கள் இயக்கம் இருக்கும் என்ற உறுதியை இங்கே நான் வழங்கி நம்முடைய அருட்தந்தை ஜோ அந்தோணி அவர்களுக்கு ஏற்பட்ட ஐயத்தைப் போக்கி விடை பெறுகிறேன்.

5-9-98 அன்று சென்னையில்
அன்னை தெரசா நூல் வெளியீட்டு
விழாவில் ஆற்றிய உரை

26

சென்னை – ஆழ்வார்கள் ஆய்வு மைய விழா உரை

இன்று உங்கள் அனைவருடைய இனிய வாழ்த்துக்களோடு நானும், பெரியவர் சிவராமன் அவர்களும் முனைவர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களும் முனைவர் திருமதி ராதா தியாகராஜன் அவர்களும் ஆழ்வார்கள் ஆய்வு மையத்தின் சார்பில் விருதுகளைப் பெற்றிருக்கிறோம். இங்கே வழங்கப் பட்ட விருதுகளின் பெருமை ஒரு புறம் இருந்தாலுங்கூட, அந்த விருதுகளைப் பற்றியும் அதைப் பெற்றுக் கொண்ட எங்களைப் பற்றியும் உரையாற்றியவர்கள் மிக அதிகமாக, குறிப்பாக என்னைப் பாராட்டியிருக் கிறார்கள், புகழ்ந்திருக்கிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன்.

இங்கே நம்முடைய மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் கடந்த காலத்திலே நீங்கள் செய்தவைக்காக அல்ல, இனி சாதிக்க வேண்டியவைகளுக்காக இந்த விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று குறிப் பிட்டார்கள். அதுதான் உண்மை. இங்கே சொல்லப் பட்ட அழகு தமிழ்ச் சொற்கள், வர்ணிக்கப்பட்ட வார்த்தைகள், ஜெகத்ரட்சகன் வாரிவாரி இறைத்த வர்ணனைகள், தம்பி வலம்புரிஜான் தனக்கேயுரிய தமிழ் ஆற்றலைக் கொண்டு இந்த மண்டபத்தில் சொல் மழை

பொழிந்திட்ட காரணத்தால் எங்கே நனைந்து மூழ்கி விடுமோ என்று நான் சந்தேகப்படுகின்ற அளவிற்கு அன்பு மழை பொழிந்தார்கள். அந்த நிலைகள் எல்லாம் நான் இதுவரை ஆற்றியுள்ள பணிகளுக்காக, என்னிடத் தில் அவர்கள் கண்ட ஆற்றலுக்காக திறமைக்காக – புலமைக்காக உழைப்புக்காக என்று நான் கருதவில்லை. சகோதரர் ஆர்.எம்.வீ. அவர்கள் பேசியதும் சரி, மற்றவர்கள் பாராட்டிப் பேசியதும் சரி, மூப்பனார் அவர்களே பேசியதும் சரி, எல்லாமே இன்னும் இந்தச் சமுதாயத்திற்குப் பணியாற்ற வேண்டும் என்று என்னை வேலை வாங்குவதற்காகத் தட்டிக் கொடுக்கப்பட் டவைகளே தவிர வேறல்ல என்பதை நான் உணருகிறேன்.

அந்த அளவிற்கு இங்கே நான் புகழப்பட்டிருக் கிறேன். இன்னும் சொல்லப் போனால் என்ன பேசுவது, எப்படிப் பேச ஆரம்பிப்பது என்று தெரியாத நிலையில்தான் ஒரு மயக்கத்தில்தான் நான் இங்கே உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன். அந்த அளவிற்குத் தேன் குடத்திலே விழுந்த ஈயைப் போல் – விழுந்த அல்ல, தூக்கிப் போடப்பட்ட ஈயைப்போல் நான் உங்கள் முன்னால் இப்போது காட்சி தருகிறேன்.

எனக்கு அளிக்கப்பட்ட இராமானுஜர் விருது பற்றி சகோதரர் ஆர்.எம்.வீ. பேசும்போது குறிப்பிட்டார். இதை நாங்கள் கலைஞருக்கு வழங்குகிறோம் என்று அழைப்பிதழில் அச்சியற்றவில்லை. இதைப் பெற்றுக் கொள்ள அவர் இசைந்திருக்கிறார் என்று குறிப்பிட்டிருக் கிறோம் என்றார். அது என்னால் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல – விருதையல்ல, வீரப்பன் அவர்கள் சொன்ன வார்த்தை என்னால் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. ஏனென்றால் ஒருமுறை கம்பனடிப்பொடி

என்று வர்ணிக்கப்படுகின்ற காரைக்குடி சா. கணேசன் அவர்கள், காரைக்குடியில் ஆண்டுதோறும் நடத்துகின்ற கம்பர் விழாவிற்கு என்னை அழைத்திருந்தார். அந்த விழாவில் நான் கலந்து கொண்டிருந்தேன். நம்முடைய சிவராமன் அவர்களும் சிலம்புச்செல்வர் ம.பொ.சி. அவர்களும் இன்னும் பல புலவர் பெருமக்கள் எல்லாம் கலந்து கொண்டிருந்தார்கள்.

நான் அங்கே பேசும்போது, கம்பர் விழாவில் கருணாநிதி கலந்து கொள்வதா என்று யாரும் ஆச்சரியப்பட வேண்டாம். அதற்கு மாறாக வேறு மாதிரியாக ஆச்சரியப்படுங்கள். கம்பர் விழாவிற்கு கருணாநிதியை அழைத்திருக்கிறார்களே என்று நீங்கள் ஆச்சரியப்படுவதுதான் சரி என்று நான் அங்கே குறிப்பிட்டேன்.

அதைப்போல இராமானுஜர் விருதை நான் பெற்றுக் கொள்ள இசைந்தேன் என்பதைவிட இராமானுஜர் விருதை கருணாநிதிக்குத் தந்தீர்களா என்று உங்களைப் பார்த்து மற்றவர்கள் ஆச்சரியத்தோடு கேட்கக் கூடிய ஒரு சூழ்நிலையை நீங்கள் ஏற்படுத்தி யிருக்கிறீர்கள் என்றுதான் நான் கருதுகிறேன்.

இந்த விருது எனக்கு வழங்கப்படுமென்று அறிவிக்கப் பட்டபோது ஆர்.எம்.வீ. அவர்கள் சும்மாயில்லாமல் இதைப் பற்றி சுற்றுப்புறத்தில் என்னென்ன பேச்சுக்கள் நடைபெறுகின்றன என் பதையும் கூர்ந்து கவனித்திருக்கிறார் என்பதை அவருடைய உரையிலிருந்து என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. நீங்களும் உணர்ந்து கொண்டிருப் பீர்கள்.

நான் சார்ந்திருக்கின்ற இயக்கம் – நாங்கள் சார்ந்து இருக்கின்ற இயக்கம் – நாங்கள் எந்தப் பெரியாருடைய

கரம் பிடித்து வளர்ந்தோமோ – எந்த அண்ணா வினுடைய வழியைத் தொடர்ந்து நடந்து கொண்டிருக் கிறோமோ, அதற்கு இது ஏற்புடையதா என்று யாராவது சந்தேகப்படுவார்களேயானால் – கேட்கமாட்டார்கள் – கேட்டால் சரியான பதில் கிடைத்துவிடும் என்று அவர்களுக்குத் தெரியும் என்பதால் வெளிப்படையாக கேட்க மாட்டார்கள் சந்தேகப்படுவார்களேயானால், அவர்களுக்கு நான் தருகின்ற ஒரேயொரு விளக்கம் – இன்றைக்கு இந்த நாட்டிலே எந்தெந்த செயல்களைப் புரிய வேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ, எந்தெந்த முன்னேற்றங்கள் முகிழ்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோமோ இவைகளை யெல்லாம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு செய்து காட்டிய பெருமைக்கு உரியவர் இராமானுஜர் என்கிறபோது அந்த விருது கிடைப்பதிலே நான் பெருமைப் படுகிறேன். ஒருவேளை எனக்குக் கொடுக்கக் கூடாதென்று ஆர்.எம்.வீ. அவர்களோ – ஆழ்வார் மையமோ தீர்மானித்தி ருந்தால்தான் நான் வருத்தப்பட்டிருப்பேன். அவர்கள் வழங்க முன் வந்ததற்காக நான் பெருமைப்படுகிறேன். ஏனென்றால் ஆழ்வார்களுக்குப் பக்கத்திலே வரக்கூடாதென்று ஒதுக்கி வைத்துவிட்டார்களோ என்ற ஐயப்பாடு எனக்கு இல்லாமல் என்னையும் ஆழ்வார்கள் மதிக்கிறார்கள்– என்னையும் ஆழ்வார்கள் விரும்புகிறார் கள் என்னையும் ஆழ்வார்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதில் எனக்கொரு பெருமைதான்.

ஒருமுறை நம்முடைய மைலாப்பூர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் தமிழகத்தில் உள்ள மடாதிபதிகள் இணைந்து நடத்திய தெய்வீகப் பேரவையின் மாநாடு ஒன்று நடை பெற்றது. நான் அப்போது இண்டாவது முறையாக முதல்வராக இருக்கிறேன். அப்போது அதிலே உரையாற்றிய ஒரு ஆதீனகர்த்தர், கலைஞர் கடவுளை

ஏற்றுக் கொள்கிறாரோ இல்லையோ, இருந்தாலும் நான் சொல்லுகிறேன் – என்று அவர் அந்தக் கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். அடுத்து நான் அதைப்பற்றி பேசும்போது, எனக்கு முன்னால் பேசிய ஆதீனகர்த்தர் அவர்கள் கலைஞர் கடவுளை ஏற்றுக் கொள்கிறாரோ இல்லையோ என்ற ஒரு சொற்றொடரைப் பயன் படுத்தினார், நான் அவருக்குச் சொன்னேன், நான் கடவுளை ஏற்றுக் கொள்கிறேனா இல்லையா என்பதல்ல பிரச்சினை கடவுள் என்னை ஏற்றுக் கொள்கிற அளவிற்கு நான் நடந்து கொள்கிறேனா இல்லையா என்பதுதான் எனக்குள்ள பிரச்சினை என்று குறிப்பிட் டேன். அதே நிலைதான் இப்போதும். அதைத்தான் ஆர்.எம்.வீ. அவர்களும் இங்கே அழகாக எடுத்துக் காட்டினார்கள்.

இதற்கெல்லாம் ஒரு முத்தாய்ப்பாகத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த அரசியல் இயக்கத்தைக் கண்டபோது கொட்டுகின்ற மழையிலே சென்னையிலே ராபின்சன் பூங்காவில் 1946-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ஆம் நாள் சொன்னார்கள், ஒன்றே குலம், ஒருவனே தேவன், அதுவே நம்முடைய கடவுள் கொள்கை, சமுதாயக் கொள்கை என்று குறிப்பிட்டார்கள்.

அந்தக் கொள்கை வழி நடக்கின்ற நாங்கள் இராமானுஜருடைய பல்வேறு கோணங்களிலே ஒரு கோணம், எங்களுடைய கொள்கைக்கு ஏற்புடையதாக இருக்கிறது என்கிற நேரத்தில் அதை எதற்காக நாங்கள் புறக்கணிக்க வேண்டும். அதை எதற்காக நாங்கள் வெறுத்து ஒதுக்கவேண்டும், அதை எதற்காக நாங்கள் பயன்படுத்தாமல் – நாங்கள் பயன்படாதவர்களாக ஆக வேண்டும். எனவேதான் இராமானுஜரைப் போன்றவர்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எடுத்துச் சொன்ன அந்தக் கொள்கை இன்னமும் நிறைவேறாத

சூழ்நிலையில் அவருடைய பெயரால் வழங்கப்படுகின்ற இந்த விருதுக்குப் பெருமை இருக்கிறதோ இல்லையோ அல்லது அதைப் பெறுகின்ற எனக்குப் பெருமை இருக்கிறதோ இல்லையோ இந்த விருதின் பலன், இதனுடைய விளைவு இன்னும் பல ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகம் சமத்துவமான பூமி – இந்தியா சமத்துவமான மண் என்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துமேயானால் இந்த விருதுக்கு இன்றைய நாளை விட அன்றைய நாளில்தான் அதிகப் பெருமை என்பதை நான் இங்கே எடுத்துக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இராமானுஜர் அவர்கள் மாத்திரமல்ல, ஆழ்வார்கள் என்று சொல்லப்படுகின்ற இந்த 12 ஆழ்வார்களின் முதல் மூன்று ஆழ்வார்கள் தோன்றிய பகுதியே சென்னை, செங்கற்பட்டு பகுதிதான். அந்தப் பகுதிகளில் ஒன்றான திருப்பெரும்புதூரில் இராமானுஜர் கி.பி.1017 -ஆம் ஆண்டு பிறந்தார். இங்கே உரையாற்றியவர்கள் எல்லாம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் என்று பொதுவாகச் சொன்னார்கள். நான் இது போன்ற நிகழ்ச்சிகளுக்கு வருவதற்கு முன் குறிப்பெடுக்காமல் வருவதில்லை. (கைதட்டல்) முதலமைச்சர்தானே, என்ன பேசினாலும் கேட்டு விட்டுப் போவார்கள், எதையாவது பேசி விட்டுப் போகலாம் என்று வருவதில்லை, இன்று காலையிலிருந்து ஐந்து புத்தகங்கள், இராமானுஜரைப் பற்றிய புத்தகங்களைப் படித்து விட்டுத்தான் வந்தேன். அதிலே சிலவற்றை நம்முடைய நீதியரசர் ரெட்டியார் அவர்களே குறிப்பிட்டபோது, அடடா, நாம் எடுத்து வந்த குறிப்பையெல்லாம் இவர் பேசுகிறாரே என்றுகூட நான் ஆச்சரியப்பட்டேன், வருத்தப்படவில்லை. அதைக்கூட ஆர்.எம்.வீ.யிடம் சொன்னேன். அதற்கு அவர், இவைகளையெல்லாம் அவர் விளக்க வேண்டுமென்பதற்காகத்தான் அவரை இந்த விழாவிற்கே அழைத்தோம் என்று குறிப்பிட்டார்.

எனவே, கி.பி. 1017-ஆம் ஆண்டு அதாவது தோராயமாக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் என்று சொல்லாமல், சரியாக சொல்ல வேண்டுமேயானால், 981 ஆண்டுகளுக்கு முன்பு திருப்பெரும்புதூரில் இராமானுஜர் பிறந்தார். அவருடைய குருவாக அவர் ஏற்றுக் கொண்டவர் யாதவ பிரகாசர், அத்வைத ஆசிரியர் ஆவர். ஆனால் குருவுக்கும் மாணவருக்கும் அடிக்கடி சர்ச்சைகள். குருவை மிஞ்சிய சீடராக இருந்தார் இராமானுஜர். இராமானுஜரே அப்படியிருந்தாரே, நாம் இருந்தால் என்ன என்று இன்றுள்ள சீடர்கள் (சிரிப்பு) கேட்கக் கூடாது. குருவையே மிஞ்சிய சிஷ்யர் என்றால் குருவே பாராட்டுகின்ற அளவிற்கு – போற்றுகின்ற அளவிற்கு, குருவே நினைக்காதக் கருத்துக்களை, பொருள் விளக்கங்களை குருவுக்கே சொல்லித் தரக்கூடிய வித்தகராக மாணவப் பருவத்திலேயே இராமானுஜர் விளங்கினார். இதனால் குருவிற்கும் சீடருக்கும் அடிக்கடி சர்ச்சை வருகிறது என்பதைப் பற்றி பலரால் வெளியே பேசப்படுகின்றது.

உங்களுக்குத் தெரியும். இன்றைக்கு உள்ளவர் களுக்குத் தெரியாது. நம்முடைய மக்கள் தலைவர் மூப்பனாருக்கு நன்றாகத் தெரியும். அவர் தஞ்சாவூர்க்காரர். ஆர்.எம்.வீ. அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். கலை உலகத்திலே நீண்ட நாட்களாக இருப்பவர். குரு – சீடர் என்றால் முன்பெல்லாம் பள்ளிக்கூடம் வைத்து, அங்கே ஒரு நாற்காலியில் குரு உட்காந்து கொண்டு மாணவர்களையெல்லாம் எதிரிலே உட்கார வைத்து பாடம் நடத்துகின்ற அந்த நிலை அல்ல. அதிலும் குறிப்பாக வேதங்கள், மந்திரங்கள் இவைகளை யெல்லாம் கற்றுக் கொள்கிற குரு – மாணவர்கள் என்ற நிலை இருந்தாலும் அல்லது கலைத் துறையிலே பயிற்சி

பெறவேண்டுமென்ற நிலை இருந்தாலும் குருவிடத்தில் மாணவன் அவர் வீட்டிலேயே தங்கிப் படித்து பயிற்சி பெற்று தன் வித்தையைப் பெருக்கிக் கொள்வது பழைய கால வழக்கம். அதன்படி இந்த யாதவப் பிரகாசர் என்ற குருவிடத்தில் இராமானுஜர் சீடராக இருந்தபோது வழக்கம்போல் ஒருநாள் அவரை உடகாரவைத்து அவருக்கு எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தார். அந்தக் காலத்தில் இதெல்லாம் குருவிற்கு மாணவர்கள் செய்ய வேண்டிய கடமை.

இராமானுஜர் குருவிற்கு எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தபோது இருவருக்குமிடையே ஒரு சர்ச்சை ஏற்பட்டது அப்படிப்பட்ட நேரத்திலே குரு ஒரு பெரிய விஷயத்தைப் பற்றி பேசியிருக்கக் கூடாது என்று இன்றைக்குக் கூட அதைப்பற்றி பலர் விமர்சித்துக் கொண்டிருக்கின்றார்கள் அதைப்பற்றி ஆய்வு நடத்து பவர்கள். திடீர் என்று குரு ''கப்யாசம்– புண்டரீ காட்சம்'' என்ற சொற்றொடரைக் குறிப்பிட்டு அதற்கு, விளக்கம் சொன்னார். அது சற்று ஆபாசமான விளக்கமாக இருந்தது. இராமானுஜர் எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தபோது குரு அவரைப் பார்த்து சீடா உனக்குத் தெரியுமா? கப்யாசம், புண்டரீகாட்சம் என்றால் என்னவென்று தெரியுமா? என்று கேட்கிறார். சொல்லுங்கள் குருவே என்கிறார் இராமானுஜர்.

குரு விளக்குகிறார். கப் யாசம் என்றால், கபி ஆசம் – கபி என்றால் குரங்கு. ஆசம் என்றால் குரங்கின் பின்புறம். அதோடு விடவில்லை. எதற்குச் சொல்கிறார் என்றால், பகவானுக்குக் கோபம் வருகிறது. அந்தக் கோபத்தால் சிவந்த அவருடைய கண் எப்படி இருக்கிறதென்றால் கப்யாசம், அதாவது குரங்கின் பின்புறம்போல் இருக்கிறது என்று குரு விளக்குகிறார். இராமானுஜரால் அதைத் தாங்கிக் கொள்ள முடிவில்லை.

கடவுளுடைய கண்களைப்பற்றி தான் வணங்குகின்ற பகவானுடைய கண்களைப் பற்றி அது கோபத்தால் சிவந்திருப்பதைப் பற்றி சொல்லும்போது, குரங்கின் பின்புறம்போல இருக்கின்றது என்று குரு வியாக்யானம் செய்கிறாரே என்று எண்ணினார். கலகலவென கண்ணீர் வழிந்தது. குருவின் உடலிலே அந்தக் கண்ணீர் பட்டதும் அண்ணாந்து பார்த்து என்னப்பா, ஏன் அழுகிறாய் என்று கேட்கிறார். நீங்கள் சொன்ன விளக்கத்திற்காக அழுகிறேன் என்று தன் வேதனையைத் தெரிவித்தார்.

நீ சொல்லேன் விளக்கம், வேறு என்ன விளக்கம் இருக்கிறது என்று குரு ஆத்திரத்தோடு கேட்டார். அதற்கு இராமானுஜர், ஐயா, கபி என்றால் சூரியன், ஆசம் என்றால் தாமரை மலர். சூரியனைக் கண்ட தாமரை மலர்ந்தால் எப்படி சிகப்பாக இருக்குமோ அதைப் போலத்தான் பகவான் கண்கள் இருந்தன என்பதுதான் இதற்குச் சரியான விளக்கம் என்று கூறுகிறார். இதற்கு குரு நன்றி பாராட்டவில்லை. பொறாமை ஏற்பட்டு விட்டது. இப்படி சில குருக்களுக்குப் பொறாமை ஏற்படுவது சகஜம். மாணவன் தன்னை மீறுகின்ற அளவிற்கு நடந்துவிட்டால் சில குருக்களுக்குப் பொறாமை ஏற்படும். அந்தப் பொறாமை ஏற்பட்ட காரணத்தால் சும்மாயிருப்பார்களா சுற்றியிருப்பவர்கள்? மற்ற மாணவர்கள் இந்த மாணவனை ஒழிக்க இது தான் சரியான நேரமென்று குருவோடு அமர்ந்து இவனைத் தீர்த்துக் கட்டிவிட்டால் நல்லது. இல்லாவிட்டால் நம்முடைய சமயக் கடமைகளுக்கே கூட ஆபத்து என்றார்கள். குருவும் அந்த நோக்கத்திலே இருந்தார். ஆனால் முறையைப் பற்றிச் சிந்தித்தார். வன்முறையால் அவனைக் கொன்று விட்டால் வெளியே தெரிந்து விடும் எனவே, கொல்வதற்கு வேறு என்ன மென்முறை இருக்கிறதென்று அவர்கள் ஆராய்ந்தார்கள், முடிவில் குருவே சொன்னார். எல்லா மாணவர்களையும்

அழைத்துக் கொண்டு நான் காசிக்குச் செல்வதாகக் கூறி இராமானுஜனையும் அழைக்கிறேன், வருவான், அங்கே காசியில் நேரம் பார்த்து கங்கையில் நீராடுகின்ற நேரத்தில் கங்கா நீரில் அவனைத் தள்ளிவிட்டு எல்லோரையும்போல கங்கையில் ஸ்நானம் செய்து கொண்டிருந்ததால், கங்கை நீர் அடித்துக் கொண்டு போய்விட்டது என்று கூறிவிடலாமென்று குருவே இந்த அருமையான யோசனையைச் சொல்லி இராமானுஜரை அழைத்தார்கள். அவரும் இணங்கிச் சென்றார். அவருக்கு இந்தச் சூழ்ச்சி தெரியாது.

அவரோடு அவருடைய சிறிய தாயாரின் மகன் கோவிந்தன் – அவரும் அந்தக் குருவிடம் பயிற்சி பெறுபவர் – அவரும் சென்றார். பாதி தூரம் சென்றதும், அவர்களுடைய சூழ்ச்சியைப் புரிந்து கொண்ட கோவிந்தன் இராமானுஜரைத் தனியாக அழைத்துச் சென்று இதுபோல் நடக்கவிருக்கின்றது எனவே, நீ தப்பியோடி விடு, நான் மாத்திரம் சென்று நீ எங்கேயோ போய்விட்டதாகச் சமாளித்துக் கொள்கிறேன் என்று கூறி இராமானுஜரைத் தப்பியோடச் செய்துவிட்டு கோவிந்தன் மாத்திரம் குருவிடம் சென்று அவன் எங்கேயோ போய்விட்டான் என்று சொன்னதும் குருவிற்கு மகிழ்ச்சி. இந்தக் கானகத்தில் அவன் எங்கே போக முடியும், எங்கு போனாலும் புலி, சிங்கம் போன்ற மிருகங்கள் கொன்று தீர்த்து விடும், பரவாயில்லை என்ற மகிழ்ச்சியோடு அவரும் மற்றவர்களும் காசிக்குச் சென்றுவிட்டு நீண்ட நாட்களுக்குப் பின்னர் திரும்பினார்கள்.

திரும்பி வரும்போது அவர்கள் எதிரிலே ஒரு பெரிய கூட்டம் போற்றிப் புகழ்ந்து பாராட்டிக் கொண்டிருக்கும்போது சீடர்கள் சூழ இராமானுஜர் வருவதைக் கண்டு திகைத்துப் போனார் என்பது

இராமானுஜர் வாழ்க்கை வரலாற்றிலே ஒரு பெரிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி.

இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் இராமானுஜராகப் பிறந்துவிட்ட காரணத்தால் அவருக்கும் சிக்கல் இல்லாத வாழ்க்கை கிடையாது. அவருக்கும் வாழ்க்கை, பிரச்சினைதான். அவரையும் எப்படியும் வீழ்த்த வேண்டுமென்று குருவே எண்ணுமளவிற்கு அவருக்கு வாழ்க்கை போராட்டமாகத்தான் இருந்திருக்கின்றது. அதிலிருந்து அவர் தப்பித்தான் வாழ்ந்திருக்கிறார்.

நீதியரசர் ரெட்டியார் குறிப்பிட்டதைப்போல அவர் தன்னுடைய ஆசானாக நான் குறிப்பிட்ட அந்தக் குருநாதரை முதலிலே ஏற்றுக் கொண்டிருந்தார் என்றாலுங்கூட, இதற்குப் பிறகு அவர் தனக்கு அறிவுரை கூறுகின்ற ஆசானாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர் திருக்கச்சி நம்பி. அந்த திருக்கச்சி நம்பிதான் தாழ்த்தப் பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர். இராமானுஜர் உயர் குலத்தில் பிறந்தவர் – உயர் குலத்திலே பிறந்தவராகக் கருதப்படுபவர். அவர் தனக்கு அறிவுரை கூறுகின்ற ஆசானாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்தான் திருக்கச்சி நம்பி என்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அவர் காட்டிய வழிதான் இராமானுஜர் நடக்கின்ற வழியாக அமைந்தது. இராமானுஜருடைய மாணவர்கள் பல பேர் தீண்டத் தகாத வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பார்கள். அவர்களில் ஒருவர்தான் உறங்கா வல்லிதாசர் என்பவர். அந்த உறங்கா வல்லிதாசனைத்தான் காவிரிக் கரைக்கு நீராடச் சென்று – செல்லும்போது ஒரு அந்தணருடைய தோளின் மீது கை போட்டுக் கொண்டு அழைத்துப் போய், அங்கே நீராடி விட்டுத் திரும்பும்போது இந்த உறங்கா வல்லிதாசர் என்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவருடைய தோளிலேதான் கை போட்டுக்

கொண்டு இராமானுஜர் நடந்து வந்திருக்கிறார். அப்போது அவரைப் பார்த்து அந்தணர்கள் இதென்ன அநியாயம், இப்படி நடந்து கொள்ளலாமா என்று கேட்டார்கள். அதற்கு இராமானுஜர், பக்தி மார்க்கத்திலே ஈடுபடுவதற்குச் சாதி ஒரு தடையல்ல என்ற அந்தக் கருத்தை தெரிவித்தார்.

அது மாத்திரமல்ல; கல்விச் செருக்கு, செல்வச் செருக்கு, சாதிச் செருக்கு என்று மூன்று செருக்குகள் உண்டு. என்னைப் பார்த்து இவன் தோளிலே கை போட்டுக் கொண்டு வரலாமா என்று கேட்கின்ற நீங்கள் இந்த மூன்று செருக்கும் இல்லாதவர்கள் என்று எனக்குத் தெரிகிறது. இருந்தாலுங்கூட, நீங்கள் இந்தக் கேள்வியைக் கேட்டதின் மூலமாக சாதிச் செருக்கே இருக்க முடியாத ஒருவனை வெறுக்கிறீர்கள் என்று எனக்குப் புரிகிறது. இவைகள் ஒழிந்த ஒரு நிலைதான் சமுதாயத்திற்குத் தேவை என்பதை நான் எடுத்துக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த நிலை ஏற்பட்டால்தான் சமுதாயம் முன்னேற முடியும், வாழ முடியுமென்று அவர்களுக்கு எடுத்துச் சொன்னார் என்பது அவருடைய வரலாற்றிலே ஒரு புரட்சிகரமான ஏடாகும்.

பக்தி மார்க்கத்திலே ஈடுபடுவதற்குச் சாதி ஒரு தடையல்ல. எல்லாச் சாதியினரும், ஏன் பெண்களும்கூட பக்தி வழியிலே இறைவனை அடையலாம் என்று முழங்கியவர் இராமானுஜர். ஒரு குரு ஒரு மாணவனுக்கு மாத்திரம் உபதேசிப்பது என்ற வரம்பை நீக்கி எத்தனை சீடர்களுக்கு வேண்டுமானாலும் உபதேசிக்கலாம், சீடனுடைய தகுதியைப் பார்க்காமல் அவனுடைய ஆர்வத்தை மாத்திரமே நோக்கி உபதேசிக்க வேண்டுமென்று சொல்லி அதையும் நடத்திக் காட்டினார். இதனால் பக்தியின் பயனாகிய முக்தியும் ஒரு சிலருடைய சொத்தன்று. அது எல்லோருக்கும் பொதுவுடமை என்றாக்கியவர் இராமானுஜர் என்பது தெளிவாகிறது.

இவருக்கு முன்னால் வாழ்ந்த ஆழ்வார்கள் இதைப் பேசியிருக்கிறார்கள். நாதமுனிகள் இந்த அடிப் படையிலே சிந்தித்திருக்கிறார். உய்யகொண்டார், ஆளவந்தார் போன்றவர்களும் தங்கள் அளவிலே இவ்வாறு நடந்து காட்டியிருக்கிறார்கள். ஆனால் இதை ஒரு சமயப் பொதுவுடமையாக ஒரு இயக்கமாகவே நடத்திய பெருமை இராமானுஜர் ஒருவருக்குத்தான் உண்டு. அதனால்தான் நான் இன்று ஒரு வார இதழ் படித்தேன். அதில் நல்ல எழுத்தாளரான இந்திரா பார்த்தசாரதி இராமானுஜரைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதிலே குறிப்பிடுகிறார். ''அந்தக் காலத்துப் பெரியார்'' என்று இராமானுஜரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். நான் சொன்னாலோ அல்லது ஆர்.எம்.வீ. சொன்னாலோ அது அவ்வளவு பொருத் தமாக இருக்காது. இராமானுஜர் அந்தக் காலத்துப் பெரியார் என்று இந்திரா பார்த்தசாரதி அந்த நீண்ட கட்டுரையில் கணையாழி இதழில் இராமானுஜரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். இந்திரா பார்த்தசாரதியும் அப்படிக் குறிப்பிட்டிருக்கிறார் என்பதை எடுத்துக் காட்டத்தான் இதை நான் இங்கே எடுத்துச் சொன்னேன்.

அந்த அளவிற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நாம் ஒரு பெரியாரைப் பெற்றோம். ஆனால் அந்தப் பெரியார் சொன்ன சமுதாயச் சீர்திருத்தத்தை – சம நீதியை – சமூகநீதியை – சமத்துவத்தை நாம் தொடர்ந்து பின்பற்றியிருந்தால் இன்றைக்கு இந்தப் பெரியார் தேவைப்பட்டிருக்கவே மாட்டார். சமத்துவபுரங்கள் அமைக்கப்பட வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. ஏனென்றால் எல்லோரும் சமத்துவமாக இருக்கும்போது பிறகு எதற்காகச் சமத்துவபுரம்? இந்த ஆயிரம் ஆண்டு காலம் இராமானுஜர் போன்றவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களை நாம் ஏற்று நடக்கவில்லை. தொடர்ந்து

அந்த வழியைப் பின்பற்றவில்லை. அதனால் தான் இந்த நிலை நமக்கு ஏற்பட்டிருக்கின்றது என்பதை நான் இங்கே கூற விரும்புறேன்.

அவருக்குத் தமிழகத்தில் சில தமிழ் மன்னர்களால் அதிலும் குறிப்பாக, சோழ மன்னர்களால் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது. அதுதான் எனக்கு வேதனை அளிக்கக்கூடிய நிகழ்ச்சி. நானும் மூப்பனாரும் சோழ நாட்டுக்காரர்கள் ஆனால் அன்றைக்கு ஒரு சோழ மன்னர் – அந்த மன்னருடைய பெயர் கிருமிகண்ட சோழன். அவனால் இராமானுஜருக்கு ஒரு எதிர்ப்பு ஏற்பட்டு அவர் அந்த மன்னருடைய ஆட்சியிலே வாழ விரும்பாமல் பன்னிரண்டு ஆண்டுக்காலம் மைசூர் பகுதியிலே சென்று வாழ்ந்தார். அப்படி வாழ்ந்த அந்த பன்னிரண்டு ஆண்டு காலத்திலேதான் இங்கே கூறப் பட்டதே மேலக்கோட்டை திருநாராயணபுரம் – அங்கே தாழ்த்தப்பட்டவர்களை அழைத்துக் கொண்டு ஆலயப் பிரவேசம் என்ற அருமையான புரட்சிகரமான செயலை அன்றைக்குத் தொடங்கி வைத்தார் இராமானுஜர்.

இராமானுஜர் எதிலும் பிடிவாத குணம் உள்ளவர் என்பவர் மாத்திரமல்ல; எதையும் தீர்க்கமாகச் சிந்தித்து அதனால் வருகின்ற விளைவுகளைப் பற்றிக் கவலைப் படாமல் பெரியார் எப்படி உறுதியான குணம் படைத்தவராக இருந்தாரோ அதைப் போலவே இருந்திருக்கிறார் என்பதற்கான உதாரணம்தான் திருக்கோட்டியூர் நம்பிகள் இடத்திலே அவர் நடந்து கொண்ட முறை.

17 அல்லது 18 முறை படையெடுத்திருக்கிறார் – மந்திரச் சொல்லை அவரிடமிருந்து கற்றுக் கொள் வதற்காக. 18வது முறைதான் அதிலே வெற்றி பெற்றார். அப்போது திருக்கோட்டியூர் நம்பி அவருடைய காதிலே மந்திரத்தை உபதேசித்து இதை நீ கடைசிவரை இன்னொருவனுக்கு வெளியிடக் கூடாது, அப்படி

வெளியிடுவதாக இருந்தால் கடைசி காலத்திலே ஒரேயொருவன் காதிலேதான் இதைச் சொல்ல வேண்டும், இதை மீறி நீ நடந்தால் உனக்கு நன்மை இல்லை தீமைதான் கிடைக்கும், சத்தியம் செய்து கொடு என்று கேட்டார். திருக்கோட்டியூர் நம்பியின் கரங்களைப் பிடித்து இராமானுஜர் சத்தியமும் செய்து கொடுத்தார் நான் யாரிடமும் சொல்ல மாட்டேன் என்று. பிறகு திருக்கோட்டியூர் வந்து கோபுரத்திலே ஏறி நின்றார் – அந்த ஊர் மக்களையெல்லாம் வாருங்கள், வாருங்கள் என்று அழைத்தார். எல்லோரும் வந்தார்கள். அவர் களைப் பார்த்து திருக்கோட்டியூர் நம்பி சொல்லிக் கொடுத்த அந்த ரகசிய மந்திரத்தை அனைவருக்கும் விளங்கக் கூடிய அளவிற்கு உபதேசித்தார்.

இந்தச் செய்தியைக் கேட்டதும் திருக்கோட்டியூர் நம்பி திகைத்தார், ஆத்திரப்பட்டார், இராமானுஜரை அழைத்து வரச் செய்தார். எப்படி சத்தியம் செய்து விட்டு மீறினாய் என்று கேட்டார். சொன்னவனுக்குத் தீமை ஏற்படும், கேட்டவனுக்கு நன்மை ஏற்படு மென்றால், கேட்டவர்கள் பலர், சொன்னவன் நான் ஒருவன், இந்த ஒருவன் தீமைக்கு ஆளானால் பரவாயில்லை, பலர் நன்மைக்கு ஆளாவார்கள். எனவேதான் பலர் அறிய அதை நான் சொன்னேன் என்று குறிப்பிட்டார். இதைக் கேட்ட குருநாதர், பழைய குருநாதரைப் போல் அல்ல. இவரைக் கட்டித் தழுவி நீ தான் எனக்கு வழிகாட்டியப்பா என்று சொன்னார் என்பது அவருடைய வரலாற்றில் பொன்னெழுத்துக் களால் பொறிக்கக்கூடிய ஒரு பகுதியாகும்.

அப்படிப்பட்ட இராமானுஜருடைய கொள்கைகளை மனதிலே பதிய வைத்துக் கொண்டுதான் இன்றைக்கு நாம் சமத்துவபுரங்கள் உருவாக வேண்டுமென்று பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். விடுதலைப்

போராட்ட தளகர்த்தர் பெரியவர் செங்கல்வராயன் அவர்கள் கையால் இராமானுஜர் விருது பெற்ற நான் அதைப்பற்றி நீண்ட நேரம் பேசிவிட்டேன்.

இங்கே அண்ணா அவர்களுடைய பெயரால் நம்முடைய சிவராமன் அவர்கள் விருது பெற்றிருக் கிறார்கள். சிவராமன் எவ்வளவு அழுத்தமான ஆணித் தரமான வாதங்களை ஏட்டின் மூலமாக நாட்டிற்குத் தந்தவர் என்பதை நாமெல்லாம் அறிவோம். ஏதாவது ஒரு பெரிய பிரச்சினையில் சந்தேகம் ஏற்பட்டால், இதைப்பற்றி சிவராமன் என்ன எழுதுகிறார் என்று இன்றல்ல, அந்தக் காலத்திலேயே, நாங்கள் எல்லாம் மாணவர்களாக இருந்த அந்தக் காலத்திலேயே தினமணி பத்திரிகையை வாங்கிப் படித்துவிட்டு புரிந்து கொண்டோமென்றால் சிவராமன் அவர்களின் பெருமை எளிதில் விளங்கும். அவர் இங்கே பேச மறுத்து விட்டார். காரணம் அவர்களுடைய முதிர்ந்த பருவம். நாமெல்லாம் பேசுவதைக் கேட்க முடியாத அளவுக்குச் செவிப்புலனில் பலகீனம். எனவே என்ன பேசினோம் என்பது தெரிந்தால்தான் பேச முடியுமென்பதற்காக அவர் பேச மறுத்துவிட்டா ரேயல்லாமல் வேறல்ல.

அண்ணாவின் கதை என்று தினமணி கதிர் சார்பாக ஒரு புத்தகம் வெளியிடப்பட்டது. நம்முடைய நண்பர் சாவி அவர்கள் தினமணி கதிரிலே பணி யாற்றிய அந்தக் காலத்தில் அந்தப் புத்தகம் வெளியிடப் பட்டது. அதை நான்தான் வெளியிட வேண்டுமென்று தினமணி அலுவலகத்தின் சார்பில் கேட்டு நான் வெளியிடச் சென்றிருந்தேன். அப்போது சிவராமன் பேசிய பேச்சு, அவர்கள் அந்த உரையிலே எங்கள் உள்ளத்தில் பதியவைத்த அந்தக் கருத்துக்கள்

இன்றைக்கும் என் நினைவில் நிழலாடிக் கொண்டிருக் கின்ற கருத்துக்களாகும். அந்த அளவிற்கு அனுபவம் வாய்ந்த ஒரு பெரியவர். அவர் இன்னும் நீண்ட நாள் வாழ வேண்டும். நான் அடிக்கடி, அவர் எப்படி யிருக்கிறார் என்று அவரைச் சார்ந்தவர்களை யெல்லாம் கேட்டுக் கொண்டிருப்பேன். அவர் இந்த விழாவிற்கு வந்ததும், அண்ணா அவர்களின் பெயரால் தரப்பட்ட விருதைப் பெற்றுக் கொண்டதும் பெருமை அளிக்கக் கூடிய செய்திகளாகும்.

அதைப் போலவே என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் பெயரால் அளிக்கப்பட்ட விருதினை நம்முடைய அம்மையார் இராதா தியாகராஜன் பெற்றுக் கொண்டிருக்கிறார். அம்மையார் தமிழிலே எந்த அளவிற்குப் புலமை வாய்ந்தவர் என்பதும் எல்லா இலக்கியங்களையும் கற்க வேண்டுமென்பதில் எந்த அளவிற்கு ஆர்வம் உடையவர் என்பதும் அந்த ஆர்வத்தோடு நிற்காமல், அவைகளையெல்லாம் இன்று முழுமையாகக் கற்றுள்ளவர் என்பதும் நான் அறிந்த உண்மையாகும். எனவே அவர்களுக்கு என்னுடைய நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரால் உள்ள விருதினை அளித்திருப்பது சாலப்பொருத்தமுடைய தாகும்.

என் பெயரால் உள்ள விருதை நம்முடைய முனைவர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இதிலே விருதுக்குப் பெருமையோ இல்லையோ எனக்குத் தெரியாது. அதைப்பெற்றுக் கொண்டுள்ள சிலம்பொலி செல்லப்பன் முனைவர் மாத்திரமல்ல, தமிழகம் முன்னேற வேண்டுமென்பதிலும், தமிழ் வளர வேண்டும், வலிமை பெற வேண்டுமென்பதிலும் எல்லோரிடமும்

போட்டி போடக் கூடிய அளவிற்குப் புலமை வாய்ந்தவர். அப்படிப்பட்ட சிலம்பொலி செல்லப்பனை நீண்ட நாட்களாக நான் அறிவேன். தமிழுக்காக வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் அவரும் ஒருவர். எனவே, அவருக்குக் கிடைத்துள்ள இந்த விருது நிகழ்ச்சியில் நான் அவரையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த விருது வழங்குகின்ற விழாவை ஒவ்வொரு ஆண்டும் ஆழ்வார்கள் மையத்தின் சார்பில் நடத்திக் கொண்டிருக்கின்ற ஆர்.எம்.வீ. அவர்களுக்கும் செயலாளர் ஜெகத்ரட்சகன் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை உங்கள் அத்தனை பேர் சார்பிலும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்குப் பொன்னாடை போர்த்தினார்கள். இராமானுஜர் படம் பொறித்த விருது கேடயத்தை வழங்கினார்கள். அத்துடன் நில்லாமல் என்னுடைய 75 வயதைக் காட்டுகின்ற வகையில் 75 ஆயிரம் ரூபாயை பரிசாகவும் தந்திருக்கின்றார்கள். அப்பொழுதுதான் நான் எண்ணிக் கொண்டேன். 75 தானே ஆகிறது, 100 ஆக ஆகியிருக்கக் கூடாதா (சிரிப்பு) என்று எண்ணிக் கொண்டேன்.

நான் பொதுவாக இதுபோல் விருதுகளில் தரப்படுகின்ற பரிசுகளையெல்லாம் நானே எடுத்துக் கொள்வதில்லை என்பது உங்களுக்குத் தெரியும். எனக்குப் பல இடங்களில் தரப்பட்ட விருதுகள் – நம்முடைய முன்னாள் குடியரசு துணைத் தலைவர் அவர்களே வந்திருந்து தஞ்சையிலே வழங்கிய இராஜராஜ சோழன் விருதுக்காகத் தரப்பட்ட ஒரு இலட்சம் ரூபாயை அந்தப் பல்கலைக் கழகத்திற்கே தந்து என்னுடைய தந்தையார் தாயார் பெயரில் ஒரு அறக்கட்டளை நிறுவி,

அதன் பேரில் பல சொற்பொழிவுகளை நடத்துங்கள் என்று கொடுத்து விட்டேன்.

இங்கேயும் அப்படிக் கொடுத்து விடுவேன் என்று ஜெகத்ரட்சகன் எண்ணக் கூடாது (சிரிப்பு) ஆர்.எம்.வீ. யும் எதிர்பார்க்கக்கூடாது. இதுகுறித்து நானும் மூப்பனார் அவர்களும் யோசித்து ஒரு முடிவெடுத்திருக்கிறோம். இராமானுஜர் சமத்துவத்திற்காகப் பாடுபட்டவர், அதைச் செயல்படுத்தியவர். எனவே, அவர் பெயரால் தரப்பட்ட விருதை இந்த அரசின் சார்பாக நான் தொடங்கி யிருக்கின்ற சமத்துவபுரங்களுக்கு வழங்குவதற்கு இந்த 75 ஆயிரம் ரூபாயை அரசின் நிதியிலேயே சேர்க்கிறேன். (பலத்த கைதட்டல்) இந்த 75 ஆயிரம் ரூபாய் மாத்திரம் அதற்குப் போதாது. அரசிடம் நிதி இருக்கிறது. செலவழிக்கலாம். ஆனால் உள்ள நிதி எல்லாம் ஊதியத்திற்காக வழங்குவதற்கே சரி பாதிக்கு மேல் போய்விடுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே, நீங்களும் சமத்துவபுரத்திலே ஆர்வம் உள்ளவர்கள் என்பதை எடுத்துக்காட்ட– நீங்கள் என்றால் இங்கே மண்டபத்திலே உள்ளவர்கள் மாத்திரமல்ல, தமிழகத்திலே உள்ள எல்லா மக்களும் – பெரியாருடைய, அண்ணாவினுடைய, புரட்சிக்கவிஞருடைய, இராமானு ஜருடைய கருத்தில் – சமத்துவ நோக்கத்திலே அனை வருக்கும் ஆர்வம் இருக்கிறது என்பதைக் காட்டும் வகையிலே – அதை மெய்ப்பிக்கும் வகையில் ஒவ்வொருவரும் உங்களால் இயன்ற நிதியை இன்று முதல் தொடர்ந்து வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அப்படி வழங்குபவர்களில் முதலாவதாக நம்முடைய மூப்பனார் அவர்கள் இன்றைக்கு ஒரு இலட்சம் ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். (பலத்த கைதட்டல்) இன்னும்

வழங்கவில்லை. இருந்தாலும் வழங்கியிருக்கிறார்கள் என்று சொன்னதற்குக் காரணம் அது வழங்கப்பட்டதாக அர்த்தம். அவ்வளவு நம்பிக்கைக்குரியவர் அவர் என்ற காரணத்தால் அது வழங்கப்பட்டதாகக் கூறுகிறேன். அவரைப் பின்பற்றி எல்லோரும் சமத்துவபுரத் திட்டத் திற்குத் தங்களுடைய உதவியைச் செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு வழி வகுக்கின்ற வகையிலே இந்த நல்ல விழா நம்முடைய ஆர்.எம்.வீ. அவர்களும் ஜெகத்ரட்சகன் அவர்களும் முன்னின்று நடத்திய ஆழ்வார்கள் மையத்தின் சார்பில் நடைபெறுகின்ற இந்தவிழா பயன்பட்டிருக்கிறது என்பதற்காக இந்த மையத்திற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

12-9-98 அன்று சென்னையில் ஆழ்வார்கள் ஆய்வு மைய விழாவில் ஆற்றிய உரை

27

சென்னை – எக்ஸ்னோரா மற்றும் ரோட்டரி நிறுவனங்களின் பாராட்டு விழா

இன்று எக்ஸ்னோரா இண்டர்நேஷனல் சார்பில் பல்வேறு தொண்டு நிறுவனங்கள் இணைந்து நடத்துகின்ற இந்தப் பாராட்டு விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு நீங்கள் வழங்குகின்ற பாராட்டுக்களைப் பெறுகின்ற பாக்கியத்தைப் பெற்றமைக்காக நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பாராட்டியவர்கள் அனைவருமே எனக்குப் பழக்கமானவர்கள்தாம். அவர்களை நான் நன்கு அறிந்தவன். அவர்களும் என்னை நன்கு அறிந்தவர்கள். இந்தப் பாராட்டு விழாவில் தனிச்சிறப்பு என்னவென்றால் தண்ணீர் இல்லை என்று சென்னையை விட்டுச் சென்ற சேஷன் அவர்கள் தண்ணீர் கிடைத்தவுடன் சென்னைக்கு வந்திருப்பதுதான் ஒரு தனிச்சிறப்பு. (கைதட்டல்)

சேஷன் பேசும்போது சொன்னார். நான் மற்றவர்களைப் போல, கலைஞரைப் போல அடுக்குமொழியில் பேசமாட்டேன். நான் ''அடுக்கு மொழி பேசி அறியேன்'' என்றார். அதுதான் ஐயா அடுக்குமொழி. (கைதட்டல்) 'அடுக்குமொழி பேசி

அறியேன்' என்று அடுக்கிலே சொன்னதுதான் அடுக்கு மொழி. சில பேர் அடுக்கு மொழி என்று கருதிக்கொண்டு தடுக்குமொழி பேசுவார்கள். ஆனால், தங்கள் மொழி தமிழ்மொழி. தங்கள் மொழி நல்ல உணர்வுள்ள மொழி. தங்கள் மொழி உள்ளத்திலே இருந்து வெளிவந்த மொழி.

நான் இந்த மாபெரும் விழா நிகழ்ச்சியில் ஒன்றைச் சொல்லியாகவேண்டும். ஒரு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் என்று ஒன்று இருக்குமா? அந்தக் கழகத்தினுடைய சின்னம் உதயசூரியன் என ஒன்று இருக்குமா? அந்தக் கழகத்தினுடைய கொடி அறிஞர் அண்ணா வழங்கிய இருவண்ணக்கொடி இருக்குமா? என்ற ஒரு கேள்வி எழுந்தபோது, தேர்தல் ஆணையத்தில் வழக்கு நடைபெற்றது. அப்போதெல்லாம் எனக்கு அன்புக்குரிய சேஷன் அவர்களை அவ்வளவாகத் தெரியாது. ஒரு காலத்திலே தமிழகத்தில் நிர்வாகப் பொறுப்பிலே ஒரு அதிகாரியாக இருந்தவர் என்பது தெரியும். பிறகு, டெல்லி பட்டணத்திலே செல்வாக்கு மிக்க அதிகாரியாக இருந்தார் என்பது தெரியும். பின்னாளில் தேர்தல் ஆணையாளராக அவர் நியமிக்கப்பட்டதும் தெரியும். அவரோடு அடிக்கடி தொடர்பு கொள்கின்ற வாய்ப்போ, பழகுகின்ற வாய்ப்போ என்றைக்கும் இருந்ததில்லை. மிகவும் கண்டிப்பானவர். நேர்மையானவர். தவறு கண்ட இடத்திலேயே திருத்தக் கூடியவர். தான் செய்வது தவறு என்பது தெரிந்தாலும் திருத்திக்கொள்ளக்கூடியவர், அதுதான் ஒரு முதன்மையான மனிதனுக்கு அடையாளம். அத்தகையவர் சேஷன் என்பதை மாத்திரம்தான் நான் அறிந்திருந்தேன்.

இந்த வழக்கில் என்ன தீர்ப்பு தேர்தல் ஆணையத்தின் வாயிலாக வருமோ என்று ஏங்கித்தவித்த காலகட்டம் அது. அந்த வழக்கு நடத்துவதற்காக

டெல்லிக்குப் பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களும், தம்பி முரசொலி மாறனும், அருமை நண்பர் ஆர்க்காடு வீராசாமியும் டெல்லியிலே முகாமிட்டிருக்கிறார்கள். தீர்ப்பு வெளியாகிற நாளன்று நான் சேலத்திலே இருக்கிறேன். வீராசாமியிடத்திலே பேசும்போது சொன்னேன். ''கொடியும் கழகத்தின் பெயரும் இரண்டையும் காப்பாற்றிக் கொண்டு வாருங்கள். இல்லாவிட்டால் நீங்கள் வரும்போது கருணாநிதியைப் பார்க்கமுடியாது'' என்று அவரிடத்திலே சொன்னேன். இன்றைக்கு உங்கள் முன்னால் கருணாநிதி நின்று கொண்டிருக்கிறான். காவிரியைக் கொண்டு வந்தான் கிருஷ்ணா தண்ணீரை வாங்கி வந்தான் என்றெல்லாம் புகழுகின்றீர்களே அதற்குக் காரணமாக அன்றைக்கு இருந்தவர் நேர்மையான தீர்ப்பு வழங்கிய நம்முடைய டி.என். சேஷன் அவர்கள் (பலத்த கைதட்டல்) என்பதை இதுவரையிலே பாராட்டி பெருமைகொள்ள இடம் வாய்க்காத காரணத்தால், இதுதான் சரியான இடம் அவரை நேருக்கு நேராக வைத்துக்கொண்டு பாராட்டுகின்ற இடம் என்பதற்காக இதைச் சொல்கின்றேன்.

அத்தகையவர் காவிரியைப் பற்றியும், கிருஷ்ணாவைப் பற்றியும் விளக்கமாக இங்கே பேசாவிட்டாலும் கூட, அதனுடைய நுட்பங்களைத் தெரிந்து வைத்து, கங்கையையும் காவிரியோடு இணைக்க வேண்டும் என்ற கருத்தை எடுத்துச் சொன்னார். கங்கையையும் காவிரியையும் இணைக்க வேண்டும் என்கின்ற திட்டம் அவருக்கே தெரியும். மத்தியிலே நீர்ப்பாசனத் துறை அமைச்சராக கே.எல். ராவ் இருந்த அந்தக் காலத்திலேயே தொகுக்கப்பட்டு பேசப்பட்டது. அப்போது காவிரிப் பிரச்சினைக்காக நாங்கள் டெல்லியிலே அன்றைக்கு இருந்த நீர்ப்பாசனத் துறை அமைச்சரிடத்தில் நானும், கர்நாடக முதல்வர் வீரேந்திர பட்டேல் அவர்களும் கேரள முதல்வர்கள் ஈ.எம்.எஸ். மற்றும் அச்சுத மேனன்

போன்றவர்களும், பாண்டிச்சேரி முதலமைச்சர் அவர்களும் படை எடுத்துக் கொண்டிருந்த அந்தக் காலக்கட்டத்தில் ஒருநாள் கே.எல்.ராவ் எங்களையும் மற்ற தென்னக மாநில முதலமைச்சர்களையும் அவர் இல்லத்திற்கு இரவு நேர விருந்துக்கு அழைத்து விருந்து முடிந்தவுடன் கங்கை காவிரி இணைப்பு என்றால் என்ன? என்பதை விளக்கிச் சொன்னார். விளக்கிச் சொல்லும்போது குறிப்பிட்டார். ஐந்து அல்லது ஆறு இடங்களில் பிரம்மாண்டமான நீரேற்று நிலையங்களை உருவாக்கவேண்டும். அப்படி உருவாக்கினால்தான் இடையிடையிலே இருக்கின்ற மேடு பள்ளங்களைச் சரி செய்து, சமமாக்கி பெரும் குழாய்கள் மூலமாக தண்ணீரைக் கங்கையிலிருந்து காவிரிக்குக் கொண்டு வரமுடியும் என்று கூறிவிட்டு முதல் நீரேற்று நிலையம் வடநாட்டிலே உருவாவதற்குத் தேவையான மின்சராம் எவ்வளவு தெரியுமா? இன்றைக்கு இந்தியா முழுமையும் பயன்படுத்தப்படுகின்ற மின்சாரம் அந்த ஒரு நீரேற்று நிலையத்திற்குத் தேவை என்று சொல்லி இந்தத் திட்டம் வரவேற்க முடியாத திட்டம் என்பதை அன்றைக்கு விளக்கினார்.

ஆனால், இன்றைக்கு திரு. சேஷன் விரும்புவதைப் போல, நீங்கள் விரும்புவதைப் போல கங்கையும், காவிரியும் இணையாவிட்டாலும்கூட முதல் கட்டமாக கோதாவரி, காவிரி போன்ற நதிகளை இணைத்தாலே, பிறகு அடுத்தடுத்து நதிகள் ஒன்றோடு ஒன்று இணைந்து இந்தியா முழுமையும் ஒரு தேசிய நதிக் கொள்கையை வகுக்கின்ற அளவிற்கு நதிகளை, ஆறுகளை இணைக்கமுடியுமென்று நான் நம்புகின்றேன். காரணம், அந்த அளவிற்கு இன்றைக்கு விஞ்ஞான வளர்ச்சி முகட்டை எட்டியிருக்கின்றது. அந்த நம்பிக்கையிலேதான் நான் சொல்லுகின்றேன்.

காவிரிப் பிரச்சினை தகராறு ஆரம்பித்து 30 ஆண்டுகள் ஆகிறது. கிருஷ்ணா பிரச்சினைக்குக் கடைசியாக ஒப்பந்தம் போடப்பட்டு நிறைவேறிய காலம் 15 ஆண்டுகள். 30 ஆண்டு காலம் படாத பாடுபட்டு வந்திருக்கின்ற காவிரிக்கும், 15 ஆண்டுக்காலமாக பொதுப்பணியாற்றி வந்திருக்கின்ற கிருஷ்ணா தண்ணீருக்கும் எனக்கு நீங்கள் பாராட்டு சொல்கின்ற அதே நேரத்தில் நான் உங்களுக்கும் பாராட்டு சொல்கின்றேன். இது என்னால் நடந்தது என்று நீங்கள் நம்புவீர்களேயானால், என்னை நீங்கள் இந்தப் பொறுப்புக்குக் கொண்டு வந்து வைத்த உங்களுக் கல்லவா நான் நன்றி தெரிவித்தாக வேண்டும்.

காவிரிப் பிரச்சினை – சேஷன் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப் போல, பல ஆண்டுக்காலத்திற்கு முன்னே, குறிப்பாக 1924–ஆம் ஆண்டு நடைபெற்ற ஒப்பந்தத்தைச் சொன்னார்கள். அதற்கு முன்பே 1892 –ஆம் ஆண்டு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதற்கு முன்பெல்லாம் மைசூர் மாநிலத்தில் காவிரியைப் பற்றி கவலைப்படுகின்ற அரசுகள் இல்லை. ஐதர் அலி, திப்பு சுல்தான் போன்ற மன்னர்கள் மைசூர் பகுதியை ஆண்டு கொண்டிருந்த நேரத்தில், யுத்த களங்களில் எதிரிகளைச் சந்திப்பதற்கே இவர்களுக்கு நேரம் சரியாக இருந்தது. எனவே, அந்தப் பகுதியிலே உள்ள நீர் ஆதாரங்களைப் பயன்படுத்தி மக்களுக்கு நன்மைகளைச் செய்ததற்கான திட்டங்கள் தீட்டுகின்ற காலம், அவர்களுக்கு கனிந்திருக்கவில்லை. அவர்களுடைய ஆட்சிகளுக்குப் பிறகுதான் உடையார்களுடைய சாம்ராஜ்யம் மைசூர் பகுதியிலே ஆரம்பமாகி அவர்கள்தான் மக்களுக்கு நன்மைகளைச் செய்ய இந்த நீர் ஆதாரங்களை எப்படி பயன்படுத்துவது என்று அணைகளைக் கட்டத் தொடங்கினார்கள்.

அப்படிக் கட்டப்பட்டபோதுதான் வெள்ளைக்காரர் களுடைய ஆட்சி வந்துவிட்டது. வெள்ளைக்காரர் களிடத்தில் தமிழ்நாட்டு விவசாயிகள் தங்களுடைய

குறைகளைத் தெரிவித்த காரணத்தால் அவர்கள் செய்த ஒப்பந்தம்தான் கிருஷ்ண ராஜசாகர் அங்கே கட்டப் பட்டபோது, செய்துகொள்ளப்பட்ட 24 –ஆம் ஆண்டு ஒப்பந்தம். அந்த ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாகப் பத்து ஆண்டுகளுக்கு பிறகு, 34–ஆம் ஆண்டு மேட்டூர் அணை கட்டப்பட்டது. இந்த அணைக்கு வரவேண்டிய தண்ணீர் அளவு எவ்வளவு? அது எப்படியெல்லாம் பெறப்பட வேண்டும். 74–ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தம் முடியாது. முடிவடையாது. 74–ஆம் ஆண்டு உபரியாக வருகின்ற தண்ணீரைக் கணக்கிட்டு இரண்டு மாநிலங்களும் பகிர்ந்துகொள்ளவேண்டும் என் றெல்லாம் சரத்துக்கள் அடங்கிய ஒப்பந்தத்தை 24–ஆம் ஆண்டு ஒப்பந்தத்திலே இணைத்தார்கள். ஆனால், சில பேர் பிரச்சாரம் செய்தார்கள் 24–ஆம் ஆண்டு செய்த ஒப்பந்தம் முடிந்துவிட்டது முடிந்துவிட்டது என்று. அந்தப் பிரச்சாரத்தை முதன்மையாக கர்நாடக அரசு செய்கிறது. தமிழ்நாட்டிலே உள்ளவர்களுக்கு அதனுடைய விவரம் முழுமையாகப் புரியாத காரணத்தால் 74–ஆம் ஆண் டோடு இது முடிவடைகிறது என்று அவர்களும் எண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆனால், உண்மை அது அல்ல.

பொறியாளர்கள் அந்தத் துறையிலே நிபுணர்களாக இருந்தவர்கள் அந்த விளக்கத்தைத் தந்து கர்நாடக அரசுக்கு எச்சரிக்கை விட்ட அந்தக் கால கட்டத்தில் 67–ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்தது. அப்பொழுது தமிழகத்துக்குக் கிடைத்த செய்தி ஏற்கனவே ஹேமாவதி உள்ளிட்ட இரண்டு மூன்று இடங்களில் கர்நாடக அரசு அணைகளைக் கட்டிக் கொண்டிருக்கிறது. அவர்கள் அணைகளைக் கட்டக் கட்ட நம்முடைய பாசன ஆதாரத்தின் பரப்பளவு குறையும். எனவே அந்த அணைகளைக் கட்டுவதைத் தடுக்க வேண்டும் என்ற

எண்ணம் தமிழகத்திலே எழுந்தது. அப்போது அண்ணா முதலமைச்சர். நான் பொதுப்பணித்துறை அமைச்சர். இன்றைக்குப் பொறுப்பிலே தம்பி துரைமுருகன் இருக்கிறாரே, அந்த பொதுப்பணித்துறை அமைச்சராக அன்றைக்கு நான் இருந்தேன். அண்ணா அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சர் என்ற முறையிலே என்னை டெல்லிக்கு அனுப்பி பேசச் சொன்னார். அப்போது கே.எல். ராவ் மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர். அப்போது கர்நாடகத்திலே முதலமைச்சராகவும், பொதுப் பணித்துறையையும் ஏற்றிருந்தவருமாக வீரேந்திர பட்டேல் இருந்தார். அவர், கேரளத்து முதலமைச்சர், பாண்டிச்சேரி முதலமைச்சர் அனைவரும் கலந்துபேசி 68–ஆம் ஆண்டு பேசத் தொடங்கி 98–ஆம் ஆண்டிலே தான் அது இறுதி வடிவத்திற்கு வந்திருக்கின்றது.

இடையிடையே எத்தனையோ நிகழ்வுகள். அண்ணாவிற்குப் பிறகு நான், எனக்குப் பிறகு அருமை நண்பர் எம்.ஜி.ஆர் முதலமைச்சர். அதற்குப் பிறகு மீண்டும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. 96–ஆம் ஆண்டு நாம் ஆட்சிக்கு வருகின்ற வரையில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டன. இதற்கிடையிலே தான் தஞ்சாவூர் விவசாயப் பெருங்குடி மக்கள் அவர்கள் சங்கத்தின் சார்பாக உச்சநீதிமன்றத்திலே ஒரு வழக்கைத் தொடுத்தார்கள். அந்த வழக்கு நடுவர் மன்றம் வேண்டும் என்ற கோரிக்கையை முனைப்பாக வைத்து தொடரப்பட்ட வழக்காகும்.

அந்த வழக்கு உச்சநீதி மன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது 89–ஆம் ஆண்டில் நாம் ஆட்சிக்கு வந்திருந்தோம். அப்போது டெல்லியிலே பிரதமராக வி.பி.சிங் வீற்றிருக்கின்றார். நாமும் தஞ்சாவூர் விவசாயிகள் சங்கம் நடத்திய வழக்கில் இணைத்துக் கொண்டோம். உச்சநீதிமன்றத்தில் அந்த வழக்கு வந்தது. இங்கே சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது வி.பி. சிங் அவர்கள் என்னிடத்திலே

தொலைபேசி மூலமாகப் பேசினார். சட்டமன்றத்திலே இருந்த நான் அவசரமாகச் சென்று தொலைபேசியில் பேசினேன். அப்போது சொன்னார். மத்திய அரசின் நிலை என்ன? என்று உச்சநீதிமன்றத்தில் கேட்கிறார்கள். மத்திய அரசு வழக்கறிஞர் மூலமாகச் சொல்லியனுப்ப வேண்டும். நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்ன சொல்ல வேண்டும் என்று கேட்டார். நான் சொன்னேன் மாநில அரசின் நிலையை நீங்கள் திட்ட வட்டமாகச் சொல்லவேண்டும் என்றேன். என்ன நிலை என்று கேட்டார். இனிமேல் பேச்சுவார்த்தையினால் பலன் இல்லை. காரணம் 25 தடவைக்கு மேல் பேசியாகி விட்டது. நடுவர் மன்றத்தைத் தவிர வேறு நிவாரணம் இல்லை என்று சொல்லிவிடுங்கள் என்று சொன்னேன். அப்படியானால் சட்டமன்றத்திலிருந்து ஒரு தீர்மானத்தைப் போட்டு அனுப்புங்கள் என்றார். உடனடியாக சட்ட மன்றத்திலே தீர்மானத்தைப் போட்டு நடுவர்மன்றம் தான் தேவை என்ற தீர்மானத்தை நிறைவேற்றி, அதை பிரதமர் வி.பி.சிங் அவர்களுக்கு அனுப்பிவைத்தோம். அவர் மத்திய அரசின் வழக்கறிஞர் மூலமாக அதை உச்ச நீதிமன்றத்தில் எடுத்துச் சொன்னவுடன் உச்ச நீதிமன்றம் இனி பேச்சு வார்த்தைக்குத் தயார் இல்லை என்றால் நடுவர் மன்றத்தைத் தவிர இனி வேறு வழி இல்லை. எனவே நடுவர் மன்றம் தொடங்க அதற்கு உத்தரவிட நான் மத்திய அரசுக்கு உத்தரவிடுகிறேன் என்று உச்சநீதிமன்றம் ஆணை பிறப்பித்தது. அதற்குப் பிறகு ஒரு மாத காலத்தில் வி.பி. சிங் அவர்கள் நடுவர் மன்றத்தை அமைத்தார்.

நடுவர் மன்றம் அமைத்தவுடன் நம்முடைய அரசின் சார்பிலே ஒரு கோரிக்கை வைத்தோம். நீங்கள் முழுமையான தீர்ப்பு அளிப்பது பிறகு இருக்கட்டும். முதலில் இடைக்காலத் தீர்ப்பை வழங்குங்கள் என்று

கேட்டோம். நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பு வழங்க எங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னது. மீண்டும் உச்சநீதிமன்றம் சென்றோம். அதிகாரம் இல்லை என்கிறார்கள் அதிகாரம் உண்டா? இல்லையா? என்று நீங்கள்தான் சொல்லவேண்டும் என்று உச்சநீதிமன்றத்திலே கேட்டோம். உச்சநீதிமன்றம் உடனடியாகச் சொன்னது. இடைக்கால நிவாரணம் அளிக்க நடுவர்மன்றத்திற்கு அதிகாரம் உண்டு என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதை வைத்து மீண்டும் வாதாடினோம். பிறகு ஆட்சி கலைக்கப்பட்டது. பின்னர் வந்த ஆட்சியிலே நடுவர்மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு கிடைத்தது. 205 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகம் தமிழகத்திற்கு வழங்கவேண்டும். மாத வாரியாக எத்தனை டி.எம்.சி. என்றெல்லாம் கணக்கிட்டு ஜூன் மாதத்தில் இவ்வளவு, ஜூலையில் இவ்வளவு என்று ஜூன் மாதம் தொடங்கி மே மாதம் முடிய ஒரு கணக்கை உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி நடுவர்மன்றம் இடைக்காலத் தீர்ப்பாக வழங்கியது. அதை நிறைவேற்ற வேண்டும் என்றுதான் தமிழ்மக்கள் கேட்டார்கள். ஆனால், கர்நாடக அரசு நிறைவேற்ற இணங்கவில்லை. மறுத்து விட்டது.

அந்த வாக்குவாதம் கடந்த 7, 8 ஆண்டுகளாக நடைபெற்று இப்போது ஒரு உடன்பாடு ஏற்பட்டது. அந்த உடன்பாடுதான் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் முன்னிலையில் நானும், கர்நாடக முதலமைச்சரும், பாண்டிச்சேரி முதலமைச்சரும், கேரள முதலமைச்சரும் ஒன்றாக அமர்ந்து 9 மணி நேரம் வாதாடி எனக்குத் துணையாக தம்பி துரைமுருகனும், சட்ட அமைச்சர் ஆலடி அருணாவும் வந்திருந்து அவர்களும் என்னுடன் சேர்ந்து வாதாடி, அதிலே கிடைத்த பயன்தான் நமக்கு மாத்திரமல்ல. நான்கு மாநில விவசாயிகளுக்கும் கிடைத்த

பயன்தான் இந்த உடன்பாடு என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (பலத்த கைதட்டல்)

இதை வெற்றி என்று சொல்லி கர்நாடகத்தோடு வம்புக்கு இழுத்துவிடலாம் என்று சிலபேர் கருதியதுண்டு. ஆனால், நான் இதை வெற்றியாகக் கருதவில்லை. ஏனென்றால்,

கன்னடமும், களி தெலுங்கும்,
கவின் மலையாளமும், துளுவும்
உன்னுதரத் துதிந்தெழுந்து ஒன்று பல ஆயிடினும்..

என்பதைப் போல கன்னடமானாலும், களி தெலுங்கானாலும், கவின் மலையாளமானாலும் எல்லாம் தென்னக மாநிலங்கள்தாம் என்ற காரணத்தினால் இதை நான் வெற்றி என்று கூறவில்லை. இப்போதும் வெற்றி என்று கருதவில்லை. ஆனால், இந்த உடன்பாடு கருணாநிதி தமிழ்நாட்டுக்குச் செய்துவிட்ட துரோகம் என்று சிலரால் இன்றைக்கும் பேசப்படுகிறது. அப்படிப் பேசுகின்றவர்கள் தெரிந்து பேசுகிறார்களா? தெரியாமல் பேசுகிறார்களா? என்று எனக்கு தெரியும். உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ? எனக்குத் தெரியாது. நல்ல உடன்பாடு என்று தெரிந்தே பேசுகிறார்கள். குஜ்ரால் காலத்திலே போட்ட அந்த திட்ட வரைவை இப்போது நிறைவேற்றவேண்டும். வாஜ்பாய் காலத்து திட்ட வரைவை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று வாஜ்பாய் தலைமையிலே இருக்கின்ற கூட்டணி கட்சித் தலைவர்கள் இது துரோகம் என்று சொல்கிறார்கள். அதாவது, வாஜ்பாயும், கருணாநிதியும் சேர்ந்து தமிழ்நாட்டு மக்களுக்குத் துரோகம் செய்துவிட்டார்கள் என்று சொல்கிறார்கள்.

நான் வாஜ்பாய் அவர்கள் எடுத்த நிலையை – மத்திய அரசு எடுத்த நிலையை எல்லா நிலைகளையும் ஆதரிப்பவன் அல்ல என்பது உங்களுக்குத் தெரியும். தமிழர்களுக்கு எது நல்ல நிலையோ அந்த நிலையை, நாட்டுக்கு எது நல்ல நிலையோ அந்த நிலையை, ஜனநாயகத்திற்கு எது நல்ல நிலையோ அந்த நிலையை ஆதரிப்பவன்தான் இன்றும் என்றும் எப்போதும் கருணாநிதி என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். அந்த வகையிலேதான் இந்த உடன்பாடு இன்றைக்கு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக் கின்றது. கர்நாடக முதலமைச்சராலும், கேரள முதலமைச்சராலும், பாண்டிச்சேரி முதலமைச்சராலும் தமிழக அரசினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது இந்த உடன்பாடு. இதில் என்ன துரோகம் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். எட்டு ஆண்டு காலமாக நடுவர்மன்றத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொன்ன கர்நாடகம் இந்த உடன் பாட்டின் ஒப்பந்தத்தின் முதல் சரத்தே "நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பை ஏற்றுக் கொண்டு அதன்படி. . ." என்று எழுதுகிற சூழ்நிலையில் ஒப்பந்தம் ஏற்பட் டிருக்கிறது என்றால் இதற்குப் பெயர் துரோகமாக இருக்கமுடியுமா? என்பதைத் தயவு செய்து நீங்கள் எண்ணிப்பார்க்கவேண்டும். அதிலும் தஞ்சாவூரிலே பிறந்து காவிரித்தண்ணீரைக் குடித்து, தஞ்சாவூர் மண்ணிலே வாழ்ந்து, தஞ்சாவூர் மண்ணிலே விளையாடி, தஞ்சாவூர் மண்ணிலே விளைகின்ற நெல்லில் இருந்து கிடைக்கின்ற அரிசியைச் சோறாக்கித் தின்று உங்களோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த மண்ணுக்குச் சொந்தக்காரனான நான் தமிழர்களைக்

காட்டிக்கொடுத்தேன், துரோகம் செய்தேன் என்று கூறுவது அரசியலுக்கு வேண்டுமானால் பயன்படலாம். உண்மை அது அல்ல என்பதை நிரூபிக்கின்ற வகையிலேதான் இன்றைக்கு எக்ஸ்னோரா சார்பில் உண்மையான தொண்டுள்ளம் படைத்தவர்கள் இருக்கின்ற பாசறையான எக்ஸ்னோரா சார்பில் இந்த வாழ்த்தும், பாராட்டும் எனக்கு வழங்கப்படுகிறது என்று நான் கருதுகின்றேன்.

சிலர் துரோகி என்கிறார்கள். நீங்கள் நல்ல காரியம் செய்தாய் என்று பாராட்டுகிறீர்கள். சுருக்கமாகச் சொன்னால் சிலர் காயப்படுத்துகிறார்கள். நீங்கள் இன்றைக்கு மருந்து போட்டிருக்கின்றீர்கள். அதற்காக என்னுடைய நன்றியை நிர்மல் அவர்களுக்கும் எக்ஸ்னோரா அமைப்பைச் சேர்ந்த உங்கள் அத்தனை பேருக்கும் பாராட்டுரை வழங்கிய பாசமுள்ள நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதைப்போலவே கிருஷ்ணா தண்ணீர். கிருஷ்ணா நீர் வருவதற்கு என்.டி.ஆரோடு, சென்னாரெட்டியோடு, ஜனார்த்தனரெட்டியோடு, சந்திரபாபு நாயுடுவோடு இப்படி நான்கைந்து முதல்வர்களோடு பேசியிருக் கிறோம். என்னைப் பொறுத்தவரையில் நானே நாலைந்து முதலமைச்சர்களோடு பேசியிருக்கிறேன். இந்த கிருஷ்ணா நதி நீரைப் பற்றி, இதற்காகக் கடிதம் எழுதி மத்திய அரசோடு தொடர்பு கொண்டவர், 1948–ஆம் ஆண்டிலேயே அன்றைக்குச் சென்னை மாகாணத் தினுடைய பிரிமியராக இருந்து முதலமைச்சராகப் பொறுப்பேற்ற ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார்தான் இதைப்பற்றி எழுதினார். அதற்கு முன்பே இதைப்பற்றி பேசப்பட்டதுண்டு. பாராளுமன்றத்திலும் பேசப்பட்டது. 53–ஆம் ஆண்டு, 63–ஆம் ஆண்டுகளில் எல்லாம் கிருஷ்ணா தண்ணீரைப் பற்றி பேசப்பட்டதுண்டு.

ஆனால், இதற்காகக் கடிதம் எழுதி மத்திய அரசு உடனடியாக இதை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டவர் ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள். அதற்குப் பின்னர் அது கிடப்பிலே போடப்பட்டது. தொடர்ந்து வந்த முதலமைச்சர்கள் எல்லாம் முயற்சி எடுத்துக்கூட நிறைவேறவில்லை.

என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களும், ஆந்திர முதல்வர் என்.டி. ராமராவ் அவர்களும், இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி முன்னிலையில், சென்னைக் கடற்கரையில் கிருஷ்ணா தண்ணீர் திட்டத்தை அறிவித்து ஒப்பந்தமும் செய்து கொள்ளப்பட்டது. அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்று வதற்காக எத்தனை முறை நானும், நண்பர் வீராசாமியும் மற்றவர்களும் பொதுப்பணித்துறை அமைச்சரும் ஆந்திரத்திற்குச் சென்றிருக்கிறோம். எத்தனை முறை அந்த அமைச்சர்களோடு பேசியிருக்கிறோம். எத்தனை முறை அந்த அதிகாரிகளோடு வாதாடியிருக்கிறோம். அதைப்போல அவர்களும் எத்தனை முறை இங்கு வந்திருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். சென்ற ஆண்டு திறந்துவிடப்பட்ட கிருஷ்ணா தண்ணீர் புராணிகர்கள் பாஷையில் சொல்ல வேண்டுமானால் நம்முடைய போதாத காலம் மழை வெள்ளத்திற்கு இலக்காகி நாம் எண்ணியவாறு முழுமையாகக் கிடைக்காமல், ஒரு ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, பல ஏற்பாடுகள் செய்து இன்றைக்கு முழுமையாக ஒப்பந்தப்படி எந்த எந்த மாதங்களில் நமக்குத் தண்ணீர் வரவேண்டுமோ, அந்த வகையிலே அந்தத் தண்ணீர் சென்னைக்கு வரத்தொடங்கி விட்டது.

நேற்றைய தினம் ஒரு விழா. நேற்றைக்கு முன்தினம் ஒரு விழா, நேற்று முன்தினம் வள்ளுவர் கோட்டத்திற்குக் பக்கத்திலே உள்ள இடத்தில் இந்தப் பகுதிக்கெல்லாம்

ஏறத்தாழ 3 லட்சம் மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவிற்குக் கிருஷ்ணா தண்ணீர் மற்றும் சென்னைக் குடிதண்ணீர் திட்டத்திற்காக ஒரு மாபெரும் தொட்டி இங்கே திறந்து வைக்கப்பட்ட விழா. நான் அந்த விழா முடிந்து திரும்பிச் செல்லும்போது பார்த்தேன். அந்தத் தொட்டியின் உயரத்தையும் பார்த்தேன். வள்ளுவர் கோட்டத்தில் அமைந்திருக்கின்ற தேரின் உயரத்தையும் பார்த்தேன். அந்தத் தேரை பார்க்கும்போது எனக்கு எத்தனையோ நினைவுகள். வள்ளுவர் கோட்டத் தினுடைய மண்டபம் எப்படி இருக்கவேண்டும் என்று சிற்பிகள் கேட்ட நேரத்தில் நான் திருவாரூர் தேர் போல இருக்கவேண்டும் என்று இந்த வரைபடத்தை வரைந்து கொடுத்தவனே நான்தான். ஆனால், நேற்றைக்கு இந்தத் தொட்டியினுடைய உயரத்தைப் பார்க்கும்போது எனக்கு அதைவிட இந்தத் தொட்டி உயர்வாகத் தெரிந்தது. அது தெய்வீகம் வாய்ந்ததுதான். திருவாரூர் தேர், அந்த தெய்வீகத்தைவிட உயர்ந்ததாக தொட்டி தெரிந்ததற்குக் காரணம், இது ஆயிரக்கணக்கான தெய்வங்களை வாழ வைக்கக்கூடிய தண்ணீரை நிரப்பிக் கொண்டிருக்கின்ற தொட்டி என்ற காரணத்தால். அதைப் போலவே சேப்பாக்கம் தொகுதியில் ஒரு பெரிய நீர்த்தேக்கத் தொட்டி திறப்பு விழா. அதிலும் கிருஷ்ணா தண்ணீரைப் பயன்படுத்தி சென்னை வாழ் மக்களுக்குத் தம்பி ஸ்டாலின் இங்கு எடுத்துக்காட்டியதைப் போல 70 லிட்டரிலிருந்து ஒருவருக்கு 100 லிட்டர் வரை தரக்கூடிய அளவிற்கு பெருகியிருக்கின்ற அந்தத் திட்டத்தினுடைய விழா. நேற்றும் நேற்று முன்தினமும் இந்த விழாக்கள் நடைபெற்றிருக்கின்றன.

தொடர்ந்து சென்னை மாநகரத்திலே எத்தனை தொட்டிகள் திறக்கப்படவேண்டுமோ அவ்வளவும் திறக்கப்பட்டு, சென்னை நகரத்தின் குடிநீர் தேவை

முழுமையாக ஈடு செய்யப்பட இருக்கிறது. நேற்றைக்கு ஒன்றை அறிவித்தேன். நீண்ட காலத் திட்டம். அதற்கான முயற்சிகள் வேகமாக, தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இடையிலே சற்று தொய்வு விழுந்துவிட்டது என்றாலுங்கூட அந்த முயற்சி இப்போது மேலும் மேலும் வேகமாகத் தொடங்கப்பட்டிருக்கின்றது. அதுதான் கூவம் நதியையும், பக்கிங்ஹாம் கால்வாயையும், அடையாறையும் இந்த மூன்று ஆறுகளையும் சுத்தப்படுத்தி, தூய்மைப்படுத்தி சிங்காரச் சென்னை, சிங்காரச் சென்னை என்று அடிக்கடி மேயர் சொல்லிக் கொண்டிருக்கின்றாரே, உண்மையிலேயே சிங்காரச் சென்னையை உருவாக்குவதற்கு இந்த மூன்று நதிகளையும் சென்னை மாநகர் என்ற நகரின் கழுத்திலே மூன்று முத்தாரங்களாக அணிவிக்கின்ற அந்தக் காட்சியைக் காணவேண்டும் என்பதுதான் என்னுடைய நீண்ட நாள் அவா. அந்த ஆவல் விரைவிலே நிறைவேறும் என்று நான் நம்புகின்றேன்.

நிர்மல், அவர் இன்றைக்கு இந்த விழாவை நடத்தி அவருடைய தொண்டு இயக்கத்திலே இருக்கின்ற ஆயிரக்கணக்கான கிளை உறுப்பினர்களையும் நிர்வாகிகளையும் இங்கே அழைத்து எனக்குப் பாராட்டுக்களைக் குவித்திருக்கின்றார். நிர்மல் என்றாலே தூய்மை என்று பொருள். நிர்மலமான என்று சொல்கிறோமே. நிர்மல் என்றாலே தூய்மை என்று பொருள். எக்ஸ்னோரா என்பது இந்த அமைப்பின் பெயர். இதைப்பற்றி கலைவாணர் அரங்கத்திலே கடந்த ஆண்டு பேசும் போது குறிப்பிட்டேன். எக்ஸ்னோரா என்றால் என்ன என்று கேட்டேன். X என்பதற்கு எக்ஸலண்டு என்று நிர்மல் சொன்னார். N,O என்பதற்கு நாவல் – புதுமையானது என்று சொன்னார். R,A, என்பதற்கு ரேடிக்கல் அதாவது மாற்றம் என்று சொன்னார். நான்

அப்பொழுது பேசும்போது சொன்னேன். எக்ஸ்னோரா வில் எக்ஸ் இருக்கிறது. நோ இருக்கிறது. ரேடிக்கல் இருக்கிறது. இந்த ரேடிக்கல் எப்போதும் இருக்கும். எக்ஸ் என்றால் முன்னாள் ஆகிவிடும். எக்ஸ் மினிஸ்டர் என்றால் முன்னாள் அமைச்சர், எக்ஸ் சேர்மன் என்றால் முன்னாள் தலைவர் என்று ஆகிவிடும். எனவே, இந்த ரேடிக்கலுக்கு எக்ஸ் இல்லை. எக்ஸ் ''நோ''. எக்ஸ்னோ ''ரா'' ரேடிக்கல் என்ற நான் அன்றைக்கு அந்த விழாவிலே விளக்கியிருக்கின்றேன். (பலத்த கைதட்டல்)

எனவே, தொண்டுள்ளம் வாய்ந்த தூயவர்கள் பல பேரைக் கொண்டு நடத்தப்படுகின்ற இந்த இயக்கம் இலட்சக்கணக்கானவர்களை, இந்தியாவில் பல மாநிலங்களில் உள்ளடக்கி நாட்டுக்கு நல்ல பணிகளைச் செய்து வருகின்ற இயக்கம் அவர்களால் நான் பாராட் டப்படுவது என்னுடைய வாழ்க்கையில் கிடைத்த பெரும் சிறப்பு, தனிச் சிறப்பு என்று கூறி என்னுடைய நன்றியை உங்களுடைய பாதமலர்களுக்குக் காணிக்கை யாக்கி என் உரையை நிறைவு செய்கிறேன்.

26-9-98 அன்று சென்னையில்
எக்ஸ்னோரா மற்றும் ரோட்டரி நிறுவனங்களின்
பாராட்டு விழாவில் ஆற்றிய உரை

28

சென்னை – திரையுலகம் நடத்திய பாராட்டுவிழா

கலை உலகப் பெருமக்கள் தம்பி ஏ.வி.எம். சரவணன், கே.ஆர்.ஜி., சிந்தாமணி முருகேசன் மற்றும் விழாக்குழுவிலே இடம்பெற்றுள்ள பாசமிகு நண்பர்கள், அவர்களோடு உடன் இருந்து ஒத்துழைத்த தம்பி கவியரசு வைரமுத்து, இவர்கள் அனைவருக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவாஜி பேசும்போது, பெரியவர் பலர் இருக்கும்போது என்னை ஏன் இந்த விழாவிற்குத் தலைமை ஏற்க அழைத்தீர்கள் என்று கேட்டார். பெரியவர்கள் இருக்கலாம். ஆனால், கலை உலக விழாவிற்குத் தலைமை ஏற்க உரியவர் ஒருவர்தான். (பலத்த கைதட்டல்) எனவே தான் சிவாஜி இந்த விழாவிற்குத் தலைமை ஏற்றிருக்கின்றார்.

வரவேற்புரையாற்றிய இயக்குநர் சிகரம் பாலச்சந்தர் அவர்களும், வாழ்த்துரை வழங்கிய பாரதிராஜா அவர்களும், இடையிலே ஏற்பட்ட சில தடங்கல்களை எல்லாம் குறிப்பிட்டார்கள். பல தடை களுக்குப் பிறகு இந்த விழா நடைபெறுவதாகச் சுட்டிக் காட்டினார்கள்.

ஒன்றை நினைவூட்ட விரும்புகின்றேன். ஒரு போராட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த காலத்தில் சொல்கிறேன். ஒரு போராட்டத்தில் நான் சிறையிலே அடைக்கப்பட்டு, திருச்சி சிறைச்சாலையில் இருந்து வெளிவந்தேன். என்னை வரவேற்க, பேரறிஞர் அண்ணா அவர்கள் திருச்சி சிறைவாசலில் காத்திருந்து வரவேற்றார். அன்று திருச்சியிலே எனக்குப் பாராட்டுக் கூட்டம். மறுநாள் சென்னையிலே அண்ணா தலைமையிலே பாராட்டுக்கூட்டம்.

அண்ணா சென்னார். ''நீ திருச்சியிலே பேசி விட்டு, நாளைக்குக் காஞ்சிபுரம் வந்துவிடு. அங்கே வீட்டில் உனக்கு விருந்து. இருவரும் சேர்ந்து சென்னை பாராட்டு விழாவுக்குச் செல்லலாம்'' என்று சொன்னார். அவ்வாறு திருச்சி விழாவிலே கலந்து கொண்டுவிட்டு மறுநாள் காலையிலே காஞ்சிபுரம் சென்று மதிய உணவு அண்ணா வீட்டில் அருந்திவிட்டு, மாலையிலே இருவரும் புறப்பட்டுச் சென்னைக்கு விழாவிற்கு வந்தபோது, வருகிற வழியிலே இப்போது இருக்கின்ற அண்ணா அறிவாலயத்திற்குப் பக்கத்திலே உள்ள அன்பகத்தில் இருந்து எங்களை வரவேற்று ஊர்வலம் புறப்பட்டு விட்டது. அண்ணாவும், நானும் ஒரு ரதத்திலே அமர்த்தி வைக்கப்பட்டு, ஊர்வலம் கடற்கரைக்குச் சென்றது. கடற்கரையிலே திருவிழா நடைபெற்றது. அண்ணா பாராட்டிப் பேசினார். இரவு பத்து மணிக்கு அண்ணாவும், நானும் இல்லத்திற்குத் திரும்பினோம்.

அப்பொழுது என்னுடைய அன்னையார் அஞ்சுகம் அம்மையார் அவர்கள் எங்களை வரவேற்று, கூடத்திலே அமரவைத்தார். ''என்னம்மா சௌக்கியமா?'' என்று அம்மாவைப் பார்த்து அண்ணா கேட்டார். அப்பொழுது அம்மா, அண்ணா அவர்களைப் பார்த்து சொன்னார். ''ஏன் தம்பி நீங்கள் நேற்று வேலூர் சிறையிலிருந்து

விடுதலையானீர்கள். விடுதலையானவுடன் காஞ்சிபுரம் வந்து அம்மாவைப் பார்த்தீர்கள். ஆமாம்! அம்மாவைப் பார்த்து விட்டு, மறுபடியும் திரும்பி வேலூருக்குச் சென்று கூட்டத்தில் பேசினீர்கள் இல்லையா?'' என்று கேட்டார். ''ஆமாம் அம்மா'' என்றார் அண்ணா. ''உங்களை உங்கள் அம்மா ஒரு நாள் கஷ்டப்பட்டு பெற்றிருக்கிறார்கள் போலும். நான் என் பிள்ளையை 26 நாள் கஷ்டப்பட்டுப் பெற்றேன். அதனால்தான் என் பிள்ளை திருச்சியிலே விடுதலை பெற்று, திருச்சிக் கூட்டத்திலே பேசிவிட்டு, காஞ்சிபுரம் வந்து, சென்னைக்கு வந்தும் வீட்டுக்கு வராமல் உங்களோடு கடற்கரைக் கூட்டத்தில் பேசிவிட்டு இப்போது வந்திருக்கிறான்'' என்று சொன்னார்கள். அப்போது அண்ணா கலகலவென்று சிரித்தார்.

இதை ஏன் சொல்கிறேன் என்றால், நான் பிறப்பதற்கே 26 நாள் கஷ்டம். பிறப்பதே ஒரு போராட்டம். பிறப்பதற்கே ஒரு போராட்டம் நடத்தி வெளிவந்தவன். ஒரு விழாவிலே கலந்துகொள்வ தென்றால், அதற்கு எவ்வளவு தடைகளைக் கடந்துவர வேண்டும். வாழ்க்கையே போராட்டமாக அமைந்த காரணத்தினாலேதான், நான் இந்த நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்டினேன்.

இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, எனக்கு வெள்ளியால் ஆன உருவச்சிலை, தங்கச்சங்கிலி, கடிகாரம் போன்ற பல பொருள்களை அளித்திருக் கின்றார்கள். எங்கும், எந்த மேடையிலும் இப்படிப்பட்ட தங்கச்சங்கிலிகளை அணிவித்ததுண்டு. நான் மேடையிலே அவைகளை அணிந்துகொண்டு பேசியதில்லை. ஆனால், அதை இப்போது கழற்றக் கூடாது என்பது என்னுடைய ஆருயிர் நண்பனுடைய ஆணை. பக்கத்திலே இருந்து கழற்ற விடாமல்

பார்த்துக் கொண்டார். எனவேதான் அணிந்துகொண்டு உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கின்றேன்.

கலை உலகத்திலே உள்ள பெருமக்களுக்கு, இங்கே அமர்ந்து இருக்கின்ற தம்பி சூப்பர் ஸ்டார் ரஜினி ஆனாலும், சுப்ரீம் ஸ்டார் தம்பி சரத்குமார் ஆனாலும், அல்லது என்னாலே புகழ்ந்துரைக்கப்பட்ட கலைஞானி தம்பி கமல் ஆனாலும், எழுச்சிக்கலைஞர் தம்பி விஜயகாந்த் ஆனாலும் அவர்களைப் போன்ற வேறு பல கலைஞர்கள் ஆனாலும், அவர்களுக்கெல்லாம் நான் ஒன்றும் பெரிதாக சாதித்துவிடவில்லை. அவர்களோடு சேர்ந்து 45-46-ஆம் ஆண்டில் இருந்து வளர்ந்தவன் என்கின்ற முறையிலும், அவர்களெல்லாம் பிறக்காத நேரத்திலேகூட, அவர்களெல்லாம் குழந்தைப் பருவத்திலே இருந்த காலத்திலேகூட, கலை உலகத்திலே ஈடுபாடு கொண்டவன் என்ற காரணத்தாலும், இன்றைக்கு 75–வது வயது நடைபெறுகிறது என்ற காரணத்தாலும், திரை உலகத்தைப் பொறுத்த வரையில், கலை உலகத்தைப் பொறுத்தவரையிலே 50 ஆண்டு களைக் கடந்து விட்டவன் என்ற காரணத்தாலும், இந்தப் பொன்விழா, பவளவிழா இரண்டு விழாக்களையும் இங்கே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சிறந்த உள்ளத்திற்கு, பரந்த உள்ளத்திற்கு, பெருந்தன்மை வாய்ந்த உள்ளத்திற்கு, நான்தான் கடமைப்பட்டிருக் கிறேன் அல்லாமல், அவர்கள் யாரும் எனக்குக் கடமைப் பட்டவர்கள் அல்ல.

திரை உலகத்தைப் பொறுத்தவரையில், இன்று நான் மகிழ்ச்சியடைகின்ற அளவிற்குப் பெரும் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலுக்கு அத்தகைய வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதா என்றால் அது விவாதத்துக் குரிய ஒன்று. அதற்கு ஏற்பட்ட இடையூறுகளையெல்லாம்

அவர்கள் என்னிடத்தில் எடுத்துச் சொல்லி, ஒரு அரசு எந்த அளவிற்கு அதற்கான உதவிகளைச் செய்ய முடியுமோ, அந்த உதவிகளைச் செய்கின்ற பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன் என்றாலும் கூட, முழுமையாகத் தமிழ்த் திரையுலகம், வெளிச்சத்திற்கு இன்றைக்கு வந்துவிட்டது; இருள் முழுமையாக மறைந்துவிட்டது என்று சொல்வதற்கில்லை. காரணம், எத்தனையோ சொல்லலாம். அவைகளையெல்லாம் இங்கே விளக்க விரும்பவில்லை நேரமாகிவிட்டது.

ஒன்றை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விழாவின் மூலமாகக் கலை உலகம் ஒன்றுபட்டு நிற்கிறது என்பதுதான் அந்த மகிழ்ச்சிக்குக் காரணம். (பலத்த கைதட்டல்) கலை உலகத்திலே வேற்றுமைகள் தோன்றாதா? தோன்றிய வேற்றுமைகள் அப்படியே சிரஞ்சீவித்தனம் வாய்ந்ததாக இருக்காதா? என்றெல்லாம் எதிர்பார்த்தவர்களுக்குப் பதிலளிக்கின்ற வகையில், உங்கள் அனைவரையும் ஒன்று சேர இந்த மேடையில் பார்ப்பதில் நான் மிகுந்த பெருமையடைகின் றேன். நீங்கள் தந்த வெள்ளிச் சிலையை விட, நீங்கள் வழங்கிய பரிசுகள் அனைத்தையும்விட, நீங்கள் வழங்கிய பாராட்டுக்கள், வாழ்த்துக்கள் அத்தனையும் விட, நீங்கள் அனைவரும் ஒற்றுமையாக மேடையில் அமர்ந் திருக்கின்ற காட்சியைத்தான் நான் கண்குளிர பார்க்கின்றேன். மனங்குளிர மகிழுகின்றேன். இந்தக் காட்சி தொடரவேண்டும் என்று நான் விரும்பு கின்றேன்.

இங்கே உரையாற்றிய பாலுமகேந்திரா அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். பள்ளிக்கூடப் பாடங்களில் திரைக்கலையை ஒரு பாடமாக வைக்கவேண்டும் என்று சொன்னார். அவர் சினிமாவை ஒரு பாடமாக வைக்க

வேண்டும் என்று சொன்னார் என்றாலும், திரைக்கலையை ஒரு பாடமாக வைக்கவேண்டும் என்றுதான் அதற்குப் பொருள். அதற்கான முயற்சிகளை எப்படி மேற்கொள்ளலாம் என்பது குறித்து, கல்வி அமைச்சர் பேராசிரியர் இங்கு இருக்கிறார். அவரோடு கலந்து அதையும் ஒரு பாடமாக வைப்பது நலம் என்று கருதுகிறேன். ஏனென்றால், இப்போது இருக்கின்ற பாடங்களை எல்லா மாணவர்களும் விரும்பிப் படிக்க பள்ளிக்கூடத்திற்கு வருவதில்லை. அந்தப் பாடத்தை வைத்தாலாவது (பலத்த சிரிப்பு, கைதட்டல்) மாணவர்கள் அனைவரும் விரும்பி, பள்ளிக்கூடத்திற்கு வரமாட்டார்களா? என்கின்ற அந்த ஆசையில் பாலு மகேந்திரா சொன்ன யோசனையைப் பரிசீலிப்போம் நல்ல யோசனைதான் என்று நான் கூற விரும்புகின்றேன்.

நேரம் அதிகமாகி விட்டது. இந்த இடத்தைப் பொறுத்த வரையில் வடநாட்டைச் சேர்ந்த ஆனால், தமிழ்நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கிற குஜராத் மாநிலத்தின் நண்பர்கள் விழா ஒன்றை இங்கே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நமக்காக, நம்முடைய நெருக்கடியை உணர்ந்து அவர்களாகவே முன்வந்து, அவர்கள் வடக்கே உள்ளவர்களாக இருந்தாலும்கூட, தெற்கே உள்ளவர்களுக்கு இல்லாத அந்த அக்கறையோடு (பலத்த கைதட்டல்) இனிமேல் வடக்கு தெற்கு என்று பேசாதீர்கள் என்று எனக்கு அறிவுரை சொல்வதைப் போல, இந்த இடத்தையும் அவர்கள் தாராளமாகத் தந்து, இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, தங்களுடைய நிகழ்ச்சிகளை நடத்திக்கொள்வதாக கூறி, அதுமாத்திரமல்ல. முதலமைச்சர் நிதிக்காக ஒரு இலட்ச ரூபாய்க்கும் மேற்பட்ட காசோலை ஒன்றையும் இங்கே வழங்கியிருக்கின்றார்கள். அந்தக் காசோலையைப் பிரித்து பார்த்து எவ்வளவு என்று எண்ணிப்பார்த்தேன். ஏனென்றால்,

எல்லாம் ஒன்று ஒன்று ஒன்று என்று ஒரு லட்சத்து பதினோராயிரத்து நூற்றி பதினொன்று என்று இருந்தது.

அந்தக் காசோலையை நான் உற்றுப் பார்த்தபோது, சிவாஜி முகத்தைத் திருப்பிக்கொண்டு, இன்னும் அந்த பொருளாளர் நினைப்பு போகவில்லையா என்று கண்களால் கேட்டார். (சிரிப்பு) ஏனென்றால் அவர் இங்கே குறிப்பிட்டதைப் போல, நானும் அவரும், ஏதோ இன்றைக்குப் பத்து ஆண்டுக்காலம், இருபது ஆண்டுக் காலம் என்றல்ல. அவர் இங்கே சுட்டிக்காட்டியதைப் போல், தஞ்சைத் தெருக்கள், திருவாரூர்த் தெருக்கள் குடந்தைத் தெருக்கள், சென்னைத் தெருக்கள் என்று ஒரு காலத்திலே அலைந்து திரிந்தவர்கள். விளையாட்டுப் பிள்ளைகளாக இருந்தவர்கள். அறிஞர் அண்ணா அவர்கள் எங்களையெல்லாம் இணைத்து, எங்களைத் தம்பிகளாக ஏற்றுக் கொண்ட அந்தக் காலக் கட்டத்தில், கலைத்துறையின் மூலமாக கொள்கைப் பிரச்சாரத்தைச் செய்ய வேண்டுமென்று முடிவெடுத்துப் பணியாற்றிய அந்தக் காலகட்டத்தில், நானும் சிவாஜியும் சேர்ந்து இயக்கப் பிரச்சாரங்கள், நாடகங்கள் சிலவற்றிலே கலந்து கொண்டிருக்கின்றோம்.

தூக்குமேடை நாடகம், வாழ முடியாதவர்கள் நாடகம் என்று இப்படிப் பல நாடகங்கள். அந்த நாடகங்களிலே நடித்தபோதுதான், நெல்லை மாவட்டத் திலே சங்கரன் கோவிலில் தஞ்சை மாவட்டத்தின் புயல் நிதிக்காக நாடகத்தை நடத்தியபோது, நானும் சிவாஜியும் அங்கு போயிருந்தோம். காலையிலே போய்ச் சேர்ந்தோம். நாடகத்திற்கு ஏற்பாடு செய்தவர்கள் மேடைக்குப் பக்கத்திலே ஒப்பனை அறைகளை

அமைக்கவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல், நாங்கள் தங்கியிருந்த இடத்திலேயே ஒப்பனை செய்து கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு நாடகம் நடக்கிற இடத்திற்குப் போனால், அந்த இடத்திலே நாடக மேடைக்குப் பின்புறத்திலே வழிகிடையாது. நாடகம் பார்க்க வந்திருக்கின்ற மக்களைத் தாண்டித்தான் போக வேண்டும். நானும் சிவாஜியும் மற்ற நடிகர்களும் தலையிலே முக்காடு போட்டுக்கொண்டு, மக்கள் குழுமியிருந்த அந்தப் பகுதியைக் கடந்து மேடைக்குச் சென்றோம். நடித்தோம்.

நடித்த பிறகு, எங்களை உண்மையிலே நாடகம் நடத்தியவர்கள் முக்காடு போட வைத்துவிட்டார்கள். 4000 ரூபாய் அன்றைக்கு நாடகத்திலே கிடைத்த மிச்சத் தொகையை எடுத்துக் கொண்டு, புயல் நிவாரண நிதிக்காக நடத்திய நாடகத்தின் எஞ்சிய தொகையை நாடகம் நடத்தியவர் எடுத்துக் கொண்டு காணாமல் போய்விட்டார். எப்படி நாங்கள் திரும்பி வருவதென்று தெரியவில்லை. ''வாழ முடியாதவர்கள்'' நாடகத்தை நடத்திய நாங்கள் ஊருக்குத் திரும்ப முடியாதவர்கள் ஆனோம்.

அப்போதுதான் தங்கப்பழம், கே.வி.கே. சாமி, சிவசாமி என்ற நண்பர்கள் நாடகம் பார்க்க வந்திருந்தார்கள். அவர்கள் சென்னைக்குத் திரும்பி போவதற்காகவாவது ஒரு நாடகத்தை தூத்துக்குடியில் நடத்துங்கள் என்று எங்களை அழைத்துச் சென்றார்கள். காலையிலே விளம்பரம் செய்து மாலையிலே நாடகத்தை நடத்திவிட்டு, அதிலே மிச்சப்பட்ட தொகையைக் கொண்டு சென்னைக்கு திரும்பி வந்தோம். இப்படிச் சோதனையான காலத்தில், வேதனையான காலத்தில், இந்த இயக்கத்திலே என்னோடு ஒத்துழைத்து அண்ணா

அவர்களுக்குத் தம்பியாகவும், பெரியாருக்கு மாணவனாகவும் திகழ்ந்தவர்தான் என்னுடைய ஆருயிர் நண்பர் சிவாஜி அவர்கள். அந்த அன்பும் பாசமும் வற்றிவிடவில்லை. வற்றாது. எந்தக் காலத்திலும் வற்றாது என்பதற்கு அடையாளமாக அவருடைய உள்ளம் திறந்த பேச்சு இங்கே அமைந்திருந்ததை நீங்கள் கண்டீர்கள்.

நான் மகிழ்ச்சியோடு இங்கு வந்து பேசவேண்டும் என்றிருந்தேன். ஆனால், என்னைக் கண்ணீர்விட வைத்துப் பேசு என்று சொன்னார். எத்தகைய உணர்ச்சிக் குமுறலோடு இங்கு வந்தேன் என்பதும், தம்பி பிரபுதான் கைத்தாங்கலாக இந்த ஒலிபெருக்கிக்கு முன்னால் அழைத்து வரமுடிந்தது என்பதும் நீங்களெல்லாம் அறிவீர்கள். அந்த அளவிற்கு உணர்ச்சிப்பிழம்பாக நான் ஆகிவிட்டேன். தன்னுடைய வயதை எடுத்துக்கொள்ளச் சொன்னார்.

கமல் குறிப்பிட்டதைப்போல, பகுத்தறிவாளர்கள் அதை ஏற்றுக்கொள்ள இயலாது, ஏனென்றால், யார் வயதையும் யாரும் எடுத்துக் கொள்ளமுடியாது. நானும் சரி, சிவாஜியும் சரி, பல்லாண்டுக் காலம் வாழவேண்டுமென்று நீங்கள் வாழ்த்துவீர்களேயானால், இங்கே அமர்ந்திருக்கின்ற நீங்களெல்லாம்கூட, அத்தகைய வாழ்த்துக்களைப் பெற்றவர்கள்தாம். அத்தகைய பரிசுகளை, பாராட்டுக்களைப் பெற்றவர்கள்தாம். இதுபோன்ற விழாக்களில் கதாநாயகர்களாக அமர்ந்தவர்கள்தாம். எனவே, பல்லாண்டு காலம் வாழ்க என்று வாழ்த்துவது, ஒருவருடைய இயற்கையான முடிவிற்குப் பிறகுகூட, பல்லாண்டு காலம் மக்கள் மனதிலே அவர்களுடைய பெயர் நிலைப்பதுதான் பல்லாண்டு காலம் வாழ்க என்பதற்குப் பொருள். (பலத்த கைதட்டல்) என்னுடைய ஆருயிர் நண்பா!

ஆரம்ப கால நண்பா! கலை உலகத்திற்குக் கிடைத்த கற்கண்டே, கருவூலமே, சிவாஜியே நீயும், நானும் அடிக்கடிச் சந்திக்கிறோமா, இல்லையா? என்று பலபேருக்குத் தெரியாது. சந்திப்பு என்று பத்திரிகைகளில் வராத காரணத்தால், நமக்குள்ளே எத்தனையோ வேறுபாடுகள் என்று வியாக்கியானங்கள் நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த வியாக்கியானங்களையெல்லாம் மீறி, நீயும் நானும் ஒன்று தான். இரு உருவங்கள் ஒரே உள்ளம். ஒரே உயிர் என்ற அளவிலே நாம் இருக்கின்றோம். இன்று காலையிலேயே என் தாய் அஞ்சுகத்தம்மையார் நினைவையொட்டி வெளியிடப்பட்ட மலர் ஒன்றைப் பார்க்க நேரிட்டது. அதிலே சிவாஜி என் அம்மாவைப் பற்றி எழுதிய கட்டுரையில் குறிப்பிடுகிறார். அஞ்சுகத்தாய் வேறு. என் தாய் வேறா? எனக்கும் கலைஞர் மு.க.வுக்கும் இரண்டு பேருக்கும் ஒரே தாய்தான். அந்த தாய் அஞ்சுகத்தாய் என்று குறிப்பிட்டிருக்கின்றார். அதைப் போலத்தான் சிவாஜியின் தாய் என் தாய் அவருக்குத் தாய். நாங்கள் இருவரும் தமிழ்த்தாயின் மக்கள். உங்களின் சகோதரர்கள்.

இந்த இனிய எழுச்சி விழாவிற்குக் கர்நாடகத்திலே இருந்து வருகை தந்துள்ள முதலமைச்சர் ஜே.எச். பட்டேல் அவர்கள் இங்கே குறிப்பிட்டார். என்னை விட அந்தச் சிலை வயதான தோற்றத்தில் இருக்கிறது என்று குறிப்பிட்டார். ஆனால், அவர் எனக்குக் கடிதம் எழுதும் போதெல்லாம். My Dear Old Man, How are you என்றுதான் எழுதுவார். ஆங்கிலத்தில் எழுதும்போது அப்படித்தான் எழுதுவார். அந்தக் கடிதத்தை யாரோ தவறாகப் பார்த்து விட்டு, இப்படிச் சிலை செய்துவிட்டார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. (பலத்த சிரிப்பு) கர்நாடக முதலமைச்சரை ஏன் இங்கு அழைத்தோம். ஏன் அழைக்கப்

பட்டிருக்கிறார். நாம் அழைத்து அழைத்து வராமல் இருந்த ஒன்றே வந்துவிட்டபிறகு, (பலத்த கைதட்டல்) அதைத் தந்தவரை அழைக்கவேண்டாமா என்பதற்காகத்தான் அவரை அழைத்திருக்கின்றோம். அவருக்கும், அவரோடு வந்த அமைச்சர் ஆனந்தத் அவர்களுக்கும், இந்த விழாக்குழுவின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விழாக்குழுவினர் எத்தகைய சிரமங்கள் எடுத்துக் கொண்டு இந்த விழாவை நடத்தினார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். எவ்வளவு பாடுபட்டார்கள் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால், அவர்கள் பட்டபாடு வீண்போகவில்லை. இந்த விழாவைக் கடந்த 20–ஆம் தேதியே வைத்துக்கொள்ளலாம் என்று நான் தேதி கொடுத்திருந்தேன். கே.ஆர்.ஜி.யும் ஏ.வி.எம். சரவணனும், சிந்தாமணி முருகேசனும் மற்றவர்களும் பாரதிராஜாவும் என்னைச் சந்தித்தபோது, 27–ஆம் தேதிதான் வசதியாக இருக்கும் என்று சொன்னார்கள். நான் அப்போது சொன்னேன். மழைக்காலம் நெருங்குகின்ற காலக்கட்டம். எனவே 20–ஆம் தேதியே வைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். இல்லை இந்தத் தேதிதான் என்று பிடிவாதம் பிடித்தார்கள். சில வேளைகளில் நான் சொல்வதையும் கேட்கவேண்டும் என்பதை இதில் இருந்தாவது புரிந்து கொள்ளவேண்டும் என்று குறிப்பிட விரும்புகின்றேன்.

ஆனால், குறிப்பிட்ட இடத்தில் நேரு ஸ்டேடியம் திறந்த வெளியில் இந்த விழா நடைபெற்றிருந்தால், இன்றைக்கு விழா நடைபெற்றிருக்க முடியாது. இயற்கையின் சீற்றத்தால், பொழிகின்ற மழையினால் விழா நடைபெற்றிருக்க முடியாது.

அங்கே நடைபெறாமல், இந்த விழா இங்கே நடைபெறுவதற்கு உதவியவர்களுக்கு என்னுடைய

இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (பலத்த கைதட்டல்) எந்தத் தடைகள் வந்தாலும், ''தடைக் கற்கள் உண்டென்றாலும் தடந்தோள் உண்டெனச் சிரிப்பாய்'' – என்றான் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். அதைப்போல தடைக்கற்கள் எத்தனை வந்தாலும், அதைத் தாண்டிச் செல்கின்ற தடந்தோள் கொண்ட வர்கள் நம்முடைய கலை உலகத்து நண்பர்கள் என்பதை நிரூபித்துக்காட்டியிருக்கின்றார்கள். அவர்களுக்கும், என்னை வாழ்த்திய கலை உலகப் பெருமக்களுக்கும் அவர்கள் வயதிலே சிறியவர்களாக இருந்தால், அவர்களின் கையைப்பிடித்து நான் என்னுடைய ஆனந்தக்கண்ணீரைப் பொழிகிறேன். என்னைவிட வயதிலே பெரிவர்களுடைய கால்களில் என் கண்ணீர் முத்துக்களை உதிர்த்து அவர்களையெல்லாம் வணங்கி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

27-9-98 அன்று சென்னையில் திரையுலகம்
நடத்திய பாராட்டு விழாவில்
ஆற்றிய உரை

29

சென்னை – தியாகிகள் மணிமண்டபத் திறப்புவிழா

இன்று நான் முதலிலேயே குறிப்பிட்டதைப்போல ஒரு உணர்ச்சி மிகுந்த விழா. என்னைப் பாராட்டி இந்த மண்டபம் இங்கே உருவானதற்காகப் புகழ்ந்து இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்களும், சிராஜிஸ் மில்லத் சமது அவர்களும், நண்பர் நல்லகண்ணு அவர்களும் இங்கே உரையாற்றியிருக்கின்றார்கள். குறிப்பாகச் சொல்லப்போனால் இந்தப் பெருமை முழுவதும் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்களைத்தான் சாரும் என்பது என்னுடைய கருத்து. ஏனென்றால் அவர்தான் கடந்த ஆண்டு காமராஜர் அரங்கத்தில் நடை பெற்ற ஒரு நிகழ்ச்சியில் ''தியாகிகள் மணிமண்டபம் ஒன்றை அமைத்திட வேண்டும்'' என்ற ஒரு கருத்தை எடுத்துக்கூறி அதை நிறைவேற்ற வேண்டும் என்று அன்பாக ஆணை பிறப்பித்தார்.

நான் அந்த நிகழ்ச்சியில் உரையாற்றும்போது இலக்கியச் செல்வர் குமரி அனந்தனின் அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு விரைவில் அதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்யும் என்று அன்றைக்கே குறிப்பிட்டேன். அதற்கேற்ப – செய்தித்துறை அமைச்சர் தம்பி முல்லை வேந்தனும், பொதுப்பணித்துறை அமைச்சர் துரைமுருகனும் இந்தக் கட்டிடம், இந்த மண்டபம்

விரைவில் அமைவதற்கான ஒத்துழைப்பைத் தந்தார்கள். அதிலும் குறிப்பாக முல்லைவேந்தன் என்னுடைய கண்ணில் பட்டால் மண்டபம் என்ன ஆயிற்று என்று கேட்பேன் என்பதற்காகக் கண்ணிலே படாமலிருந்து, ஆனால் இந்தக் காரியத்தை மிக வெற்றிகரமாக முடித்துத் தந்துள்ளார்.

கடந்த நான்கைந்து நாட்களாகத் தொடர்ந்து மழை. நான் மிகுந்த கவலைப்பட்டேன். இந்த நிகழ்ச்சி எப்படி நடைபெறும் என்று. ஆனால் இங்கே இலக்கியச் செல்வர் குறிப்பிட்டதைப்போல பெருந்தலைவர் காமராஜர் அவர்களை அடக்கம் செய்த நேரத்திலும் இப்படித்தான் மழை கொட்டியது. அதற்காக இடம் பார்ப்பதற்கு நள்ளிரவில் வந்த போதும் மழை கொட்டிக் கொண்டுதான் இருந்தது. ஒருவேளை அன்றைக்கு வானம் சிந்திய கண்ணீர். தியாகிகளை நினைத்து, தொடருகிறது என்பதற்கு அடையாளமாகத் தான் தியாகிகளுடைய மணிமண்டபம் திறக்கப்படுகிற நேரத்திலும் மழை பொழிவதாக நான் பொருள் கொள்கின்றேன்.

தியாகிகளை மதிக்கின்ற அரசாக இந்த அரசு இருப்பதை அனைவரும் எடுத்துச் சொன்னார்கள். ஒரு அரசு அமைந்த பிறகு மாத்திரமல்ல; நாங்கள் தியாகிகளை மதிப்பது என்பது அரசு அமைவதற்கு முன்பே நல்லகண்ணு இங்கே எடுத்துக் கூறியதைப்போல, எனது இளமைப் பருவத்திலேயே, கிட்டத்தட்ட ஒரு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே மலேசியாவில் போராடிய மாவீரன் அதற்காகவே மாண்டு மடிந்த கணபதி அவரைப்பற்றி 'கயிற்றில் தொங்கிய கணபதி' என்கின்ற சிறிய அளவு நூல்தான், அதை உணர்ச்சிப் பிரவாகமாக நான் அன்றைக்கே எழுதினேன். ஒரு அரை மணி நேரத்தில் எழுதிக் கொடுத்துவிட்டு சென்னையிலிருந்து

விடைபெற்றுச் சென்ற அந்த நிகழ்ச்சி எனக்கு இன்னமும் ஞாபகம் இருக்கிறது. பதிப்பாளர் நமச்சி வாயம் என்ற ஒரு தோழர் நான் ரயிலுக்குப் புறப்படு வதற்கு முன்பு என்னைச் சந்தித்து இந்த நூலை நீங்கள் எழுதித் தரவேண்டும் என்று கேட்டபோது அன்றைக்குத் தான் அந்தச் செய்தி பத்திரிக்கைகளிலே வந்தது. நான் உடனடியாக அந்தச் செய்தியை அடிப்படையாக வைத்து எழுதித் தந்த நூல் அது.

எனவே இந்திய நாட்டின் விடுதலைக்காகப் போராடிய உத்தமர்கள், வீரர்கள் அவர்களுடைய வாழ்க்கையை வரலாறாக ஆக்கவேண்டும் என்பதிலும் அதனைப் பின்பற்றி எதிர்காலச் சமுதாயம் வீறுகொள் சமுதாயமாக, வீரங்கொள் சமுதாயமாக, தியாகத்திற்குத் தயாராக இருக்கக்கூடிய சமுதாயமாக இருந்திட வேண்டும் என்பதிலும் இருந்த ஆழ்ந்த அக்கறையின் காரணமாகத்தான் இன்றைக்கும் அந்தத் தொண்டினை அரசு இருந்தாலும் இல்லாவிட்டலும் தொடர்ந்து செய்து வருகின்ற அந்தப் பண்பை நாங்கள் பெற்றிருக் கின்றோம்.

நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள், தந்தை பெரியார் அவர்கள் தொடக்க காலத்தில் தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்து, காந்தியடிகள் ஈரோடு வந்தால் பெரியாருடைய இல்லத்தில்தான் தங்குவது என்ற நிலையெல்லாம் ஒரு காலத்தில் இருந்ததை யாரும் மறந்திருக்க முடியாது. ஆனால் அதே பெரியார் அவர்கள் காங்கிரசோடு மாறுபட்டு காந்தியடிகளைக் கூட, அவர்களுடைய கொள்கைகளைக்கூட கண்டனம் செய்கின்ற அளவிற்கு ஒரு தலைவராக வளர்ந்தி ருந்தாலும் காந்தியடிகள் கொல்லப்பட்டார் என்ற செய்தி வந்ததும் மறுநாள் விடுதலை பத்திரிகையில் தலையங்கம்

எழுதினார். அறிக்கை வெளியிட்டார். இந்தியாவிற்கு "காந்தி நாடு" என்று பெயர் வைக்க வேண்டும் என்று அறிக்கை வெளியிட்டார். அவர் வழியிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் காந்தியடிகளைப் பற்றி தீட்டிய சித்திரங்கள், வானொலியில் ஆற்றிய உரைகள் இவைகளெல்லாம் இன்றைக்கும் நம்முடைய செவிகளிலே ரீங்காரம் செய்து கொண்டிருப்பவை களாகும்.

எனவே திராவிட இயக்கம் என்பது அதிலும் குறிப்பாக தந்தை பெரியார் அவர்களால் வளர்க்கப் பட்ட இயக்கம், பேரறிஞர் அண்ணா அவர்களால் வழிகாட்டப்பட்ட இயக்கம், இந்த இரண்டு இயக்கங்களும் என்றைக்கும் ஒரு எடுத்துக்காட்டாகத்தான் இந்த மணிமண்டபம் இங்கே உருவாகியிருக்கின்றது.

இந்த மண்டபத்தை ஐந்து அல்லது ஆறு மாத காலத்தில் அரும்பாடுபட்டு உருவாக்கியிருக்கின்றார்கள். இதிலே வைக்கப்பட்டிருக்கின்ற படங்களில் பெரும் பாலான படங்கள் ஒரு பத்துப் பதினைந்து படங்களைத் தவிர என்றுதான் சொல்ல முடியும்; அவ்வளவு படங்களையும் சேகரித்து வழங்கியிருப்பவர் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் என்பதற்காக இந்த விழாவிலே அமர்ந்திருக்கின்ற தியாகிகள் சார்பாக மாத்திரமல்ல; இந்த விழாவிற்கு வராத தியாகிகள் சார்பிலும், மறைந்த தியாகிகள் குடும்பத்தின் சார்பிலும் அவருக்கு நான் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆயிரத்து இருநூற்று ஐம்பது படங்கள் வைப்பதற்கான வகையிலே இந்த மண்டபம் அமைக்கப் பட்டிருக்கின்றது. இன்றைக்கு இந்தத் தொடக்க நிகழ்ச்சி யில் வைக்கப்பட்டுள்ள படங்களின் எண்ணிக்கை இருநூற்று ஐம்பதுதான். மீதமுள்ள ஆயிரம் படங்களை

வைத்தாக வேண்டும். இங்கே யார் யாருடைய படங்கள் வீராங்கனைகளுடைய படங்களெல்லாம்கூட இன்னும் வந்து சேரவில்லை என்று சொன்னார்கள். அவைகளை யெல்லாம் சேகரித்துத் தருகின்ற பணியில் ஆங்காங்கு உள்ள தியாகிகள், தியாகிகளாக இல்லாவிட்டாலும் அவர்களுடைய வழித்தோன்றல்கள் சமுதாயப் பொதுப் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் அதுபற்றி ஆராய்ந்து தேடிக் கண்டுபிடித்து அவற்றை இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் வாயிலாக அல்லது நேரடியாக அரசுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

மேடையில் அமர்ந்திருக்கும்போது இன்னொன் றையும் தம்பி முல்லைவேந்தனிடம் சொன்னேன். ஒவ்வொரு தியாகியைப்பற்றியும் பத்து வரிகள் அங்கே படத்திற்குக் கீழே எழுதுவதற்கு இடமில்லை. எந்த ஊர் என்ன பெயர் என்பது தான் அதில் எழுத முடிகிறது. எனவே, ஒவ்வொரு தியாகியைப் பற்றியும் ஒரு பத்து வரிகள் கொண்ட ஒரு சுருக்கமான வரலாற்றுச் சுருக்கத்தை அச்சியற்றுகின்ற வகையிலே புத்தகங்களாக அச்சிட்டு, அந்தப் புத்தகங்களுக்கு மலிவான விலை குறிப்பிட்டு, இந்த மண்டபத்திற்கு வருகின்றவர்கள் அதை வாங்கிப் பயன்பெறுகின்ற வகையிலே அந்த புத்தகங்கள் இங்கே வைக்கப்பட வேண்டும் என்று நான் முல்லைவேந்தனிடம் சொல்லியிருக்கின்றேன். காரணம் இங்கே அன்புக்குரிய சமது அவர்களும், நல்லகண்ணு அவர்களும் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல் தியாகிகளுடைய படங்கள் இங்கே வைக்கப்பட்டிருப்பது, அந்தப் படத்திற்கு உரியவர்களைப் பெருமைப்படுத்த மாத்திரமல்ல; அவர்களுக்கு நன்றி காட்டுவதற்காக, நம்முடைய கடமையை உணர்த்துவதற்காகத்தான் அத்தகைய படங்கள் இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் இதிலே மிக முக்கியமாக இந்தப் படங்கள் இங்கே வைக்கப்பட்டிருப்பதற்கும், ஒரு மண்டபம் கட்டப்பட்டிருப்பதற்கும் காரணம் என்னவென்றால் இந்த மண்டபத்திற்குள் நுழைகின்ற இளைஞர்கள், வாலிபர்கள் இந்தப் படங்களைப் பார்த்து, பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். எவ்வளவு சுக துக்கங்களையெல்லாம் புறக்கணித்து விட்டு, வாழ்க்கையைப் பற்றி கவலைப்படாமல் நாட்டின் விடுதலைக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள் என்கின்ற அந்தச் செய்திகளை அந்த வரலாறுகளை அவர்கள் எண்ணிப் பார்க்கும்போது, தாங்களும் இவ்வாறு எங்கேயாவது மணிமண்டபத்தில் தங்கள் படம் வரவேண்டும் என்கின்ற அந்த ஆவலை எதிர்கால இளைஞர்கள் பெற்றாக வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மணிமண்டபமே தவிர வேறு எதற்காகவும் அல்ல.

ஏனென்றால் இன்றைய இளைஞர்கள் கேளிக்கைகள், விழாக்கள் இவைகளில் தங்களது மனத்தைப் பறிகொடுப்பவர்கள்தாம் பெரும்பாலோர் இருக்கிறார்கள். அதற்காக ஒரு நாட்டில், சமுதாயத்தில் கேளிக்கைகளே கூடாது, விழாக்களே கூடாது, மகிழ்ச்சியான நிகழ்ச்சிகளே கூடாது என்று வாதிடுபவன் அல்ல நான். மகிழ்ச்சியான நிகழ்ச்சிகள் இருக்கலாம். கேளிக்கைகள் இருக்கலாம். விழாக்கள் இருக்கலாம். ஆனால் நாட்டைக் காப்பாற்ற வேண்டும், மொழியைக் காப்பாற்ற வேண்டும், சமுதாயத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற நிலை வரும்போது, அந்த மகிழ்ச்சியை, கேளிக்கைகளையெல்லாம் துறந்துவிட்டு – தியாகம் செய்துவிட்டு, இந்தக் குறிக்கோளுக்காக நம்முடைய உயிரை ஒப்படைத்துக் கொள்ள வேண்டும் என்ற அந்த உணர்வு எல்லா இளைஞர்களுக்கும், எல்லா

வாலிபர்களுக்கும் வந்தாக வேண்டும். அத்தகைய ஒரு தியாக உணர்வை வளர்ப்பதற்காகத்தான் இந்த மண்டபம் பயன்பட வேண்டும் என்று நாம் கருதுகிறோமேயல்லாமல் வேறல்ல.

அது மாத்திரமல்ல; நல்லகண்ணு இங்கே எடுத்துச் சொன்னார். இஸ்லாமியர்கள், இந்துக்கள் என்றெல்லாம் பேதமில்லாமல் ஆதிதிராவிடர்கள், அய்யர்கள் என்றெல்லாம் பேதமில்லாமல் இந்தப் படங்களெல்லாம் அங்கே வரிசையாக வைக்கப்பட்டிருக்கிற நிகழ்ச்சியை எடுத்துச் சொல்லி படங்களாக மாத்திரமல்ல; அவர்களுடைய வாழ்க்கையிலேகூட ஒன்றாக இருந்து, சமத்துவமாக இருந்து நாட்டின் விடுதலைக்காகப் போராடினார்கள் என்ற அந்தச் செய்தியையும் அவர்கள் இங்கே தொகுத்துக் காட்டினார்கள். ஆனால் இன்றைக்குச் சாதிகளால் நாம் பாழ்பட்டுக் கிடக்கின்றோம். மதங்களால் கூறுபட்டுக் கிடக்கின்றோம். இந்த நிலையை மாற்றுவதற்கு இந்த மணிமண்டபம் பயன்பட்டாக வேண்டும். எதிர்காலத்தில் சாதி–மத பேதமில்லாத சமத்துவ நிலையிலே நம்முடைய சமுதாயத்தைக் கொண்டு செல்ல வேண்டும். நம்முடைய நாட்டை அந்த அளவிற்கு வளர்த்தாக வேண்டும்.

வெளிநாடுகளுக்குச் சென்றால் இங்கிருப்பதைப் போல அங்கெல்லாம் சாதி கிடையாது. அன்றைக்கே பாரதி பாடினான், "ஆயிரம் உண்டிங்கு சாதி – எனில் அந்நியர் வந்து புகல் என்ன நீதி" என்று கேட்டான். அந்நியர்கள் வரக்கூடாது என்பதிலே அழுத்தம் திருத்தமாக இருந்தாலும்கூட ஆயிரம் சாதி இங்கு உண்டு என்பதை அன்றைக்கே தேசியக்கவி சுப்பிரமணிய பாரதி வேதனையோடு ஒத்துக் கொண்டிருந்தார். சாதிகள் இருப்பதற்காகச் சுதந்திரம் வேண்டாம் என்று யார் சொல்வார்கள். சுதந்திரம் வாங்குவது வேறு. சாதிகளை

ஒழிப்பது வேறு. அந்த நிலையிலேதான் அன்றைக்குச் சொல்லப்பட்டது. சுதந்திரத்திற்காகப் போராடினோம் வெற்றி பெற்றிருக்கிறோம். இப்போது நமக்குள்ள கடமை என்னவென்றால் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்திட வேண்டும். அந்தக் கடமையை நாம் செய்தாக வேண்டும். சுதந்திரம் எவ்வளவோ கஷ்டத்திற்கிடையே நாம் ரத்தம் சிந்தி, தூக்கு மேடை ஏறி, சிறைச்சாலையில் அடைபட்டு, சித்திரவதைகளை ஏற்றுக்கொண்டு, செக்கிழுத்து, கஞ்சிக் கலயம் ஏந்தி இப்படியெல்லாம் வேதனைப்பட்டு விடுதலை பெற்றிருக்கிறது.

இந்த நாடு பெற்ற விடுதலையை வீணாக்கி விடக்கூடாது. பெற்ற சுதந்திரம் வீணாவதற்கு இன்றைக்கு இருக்கின்ற வழிகள் மதச்சண்டை, சாதிச் சண்டை இவைகள்தாம். இவைகளை விட்டொழிக்க வேண்டும். மதச்சார்பற்ற நிலையை, மத நல்லிணக்கத்தை, மனித நேயத்தை உருவாக்கி, ''சாதிகள் இல்லையடி பாப்பா'' என்று பாரதி சொன்னதை மெய்யாக்கிப் பாடுபட வேண்டும். அதற்கு ஏற்ற வகையிலேதான் இந்த மண்டபம் தன்னுடைய பயனை விளைவிக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த நம்பிக்கையை நான் பெறுகின்றேன். இன்றில்லாவிட்டாலும் நாளை, நாளையில்லாவிட்டாலும் மறுநாள் ஒரு சமத்துவ தமிழகத்தை, சமத்துவ இந்தியாவை நாம் உலகிற்கு நிச்சயமாக அறிமுகப்படுத்துவோம். அதை இந்த தியாகிகள் மணிமண்டப திறப்பு விழாவில் ஒரு சூளுரையாக மேற்கொள்வோம் என்று கூறி உங்கள் அனைவருக்கும் எனது அன்பையும், நன்றியையும் காணிக்கையாக்குகிறேன்.

23-10-98 அன்று சென்னையில் தியாகிகள் மணிமண்டபத்தைத் திறந்து வைத்து ஆற்றிய உரை

30

‘இசைத்தமிழின் உண்மை வரலாறு’ நூல் வெளியீட்டுவிழா

நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிய திருமதி ரேவதி சங்கரன் அவர்கள் நான் பேச வருவதைப் பாயாசம் என்று குறிப்பிட்டார்கள். எந்த உணவு அருந்துகின்ற நேரத்திலும் பாயாசம் இறுதியாக வருவதில்லை. இறுதியாக தயிர் சாதம்தான். அந்தத் தயிர் சாதம் உள்ளே இறங்குவது என்றால் ஊறுகாய் இல்லாமல் முடியாது என்பதை இங்கே தன்னை ஊறுகாய் என்று உவமைப்படுத்திக் கொண்ட நண்பர் சத்தியசீலனுக்கு நான் கூறி அவருக்கு ஆறுதல் வழங்குகின்றேன். (சிரிப்பு)

சேக்கிழார் மன்றத்தின் சார்பில் ராகப்பிரியாவின் ஒத்துழைப்போடு நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சி பி.டி.ஆர். கமலத் தியாகராஜன் எழுதிய ‘‘இசைத் தமிழின் உண்மை வரலாறு’’ என்ற நூலை வெளியிடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதாகும். இந்த நிகழ்ச்சியிலே ஆற்றிய உரைகளையெல்லாம் நானும் கூர்மையாகக் கவனித்தேன். நீங்களும் கூர்மையாகக் கவனித் திருக்கிறீர்கள்.

திருப்பாம்பரம் சண்முகசுந்தரம் அவர்கள் கடந்த சில நாட்களாகவே தயார் செய்துகொண்டு இங்கே ஒரு போட்டி மனப்பான்மையோடு பட்டிமன்றம் நடத்த அதிலும் தனக்குச் சரி என்று பட்டதை எடுத்தியம்ப போருக்கே வந்ததைப் போல வந்து கருத்துக்களை

உதிர்த்தார். நான் அவரைப் பெரிதும் பாராட்டுகிறேன். இன்னொரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து தாருங்கள், அங்கே பார்த்துக் கொள்கிறேன் என்று அவர் குறிப்பிட் டிருக்கிறார். எனக்கு இதுபோன்ற சுவையான விவாதங்களைக் கேட்பதில் மிகுந்த மகிழ்ச்சி ஏற்படும். ஏனென்றால் நமக்குத் தெரியாதவற்றை, தெரிந்தவர்கள் விவாதித்து, ஒரு முடிவுக்கு கொண்டு வரும்போது அதையேற்றுக் கொள்கின்ற இடத்திலே உள்ள நமக்குப் பெரும் இன்பம். அந்த இன்பத்தை விரைவிலே பெறுவதற்கான ஏற்பாட்டை நானும் செய்வேன். நண்பர்களும் செய்வார்கள் என்று அவருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு முதலமைச்சர் என்பதால் எல்லாவற்றைப் பற்றியும் தெரிந்து வைத்திருப்பார் என்று நீங்களும் என்னைக் கூடாது. ஏனென்றால் இங்கே நன்றியுரை ஆற்றிய தியாகராஜன் குறிப்பிட்டதைப் போல, ஒரு இசைக் குடும்பத்திலே பிறந்தவன் நானென்றாலும், என்னுடைய தந்தை அந்தக் காலத்தில் சிறந்த இசை மேதை என்றாலும் – திருவாவடுதுறையார், திருவெண் காட்டார் போன்றவர்கள் எல்லாம் தங்கள் சந்தேகங் களைப் போக்கிக்கொள்ள திருக்குவளைக்கு வந்து என் தந்தையிடம் விவாதித்து சிலவற்றைக் கற்றுச் செல்வார்கள் என்ற நிலையிலே வாழ்ந்த மேதை என்றாலுங்கூட, நான் அந்தத் துறையில் என்னை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. அதற்கான காரணத்தை சில நிகழ்ச்சிகளில் கூறியிருக்கிறேன். நான் இளம்பிள்ளையாக வளர்ந்த அந்தக் காலத்தில் இசைப் பயிற்சிக்காக அனுப்பப் பட்டேன். ஆனால் எனக்கு இசை கற்றுத் தந்த ஆசிரியர் மற்றும் அவரைச் சேர்ந்தவர்கள் எல்லாம் அந்த ஊரிலே இருக்கின்ற பெருந்தனக்காரர்கள், பெரிய மனிதர்கள், உயர் இனத்தைச் சேர்ந்தவர்கள் வீதியிலே வருகிற நேரத்தில்

தங்கள் தோளிலே இருக்கின்ற துண்டையெடுத்து இடுப்பிலே கட்டிக் கொள்கின்ற அந்த நிலையைக் கண்டேன். அதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தாங்கிக் கொள்ளவும் முடியவில்லை.

மறுநாளே இசை கற்றுக் கொடுக்கின்ற அந்த இல்லத்திற்குச் செல்வதை நானாகவே நிறுத்திக் கொண்டேன். என் பெற்றோரும் உறவினர்களும் என்னை வலியுறுத்தி மீண்டும் அங்கே அனுப்பி வைக்க முனைந்தபோது ''சுயமரியாதை பறிக்கப்படுகின்ற இடத்திற்கு நான் செல்ல மாட்டேன். இசை கற்று நான் ஒரு மேதையானாலும் என் தோளிலே துண்டு போட்டுக் கொள்ள எனக்கு உரிமை இல்லையென்றால் அந்த இசை எனக்குத் தேவையில்லை'' என்று சொன்னேன். (கைதட்டல்) இல்லாவிட்டல் இன்றைக்கு நான் உங்கள் முன்னால் ஒரு திருப்பாம்பரம் சண்முக சுந்தரமாக, ஒரு திருவெண்காடு சுப்பிரமணியமாக, ஒரு குளிக்கரை பிச்சையப்பாவாக, ஒரு திருவாடுதுறை இராஜரத்தினமாக அல்லது ஒரு சீர்காழி கோவிந் தராஜனாக விளங்கியிருக்க முடியும்.

ஆனால் இன்றைக்கு இசை அந்த அளவிற்கு மதிப்பற்றுப் போய் விட்டதா என்றால் இல்லை. அது மதிப்பற்றுப் போய் விடக்கூடாது என்பதற்காகத்தான் கமலத் தியாகராஜன் இசைத் தமிழின் உண்மை வரலாறு என்ற இந்த நூலை யாத்துத் தந்திருக்கிறார்.

அவர்களைப் பற்றி உங்களுக்கு நான் அறிமுகப்படுத்தி உரையாற்ற வேண்டிய அவசிய மில்லை. தமிழகத்திலே ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர் கமலத் தியாகராஜன். திராவிட இயக்கத்தின் தலைவர்களில் ஒருவராக விளங்கிய பண்பாளர் பி.டி. ராஜன் அவர்களுடைய புதல்வர். நம்முடைய பேரவைத் தலைவர் பழனிவேல்ராஜன் அவர்களுடைய சகோதரர்.

அவர் இந்த நூலை எழுதி என்னிடம் தந்து, அணிந்துரை கேட்டபோது இதனைப் படித்துப் பார்த்த நேரத்தில் நான் வியப்படைந்தேன். ஏனென்றால் நான் மதுரையிலே அந்த இல்லத்திற்குப் பலமுறை சென்றிருக்கிறேன். அப்போதெல்லாம் கமலத் தியாக ராஜன் அவர்களைச் சந்தித்திருக்கிறேன். அவருடைய இயல்பு, அதிகம் பேசாத தன்மை, பழக்க வழக்கம் இவைகளையெல்லாம் கண்டபோது இவ்வளவு பெரிய கருவூலத்தைத் தன்னுடைய மூளையிலே வைத்துக் கொண்டிருப்பார் என்றெல்லாம் அப்போது நான் தெரிந்து கொள்ள வில்லை. இந்த நூலைப் படித்த பிறகு தான் அவர் எத்தகைய வித்தகர் என்று தெரிந்துகொள்ள முடிந்தது.

பி.டி. ராஜன் அவர்களுடைய குடும்பம் தமிழகத்திலே எல்லோருக்கும் தெரிந்த குடும்பம். அவர்கள் பெரும் பதவியிலே வீற்றிருந்தார்கள். அவருடைய இனிமையான சுபாவமும், எளிய வாழ்க்கை முறையும் எல்லோரையும் அரவணைத்துச் செல்கின்ற அந்தப் பண்பும் அவரைப் பண்பாளராக ஆக்கியது. தமிழுவேளாக அவர்கள் திகழ்ந்தார்கள். அவருடைய வீட்டுச் செல்வங்களாக இன்றைக்கு விளங்குபவர்கள் தான் பேரவைத் தலைவராக வீற்றிருக்கின்ற பழனிவேல் ராஜன் அவர்களும், இந்த நூலாசிரியராக உங்களுடைய அன்பையும் போற்றுதலையும் வாழ்த்துக்களையும் பெற்றுள்ள கமலத் தியாகராஜன் அவர்களும் ஆவார்கள்.

இந்த நூலைப் பற்றி நான் பேசுவதென்றால் என்னுடைய இயலாமையை முதலிலேயே வெளியிடுவது தான் நாகரிகமாகும். எனக்கும் இசையைப் பற்றி எல்லாம் தெரியும் என்பதைப் போல பேசுவது நாகரிகமாகாது. எல்லாம் தெரியுமென்று யாரும் இருக்க முடியாது. சிலருக்கு சில விஷயங்கள் தாம் தெரியும். அதைப் போலத்தான் நானும். ஒரு முதலமைச்சர் என்பதற்காக ஒரு மருத்துவமனைக்குச் சென்று எனக்குத் தெரியாத

விஷயத்தில் தலையிட்டு, டாக்டரைப் பார்த்து எப்படி ஆப்பரேஷன் செய்கிறீர்கள் என்று அறுவை சிகிச்சையின் நுணுக்கங்களைப் பற்றிப் பேசினால் அது அமைச்சர் பதவியிலே இருக்கின்ற காரணத்தால் செய்யப்படுகின்ற அதிகப்பிரசங்கித்தனமே தவிர வேறல்ல. அதைப் போல இங்கேயும் நான் இசை நுணுக்கங்களை – இப்படியெல்லாம் இந்த நூலை கமலத் தியாகராஜன் எழுதியிருக்கலாம் என்பது போன்ற ஆய்வுகளை நான் இங்கே நடத்திக் கொண்டிருந்தால் அது வீண் வேலை, வேண்டாத வேலையும் கூட.

ஒரு கிரேக்க நாட்டு கதை உண்டு. அங்கே ஒரு ஓவியன் ஒவ்வொரு நாளும் தான் எழுதுகின்ற ஓவியங்களை தன்னுடைய ஓவியக் கூடத்திற்கு வெளியே வீதியிலே செல்பவர்களெல்லாம் பார்க்கத்தக்க வகையிலே வைப்பான். ஒரு நாள் ஒரு ஓவியத்தை எழுதி ஓவியக்கூடத்தின் வாசலிலே வைத்திருந்தான். அந்த வழியாகச் சென்ற ஒரு செருப்புத் தைக்கின்ற தொழிலாளி அந்த ஓவியத்தை உற்றுப் பார்த்துவிட்டு, அந்த ஓவியனிடம் 'இந்த ஓவியத்தில் ஒரு குறை இருக்கிறது. அதாவது இந்த ஓவியத்தின் காலிலே நீங்கள் போட்டிருக்கின்ற காலணி (செருப்பு) சரியாக இல்லை' என்று அந்தத் தவற்றைச் சுட்டிக் காட்டினான். ஓவியனும் அதைப் பார்த்துவிட்டு, 'ஆமாம் தவறுதான், திருத்திக் கொள்கிறேன்' என்று நன்றி கூறி அனுப்பிவிட்டான். இதற்குப் பிறகு இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் ஓவியன் ஓர் அழகான பெண்ணின் ஓவியத்தை வரைந்து அதையும் வழக்கம்போல் ஓவியக் கூடத்தின் முகப்பிலே வைத்தான். அன்றைக்கும் அந்த செருப்புத் தைக்கும் தொழிலாளி அந்த வழியாக வந்தான். ஓவியத்தைப் பார்த்து விட்டு நின்றான். ஓவியன் நெருங்கி

வந்து இதிலே என்ன குறை என்று கேட்டான். அப்பொழுது அந்தத் தொழிலாளி, 'ஒன்றுமில்லை. இந்தப் புருவத்தை இன்னும் கொஞ்சம் ஒழுங்காக எழுதியிருக்கலாம்' என்றான். உடனே ஓவியனுக்குக் கோபம் வந்துவிட்டது. 'அப்பா. நீ செருப்போடு நில், இதற்கெல்லாம் வராதே' என்று சொன்னான். (சிரிப்பு)

அதைப்போல நான் அரசியலோடு, கவிதையோடு, கலையோடு நிற்கவேண்டும். இசைக்கு வந்துவிட்டால், ஓவியன் அந்தத் தொழிலாளியைப் பார்த்துச் சொன்ன அந்தச் சொல்லை கமலத் தியாகராஜன் கூட என்னைப் பார்த்துச் சொல்லக் கூடும். (பலத்த சிரிப்பு)

இந்த நூல் வெளியீட்டு விழாவில் பேசியவர்கள் தமிழ் மொழிக்கு இருந்த ஏற்றம் இன்றைக்குள்ள நிலை பற்றியெல்லாம் கூட சங்கடத்தோடு எடுத்துக் கூறினார்கள். முதலில் பாடப்பட்ட தமிழ்த்தாய் வாழ்த்து – ''நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும் சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்''– எனத் தொடங்குகின்ற மனோன்மணியம் சுந்தரனார் இயற்றிய பாடலை 1969–ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு நமக்கென்று தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடல் ஒன்று தேவை என்று தேடிப்பார்த்து – இந்தப் பாடலையெடுத்து அதில் வருகின்ற ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா என்ற அமங்கலச் சொற்களையெல்லாம் வாழ்த்திலே இடம் பெறச் செய்ய வேண்டாம், ஏனென்றால் நல்ல விழாக்களில் அமங்கலச் சொற்கள் இடம் பெறக் கூடாதென்பதற்காக அவைகளை மாத்திரம் ஒதுக்கி வைத்துவிட்டு அந்தப் பாடலை அரசாங்க விழாக்களில் பாடுகின்ற தமிழ்த்தாய் வாழ்த்தாக அன்றைக்கு ஆக்கினோம். அந்தப் பாடலை நீங்கள் கவனித்தால் தெரியும். எத்திசையும் புகழ் மணக்க ''இருந்த'' பெரும் தமிழணங்கே என்று இருக்கின்றது.

அதாவது "இருந்த" தமிழ் என்றும் கூறலாம். எத்திசையும் புகழ் மணக்க அன்றைக்கு இருந்தது. ஆனால் (கைதட்டல்) இன்றைக்கு இல்லை என்ற பொருளும் இதற்குண்டு.

இன்றைய நிலையைக் கருதி அன்றைக்கு அப்படி இருந்ததே, இன்றைக்கு இப்படியிருக்கிறதே, என்று கவலைப் பட்டு-அதைப் புகழ்மிக்கதாக, போற்றுதற் குரியதாக, மதிப்பிற்குரியதாக, மாண்புக்குரியதாக ஆக்குவதற்கான முயற்சிகளிலே ஈடுபட வேண்டும் என்பதற்கான சூளுரையையும் நாம் மேற்கொள்ளலாம்.

இந்த நூலில் மிக அதிகமாக இடம் பெற்றிருக்கின்ற கருத்து யாழ் என்ற இசைக்கருவி எப்படி தமிழ் நிலத்தை விட்டு அகன்றது. தமிழ் இசையை விட்டு எப்படி அகன்றது என்பதற்கான காரண காரிய விளக்கங்களை கமலத் தியாகராஜன் பல இடங்களில் குறிப்பிட்டிருக்கிறார். யாழ் என்ற கருவி இப்போதில்லை என்று சொன்னாலுங்கூட, இன்றைக்கும் அந்த யாழ் என்ற சொல்லை நாம் விரும்புகிறோம். துன்பம் நேர்கையில் யாழெடுத்து இன்பம் சேர்க்க மாட்டாயா என்று யாழ் இருக்கின்ற காலத்திலே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடவில்லை. யாழ் புழக்கத்தில் இல்லாத இந்தக் காலத்திலேதான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இந்தப் பாடலை பாடியிருக்கிறார். ஏனென்றால் யாழ் என்ற சொல்லை உச்சரிக்கும்போதே அவ்வளவு இனிமை இருக்கின்றது.

யாழ் இன்றைக்குப் புழக்கத்தில் இல்லை. அது எப்படித் தமிழகத்திலிருந்து போய்விட்டது என்பதற்கான காரணங்களையெல்லாம் இந்த நூலாசிரியர் ஆராய்ந்திருக்கிறார். அதற்காக நூற்றுக்கணக்கான நூல்களையெல்லாம் படித்திருக்கிறார். அப்படிப் படித்து ஆராய்ந்து அறிந்து இந்த நூலை எழுதியிருந்தாலுங்கூட, அந்தக்

குடும்பத்திற்கே உரிய பண்பு, அந்தக் குடும்பத்திற்கே உரிய அடக்கம் இந்த நூலில் தொனிக்கின்றது. இந்த நூலிலே எழுதுகிறார். . .

''இசையின் வரலாறு மறக்கப்பட்டிருக்கிறது; மறைக்கப்பட்டிருக்கிறது. உண்மை விளக்கம் எந்த நூலிலும் காண முடியாது. ஆதலின் நான் ஏற்றுக் கொண்ட முதற்கடமையாக இதுகாறும் தமிழிசை வரலாற்றைக் கூறிய நூல்கள் இந்த ஒரே காரணத்தினால் உண்மை வரலாற்றைக் கூறவில்லை என்று திட்டவட்டமாகக் கூறுவேன். அதை யாரும் மறுக்க முடியாதென்றும் நான் அறிவேன். இசையின் உண்மை வரலாறு கூறப்படவில்லை என்பதை உணர்ந்து, அதன் பிறகு அதைத் தேடி உங்களுக்கு நான் கூறுகிறேன் என்று சொன்னால் அதுவும் உண்மையாகாது.''

எவ்வளவு அடக்கமான சொற்றொடர் என்பதை எண்ணிப் பாருங்கள்.

இந்த உண்மையான வரலாறு நான் தேடிச் செல்லாமலேயே என் மடியில் வந்து தானே விழுந்தது என்று கூறலாம்.

இதற்கு உவமையும் கூறுகிறார். . . அவர் இசை வாணர் மாத்திரமல்ல. குழல் மேதை மாத்திரமல்ல. இசையைப் பற்றி மிக அருமையாக எழுதியிருக்கின்ற இந்த நூலாசிரியர் மாத்திரமல்ல. ஒரு நல்ல எழுத்தாளர். (கைதட்டல்) அந்த எழுத்து வன்மையிருந்தால்தான் சொல்ல வந்த கருத்தைப் பதிய வைக்கமுடியும். எவ்வளவு அழகாக இந்தக் கருத்தைப் பதிய வைக்கிறார் என்று பாருங்கள். சொல்கிறார்.

''பல ஆண்டுகளுக்கு முன்பு ஆனந்தவிகடன் என்ற இதழில் தேவன் என்பவர் துப்பறியும் சாம்பு என்ற கதையை எழுதினார். இச்சாம்பு குற்றவாளிகளைத் தேடி

அலைய மாட்டார். தடயங்களைத் தேடிச் செல்ல மாட்டார். குற்றத்திற்குரிய தடயங்கள் தாமாகவே அவரிடம் வந்து சேரும். குற்றவாளிகளும் தாமாகவே அவரிடம் அகப்பட்டுக் கொள்வார்கள். அப்படி ஒரு நிபுணர் இருந்ததாகக் கதை சித்தரிக்கும். அதுபோல இந்த உண்மை வரலாற்றை நான் தேடிச் செல்லவில்லை. அது தானாகவே என்னை நாடி வந்தது. இசைத் தமிழின் உண்மை வரலாற்றைப் பொறுத்த வரை அதை உணர்த்தும் என் பங்கு, துப்பறியும் சாம்புவின் பங்கு போலத்தான்.''

இப்படி மிகுந்த அடக்கத்தோடு தன்னை உயர்த்திக் கொள்கின்ற மனப்பான்மை இல்லாமல் தன்னால்தான் இதைச் செய்ய முடிந்தது. இதற்காக இத்தனை நூல்களைப் படித்தேன் என்கின்ற அந்த மனப்பான்மை இல்லாமல் தனக்கே உரிய, அந்தக் குடும்பத்திற்கே உரிய பண்பாட்டோடு இந்தச் சொற்றொடர்களை அவர் கையாண்டிருக்கிறார்.

இந்த நூலாசிரியர் மேலும் எழுதியிருக்கிறார். ''கர்நாடக இசையின் அடிப்படையில் எழுந்த நூல்களைப் பார்த்தோ தமிழ் இசையின் அடிப்படையில் மட்டும் எழுந்த நூல்களைப் பார்த்தோ நான் மன நிறைவு கொள்ள முடியவில்லை. கர்நாடக இசையைப் பற்றி எழுதியவர்களை நம்பவேண்டுமாயின் இந்த இசை மரபு எங்கோ வடநாட்டில் பிறந்து வளர்ந்து பல தேசங்கள் வழியாகத் திடீரென்று நமது நாட்டில் வந்து குதித்து விட்டதைப் போல ஒரு தோற்றத்தை நமக்கு அளிக்கிறார்கள். அதனால் நாம் மன நிறைவு கொள்ள முடிய வில்லை. அது நமக்குச் சற்றும் ஏற்றதாகத் தோன்றவில்லை.''

இது அவர் திராவிட இயக்கப் பாரம்பரியத் திலிருந்து வந்தவர் என்பதற்காக எழுதப்பட்ட வரிகள் அல்ல. உண்மை வரலாறு என்பதற்காக எழுதப்படுகின்ற வரிகள்.

''தமிழிசையைப் பற்றி எழுதுகிறவர்கள் ஏதோ ஓர் அசைக்க முடியாத நம்பிக்கையில் கர்நாடக இசை, தமிழ் இசை என்று கூறுகிறார்களே ஒழிய, அதற்குரிய காரணங்களை அவர்கள் எடுத்துரைக்கத் தவறியது மட்டுமின்றிக் கர்நாடக இசையை ஒரு சந்தேகக் கண்ணுடனே பார்க்கிறார்கள் என்று கூறினால் அது மிகையாகாது.'' என்றும் குறிப்பிடுகிறார்.

''இந்த நூலை நான் எழுதுவதற்கு முன், சென்னை மியூசிக் அகாடமி என்றழைக்கப்படும் வித்வத் சபை யினர், திருமதி செல்லம்மா நடராசனவர்கள் ஏற்படுத்திய அறக் கட்டளையின் கீழ் என்னை இசையைப் பற்றி ஒரு கட்டுரை வழங்குமாறு அழைத்தனர். அவர்கள் கொடுத்த தலைப்பு Contribution of Tamil to Karnatic Music - என்பது, அஃதாவது கர்நாடக இசை வளர்ச்சியில் தமிழின் பங்கு என்ற தலைப்பாகும். நானும் மேற்கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதினேன். எழுதி முடித்த பிறகு தான் அவர்கள் கொடுத்த தலைப்பு – அதற்குப் பொருந்தாது என்று அறிந்தேன். கர்நாடக இசை என்பது வேறு. தமிழ் இசை என்பது வேறு. தமிழ் அந்த இசை மரபில் ஒரு பங்கு எடுத்துக் கொண்டது என்பதை இக்கட்டுரை ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழிசைதான் கர்நாடக இசையாகப் பரிணமித்தது என்பது என் கட்டுரையின் முடிவாக இருந்தது. ஆதலின் மீண்டும் அவர்களுக்கு எழுதினேன். நான் எழுதிய கட்டுரைக்கு நீங்கள் கொடுத்த தலைப்பு பொருந்தவில்லை. ஆகையால் அதை – New light on the Musical History of Tamil Nadu - என்று மாற்றியமைக்கலாம் என்ற கேட்டுக் கொண்டேன். இந்த

வேண்டுகோளுடன் கட்டுரையின் நகல் ஒன்றையும் அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். அவர்களும் என்னுடைய உணர்வுகளையும் எண்ணத்தையும் உணர்ந்து இந்தப் புதுத் தலைப்பை ஏற்றுக் கொண்டார்கள். இந்தத் தலைப்பைத் தென்னக இசையிலே ஒரு புதிய பார்வை என்று கொள்ளலாம். இதே தலைப்பை மாற்றித் தான் – இசைத் தமிழின் உண்மை வரலாறு – என்று இந்நூலில் நான் அளிக்கிறேன்.'' என்று எழுதியிருக்கிறார்.

இது மிக மிக முக்கியமான ஒரு பகுதி, இந்த நூலில் என்று நான் திட்டவட்டமாகச் சொல்வேன். ஏனென்றால் தமிழிசை வேறு, கர்நாடக இசை வேறு. தமிழிசையின் பங்கே கர்நாடக இசைக்கு இருந்தது என்ற வாதத்திற்கு மாறாக – எதிராக தமிழிசைதான் கர்நாடக இசையாகப் பரிணமித்தது என்ற கட்டுரை தீட்டிய பிறகு – Contribution of Tamil to Karnatic Music - என்ற தலைப்பு நிச்சயமாகப் பொருந்தாது. உண்மை வரலாற்றைச் சொல்கின்ற வகையிலே கமலத் தியாகராஜன் உலகத்திற்கு எடுத்துக் கூறியிருக்கின்றார். தமிழிசைதான் கர்நாடக இசையாகப் பரிணமித்தது என்பது என் கட்டுரையின் முடிவாக இருந்தது என்று அவர் குறிப்பிடுகிறார். இப்படித் தமிழிசையின் மேன்மையைப் பரப்புகின்ற வகையிலே இந்த நூல் அமைந்திருக்கின்றது.

இங்கே திருப்பாம்பரம் சண்முகசுந்தரம் குறிப்பிட்டார். கமகம் பற்றி குறிப்பிட்டுப் பாடியும் காட்டினார்கள். அந்தக் கமகம் யாழிலே பொருந்தாத காரணத்தால் – பொருந்திவராத காரணத்தினால்தான் யாழே ஒழிந்தது என்ற நிலையைக் கமலத் தியாகராஜன் குறிப்பிடுகிறார்.

கமகம் இல்லாமல் பாட்டுப்பாடினால் அந்தப் பாட்டு சுவைக்காது என்பதை மிக அழகாக இந்த நூலிலே எழுதியிருக்கிறார்.

– இசை தெரிந்தவர்கள் கமகம் இல்லாமல் பாடினால் அவர் மொட்டையாகப் பாடுகிறார் என்று கூறுவது வழக்கம். பொது வழக்கில் மொட்டை என்றால் மயிரில்லாத ஒரு நிலையைக் குறிக்கும். இலக்கியத்தில் கவரிமான் மயிரை நீக்கினால் தன் உயிரையே மாய்த்துக் கொள்ளும் என்று கூறப்படுகிறது. (சில விஷயங்களைக் கூறும்போது Out of the Way என்று கூறுவார்கள்.)

அதைப்போல இதைச் சொல்லும்போதே கவரிமானின் அந்தத் தன்மையைப் பற்றி எடுத்துக் கூறுகிறார். ஒரு மயிரை இழந்தால் கூட கவரிமான் உயிர் வாழாதென்று மானத்தின் அந்த உயர்வை எடுத்துக் காட்டுகிறார். சிலபேர் முழுக்க மொட்டை அடித்தால்கூட மானம் போகவில்லை என்று இருப்பவர்கள் எல்லாம் நாட்டிலே உண்டு. சிலர் திருக்குறளையே மாற்றிப் பாடுகிறார்கள் – மயிர் நீப்பின் வாழா கவரிமான் அனையர் உயிர் நீப்பர் மானம் வரின் – என்ற பாடலை மாற்றி – உயிர் நீப்பின் வாழா கவரிமான் அனையர் மயிர் நீப்பர் மானம் வரின் – என்று பாடிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் கமலத் தியாகராஜன் குறிப்பிடுகிறார்.

"இலக்கியத்தில் கவரிமான் மயிரை நீக்கினால் தன் உயிரையே மாய்த்துக் கொள்ளும் என்று கூறப்படுகிறது. மனிதனும் மயிர் தன் தலையில் இருக்கும்வரை அதற்குப் பெருமதிப்பு கொடுக்கிறான். தலையிலிருந்து நீங்கி விட்டால் அதைக் கண்டு அருவருப்புக் கொள்கிறான் – தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர் நிலையின்

இழிந்தக்கடை – என்ற குறள் தலையின் நீங்கிய மயிரை மனிதன் எவ்வாறு மதிக்கிறான் என்பதையும் காட்டு கிறது. மொட்டை என்பது தலையில் மயிர் இல்லாத நிலையை மட்டும் குறிப்பதில்லை. ஒரு பெண்ணைக் குறிக்கும்போது மொட்டைக் கழுத்து, மொட்டைக்கை என்று சொல்லும்போது அவ்வுறுப்புகளில் ஆபரணம் அணியாத நிலையைக் குறிக்கும். முன்னர் கூறப்பட்ட உவமைகளை நோக்கும்போது கமகம் இல்லாமல் பாடுவது மொட்டையாகப் பாடுவதாகக் கூறுவது பொருத்தமாகவே தெரிகிறது'' என்று கமகம் இல்லாமல் பாடுகின்ற பாட்டு மொட்டைப் பாட்டு என்று சொல்வதற்காக இவ்வளவு உவமைகளை எடுத்துக் கையாண்டுள்ளார்.

எனவே ஒரு சிறந்த மேதையாக மாத்திரமல்ல. அவர் சிறந்த பொறியாளராக மாத்திரமல்ல. சிறந்த எழுத்தாளராகவும் எனக்குப் போட்டியாக அவர் விளங்குகிறார் (கைதட்டல்) என்பதை எடுத்துக்கூறி அவருடைய தொண்டு வாழ்க, சிறந்திடுக என்று குறிப்பிட்டு இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

5-10-98 அன்று சென்னையில்
'இசைத்தமிழின் உண்மை வரலாறு' நூல்
வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை

31

சென்னை – நாத்திகம் இராமசாமி இல்ல மணவிழா

அருமை நண்பர் நாத்திகம் இராமசாமி அவர்களுடைய அன்புச் செல்வன் சுபாசுக்கும், பரமேஸ்வரன் அவர்களுடைய அன்புச் செல்வி மாலதிக்கும் நம்மனைவருடைய இனிய நல்வாழ்த்துக்களோடு மணவிழா நிகழ்ச்சி நிறைவேறியிருக்கின்றது. இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டுள்ள எங்களை யெல்லாம் அருமை நண்பர் நாத்திகம் இராமசாமி வரவேற்றுப் பேசுகிற நேரத்தில் ஒரு திருமண விழாவிலே ஆற்றுகின்ற வரவேற்புரையாக இல்லாமல், வழக்கம்போல் நாத்திகம் பத்திரிகையிலே அவர் எழுதுகின்ற சொற்களை அள்ளி வீசி, ஆவேசமான வார்த்தைகளைப் பொழிந்து, எங்களை வரவேற்றிருக்கின்றார்.

எப்போதும் வரவேற்புரையில் இனிமை இருக்க வேண்டும் என்பார்கள். ஆனால் அவர் ஆற்றிய வரவேற்புரையில் ‘‘வா’’ என்ற இனிமை இல்லை. வ...ா...ா என்கிற கடுமையிருந்ததை (கைதட்டல்) நாமெல்லாம் கவனித்தோம். காரணம் அவருடைய உள்ளத்தின் ஆழத்திலே அன்று தொட்டு இன்று வரை ஆழமாகப் பதிந்து போயிருக்கின்ற உணர்வின் அலை அது. அதைத்தான் இங்கே நாமெல்லாம் கண்டு கேட்டுச் சுவைத்திருக்கிறோம்.

பேராசிரியர் அவர்களும், தமிழ்க்குடிமகன், ஆலடி அருணா ஆகியோரும் இங்கே எடுத்தியம்பியதைப் போல இளமைக்காலந்தொட்டு தான் ஏற்றுக் கொண்ட ஒரு கொள்கையில் இன்று வரையிலே உறுதியாக இருக்கின்றார். மனதில் பட்டதைக் கொஞ்சமும் தயக்கமின்றி, அச்சமின்றி எடுத்துக் கூறுகின்ற அந்தப் பண்பாட்டுக்குச் சொந்தக்காரராக பாலபருவம் முதல் இன்று வரையிலே அவர் விளங்கிக் கொண்டிருக் கின்றார்.

அவர் பேசும்போது, முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு எத்தனையோ வேலைகளையெல்லாம் விட்டு விட்டு எங்கள் அழைப்பையேற்று இங்கே வந்திருக்கிறார் என்று குறிப்பிட்டார். நான் அவருக்கும் உங்களுக்கும் சொல்வேன். எங்களுக்கு வேலை என்பது முதல்வேலையே இந்த வேலைதான். இதற்குப் பிறகுதான் எங்களுக்கு மற்ற வேலையெல்லாம். தந்தை பெரியாரிடம் பாடம் பயின்ற மாணவர்களாக இருந்த அந்தக் காலத்திலும் சரி, அறிஞர் அண்ணா அவர்களின் வழிகாட்டுதலோடு அரசியல் நெறியிலே நாங்கள் ஒழுகிட வேண்டுமென்பதற்காக அந்தக்களத்திலே அடியெடுத்து வைத்து இன்றைக்கு உலவிக் கொண்டிருக்கின்ற இந்தக் கால கட்டத்திலும் சரி, நாங்கள் ஆரம்பத்தில் பார்த்த வேலை இந்த வேலைதான் என்பதை நாங்கள் என்றைக்கும் மறப்பதில்லை.

அதை மறந்துவிட்டால் இந்த வேலைக்கெல்லாம் அர்த்தமில்லாமல் போய்விடும். ஆரம்பத்திலே பார்த்த வேலை இந்த வேலை என்பதால் என்னைப் பொறுத்த வரையிலேகூட, ஏன், நம்முடைய பேராசிரியரைப் பொறுத்தவரையிலேகூட, நாங்களெல்லாம் தந்தை

பெரியார் அவர்களிடத்திலே மாணவர்களாக இருந்த அந்தக் காலக் கட்டத்தில் பெரும்பாலும் எங்களுடைய இயக்கப் பிரச்சாரம் தந்தை பெரியாருடைய கொள்கைகளை எடுத்துக் கூறுகின்ற மேடை; மணவிழா மன்றங்களாகத்தான் இருந்திருக்கின்றன. அப்படி அன்றைக்கு மணவிழா மன்றங்களாக இருந்த எங்களுடைய பிரச்சார மேடை பிறகு மாநாடுகளாக, பொதுக் கூட்டங்களாக விரிவடைந்தது என்றாலும்கூட, அந்த முதல் வேலை பார்த்தோமே, மணவிழா மேடை வேலை; அதுதான் எங்களுக்குச் சில நேரங்களில் ஆபத்தில் கைகொடுத்த மேடையாகும்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், இந்தியாவில் நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப் பட்டிருந்தபோது, கூட்டங்கள் போடக்கூடாது, மாநாடுகள் நடத்தக்கூடாது, பேசக்கூடாது என்று தடை விதிக்கப் பட்டிருந்தது. எப்பொழுதுமே தடை விதிக்கப்பட்டால்; இப்பொழுது கூட நீங்கள் பார்க்கலாம் – 144 தடையை எந்த அரசு, எந்த மாநிலத்திலே பிறப்பித்தாலும், அதற்குச் சில விதிவிலக்குகள் உண்டு. ''திருமண நிகழ்ச்சிகள், வேறு சில மதச் சடங்குகள் தவிர'' என்றிருக்கும். எனவே அந்த விதிவிலக்கைப் பயன்படுத்திக் கொண்டு நெருக்கடி நிலை காலத்தில் நாங்கள் பிரச்சாரம் செய்ததெல்லாம் இந்த மணவிழா மேடைகளிலேதான். அதிலே கூட பல இடங்களில் ஒலி பெருக்கி அனுமதிக்கப்படுவதில்லை. மெகபோனைக் கையிலே வைத்துக் கொண்டு கூட பல இடங்களில் நெருக்கடி நிலையின்போது 76–ஆம் ஆண்டு நான் மணவிழா மேடைகளில் பேசியிருக்கிறேன்.

எவ்வளவோ எதிர்ப்புக்கிடையேதான், ஏச்சுக்கள், இழிதகைப் பேச்சுக்களுக்கிடையேதான் இன்றைக்கு இந்தக் கொள்கையை நாம் வளர்த்துக் கொண்டிருக்

கிறோம். நாத்திகம் இராமசாமி அவர்கள் ''நாத்திகம்'' என்ற அடைமொழியை அவருடைய பெயரில் விடாமல் வைத்துக் கொண்டிருக்கின்றார் என்பதை பேராசிரியர் இங்கே குறிப்பிட்டார். நாத்திகம் என்ற அந்தக் கொள்கையோ, சுயமரியாதைக் கொள்கையோ அல்லது வேறு எந்தக் கொள்கையாக இருந்தாலும்கூட, ஏற்றுக் கொள்ளும் அந்தக் கொள்கைக்கு விசுவாசமாக இருக்க வேண்டும்.

இன்றைக்கு ஆன்மீகத் துறையிலே கடவுளை ஏற்றுக் கொண்டு வழிபட்டு, கடவுள்பால் தங்கள் உள்ளத்தைப் பறிகொடுத்திருக்கின்ற பக்தர்களும் இருக்கிறார்கள்; அதே நேரத்தில் பக்தர்கள் என்று வேடமிட்டு அந்தப் பகவானை ஏமாற்றுகின்றவர்களும் நாட்டில் இருக்கிறார்கள். அதைப் போல பகுத்தறிவு பேசிக் கொண்டிருப்பவர்களும் இருக்கிறார்கள். அதே நேரத்தில் பகுத்தறிவுவாதிகள் என்று சொல்லிக் கொண்டு பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட காரியங்களிலே ஈடுபடுகின்றவர்களும் இருக்கின்றார்கள்.

எனவே எல்லோரும் மனிதர்கள்தாம். அவர்கள் தங்களைப் பகுத்தறிவுவாதிகள் என்று சொல்லிக் கொண்டாலும் அல்லது பக்திமான் என்று சொல்லிக் கொண்டாலும் அந்த இரண்டு நிலைகளிலும் ஏற்றுக் கொண்ட கொள்கையிலே உறுதியாக இருக்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும். அப்படி உறுதியற்றவர்கள் இரு துறையிலும் இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

தந்தை பெரியார் அவர்கள் கடவுள் இல்லை என்று சொன்னார். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்று தி.மு.கழகத்திற்குக் கடவுளைப் பற்றிய கொள்கையை வகுத்துக் கொடுத்தார். ஒன்றே குலம். ஒருவனே தேவன் என்று சொல்கின்ற

நேரத்தில் – புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அல்ல, அந்தப் பாரதிதாசனுக்கு ஆசிரியராக வாய்த்திருந்த தேசியக் கவி – கவிச்சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியார் – "ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்; அறிவொன்றே தெய்வம் என்று ஓதி அறியீரோ?" என்று அறிவுறுத்துகிறார். அறிவே தெய்வம் என்று பாடிய பாரதியார், 'தெய்வம் உண்மையென்று தானறிதல் வேணும்' என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

உண்மைதான் தெய்வம், அந்த உண்மைக்குப் பயந்து நடந்தால் அது தெய்வத்தை வழிபடுவதற்குச் சமம் என்று பாரதியாரே குறிப்பிட்டிருக்கிறார். அந்தக் கருத்தைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்று தி.மு.கழகத்திற்கு ஒரு கொள்கைத் தத்துவத்தைத் தந்தார்கள். அதுகூட திருமூலருடைய வாக்கியந்தான். இந்த இயக்கம் அன்று தொட்டு இன்று வரையில் எதிர்ப்பிலேயே வளர்ந்து, எதிர்ப்பிலேயே வாழ்ந்து எதிர்நீச்சல் போட்டு வருகின்ற இயக்கம். அதனால்தான் அருமை நண்பர் நாத்திகம் ராமசாமி அவர்கள் "நாத்திகம் இராமசாமி" என்பதை அழுத்தந்திருத்தமாக இன்றைக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

படாதபாடுபட்டு நாம் இந்தப் பயணத்தை நடத்திக் கொண்டிருக்கின்றோம். இந்த இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரும் எனக்கு மேடையிலே பேசுகின்ற ஆற்றலை வளர்த்துத் தந்தவருமான பட்டுக் கோட்டை அண்ணன் அழகிரிசாமி அவர்களைப் பற்றி உங்களில் பலர் கேள்விப் பட்டிருக்கலாம். சிலர் அறியமாட்டீர்கள். அவர், இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தில் திருச்சியிலிருந்து சென்னை வரை நடைப் பயணம் மேற்கொண்டார். அவரோடு மணவை திருமலைசாமி, மூவலூர் மூதாட்டி

இராமாமிர்தம் அம்மையார் போன்றவர்கள் எல்லாம் அந்த நடைப் பயணத்தில் ஈடுபட்டு இருந்தார்கள். அப்படி வருகின்ற வழியில் ஒரு கிராமத்தில் செருப்பாலேயே தோரணம் கட்டி, செருப்பாலேயே வரவேற்பு வளைவை வைத்து பட்டுக்கோட்டை அழகிரிசாமி அவர்களையும், ஊர்வலத்தினரையும் அவமானப்படுத்தும் வகையிலே ஒரு செயலைச் செய்திருந்தார்கள். ஆத்திரம் கொண்ட தொண்டர்கள் அதை அவிழ்ப்பதற்காகச் சென்றபோது அண்ணன் அழகிரிசாமி அவர்கள், யாரும் அந்தத் தோரணத்தை அவிழ்க்காதீர்கள் என்று கூறிவிட்டு, ஒரு ஸ்டூலைப் போட்டுக் கொண்டு, அதிலே ஏறி நின்று ஒரு மணி நேரம்; "ஏன் இந்த தமிழர்படை ஊர்வலத்தை மேற்கொண்டேன்" என்பதற்கான காரண காரியங்களை விளக்கிய பிறகு, செருப்புத் தோரணம் கட்டியவர்களே அந்தத் தோரணத்தை அவிழ்த்து விட்டு அழகிரிசாமி அவர்களோடு வந்தவர்களுக்கு விருந்தளித்து சென்னைக்கு வழியனுப்பி வைத்தார்கள் என்பது சரித்திரம். (கைதட்டல்) இதுதான் இந்த இயக்கத்தின் வரலாறு.

1957–ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் தேர்தலிலே ஈடுபட்டபோது, காஞ்சிபுரத்தில் அவருடைய வீட்டு வாசலிலேயே ஒரு நீளமான பலகையில் எழுதி வைத்தார்கள். அண்ணா அவர்களைப் பற்றி எவ்வளவு தரக்குறைவாக இழிவாக எழுத முடியுமோ அந்த அளவிற்கு எழுதி வைத்தார்கள். கழகத் தோழர்கள் ஆத்திரப்பட்டார்கள். அண்ணா – யாரும் ஆத்திரப்படக் கூடாதென்று சொல்லிவிட்டு – மாலை 6 மணிக்கு மேல் இருட்டு வந்த பிறகு ஒரு பெட்ரோமாக்ஸ் லைட்டைக் கொண்டு வரச் சொல்லி அந்தப் பலகைக்குப் பக்கத்திலே அந்த விளக்கைத் தொங்க விடச் செய்து, "விளக்கு

உபயம் அண்ணாதுரை'' என்று எழுதி வைத்தார். அது இரவில் எல்லோருக்கும் தெரியாமல் போய்விடக்கூடாது என்பதற்காக அதை எழுதி வைத்தார். அப்படி எதிர் நீச்சல் போட்டவர்கள் நாம்.

கடலூரில் இருக்கின்ற ஒரு பாலத்திற்குப் பக்கத்தில் பெரியாரின் சிலை ஒன்றிருப்பதை நீங்கள் பார்த் திருப்பீர்கள். அதை நான்தான் கடந்த காலத்தில் முதல்வராக இருந்த போது திறந்து வைத்தேன். அந்தச் இடத்திற்கு ஒரு வரலாறு உண்டு. ஒரு காலத்தில் அந்தப் பகுதியில் பெரியார் ஊர்வலமாகச் சென்றபோது, அந்தப் பாலத்திற்குப் பக்கத்தில் சென்றபோது, அந்த ஊர்வலத்தில் பெரியாரின் மீது செருப்புகள் வீசப் பட்டன. அப்படிச் செருப்பு வீசப்பட்ட அந்த இடத்தில் அந்த நினைவாக அந்தச் சிலையை வைக்க வேண்டுமென்று எல்லோரும் விரும்பினார்கள் பெரியார் அந்தச் சிலை திறப்பு விழாவிலேயே பெருமிதத்தோடு கலந்துகொண்டு அதைப்பற்றிச் சொன்னார்.

இவைகளையெல்லாம் சொல்வதற்குக் காரணம் ஏச்சு, பேச்சு, இழிவு, தூற்றல் இவைகளையெல்லாம் தாங்கிக் கொண்டு இந்த இயக்கம் வளர்ந்திருக்கின்றது. சிறைச்சாலைக்கும் சென்றிருக்கிறோம். இதைப்போன்ற சித்திரவதைகளையும் எங்களுடைய குலத்தைப் பற்றி, குடும்பத்தினரைப் பற்றி, உற்றார் உறவினர்களைப் பற்றி, எங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கை முறையைப் பற்றியெல்லாம் தரக்குறைவாகப் பேசப்பட்ட அந்த எதிர்ப்புக்களையெல்லாம் கடந்துதான் இந்த இயக்கம் இன்றைக்கு வளர்ந்திருக்கின்றது.

அத்தகைய வளர்ச்சிக்கு நம்முடைய அருணா அவர்கள் குறிப்பிட்டதைப் போல – ஒளிமயமான

இடத்திலே இருந்து கொண்டு உழைக்காவிட்டாலும், என்னுடைய அருமைச் சகோதரர் நாத்திகம் இராமசாமி அவர்களும் தன்னுடைய உழைப்பைத் தந்திருக்கிறார், பணியாற்றியிருக்கிறார். அவருடைய எண்ணங்களை, எழுத்துக்களை இந்த இயக்கத்திற்கு வழங்கி வளர்த்திருக்கிறார் என்ற வகையிலே அதற்கு நன்றிக் கடனாகத்தான் – அதைப் பாராட்டுவதற்காகத்தான் – அந்தப் பெருமையிலே நாங்களும் பங்கு கொள்வதற் காகத்தான் இந்தத் திருமண விழாவிலே கலந்து கொண்டு மணமக்கள் சுபாசையும் மாலதியையும் வாழ்த்துகிறோம்.

18-10-98 அன்று சென்னையில் நாத்திகம் இராமசாமி இல்ல மணவிழாவில் ஆற்றிய உரை

சென்னை – ஈரோடு தமிழன்பன் நூல்கள் வெளியீட்டு விழா

கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்களுடைய இரண்டு அரிய நூல்களை வெளியிடுகின்ற இந்த இனிய விழாவில் கலந்துகொண்டு நூல்களை வெளியிடுகின்ற இந்த நல்ல வாய்ப்பைப் பெற்றமைக்காக நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழன்பன் அவர்களைத் தமிழ்நாட்டுக்கு அறிமுகப்படுத்த வேண்டியதில்லை. கடந்த பல ஆண்டு காலமாக தமிழ் பூமியில் தமிழன்பன் யார் என்பது உணர்த்தப் பட்டிருக்கின்றது. அவருடைய கவிதைகள் தமிழகத்திலே உலா வந்து கொண்டிருக்கின்றன. அவருடைய புகழும், பெருமையும் நாளும் வளர்ந்து கொண்டே இருக்கின்றது. அத்தகைய ஒரு சூழலில் அவருடைய பல நூல்களைத் தொடர்ந்து இந்த நூல்கள் இன்று வெளியிடப்பட்டிருக்கின்றன. இங்கே உரையாற்றிய பேராசிரியர் அவர்களும் மற்றும் தமிழ்ப் பெருமக்களும் அவர் எழுதியுள்ள கவிதைகளின் திறமைகளையும் இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

அவர் யாத்துள்ள இந்தக் கவிதைகளில் எவை சிறப்பானவை, எவை சிறப்பற்றவை என்று பகுத்துக்

கூற முடியாத அளவிற்கு அனைத்துமே தேனாய், கற்கண்டாய் இனிக்கின்ற அந்தத் தன்மையை இந்த நூல்களில் என்னால் காண முடிகின்றது.

எந்தத் தேதி? என்ற ஒரு தலைப்பில் அவர் கேட்கிறார் –

"உழைக்க ஒரு சாதி!
உறிஞ்சிப் பிழைக்க ஒரு சாதி!
இந்தக்
கிழட்டு நீதி
கிழிபடப் போவது எந்தத் தேதி?"

என்று கேட்கிறார்.

உரையாற்றியவர்கள், புகழ்ந்தவர்கள், விமர்சித்தவர்கள் ஒவ்வொரு கவிதைக்கும் தாங்கள் கொண்ட பொருளை விளக்கி தாங்கள் கொண்டுள்ள கருத்தை விளக்கிக் கூறி உரையாற்றியிருந்தாலும்கூட எனக்கு ஈரோடு தமிழன்பன் இடத்திலே காணவேண்டும் என்று துடித்த அந்த ஆர்வம் இன்றைக்குள்ள சமுதாயத்தைப் பற்றி என்ன சொல்கின்றார்? இந்தச் சமுதாயத்திற்கு என்ன அறிவுரையை இந்த நூல்கள் மூலம் வழங்குகின்றார் என்பதுதான். எடுத்த எடுப்பிலேயே என்னுடைய கண்ணில் பட்ட இந்த வரிகள் என்னை மிகவும் நெகிழவைத்த வரிகளாகும். இவை இளைய தலைமுறையினுடைய இதயங்களிலே பதியவைக்கப்பட வேண்டிய வாசகங்களாகும். கவிதை வரிகளாகும்.

அடுத்து,

"மனிதனை மனிதன்
மதிக்கும் மானுட நேயம்
மலர்வதற்கு

மதங்கள் தடையெனில்

மதங்களை ஒழிப்போம்!”

என்று எழுதியிருக்கிறார்.

மனித நேயத்தை ஒழிப்பதற்கு இன்றைக்கு மதங்கள் முன்வருகின்ற நேரத்தில் மானிட நேயம் மலர்வதற்கு அவைகள் தடையாக இருக்குமானால் வேறு வழியில்லை மதங்களையே ஒழிப்போம் என்று மிகுந்த உறுதியோடு திடமான தமிழ்ச் சொற்களைக் கையாண்டு அவர் யாத்துள்ள இந்தக் கவிதை வரிகள் என்றென்றும் நமக்கு ஓர் அறைகூவலாக விளங்குகின்றன.

மதங்களை ஒழிக்க வேண்டும் என்கின்ற அந்த உணர்வோடு அவர் அதைக் கூறவில்லை. மதங்கள் மனிதநேயத்திற்குத் தடையாக இருக்கக் கூடாது என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்வதற்காக இந்தக் கருத்தை அவர் கவிதை வாயிலாக எடுத்துக் காட்டியுள்ளார். அவருடைய உவமைகளை, சொல்லாடலை அவருடைய வீச்சுக்களை பல கவியரங்கங்களிலே நானும் கேட்டிருக்கின்றேன். நீங்களும் கேட்டு இருக்கின்றீர்கள், ஒரு இடத்திலே குறிப்பிடுகிறார்.

“பெட்டிக்குள் அடக்கினாலும்

பிணமாகி விடாத

தீக்குச்சிக் குணத்தை

எடுத்துச் செல்வோம்!”

பெட்டிக்குள் இருந்தாலும் தீக்குச்சி பெட்டிக்குள் அடங்கிவிட்ட காரணத்தால் அதனுடைய சக்தி குறைவதில்லை. பெட்டிக்குள் அடக்கினாலும் பிணமாகி விடாத தீக்குச்சிக் குணத்தை எடுத்துச் செல்வோம். மேலும் கூறுகிறார்.

"அழுக்கைக் கழுவும்
தண்ணீர், அழுக்காகிப் போகும்!
மாசை எரிக்கும் நெருப்பு
மாசாவதே இல்லை!"

அழுக்கைக் கழுவுகின்ற தண்ணீர் அந்த அழுக்கோடு கலந்து அழுக்காகி விடும். மாசு நெருப்பால் எரிக்கப்படும் போது இந்த நெருப்பு மாசாகி விடுவ தில்லை, ஆனால் அழுக்கைத் கழுவுகின்ற தண்ணீர் அழுக்காகி விடுகின்றது. நாம் எல்லா வகையிலும் நெருப்பாக இருக்க வேண்டும். என்பதை எடுத்துக் காட்டுவதற்காக அவர் கையாண்டுள்ள கவிதை வரிகள் இவைகள்.

அவருடைய உவமைகளுக்கு ஒன்றிரண்டு எடுத்துக் காட்டுகளைச் சொல்ல வேண்டுமேயானால், காலையிலே கிழக்குத் திசையில் கதிரவன் தோன்றுகிறான். அதை அவர் எப்படிச் சொல்கிறார் என்பதுதான் புதுமை.

"கள்ளச் சாராயத்தைக்
குடித்த
நள்ளிரவு,
இடுப்பு வலி எடுத்த
கிழக்கின் வயிற்றில்
எட்டி உதைக்கிறது."

ஏற்கனவே கிழக்கு பிரசவத்திற்குத் தயாராக இருக்கின்றது. இடுப்பு வலி எடுக்கின்றது. கள்ளச் சாராயத்தைக் குடித்த நள்ளிரவு இடுப்பு வலி எடுத்த கிழக்கின் வயிற்றில் எட்டி உதைக்கிறது என்கிறார்.

பிறகு மாலைப் பொழுதைச் சொல்கிறார்.

"நாளின்
கழுத்தைக் கவ்விய சூரியன்
இரத்தம் சொட்டச் சொட்ட அதை
இழுத்துக் கொண்டு மறைகிறான்
மேற்கில்."

அந்தி வானத்தை இவ்வளவு அழகாக வர்ணித்த கவிஞன் வேறு யாரும் இருக்க முடியாது. தம்பி ஈரோடு தமிழன்பன் அதிலே வெற்றிக்கொடி நாட்டியிருக் கின்றார் என்றே நான் கருதுகிறேன்.

விண்மீன்களைப் பற்றி பாடும்போது,

"உறங்கப் போனபோது
சூரியன்
படுக்கையை உதறினான். . .
நட்சத்திரத் தூசுகள்."

அடுத்து ஒரு பழைய புராணக் கதையோடு நட்சத் திரங்களுக்கான உவமையைக் கூறுகிறார்.

"எந்தக் கவுதமன்
இரவைச் சபித்தான்?
இப்படி உடம்பெல்லாம்
கண்கள்?"

அகல்யா கவுதமன் கதை உங்களுக்கெல்லாம் தெரியும். இந்திரன் சம்பந்தப்பட்ட கதை அது. அகல்யாவை இந்திரன் கற்பழித்து விடுகிறான். அவளும் இணங்கினாள் என்று நான் அல்ல வ.ரா.வே. சொல்லியிருக்கிறார். இதைத் திடீரென்று வந்து கண்டு விட்ட கவுதம முனிவர் இந்திரனை சபிக்கிறார். அகல்யாவைக் கல்லாக கடவாய் என்று சொல்லிவிட்டு இந்திரனை உன்னுடைய உடம்பெல்லாம் கண்களாகக்

கடவது என்று சபிக்கிறார். இங்கே அதைத்தான் நட்சத் திரங்களுக்கு உவமையாக எந்தக் கவுதமன் இந்திரனைச் சபித்தான் இப்படி உடம்பெல்லாம் கண்கள் என்று கேட்கிறார்.

அடுத்து நான் மிகவும் சுவைத்த வரிகள்.

"அந்தி, சூரியனை விதைத்தது
அதற்குள் இத்தனை பூக்களா?
என்ன வீரிய விதை!"

சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் இந்தக் கவிதை வரிகளிலே ஒரு அருமையான கவிதையை எடுத்து இங்கே உரையாற்றினார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களைப் பற்றி தம்பி கவிஞர் ஈரோடு தமிழன்பன் எழுதியுள்ள வரிகள் அவை. அதை மீண்டும் நான் சொல்லி, வேறு சில விளக்கங்களையும் கூற விரும்புகின்றேன்.

"பாரதிதாச!
உன்னைக் கனகசபை எழுதியபோது
நீ
சுப்பிரமணியர் துதி அழுது!"

பாரதிதாசனுடைய தந்தையின் பெயர் கனகசபை. கனகசபை எழுதியபோது அவருடைய தாயின் கருவில் கனகசபை எழுதியபோது அவன் தந்தைக்கு மகன் என்ற நிலையிலே பள்ளிப் பருவத்தில் அல்லது வாலிப பருவத்தில் அவர் சுப்பிரமணிய துதி அழுது என்கின்ற நூலைப் பாடினார். அந்த நூலை – உங்களில் பலர் கண்டிருக்க முடியாது. முருகனைப் பற்றி புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அன்றைக்கு, பக்தர் பாரதிதாசனாக இருந்தபோது எழுதியதைப்போல எந்த பக்தர்களும் எழுதியிருக்க முடியாது.

அத்தகைய அருமையான அளவில் சுப்பிரமணியர் துதியமுது பாடினார்.

“எட்டையபுரத்தான் உன்னை எழுதிய போது
நீ
கதர் இராட்டினப் பாட்டு”

கதர் இராட்டினப்பாட்டு என்ற தலைப்பில் பாரதிதாசன் நூல் ஒன்று வெளிவந்திருக்கிறது. கதரைப் பற்றி அதனுடைய அருமை பெருமைகளைப் பற்றி பாரதிதாசன் கவிதை போல இன்றைக்கு இருக்கின்ற காங்கிரஸ் கட்சியின் கவிஞர்கள் கூட யாரும் எழுத இயலாது. காந்தியடிகளேகூட அதைப்படித்திருந்தால் ‘இப்படி ஒரு கவிஞனா!’ என்று வியப்பில் ஆழ்ந்து போயிருப்பார்.

“ஈரோட்டுப் பெரியார் உன்னை
எழுதியபோது நீ
புரட்சிக் கவிஞன்”

என்று குறிப்பிடுகின்றார். இந்தச் சுப்பிரமணிய துதி அமுது, கதர்ப்பாட்டு, பிற்காலத்தில் அவர் பாடிய சுயமரியாதைப் பாடல்கள், திராவிட இயக்கப் பாடல்கள், தமிழ்ச் சமுதாயத்தைப் பற்றிய பாடல்கள் இவைகளை யெல்லாம், நீங்கள் எண்ணிப்பார்க்கும் பொழுது ஒன்றை நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும்.

இன்னும் நூறு ஆண்டுகளுக்குப் பிறகு அல்லது ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு யாராவது ஒரு குறும்புக்காரர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் கவிதைகளை வெளியிடுகிறேன் என்று சொல்லி அவர் எழுதிய சுயமரியாதைப் பாடல்கள், திராவிட நாட்டுப் பண்கள், தமிழ் இயக்கப் பாடல்கள் இவைகளை யெல்லாம் புத்தகத்தின் முன் பகுதியில் வைத்துவிட்டு பாரதிதாசன் பிறகு திருந்திவிட்டார், ஆத்திகராக

மாறிவிட்டார், அந்தக் காலத்தில் எழுதியது சுப்பிரமணியர் துதி அமுது என்று கூட ஒரு புரட்டைச் செய்ய முடியும். எனக்குச் சந்தேகம் இது. பாரதியார் யுகத்திலே நடந்திருக்குமோ என்று. சுப்பிரமணிய பாரதியார் யுகத்தில் நடந்திருக்கக்கூடும். ஏனென்றால் அவர் பாடிய பாடல்கள் எவ்வளவு புரட்சிகரமானது என்பதைச் சிலவற்றை மறைத்துவிட்டாலும்கூட மறைக்காமலே வெளியிடப்பட்ட சில கவிதைகள் இன்றைக்கும் மக்கள் மத்தியிலே பரவியிருக்கின்றன.

"பார்ப்பானை, ஐயர்
என்ற காலமும் போச்சே!
வெள்ளைப் பரங்கியரை துரை என்ற
காலமும் போச்சே!"

பாரதியார் கவலைப்பட்டு அதைச் சொல்லவில்லை. அப்படிப்பட்ட காலம் மாறிவிட்டது என்பதற்காக அதைச் சொல்கிறார்.

"ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று
தேடி அலையும் அறிவிலிகாள்"

என்கிறார் பாரதியார். அவைகளெல்லாம் வரிசையிலே ஒழுங்காக வைக்கப்படாமல் மாறி மாறி வைக்கப்பட்டு பாரதியார் ஏதோ சமுதாயத்திலே புரட்சி செய்தவர் அல்ல என்பதைப் போலவும், சாதி மதங்களை வேரோடு வெறுத்தார் என்கின்ற நிலையை எடுத்துக்காட்டாமல் சமுதாயத்தில் ஒரு புரட்சிக்காரராக விளங்கினார் என்பதை எடுத்துக் காட்டாமல் அவரை முழுக்க ஒரு பக்தராக தேவி உபாசகராக நாட்டிலே காட்டியிருக் கிறார்கள் என்றால் அவருடைய பாடல்கள் ஒழுங்காக வரிசைப்படுத்தப்படவில்லை என்பதுதான் அதற்குப் பொருள்.

அதற்காகத்தான் சொல்கிறேன். இந்தப் பாடல்களைக்கூட எதிர்காலத்திலே ஒழுங்காக வரிசைப்படுத்தாமல் வேண்டுமென்றே பாரதிதாசனுக்குக் களங்கம் கற்பிக்க அத்தகைய முயற்சியிலே கூட சிலர் ஈடுபடக்கூடும். ஏனென்றால் அவர் எழுதிய சுப்பிரமணியதுதி அமுது, கதர்பாட்டு இவைகளெல்லாம் அவ்வளவு சிறந்த பாடல்கள் அத்தகைய தொகுப்பு நூல்கள் வெளிவந்திருக்கின்றன.

பாரதிதாசனைப் பற்றி பாடும்பொழுது நம்முடைய தம்பி தமிழன்பன் அந்தப் பாட்டின் இனிமையைப் பற்றிக் கூறுகிறார்.

“விலகல் கடிதம்
கொடுத்துவிட்டு புல்லாங்குழலிலிருந்து
வெளியேறிய பாட்டு
உன்னைச் சந்தித்தது! அந்தச் சந்திப்பில்
பாட்டுக்கு
மீசை முளைத்தது”

விலகல் கடிதம் கொடுத்துவிட்டு புல்லாங் குழலிலிருந்து வெளியேறிய பாட்டு உன்னைச் சந்தித்தது. புல்லாங்குழலிலிருந்து பாட்டு வெளியே வருகிறது. இசை வெளியே வருகிறது. புல்லாங்குழலுக்குள் ஊதும்போது இசை உள்ளே நுழைகிறதாம். அது வெளியில் வருகிறபொழுது எப்படி இருக்கிறதாம் விலகல் கடிதம் கொடுத்துவிட்டு இசையை மீட்டிவிட்டு வெளியே வருகிறதாம். விலகல் கடிதம் கொடுத்துவிட்டு புல்லாங்குழலிலிருந்து வெளியேறிய பாட்டு உன்னைச் சந்தித்தது. அந்தச் சந்திப்பில் பாட்டுக்கு மீசை முளைத்தது. அந்தப் பாட்டு வீரப்பாட்டாக முற்பகுதியில் மாறியதாம்.

"உனது
வாக்கியங்களில் ஒன்றிரண்டைக்
கேட்டதும்
வயதுக்கு வந்தன எரிமலைகள்!"

மேலும் செல்லப்பன் இங்கே கூறினார்.

"நடவு செய்த தோழர்களின்
கூலி
நான்கு அணாக்களை உன்
கோபநெருப்பு உருக்கிச்
சம்மட்டி தயாரித்தது"

என்று தமிழன்பன் எழுதுகிறார். இதைப் பாரதிதாசன் எழுதும்போது,

"நடவுசெய்த தோழர்கூலி
நாலணாவை ஏற்பதும்
உடலுழைப்பி லாதசெல்வர்
உலகை ஆண் டுலாவலும்
கடவுளாணை என்றுரைத்த
கயவர் கூட்டமீதிலே
கடவுள் என்ற கட்டறுத்துத்
தொழிலாளரை ஏவுவோம்" என்று பாடுகிறார்.

அதைத்தான் தமிழன்பன் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

'மனிதனைத் தேட மார்க்கம் என்ன?' என்ற தலைப்பில் அவர் எழுதியுள்ள அந்தக் கவிதையில்தான் எனக்குச் சற்று மாறுபாடு. மாறுபாடுகளைச் சொன்னால் பாராட்டு விழாவிலே தம்பி தமிழன்பன் வருத்தப்பட மாட்டார் என்று கருதுகிறேன். உரிமையுள்ள அண்ணன் என்ற காரணத்தால் சொல்கின்றேன்.

"இராமன்
இராவணர்களோடு கூட்டுச் சேர்ந்து
கொண்டான்.
சரயூ வெள்ளத்தில்
தருமத்தின் பிணங்கள்" என்று குறிப்பிடுகிறார்.

இராவணர்களோடு கூட்டுச் சேர்ந்தால் தருமம் பிணமாகிவிடும் என்பது நம்முடைய தம்பி ஈரோடு தமிழன்பனுடைய கருத்தாக வெளிப்பட்டிருக்கின்றது. வெளிப்பட்ட கவிதை அவருடைய கருத்தோ என்று தோன்றச் செய்திருக்கின்றது. உண்மையிலேயே அது அவருடைய கருத்தல்ல என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் அவருடைய கருத்தோ என்று தோன்றச் செய்திருக்கின்றது.

அவர் எந்தக் கூட்டு பற்றி சொல்கிறார் என்று எனக்குத் தெரியும். எந்த இராமனை பற்றியோ சொல்கிறார். பாபர் மசூதியைப் பற்றி குறிப்பிட விருக்கிறார். எனக்கு ஒரு கவலை உண்டு. நம்முடைய கவிஞர்கள் வைரமுத்து அதை வெளியிட்டாரா என்பது எனக்குத் தெரியாது. அவருடைய பல கவிதைகளை நான் கண்டதில்லை. நம்முடைய கவிக்கோ அப்துல் ரகுமானானாலும் தமிழன்பனானாலும் வேறு சில கவிஞர்களானாலும் இராவணனைப் பற்றிக் குறிப்பிடும் பொழுதெல்லாம் ஏதோ ஒரு கெட்ட குணத்தின் அடை யாளமாகக் குறிப்பிடுவதை வழக்கமாகக் கொண்டிருக் கின்றார்கள். அதை நான் ஏற்பதற்கில்லை. (பலத்த கைதட்டல்) ஏனென்றால் தம்பி தமிழன்பன் எந்த பாரதிதாசனைப் பற்றி இவ்வளவு பாராட்டுக்களைச் சொல்லியிருக்கிறாரோ அந்தப் பாரதிதாசன்

இராவணனைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா? பாரதிதாசனுக்கு முன்பே பாரதிதாசனுக்கும் எங்களுக்கும் அடியெடுத்துக் கொடுத்தவரே பண்டிதர் ஜவகர்லால் நேரு. அவர் எழுதிய ''உலக வரலாற்றில்'' இராமாயணம் ஆரிய திராவிடப் போராட்டம் என்று சொல்லியிருக்கிறார். எனவே இராவணன் திராவிடன் தான். திராவிட மன்னன்தான் என்பதிலே எந்த ஐயப்பாடும் கிடையாது. காரணம் பண்டித நேருவே அதற்குச் சான்று கூறுகிறார். அதை அடிப்படையாக வைத்துத்தான் இராவணன் திராவிட மன்னன் என்று நாம் வாதாடுகிறோம். அந்த உண்மையை ஊருக்கும் உலகிற்கும் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

நான் இரக்கமற்ற அரக்கன் அல்ல என்று நிரூபிப்பதற்காக நான் இரக்கமற்ற அரக்கனா என்ற ஒரே கேள்வியை அடிப்படையாக வைத்து மூன்று மணி நேரம் நடக்கக் கூடிய 'நீதி தேவன் மயக்கம்' என்ற நாடகத்தை, பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதி அவரே இராவணனாக நடித்து தமிழகம் முழுவதும் அந்த 'நீதி தேவன் மயக்கம்' நாடகம் நடைபெற்றது. அந்த நாடகத்திலே பல நேரங்களில் நீதி தேவனாக இருந்து மயக்கம் போட்டு விழுபவர் நம்முடைய பேராசிரியர் அன்பழகன் என்பதை (பலத்த கைதட்டல்) நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்றால் இராவணனுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் மாமுனிவர்களெல்லாம் திகைப்பார்கள். ''நீ அகல்யாவைச் சாபமிட்டாயே அப்போது இரக்கம் இருந்ததா?'' என்று இப்படிப் பல கேள்விகளைக் கேட்டுக் கேட்டு முனிபுங்கவர்களெல்லாம் தவித்து கடைசியாக இராவணன் வெற்றி பெறுவான். நான் இரக்கமற்ற அரக்கன் அல்ல; இரக்கமற்றோர் யார் தெரியுமா என்று கேட்டு வெற்றிக் கொடி நாட்டுவான் இராவணன்.

அந்த இராவணனைப் பற்றி தம்பி ஈரோடு தமிழன்பன் புகழ்ந்து எழுதியிருக்கிறாரே அந்தப் பாரதிதாசன் சொல்கிறார்.

"தென்றிசையைப் பார்க்கின்றேன்;
என்சொல்வேன் என்றன்
சிந்தையெலாம் தோள்களெல்லாம் பூரிக்குதடா!
அன்றந்த லங்கையினை ஆண்ட மறத்தமிழன்
ஐயிரண்டு திசைமுகத்தும் தன்புகழை வைத்தோன்!
குன்றெடுக்கும் பெருந்தோளான் கொடை
கொடுக்கும் கையான்!
குள்ளநரிச் செயல்செய்யும் கூட்டத்தின் கூற்றம்!
என் தமிழர் மூதாதை; என் தமிழர் பெருமான்
இராவணன் காண்! அவன் நாமம்
இவ்வுலகம் அறியும்!"

என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடிய இராவணன் அதையொட்டி நான் எழுதிய 'தென்னவன்காதை' என்ற கவிதையில் நான் குறிப்பிடுகின்றேன்.

"இருண்டு விட்ட தென்புலத்தில் ஏற்றி
விட்ட விளக்குபோல
எழுந்து நின்றான் இலங்கை வேந்தன்.
அவன் சரிதம் சொல்வதென்றால். . .
தசையெலாம்
ஆடுதய்யா! திசையெட்டும் புகழ் சேர்த்த
தென்னிலங்கைக் கோமான். திராவிடரின் மூதாதை.
பழந்தமிழின் பால் பற்றுதலை வைத்த நம் பாட்டன்
கண்ணுக்குள் பாவைபோல் இலங்கைத் தீவு
கரு விழி தான் ஆழ்கடல்கள்! தமிழ்
மண்ணுக்குப் புகழ்தந்த பெரு வீரன்
உருவில் சிங்கம் – உள்ளம் தங்கம் – யாழ்ப்
பண்ணுக்கு யாரும் நிகரில்லையென வாழ்ந்த
யாழ்ப்பாணத் திருநாட்டான்! மலைத் தமிழன்!

இமைக்கதவு உண்டே எழில் விழியைக் காப்பதற்கு.
அப்படித்தான் இலங்கைக்கு இராவணன்!''

இதையும் படித்திருப்பார் ஈரோடு தமிழன்பன். இதற்கு முன்பு புரட்சிக்கவிஞர் எழுதிய அந்த இராவணன் பற்றிய கவிதையையும் படித்திருப்பார். இனிமேலாவது இராவணனைப் புண்படுத்தாதீர்கள். (பலத்த கைதட்டல்) அவனைப் புண்படுத்தி என்னைப் புண்படுத்தாதீர்கள். இதுவரை எழுதாமல் இருந்தால் தம்பி வைரமுத்துவுக்கு நன்றி! இனி எழுதாமல் இருக்கக் கேட்டுக் கொள்கிறேன். எழுதியவர்கள் இனிமேலாவது எழுதாமல் இருக்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஏனென்றால் நேரு கொடுத்த சான்றின்படி இந்திய வரலாற்றை எழுதிய சீனிவாச அய்யங்கார் போன்ற பெரியவர்கள் எல்லாம் கொடுத்த சான்றின்படி இராவணன் தமிழ் மன்னன்; திராவிடன். அவனை ஒரு கொடுங்கோலனாகச் சித்தரிக்க வேண்டாம். அவனுடைய வாழ்க்கையில் ஏதாவது தவறுகள் நடந்திருக்கலாம். அந்தத் தவறுகளுக்காக அவனை ஒரு அக்கிரமக்காரனாக, அநியாயக்காரனாகச் சித்தரிக்க வேண்டாம். அவனோடு கூட்டுச் சேர்ந்தாலே தர்மம் பிணங்களாக மிதக்கும் என்கின்ற அளவிற்கு ஈரோடு தமிழன்பன் இங்கே சொன்னதைக் கனிவாகத் தேன் பெய்து கற்கண்டாக, நாமெல்லாம் பாராட்டுகிற இந்த விழாவில் இடையிலே செல்லமாகக் கண்டிக்கின்ற உரிமையும் எனக்கு இருக்கின்ற காரணத்தால் அதைத் தவிர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு இடத்திலே மிக அழகாக நம்முடைய தமிழ்க்குடிமகன் இங்கே சொன்னாரே தமிழ் இயக்கத்தைப் பற்றி புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

பாடியதையும் அதற்கு ஏற்ப நம்முடைய ஈரோடு தமிழன்பன் எடுத்தாண்டுள்ள இந்தக் கவிதை வரிகளையும் தொகுத்துக் காட்டினாரே அதை மிகுந்த வேதனையோடு நம்முடைய இதயத்தில், உள்ளத்தில் ஈட்டியைப் பாய்ச்சி உணர்த்துவதைப் போல நான்கே வரிகளில் ஒரு கவிதை.

"தமிழால்
எல்லாம் முடியும்
ஆனால்
தமிழனால்தான் ஒன்றும் முடியாது!
தமிழ் செய்த
ஒரே ஒரு தவறு.
அது
தமிழனுக்குத் தாய் மொழியானதுதான்!"
(பலத்த கைதட்டல்)

இதைக் கண்ணீர் கலந்து தமிழன்பன் எழுதியிருப்பார் என்று கருதுகிறேன். ஏனென்றால் படிக்கும்பொழுதே கண்களில் எனக்கு நீர் சுரக்கிறது. தமிழ் செய்த ஒரே ஒரு தவறு அது தமிழனுக்குத் தாய்மொழியாக ஆனதுதான் என்பதை எண்ணி எண்ணி நான் வியந்தேன்; வருந்தினேன்; வேதனைப் பட்டேன்.

இன்னொன்று; அவர் பல்வேறு சூழ்நிலைகளைக் கிராமப் புறங்களிலே இருக்கின்ற பழக்க வழக்கங்களை நடமாடுகின்ற கதைகள் என்றாலும் கூட உன்னிப்பாகக் கவனித்து இந்த நூலிலே கவிதைகளாக ஆக்கியிருக்கிறார் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டை மாத்திரம் நான் கூற விரும்புகிறேன்.

கிராமங்களில் ஒரு கதை கேள்விப்பட்டிருக்கிறோம், ஊரிலே ஒரு நாட்டாண்மை இருப்பார். அந்த நாட்டாண்மைக்காரர் அந்த ஊரில் எல்லோராலும் மதிக்கத்தக்கவர்,

அதே நேரத்திலே அவரைக் கண்டு அனைவரும் அஞ்சுவார்கள், யாருடைய வீட்டில் எந்த நிகழ்ச்சி யானாலும் இவர் செல்லமாட்டார். வருவார், வருவார் என்று காத்திருப்பார்கள். வரமாட்டார் என்று நினைப்பது பிறகு வாடிக்கையாகி விட்டது. ஒரு வீட்டில் திருமணம் என்றால் தன்னுடைய கைத்தடியைக் கொடுத்தனுப்புவார். அந்தக் கைத்தடியைக் கொண்டு போய் வைப்பார்கள். அவருக்குப் பதிலாக கைத்தடி அங்கே இருக்கும். அவர் வந்துவிட்டதாகக் கருதி திருமண காரியங்கள் நடைபெறும். ஒரு வீட்டில் ஒரு துயர சம்பவம் நடந்து விட்டாலும் அந்த கைத்தடியைக் கொண்டு வைப்பார்கள். அவர் வந்திருக்கிறார் என்று கருதி இறந்துபோனவரின் உடலை ஈமச்சடங்குகளுக்காக எடுத்துச் செல்வார்கள். எந்த விழாவாக இருந்தாலும் இதுதான் முறை என்று அவர் வைத்து கொண்டிருந்தார். கடைசியாக அவரே இறந்து விட்டார் அவர் இறந்த வுடன் வீட்டிலுள்ளவர்கள் ஊரிலுள்ளவர்களெல்லாம் வருவார்கள் என்று எதிர்பார்த்தார்கள். யாரும் வரவில்லை. நூறு கைத்தடிதான் வீட்டிற்கு வந்தது. (பலத்த கைதட்டல்)

இந்த விஷயத்தை ஈரோடு தமிழன்பன் காப்பியடித்து ஒரு கவிதை எழுதியிருக்கிறார். அவரும் காப்பியடிக்காத கவிஞர் அல்ல; காப்பியடிக்கிற கவிஞர்தான் என்பதற்கு உதாரணமாக இந்தக் கவிதை. அவர் சொல்கிறார்,

“அன்று முக்கியமான
வேலை அதனால் வர முடியவில்லை
உன் “திருணமத்திற்கு”
எழுதிய என்
எழுத்து நரம்புகளில்

கொப்பளித்த பொய்
அதிர்ந்து அலையடித்தது
என்
இரத்த நாளங்களில்''

(ஒரு திருமணத்திற்கு இவர் போகவில்லை, முக்கியமான வேலை. வரமுடியவில்லை என்கிறார். எழுதியவுடனேயே அவருடைய நரம்பு பொய் என்று சொல்கிறது. மீண்டும் எழுதுகிறார்.)

''உடம்புக்கு
ரொம்பச் சரியில்லை
இல்லாவிட்டால்
உன் மகள் திரட்டிக்கு
வராமல் இருப்பேனா?. . .''
கடிதத்தைப்
பெட்டியில் போட்டுவிட்டு
வீட்டுக்கு வந்தேன்
அது
திரும்பி வந்து விழுந்தது
என் மனத்தில் – வேறு வாக்கியத்தோடு. . .
''புளுக வேண்டாம் போய்வா''
''மாமியாரை
மருத்துவமனையில் சேர்த்திருக்கிறேன்
வர இயலாது
உன் புதுமனை புகுவிழாவுக்கு. . .''
என்
கண்ணெதிரிலேயே எழுத்துகள்மேல்
மாத்திரைகள்
ஏறி மிதித்தன.
மருந்து வாசத்தில் மிதந்தது
கடிதச் சடலம்.

"அன்று வர முடியவில்லை
உன்
அம்மா சாவுக்கு. . .?
அலுவலகத்தில் பெரிய பிரச்சினை. . ."
போனா முள் பாய்ந்து
உண்மையின் மார்பில்
கீறல்கள்
போன வாரம் நான்
மாரடைப்பால் காலமானேன்
கனவில்!
என் மகனுக்குக் கடிதங்கள்
ஏராளமாக.
'அன்று வரமுடியவில்லை' என்று
ஆரம்பமான
அத்தனைக் கடிதங்களும்
என் கையெழுத்தில். . .
திடுக்கிட்டு விழித்துப் பார்க்கிறேன்!
அப்போதும்
எழுதிக் கொண்டிருக்கிறேன்.
"அன்று வரமுடியவில்லை. . ."

இது காப்பியடித்த கவிதையானாலும் கூட ரொம்ப அழகாக ஒரு சின்னக் கதையை வைத்து பின்னப் பட்ட நாமெல்லாம் ரசிக்கத்தக்க ஒரு கவிதைக் கதையாகவே இது உருவாகியிருக்கிறது.

இங்கே பேசிய அருமை நண்பர் சிராஜுல் மில்லத் அப்துஸ் ஸமது அவர்கள் கவிதையை முழுமையாகப் படிக்கவில்லை ஒன்றிரண்டு பக்கங்களைத்தான் புரட்டிப் பார்த்தேன் என்று சொன்னார். பேராசிரியர் முழுவதையும் படித்திருக்கிறார். மற்றவர்களெல்லாம் முழுவதும் படித்து விட்டுத்தான் பேசியிருக்கிறார்கள்.

வைரமுத்து எவ்வளவு படித்திருக்கிறார் என்பதை அவர் பேசும்போதே தெரிந்து கொண்டேன். பாதிக்குமேல் படித்திருக்கிறார். நான் தமிழன்பனுக்குச் சொல்லிக் கொள்வேன். நான் முழுவதும் படித்திருக்கிறேன். அதற்குச் சாட்சியம் வேண்டுமானால் ஒன்று கூறுகிறேன்.

அன்று முக்கியமான
வேலை
அதனால் வரமுடியவில்லை
உன் ''திருமணத்திற்கு''

என்பதில் அச்சுப் பிழை. 'உன் திருமணத்திற்கு' என்பதற்குப் பதிலாக 'உன் திருணமத்திற்கு' என்று அச்சாகியிருக்கிறது. இதிலிருந்தே தம்பி தமிழன்பன் புரிந்து கொள்ள வேண்டும். நான் முழுமையாக இந்தப் புத்தகத்தைப் படித்திருக்கிறேன் என்பதை என்று கூறி விடைபெறுகிறேன்.

18-10-98 அன்று சென்னையில்
ஈரோடு தமிழன்பன் நூல்கள்
வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை

சென்னை – திரிபுரா ஒருமைப்பாட்டு தினக் கூட்டம்

இங்கே நிகழ்ச்சியின் தலைவர் தோழர் சௌந்தரராஜன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை வழி மொழிவதற்காக உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கின்றேன். இந்தத் தீர்மானத்தை இந்த மேடையில் இருக்கின்ற அனைவரும் வழி மொழிந் திருக்கின்றோம். குறிப்பாகச் சொல்ல வேண்டு மேயானால், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத கூட்டணி, இந்தக் கூட்டணி. (கைதட்டல்) இந்தக் கூட்டணி வழி மொழிகின்றதென்றால், தமிழகமே வழிமொழிகிற தென்று பொருள். (பலத்த கைதட்டல்)

இந்தியாவில் எந்தவொரு மூலையில் ஜன நாயகத்திற்கு ஆபத்து வந்தாலும், முதல் குரல் கொடுக்கின்ற மாநிலம் தமிழ்நாடுதான். நெருக்கடி நிலை (Emergency) பிரகடனப் படுத்தப்பட்டபோது வட மாநிலங்களில் உள்ள தலைவர்கள்தான் கைது செய்யப்பட்டார்கள். லோக் நாயக் ஜெயப்பிரகாஷ் நாராயண், மொரார்ஜி தேசாய் போன்றவர்கள் கைதானார்கள். ஆனால் அன்றைக்கு அது கண்டு கொதிப்படைந்து பெருந்தலைவர் காமராஜர் அவர்களும்,

தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழகமும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், இடதுசாரி கட்சிகளும்தாம் என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

அதைப்போல, பீகாரில் அண்மையில் ஆட்சியைக் கலைக்க முற்பட்டபோது, 356–ஆவது பிரிவைப் பயன்படுத்த வேண்டாமென்று கூறி, அந்தப் பரிந்துரை குடியரசுத் தலைவர் வரையிலே சென்ற சூழ்நிலையில் – அதை எதிர்த்து முதலாவதாகக் குரல் கொடுத்ததும் தமிழ்நாடுதான்.

மத்தியப் பிரதேசத்தில் – காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலத்திலே கிறித்தவப் பெண்கள், கன்னியாஸ்திரிகள் கற்பழிக்கப்பட்டார்கள் என்ற செய்தி கிடைத்ததும், துடித்தெழுந்து அதற்காக அணிவகுப்புகளை நடத்தி எதிர்ப்பைக் காட்டியதும் தமிழ்நாடுதான்.

எனவே இந்தியாவில் எந்தப் பகுதியில் அநீதி நடைபெற்றாலும், அநியாயம் நடைபெற்றாலும் ஜனநாயகத்திற்குக் கடுகளவு சீரழிவு ஏற்படுகிறதென்று தெரிந்தாலும் துடித்தெழக்கூடிய மாநிலம் தமிழ்மாநிலம் என்ற வகையில்தான் இன்றைக்குச் சின்னஞ்சிறு பிரதேசமான திரிபுராவில் ஏற்பட்டிருக்கின்ற தீங்கினை அகற்ற தமிழகம் இங்கே குழுமியிருக்கின்றது.

ஓர் அரங்கத்தில் நடைபெறுகின்ற கூட்டம்தான் இது என்றாலும்கூட, இது மாநில மக்கள் அனைவருடைய எண்ணங்களையும் ஏகோபித்து எடுத்துச் சொல்கின்ற கூட்டம் என்பதை நாம் அறிகிறோமோ இல்லையோ மத்திய அரசின் புலனாய்வுத்துறை மிக நன்றாக அறிந்திருக்கும்.

இந்தத் தீர்மானத்தை நான் ஒருமுறைக்கு இருமுறையல்ல. பல முறை படித்துப் பார்த்தேன். இந்தத்

தீர்மானத்தை பிரதமர் வாஜ்பாய் அவர்களே படித்துப் பார்த்தால் கூட, ஆத்திரப்படமாட்டார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி நிறைவேற்றுகின்ற ஒரு தீர்மானம்– தி.மு.கழகம் போன்ற கட்சிகள் ஆதரிக்கின்ற ஒரு தீர்மானம், எப்படி இருக்குமென்று எண்ணிப் பார்த்தால், அல்லது மத்தியிலே உள்ள அமைச்சர்கள் எதிர்பார்த்தால் அவர்கள் எதிர்பார்க்கின்ற சூடு, இந்தத் தீர்மானத்திலே இல்லை. சூடு இல்லாவிட்டாலும் சொரணை இருக்கின்றது என்ற வகையிலே இந்தத் தீர்மானம் இங்கே வகுக்கப்பட்டு, நம்முடைய வழிமொழிதலுக்கு உள்ளாகியிருக்கின்றது.

நானும் திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தேன். எந்தவொரு இடத்திலாவது திரிபுரா பிரச்சினையிலே மத்திய சர்க்கார் நடந்துகொள்வது, வாஜ்பாய் சர்க்கார் நடந்து கொள்வது, பா.ஜ.க. அரசு நடந்து கொள்வது கண்டிக்கத்தக்கது என்ற ஒரு சொல் இருக்குமா என்று நான் துருவித்துருவிப் பார்த்தேன், இல்லை. இல்லாததற்குக் காரணம் தீர்மானத்தின் நோக்கம் பா.ஜ.க. அரசைக் கண்டிப்பது என்பதற்காக அல்ல; இங்கே நாம் பிரதானப் படுத்துவது திரிபுரா பிரச்சினை. அதனால் தான் தீர்மானத்தினுடைய இறுதியில் – ''எனவே, திரிபுரா மாநில அரசின் கோரிக்கையை ஏற்று, மத்திய அரசு உடனடியாக கூடுதல் இராணுவப் படைப் பிரிவுகளையும், நிதி உதவிகளையும் செய்து திரிபுரா மாநில ஒருமைப்பாட்டையும் நாட்டின் ஒற்றுமையையும் பாதுகாக்க முன்வர வேண்டுமென்று இக்கூட்டம் இந்தியப் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறது'' – என்றுதான் தீர்மானத்தின் முடிவுரை இருக்கின்றது.

வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது – என்று கூட சொல்லவில்லை. அவர்களுக்கு எங்கே ஒருவேளை அது

வலித்து (கைதட்டல்) காரியம் நடைபெறாமல் போய் விடுமே என்கின்ற கவலை! நம்முடைய ஒட்டு மொத்தக் கருத்தே – இதிலே இன்னொரு வாக்கியத்திலே அடங்கியிருக்கின்றது. ''திரிபுராவின் இந்தப் பிரச்சினை அம்மாநிலப் பிரச்சினை மாத்திரமல்ல; நாட்டின் பாதுகாப்போடு சம்மந்தப்பட்ட பிரச்சினையுமாகும். இந்தத் தேசத்தின் பிரச்சினையுமாகும்'' – என்று குறிப்பிட்டதிலேயிருந்தே இந்தக் கூட்டத்தின் நல்ல நோக்கமும், இந்தத் தீர்மானத்தின் நல்ல நோக்கமும் உங்கள் அனைவருக்கும் புரியும் – அங்கே புரியும்– அங்கே புரிகிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது (பலத்த கைதட்டல்) புரிய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரிபுராவிலே என்ன நடைபெறுகின்றது? தீர்மானத்திலே அந்த வாசகங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. – ''மாநில சுகாதாரத் துறை அமைச்சர் பிமல்சின்ஹா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், அவர்தம் குடும்பத்தினர், பழங்குடி மக்கள் உட்பட முப்பது பேர் கடந்த ஆறு மாதத்தில் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். 25–க்கும் மேற்பட்டோர் கடத்தப்பட்டுள்ளார்கள்'' – என்று தீர்மானத்திலே கூறப்பட்டுள்ளது. இப்படி கடத்தப் படுவதை அனுமதித்தால், ஆதரித்தால், பாராட்டினால் பிறகு நாமும் கடத்தப்படுவோம். (கைதட்டல்) அதை மறந்துவிடக் கூடாது. தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியுமென்பார்கள். இன்றைக்குத் திரிபுராவிலே இருக்கின்ற சுகாதார அமைச்சர் கடத்தப்படுகிறார். அதே தொகுதியிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாஜூ பான்ரியாங் அவர்களின் மகன் ரஞ்சித்ரியாங் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்படுகிறார்.

ஆகஸ்ட் முதல் வாரத்தில் நரேந்தர்பூர் தேயிலைத் தோட்டத்தில் காட்டுமிராண்டித்தனமாக ஐந்து அலுவலர்கள் கொல்லப்படுகிறார்கள். தடை செய்யப் பட்ட திரிபுரா தேசிய விடுதலை முன்னணி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் தீவிரவாதிகள் ஆகஸ்ட் திங்களில் முதல் வாரத்தில் மாத்திரம் இருபது பேரைக் கடத்திச் சென்றிருக்கின்றார்கள். இதில் மார்க்சிஸ்ட் ஆதரவாளர் ரதிஷியாம்ஷு என்பவரும், பள்ளி மாணவர் தீபக் மஜும்தாரும் குறிப்பிடத் தக்கவர்கள். பிரீப் மலாகர் என்ற வியாபாரி சந்தி பஜார் பகுதியிலே இருந்த அவருடைய வீட்டிலிருந்து தீவிரவாதிகளால் கடத்தப்பட்டிருக்கிறார்.

அதே ஆகஸ்ட் திங்கள் இறுதியில் திரிபுராவில் இரண்டே நாட்களில் தீவிரவாதிகள் 11 பேரைச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். செப்டம்பர் திங்கள் இறுதியில் மூன்று பேர் கொல்லப்படுகிறார்கள். மலைவாழ் வகுப்பைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் கடத்தப்பட்டு, அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இந்தத் தீவிரவாத தேசிய முன்னணியினர் ஒரு பேருந்தையே கடத்திச் சென்றிருக்கிறார்கள். அதிலிருந்த ஆண் பயணிகளைப் பேருந்திலிருந்து இறங்கி ஓடுமாறு உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தப் பயணிகள் நான்கு கிலோ மீட்டர் தூரம் ஓடியிருக்கிறார்கள். அப்படி ஓடியதில் சிலர் மயங்கி விழுந்திருக்கிறார்கள். அவர்களை வன்முறையாளர்கள் அடித்துத் துன்புறுத்திக் கீழே விழுந்த ஒருவரை சுட்டுக் கொன்றும் இருக்கிறார்கள். இந்தக் கொடுமையையெல்லாம் பார்த்த திரிபுராவி னுடைய முதலமைச்சர் இடதுசாரி கட்சியைச் சேர்ந்த திரு. மானிக் சர்க்கார் அவர்கள் மிகவும் விட்டுக் கொடுக்கும் நிலையில், திரிபுராவிலே உள்ள தீவிர வாதிகள் மத்திய அரசோடு நேரடியாக பேச்சுவார்த்தை

நடத்த விரும்பினால்கூட, அதிலே திரிபுரா அரசு குறுக்கிடாது. வீம்போ, கௌரவமோ பார்க்காமல் நாங்கள்தான் பேச வேண்டுமென்று இல்லாமல், திரிபுராவிலே எப்படியாவது அமைதி ஏற்படவேண்டும். அங்கே பாதுகாப்புக்கு ஊனம் ஏற்படக் கூடாது, இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு எந்த விதமான பழுதும் ஏற்பட்டு விடக்கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் இதிலே திரிபுரா அரசு குறுக்கிடாது என்று தெரிவித்திருக்கிறார்.

அப்படி ஒரு பேச்சுவார்த்தை மத்திய அரசுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நடைபெறுமேயானால் அதில், தான் மகிழ்ச்சியடைவேன் என்றும் தீவிரவாதிகள் மத்திய அரசோடு பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தால் அதற்கான கூட்டத்தை, தானே ஏற்பாடு செய்து கொடுக்கிறேன் என்றும், பரந்த மனப்பான்மையோடு மாநில முதலமைச்சர் இறங்கி வந்து கூறுகின்ற சூழ்நிலையில் மாநில அரசின் கோரிக்கையையோ அந்த மக்களுடைய சங்கடங்களையோ, நடைபெறுகின்ற கொடுமைகளையோ காதில் போட்டுக் கொள்ளாமல் மத்திய அரசு இன்னமும் மௌனம் சாதிப்பது முறையல்ல என்பதுதான் இந்தக் கூட்டத்தின் மூலமாக எடுத்துக் காட்டுகின்ற செய்தியாகும்.

மத்தியிலே இருக்கின்ற அரசு, இராணுவம் தாருங்கள் என்று கேட்டால் அங்கேயிருந்த இராணுவத்தின் ஒரு பகுதியையும் எடுத்துக்கொள்கிற சூழ்நிலைதான் அமைந்திருக்கின்றது. இதை இந்தக் கூட்டத்திலே நாம் எடுத்து விளக்குவதின் மூலமாக திரிபுரா என்கிற ஒரு சின்னஞ்சிறிய பகுதி – ஏறத்தாழ 28 லட்சம் மக்கள் வாழும் பிரதேசம்தான் – திரிபுரா – சென்னையை விட குறைவான மக்கள் தொகைதான்

திரிபுராவில். அந்தத் திரிபுரா 1947–இல் இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு 49–ஆம் ஆண்டு சமஸ்தானத் திலிருந்து சுதந்திர மாநிலமாக இயங்கி வருகின்ற திரிபுரா. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அங்கே நான்காவது முறையாகப் பதவிப் பொறுப்பை ஏற்றிருக்கிறது என்பதை மைதிலி சிவராமன் இங்கே குறிப்பிட்டார். ஒருவேளை நான்காவது முறையாக பதவிப் பொறுப்புக்கு வந்த காரணத்தால், அவர்களுடைய வேண்டுகோள் நிராகரிக்கப்படுகிறதோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் தமிழ்நாட்டிலும் நான்காவது முறையாக வந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக (கைதட்டல்) ஆட்சியின் முறையீடு களை மத்திய சர்க்கார் கவனிப்பதாகத் தெரியவில்லை.

இங்கே அன்பிற்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் காகன்தாஸ் அவர்கள் அவருடைய குறையைச் சொல்ல இங்கே வந்தால் நான் அவர் மூலமாக நம்முடைய குறையைச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். (கைதட்டல்)

தீவிரவாதத்தைத் தமிழகத்திலே ஒடுக்குவதற்காக மத்திய அரசு சில உதவிகளைச் செய்ய வேண்டுமென்று தமிழக அரசு கேட்டது. கோயம்புத்தூரில் மத்திய அரசின் அதிரடிப் படையினுடைய பட்டாலியன் ஒன்றை நிரந்தரமாக நிறுவ வேண்டுமென்று கேட்டு பல மாதங்கள் ஆகின்றன. இன்னும் அதற்கான வழி பிறக்கவில்லை. மத்திய அரசும் தமிழக அரசும் இணைந்து, செலவுகளைப் பகிர்ந்து கொண்டு இரண்டு இந்திய ரிசர்வ் பட்டாலியன்களைத் தமிழகத்திலே நிறுவ வேண்டுமென்று நான் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அத்வானி அவர்களிடமே கேட்டு பல மாதங்கள் ஆகின்றன. இன்னும் நிறைவேறவில்லை.

அல்–உம்மா மற்றும் ஜிகாத் கமிட்டி ஆகிய இயக்கங்கள் பிற மாநிலங்களிலிருந்தும் செயல்படுவதால், அகில இந்திய அளவில் அவற்றைத் தடை செய்ய வேண்டுமென்று 18.3.98 அன்று மத்திய அரசுக்குக் கோரிக்கை வைக்கப்பட்டது இன்னும் நிறைவேற்றப் படவில்லை.

காவல்துறையை நவீனப்படுத்த மத்திய அரசு ஆண்டு தோறும் பத்துக் கோடி ரூபாய் நிதி உதவி அளிக்கவேண்டுமென்று உள்துறை அமைச்சரிடத்திலே நேரிலேயே சந்தித்துப் பல மாதங்களுக்கு முன்பு கேட் டேன். இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

வெடிபொருள் கட்டுப்பாட்டுச் சட்டம் மத்திய அரசின் சட்டமாகையால், வெடி பொருளை வைத்திருத்தல், எடுத்துச் செல்லுதல் ஆகியவற்றுக்குக் கடுமையான வழிமுறைகளை மத்திய அரசு விதிக்க வேண்டுமென்று 21.3.98 அன்று மாநில அரசின் சார்பாக மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்பினேன். இன்னும் இது நிறைவேற்றப்படவில்லை.

இவைகளையெல்லாம் சொல்வதற்குக் காரணம். மாநில அரசுகளுடைய கோரிக்கைகளை உடனடியாகக் கேட்பதே தங்களுடைய மரியாதைக்குக் குறைவு என்று எண்ணுகின்ற மத்திய அரசுகள் இருக்கின்ற வரையில் இதுதான் நிலைமை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அந்த மனப்போக்கை மாற்றுவதற்குத்தான் மாநில அரசுகள் சுயாட்சித் தன்மையோடு விளங்க, மத்தியிலே அமைகின்ற அரசு கூட்டாட்சித் தன்மையோடு இருந்திட வேண்டுமென்று நாம் பல காலமாகக் கோரிக்கை எழுப்புகிறோம்.

அந்தக் கோரிக்கைக்கு உடன்பாடான கட்சி களுடைய கூட்டணிதான் இந்த மேடையிலே அமைந்திருக்கின்றது. இந்தக் கூட்டணியின் குரல்

இன்றைக்குத் திரிபுராவிற்காக எழுப்பப்படுகிறதென்றால் திரிபுரா மக்களுடைய நல்வாழ்விற்காக, இந்தியாவினுடைய பாதுகாப்பிற்காக எழுப்பப்படுகின்ற குரல், இங்கேயுள்ள இந்தக் கட்சிகளுடைய ஆதாயத்திற்காக அல்ல என்பதை உணர்ந்து மத்திய அரசு – உடனடியாக ஆவன செய்ய வேண்டும். இராணுவத்தை அனுப்ப வேண்டும். இருந்த ராணுவத்தைத் திரும்பப் பெற்றதை, திரும்பவும் அங்கே அனுப்பி வைக்க வேண்டும். அந்த மாநில அரசு கோருகின்ற பலமான பாதுகாப்பை அவர்களுக்கு வழங்க வேண்டும்.

திரிபுராவும் இந்தியாவிலே உள்ள ஒரு பகுதிதான் என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும். அந்த நினைவூட்டலுக்காகத்தான் இந்தக் கூட்டம் என்பதைத் தெரிவித்து, இந்தத் தீர்மானத்தை தமிழக மக்கள் அனைவரின் சார்பாகவும் வழிமொழிகிறேன் என்று கூறி விடைபெறுகிறேன்.

3-11-98 அன்று சென்னையில்
திரிபுரா ஒருமைப்பாட்டு தினக் கூட்டத்தில்
ஆற்றிய உரை

34

அய்யணன் அம்பலம்
படத்திறப்பு விழா

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த நிகழ்ச்சி எத்துணை சோகத்தோடு இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஆற்றிய உரையிலிருந்து மிக நன்றாக நாமெல்லாம் அறிவோம். அய்யணன் அம்பலம் அவர்களை இங்கே அருமை நண்பர் திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் சுட்டிக் காட்டியதைப்போல 1960-ஆம் ஆண்டிலிருந்து நான் நன்கறிவேன் பல ஆண்டுக்காலம் அவரோடு நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பினையும் பெற்றவன் என்ற முறையில் இது எனக்கும் ஒரு பெரும் இழப்பு என்பதை எண்ணிப் பார்க்கும்பொழுது இந்த இழப்பை அவ்வளவு விரைவிலே ஈடுசெய்ய முடியாது என்கிற கவலையும் என்னை ஆட் கொள்கின்றது.

தமிழகத்திற்கு மாத்திரமல்ல, தமிழகத்திலே தென் பகுதியிலே உள்ள மாவட்டங்களுக்கு மாத்திரமல்ல, இன்றைக்கு அகில இந்திய அளவில் பார்வார்டு பிளாக் கட்சியின் தலைவராகவும் உயர்ந்த ஒரு சூழலில் அவரை

இழந்திருக்கிறோம் என்பதை எண்ணும்போது, இது அனைத்திந்தியாவிற்கும், இந்தியாவிலே உருவாக வேண்டிய சமத்துவ சமுதாயக் கொள்கைக்கும் ஒரு பெரும் இழப்பு என்றுதான் நாம் கொள்ள வேண்டும்.

அண்மையில் நண்பர்கள் எல்லாம் எடுத்துக்காட்டியதைப் போல் தமிழக அரசின் சார்பில் நடைபெற்ற மத நல்லிணக்கத்திற்கும், சமுதாய ஒற்றுமைக்குமான அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சி – அதிலே எந்த அளவிற்கு அவர் நிதானமாக உரையாற்றினார் என்ற அந்த நினைவு–எல்லோர் உள்ளத்திலும் பதிந்திருப்பதை நாம் கண்டோம். காரணம், வெப்பம் ஒங்கிய சூழலிலே கூட வெப்பத்தைத் தணித்து ஒளிமிகுந்த கருத்துக்களைத் தர வேண்டுமென்ற அந்த நிலையிலே அங்கே அவர் செயல்பட்டார்.

ஒரு கட்டத்தில், நண்பர் சந்தானம் அவர்கள் மிகுந்த ஆவேசத்திற்கு ஆளாகி – வாருங்கள் செல்லலாம் என்று–சிலர் ஆற்றிய உரையின் காரணமாக புறப்பட்டபோது, அய்யணன் அம்பலம் அவர்கள் அங்கே இருந்தவாறே என்னைப் பார்த்தார். நான் அவரைக் கையமர்த்தினேன். உடனடியாக சந்தானத்தையும் அமைதிப்படுத்தி இருக்கையில் அமரச் செய்து அய்யணன் அம்பலம் அவர்கள் அமர்ந்து, இரண்டு நாள் நிகழ்ச்சியை நம்முடைய நண்பர் வரதராஜன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல எந்தக் கொள்கைக்காக அன்றைக்குக் கூடினோமோ, எந்த முடிவை எடுப்பதற்காக கூடினோமோ, அதை நிறைவேற்றுவதற்குப் பெரும் ஒத்துழைப்பைத் தந்தார் என்றே சொல்ல வேண்டும்.

அவர் ஒரு குறிப்பிட்ட சமுதாய வளையத்திற்குள்ளே வைத்து நோக்கக் கூடியவரல்ல, சமுதாய

வளையத்திற்குள் சிக்காதவர், எல்லாச் சமுதாயமும் மனித சமுதாயம் என்கின்ற ஆகாயமளாவிய அந்தக் கொள்கையை நெஞ்சிலே ஏந்திக் கொண்டிருந்தவர். அதனால்தான் குறிப்பிட்ட ஒரு சமுதாயத்திற்காக வாதாடுவது, போராடுவது என்றில்லாமல் மொத்தமாக ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, உரிமை கோருகின்ற சமுதாயத்திற்காக அவர் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்.

ஒரு சமுதாய எழுச்சிக்காகப் போராட்டங்களில் ஈடுபட வேண்டுமென்று சிலரைத் தூண்டிவிடுவது, உசுப்பிவிடுவது சுலபமான காரியம். குறிக்கோள் எது, அதை எப்படி அடைவது என்பதிலே உத்தமர் காந்தியடிகள் எடுத்துச் சொன்ன கருத்தை இளைஞர்களும் பெரியவர்களும் என்றென்றைக்கும் நெஞ்சிலே பதிய வைத்துக்கொள்ள வேண்டும். குறிக்கோளை அடைவதைவிட அந்தக் குறிக்கோளை அடைவதற்காக நாம் மேற்கொள்கின்ற அணுகுமுறைதான் முக்கியம். அந்த அணுகுமுறையை நல்ல வகையிலே கற்றவர். கற்றதைச் செயற்படுத்திக் காட்டியவர் மறைந்த பெரியவர் அய்யணன் அம்பலம் அவர்கள். வன்முறையால் ஒரு குறிக்கோளை எய்துவதைவிட, நன்முறையால் அனைவரையும் கவர்ந்திழுக்கின்ற – அனைவருடைய ஆதரவைப் பெறுகின்ற ஆக்க ரீதியான பணிகளால் அந்தக் குறிக்கோளை அடைந்தால்தான் அது நிலைபெறும்.

இன்றைக்குத் தமிழகத்தின் நிலையை எண்ணும் பொழுது, யாரோ ஒரு காலத்திலே சாதிப் பிரிவினைகளை உருவாக்குவதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். ஆனால் யார் சாதி வேறுபாடுகள் உருவாவதற்குக் காரணம் என்று குற்றஞ்சாட்டப் பட்டார்களோ, அவர்கள் யாரும் இன்றைக்குச் சாதி

வெறியை தூண்டிவிடுகின்ற முயற்சியிலே – வன்முறைக்களமாகத் தமிழகத்தை ஆக்குவதில் முனைந்து களத்தில் நிற்கவில்லை. ஆனால் பிரிக்கப்பட்ட – சாதி வாரியாகப் பிரிந்த மக்களாகிய நாம்தான் இன்றைக்கு ஒருவருக்கொருவர் சாதிபேதம் காட்டி, மத பேதம் காட்டி போரிட்டுக் கொண்டிருக்கிறோம்.

அந்தக் காலத்திலே நூல்கள் எழுதுகின்ற ஆசிரியர்கள் ஒரு நாட்டு வளப்பத்தை முதலிலே குறிப்பிடுவார்கள். அதைக் குறிப்பிட்டுவிட்டுத்தான் ஒரு புதினத்தை எழுதுவர்கள். அப்படிக் குறிப்பிடும்போது சொல்வார்கள் – நீர்வளம், நிலவளம் நிறைந்த நாடு என்று தொடங்கி, அந்த நாட்டு ஆட்சியின் சிறப்பு எப்படியிருந்தது என்பதைச் சுட்டிக்காட்ட, புலியும் மானும் ஒரே துறையிலே தண்ணீர் குடித்தது என்று அந்தச் சிறப்பை எழுதுவார்கள்.

நான் எண்ணிப் பாக்கிறேன். நான் ஒரு முறை கூட குறிப்பிட்டேன். ''அந்தக் காலத்திலே ஒற்றுமைக்கு அடையாளமாக புலியும் மானும் ஒரே துறையிலே தண்ணீர் குடித்தது என்பதுகூட வேண்டாம், இந்தக் காலத்தில் மானும் மானுமாவது ஒரே துறையிலே தண்ணீர் குடிக்க வேண்டாமா'' என்று நான் ஆதங்கப்பட்டுக் கூறியதுண்டு. ஏனென்றால் யார் ஒடுக்கப்பட்டவர்கள், யார் அடக்கப் பட்டவர்கள் என்ற நிலையிலே இருக்கிறோமோ, அவர்கள்தாம் ஒருவருக்கொருவர் இன்றைக்கு மோதிக் கொள்கிறோம். யார் பிற்படுத்தப்பட்டிருக்கிறோமோ, யார் மிகவும் பிற்படுத்தப்பட்டிருக்கிறோமோ, யார் தாழ்த்தப்பட்டு இருக்கிறோமோ அவர்கள்தாம் இன்றைக்கு ஒருவருக் கொருவர் மோதிக் கொள்கிறோம்.

தலையிலே பிறந்தவர்கள், தோளிலே பிறந்தவர்கள், தொடையிலே பிறந்தவர்கள், காலிலே பிறந்தவர்கள் என்றெல்லாம் பிறப்புக்குக் கற்பனைகள் செய்யப்பட்டு அப்படிக் காலிலே பிறந்தவர்களாகக் கருதப்படுகின்ற நாம்தான் இன்றைக்கு ஒருவரோடொருவர் மோதிக் கொண்டிருக்கிறோம். தலை, தோள், தொடை எல்லாம் அமைதியாக, பத்திரமாக இருக்கின்றது. ஆனால் பாதங்கள்தாம் இன்றைக்குப் படாதபாடுபடுகின்றன.

இந்தப் பாதகச் செயல்களிலிருந்து நாம் விடுபட வேண்டும், ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் எல்லாத் தலைவர்களும் பாடு படுகிறார்கள். அப்படிப் பாடுபட்ட தலைவர்களிலே ஒருவராக விளங்கியவர்தான் மறைந்த பெரியவர் அய்யணன் அம்பலம்.

தேவர் திருமகன் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய வழியைப் பின்பற்றி அவர்கள் தன்னுடையப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். தேவர் திருமகன் முத்து ராமலிங்கத் தேவருடைய வழி நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுடைய வழி. 96-ஆம் ஆண்டும் நாங்கள் மீண்டும் பதவிப் பொறுப்பையேற்ற போது, சட்டப் பேரவையிலே உரையாற்றிய சந்தானம், வல்லரசு இருவரும் வருகிற சுதந்திரப் பொன்விழா ஆண்டில் சுதந்திரத்திற்காகப் பெரும் போரிட்ட நேதாஜியின் சிலையைத் தமிழகத்தின் தலைநகரத்திலே திறந்து வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் உடனடியாக அதை ஏற்றுக் கொண்டு அவையிலேயே அறிவித்தேன். அந்தச் செய்தி ஏடுகளிலே வெளிவந்தது தான் தாமதம் – மதுரையிலிருந்து அய்யணன் அம்பலம் அவர்கள் தொலைபேசியில் என்னையழைத்து, நன்றி தெரிவித்தார்கள். அந்த நினைவோடு சுதந்திரப் பொன்

விழா ஆண்டிலே சென்னைக் கடற்கரை காமராஜர் சாலையில் நேதாஜி சுபாஷ் சந்திரபோசினுடைய சிலை திறக்கப்பட்ட நிகழ்ச்சிக்கு அவரை அழைத்தேன். வந்திருந்து உரையாற்றினார். அவர் ஆற்றிய உரை இன்னமும் என்னுடைய செவிகளிலே ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

இன்று அவர் மறைந்தபோதும், அதற்கு முன்பும்கூட ஏன் பிறகும்கூட அவர் ஆற்றிய உரையைப் பற்றி இங்கே பேசிய நண்பர்கள் எடுத்துக்காட்டினார்கள். நானும் அதை நினைவில் கொண்டிருக்கிறேன். டாக்டர் அம்பேத்கர் அவர்களோ, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களோ, சாதீயத் தலைவர்கள் அல்ல. அவர்கள் இருவரும் தேசத் தலைவர்கள், தேசிய அளவிலே வைத்துப் போற்றத் தகுந்தவர்கள் என்ற கருத்தை ஒங்கியொலித்தவர் அய்யணன் அம்பலம்.

இன்றைக்குச் சாதி உணர்வுகளைத் தூண்டி விடுகின்ற சிலர் ஐம்பதாண்டு காலத்திற்கு முன் தமிழ்நாடு எப்படியிருந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் – சாதி உணர்வுகளையெல்லாம் மங்கச் செய்து, எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம் என்ற நிலைக்காகப் பாடுபட்ட தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத், பெருந்தலைவர் காமாராஜர் – இவர்கள் எல்லாம் பட்ட பாடுகளை எண்ணிப் பார்த்தால், இன்றைய இளைஞர் சமுதாயம் தங்களுடைய வழிமுறைகளை, தங்களுடைய துடிப்புணர்வுகளை மாற்றி அமைத்துக் கொண்டு எல்லோரும் ஓர் குலமாக, தமிழகத்திலே எல்லோரும் தமிழர்களாக, இந்தியத் திருநாட்டில் எல்லோரும் இந்தியர்களாக விளங்க உத்தமர் காந்தியடிகள் போதித்த அந்த அணுகுமுறையை மேற்கொள்வார்கள் என்றே நான் நம்புகிறேன்.

பசும்பொன் தேவர் திருமகன் என்ன சொன்னார் என்பதை தோழர் பிஸ்வாஸ், எம்.பி. அவர்கள் இந்த நிகழ்ச்சிக்காக ஆற்றிய இரங்கல் உரையிலே கூடக் குறிப் பிட்டிருக்கிறார். 1957-ஆம் ஆண்டு தேவர் திருமகன் சொன்னது – அந்த வாசகம் – ''நம்மை, நம்முடைய எதிரிகள் மோசமாகச் சீண்டி வம்புக்கு இழுத்தாலும், அமைதி காப்பதற்குப் பதிலாக வன்முறைக்கு வன்முறை என்று யாராவது இறங்குவார்களேயானால், அது என் இதயத்தைக் கிழித்து என் இரத்தத்தைக் குடிப்பதற்குச் சமமாகும்'' – என்று சொன்னவர் தேவர் திருமகன் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் என்கின்றபோது, வன்முறைக்குத் தமிழகத்திலே இடம் இருக்கலாமா? அந்தத் தேவர் திருமகனைக் குற்றஞ் சாட் டலாமா? அதைப்போலவே இன்னொரு சாரார் தாழ்ந்தே கிடக்க வேண்டியவர்கள், ஒடுங்கியே கிடக்க வேண்டியவர்கள், அடங்கியே கிடக்க வேண்டியவர்கள், நாம் ஆதிக்கம் செலுத்துவதற்காகவே பிறந்தவர்கள் என்கின்ற ஆணவம் கொண்டும் திரியலாமா? என்ற இந்த வினாக்களுக்கு நாம் விடையிறுத்துக் கொள்ள வேண்டும்.

அப்படிக் கிடைக்கின்ற விடைதான் தமிழகத்திலே எல்லோரும் ஓர் குலம் என்கிற நிலை. அந்த நிலையை ஏற்படுத்துவதுதான் மறைந்த அந்தப் பெருமகனுக்கு நாம் செலுத்துகின்ற காணிக்கை.

நிகழ்ச்சியின் தலைவர் அசோக் கோஷ் குறிப் பிட்டார். இந்தப் பெருமகனார் மறைந்தவுடன் அதுபற்றி நீதி விசாரணை ஒன்று வேண்டுமென்று கேட்டதையும், அதை நான் ஏற்றுக்கொண்டதையும் குறிப்பிட்டு இங்கே வேறு சில நண்பர்கள் வைத்த கோரிக்கைகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சுட்டிக்காட்டியி ருக்கிறார்கள்.

இங்கே பேசிய நண்பர்கள் எல்லாம் எடுத்துக் காட்டியதைப்போல, இந்த நிகழ்ச்சியிலே கோரிக் கைளை ஏற்றுக் கொள்கிறோம், எப்படி ஏற்றுக் கொள்கிறோம், எப்போது அதை நிறைவேற்றுவோம் என்பதைவிட, மிக முக்கியமான கோரிக்கை மறைந்தும் மறையாத அந்தப் பெரியவர் அய்யணன் அம்பலம் நம் முன்னால் வைத்த கோரிக்கை. அதை நாம் நிறைவேற்றுவோம். ''நாமனைவரும் சகோதரர்கள் – நம்மிடையே சண்டை சச்சரவில்லை, மதமாச் சரியங்கள் இல்லை, சாதிகளிலே, மதங்களிலே சாய்ந்து நம்முடைய சமத்துவ உணர்வுகளைக் கெடுத்துக்கொள்ள மாட்டோம்'' என்ற அந்த அறிவுரையை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று அய்யணன் அம்பலம் அவர்கள் விடுத்துச் சென்றிருக்கிறாரே, அந்தக் கோரிக்கையை நாம் நிறைவேற்றுவோம் என்று கூறி அவருடைய மறைவுக்காகவும், அவரோடு மறைந்த தமிழ் மாநில பார்வாடு பிளாக் கட்சியின் தலைவர் முத்துராம லிங்கத்தின் மறைவுக்காகவும், அந்தக் கட்சியின் அமைப்புச் செயலாளர் உசிலை இராஜனின் மறைவுக் காகவும் ஆழ்ந்த இரங்கலை என் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் தெரிவித்து இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

15-11-98 அன்று அய்யணன் அம்பலம் படத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை

காஞ்சிபுரம் – சி.வி.எம். அண்ணாமலை இல்ல மணவிழா

செந்தமிழ்ச்செல்வர் சி.வி.எம். அண்ணாமலை அவர்களுடைய பேரனும், கமலக்கண்ணன் – மணிமேகலை ஆகியோரின் இளைய மகனுமான செல்வன் சீர்வேந்தனுக்கும், திருத்தணி கோகிலா திரையரங்கம் உரிமையாளர் சபாபதி – உஷாராணி ஆகியோரின் செல்வி கோகிலாவிற்கும் நம் அனைவருடைய இனிய நல்வாழ்த்துக்களோடு மணவிழா நிகழ்ச்சி இங்கே நிறைவேறியிருக்கின்றது.

இந்த நிகழ்ச்சியிலே உரையாற்றிய அனைவரும் இது நம்முடைய குடும்ப நிகழ்ச்சி என்ற அந்த உணர்வோடு கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார்கள். திராவிட இயக்கத்தின் பாரம்பரியமிக்க குடும்பங்களில் ஒன்று சி.வி.எம். அண்ணாமலை அவர்களுடைய குடும்பமாகும். இந்தக் குடும்பம் அண்ணாமலை காலத்திலேயிருந்து இன்று வரையில் அவர் விட்டுச் சென்ற அதே வழியில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் காட்டிய வழியில் நடைபோட்டுக் கொண்டிருப்பது பெருமைக்குரிய ஒன்றாகும். ஆனால் வியப்புக்குரிய ஒன்றல்ல.

ஏனென்றால் சுயமரியாதை தழைத்தோங்குகின்ற வகையில் தன்னுடைய இல்லத்தை மாத்திரமல்ல, இந்த வட்டாரத்தையே; ஏன் தமிழ்நிலத்தையே ஆக்கிட வேண்டுமென்கிற உணர்வோடு அயராத உழைப்பை நல்கியவர் சி.வி.எம். அண்ணாமலை. அவர்களோடு நான் பழகிய காலம் பெருமைக்குரிய காலம். என்றென்றும் நினைத்து மகிழத்தக்க காலம். நெஞ்சில் எப்போதும் நிழலாடிக்கொண்டிருக்கின்ற காலம், அந்தக் காலம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்திலே எந்த நிகழ்ச்சியானாலும் ''அண்ணாமாலையைக் கூப்பிடு'' என்று சொல்கின்ற அளவிற்கு அண்ணா அவர்களோடு நெருங்கிப் பழகியவர் அண்ணாமலை அவர்கள். தம்பி பரிமளம் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல் அவருடைய மடியிலே வளர்ந்தேன் என்று அவர் சொன்னதைப் போல், பரிமளம் மாத்திரமல்ல, அறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய பகுத்தறிவு இயக்கம், தந்தை பெரியார் உருவாக்கிய சுயமரியாதை இயக்கம், அண்ணா கண்ட திராவிட முன்னேற்றக் கழகம் – இவைகள் எல்லாம் சி.வி.எம். அண்ணாமலை அவர்களுடைய மடியிலே தவழ்ந்து வளர்ந்தவை என்பதை யாரும் மறுக்க இயலாது.

பிற்படுத்தப்பட்ட, ஏன் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே சி.வி.எம். அண்ணாமலை அவர்கள் ஒரு செழும் சுடராகத் திகழ்ந்தார்கள். அவருடைய வாழ்க்கையிலே எத்தனையோ ஏற்றத்தாழ்வுகளெல்லாம் வந்ததுண்டு. ஆனால் இரண்டையும் ஒன்றாகக் கருதி சம நிலையிலே அவைகளைச் சிந்தித்து அதற்காக ஏற்றம்

கிடைத்த நேரத்திலே பெருமகிழ்ச்சியோ அல்லது தாழ்வு ஏற்படுகிற நேரத்திலே சோகமோ கொண்டிராமல் இரண்டையும் ஒன்றாகக் கருதி இந்த இயக்கத்திற்காகப் பாடுபட்ட எழுஞாயிறுதான் செந்தமிழ்ச்செல்வர் சி.வி.எம். அண்ணாமலை அவர்கள்.

அவருடைய குடும்பத்திலே நடைபெறுகின்ற நிகழ்ச்சியிலே நாங்கள் எல்லாம் கலந்துகொள்வது இயல்பான ஒன்றாகும். இந்தக் குடும்பத்திலே இந்த நிகழ்ச்சிக்கு மாத்திரமல்ல. பல்வேறு நிகழ்ச்சிகளிலே நான் கலந்துகொண்டிருக்கிறேன். இன்னும் சொல்லப் போனால், நான் இல்லாமல் எந்த நிகழ்ச்சியும் சி.வி.எம். அண்ணாமலை இல்லத்திலே நடைபெறுவதில்லை என்ற அளவிற்கு இந்தக் குடும்பத்தோடு தொடர்பு கொண்டவன் நான் என்பதை காஞ்சி வட்டாரத்திலே இருக்கின்ற நீங்கள் எல்லாம் நன்கறிவீர்கள்.

என்னுடைய நினைவில் இன்றைக்கும் நிழலாடிக் கொண்டிருக்கின்ற சிலவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்ள நான் விரும்புகிறேன். தி.மு.கழகம் 1949–ஆம் ஆண்டு அண்ணா அவர்களால் தோற்றுவிக்கப்பட்டு, அதனுடைய முதல் மாநில மாநாடு சென்னையில் நடை பெற்றபோது, அந்த மாநாட்டிற்கான செலவுகளுக்கு நிதி திரட்ட வேண்டுமென்று அண்ணா குறிப்பிட்டு – அந்தப் பணியை என்னிடத்திலே ஒப்படைத்தார்கள். அப்பொழுது நான் கழக அமைப்புகளுக்கு விடுத்த வேண்டுகோள் – நான் உங்கள் ஊர் கூட்டத்திலே வந்து பேசுவதென்றால் அதற்காகச் சென்னையில் நடைபெறுகின்ற கழக மாநில மாநாட்டிற்கு ஒரு கணிசமான தொகையை நிதியாகத் தர வேண்டும் என்பதாகும். அந்தக் கணிசமான தொகை 1952–ஆம் ஆண்டில் எவ்வளவு என்று கேட்டால் நூறு ரூபாய்

இருநூறு ரூபாய் அதிகபட்சம் ஐநூறு ரூபாய்தான். தற்போது காஞ்சிபுரத்தில் அன்றைக்கு நடைபெற்ற கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் கண்டோன்மெண்ட் சண்முகம் ஐந்து இலட்சம் ரூபாயினை இந்த மாவட்டத்தின் சார்பில் தந்தார். ஐம்பது இலட்சம் ரூபாய் கூட நாம் நிதி திரட்டிய காலத்திலே தரப்பட்டிருக்கின்றது. ஆனால் அன்றைக்கு அதிகபட்சம் ஐநூறு ரூபாய். கொடியேற்று விழா என்றால் ஐம்பது ரூபாய், நூறு ரூபாய் என்று இப்படி அன்றைக்குக் கட்டணம் வைத்து அந்தக் கூட்டங்களை விடிய விடிய இந்த மாவட்டத்திலே நடத்தி – என்னையும் அழைத்து அவைகளை வெகு சிறப்பாக நடத்தி – ஆயிரம் அல்லது இரண்டாயிரம் ரூபாய் – ஏழெட்டு கூட்டங்களில் பேசி வசூலித்துக் கொண்டு – சேர்ந்ததை எடுத்துக்கொண்டு நானும், சி.வி.எம். அவர்களும் காரில் சென்னைக்குச் செல்வோம்.

சென்னையில் எஸ்.ஐ.ஏ.ஏ. மைதானத்தில்தான் மாநாடு. மாநாட்டிற்கான பணிகள், பந்தல் போடும் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும். அங்கே குவிக்கப்பட்டிருக்கும் மணலில் அண்ணா அவர்களும் கழக முன்னணியினரும் அமர்ந்திருப்பார்கள். நாங்கள் விடியற்காலை 2 மணிக்கோ, 3 மணிக்கோ இந்தப் பணத்தோடு செல்லும் போது எங்களை ஆவலோடு எதிர்பார்த்து இருப்பார்கள். எங்களையல்ல நாங்கள் மாநாட்டுச் செலவுக்காகக் கொண்டு வருகின்ற பணம் எவ்வளவு என்பதைத் தெரிந்து கொள்ளக் காத்திருப் பார்கள்.

அப்படிப்பட்ட காலத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தூக்கி வளர்த்த பெருமைக்குரியவர்களில் ஒருவர் சி.வி.எம். அவர்கள். அவருடைய இல்லத்திலே

நடைபெறும் மணவிழா நிகழ்ச்சியில் மணமகன் சீர்வேந்தன் எத்தனை பட்டங்களைக் கல்வித் துறையிலே பெற்றிருக்கிறார் என்பதை இந்த அழைப்பிதழிலே பார்த்து நான் பெருமகிழ்ச்சி அடைந்தேன்.

இந்தச் சமுதாயத்திலே ஒரு செல்வன் அல்லது செல்வி இத்தகைய பட்டங்களைப் பெறுவதென்றால் ஐம்பதாண்டு காலத்திற்கு முன்பு நடக்க முடியாத காரியம். ஆனால் திராவிட இயக்கம் தோன்றி, அதன் தலைவர்கள் செய்த முயற்சியினால்தான் இடஒதுக்கீடு– அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்டோருக்கெல்லாம் இன்றைக்கும் பெரும் வரப்பிரசாதமாக அமைந்திருக்கின்றது என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள்.

அதனால்தான் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நண்பர் கிருஷ்ணசாமி அவர்கள், காங்கிரஸ் இயக்கத்திலே இருந்தாலுங்கூட, இடஒதுக்கீட்டின் பெருமையை அவரால் மறுக்க முடியவில்லை. அதை உணர்ந்து இங்கே பாராட்டிப் பேசினார். இந்தச் சமுதாய மக்கள் – நாங்கள் பிற்படுத்தப்பட்டவர்களாக இருந்தால் மாத்திரம் போதாது. எங்களை மிகவும் பிற்படுத்தப்பட்ட வர்களாக அறிவித்தால் தான் இன்னும் அதிகப் பயன் இந்தச் சமுதாயத்திற்குக் கிடைக்கும் என்று குரல் கொடுத்த நேரத்தில் – அந்தக் குரல் ஒரு காலத்தில் கவனிப் பாரற்றுப் போனாலும்கூட 1989–ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக நான் ஆட்சிப் பொறுப் பேற்றதும், குரல் கிளம்பாத நேரத்தில்கூட வலிய அழைத்து மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு இனி மேல் இருபது சதவிகிதம் தரப்படுமென்று அறிவித்ததை இங்கே கிருஷ்ணசாமி அவர்கள் மிகுந்த நன்றி உணர்வோடு குறிப்பிட்டார்கள்.

இந்தச் சமுதாயத்தின் நன்றி உணர்வை எதிர்பார்த்து நான் இந்தக் காரியத்தைச் செய்யவில்லை. இன்னும் சொல்லப்போனால் நானே மிகவும் பிற் படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன்தான். மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கு இந்த ஆதாயம் கிடைக்க வேண்டுமென்பதற்காகவும் மொத்தச் சமுதாயமும் பயன்பெற வேண்டுமென்பதற்காகவும் பல்வேறு இடஒதுக்கீடுகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு – மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு – பிற்படுத்தப் பட்ட மக்களுக்கு – முன்னேறிய சமுதாயத்தினருக்கு என்று இருக்கின்ற இந்த நிலையினால் சில நேரங்களில் ஒருசில கேடுபாடுகள் எல்லாம் உண்டாவதை நான் மறுக்கவில்லை.

நோயைக் குணப்படுத்துவதற்காக ஒரு மருந்தைக் கொடுக்கும்போது, அதற்கு ("Side Effect") சைடு எபெக்ட் என்று கூறுவார்கள். அதனால் விளையக் கூடிய வேறு சில தீய விளைவுகளும் உண்டு. நல்ல மருந்தைக் கொடுத்தால் கூட, நல்ல மருந்து வேறு சில பக்க விளைவுகளை உடலிலே ஏற்படுத்தக்கூடும். அதைப் போல இடஒதுக்கீட்டின் காரணமாக இன்றைக்குச் சாதி மாறுபாடுகள், சாதி வேறுபாடுகள் நாட்டிலே தலை தூக்கியிருக்கின்றன. அதற்காக நோய் தீர நல்ல மருந்தைக் கொடுக்காமல் இருக்க முடியாது. இந்த மருந்துக்குப் பக்க விளைவு (சைடு எபெக்ட்) ஏற்படுமே என்பதற்காக நோயை அலட்சியப்படுத்தி நல்ல மருந்தை கொடுக்காமல் இருந்துவிட முடியாது. பக்க விளைவு வந்தால் அதை எப்படிச் சந்திக்க வேண்டும்? எப்படி எதிர்கொள்ள வேண்டும்? என்பதைச் சிந்தித்து நல்ல மருந்தைக் கொடுத்துத்தான் தீர வேண்டும்.

எனவேதான் 1920–ஆம் ஆண்டுக்கு முன்பு திராவிட இயக்கத்தால் கண்டுபிடிக்கப்பட்ட அருமருந்துதான் இடஒதுக்கீடு என்பதாகும். அதுவும் அந்த இடஒதுக்கீட்டிற்கு – வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்குத் தமிழ்நாட்டிலே வரலாற்றிலே இடம்பெற்றிடக்கூடிய ஒரு ஊர் உண்டு என்றால் அது காஞ்சிபுரம்தான்.

இந்தக் காஞ்சிபுரத்திலே 1925–இல் நடைபெற்ற காங்கிரஸ் கட்சி சார்பில் தமிழ்த்தென்றல் திரு.வி.க. தலைமையிலே நடைபெற்ற சென்னை மாகாண மாநாட்டிலேதான் அன்றைக்குக் காங்கிரஸ் கட்சியின் தென்னாட்டுத் தளபதியாக இருந்த தந்தை பெரியார் அவர்கள், ஜஸ்டிஸ் கட்சி கொண்டு வந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் – நீதிக்கட்சி கொண்டு வந்த அந்த இடஒதுக்கீட்டுத் திட்டத்தை நாம் ஏற்றுக்கொண்டு தீர்மானம் போட வேண்டுமென்று பெரியார் வலியுறுத்தினார். ஆனால் அன்றைக்குக் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற அந்த மாநாட்டில் அந்தத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. உடனே தந்தை பெரியார் அவர்கள் துண்டை உதறித் தோளிலே போட்டுக்கொண்டு, நான் காங்கிரஸ் இயக்கத்தை விட்டு வெளியேறுகிறேன். சமூக நீதிக்கு – வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு இடம் தராத இந்தக் கட்சியிலே நான் இருக்க மாட்டேன் என்று சொல்லி சபதம் செய்து வெளியேறிய ஊர்தான் இந்தக் காஞ்சிபுரம் என்பதையும் நாம் மறந்து விடுவதற்கில்லை. எனவே இட ஒதுக்கீட்டிலே மிக முக்கியமான ஒரு இடத்தை, வரலாற்றுக்குரிய இடத்தைப் பெற்ற காஞ்சிபுரத்திலே சி.வி.எம். அண்ணாமலை போன்ற தானைத் தளபதிகள் தோன்றுவதொன்றும் வியப்புக்குரிய விஷயமல்ல. எனவேதான் இங்கே சி.வி.எம். அண்ணாமலை தோன்றினார். அவரைத் தொடர்ந்து

பல முன்னணியினர் திராவிட இயக்கத்திலே இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

சி.வி.எம். அவர்களுடைய கொள்கைகளை நெஞ்சிலே நிலையாக வைத்துக்கொண்டு பணியாற்று கின்ற தம்பி பொன்மொழியின் நன்றியுரைப் பேச்சினைக் கேட்டீர்கள். அதிலே இடம்பெற்றிருந்த கொள்கை அழுத்தத்தை நீங்கள் எல்லாம் கண்டீர்கள். அத்தகைய குடும்பத்திலே இன்றைக்கு சீர்வேந்தனும் கோகிலாவும் மணமக்களாக நம் முன்னால் காட்சி தருகிறார்கள்.

மணமகனின் பெயர் சீர்வேந்தன். சீர்வேந் தனாகத்தான் இருக்க வேண்டுமே தவிர, சீர் அதிகமாகக் கேட்கின்ற வேந்தனாக இருக்கக் கூடாது. (பலத்த கை தட்டல்) அப்படி இருக்கின்ற காரணத்தால்தான் பல குடும்பங்களிலே தகராறெல்லாம் ஏற்பட்டு என்னென்னவோ நடைபெறுகின்றது. அதற்கெல்லாம் இடம் தராமல் சீர்வேந்தன் பெயரளவில் சீரான வேந்தனாக இருக்க வேண்டுமென்று கேட்டு, மாமனார் வீடு வள்ளல் என்ற பட்டத்தைப் பெற்ற காரணத்தால் அதிக சீர் வரிசைகளை எதிர்பாராமல் சீரான வாழ்க்கையை நடத்த வேண்டுமென்று சீர்வேந்தனையும் கோகிலாவையும் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். வாழ்க மணமக்கள்.

22-11-98 அன்று காஞ்சிபுரத்தில் சி.வி.எம். அண்ணாமலை இல்ல மணவிழாவில் ஆற்றிய உரை

பிடில் கும்பகோணம் இராஜமாணிக்கம் பிள்ளை நூற்றாண்டுவிழா

இந்தச் சிறப்பான விழாவில் கலந்து கொண்டு உங்கள் அனைவரையும் சந்திப்பதிலும் உங்கள் அனைவரோடும் சேர்ந்து கும்பகோணம் பிடில் இராஜமாணிக்கம் பிள்ளை அவர்களுடைய புகழ் போற்றுவதிலும் நான் மிகுந்த பெருமையும் பேருவகையும் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டதில் எனக்கு பெரும் ஆனந்தம் என்றே சொல்ல வேண்டும். மகிழ்ச்சி என்று சொல்வதை விட ஆனந்தம் என்று சொல்வதில் பொருள் இருக்கின்றது. ஏனென்றால் இசையிலே தோய்ந்தவர்கள், இசை இலக்கணத்தை முழுமையாக உணர்ந்தவர்கள், இசை பாரம்பரியத்தை உருவாக் கியவர்கள் இன்றைக்கும் தங்களுடைய இசை மழையால தமிழ்மக்களுடைய இதயத்தை நனைய வைத்துக் கொண்டிருப்பவர்கள் இந்த மேடையிலும் எதிரிலும் பல பேர் இருப்பதை நான் காண்கிறேன். அதனால்தான் ஆனந்தம் கொள்கிறேன் என்று குறிப்பிடுகிறேன். செம்மங்குடி அவர்களுடைய மொழியிலே சொல்ல வேண்டுமென்றால் ஆனந்தம் மாத்திரமல்ல. பிரமானந்தம் என்று கூடச் சொல்லாம். அப்படிப்பட்ட

ஓர் உணர்வோடு நான் உங்கள் மத்தியில் நின்று கொண்டிருக்கிறேன்.

செம்மங்குடி அவர்களும், பட்டம்மாள் அம்மையார் அவர்களும், இலால்குடி ஜெயராமன் அவர்களும் ஆற்றிய உரைகளைக் கேட்டோம். இவர்கள் எல்லாம் சங்கீதத்தை முறையாகப் பயின்று, அந்த இலக்கணம் தெரிந்து தங்களுக்கு பல வழித்தோன்றல்களை உருவாக்கி இருப்பவர்கள். இப்படிப்பட்டவர்களுடைய உரைகளை யெல்லாம் கேட்கும்போது, அதிலும் குறிப்பாக பெரியவர் செம்மங்குடி அவர்களுடைய உரையைக் கேட்கும்போது எனக்குத் தோன்றிய எண்ணம் – இவ்வளவு பழங்காலச் செய்திகளையெல்லாம் சொல்கிறாரே, நேரம் மாத்திரம் இருந்தால், ஓய்வு மாத்திரம் கிடைத்தால் ஒரு நாள் முழுதும் அவரோடு அமர்ந்து (கைதட்டல்) இந்தச் சங்கீத உலகச் செய்திகளை யெல்லாம் கேட்டு அனுபவிக்கலாமே என்ற அளவிற்கு என் மனம் துடித்தது. எனக்கு ஓய்வு எங்கே கிடைக்கப் போகிறது? நேரம் எங்கே வாய்க்கப் போகிறது?

ஆனால் எனக்கு மாத்திரம் அல்ல. தமிழகத்திலே உள்ள அனைவருக்கும் சேர்த்து செம்மங்குடி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இங்கே சொன்னீர்களே பல செய்திகளை, இதைப்போல மறைந்த மாமேதை நாதஸ்வர சக்கரவர்த்தி டி.என். இராஜரத்தினம் பிள்ளை விழாவிலே விரிவாகப் பல செய்திகளைச் சொன்னீர்களே, அதைப்போல இன்னும் உங்களுடைய உள்ளக் கிடக்கையிலே ஊறித் திளைத்துக் கொண்டிருக்கின்ற தேன்பாகு போன்ற பல செய்திகளை யெல்லாம் நீங்களே ஒரு புத்தகமாக வெளியிடுவீர்களே யானால் (பலத்த கைதட்டல்) அது நிகழ் காலத்திற்கு

மாத்திரமல்ல, எதிர்கால இசை உலகத்திற்கும் பெரும் பயனுடையதாக இருக்கும்.

நான் எங்கே எழுதுவது? என் வயதென்ன? என்னால் எழுத முடியுமா? கண்ணொளி சரியாக இருக்கிறதா? கைவிரல் எழுத முடியுமா என்றெல்லாம் நீங்கள் கேட்கக் கூடும். நீங்கள் சொன்னால் அதைக் கேட்டு எழுதுவதற்கு அரசாங்கம் சார்பிலேயே ஒரு உதவியாளரை (பலத்த கைதட்டல்) நியமிக்க நான் தயாராக இருக்கிறேன். ஏனென்றால் அப்படிப்பட்ட பெரும்புதையலை உங்களுடைய உள்ளத்திலிருந்து அகழ்ந்தெடுத்து இசை உலகத்திற்குத் தரவேண்டுமென்ற பெரும் விருப்பத்தோடுதான் இந்த வேண்டுகோளை பெரியவர் செம்மங்குடி முன்னால் வைக்கிறேன். அதை அவர் தட்டாமல் செய்வார் என்று நம்புகிறேன். இது அரசு ஆணையல்ல. அரசின் வேண்டுகோள் – அரசின் வேண்டுகோள் கூட அல்ல. கருணாநிதியினுடைய முறையீடு, கோரிக்கை என்று நான் அவருக்குச் சொல்ல விரும்புகிறேன்.

அத்தகைய செய்திகளையெல்லாம் இதுபோன்ற விழாக்களில்தான் அவரிடமிருந்து, நம்மால் கேட்க முடிகிறது. அந்தப் பெரியவர் – மறைந்தும் மறையாமல் இருக்கின்ற கும்பகோணம் வயலின் இராஜமாணிக்கம் பிள்ளை அவர்களைப் பற்றி ஆற்றிய உரையில் அள்ளித் தெளித்த பல செய்திகளை நாமெல்லாம் கேட்டோம்.

இசை என்றாலே சங்கீதம் என்று மாத்திரம் பொருள் அல்ல. புகழ் என்றும் அதற்கு ஒரு பொருள் உண்டு. ஈதல், இசைபட வாழ்தல் என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். இசைபட வாழ்தல் என்றால் புகழோடு வாழ்வது என்ற பொருளில்தான் அங்கே இசை

வருகின்றது. அத்தகைய இசைக்கும் ஏந்தலாக – புகழுக்கும் உரியவராக வாழ்ந்து மறைந்து நம் நெஞ்சம் எல்லாம் நிறைந்திருக்கின்றவர் கும்பகோணம் இராஜமாணிக்கம் பிள்ளை அவர்கள்.

அவர் கையாண்ட இசைக்கருவி பிடில். நாம் ஒரு செய்தி கேட்டிருக்கிறோம் – இந்தப் பிடிலைப் பற்றி! ரோம் நகரம் பற்றி எரிகின்ற போது நீரோ பிடில் வாசித்துக் கொண்டிருந்தான் என்பதாக. இப்பொழுது தான் எனக்குப் புரிகிறது. எவ்வளவு பெரிய துக்ககரமான சம்பவம் நடைபெற்றாலும் பிடில் வாசித்துக் கொண்டிருந்தால், அந்தத் துக்கம் மறைந்து விடும் என்பதை எடுத்துக்காட்டத்தான் ரோம் எரிந்த போது நீரோ பிடில் வாசித்தான் என்ற சொற்றொடர் பிறந்திருக்குமோ என்று நான் எண்ணுகிறேன்.

1948–ஆம் ஆண்டு கும்பகோணம் இராஜமாணிக்கம் பிள்ளை அவர்களுக்குச் சென்னை சங்கீத வித்வ சபையில் ''சங்கீத கலாநிதி'' என்ற விருது வழங்கப்பட்டது. அப்போது பல நகரங்களில் இசைவாணர்கள் எல்லாம் கூடி அவருக்குப் பாராட்டு விழா நடத்தினார்கள். அன்றைக்குத் திருவாரூரில் இசைவேளாளர் சங்கத்தின் சார்பில் தெற்கு வீதியும் கீழவீதியும் சந்திக்கும் முனையில் இராஜமாணிக்கம் பிள்ளைக்கு சங்கீத கலாநிதி பட்டம் பெற்றமைக்காக விழா நடைபெற்றபோது, அதில் நான் இளைஞனாக நின்று பேசியது, இன்றும் எனக்குப் பசுமையாக நினைவிலே இருக்கின்றது.

அப்போது நான் சொன்னேன் – ''இந்தப் பட்டத்தினால் இராஜமாணிக்கம் பிள்ளைக்குப் பெருமையல்ல; இந்தப் பட்டத்தை இவருக்கு அளித்த சென்னை சங்கீத வித்வசபை பெருமையைத் தட்டிக்கொண்டு போயிருக்கிறது'' என்று குறிப்பிட்டேன்.

அவரைப் பற்றி பல குறிப்புகள் உண்டு. இங்கே செம்மங்குடி அவர்கள் மைசூர் வயலின் வித்வான் சௌடய்யா அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

காரைக்குடியில் ஒருமுறை இரண்டு நிகழ்ச்சிகளில் – ஒரு நிகழ்ச்சிக்கு இராஜமாணிக்கம் பிள்ளை அவர்களும், இன்னொரு நிகழ்ச்சிக்கு சௌடய்யா அவர்களும் சென்றிருந்தபோது, காரைக்குடியில் இருந்த சங்கீத அபிமானிகள் எல்லாம் இராஜமாணிக்கம் பிள்ளையையும், சௌடய்யா அவர்களையும் சந்தித்துக் கேட்டார்கள். ''நீங்கள் இருவரும் ஒரே மேடையில் பிடில் வாசிக்க வேண்டும், அதில் யார் வெற்றி பெறுகிறீர்களோ, அவர்களுக்குப் பெரிய பரிசளிக்கக் காத்துக் கொண்டிருக்கிறோம்'' என்று சொல்லி யிருக்கிறார்கள்.

அப்போது இராஜமாணிக்கம் பிள்ளை தனக்கேயுரிய பெருந்தன்மையோடு சொன்ன பதிலை இங்கே நான் எடுத்தக்காட்ட விரும்புகிறேன். ''அவர் ஒத்துக் கொள்கிறாரா என்று கேளுங்கள்?'' என்றார். சௌடய்யாவிடம் சென்று கேட்டபோது, அவர், ''இராஜமாணிக்கம்பிள்ளை ஒத்துக் கொண்டால் நானும் ஒத்துக்கொள்கிறேன்'' என்றார். அதற்கு இராஜமாணிக்கம் பிள்ளை, ''சரி நானும் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை, பதினைந்தாயிரம் ரூபாய் பணத்தை நீங்கள் சேர்த்து – (அப்போது பதினைந்தாயிரம் ரூபாய் என்றால் இன்றைய கணக்கிற்கு எவ்வளவு மதிப்பு என்று நீங்களே கணக்கிட்டுக் கொள்ளலாம்) – அந்த பண முடிப்பை ஒரு நடுவரிடம் கொடுத்து மேடையிலே அமர வைத்துவிடுங்கள். நாங்கள் இருவரும் வயலின் வாசிக்கிறோம். அதிலே யார் தோற்றுப் போகிறோமோ அவர்களிடம் அந்தப் பதினைந்தாயிரத்தைக் கொடுத்து ஊருக்கு அனுப்பி விடுங்கள். அவர் ஊருக்குச் சென்ற

பிறகு யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களை அழைத்து ஆண்டுதோறும் நீங்கள் சிறப்பு செய்யவேண்டும்'' என்று கூறினாராம். ''ஆனால் பதினைந்தாயிரம் ரூபாய் பெற்று தோற்றுப் போனவர் மீண்டும் காரைக்குடிக்கு வரவே கூடாது. வெற்றி பெற்றவரை மட்டுமே அழைக்கவேண்டும்'' என்று சொன்னாராம்.

அதற்கு என்ன பொருள்? அந்தப் பொருளை காரைக்குடி பெருமக்கள் புரிந்து கொண்டார்கள். என்னவென்றால், ''நாங்கள் இருவரும் சமம்தான். நீங்கள் ஒருவரை வெற்றி பெறச் செய்து ஒருவரை தோற்கச் செய்து – ஒருவருடைய சங்கீதத்தை காரைக்குடி பகுதியே கேட்காமல் செய்துவிடாதீர்கள். எனவே இந்தப் போட்டி வேண்டாம்'' என்று அவ்வளவு அருமையாக, ஜாடையாக தன் கருத்தை அன்றைக்கு இராஜமாணிக்கம் பிள்ளை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

திருவிதாங்கூர் சமஸ்தானத்திலே அவருக்கு யானை பரிசளிக்கப்பட்டது பற்றி கூறப்பட்டது. திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் ஆஸ்தான வித்வானாக இருக்கின்ற பெருமையும் அவருக்கு வழங்கப்பட்டது. அப்போதுதான், ''உங்களுக்கு என்ன பரிசு வேண்டும்?'' என்று அவரிடம் கேட்டபோது, ''யானை பரிசாக வேண்டும்'' என்று அவர் கேட்டார், யானையைப் பரிசாகப் பெற்றவுடன், அவருடன் நெருங்கிய நிலையிலே இருந்த முத்தையா பாகவதர் அவர்கள், இராஜமாணிக்கம் பிள்ளையைப் பார்த்து ''என்னய்யா உமக்கு ஏதாவது புத்தியிருக்கிறதா, போயும் போயும் யானையைக் கட்டி தீனி போடப் போகிறீரே?'' என்று கேட்டபோது அதற்கு அவர், ''யானையை எனக்கா கேட்டேன், கும்பகோணம் கும்பேஸ்வர சுவாமி கோவிலுக்கல்லவா கேட்டேன்''

என்று சொல்லி, கோவிலிலே அந்த யானையை அவர் ஒப்படைத்தார் என்பதும் அவருடைய வரலாற்றுச் சிறப்புகளிலே ஒன்றாகும்.

அவர் சங்கீத வித்வான்களுக்கு – பாடகர்களுக்கு எவ்வளவு அனுசரணையாக, துணையாக – பட்டம்மாள் அம்மையார் குறிப்பிட்டதைப் போல் நிழலாக விளங்கினார் என்பதை நான் சொல்வதற்கு முழுத் தகுதியும் பெற்றவனல்ல. அதற்கு முழுத் தகுதியும் பெற்றவர்கள்தாம் இங்கே உரையாற்றிய சங்கீத விற்பன்னர்கள்.

ஒரு பக்கவாத்தியம் அது பிடிலாக இருந்தாலும் அல்லது மிருதங்கமாக இருந்தாலும் அல்லது கஞ்சிராவாக இருந்தாலும் அவர்கள் எப்படிப் பாடுபவரோடு ஒத்துழைக்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் – எனக்குப் பாட்டுக்களை ரசிக்கத்தான் தெரியும்; மூப்பனார் அவர்கள் என்னை விட அதிகமாக அதை உணர்ந்து ரசிக்கக் கூடியவர். நான் உணர்ந்து ரசிக்கக் கூடியவனல்ல. ஏனென்றால் இளமைக் காலத்திலேயே என்னை இசை கற்றுக் கொள்ள அனுப்பியபோது வேறு காரணங்களுக்காக அதை மறுத்தவன். இசையையே ஆரம்பத்தில் வெறுத்தவன். அதை ஏன் வெறுத்தேன் என்று இன்றைக்கு எனக்கு நானே வருந்துகின்ற அளவிற்கு இதுபோன்ற இசைவிழாக்களில் அது போன்ற உணர்வை நான் பெறுகிறேன்.

எனவே பக்கவாத்தியம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கல்ல – எப்படி இருக்கக்கூடாது என்பதற்கு கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள் ஒரு திரைப்படத்தில் ஒரு காட்சியை அமைத்திருந்தார்.

கலைவாணர் என்.எஸ்.கே. அந்தப் படத்தில் ஒரு பெரிய பாகவதர். அவரை ஒரு கச்சேரிக்கு

அழைத்திருக்கிறார்கள். திடீரென்று மிருதங்கக்காரர் வரவில்லை. ஊரெல்லாம் தேடிப் பார்த்தும் கிடைக்க வில்லை. ''யாரையாவது ஒரு ஆளைப் பிடித்து வாருங்கள்'' என்கிறார். ஒருவர் சாலையில் தம்பட்டம் அடித்துக் கொண்டு போகிறார். அவரை அழைத்துக் கொண்டு வருகிறார்கள். ''சரி, இவனைப் பக்க வாத்தியமாக உட்கார வை'' என்று கூறி, ''நான் பாடுகிறேன். நீ தம்பட்டத்தையாவது மிருதங்கத்திற்குப் பதிலாக ஒழுங்காக அடி'' என்கிறார்.

என்.எஸ்.கே. ''ராம. . .நீ. . .சமா'' என்று பாடுவார். ஆனால் அந்த புதிய ஆள் அதற்குக்கூட ஒழுங்காக அடிக்கத் தெரியாமல் ''டங்கு – டங்கு – டங்கு'' என்று அடிப்பார். ஐந்தாறு முறை திரும்பத் திரும்ப என்.எஸ்.கே. ஒழுங்காகப் பாடிக் காட்டுவார். ஆனால் பக்க வாத்தியம் ஒத்துழைக்க வில்லை.

கடைசியாக என்.எஸ்.கே. அவர்களே பக்க வாத்தியத்திற்கு ஏற்ப ''ராம. . . னீ. . .சமா'', ராம. . . னீ...சமா'' என்று இவர் பாட ஆரம்பித்து விடுவார் (பலத்த கைதட்டல்)

எதற்காக இந்தக் காட்சி என்றால், பக்கவாத்தியம் எப்படி இருக்க வேண்டுமென்பதற்காக அல்ல, எப்படி இருக்கக் கூடாது என்பதற்காக கலைவாணர் என்.எஸ்.கே. ஒரு படத்திலே அந்தக் காட்சியை அமைத்தார். பக்கவாத்தியம் எப்படி இருக்க வேண்டுமென்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருந்தவர் மறைந்த பெரியவர் இராஜமாணிக்கம் பிள்ளை அவர்கள்.


அவர்களோடு எனக்கு நெருங்கிய பழக்கமில்லா விட்டாலுங்கூட பலமுறை அவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டிருக்கின்றது. ஒருமுறை அறிஞர்

அண்ணா அவர்களும் நானும் குடந்தையிலே இராஜமாணிக்கம் பிள்ளை அவர்களுடைய இல்லத்திற்குச் சென்று அவரோடு உரையாடி மகிழ்ந்திருக்கிறோம். அதன் பின்னர் ஒருமுறை நான் அமைச்சரான பிறகு அவரிடம் வாழ்த்துப் பெறுவதற்காக அவரிடம் சென்று உரையாடியிருக்கிறேன்.

அவருடைய குடும்பத்தில், அவருடைய குலவிளக்குகளில் ஒரு விளக்காகத் திகழ்கின்ற தம்பி தியாகு இன்று தன்னுடைய பாட்டனாருடைய புகழ் போற்றி திரையுலகத்திலே பிரகாசித்துக் கொண்டிருக் கின்ற ஒளி விளக்காகத் திகழ்கின்றார். அவருடைய அரும் முயற்சியால் எல்லா சங்கீத விற்பன்னர்களும் கூடுகின்ற ஒரு சபையை இங்கே கூட்டி, அவருடைய அருமைத் தாத்தா, நம்முடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற இராஜமாணிக்கம் பிள்ளை அவர்களுக்குப் புகழைச் சேர்த்திருக்கின்ற இந்த விழாவிலே கலந்துகொண்டு அவரை நானும் போற்றிப் பாராட்டுகிறேன்.

26-11-98 அன்று சென்னையில்
பிடில் கும்பகோணம் இராஜமாணிக்கம் பிள்ளை
நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை

ANNA CENTENARY LIBRARY,
CHENNAI - 600 086.
894.811
KAR
G10124S1



பூம்புகார் பதிப்பகம்

சென்னை - 600 108